ACT NO. V OF 1898.

THE CRIMINAL PROCEDURE CODE.

1898-ம் ஹூ 5-வது ஆக்ட்டாகிய

க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட்.

என்கிற

க்ரிமினல் லா.

லா பப்ளிஷர்

ஆர். சுப்பிரமணிய அய்யர் அவர்கள்

அச்சிட்டது.

மதுகரவேணி விலாஸம் புஸ்தகசாலை,

வேப்பேரி போஸ்டு—மதறாஸ்.

M. V. Press, Vepery-Madras.

Price Rs. 3-0-0] [Postage Extra.

விஷயசூசிகை.

5 - ம் பாகம்.

போலீஸாருக்கு சங்கதி தெரிவிப்பதும் முதல்விசாரணை செய்வதற்கு அவர்களுக்குண்டான அதிகாரமும்.

6 - ம் பாகம்.

பிராது நடத்துகையில் நடவடிக்கைகள்.

அத்தியாயம்.

7 - ம் பாகம்.

அப்பீலையும் அலோசனைக்கு அனுப்புவதையும் மேற்பரிசோதனையுங் குறித்து.

8 - ம் பாகம்.

பிரத்தியேக நடவடிக்கைகள்.

9 - ம் பாகம்.

உபநிபந்தனைகள்.

ACT NO. V OF 1898.

THE CRIMINAL PROCEDURE CODE.

1898-ம்௵த்து 5-வது ஆக்ட்.

க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட்.

க்ரிமினல் நடவடிக்கைகளைக் குறித்த சட்டதிட்டத்தைத் திருத்தி ஒன்றாய்ச்சேர்க்கப்பட்ட ஆக்ட்.

1-ம் பாகம்.

பீடிகா விதிகள்.

1-ம் அத்தியாயம்.

சுருக்கமான பெயர் வழங்கத்தொடங்குவது.

1. (1) இந்த ஆக்ட்டை 1898-ம்௵த்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்ற விசாரணைச்சட்டமென்று சொல்லலாம்; இது 1898-ம்வருஷம் ஜூலை௴ 1௳யில் வழங்கத் தொடங்கவேண்டும்.

வியாபிக்கும் இடம்.

(2) இது ப்ரிட்டிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கின்றது; ஆனால், மாறாகக்குறித்த யாதொரு நிபந்தனையில்லாவிடில், இதில் சொல்லியிருக்கிற எந்த நிபந்தனையும், இப்போது வழங்கிக்கொண்டிருக்கும் யாதொரு பிரத்தியேகமான சட்டத்திற்காவது பிரதேச சட்டத்திற்காவது, தற்காலத்தில் வழங்கிக்கொண்டிருக்கும் வேறே யாதொரு சட்டத்தினாலே கொடுக்கப்பட்டிருக்கிற விசேஷமான அதிகாரத்திற்காவது ஆளுகைக்காவது, இன்னபடி நடத்தவேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற தோரணிக்காவது பாதகமுண்டாகமாட்டாது; மேலும்,

(a) கல்கத்தா, சென்னபட்டணம், பம்பாய் இந்த பட்டணங்களிலுள்ள போலீஸ் கம்மிஷனர்களுக்காவது கல்கத்தா, பம்பாய், இந்த பட்டணங்களிலுள்ள போலீஸாருக்காவது;

(b) சென்னப்பட்டணத்து ப்ரெஸிடென்ஸியிலுள்ள கிராமப் பெரியதனக்காரர்களுக்காவது ;

(c) பம்பாய் ப்ரெஸிடென்ஸியிலுள்ள கிராமப் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்காவது பிரயோகப்படமாட்டாது :

ஆனால், பிரதேச கவர்ன்மெண்டார் அவர்களுக்கு யுக்தமாகத் தோற்றினால், ஸர்க்கார் கெஜட்டில் விளம்பர மூலமாய், இந்த கோடின் நிபந்தனைகளில் எதையாவது யாதொரு அவசியமான மாறுதல்களுடன், அம்மாதிரியாய் நிவாரணை செய்யப்பட்ட நபர்களுக்கு வியாபிக்கும்படி செய்யலாம்.

2. [1915ம்-ஹூத்து 10-வது ஆக்டால் ரத்து.]

க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடையும் ரத்து செய்யப்பட்ட மற்ற சட்டதிட்டங்களையும் உதகரித்திருப்பது.

3. (1) இந்த சட்டம் வழங்கத் தொடங்குவதற்கு முன்னமே ஜாரிசெய்யப்பட்டிருக்கிற சட்டதிட்டங்களில் எதிலெதிலே க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடையாவது அந்தக்கோடிலுள்ள யாதொரு அத்தியாயத்தையாவது பிரிவையாவது, 1861-ம்ஹூத்து 25-வது ஆக்டையாவது, 1872-ம்ஹூத்து 10-வது ஆக்டையாவது, 1882-ம்ஹூத்து 10-வது ஆக்டையாவது, இதனால் ரத்துசெய்யப்பட்ட வேறே யாதொரு சட்டதிட்டத்தையாவது உதகரித்திருக்கிறதோ அந்தப் பிரதி சட்டதிட்டத்திலும், கூடுமானமட்டில் அப்படிப்பட்ட உதகரணத்தை இந்த சட்டதிட்டத்தைக்குறித்தாவது அதற்குச் சரியான அத்தியாயம் அல்லது பிரிவைக்குறித்தாவது செய்திருப்பதாக எண்ணவேண்டும்.

முன்னைய ஆக்ட்டுகளில் உபயோகித்திருக்கும் பதங்கள்.

(2) இந்த சட்டம் வழங்கத்தொடங்குவதற்கு முன்னமே ஜாரி செய்யப்பட்டிருக்கிற பிரதி சட்டதிட்டத்திலும் "மாஜிஸ்ட்ரேட்டுக்குண்டான அதிகாரங்களை (அல்லது பூர்த்தியான அதிகாரங்களை) செலுத்துகிற (அல்லது 'உடைத்தாயிருக்கிற') அதிகாரி," "முதல்வகுப்பு ஸபார்டினேட் மாஜிஸ்ட்ரேட்," "இரண்டாவது வகுப்பு ஸபார்டினேட் மாஜிஸ்ட்ரேட்," என்னும் வசனங்களை, முறையே "முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்," "இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்," மூன்றாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்," என்று அர்த்தமாவதாக எண்ணவேண்டும் ; "டிஸ்ட்ரிக்ட்டிலுள்ள யாதொரு தக்குடி-

யின் மாஜிஸ்ட்ரேட்," என்னும் வசனத்தை, "ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்" என்று அர்த்தமாவதாக எண்ணவேண்டும்; "டிஸ்ட்ரிக்டின் மாஜிஸ்ட்ரேட்" என்னும் வசனத்தை டிஸ்ட்ரிக்ட்டு மாஜிஸ்ட்ரேட் என்று அர்த்தமாவதாக எண்ணவேண்டும்; "போலீஸ் மாஜிஸ்ரேட்," என்னும் வசனத்தை "ராஜதானி மாஜிஸ்ட்ரேட்." என்று அர்த்தமாவதாக எண்ணவேண்டும்; ."ஜாயின்ட ஸெஷன்ஸ் ஜட்ஜ்" என்னும் வசனம் "அடிஷனல் ஸெஷன்ஸ் ஜட்ஜ்" என்று அர்த்தமாகும்.

அர்த்தம்.

4. (1) இந்த சட்டத்திலே, அடியிற்கண்ட சொற்களுக்கும் வசனங்களுக்கும், முன்பின் தொடர்ச்சியினாலாவது சங்கதியினாலாவது விரோதமான கருத்து ஒன்றுமில்லாவிட்டால், அடியிற் சொல்லியிருக்கிறபடி அர்த்தஞ்செய்யப்படும் :—

"அட்வொகேட் ஜெனரல்" என்பதற்கு.

(a) "அட்வொகேட் ஜெனரல்" என்பதிலே-கவர்ன்மெண்ட் அட்வொகேட் என்பதும் அடங்கும்; அட்வொகேட்-ஜெனரலாவது கவர்ன்மெண்ட் அட்வொகேட்டாவது இல்லாதபட்சத்தில் இது விஷயத்திலே அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாரால் அப்போதைக்கப்போது நியமிக்கப்படும்படியான உத்தியோகஸ்தரென்பதும் அடங்கும் :

"ஜாமீன் வாங்கத்தக்க குற்றம்" என்பதற்கு.

"ஜாமீன் வாங்கத்தகாத குற்றம்" என்பதற்கு.

(b) "ஜாமீன் வாங்கத்தக்கக்குற்றம்" என்பது-இரண்டாவது ஷெட்யூலில் ஜாமீன் வாங்கத்தக்கதென்று தெரிவித்தாவது, அந்தந்தக் காலத்தில் வழங்கிவருகிற வேறே யாதொரு சட்டத்தினால் ஜாமீன்வாங்கத்தக்கதென்று செய்யப்பட்டாவதிருக்கிற குற்றமென்று அர்த்தமாகும்; "ஜாமீன் வாங்கத்தகாத குற்றம்" என்பது வேறே யாதொரு குற்றமென்று அர்த்தமாகும் :

"குற்றச்சாட்டு" என்பதற்கு.

(c) "குற்றச்சாட்டு" என்பதிலே-ஒன்றுக்கு மேற்பட்டுப் பல தலைப்புகள் குற்றச்சாட்டில் அடங்கியிருக்குமானல் குற்றச்சாட்டைச்சேர்ந்த எந்ததலைப்பாவது அடங்கும் :

(d) [1923-ம் வருஷத்திய 11-வது ஆக்டால் ரத்து.]

" க்ளார்க் ஆவ்திக்ரவுன்"என்பதற்கு.

(e) " க்ளார்க் ஆவ் தி க்ரவுன் " என்பதிலே-இந்த சட்டத்தினுலே க்ளார்க் ஆவ் தி க்ரவுனுக்குக் கொடுக்கப்பட்ட அலுவல்களை நிறைவேற்றுவதற்கு சீவ் ஜஸ்ட்டிஸ் அவர்களால் பிரத்தியேகமாய் நியமிக்கப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தரென்பதும் அடங்கும் :

" பிடிக்கக்கூடிய குற்றம்" என்பதற்கு.

(f) 'பிடிக்கக்கூடிய குற்றம்" என்பது-ராஜதானிகளுக்குள்ளாவது ராஜதானிகளுக்கு வெளியிலாவது, இரண்டாவது ஷெட்யூலின் பிரகாரமாகிலும் அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற யாதொரு சட்டப்படியாகிலும் போலீஸ் உத்தியோகஸ்தன் எதற்காக வாரண்டில்லாமல் ஆளைப்பிடிக்கலாமோ அந்தக் குற்றமென்றும், "பிடிக்கக்கூடிய கேஸ்" என்பது-எதில் அப்படி வாரண்டில்லாமல் ஆளைப்பிடிக்கலாமோ அந்தகேஸ் என்றும் அர்த்தமாகும் :

" போலீஸ் கமிஷனர்."

(g) "போலீஸ் கமிஷனர்" என்பதிலே-டெப்புட்டி போலீஸ் கம்மிஷனர் என்பதும் அடங்கும்:

" பிரியாது " என்பதற்கு.

(h) " பிரியாது " என்பது-இந்த சட்டத்தின்படி யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர் நடவடிக்கை நடத்தும் பொருட்டு, தெரிந்தாகிலும் தெரியாமலாகிலு மிருக்கிற யாரோ ஒரு நபர் குற்றஞ்செய்திருக்கிருனென்று வாய்மொழியாகவாவது எழுத்துமூலமாகவாவது அவருக்குத் தெரிவிப்பதென்று அர்த்தமாகும் ; ஆனல் யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் செய்கிற ரிபோர்ட்டானது அதில் சேர மாட்டாது :

" யுரோப் பியன் பிரிட்டிவ்ஷ் குடி" என்பதற்கு.

(i) " யுரோப்பியன் ப்ரிடிஷ் குடி " என்பது:—

(i) ப்ரிடிஷ் தீவுகளிலாவது காலொனிகளிலாவது ஆண் வம்சத்தில் ப்ரிடிஷ் குடிகளுக்கு பிறந்தாகிலும், சுதேசியாக்கப்பட்டாகிலும் நிலையாய் வாசஞ்செய்தாகிலு மிருக்கிற மஹாராஜா சக்கரவர்த்தியவர்களுடைய யாதொரு குடி என்றும்,

(ii) அப்படிப்பட்ட யாதொரு நபருக்கு விவாகத்திற்குப் பிறந்த யாதொரு மகவு அல்லது மகவு வயிற்று மகவு என்றும், அர்த்தமாகும் :

"ஹைகோர்ட்" என்பதற்கு.

(j) "ஹைகோர்ட்" என்பது-யுரோப்பியன் ப்ரிட்டிஷ் குடிகள் மேலாகிலும் யுரோப்பியன் ப்ரிட்டிஷ் குடிகளோடு கூட்டாகக் குற்றபத்திரிகையில் சேர்க்கப்பட்டவர்கள் மேலாகிலும் நடத்தப்பட்ட நடவடிக்கைகள் விஷயத்திலே, போர்ட் உல்லியம்-சென்னப்பட்டணம்-பம்பாய்-அலகாபாத்-பாட்ணு-லாகூர்-ரங்கூன், இவற்றின் ஹைகோர்ட்டுகளென்றும், மத்தியமாகாணம், அயோத்தியை, ஸிந்து இந்த பிரதேசங்களின் ஜூடிஷியல் கம்மிஷனர்களுடைய கோர்ட்டுகளென்றும், அர்த்தமாகும் :

மற்ற விஷயங்களிலே "ஹைகோர்ட்" என்பது-யாதொரு பிரதேச எல்லைக்காக க்ரிமினல் விவகாரத்தில் அப்பீலதிகாரத்தையாகிலும் மேற்பரிசோதனை அதிகாரத்தையாகிலுமுடையதாய் எல்லாவற்றிற்கும் மேலானதாயிருக்கிற கோர்ட்டென்று அர்த்தமாகும் : அல்லது அந்தந்த காலத்தில் வழங்கிக்கொண்டிருக்கிற யாதொரு சட்டப்பிரகாரம் அப்படிப்பட்ட கோர்ட் ஸ்தாபிக்கப்படாதிருந்தால், இது விஷயத்தில் கவர்னர் ஜெனரலவர்களால் நியமிக்கப்படும்படியான உத்தியோகஸ்தரென்று அர்த்தமாகும் :

"விசாரணை" என்பதற்கு.

(k) "விசாரணை" என்பதிலே-கிரமமான பரிசீலனை நீங்கலாக மற்றப்படி இந்த சட்டப்பிரகாரம் யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினாலாவது கோர்ட்டாராலாவது நடத்தப்பட்ட பிரதி விசாரணையும் அடங்கும் :

"முதல் விசாரணை" என்பதற்கு.

(l) "முதல்விசாரணை" என்பதிலே-சாட்சியம் சேகரிப்பதற்காக ஒரு போலீஸ் உத்தியோகஸ்தராலாவது இந்த விஷயத்தில் யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற (மாஜிஸ்ட்ரேட் தவிர வேறே) யாதொரு நபராலாவது இந்த சட்டத்தின்படி நடத்தப்படும் சகல நடவடிக்கைகளும் அடங்கும் :

"நீதிவிவகாரநடவடிக்கை" என்பதற்கு.

(m) "நீதிவிவகார நடவடிக்கை" என்பதிலே-எந்த நடவடிக்கை நடந்துகொண்டிருக்கையில் பிரமாண பூர்வமாய்ச் சட்டப்படி சாட்சியம் வாங்கப்படுகிறதோ அல்லது வாங்கப்படலாமோ அந்த நடவடிக்கை என்பது அடங்கும் :

"பிடிக்கக்கூடாத குற்றம்" என்பதற்கு.
"பிடிக்கக்கூடாத கேஸ்" என்பதற்கு.

(n) "பிடிக்கக்கூடாத குற்றம்" என்பது-ராஜதானிக்குள்ளாவது ராஜதானிக்கு வெளியிலாவது போலீஸ் உத்தியோகஸ்தன் எதற்காக வாரண்டில்லாமல் ஆளைப் பிடிக்கலாகாதோ அந்த குற்றமென்றும், "பிடிக்கக்கூடாத கேஸ்" என்பது எதில் அப்படி வாரண்டில்லாமல் ஆளைப்பிடிக்கலாகாதோ அந்த கேஸ் என்றும் அர்த்தமாகும் :

"குற்றம்" என்பதற்கு.

(o) "குற்றம்" என்பது-அந்தந்தக்காலத்தில் வழங்கிவருகிற யாதொரு சட்டப்படி தண்டிக்கப்படத்தக்கதாகிய யாதொரு செய்கை அல்லது செய்யாமலொழிகை என்று அர்த்தமாகும் :

அதில்—ஆடுமாடு முதலியவை அக்கிரமமாய் நுழைவதைக்குறித்த 1871-ம் வருஷத்து ஆக்ட், 20-வது பிரிவின்படி பிரியாது பண்ணத்தகுந்த யாதொரு செய்கையும் அடங்கும் :

"போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தன் என்பதற்கு.

(p) "போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தன்" என்பதிலே போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனானவன் ஸ்டேஷன் ஹவுஸில் ஹாஜராயிராவிட்டாலும் வியாதியாயிருப்பதனாலாவது வேறே காரணத்தினாலாவது தன் அலுவலை நடத்த அசக்தனாயிருந்தாலும், அந்தஸ்தில் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தனுக்கு அடுத்தவனும் கான்ஸ்டேபில் அந்தஸ்துக்கு மேற்பட்டவனுமிருந்து ஸ்டேஷன் ஹவுஸில் ஹாஜராயிருக்கிற போலீஸ் உத்தியோகஸ்தனென்பதும், அவ்விடத்திய கவர்ன்மெண்டார் உத்தரவு செய்வார்களாகில் அப்படி ஹாஜராயிருக்கிற வேறே யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனென்பதும் அடங்கும் :

"இடம்" என்பதற்கு.

(q) "இடம்" என்பதிலே-வீடு, கட்டிடம், கூடாரம், மரக்கலம் என்பதும் அடங்கும் :

"ப்ளீடர்" என்பதற்கு.

(r) யாதொரு கோர்ட்டிலே நடக்கும் நடவடிக்கை விஷயமாய்ப் பிரயோகிக்கும்போது, "ப்ளீடர்" என்பது-அந்தக்கோர்ட்டில் நியாயவிவாதஞ் செய்வதற்கு அந்தந்த காலத்தில் வழங்கிக்கொண்டிருக்கும் யாதொரு சட்டத்தினால் அதிகாரங்கொடுக்கப்

பெற்ற ப்ளீடர் அல்லது முக்தியாரென்று அர்த்தமாவதுமல்லாமல், அந்த வார்த்தையிலே (1) அப்படி அதிகாரம்பெற்று யாதொரு ஹை கோர்ட்டைச் சேர்ந்திருக்கிற அட்வொகேட்-வக்கீல்-அட்டர்னி என்பதும், (2) அப்படிப்பட்ட நடவடிக்கையில் விவகாரிக்கும்படி கோர்ட்டாருடைய உத்தரவின்மேல் நியமிக்கப்பட்ட வேறே யாதொரு நபரென்பதும் அடங்கும் :

"போலீஸ் ஸ்டேஷன்" என்பதற்கு.

(s) "போலீஸ் ஸ்டேஷன்" என்பது-போலீஸ் ஸ்டேஷனாயிருப்பதாக அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாரால் சாதாரணமாகவாவது பிரத்தியேகமாகவாவது நிர்ணயிக்கப்பட்ட யாதொரு பிரதேச விஸ்தீர்ணமென்பதும் அடங்கும் :

"பப்ளிக் ப்ராஸிக்யூட்டர்" என்பதற்கு.

(t) "பப்ளிக் ப்ராஸிக்யூட்டர்" என்பது-492-வது பிரிவின்படி நியமிக்கப்பட்ட யாதொரு நபரென்று அர்த்தமாவதுமல்லாமல், அந்த வார்த்தையிலே யாதொரு பப்ளிக் ப்ராஸிக்யூட்டருடைய கற்பனைகளின்படி பிரவர்த்திக்கிற யாதொரு நபரென்பதும், க்ரிமினல் விவகாரத்திலே அசல்விசாரணை அதிகாரஞ்செலுத்துகையில் யாதொரு ஹைகோர்ட்டிலே மஹாராணியவர்கள் பட்சத்தில் பிராது நடத்துகிற யாதொரு நபரென்பதும் அடங்கும்.

"ஸப்டிவிஷன்" என்பதற்கு.

(u) "ஸப் டிவிஷன்" என்பது-ஒரு டிஸ்ட்ரிக்டைப் பிரித்திருக்கிற ஸப்டிவிஷன் என்று அர்த்தமாகும்:

"ஸம்மன்கேஸ்" என்பதற்கு.

(v) "ஸம்மன் கேஸ்" என்பது-வாரன்ட் கேஸ் அல்லாத யாதொரு குற்றத்தைப்பற்றிய கேஸென்று அர்த்தமாகும்:

"வாரண்டுகேஸ்" என்பதற்கு.

(w) "வாரண்டுகேஸ்" என்பது-மரணதண்டனையாவது தண்ணீர் மேலேற்றும் தண்டனையாவது ஆறுமாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்குக் காவல் தண்டனையாவது விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றத்தைப் பற்றிய கேஸென்று அர்த்தமாகும்:

செய்யப்பட்ட காரியங்களுக்குச் சம்பந்தப்படுகிற வார்த்தைகள்.

(x) செய்யப்பட்ட காரியங்களுக்குச் சம்பந்தப்படுகிற வார்த்தைகள் சட்டப்படி செய்யவேண்டியதைச் செய்யாமல் விடுவதற்கும் சம்பந்தப்படுகின்றன.

இதில் உபயோகித்திருக்கிற வார்த்தைகள் பினல்கோடிலுள்ள அர்த்தத்தையே கொள்வது.

மேலும், இதில் முன்னமே விவகரிக்கப்படாதபோதிலும், இந்தியன் பினல்கோடிலே விவகரித்துச்சொல்லி இதில் உபயோகித்திருக்கிற சகல வார்த்தைகளுக்கும் பதங்களுக்கும், அர்த்தங்களிருப்பதாக எண்ணவேண்டும்.

பினல் கோடுக்குட்பட்ட குற்றங்களைப் பரிசீலனைசெய்வது.

5. (1) இந்தியன் பினல்கோடுக்குட்ப்பட்ட சகல குற்றங்களையும் இதில் பின்னால் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின் படி. முதல்விசாரணைசெய்தும் விசாரித்தும் பரிசிலனை பண்ணியும் வேறே விதமாக நடத்தவும்வேண்டும்.

மற்றசட்டங்களுக்கு விரோதமாய்ச் செய்யப்பட்ட குற்றங்களைப் பரிசீலனை செய்வது.

(2) வேறே யாதொரு சட்டத்துக்குட்பட்ட எல்லாக் குற்றங்களும், அப்படிப்பட்ட குற்றங்களை முதல் விசாரணை செய்கிற விசாரிக்கிற பரிசிலனை பண்ணுகிற அல்லது வேறுவகையாக நடத்துகிற விதத்தையாவது இடத்தையாவது ஒழுங்கு படுத்துவதைக்குறித்து அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற யாதொரு சட்டத்திற்குட்பட்டு, மேற்கண்ட அதே நிபந்தனைகளின் பிரகாரம் முதல் விசாரணை செய்தும் விசாரித்தும் பரிசீலனை பண்ணியும் வேறே விதமாக நடத்தவும்வேண்டும்.

2-ம் பாகம்.

க்ரிமினல் கோர்ட்டுகள், ஆபிஸுகள் இவற்றின் ஏற்பாடும் அதிகாரமும்.

2-ம் அத்தியாயம்.

க்ரிமினல் கோர்ட்டுகள், ஆபிஸுகள் இவற்றின் ஏற்பாட்டைக்குறித்து.

A.—க்ரிமினல் கோர்ட்டுகளின் வகுப்பு.

க்ரிமினல் கோர்ட்டுகளின் வகுப்பு.

6. ஹைகோர்ட்டுகளோடும், இந்தச் சட்டமல்லாமல் அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற வேறே யாதொரு சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட கோர்ட்டுகளோடுங்கூட, ப்ரிட்டிஷ் இந்தியாவிலே ஐந்து வகுப்பு க்ரிமினல் கோர்ட்டுகளிருக்கவேண்டும். அவையாவன:—

1.—ஸெஷன் கோர்ட்டார்.

2.—ப்ரெஸிடென்ஸி ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டார்.

3.—முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டார்.

4.—இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டார்.

5.—மூன்றாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டார்.

B.—இராஜ்ஜ்யப் பிரிவினைகள்.

ஸெஷன்டிவிஷன்களும் டிஸ்ட்ரிக்ட்டுகளும்.

7. (1) இராஜதானிகள் நீங்கலாக, பிரதிநாடும் ஸெஷன் டிவிஷனாக இருக்கவேண்டும்; அல்லது அதில் ஸெஷன் டிவிஷன்கள் சேர்ந்திருக்கவேண்டும்; இந்த சட்டத்திலுள்ள காரியங்களின்பொருட்டுப் பிரதி ஸெஷன் டிவிஷனும் ஒரு டிஸ்ட்ரிக்ட்டாயிருக்கவேண்டும்; அல்லது அதில் டிஸ்ட்ரிக்ட்டுகள் சேர்ந்திருக்கவேண்டும்.

டிவிஷன்களையும் டிஸ்ட்ரிக்ட்டுகளையும் மாற்ற அதிகாரம்.

(2) அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் அப்படிப்பட்ட டிவிஷன்களின் விஸ்தீர்ணத்தையும் டிஸ்ட்ரிக்ட்டுகளின் விஸ்தீர்ணத்தையும் மாற்றலாம்; அல்லது அவற்றின் சங்கியை மாற்றலாம்.

இப்போதிருக்கும் டிவிஷன்களும் டிஸ்ட்ரிக்ட்டுகளும் மாற்றப்படுகிறவரையில் அப்படியே இருப்பது.

(3) இந்தச் சட்டம் வழங்கத்தொடங்கும்போது ஏற்பட்டிருக்கிற ஸெஷன் டிவிஷன்களும் டிஸ்ட்ரிக்டுகளும் மாற்றப்படாமல் அப்படியே இருக்கிறவரையில் முறையே ஸெஷன் டிவிஷன்களாகவும் டிஸ்ட்ரிக்டுகளாகவும் இருக்கவேண்டும்.

ராஜதானிகளை டிஸ்ட்ரிக்டுகளாக எண்ணுவது.

(4) இந்த சட்டத்திலுள்ள காரியங்களின் பொருட்டுப் பிரதி ராஜதானியும் டிஸ்ட்ரிக்ட்டாயிருப்பதாக எண்ணப்படும்.

டிஸ்ட்ரிக்ட்டுகளை ஸப் - டிவிஷன்களாகப் பிரிக்க அதிகாரம்.

8. (1) அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் ராஜதானிகளுக்கு வெளியிலுள்ள யாதொரு டிஸ்ட்ரிக்டை ஸப்-டிவிஷன்களாகப் பிரிக்கலாம்; அல்லது அப்படிப்பட்ட யாதொரு டிஸ்ட்ரிக்டின் எந்த பாகத்தையாகிலும் ஒரு ஸப்-டிவிஷனாகச் செய்யலாம்; மேலும், யாதொரு ஸப்-டிவிஷன் விஸ்தீர்ணத்தை மாற்றலாம்.

(2) யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினுடைய வசத்தில் இப்போது வழக்கமாய் விடப்பட்டுத் தற்காலத்தி லுண்டாயிருக்கிற எல்லா ஸப்-டிவிஷன்களையும் இந்தச் சட்டப்படி செய்திருப்பதாக எண்ணவேண்டும்.

இப்போதிருக்கிற ஸப் டிவிஷன்கள் அப்படியே இருப்பது.

C.—ராஜதானிப்பட்டணங்களுக்கு வெளியிலுள்ள கோர்ட்டுகளும் ஆபிஸர்களும்.

9. (1) அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் ஒவ்வொரு ஸெஷன் டிவிஷனுக்காகவும் ஒவ்வொரு ஸெஷன்கோர்ட்டை ஸ்தாபிக்கவேண்டியது மல்லாமல் அப்படிப் பட்ட கோர்ட்டுக்கு ஒரு ஜட்ஜை நியமிக்கவும் வேண்டும்.

ஸெஷன் கோர்ட்.

(2) அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் ஸர்க்கார் கெஜெட்டில் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாய், ஸெஷன் கோர்ட்டார் இன்ன இடத்தில் அல்லது இன்னின்ன இடங்களில் கூடவேண்டுமென்று உத்தரவுசெய்யலாம்; ஆனால், இவ்வித உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையிலே, ஸெஷன்கோர்ட்டார் இதுவரையில் கூடினதுபோலக் கூடவேண்டும்.

(3) அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் அப்படிப்பட்ட கோர்ட்டு ஒன்று அல்லது மேற்பட்ட கோர்ட்டுகளிலே அதிகாரஞ் செலுத்தும்படி அடிஷனல் ஸெஷன் ஜட்ஜுகளையுங்கூட நியமிக்கலாம்.

(4) அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் ஒரு ஸெஷன் டிவிஷனிலிருக்கும் ஸெஷன் ஜட்ஜை வேறொரு டிவிஷனில் அடிஷனல் ஜட்ஜாகவு மிருக்கும்படி நியமிக்கலாம்; அவ்வாறு நியமிக்கப்படும் விஷத்தில் வியாஜ்ஜியங்களைப் பைசல்செய்வதற்காக இந்த டிவிஷன்களிலெதிலேனும் எந்த இடத்தில் அல்லது இடங்களில் கூடவேண்டுமென்று பிரதேச கவர்ன்மெண்டார் உத்தரவு செய்கிறார்களோ அந்த இடத்தில் அல்லது இடங்களில் அந்த ஜட்ஜ் கூடலாம்.

(5) இந்தச் சட்டம் வழங்கத்தொடங்கும்போது இருந்துகொண்டிருக்கிற எல்லா ஸெஷன்கோர்ட்டுகளும் இந்த ஆக்ட்டின்படி ஸ்தாபிக்கப்பட்டவைகளாக எண்ணப்படும்.

10. (1) ராஜதானிகளுக்கு வெளியிலுள்ளபிரதி டிஸ்ட்ரிக்ட்டிலும், அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டை நியமிக்கவேண்டும்; அவர் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டென்று சொல்லப்படுவார்.

டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்.

(2) அந்தந்த கவர்ன்மெண்டார், முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளில் யாரையாகிலும், அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாக இருக்கும்படி நியமிக்கலாம்; அவ்வித அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு பிரதேச கவர்ன்மெண்டார் உத்தரவு செய்கிறபடி இந்தக் கோடின் பிரகாரம் அல்லது அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் வேறே யாதொரு சட்டத்தின் பிரகாரம் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்குள்ள சகல அதிகாரங்களும், அல்லது அவைகளில் யாதேனு மிருக்கவேண்டும்.

(3) 192 (1), 407 (2), 528-வது பிரிவுகளின் காரியங்களின் பொருட்டு, அப்படிப்பட்ட அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர்-டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கீழ்ப்பட்டிருப்பதாக எண்ணப்படுவார்.

டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் உத்தியோகம் காலியாகும்போது அந்தஸ்தானத்திற்குச் சிறிது காலத்திற்குவருகிற உத்தியோகஸ்தர்கள்.

11. யாதொரு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அலுவல் காலியாவதனுலே, அந்த டிஸ்ட்ரிக்டில் முக்கியமான பரிபாலனுதிகாரஞ் செலுத்தச் சிறிது காலத்திற்கு யாதொரு அதிகாரி அந்த ஸ்தானத்திற்கு வருவாராகில், அவர், அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாரால் (மற்றப்படி) உத்தரவு செய்யப்படுகிற வரையில் இந்தச் சட்டத்தினுல் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சகல அதிகாரங்களையும் செலுத்திக்கொண்டு அவருக்கு ஏற்படுத்திபிருக்கிற சகல அலுவல்களையும் நிறைவேற்றவேண்டும்.

ஸபார்டினேட் மாஜிஸ்ட்ரேட்டுகள்.

12. (1) அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டல்லாமல், தங்களுக்கு எத்தனைபேர் தகுதியாகத் தோற்றுகிறதோ வேறே அத்தனை பேர்களை, ராஜதானிகளுக்கு வெளியிலுள்ள யாதொரு டிஸ்ட்ரிக்ட்டில் முதலாவது இரண்டாவது அல்லது மூன்றுவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளாக நியமிக்கலாம்; மேலும், அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாராவது, அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாருடைய மேல்விசாரணைக்குட்பட்டு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது, இன்னபிரதேச விஸ்தீர்ணங்களுக்குள் அப்படிப்பட்டவர்கள் தங்கள் தங்களுக்கு இந்தச் சட்டப்படி கொடுத்திருக்கிற அதிகாரங்கள் யாவற்றையுமாகிலும் அவைகளிலெதையாகிலும் செலு

அவர்களுடைய அதிகாரப் பிரதேச எல்லைகள்.

த்தலாமென்று அப்போதைக்கப்போது பிரதேச விஸ்தீர்ணங்களை நிர்ணயிக்கலாம்.

(2) அப்படிப்பட்ட நிர்ணயத்தில் வேறே விதமாய் ஏற்படுத்தியிருக்கிறபடிக்குத் தவிர, அப்படிப்பட்டவர்களுடைய அதிகாரங்கள் அந்த டிஸ்ட்ரிக்ட் முழுமைக்கும் செல்லவேண்டும்.

மாஜிஸ்ட்ரேட்டை ஸப்டிவிஷனுக்கு அதிகாரியாக ஏற்படுத்த அதிகாரம்.

13. (1) அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் யாதொரு ஸப்டிவிஷனை முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டினுடைய வசத்தில் ஒப்பிக்கலாம்; மேலும், வேண்டியபோது அவர்வசத்திலிருந்து அதை எடுத்துக்கொள்ளலாம்.

(2) அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுகள் ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்களென்று சொல்லப்படுவார்கள்.

கவர்ன்மெண்டார் தங்களுடைய அதிகாரங்களை டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கொடுப்பது.

(3) அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் இந்தப் பிரிவின்படி தங்களுக்குண்டாகிய அதிகாரங்களை டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கொடுக்கலாம்.

ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட்டுகள்.

14. (1) ராஜதானிப் பட்டணங்களுக்கு வெளியிலுள்ள யாதொரு பிரதேச விஸ்தீரணத்திலே, பலான கேஸுகள் சம்பந்தமாயாகிலும் கேஸுகளின் பலான இனம் அல்லது இனங்கள் சம்பந்தமாயாகிலும், பொதுவாய்க் கேஸுகளைக் குறித்தாகிலும், முதலாவது இரண்டாவது அல்லது மூன்றாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கு இந்தச் சட்டப்படி கொடுக்கப்பட்டாவது கொடுக்கப்படத்தக்கதாகவாவதிருக்கிற சகல அதிகாரங்களையுமாகிலும் அவைகளிலெதையாகிலும் அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் எந்த நபருக்காவது கொடுக்கலாம்.

(2) அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுகள் ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட்டுகளென்று சொல்லப்படுவார்கள்; மேலும், அந்தக் கவர்ன்மெண்டார் இவ்வளவு காலத்திற்கு அமர்த்தலாமென்று பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவினால் கட்டளையிடுகிற காலத்தவணைக்கு அவர்களை அமர்த்தவேண்டும்.

(3) அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட அதிகாரத்தைத் தங்களுடைய அதிகாரத்

துக்குட்பட்ட யாதொரு உத்தியோகஸ்தருக்குத் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி வரையறுத்துக்கொடுக்கலாம்.

(4) அஸிஸ்டென்ட் டிஸ்டரிக்ட் ஸூபெரின்டென்டென்ட் அந்தஸ்துக்குக் கீழ்ப்பட்ட யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு இந்தப் பிரிவின்படி எந்த அதிகாரமும் கொடுக்கப்படாது; மேலும், அமரிக்கையைக் காப்பதற்கும் குற்றஞ் செய்வதைத் தடுப்பதற்கும், மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன் கொண்டுவரப்படும் பொருட்டு நேரஸ்தர்களைக் கண்டுபிடித்துக் கைதிசெய்து மறியல் செய்து வைப்பதற்கும், தற்காலத்தில் வழங்கிக்கொண்டிருக்கிற யாதொரு சட்டநிட்டத்தினால் அந்த உத்தியோகஸ்தனுக்கு ஏற்படுத்தியிருக்கிற வேறே ஏதாவது அலுவல்களை அவன் செய்வதற்கும் அவசியமாயிருக்கிற மட்டில் தவிர எந்த அதிகாரமும் அவனுக்குக் கொடுக்கப்படாது.

மாஜிஸ்ட்ரேட்டுகளின் நியாயசபை.

15. (1) அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார்-ராஜதானிகளுக்கு வெளியிலுள்ள யாதொரு இடத்திலே ஒரு சபையாக உட்காரும்படி இரண்டு அல்லது பல மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு உத்தரவு செய்யலாம்; மேலும் அப்படிப்பட்ட சபைக்கு முதலாவது இரண்டாவது அல்லது மூன்றாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கு இந்தச் சட்டப்படி கொடுக்கப்பட்டாவது கொடுக்கப்படத்தக்கதாகவாவதிருக்கிற அதிகாரங்களிலேதையாகிலும் உத்தரவு மூலமாய்க் கொடுப்பதுமல்லாமல், தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற பிரதேச எல்லைகளுக்குள்ளே, தாங்கள் தகுதியாக நினைக்கிற கேஸுகளில் மாத்திரமாவது கேஸ் இனங்களில் மாத்திரமாவது அந்த அதிகாரங்களைச் செலுத்தும்படிக்கும் அந்தச் சபைக்கு உத்தரவு பண்ணலாம்.

பிரத்தியேகமான உத்தரவில்லாதபோது அப்படிப்பட்ட நியாயசபையார் செலுத்தும்படியான அதிகாரம்.

(2) இந்தப் பிரிவின்படி யாதொரு உத்தரவில் வேறே விதமாய் விதித்திருக்கிறபடிக்குத் தவிர, அந்தச் சபையின் அத்தியட்சர்களில் எவராவதொருவர் எந்த உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவராயிருந்துகொண்டு நடவடிக்கை நடத்துவதில் அப்படிப்பட்ட அத்தியட்சகராகக்கூட இருக்கிறாரோ அந்த வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கு இந்தச் சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களை அந்தச் சபையார் உடையவர்களாயிருக்கவேண்டும்; மேலும், அவர்களை இந்தச் சட்டத்திலுள்ள காரியங்களின் பொ

ருட்டுக் கூடுமானமட்டில் அந்த வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாக எண்ண வேண்டும்.

நியாயசபைகள் நடந்துகொள்வதைக்குறித்து விதிகள் செய்ய அதிகாரம்.

16. அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாராவது, அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாருடைய விசாரணைக்குட்பட்டு டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது, யாதொரு டிஸ்ட்ரிக்ட்டிலே மாஜிஸ்ட்ரேட்டுகளின் சபைகள் நடந்துகொள்வதற்காக அடியிற்கண்டிருக்கிற விஷயங்களைக்குறித்து இந்தச் சட்டத்திற்கு ஒற்றுமையான விதிகளை அப்போதைக்கப்போது செய்யலாம் :—

(a) பரிசிலனை செய்யும்படியான கேஸ் இனங்கள் ;

(b) சபைகூடுகிற காலங்களும் இடங்களும் ;

(c) பரிசிலனைகளை நடத்துவதற்குச் சபையின் ஏற்பாடும் ;

(d) சபையில் மாஜிஸ்ட்ரேட்களுக்குள்ளே அபிப்பிராயம் வேறுபட்டால் அதைப் பைசல்செய்கிறவிதம்.

மாஜிஸ்ட்ரேட்டுகளும் நியாயசபையாரும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுகளும்.

17. (1) 12, 13, 14-வது பிரிவுகளின்படி நியமிக்கப்பட்ட சகல மாஜிஸ்ட்ரேட்டுகளும், 15-வது பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட சகல நியாயசபையாரும், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டும் ; அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளும் நியாயசபையாரும் இன்னது செய்யவேண்டுமென்று வேலையைப் பகிர்ந்து கொடுப்பதைக்குறித்து அவர் அப்போதைக்கப்போது இந்தச் சட்டத்துக்கு ஒற்றுமையான விதிகளைச் செய்யலாம் அல்லது பிரத்தியேகமான உத்தரவுகளைக் கொடுக்கலாம் ; மேலும்,

ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கீழ்ப்படிவது.

(2) யாதொரு ஸப்-டிவிஷனிலே அதிகாரம் செலுத்துகிற (ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டல்லாத வேறே) பிரதிமாஜிஸ்ட்ரேட்டும் அப்படி அதிகாரம் செலுத்துகிற பிரதி நியாயசபையாரும் ஸப்-டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டும் ; ஆயினும், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினுடைய சாதாரணமான மேலதிகாரத்திற்குட்பட்டிருக்கவேண்டும்.

அஸிஸ்டெண்ட் ஸெஷன் ஜட்ஜுகள் ஸெஷன் ஜட்ஜுக்குக் கீழ்ப் பட்டிருப்பது.

(3) அஸிஸ்ட்டென்ட் ஸெஷன் ஜட்ஜுகள் சகலரும் தாங்கள் யாருடைய கோர்ட்டில் அதிகாரஞ் செலுத்துகிறார்களோ அந்த ஸெஷன் ஜட்ஜுக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டும்; அப்படிப்பட்ட அஸிஸ்ட்டென்ட்ஸெஷன் ஜட்ஜுகளுக்குள் வேலையைப்பங்கிட்டுக்கொடுப்பதைக்குறித்து இந்தச் சட்டத்துக்கு ஒற்றுமையான விதிகளை அவர் அப்போதைக்கப்போது செய்யலாம்.

(4) ஸெஷன் ஜட்ஜானவர்-தம்மாலும் தவிர்க்கக்கூடாத காரணத்தினால் தாம் ஹாஜராயிராத காலத்திலாவது, தாம் ஜட்ஜ் வேலை பார்க்க அசக்தராயிருக்குங்காலத்திலாவது, அடிஷனல் அல்லது அஸிஸ்ட்டான்ட் ஸெஷன் ஜட்ஜைக்கொண்டேனும், அவ்வாறு அடிஷனல் அல்லது அஸிஸ்ட்டான்ட் ஸெஷன் ஜட்ஜ் இல்லாமற்போனால் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டைக்கொண்டேனும் யாதொரு அவசரமான விண்ணப்பத்தைப் பைசல் செய்வதற்காக ஏற்பாடு செய்யலாம்; மேலும், அந்த ஜட்ஜ் அல்லது மாஜிஸ்ட்ரேட்டுக்கு அவ்விதமான யாதொரு விண்ணப்பத்தைக் குறித்துப் பிரவர்த்திக்க அதிகாரமுண்டு.

(5) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது 12, 13, 14, 15-வது பிரிவின்படி நியமிக்கப்பட்டாகிலும் ஏற்படுத்தப்பட்டாகிலு மிருக்கிற மாஜிஸ்ட்ரேட்டுகளாவது நியாயசபையாராவது, இதில் பின்னால் வெளிப்படையாய் சொல்லியிருக்கிற அளவுக்கு அதில் குறித்திருக்கிற விதமாய்த் தவிர, ஸெஷன் ஜட்ஜுக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டியதில்லை.

D.—ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுகளின் கோர்ட்டுகள்.

ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுகளை நியமிப்பது.

18. (1) அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் (ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுகளென்று இதில் பின்னால் சொல்லப்படுகிற) போதுமான பேர்களை இராஜதானிகளில் அதற்கு மாஜிஸ்ட்ரேட்டுகளாக அப்போதைக்கப்போது நியமிக்கவேண்டியது மல்லாமல், அப்படிப்பட்டவர்களில் ஒருவரை அப்படிப்பட்ட ஒவ்வொரு இராஜதானிக்காகவும் பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாக நியமிக்கவும் வேண்டும்.

(2) இந்தக் கோடின்படி ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் பிரதான ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டாலாவது, சம்பளம் பெறுகிற ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டாலாவது தனிமையாகவாவது தனிமையாகக் கோர்ட் செய்

யும்படி பிரதேச கவர்ன்மெண்டாரால் அதிகாரங் கொடுக்கப்பெற்றிருக்கிற வேறு யாதொரு ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டாலாவது ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுகளடங்கிய யாதொரு சபையாரா லாவது செலுத்தப்படவேண்டும்.

(3) பிரதேச கவர்ன்மெண்டார் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாய்க் கட்டளையிடக்கூடிய காலத்தவணைக்கு இந்தப் பிரிவின்படி யாதொரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட் நியமிக்கப்படலாம்.

(4) பிரதேச கவர்ன்மெண்டார் யாதொரு நபரை அடிஷனல் பிரதான ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாயிருக்கும்படி நியமிக்கலாம்; அவ்வித அடிஷனல் பிரதான ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டானவர் பிரதேச கவர்ன்மெண்டார் உத்தரவு செய்கிறபடி இந்தக் கோடின் பிரகாரமாவது அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கிற வேறே யாதொரு சட்டத்தின் பிரகாரமாவது யாதொரு பிரதான ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக்குள்ள சகல அதிகாரங்களையுமாகிலும் அவைகளில் எதையாகிலும் உடையவராவார்.

நியாயசபையார்.

19. அப்படிப்பட்டவர்களில் யாராவது இரண்டுபேர் அல்லது பலர் (இதில் பின்னால் கொடுத்திருக்கிற அதிகாரத்தின்படி பிரதான ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டால் செய்யப்படுகிற விதிகளுக்குட்பட்டு) ஒரு சபையாக இருந்துகொண்டு காரியங்கள் நடத்தலாம்.

அவர்களுடைய அதிகாரப் பிரதேச வரம்பு

20. ஒவ்வொரு இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டும் தாம் நியமிக்கப்பட்டிருக்கிற இராஜதானிக்குள்ளும், அந்த இராஜதானியின் ரேவினுடைய எல்லைகளும் அதற்குச் செல்லுகிறதாய் கப்பல் போக்குவரவு செய்யத்தக்க யாதொரு நதி அல்லது கால்வாயின் எல்லைகளும், ரேவுகளையும் ரேவுத்திர்வைகளையும் கிரமப்படுத்துவதைக் குறித்து அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற சட்டப்பிரகாரம் குறிக்கப்பட்டிருக்கிற அப்படிப்பட்ட எல்லைகளுக்குள்ளுமிருக்கிற சகல இடங்களிலும் அதிகாரஞ்செலுத்தவேண்டும்.

பிரதான ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்.

21. (1) ஒவ்வொரு பிரதான ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டும்-இந்த சட்டத்தினால் அவருக்குக் கொடுக்கப்பட்டாவது, இந்தச் சட்டம் வழங்கத் தொடங்குவதற்கு அடுத்து முந்தி வழங்கிக்கொண்டிருக்கிற

யாதொரு சட்டம் அல்லது விதியின்படி யாதொரு ஸீனியர் அல்லது பிரதான ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டினால் செலுத்தும்படியான தாகவாவதிருக்கிற சகல அதிகாரங்களையும் தம்முடைய அதிகாரப்பிர தேச எல்லைக்குள் செலுத்தவேண்டும்; மேலும், அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாருடைய அனுமதியை முன்னதாய்ப் பெற்றுக் கொண்டு, அடியில் கண்டிருக்கிற காரியங்களைக் கிரமப்படுத்துவதற்காக இந்தச் சட்டத்துக்கு ஒத்திருக்கும்படியான விதிகளை அப்போதைக் கப்போது செய்யலாம். (அவையாவன)—

(a) பட்டணத்து மாஜிஸ்ட்ரேட்டுகளின் கோர்ட்டுகளில் வேலையை நடத்துவதும் பகிர்ந்துகொடுப்பதும், கேஸுகள் நடத்துவதில் யாதொரு ஆசாரத்தை அனுஷ்டிக்கும்படிச் செய்வதும்;

(b) இன்னின்ன இடங்களில் இன்னின்ன காலங்களிலே மாஜிஸ்ட்ரேட்டுகள் விசாரணைசெய்யச் சபைகூடுவது;

(c) அப்படிப்பட்ட சபைகளின் ஏற்பாடு;

(d) விசாரணையில் மாஜிஸ்ட்ரேட்டுக்குள் உண்டாகும் அபிப்பிராய பேதங்களைப் பைசல்செய்கிற விதம்;

(e) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் தமக்குக் கீழ்ப்பட்டிருக்கும் மாஜிஸ்ட்ரேட்டுகளை பொது அதிகாரங்களின்படி தாம் பிரவர்த்திக்கக்கூடிய வேறு யாதொரு விஷயம்.

(2) அந்தந்த கவர்ன்மெண்டார் இந்த கோடின் விஷயங்களுக்காக அடிஷனல் பிரதான ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுகளுட்பட இன்னின்ன ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுகள் பிரதான ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கீழ்ப்பட்டவர்களாயிருக்கிறார்களென்று நிஷ்கரிஷைசெய்யலாம்; மேலும், இவ்வளவு வரையிலும் கீழ்ப்பட்டவர்களாயிருக்கிறார்களென்று வரையறுக்கலாம்.

E.—ஜஸ்டிஸ் ஆவ் தி பீஸுகள்.

வெளி ஜில்லாக்களுக்கு ஜஸ்டிஸ் ஆவ் தி பீஸுகள்.

22. அவ்வவ்விடத்திய ஒவ்வொரு கவர்ன்மெண்டாரும் தங்கள் பரிபாலனத்துக்குட்பட்ட ராஜ்ஜியங்கள் சம்பந்தப்பட்டமட்டில், ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய் அந்த விளம்பரத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரதேச விஸ்தீர்ணத்துக்

குள்ளும் விஸ்தீர்ணத்துக்காகவும் தங்களுக்குத் தகுதியாகத் தோற்று கிற யாதொரு அந்நிய சமஸ்தானத்து குடிகளல்லாத ப்ரிடிஷ் இந்தியா விற்குள் வாசஞ்செய்கிறவர்களை ஜஸ்டிஸ் ஆவ் தி பீஸுகளாகப் பிரவர்த்திக்கும்படி நியமிக்கலாம்.

[**23-24**-வது பிரிவுகள் 1923-ம்ஞு 12-வது ஆக்டால் ரத்து.]

உத்தியோக முறைமையில் ஜஸ்டிஸ் ஆவ் தி பீஸ் என்னும் அதிகாரிகள்.

25. தங்கள் தங்கள் உத்தியோக முறைமையினாலே, கவர்னர் ஜெனரலவர்களும், கவர்னர்களும், லெப்டினன்ட் கவர்னர்களும், பிரதான கம்மிஷனர்களும், கவர்னர் ஜெனரலவர்களுடைய ஆலோசனை சபையிலுள்ள சாதாரணமான மெம்பர்களும், ஹைக்கோர்ட்டுகளின் ஜட்ஜுகளும், ப்ரிடிஷ் இந்தியாவிற்குள் ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் ஜஸ்டிஸ் ஆவ் தி பீஸ் என்னும் அதிகாரிகளாவார்கள். ஸெஷன் ஜட்ஜுகளும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுகளும் தாங்கள் யாருக்குட்பட்டு வேலைசெய்கிறார்களோ அந்த பிரதேச கவர்ன்மெண்டாரால் பரிபாலனஞ்செய்யப்பட்ட ராஜ்ஜியங்களுக்குள் அந்த ராஜ்ஜியங்கள் முழுமைக்கும் (Justice of the Peace) ஜஸ்டிஸ் ஆவ் தி பீஸ் என்னும் அதிகாரிகளாவார்கள். இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுகள் எதெதற்குத் தாங்கள் மாஜிஸ்ட்ரேட்டுகளாயிருக்கிறார்களோ அந்தந்தப் பட்டணங்களுக்குள் அவைகளுக்காக ஜஸ்டிஸ் ஆவ் தி பீஸ் என்னும் அதிகாரிகளாவார்கள்.

F. ஸஸ்பெண்ட் பண்ணுவதும் பர்தர்ப்செய்வதும்.

ஜட்ஜுகளையும் மாஜிஸ்ட்ரேட்டுகளையும் ஸஸ்பெண்ட் பண்ணுவதும் நீக்கி விடுவதும்.

26. ராயல் சார்ட்டரினாலே ஸ்தாபிக்கப்பட்ட ஹைக்கோர்ட்டுகள் தவிர மற்ற க்ரிமினல் கோர்ட்டுகளின் சகல ஜட்ஜுகளையும் சகல மாஜிஸ்ட்ரேட்டுகளையும், அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் உத்தியோகத்திலிருந்து ஸஸ்பெண்ட் செய்யலாம் அல்லது நீக்கிவிடலாம்.

ஆனால், இப்போது எந்த ஜட்ஜுகளும் மாஜிஸ்ட்ரேட்டுகளும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் மாத்திரமே ஸஸ்பெண்ட் செய்யப்படுவதற்காவது வேலையிலிருந்து நீக்கிவிடப்படுவதற்காவது உள்ளாயிருக்கிறார்களோ அப்படிப்பட்டவர்களை வேறெந்த அதிகாரியும் ஸஸ்பெண்ட் செய்யவாவது வேலையிலிருந்து நீக்கி விடவாவது கூடாது.

ஜஸ்டிஸ் ஆவ் தி பீஸைகளை ஸஸ்பெண்ட் பண்ணுவதும் நீக்கி விடுவதும்.

27. அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் தங்களால் நியமிக்கப்பட்ட ஜஸ்ட்டிஸ் ஆவ் தி பீஸ் என்னும் யாதொரு அதிகாரியை ஸஸ்பெண்ட் பண்ணலாம் அல்லது வேலையிலிருந்து நீக்கிவிடலாம்.

3-ம் அத்தியாயம்.

கோர்ட்டுகளின் அதிகாரங்கள்.

A.—ஒவ்வொரு கோர்ட்டாராலும் பரிசீலனை செய்யப்படத்தக்க குற்றங்கள் விவரம்.

பினல் கோடின் படியான குற்றங்கள்.

28. இந்தச் சட்டத்திலுள்ள மற்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்தியன் பினல்கோடின்படியான யாதொரு குற்றத்தை.—

(a) ஹைக்கோர்ட்டாராவது,

(b) ஸெஷன் கோர்ட்டாராவது,

(c) யார் அந்தக் குற்றத்தைப் பரிசீலனை செய்யலாமென்று 2-வது ஷெட்யூலில் 8-வது கலத்திலே சொல்லியிருக்கிறதோ அப்படிப்பட்ட வேறெந்தக் கோர்ட்டாராவது,

பரிசீலனை செய்யலாம்.

திருஷ்டாந்தம்.

எ - என்பவன் அநியாய மரணமுண்டுபண்ணுவதென்னும் குற்றத்தைச் செய்ததாக ஸெஷன் கோர்ட்டில் குற்றஞ்சாட்டப்படுகிறான். மாஜிஸ்ட்ரேட்டால் பரிசீலனை செய்யப்படத்தக்க குற்றமாகிய மனதாரத் துன்பமுண்டுபண்ணல் என்னும் குற்றஞ்செய்ததாக அவனைத் தீர்மானிக்கலாம்.

மற்ற சட்டதிட்டங்களின்படியான குற்றங்கள்.

29. (1) இந்த கோடின் மற்ற நிபந்தனைகளுக்குட்பட்டு வேறே யாதொரு சட்டதிட்டத்தின்படியான எந்தக் குற்றத்தையாவது, அப்படிப்பட்ட சட்டதிட்டத்தில் இது விஷயமாய் இன்ன கோர்ட்டார் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்லியிருந்தால், அப்படிப்பட்ட கோர்ட்டார் அதைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) இன்ன கோர்ட் பரிசீலனை செய்யவேண்டுமென்று அந்தப்படி சொல்லியிராவிட்டால் அதை ஹைக்கோர்ட்டாராவது, மூன்

சொல்லப்பட்டவைகளுக்கு உட்பட்டு, இந்தச்சட்டப்படி ஏற்படுத்தப் பட்டும், அக்குற்றத்தை இன்னகோர்ட்டார் பரிசீலனை செய்யலாமெ ன்று 2-வது ஷெட்யூலின் 8-வது கலத்தில் சொல்லப்பட்டிருப்பது மான யாதொரு கோர்ட்டாராவது பரிசீலனை செய்யலாம்.

2-வது 3-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் யுரோப்பிய ப்ரிடிஷ்குடிகளை விசாரணை செய்வது.

29-A. யாதொரு குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு யுரோப்பிய ப்ரிடிஷ் குடி தான் அம்மாதிரி பரிசீலனை செய்யப்படுவதற்கு சுதந்திரம் கொண்டாடினால், 50-ரூபாய்க்கு மேற்படாத அபராதம் விதிக்கத்தக்க குற்றமல்லாத வேறே யாதொரு குற்றத்தை இரண்டாவது மூன்றாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் பரிசீலனை யாவது விசாரணையாவது செய்யக்கூடாது.

பால்ய குற்றவாளிகளை விசாரிக்க அதிகாரம்.

29-B. ஆயுள் பரியந்தம் தண்ணீர்மேலேற்றும்படியான அல்லது மரண தண்டனை யல்லாத யாதொரு குற்றத்தை செய்ததாக கோர்ட்டின் முன் ஆஜர் படுத்துகிற அல்லது கொண்டுவரப்படுகிற தேதியிலே 15-வயதிற்கு குறைந்த ஒரு வாலிப குற்றவாளியை ஒரு டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது பிரதான ராஜதானி மாஜிஸ்டிரேட்டாவது, 1897-ம்ளுைத்து 8-வது ஆக்டின் 8 (1) பிரிவின் காரியங்களுக்காக பிரதேச கவர்ன்மெண்டால் பிரத்தியேகமான உத்திரவினல் அதிகாரங் கொடுக்கப்பெற்ற வேறே யாதொரு மாஜிஸ்டிரேட்டும், அந்த பிரதேசத்திற்கு மேற்படி ஆக்ட் சிறிதுமட்டில் அல்லது முழுவதும் அமுலில் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதினல், வேறே யாதொரு சட்டத்தினல் வாலிப குற்றவாளிகளை பரிசீலனைசெய்து, தண்டனை விதிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டவர்களும் விசாரணைசெய்து தீர்மானிக்கலாம்.

மரண தண்டனை விதிக்கப்படத் தக்கதல்லாத குற்றங்கள்.

30. பஞ்சாப் பர்மா லெப்ட்டெனென்ட் கவர்னரவர்களாலும், அயோத்தி-மத்திய நாடுகள்-கூர்க்-ஆஸாம்-லின்ட் இவற்றின் சீவ் கம்மிஷனர்களாலும் தனித்தனி பரிபாலஞ்செய்யப்பட்ட ராஜ்ஜியங்களிலும், மற்ற நாடுகளிலே டெப்யுடி கம்மிஷனர்களாவது அஸிஸ்டான்ட் கம்மிஷனர்களாவதிருக்கிற பாகங்களிலும், அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார், 29-வது பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் நிமித்தமில்லாமல், மரண தண்டனை விதிக்

கப்படத்தக்கதல்லாத சகல குற்றங்களையும் மாஜிஸ்ட்ரேட்டாகப் பரிசீலனைசெய்ய டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது, யாதொரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்காவது அதிகாரம் கொடுக்கலாம்.

B.—வெவ்வேறு வகுப்புக்கோர்ட்டுகள் விதிக்கும்படியான தண்டனைகள்.

ஹைகோர்ட்டுகளும் ஸெஷன்ஜட்ஜுகளும் விதிக்கும்படியான தண்டனைகள்.

31. (1) யாதொரு ஹைக்கோர்ட்டார் சட்டதிட்டத்தில் ஏற்படுத்தியிருக்கிற யாதொரு தண்டனையை விதிக்கலாம் :

(2) ஸெஷன் ஜட்ஜாவது அடிஷனல் ஸெஷன் ஜட்ஜாவது சட்டதிட்டத்தில் ஏற்படுத்தியிருக்கிற எந்த தண்டனையையாகிலும் விதிக்கலாம்; ஆனால், அப்படிப்பட்ட எந்த ஜட்ஜாவது மரண தண்டனை விதித்தால் அது ஹைக்கோர்ட்டாருடைய ஊர்ஜ்ஜிதத்திற்கு உள்ளாக வேண்டும்.

(3) அஸிஸ்டென்ட் ஸெஷன் ஜட்ஜானவர்-மரணதண்டனையாவது ஏழுவருஷத்திற்கு அதிகமாகத் தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனையாவது ஏழுவருஷத்திற்கதிகமாகக் காவலில் வைக்கும்படியான தண்டனையாவது தவிர, சட்டதிட்டத்திலேற்படுத்தியிருக்கிற எந்த தண்டனையாகிலும் விதிக்கலாம்.

மாஜிஸ்ட்ரேட்டுகள் விதிக்கலாகும் சிட்சைகள்.

32 (1) மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் அடியிற்கண்டிருக்கிற சிட்சைகளை விதிக்கலாம். அவையாவன :—

(a) ப்ரெஸிடென்ஸிமாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளும், முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளும்:
- சட்டத்தினாலே உத்தரவு செய்யப்பட்டிருக்கிற தனிக்காவலுட்பட, இரண்டு வருஷகாலத்திற் கதிகப்படாமல் காவலில் வைப்பது ;
- ஆயிரம் ரூபாய்க்கு அதிகப்படாமல் அபராதம் விதிப்பது.
- அடிப்பது.

(b) இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் :
- சட்டத்தினாலே உத்தரவு செய்யப்பட்டிருக்கிற தனிக்காவலுட்பட, ஆறுமாதத்திற்கதிகப்படாமல் காவலில் வைப்பது,
- இருநூறு ரூபாய்க்கதிகப்படாமல் அபராதம் விதிப்பது ;

(c) மூன்ருவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள். { ஒருமாதத்திற் கதிகப்படாமல் காவலில் வைப்பது:
ஐம்பது ரூபாய்க் கதிகப்படாமல் அபராதம் விதிப்பது.

(2) எந்த மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டாவது விதிப்பதற்குச் சட்டத்தினுலே தமக்கு அதிகாரமுண்டாயிருக்கிற சிட்சைகளில் எதனோடு கூடவாவது சட்டப்படியான யாதொரு சிட்சையை விதிக்கலாம்.

அபராதம் செலுத்தப்படாவிட்டால் காவல் தண்டனைவிதிக்க மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு அதிகாரம்.

33. (1) அபராதம் செலுத்தப்படாவிட்டால், அதற்காக எவ்வளவு காவற்காலம் சட்டத்தினுல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வளவு காலம் காவல்தண்டனையை எந்த மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டாராவது விதிக்கலாம் :

ஆனுல் :—

(a) அந்த காவற்காலமானது இந்தச் சட்டத்தின்படி அந்த மாஜிஸ்ட்ரேட்டினுடைய அதிகாரத்திற்கு மேற்பட்டிருக்கக்கூடாது.

சில கேஸுகளை க்குறித்து விலக்கு.

(b) மாஜிஸ்ட்ரேட்டினுல் தீர்மானிக்கப்படுகிற யாதொரு கேஸிலே காவல்தண்டனையாவது (Substantive) பிரதம சிட்சையின் பாகமாக விதிக்கப்பட்டிருக்குமாகில், அபராதம் செலுத்தாமைக்காகத் தீர்மானிக்கப்பட்ட காவற்காலமானது அபராதம் செலுத்தாமைக்காகவல்லாமல் மற்றப்படி அந்தக் குற்றத்திற்காக எவ்வளவு விதிப்பதற்கு அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரமிருக்கிறதோ அந்தக் காவற்காலத்தில் நாலிலொருபங்குக்கு அதிகப்படக்கூடாது.

(2) இந்தப்பிரிவின்படி விதிக்கப்பட்ட காவல் தண்டனையானது - உயர்ந்தது எவ்வளவு காலத்திற்கு 32 - வது பிரிவின்படி அந்த மாஜிஸ்ட்ரேட் விதிக்கலாமோ அவ்வளவு காலத்திற்கு விதிக்கப்பட்ட பிரதம காவல்தண்டனையோடு இன்னும் சேர்ந்திருக்கலாம்.

சில டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு இன்னும் அதிகமாயிருக்கும் அதிகாரம்.

34. முப்பதாவது பிரிவின்படி பிரத்தியேகமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்ற யாதொரு டிஸ்ட்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டார் - மரணதண்டனையாவது ஏழுவருஷத்திற் கதிகமாகத் தன்னீர் மேலேற்றும்படியான தண்டனையாவது ஏழுவருஷத்திற் கதிகமாகக் காவலில் வைக்கும்படியான தண்டனையா

வது தவிர, சட்டதிட்டத்தில் ஏற்படுத்தியிருக்கிற எந்தத் தண்டனையாகிலும் விதிக்கலாம்.

யுரோப்பிய ப்ரிடிஷ் குடிகள்மேல் கோர்ட்டுகளும் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளும் விதிக்கத்தக்க தண்டனைகள்.

34-A. 31, 32, 34 பிரிவுகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே—

(a) யாதொரு ஸெஷன்ஸ் கோர்ட்டார் ஒரு யுரோப்பிய ப்ரிடிஷ் குடியின்மேல் மரணதண்டனையல்லாத, கடுங்காவல் தண்டனை அல்லது அபராதத்தோடாவது இல்லாமலாவது காவல் தண்டனையும், அபராதமும்;

(b) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட் ஒரு ப்ரிடிஷ் யுரோப்பியன் குடியின்மேல், இரண்டு வருஷங்களுக்குமேல்படாத காவல்தண்டனையும், 1000-ரூபாய்க்கு மேற்படாத அபராதமும், அல்லது இவை இரண்டும் விதிக்கலாம்.

ஒரு பரிசீலனையில் பலகுற்றங்களுக்காகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுகிற விஷயங்களிலே சிட்சை.

35. (1) இரண்டு அல்லது பல குற்றங்களுக்காக ஒரே பரிசீலனையில் ஒருவன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டால், அப்படிப்பட்ட குற்றங்களுக்காகக் கோர்ட்டார் - இந்தியன் பீனல் கோடின் 71-வது பிரிவின் நிபந்தனைகளுக்குட்பட்டு அவைகளுக்காக நிர்ணயிக்கப்பட்டு விதிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரமிருக்கிற பல தண்டனைகளையும் அவனுக்கு விதிக்கலாம் : அந்த தண்டனைகள் காவலையாவது தண்ணீர்மேலேற்றுவதையாவது சேர்ந்ததாயிருந்தால், அத்தண்டனைகள் ஏககாலத்தில் நடந்தேறி வரவேண்டுமென்று கோர்ட்டார் உத்தரவுசெய்தாலன்றி கோர்ட்டார் உத்தரவுசெய்கிறபடி வரிசைக்கிரமாய் ஒன்று முடிந்த பின்பு மற்றொன்றை ஆரம்பிக்கவேண்டும்.

(2) தொடர்ச்சியாய்க் கொடுக்கும் தீர்மானங்கள் விஷயத்தில், பல குற்றங்களுக்காக விதிக்கப்பட்ட தண்டனை மொத்தமானது ஒரே குற்றஸ்தாபனையின்மேல் எவ்வளவு விதிப்பதற்குக் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறதோ அந்த தண்டனைக்கு மிஞ்சியிருக்கிறதென்கிற ஹேதுவினாலே மாத்திரம் தங்களுக்கு மேலான கோர்ட்டுக்குமுன் பரிசீலனைக்காக நேரஸ்தனை அந்தக் கோர்ட்டார் அனுப்பவேண்டிய அவசியமில்லை.

ஆனல்—

தண்டனைக்கு உயர்ந்தது இவ்வளவுகாலம்.

(a) எந்த விஷயத்திலும் அப்படிப்பட்டவனுக்குப் பதினன்கு வருஷத்தைவிட அதிக காலத்திற்குக் காவல் தண்டனை விதிக்கக்கூடாது.

(b) (34-வது பிரிவின்படி பிரவர்த்திக்கிற மாஜிஸ்ட்ரேட் தவிர வேறே) மாஜிஸ்ட்ரேட்டினல் கேஸ் பரிசீலனைசெய்யப்பட்டால், அந்த தண்டனையானது மொத்தத்திலே, அவர் தமக்குள்ள சாதாரணமான அதிகாரத்தைக்கொண்டு எவ்வளவு தண்டனை விதிக்கக்கூடுமோ அந்த தண்டனைக்கு இரண்டத்தனைக்கு அதிகப்படக்கூடாது.

(3) அப்பீல் செய்யும் விஷயத்தின் பொருட்டு ஒரே பரிசீலனையில் பல குற்றங்களுக்காகக் குற்றஸ்தாபனையாவதன்மேல் இந்தப் பிரிவின்படி விதிக்கப்பட்ட தொடர்ச்சியான தண்டனைகளின் மொத்தத்தை ஒரே தண்டனையாக எண்ணவேண்டும்.

C.—சாதாரணமான அதிகாரங்களும் விசேஷமான அதிகாரங்களும்.

மாஜிஸ்ட்ரேட்டுகளுடைய சாதாரணமான அதிகாரம்.

36. எல்லா டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுகளும் ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுகளும் முதலாவது இரண்டாவது மூன்ருவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளும் அவரவர்களுக்கு இதில் பின்னல் கொடுக்கப்பட்டு மூன்ருவது ஷெட்யூலில் குறித்திருக்கிற அதிகாரங்களையுடையவர்களாவார்கள். அப்படிப்பட்ட அதிகாரங்கள் அவர்களுடைய "சாதாரணமான அதிகாரங்கள்" என்று சொல்லப்படும்.

மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குக் கொடுக்கப்படத்தக்க விசேஷமான அதிகாரம்.

37. யாதொரு ஸப்-டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது முதலாவது இரண்டாவது அல்லது மூன்ருவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்காவது உண்டாயிருக்கிற சாதாரணமான அதிகாரங்களோடு கூடப் பிரதேச கவர்ன்மெண்டாராகிலும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாகிலும் அவருக்குக் கொடுக்கும்படியான அதிகாரங்ளென்று நான்காவது ஷெட்யூலில் குறித்திருக்கிற ஏதாவது அதிகாரங்களை, சங்கதிக்குத் தக்கபடி பிரதேச கவர்ன்மெண்டாராவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது அவருக்குக் கொடுக்கலாம்.

அதிகாரங் கொடுப்பதற்கு டிஸ்ட்ரிக்ட்மாஜிஸ்ட்ரேட்டுக்குள்ள அதிகாரத்தை மேல்விசாரணை பண்ணுவது.

38 டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு 37-வது பிரிவின்படி கொடுத்திருக்கிற அதிகாரத்தை அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாருடைய மேல்விசாரணைக்குட்பட்டுச் செலுத்தவேண்டும்.

D.—அதிகாரங்களைக் கொடுப்பதும் அவைகள் அப்படியே இருப்பதும் அவைகளை ரத்துபண்ணுவதும்.

அதிகாரங் கொடுக்கிறவிதம்.

39. (1) இந்தச் சட்டத்தின்படி அதிகாரங் கொடுக்கையில், உத்தரவுமூலமாய் அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் நபர்களுக்கு அவரவருடைய பெயரைக் குறித்தாவது அவரவருடைய உத்தியோக முறைமையிலாவது அதிகாரங் கொடுக்கலாம்; அல்லது உத்தியோகஸ்தர்களின் வகுப்புகளுக்குப் பொதுவாய் அவர்களுடைய உத்தியோகப் பெயரைக் குறித்து அதிகாரங்கொடுக்கலாம்.

(2) அப்படிப்பட்ட பிரதி உத்தரவும் அதிகாரங்கொடுக்கப்பட்ட நபருக்கு அது-தெரிவிக்கப்படுந் தேதிமுதற்கொண்டு செல்லவேண்டும்.

அதிகாரிகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பப்பட்டால், அவர்களுடைய அதிகாரம் அப்படியே இருப்பது.

40. யாதொரு பிரதேச விஸ்தீர்ணமுழுமைக்கும் இந்தச்சட்டத்தின்படி எவ்வளவாவது அதிகாரங்கொடுக்கப்பெற்று ஸர்க்காரில் அலுவல் பார்த்துக்கொண்டிருக்கிறவரெவராவது அதே பிரதேச கவர்ன்மெண்டாருக்குட்பட்ட அவ்வித பிரதேச விஸ்தீர்ணத்துக்குள் அத்தன்மையுள்ள அதற்குச் சமானமான அலுவலுக்காகிலும் அதற்கும் உயர்ந்த அலுவலுக்காகிலும் நியமிக்கப்பட்டால், பிரதேச கவர்ன்மெண்டார் வேறே விதமாய் உத்தரவு செய்யாத பட்சத்தில் அல்லது உத்தரவு செய்யாதிருக்கிற பட்சத்தில், அவர் தாம் நியமிக்கப்பட்ட பிரதேச விஸ்தீர்ணத்தில் முன்னைய அதிகாரத்தை செலுத்தவேண்டும்.

அதிகாரங்களை ரத்துசெய்யலாம்.

41. (1) அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் இந்தச் சட்டத்தின்படி தங்களாலாவது தங்களுக்குக் கீழ்ப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தராலாவது யாருக்காகிலும் கொடுக்கப்பட்டிருக்கும் சகல அல்லது எந்த அதிகாரத்தையேனும் எடுத்துவிடலாம்.

(2) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாரால் கொடுக்கப்பட்டிருக்கிற எவ்வித அதிகாரங்களேயும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டார் எடுத்து விடலாம்.

3-ம் பாகம்.

பொது நிபந்தனைகள்.

4-ம் அத்தியாயம்.

மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும் போலீஸாருக்கும் ஆள்களைப்பிடிக்கிற நபர்களுக்கும் உதவிசெய்வதும் சங்கதி தெரிவிப்பதும்.

இன்னபடிக்கானல் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும் போலீஸாருக்கும் சகலமானவர்களும் உதவிசெய்வது.

42. மாஜிஸ்ட்ரேட்டாகிலும் போலீஸ் உத்தியோகஸ்தனாகிலும்,—

(a) எவனைப் பிடிப்பதற்கு அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு அல்லது போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு அதிகாரமிருக்கிறதோ அப்படிப்பட்டவனைப் பிடிக்கையிலாவது தப்பித்துக்கொண்டு ஓடாமலிருக்கத் தடுக்கையிலாவது,

(b) கலகம் வரவொட்டாமல் தடுக்கையில்லாவது அதை அடக்குகையிலாவது யாதொரு ரெயில்வே-கால்வாய்-டெலிக்ராப் அல்லது ஸர்க்கார் சொத்துக்குத் தீங்குசெய்ய எத்தனிப்பதைத் தடுக்கையிலாவது,

இராஜதானிகளுக்குள்ளாகிலும் இராஜதானிகளுக்கு வெளியிலாகிலும் தமக்குச் சகாயஞ்செய்யும்படி எவனெவனை நியாயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறாரோ அந்தப் பிரதி மனிதனும் அப்படியே சகாயஞ் செய்யக் கடமைப்பட்டவனாவான்.

போலீஸ் உத்தியோகஸ்தனல்லாமல் வேறொருவன் வாரன்டை நிறைவேற்றுகையில் அவனுக்குச் சகாயஞ் செய்வது.

43. போலீஸ் உத்தியோகஸ்தனல்லாத வேறொருவன் பெயருக்கு வாரன்ட் எழுதப்பட்டால் பின்னை எவனாவது-அந்த வாரன்ட் யார்பெயருக்கு எழுதப்பட்டதோ அவன் சமீபத்திலும் வாரன்டை நிறைவேற்றுவதில் பிரவர்த்தித்துக் கொண்டும்

இருக்கிற பட்சத்தில், அந்த வாரன்டை நிறைவேற்றுவதற்கு உதவி செய்யலாம்.

சில குற்றங்களை க்குறித்துச் சகலமானவர்களும் அறிக்கை செய்யவேண்டும்.

44. (1) இந்தியன் பினல் கோடின் 121, 121-A, 122, 123, 124, 124-A, 125, 126, 130, 143, 144, 145, 147, 148, 302, 303, 304, 382, 392, 393, 394, 395, 396, 397, 398, 399, 402, 435, 436, 449, 450, 456, 457, 458, 459, 460-வது பிரிவுகளி லெதன்படிக்காகிலும் தண்டனை விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றம் செய்யப்பட்டது அல்லது செய்ய எவனுவது எண்ணியிருப்பது, இராஜதானிகளுக்குள்ளாகிலும் வெளியிலாகிலும் எவனெவனுக்குத் தெரிந்திருக்கிறதோ அந்தப் பிரதி நபரும் தகுந்த முகாந்தர மில்லாதிருக்கையிலே அப்படி செய்யப்பட்டதைக் குறித்தாவது எண்ணமிருப்பதைக் குறித்தாவது அதிக சமீபத்திலுள்ள மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும் போலீஸ் உத்தியோகஸ்தனுக்காகிலும் உடனே அறிக்கைசெய்யாவிட்டால் அதற்குண்டான தகுந்த முகாந்தரத்தை ருஜுப்படுத்தும் கடமை அவனுடையதாகும்.

(2) இந்தப் பிரிவின் விஷயங்களுக்காக "குற்றம்" என்னும் வார்த்தையிலே, ப்ரிட்டிஷ் இந்தியாவில் செய்தால் குற்றமென்று ஏற்படக்கூடிய யாதொரு காரியமானது ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியே யாதொரு இடத்தில் செய்யப்பட்டிருந்தால் அக்காரியமும் அடங்கும்.

கிராமப் பெரியதனக்காரர்களும் கணக்கர்களும் பூமிக்குடையவர்களும் மற்றவர்களும் சில சங்கதிகளை அறிக்கைசெய்யக்கடமைப்பட்டிருப்பது.

45 (1) பிரதி கிராமப் பெரியதனக்காரனும் கிராமக் கணக்கனும் கிராமக் காவற்காரனும் கிராமப் போலீஸ் உத்தியோகஸ்தனும், நிலத்தின் சொந்தக்காரன் அல்லது அதை அனுபவிக்கிறவனும், அப்படிப்பட்ட யாதொரு சொந்தக்காரன் அல்லது அனுபவிப்பவனுடைய ஏஜெண்டும், நிலத்தின் மானேஜ்மெண்டின் பொறுப்பேற்றுக்கொண்டிருப்பவரும், கவர்ன்மெண்டார் பட்சத்திலாவது ரெவினியு அல்லது நிலக்குத்தகைத் தொகையை வசூல்செய்வதில் அமர்த்தப்பட்ட பிரதி உத்தியோகஸ்தனும், அடியில் கண்டிருக்கிற விஷயங்களைக் குறித்துத் தனக்குத்தெரிந்திருக்கிற யாதொரு சங்கதியை, சமீபத்திலுள்ள மாஜிஸ்ட்ரேட்டுக்காவது சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்

தியோகஸ்தனுக்காவது இவர்களிலெவர் மிகவும் சமீபத்திலிருக்கிறுரோ அவருக்கு உடனே அறிக்கை செய்யவேண்டும். அவையாவன—

(a) தான் எதற்குப் பெரியதனக்காரனுகவாவது கணக்கனுகவாவது காவற்காரனுகவாவது போலீஸ் உத்தியோகஸ்தனுகவாவது எதில் நிலத்தின் சொந்தக்காரனுகவாவது அனுபவிக்கிறவனுகவாவது ஏஜென்டாகவாவது ரெவினியு அல்லது குத்தகைத்தொகை வசூல்செய்கிறவனுகவாவதிருக்கிறுனே அந்த கிராமத்தில் திருட்டுச்சொத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவன் அல்லது விற்கிறவனென்று பெயர்போனவனெவனுயினும் நிலையாகவாகிலும் சிறிது காலத்திற்காகிலும் வாசஞ்செய்வது ;

(b) தந்தித் திருடனென்ருவது கொள்ளையடிக்கிறவனென்ருவது தப்பித்துக்கொண்டு ஓடிவிட்ட கைதியென்ருவது பிரசித்தஞ்செய்யப்பட்ட குற்றவாளியென்ருவது தான் அறிந்திருக்கிற அல்லது நியாயமாய் அனுமானிக்கிற யாதொரு நபர் அப்படிப்பட்ட கிராமத்திற்குள் யாதோரிடத்திற்கு வந்திருப்பது அல்லது அந்தக் கிராமவழியாய்ச் சென்றிருப்பது ;

(c) அப்படிப்பட்ட கிராமத்திலாவது அதற்குச் சமீபத்திலாவது ஹாஜர் ஜாமீன் வாங்கத்தக்கதாகவாகிலும், இந்தியன் பினல் கோட் 143, 144, 145, 147, அல்லது 148-வது பிரிவின்படி தண்டிக்கக்கூடியதாகவாகிலுமுள்ள யாதொரு குற்றஞ்செய்யப்பட்டது அல்லது செய்ய என்னுவது ;

(d) அப்படிப்பட்ட கிராமத்திலாவது அதற்குச் சமீபத்திலாவது யாதொரு சடுதி மரணமாகிலும் துர்மரணமாகிலும் அனுமானிப்பதற்கு முகாந்தரமுள்ள மரணமாகிலும் நேரிடுவது ; அல்லது அப்படிப்பட்ட மரணம் நேரிட்டிருக்கிறதென்று நியாயமாய் அனுமானிப்பதற்கு இடமுண்டாகும்படியான சந்தர்ப்பங்களில் அப்படிப்பட்ட கிராமத்திலாவது அதற்குச் சமீபத்திலாவது யாதொரு பிரேதத்தையாகிலும் ஒரு பிரேதத்தின் யாதொரு பாகத்தையாகிலும் கண்டுபிடிப்பது ; அல்லது யாதொரு

நபர் விஷயமாய் ஒரு குற்றம் செய்யப்பட்டிருக்கிற தென்று நியாயமாய் அனுமானம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் அப்படிப்பட்ட நபர் அந்த கிராமத்திலிருந்து காணாமற்போவது ;

(e) ப்ரிட்டிஷ் இந்தியாவில் செய்யப்பட்டால் இந்தியன் பினல் கோட்—231, 232, 233, 234, 235, 236, 237, 238, 302, 304, 382, 392, 393, 394, 395, 396, 397, 398, 399, 402, 435, 436, 449, 450, 457, 458, 459, 460, 489-A, 489-B, 489-C, 489-D, இந்தப் பிரிவுகளில் எதன்படிக்காவது தண்டிக்கப்படத்தக்க குற்றமாகக்கூடிய யாதொரு காரியத்தை அப்படிப்பட்ட கிராமத்துக்குச் சமீபத்தில் ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியே யாதோரிடத்தில் செய்வது அல்லது செய்ய எண்ணுவது ;

(f) ஒழுங்கைப் பாதுகாப்பதையாவது குற்றத்தைத் தடுப்பதையாவது, சரீரம் அல்லது பொருளின் க்ஷேமத்தையாவது வெகுசாய்ப் பாதிக்கத்தக்கதும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியை முன்னமே பெற்றுக்கொண்டு பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவினல் எதன் விஷயமாய்த் தமக்குச் சமாசாரம் தெரிவிக்கும்படியாக அவனுக்குக் கட்டளையிட்டிருக்கிறாரோ அப்படிப்பட்டதுமான யாதொரு விஷயம்.

(2) இந்தப்பிரிவில்—

(i) "கிராமம்" என்பதில், கிராம நிலங்களும் அடங்கும்; மேலும்,

(ii) "பிரசித்தஞ்செய்யப்பட்ட குற்றவாளி" என்னும் சொற்றொடரிலே, ப்ரிட்டிஷ் இந்தியாவில் செய்யப்பட்டால் இந்தியன் பினல்கோட் 302, 304, 382, 392, 393, 394, 395, 396, 397, 398, 399, 402, 435, 436, 449, 450, 457, 458, 459, 460-வது பிரிவுகளில் எதன்படிக்காகிலும் தண்டிக்கப்படத்தக்க யாதொரு காரியத்தின்

விஷயமாய் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் இந்தியாவின் யாதொரு பாகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அல்லது நடப்பித்துக்கொண்டிருக்கும் யாதொரு கோர்ட்டாராலாவது அதிகாரியாலாவது குற்றவாளியென்று பிரசித்தஞ்செய்யப்பட்டிருக்கிற யாதொரு நபரென்பதும் அடங்கும்.

டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டவர்கள் இந்தப் பிரிவின் விஷயங்களுக்காக சில கேஸுகளில் கிராமப் பெரியதனக்காரர்களை நியமித்தல்.

(3) இதன் விஷயமாய் பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்படும் விதிகளுக்குட்பட்டு, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாகிலும் ஸப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாகிலும்-வேறு எந்தச் சட்டத்தின்படிக்காவது கிராமப் பெரியதனக்காரன் நியமிக்கப்பட்டிராத யாதொரு கிராமத்தில் இந்தப் பிரிவின் விஷயங்களுக்காக ஒருவனையாவது பல நபர்களையாவது அவருடைய அல்லது அவர்களுடைய சம்மதியின்மேல் ஒரு கிராமப் பெரியதனக்காரருடைய அலுவலைசெய்வதற்கு நியமிக்கலாம்.

5-ம் அத்தியாயம்.

ஆளைப்பிடிப்பதையும் தப்பித்துக்கொண்டோடிப்போவதையும் மறுபடி பிடிப்பதையுங்குறித்து.

A.—சாதாரணமாய் ஆளைப்பிடிப்பது.

ஆளைப் பிடிக்கும் விதம்.

46. (1) ஆளைப் பிடிக்கையில், அவன் அதற்கு உட்பட்டுக் காவலுக்குவராவிட்டாலும் வருகிறதாய்ச் சொல்லாவிட்டாலும், அப்படி பிடிக்கிற போலீஸ் உத்தியோகஸ்தனாவது மற்றவனாவது அவனைத் தேகத்தின்மேல் நேரில் கைவைக்கவாகிலும் காவற்படுத்தவாகிலும் வேண்டும்.

ஆளைப் பிடிக்கையில் அவன் எதிர்ப்பது.

(2) அப்படிப்பட்டவனைப் பிடிக்க எத்தனப்படுகையில் அவன் பலமாய் எதிர்த்தாலும், பிடிக்கவொட்டாமல் தப்பித்துக்கொள்ள எத்தனித்தாலும் அவனைப் பிடிப்பதற்கு அவசியமாய் என்னென்ன செய்யவேண்டி

யதோ அவைகளையெல்லாம் அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தனாவது மற்றவனாவது செய்யலாம்.

(3) மரணதண்டனையாவது ஆயுள்பரியந்தம் தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனையாவது விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றம் சாட்டப்படாதிருக்கிறவனுக்கு மரணமுண்டுபண்ண இந்தப் பிரிவிலுள்ளதேதனாலும் அதிகாரமுண்டாகமாட்டாது.

எவனைப் பிடிக்க உத்தேசமோ அவன் புகுந்துகொண்டிருக்கிற இடத்தைச் சோதனை போடுவது.

47. ஆளைப்பிடிக்கும்படியான வாரன்டைக்கொண்டு பிரவர்த்திக்கிற யாவனொருவனுக்காவது ஆளைப்பிடிப்பதற்கு உத்தரவு பெற்றிருக்கிற யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனுக்காவது எவனைப் பிடிக்கவேண்டியதோ அவன் யாதொரு இடத்திற்குள் நுழைந்திருக்கிறானென்றாகிலும் புகுந்துகொண்டிருக்கிறானென்றாகிலும் நம்புவதற்கு முகாந்தரமிருந்தால், அந்த இடத்தில் வாசஞ்செய்துகொண்டாவது அதைத் தன்வசமாய் வைத்துக்கொண்டாவதிருக்கிறவன்-மேற்சொல்லியபடி பிரவர்த்திக்கிற நபராவது அப்படிப்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தனாவது கேட்பதன்மேல், அவனைத் தாராளமாய் உள்ளே விடவேண்டியதுமல்லாமல் அதில் சோதனைபோடுவதற்கு நியாயமான அனுகூலங்களையெல்லாம் செய்யவும்வேண்டும்.

உள்ளே விடாவிட்டால் நடவடிக்கை.

48. நாற்பத்தேழாவது பிரிவின்படி அந்த இடத்திற்குள் விடப்படாவிட்டால், எந்த விஷயத்திலாவது வாரன்டைக்கொண்டு பிரவர்த்திக்கிற நபருக்கும், வாரன்ட் பிறப்பிக்கப்படுவதாயிருந்தபோதிலும், அதை வாங்கி வருவதற்குள்ளே பிடிக்கப்படவேண்டிய நபர் ஓடிப்போகிறதாயிருக்கிற எந்த விஷயத்திலாவது யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனுக்கும், அப்படிப்பட்ட இடத்திற்குள் நுழைந்து சோதனைபோடவும், அப்படிப்பட்ட இடத்திற்குள் நுழையும்பொருட்டு, தனக்குள்ள அதிகாரத்தையும் தான் வந்த காரியத்தையும் தெரிவித்துத் தன்னை உள்ளேவிடவேண்டுமென்று கிரமமாய்க் கேட்டபின்பு, தன்னை அப்படியே விடாவிட்டால், யாதொரு வீடு அல்லது இடம் பிடிக்கப்படவேண்டியவனுடையதாயிருந்தாலும் வேறே எவனுடையதாயிருந்தாலும், அப்படிப்பட்ட வீடு அல்லது இடத்தின் வெளிக்கதவையாவது உட்கதவையாவது ஜன்னலையாவது உடைத்து உள்ளே நுழையவும், அதிகாரமுண்டு ;

ஆனால், அப்படிப்பட்ட யாதோரிடமானது (பிடிக்கப்படவேண்டிய நபரல்லாமல்) தேசவழக்கப்படி பஹிரங்கத்தில் வராத ஸ்திரீ வாஸ்தவமாய் வாசஞ்செய்கிற அறையாயிருந்தால், அப்படிப்பட்ட அறையில் போவதற்கு முன்னமே, அப்படிப்பட்ட நபராவது போலீஸ் உத்தியோகஸ்தனாவது அவள் அப்புறம்போய் விடலாமென்று அறிக்கையிட்டு, அப்படி அப்புறம்போவதற்கு நியாயமான சகல சுலபத்தையும் உண்டுபண்ணவேண்டும்; பின்பு அந்த அறையை உடைத்து உள்ளே நுழையலாம்.

அந்தப்புரத்தை உடைத்து நுழைவது.

49. ஆளைப் பிடிக்கும்படி அதிகாரம்பெற்ற யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனாவது மற்றவனாவது தன்னை விடுவித்துக்கொள்ளவாகிலும், ஆளைப்பிடிக்கும் பொருட்டு வேறெவன் சட்டப்படி உள்ளே நுழைந்திருந்து அவ்விடத்தில் மறியல் பண்ணப்பட்டிருக்கிறானோ அவனை விடுவிக்கவாகிலும், யாதொரு வீடு அல்லது இடத்தின் வெளிக்கதவையாவது உட்கதவையாவது ஜன்னலையாவது உடைத்துத் திறக்கலாம்.

விடுதலை செய்வித்துக்கொள்ளக் கதவுகளையும் ஜன்னல்களையும் உடைத்துத் திறப்பதற்கு அதிகாரம்.

50. ஆளைப் பிடித்துக்கொண்டபின்பு அவனைத் தப்பித்துக் கொண்டுபோகவொட்டாமல் என்ன செய்யவேண்டியதோ அது தவிர வேறே யாதொரு நிர்ப்பந்தமும் செய்யக்கூடாது.

அனுவசியமான நிர்ப்பந்தங்கூடாது.

51. ஹாஜர் ஜாமீன்வாங்கும்படி உத்தரவு செய்யப்பட்டிராத வாரன்டைக்கொண்டு யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் ஆளைப்பிடித்தாலும், ஹாஜர் ஜாமீன் வாங்கும்படி உத்தரவுசெய்யப்பட்டிருக்கிற வாரன்டைக்கொண்டு யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் ஆளைப்பிடித்த பின்பு பிடிபட்டவன் ஹாஜர் ஜாமீன் கொடுக்க முடியாவிட்டாலும்,

பிடிப்பட்டவர்களைச் சோதனைபோடுவது.

வாரன்டில்லாமலாவது, வாரன்டைக்கொண்டு ஸர்க்கார் மனிதனல்லாத யாவனொருவனாவது ஆளைப்பிடித்து அவனிடத்தில் சட்டப்படி ஹாஜர் ஜாமீன் ஏற்றுக்கொள்ளக் கூடாததாயிருந்தாலும், அவன் ஹாஜர் ஜாமீன் கொடுக்கமுடியாவிட்டாலும்,

ஆளைப்பிடிக்கிற உத்தியோகஸ்தனாவது, ஸர்க்கார் மனிதனல்லாத யாவனொருவன் ஆளைப்பிடித்திருந்தால் பிடிபட்ட நபரை யாரிடத்தில் ஒப்பிக்கிறானோ அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தனாவது அப்படிப்பட்டவனைச் சோதனைபோட்டு, அவசியமான உடுப்பு தவிர அவனிடத்தில் அகப்படுகிற மற்ற சகல வஸ்துக்களையும் பத்திரமான காவலில் வைத்துவைக்கலாம்.

ஸ்திரீகளைச்சோதனை போடுகிற விதம்.

52. யாதொரு ஸ்திரீயைச் சோதனைபோடுவிக்க வேண்டுமானால், எவ்வளவேனும் மானத்திற்குப் பங்கம் வராமல் அவளை வேறொரு ஸ்திரீ சோதனைபோடவேண்டும்.

தீங்கு உண்டுபண்ணத்தக்க ஆயுதங்களைக் கைப்பற்ற அதிகாரம்.

53. இந்தச் சட்டப்படி ஆளைப்பிடிக்கிற உத்தியோகஸ்தனாவது மற்றவனாவது பிடிபட்டவன் தன்னிடத்தில் வைத்துக்கொண்டிருக்கிற தீங்கு உண்டுபண்ணத்தக்க யாதொரு ஆயுதத்தை அவனிடத்திலிருந்துஎடுத்து கொள்ளலாம்; அப்படி எடுத்துக்கொண்ட சகல ஆயுதங்களையும் ஆளைப்பிடித்த உத்தியோகஸ்தனாகிலும் மற்றவனாகிலும் பிடிபட்டவனை யாருக்கு முன்பாகக் கொண்டுவரவேண்டுமென்று இந்தச் சட்டத்தில் உத்தரவு செய்திருக்கிறதோ அப்படிப்பட்ட கோர்ட்டாரிடத்திலாவது உத்தியோகஸ்தரிடத்திலாவது ஒப்பிக்கவேண்டும்.

B.—வாரண்டில்லாமல் பிடிப்பது.

இன்ன படிக்கானால் போலீஸார் வாரண்டில்லாமல் பிடிக்கலாம்.

54. (1) யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனாவன் மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவில்லாமலும் வாரண்டில்லாமலும்,—

முதலாவது—பிடிக்கக்கூடிய யாதொரு குற்றத்தில் எவன் சம்பந்தப்பட்டிருக்கிறானோ, அல்லது அப்படி சம்பந்தப்பட்டிருப்பதாக எவன்மேல் நியாயமான பிரியாது செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது நம்பத்தக்க சங்கதி தெரிந்திருக்கிறதோ அல்லது நியாயமாய் அனுமான முண்டாயிருக்கிறதோ அப்படிப்பட்டவனையும்,

இரண்டாவது—கன்னமிடுவதற்கான யாதொரு ஆயுதத்தை எவனாவது நியாயமான முகாந்தரமில்லாமல் வைத்துக்கொண்டிருந்தால் அப்படிப்பட்டவனையும் பிடிக்கலாம்; அப்படி வைத்துக்கொண்டிருக்

கிற பட்சத்தில் அதற்கு நியாயமான முகாந்தரமுண்டென்று ருஜூப் படுத்துங் கடமை அவனுடையதாகும்,

மூன்ருவது—இந்தச் சட்டத்தின்படிக்காவது பிரதேச கவர்ன் மெண்டாருடைய உத்தரவின்படிக்காவது குற்றவாளியென்று விளம் பரஞ் செய்யப்பட்டிருக்கிறவனையும்,

நான்காவது—திருட்டுச்சொத்தென்று நியாயமாய் அனுமானிக் கும்படியான யாதொரு சொத்து ஒருவனிடத்தில் அகப்பட்டும், அப் படிப்பட்ட சொத்துவிஷயமாய் அவன் குற்றஞ்செய்திருப்பதாக நியா யமாய் அனுமானிப்பதற்கு இடமிருந்தால் அப்படிப்பட்டவனையும்,

ஐந்தாவது—போலீஸ் உத்தியோகஸ்தன் தன் அலுவலை நடத்திக் கொண்டிருக்கையில் அவனைத் தடுக்கிறவனையும், நியாயமான காவலி லிருந்து தப்பித்துக்கொண்டு போகிறவனையும், தப்பித்துக்கொண்டு போக எத்தனப்படுகிறவனையும்,

ஆருவது—மஹாராணி அவர்களுடைய ராணுவத்திலிருந்தாவது கப்பற்சேனையிலிருந்தாவது ஆகாயப் படையிலிருந்தாவது ஓடிவந்து விட்டவனென்ருகிலும், மஹாராணியவர்களுடைய இந்தியன் மெரீன் ஸெர்விஸைச் சேர்ந்து சட்டத்துக்கு விரோதமாய் அந்த ஸெர்விஸை விட்டு வந்திருக்கிறவனென்ருகிலும் நியாயமாய் அனுமானிக்கப்பட்ட வனையும்,

ஏழாவது—ப்ரிட்டிஷ் இந்தியாவில் செய்யப்பட்டிருந்தால் குற்ற மாகத் தண்டிக்கப்படத்தக்கதும், ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியே யாதொரு இடத்தில் செய்யப்பட்டிருக்கிறதுமான யாதொரு காரியத் தில் சம்பந்தப்பட்டிருந்த காரணத்தினுலாவது, சம்பந்தப்பட்டிருந்த தாக நியாயமான பிராதுசெய்யப்பட்டிருக்கிற அல்லது நம்பத்தகுந்த சங்கதி தெரியவந்திருக்கிற அல்லது நியாயமாய் அனுமானம் உண்டா யிருக்கிற காரணத்தினுலாவது, குற்றவாளிகளைப் பிடித்து ஒப்பிப்ப தைக்குறித்த யாதொரு சட்டத்தின்படிக்கோ ஓடிப்போகும் குற்றவா ளிகளைக்குறித்த 1881-ம் வருஷத்து ஆக்ட்டின்படிக்கோ வேறு எதன் படிக்கோ ப்ரிட்டிஷ் இந்தியாவில் பிடிக்கப்படவேண்டியவனுகவாகிலும் காவலில் மறியல் செய்யப்படவேண்டியவனுகவாகிலுமிருக்கிற யாதொரு நபரையும்,

எட்டாவது—565-வது பிரிவின் (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு விதிக்கு விரோதமாய் நடக்கிற விடுதலையான யாதொரு கைதியையும்,

ஒன்பதாவது—யாதொரு நபரைப் பிடிப்பதற்கு வேருெரு போலீஸ் உத்தியோகஸ்தனிடத்திலிருந்து வேண்டுகோள் கடிதம் கிடைத்திருக்கிற விஷயத்தில், அந்த கடிதத்தில் பிடிக்கப்படவேண்டிய நபர் குறிக்கப்பட்டு, குற்றத்தின் சுபாவம் அல்லது பிடிக்கப்படுவதற்குள்ள வேறே காரணங்களையும் அதில் கண்டு அதனுல் அந்த நபர் நியாயமாய் கடிதம் பிறப்பித்த உத்தியோகஸ்தரால் வாரண்டில்லாமல் பிடிக்கப்படவேண்டியதென்று தெரிந்தாலும்,

பிடிக்கலாம்.

(3) கல்கத்தா, பட்டணத்திலுள்ள போலீஸாருக்குக்கூட இந்தப்பிரிவு பிரயோகப்படுகிறது.

ஊர்ச் சுற்றிகள் வழக்கமாய்க் கொள்ளை யடிக்கிறவர்கள் முதலானவர்களைப் பிடிப்பது.

55. (1) யாதொரு போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுனவன்—

(a) அப்படிப்பட்ட ஸ்டேஷன் சரஹத்துக்குள் பிடிக்கக்கூடிய யாதொரு குற்றத்தைச் செய்யும்பொருட்டு எவனுவது தானிருப்பதை மறைக்கும்படி ஜாக்கிரதைப்படுகிருனென்று நம்புவதற்கு முகாந்தரமிருக்கிற சங்கதிகளிலே, அப்படி ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளக் காணப்படுகிறவனையாவது,

(b) அந்த ஸ்டேஷன் சரஹத்துக்குள் வெளிக்குத்தகுந்த ஜீவனமில்லாதவனுய்க் காணப்படுகிறவனையாவது, தன்னைக்குறித்துத் திருப்திகரமாய்ச் சங்கதி தெரிவிக்கமாட்டாதவனையாவது,

(c) வழக்கமாய்க் கொள்ளையடிக்கிறவனென்ருகிலும் கன்னமிடுகிறவனென்ருகிலும் திருடுகிறவனென்ருகிலும் திருட்டுச்சொத்தென்று தெரிந்திருந்து அதை வழக்கமாய்ப்பெற்றுக்கொள்ளுகிறவனென்ருகிலும் பெயர் போனவனையாவது வழக்கமாய் மிரட்டி வாங்குகிறவனென்ருகிலும் மிரட்டி வாங்கும்பொருட்டு ஜனங்களைத் துன்பஞ்செய்வதாக வழக்

கமாய்ப் பயப்படுத்துகிறவனென்ருகிலும் பெயர்போன வனையாவது,

அப்பிரகாரமே பிடிக்கலாம் அல்லது பிடிப்பிக்கலாம் ;

(2) கல்கத்தா, பட்டணத்திலுள்ள போலீஸாருக்குங்கூட இந்தப்பிரிவு பிரயோகப்படுகிறது.

வாரன்டில்லாமல் ஆளைப் பிடிக்கும்படி போலீஸ்உத்தியோகஸ்தன் தன்கீழ் உத்தியோகஸ்தனுக்கு உத்தரவு பண்ணினல் இன்னது செய்வது.

56. (1) போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுகிலும் 14-வது அத்தியாயத்தின்படி முதல்விசாரணைசெய்யும் யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனுகிலும் எவனை வாரன்டில்லாமல் சட்டப்படி பிடிக்கலாமோ அப்படிப்பட்டவனை (தனக்கெதிரிலில்லாமல் வேறே விதமாய்) வாரன்டில்லாமல் பிடிக்கும்படி தனக்குக் கீழ்ப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தனுக்கு உத்தரவு செய்தால், ஆளைப்பிடிக்கவேண்டிய உத்தியோகஸ்தனுக்கு பிடிக்கவேண்டிய நபரையும் எதற்காகப் பிடிக்கவேண்டியதோ அந்த குற்றத்தை அல்லது இதர காரணத்தையுங் கண்டெழுதி, உத்தரவு கொடுக்கவேண்டும். அப்படி அனுப்பப்பட்ட உத்தியோகஸ்தர், பிடிக்கப்படவேண்டிய நபரை பிடிப்பதற்குமுன், உத்திரவின் சுருக்கத்தை தெரிவித்து, அந்த நபரால் கேட்கப்பட்டால் அந்த உத்திரவையும் காண்பிக்கவேண்டும்.

(2) கல்கத்தா, பட்டணத்திலுள்ள போலீஸாருக்குங்கூட இந்தப்பிரிவு பிரயோகப்படுகிறது.

பெயரையும் இருப்பிடத்தையும் சொல்ல நிராகரிப்பது.

57. (1) யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு எதிரில் பிடிக்கக்கூடாத குற்றம் செய்திருக்கிற அல்லது செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிற எவனுவது அந்த போலீஸ் உத்தியோகஸ்தன் கேட்பதன் மேல் தன்னுடைய பெயரையும் இருப்பிடத்தையும் சொல்லமாட்டேனென்ருலும், பொய்யென்று நம்புவதற்கு அந்த உத்தியோகஸ்தனுக்கு ஹேதுவிருக்கிற பெயரையாவது இருப்பிடத்தையாவது சொன்னுலும், அவனுடைய பெயரையாகிலும் இருப்பிடத்தையாகிலும் நிச்சயமாய்த் தெரிந்துகொள்வதற்காக அவனை அந்த உத்தியோகஸ்தன் மறியல் செய்துவைக்கலாம்.

(2) அவனுடைய எதார்த்தமான பெயரும் இருப்பிடமுந் தெரிந்துகொள்ளப்பட்டால், மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் வரும்படி உத்

தரவு செய்யப்படுகிற பட்சத்தில் அவன் அப்படியேவந்து ஹாஜராவ தாக ஜாமீன்தாரர்களுடனாவது அவர்களில்லாமலாவது முச்சிலிக்கா எழுதிக்கொடுப்பதன்மேல் அவனை விட்டுவிடவேண்டும்.

ஆனால், அவன் ப்ரிட்டிஷ் இந்தியாவில் வசிக்கிறவனா யிராவிட்டால், ப்ரிட்டிஷ் இந்தியாவில் வசிக்கிற ஒரு ஜாமீன்தாரன் அல்லது பல ஜாமீன்தாரர்களைக்கொண்டு அந்த முச்சிலிக்காவை உறுதிப்படுத்தவேண்டும்.

(3) மறியல் செய்த இருபத்திநான்கு மணிநேரத்திற்குள் அவனுடைய எதார்த்தமான பெயரும் இருப்பிடமும் நிச்சயமாய் தெரிந்து கொள்ளப்படாவிட்டாலும், அவன் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கத் தவறினாலும், அவனை அதிகாரவரம்புடைய அதிக சமீபத்திலுள்ள மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு உடனே அனுப்பவேண்டும்.

நேரஸ்தர்களை மற்ற அதிகார எல்லைகளுக்குள் தொடர்ந்துசெல்லலாம்.

58. இந்த அத்தியாயத்தின்படி எவனைப்பிடிக்கப் போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு அதிகாரமிருக்கிறதோ அப்படிப்பட்டவனை வாரன்டில்லாமல் பிடிக்கும்பொருட்டு, அந்த போலீஸ் உத்தியோகஸ்தன் ப்ரிட்டிஷ் இந்தியாவிலே எந்த இடத்திலாவது அப்படிப்பட்டவனைத் தொடர்ந்துபோகலாம்.

ஸர்க்கார்மனிதரல்லாதவர்கள் பிடிப்பது.

59. (1) ஸர்க்கார் மனிதனல்லாதவன் எவனாகிலும்-ஜாமீன் வாங்கத்தகாததும் பிடிக்கக்கூடியதுமான குற்றத்தை வேறொருவன் செய்யக்கண்டால் அப்படிப்பட்டவனையாவது, குற்றவாளியென்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கும் யாதொருவனையாவது பிடிக்கலாம்; மேலும், அனாவசியமான ஆலசியமில்லாமல் அப்படி பிடிக்கப்பட்ட யாதொரு நபரை ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரிடத்தில் ஒப்புவிக்கவேண்டும்; போலீஸ் உத்தியோகஸ்தர் ஹாஜரில்லாவிட்டால், அப்படிப்பட்ட நபரை அதிசமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குக் காவலில் கொண்டுபோகவேண்டும் அல்லது அவனை அப்படி கொண்டு போகும்படிச் செய்யவேண்டும்.

அப்படி பிடிப்பதன்மேல் இன்னது செய்வது.

மேலும் அனாவசியமான ஆலசியமில்லாமல், அப்படி பிடிக்கப்பட்டவனெவனையாவது, போலீஸ் உத்தியோகஸ்தனிடத்தில் ஒப்பிக்கவேண்டும்; போலீஸ் உத்தியோகஸ்தன் ஹாஜரில்லாவிட்டால், அப்படிப்பட்ட

வனைச் சமீபத்திலிருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகவேண்டும்.

(2) அப்படிப்பட்டவனை 54-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படியானவனென்று நம்புவதற்கு ஹேதுவிருந்தால், போலீஸ் உத்தியோகஸ்தன் அவனை மறுபடி பிடிக்கவேண்டும்.

(3) பிடிக்கக்கூடாத குற்றத்தை அவன் செய்திருக்கிறானென்று நம்புவதற்கு ஹேதுவிருந்து யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் கேட்பதன்மேல் அவன் தன்னுடைய பெயரையும் இருப்பிடத்தையும் சொல்லமாட்டேனென்றாலும், பொய்யென்று நம்புவதற்கு அந்த உத்தியோகஸ்தனுக்கு ஹேதுவிருக்கிற பெயரையாவது இருப்பிடத்தையாவது சொன்னாலும், அப்படிப்பட்டவன் விஷயத்தில் 58-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி நடத்தவேண்டும். அவன் யாதொரு குற்றஞ் செய்திருக்கிறானென்று நம்புவதற்குப் போதுமான ஹேதுவில்லாதிருந்தால் அவனை உடனே விட்டுவிடவேண்டும்.

பிடிக்கப்பட்டவனை மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகவாவது போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்கு முன்பாகவாவது கொண்டு போவது.

60. வாரண்டில்லாமல் எவனையாவது போலீஸ் உத்தியோகஸ்தன் பிடித்தால், அவன் அந்தக் கேஸை விசாரிக்க அதிகாரமுடைய மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்காவது போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனிடத்திற்காவது, ஹாஜர் ஜாமீன் வாங்குவதைக்குறித்து இதில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு வீணான ஆலசியஞ் செய்யாமல், பிடிக்கப்பட்டவனைக் கொண்டுபோகவேண்டும், அல்லது அனுப்பவேண்டும்.

பிடிக்கப் பட்டவனை இருபத்தி நான்குமணி நேரத்திற் கதிகமாக மறியல் செய்து வைத்திருக்கக்கூடாது.

61. போலீஸ் உத்தியோகஸ்தனானவன் வாரண்டில்லாமல் பிடிக்கப்பட்டவனை அந்த விஷயத்தைச் சேர்ந்த எல்லாச்சங்கதியைப்பற்றியும் எவ்வளவு நேரம் காவலில் வைப்பது நியாயமாயிருக்கிறதோ அதற்கதிகமாக வைத்திருக்கக்கூடாது; 167-வது பிரிவின்படி யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினுடைய பிரத்தியேகமான உத்திரவில்லாமல் அப்படி காவலில் வைத்திருக்கிற காலமானது-பிடிக்கப்பட்ட இடத்திலிருந்து மாஜிஸ்ட்ரேட்டினுடைய கோர்ட்டுக்குப் போவதற்கு வேண்டியகாலந் தவிர இருபத்திநான்கு மணிநேரத்திற் கதிகப்படக்கூடாது.

பிடிப்பதைப்போலீஸார் ரிபோர்ட் பண்ணுவது.

62. போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தர்கள் தங்கள் தங்கள் ஸ்டேஷன் சரஹத்துக்குள்ளாக வாரன்டில்லாமல் பிடிக்கப்பட்டவர்களிடத்திலிருந்து ஹாஜர் ஜாமீன் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும் மற்றப்படியாயிருந்தாலும், அப்படிப்பட்டவர்கள் சகலரையும் பற்றினவிஷயங்களை டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும், அவர் உத்தரவு செய்தால் ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும் ரிபோர்ட் பண்ணவேண்டும்.

பிடிக்கப் பட்டவனைவிட்டுவிடுவது.

63. போலீஸ் உத்தியோகஸ்தனால் பிடிக்கப்பட்டவனை, அவனிடத்திலிருந்து முச்சிலிக்கா வாங்காமலாகிலும் ஹாஜர் ஜாமீன் வாங்காமலாகிலும் பிரத்தியேகமாய் மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவில்லாமலாகிலும் விட்டுவிடக்கூடாது.

மாஜிஸ்ட்ரேட்டுக்கெதிரிலே செய்யப்பட்ட குற்றம்.

64. யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினுடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் அவருக்கெதிரிலே யாதொரு குற்றஞ் செய்யப்பட்டால், அவர் அந்த குற்றஞ் செய்தவனைத் தானேயாவது பிடிக்கலாம், பிடிக்கும்படி எவனுக்காவது உத்தரவு பண்ணலாம்; அதற்குமேல் ஹாஜர் ஜாமீன் வாங்குவதைக்குறித்து இதில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டுக் குற்றஞ்செய்தவனைக் காவலில்வைக்கலாம்.

மாஜிஸ்ட்ரேட்டாவது மாஜிஸ்ட்ரேட்டுக் கெதிரிலாவது பிடிப்பது.

65. யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர் எவனைப் பிடிக்கும்படி வாரன்ட் பிறப்பிக்க அந்தக்காலத்தில் அந்த சங்கதிகளிலே தனக்கதிகாரமிருக்கிறதோ அப்படிப்பட்டவனைத் தன்னுடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் எந்தக் காலத்திலாவது பிடிக்கலாம், அல்லது தனக்கெதிரிலே அவனைப்பிடிக்கும்படி உத்தரவு செய்யலாம்.

தப்பித்துக்கொண்டு ஓடிப்போனால் பின்தொடர்ந்து பிடிக்க அதிகாரம்.

66. எவனாவது நியாயமான காவலிலிருக்கையில் தப்பித்துக் கொண்டோடிப்போனாலும் தப்புவிக்கப்பட்டாலும், அவன் யாருடைய காவலிலிருந்து தப்பித்துக் கொண்டானோ அல்லது தப்புவிக்கப்பட்டானோ அவன் ப்ரிட்டிஷ் இந்தியாவில் எந்த இடத்திலாவது அவனை உடனே பின்தொடர்ந்து பிடிக்கலாம்.

47, 48, 49-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகள் 66-வது பிரிவின்படி பிடிப்பதற்கு பிரயோகப்படுவது.

67. அறுபத்தாராவது பிரிவின்படி பிடிக்கிறவன் வாரண்டைக் கொண்டு பிரவர்த்திக்காமலும் பிடிப்பதற்கு அதிகாரமுடைய போலீஸ் உத்தியோகஸ்தனல்லாதவனுமிருந்தபோதிலும், 47, 48, 49-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகள் 66-வது பிரிவின்படி பிடிக்கிற விஷயங்களுக்குப் பிரயோகப்படவேண்டும்.

6-ம் அத்தியாயம்.

ஹாஜராகும்படி நிர்ப்பந்திப்பதற்குக் கட்டளைகளைக்குறித்து.

அ.—ஸம்மன்.

சம்மனுக்கு நமூனா.

68. (1) இந்த சட்டப்படி யாதொரு கோர்ட்டாரால் பிறப்பிக்கப்படுகிற பிரதி ஸம்மனையும் இரட்டைப்பிரதியாக எழுதவேண்டும்; அதில் அந்த கோர்ட்டிலே கோர்ட்செய்கிற உத்தியோகஸ்தராவது ஹைக்கோர்ட்டார் அப்போதைக்கப்போது விதிமூலமாய் உத்தரவுசெய்கிற வேறே உத்தியோகஸ்தராவது கையெழுத்துசெய்து முத்திரை போடவேண்டும்.

ஸம்மனை இன்னார் சேர்ப்பிப்பது.

(2) அப்படிப்பட்ட ஸம்மனைப் போலீஸ் உத்தியோகஸ்தன் மூலமாய்ச் சேர்ப்பிக்கவேண்டும்; அல்லது இந்த சட்டத்திற்கு ஒற்றுமையாகப் பிரதேச கவர்ன்மெண்டாரால் இது விஷயத்தில் நிர்ணயிக்கப்படுகிற விதிகளுக்குட்பட்டு, அதைப் பிறப்பிக்கும் கோர்ட்டிலுள்ள யாதொரு உத்தியோகஸ்தன் மூலமாகவாவது வேறு ஸர்க்கார் உத்தியோகஸ்தன் மூலமாகவாவது சேர்ப்பிக்கவேண்டும்.

(3) இந்தப் பிரிவானது கல்கத்தா, பம்பாய் இந்த பட்டணங்களிலுள்ள போலீஸாருக்குங்கூடப் பிரயோகப்படுகிறது.

ஸம்மனைச் சேர்ப்பிக்க வேண்டிய விதம்.

69. (1) ஸம்மன் பிரதிகளிலொன்றை எவன்மேல் ஸம்மன் பிறப்பிக்கப்பட்டதோ அவனுக்கு ஒப்பித்தாவது வாங்கிக்கொள்ளச்சொல்லிக் காட்டியாவது ஸம்மனைக் கூடுமானால் அவனுக்குநேரில் கொடுக்கவேண்டும்.

(2) எவனுக்கு அப்படி ஸம்மன் சேர்ப்பிக்கப்படுகிறதோ அவனே அதை வரப்பற்றிக்கொண்டதாக மற்றொரு பிரதியின் பின்பக்கத்தில் கையெழுத்துப்போடச் சொல்லி, அதைச் சேர்ப்பிக்கும் உத்தியோகஸ்தன் கேட்டால், அப்படிப்பட்ட ஒவ்வொருவனும் அப்பிரகாரமே கையெழுத்துப்பண்ணவேண்டும்.

ஸம்மனை வரப்பற்றிக் கொண்டதற்குக் கையெழுத்து பண்ணுவது.

(3) சட்டப்படி சேர்ந்திருக்கிற கம்பெனிக்காவது ஒன்றுயச் சேர்ந்திருக்கிற இதரசங்கத்துக்காவது ஸம்மன் சேர்ப்பிக்கப்படவேண்டுமானல், அதைச் சங்கத்தின் காரியதரிசிக்காகிலும் பிரதேச மானேஜருக்காகிலும், தலைமையான இதர உத்தியோகஸ்தருக்காகிலும், ப்ரிட்டிஷ் இந்தியாவிலிருக்கும் அச்சங்கத்தின் பிரதான உத்தியோகஸ்தருக்கு ரெஜிஸ்ட்டர் செய்த தபால் மூலமாயாகிலும் சேர்ப்பிக்கலாகும். தபாலில் அனுப்பும் விஷயத்திலே, சாதாரணமாய்க் கடிதம் தபால் மூலமாக வந்துசேரும்பொழுது ஸம்மன் சேர்ப்பிக்கப்பட்டதாய் எண்ணப்படும்.

70. எவன்மேல் ஸம்மன் பிறப்பிக்கப்பட்டதோ அவன், கிரமமான ஜாக்கிரதையோடு தேடிப்பார்த்தும் அகப்படாவிட்டால், அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்த வயதுவந்த ஒரு ஆண்பிள்ளையினிடத்திலாவது, யாதொரு இராஜதானியிலே அவனேடு வாசஞ் செய்துகொண்டிருக்கிற அவனுடைய வேலைக்காரனிடத்திலாவது அவனுக்காக ஸம்மன் பிரதிகளிலொன்றை ஒப்பித்து அந்தச் சம்மனைச் சேர்ப்பிக்கலாம்; சேர்ப்பிக்கிற உத்தியோகஸ்தன் யாரிடத்தில் அப்படி ஸம்மன் ஒப்பிக்கப்பட்டதோ அவனே அதை வாங்கிக்கொண்டதாக மற்றொரு பிரதியின் பின்பக்கத்தில் கையெழுத்துப் போடச்சொன்னல், அவன் அப்படியே கையெழுத்துப்போடவேண்டும்.

எவன்மேல் சம்மன் பிறப்பிக்கப்பட்டதோ அவன் அகப்படா விட்டால் சேர்ப்பிப்பது.

71. கிரமமாய் ஜாக்கிரதைப்பட்டும், 69-வது 70-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறபடி சேர்ப்பிக்கமுடியாவிட்டால், ஸம்மனைக்கொண்டுபோகிற உத்தியோகஸ்தன்-எவன்மேல் ஸம்மன் பிறப்பிக்கப்பட்டதோ அவன் வழக்கமாய் வாசஞ்செய்கிற வீட்டிலாவது குடி நிலத்திலாவது நன்முய்த் தெரியும்படியான

மேலே சொல்லியிருக்கிறபடி சேர்ப்பிக்க முடியாவிட்டால் நடவடிக்கை.

இடத்திலே ஸம்மன் பிரதிகளிலொன்றை ஒட்டவேண்டும்; அதற்கு மேல், அந்த ஸம்மன் கிரமமாய்ச் சேர்ப்பிக்கப்பட்டதாகவே எண்ணப் படும்.

கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தனுக்காவது ரெயில்வே கம்பெனி உத்தியோகஸ்தனுக்காவது சேர்ப்பிப்பது.

72. (1) எவனுக்கு ஸம்மன் பிறப்பிக்கப்படுகிறதோ அவன் கவர்ன்மென்டாரிடத்திலாவது யாதொரு ரெயில்வே கம்பெனியாரிடத்திலாவது ஊழியஞ்செய்துகொண்டிருக்கிறபட்சத்தில், ஸம்மன் பிறப்பிக்கிற கோர்ட்டார் ஸம்மன் பிறப்பிக்கப்பட்டவன் உத்தியோகஞ்செய்கிற ஆபிஸின் தலைவருக்கு இரட்டைப்பிரதியாக அதைச் சாதாரணமாய் அனுப்பவேண்டும்; அதற்குமேல், அந்தத் தலைவரானவர் 69-வது பிரிவில் சொல்லியிருக்கிற விதமாய் அந்தச் சம்மனைச் சேர்ப்பிக்கும்படிசெய்து, அந்தப்பிரிவினால் வேண்டியிருக்கிற எண்டார்ஸ்மென்ட் சகிதமாய்த் தாம் அதில் கையெழுத்துச்செய்து அதை அந்தக் கோர்ட்டுக்கு அனுப்பவேண்டும்.

(2) அந்த கையெழுத்தானது, தகுதியாகச் சேர்ப்பிக்கப்பட்டது என்பதற்குச் சாட்சியமாகும்.

பிரதேச எல்லைக்குவெளியில் ஸம்மனைச் சேர்ப்பிப்பது.

73. யாதொரு கோர்ட்டாரால் பிறப்பிக்கப்படுகிற ஸம்மனைத் தங்களுடைய அதிகாரப் பிரதேச எல்லைக்கு வெளியிலே எவ்விடத்திலாவது சேர்ப்பிக்கவேண்டுமென்று அந்தக் கோர்ட்டார் எண்ணினால், அவ்விடத்திலே சேர்ப்பிக்கும்படி, அந்தக் கோர்ட்டார்-ஸம்மன் பிறப்பிக்கப்பட்டவன் யாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் வாசஞ்செய்கிறானோ அல்லது இருக்கிறானோ அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு அந்த ஸம்மனை இரட்டைப் பிரதியாகச் சாதாரணமாய் அனுப்பவேண்டும்.

அப்படிப்பட்ட விஷயங்களிலும், ஸம்மன் சேர்ப்பித்த உத்தியோகஸ்தன் ஹாஜரில்லாதபோதும் அதுசேர்ப்

74. (1) யாதொரு கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்ட ஸம்மனானது அந்தக் கோர்ட்டாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்கு வெளியில் சேர்ப்பிக்கப்படுகிற விஷயத்திலும், அதைச் சேர்ந்த உத்தியோகஸ்தன் கேஸ் விசாரணைகாலத்தில் ஹாஜரில்லாத யாதொரு விஷயத்திலும், அப்படிப்பட்ட ஸம்மன் சேர்ப்பிக்கப்பட்டதென்று யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு

பிக்கப்பட்டதற்கு முன் எழுதப்பட்டதாய்ப் பொருள்படுகிற பிர
ருஜூ. மாண பத்திரிகையும், ஸம்மன் யாரிடத்தில் ஒப்பிக்கப்பட்டதோ அல்லது வாங்கிக்கொள்ளச் சொல்லிக் காட்டப்பட்டதோ அல்லது கொடுக்கப்பட்டதோ அவன் (69 அல்லது 70-வது பிரிவில் சொல்லியிருக்கிற விதமாய்) எண்டார்ஸ் செய்திருப்பதாகப் பொருள்படுகிற ஸம்மன் பிரதியும் சாட்சியத்தில் ஏற்றுக்கொள்ளப் படத்தக்கதாகும்; அவைகளில் கண்டிருக்கும் சங்கதிகள் மாருக ருஜூவாகாவிட்டால் அல்லது ருஜூவாகிறவரையில் சரியாயிருப்பதாகவே எண்ணப்படும்.

(2) இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிற பிரமாணபத்திரிகையை ஸம்மன், இரண்டாம் பிரதியோடு சேர்த்துக் கோர்ட்டாருக்குத் திரும்ப அனுப்பலாம்.

B.—ஆளைப்பிடிப்பதற்கான வாரன்ட்.

ஆளைப் பிடிப்பதற்கான வாரண்டுக்கு நமூனு.

75. (1) ஆளைப்பிடிப்பதற்கு இந்த சட்டப்படி யாதொரு கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்ட பிரதி வாரன்டும் எழுத்து மூலமாயிருக்கவேண்டியதுமல்லாமல் கோர்ட்செய்கிற உத்தியோகஸ்தராவது, மாஜிஸ்ட்ரேட்டுகள் கூடிய சபை விஷயத்திலே அப்படிப்பட்ட சபையைச் சேர்ந்த ஒருவராவது அதில் கையெழுத்துப்பண்ணவும் வேண்டும்; மேலும், அதற்கு அந்த கோர்ட் முத்திரை போட்டிருக்க வேண்டும்.

ஆளைப்பிடிக்கிற வாரன்ட் செல்லுவது.

(2) அப்படிப்பட்ட பிரதி வாரன்டும், அதைப் பிறப்பித்த கோர்ட்டாரால் ரத்துசெய்யப்படுகிற வரையிலாவது நிறைவேற்றப்படுகிற வரையிலாவது செலாவணியாகிறது.

ஜாமீன்வாங்கும்படி கோர்ட்டார் உத்தரவு செய்யலாம்.

76. (1) யாதொரு நபரைப்பிடிக்கும்படி வாரன்ட் பிறப்பிக்கிற யாதொரு கோர்ட்டார், தங்களுக்கு யுக்தமாகத்தோற்றினல், கோர்ட்டாரால் மற்றப்படி உத்தரவு செய்யப்படுகிறவரையில் கோர்ட்டுக்கு முன்பாகக் குறிக்கப்பட்ட காலத்திலும் அதற்குப்பின்னிட்டும் ஹாஜராவதாக அப்படிப்பட்ட நபர் போதுமான ஜாமீன்தாரர்கள் சகிதமாய் முச்சலிக்கா எழுதிக்கொடுப்பானுகில், எவன் பெயருக்கு வாரன்ட் எழுதப்படுகிறதோ அந்த உத்தி

யோகஸ்தன் அந்த ஜாமீன் வாங்கிக்கொண்டு அவனை காவலிலிருந்து விடவேண்டுமென்று வாரன்டின்மேல் எண்டார்ஸ்பண்ணி உத்தரவு செய்யலாம்.

(2) அந்த எண்டார்ஸ்மென்டிலே (a) ஜாமீன்தாரர்களின் சங்கியையும், (b) அவர்களும், எவனைப் பிடிப்பதற்கு வாரன்ட் பிறப்பிக்கப்பட்டதோ அவனும் தனித்தனி இவ்வளவு தொகைக்குப் பிணைப் படவேண்டியதென்பதையும், (c) அவன் கோர்ட்டுக்குமுன்பாக ஹாஜராகவேண்டிய காலத்தையும் கண்டெழுதவேண்டும்.

ஜாமீன் பத்திரத்தை அனுப்புவது.

(3) இந்தப் பிரிவின்படி ஜாமீன் வாங்கப்படுகிற பட்சத்தில், எவன் பெயருக்கு வாரன்ட் எழுதப்படுகிறதோ அந்த உத்தியோகஸ்தன் ஜாமீன் பத்திரத்தைக் கோர்ட்டாரிடத்திற்கு அனுப்பவேண்டும்.

இன்னார் பெயருக்கு வாரன்டு எழுதுவது.

77. ஆளைப்பிடிக்கிற வாரன்டைச் சாதாரணமாய் போலீஸ் உத்தியோகஸ்தன் ஒருவன் அல்லது பலர் பெயருக்கு எழுதவேண்டும்; யாதொரு இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டினால் அது பிறப்பிக்கப்படும்போது அதை எப்போதும் அப்படியே எழுதவேண்டும். ஆனால், அப்படிப்பட்ட வாரன்ட் பிறப்பிக்கிற வேறே யாதொரு-கோர்ட்டார்-அதை உடனே நிறைவேற்ற வேண்டியதாயிருந்து தட்சணத்தில் போலீஸ் உத்தியோகஸ்தன் கிடைக்காதிருந்தால், வேறே எந்த நபர் அல்லது நபர்கள் பெயருக்காவது எழுதலாம்; அப்படிப்பட்ட நபர் அல்லது நபர்கள் அதை நிறைவேற்றவேண்டும்.

பலர் பெயருக்கு வாரன்ட்.

(2) வாரன்டை ஒருவனல்லாமல் பல உத்தியோகஸ்தர்கள் அல்லது நபர்கள் பெயருக்கு எழுதினால், அவர்களெல்லோருமாவது அவர்களில் ஒருவனாவது சிலராவது அந்த வாரன்டை நிறைவேற்றலாம்.

பூமிக்குடையவர்கள் முதலானவர்கள் பெயருக்கு வாரன்டை அனுப்பலாம்.

78. (1) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாகிலும் ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாகிலும் தன்னுடைய டிஸ்ட்ரிக்ட்டிலாவது ஸப் டிவிஷனிலாவதிருக்கிற யாதொரு பூமிக்குடையவன் பெயருக்காகிலும், கம்பந்தக்காரன் பெயருக்காகிலும் பூமியைச்சேர்ந்த காரிய நிர்வாகி பெயருக்காகிலும், தப்பித்துக்கொண்டு

ஓடிப்போன கைதியையாவது பிரசித்தஞ் செய்யப்பட்ட நேரஸ்தனை யாவது ஜாமீன் வாங்கக்கூடாத குற்றம் சாட்டப்பட்டுத் துரத்திக் கொண்டுபோகையில் பிடிபடாமல் ஓடிப்போய் விட்டவனையாவது பிடிக்கும்படி வாரன்டை அனுப்பலாம்.

(2) அப்படிப்பட்ட பூமிக்குடையவனாவது கம்பந்தக்காரனாவது காரிய நிர்வாகியாவது வாரன்ட் வந்து சேர்ந்ததற்கு ரசீது எழுதிக்கொடுக்கவேண்டியதுமல்லாமல், எவனைப் பிடிப்பதற்கு அது பிறப்பிக்கப்பட்டதோ அவன் தன்னுடைய பூஸ்திதியிலாவது கம்பத்தத்திலாவது தன் வசமாயிருக்கிற நிலத்திலாவதிருந்தாலும் பிரவேசித்தாலும், அதை நிறைவேற்றவும்வேண்டும்.

(3) எவன்மேல் அந்த வாரன்டை பிறப்பிக்கப்படுகிறதோ அவன் பிடிக்கப்பட்டால், அவனைச் சமீபத்திலிருக்கிற போலீஸ் உத்தியோகஸ்தனிடத்திலே வாரன்ட் சகிதமாய் ஒப்பிக்கவேண்டும்; அந்த உத்தியோகஸ்தனானவன் 76-வது பிரிவின்படி ஜாமீன்வாங்கி யிருந்தாலொழிய, அந்தக்கேஸில் விசாரணைசெய்ய அதிகாரமுடைய மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகக் கொண்டுபோகும்படி செய்யவேண்டும்.

79. யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் பெயருக்கு அனுப்பப்பட்ட வாரன்டை, அது யார் பெயருக்கு அனுப்பப்பட்டதோ அல்லது அதில் யார் பெயர் என்டார்ஸ் பண்ணப்பட்டிருக்கிறதோ அந்த உத்தியோகஸ்தன் வேறொரு போலீஸ் உத்தியோகஸ்தன் பெயருக்கு அதன்மேல் எண்டார்ஸ் பண்ணினால் அவனும் நிறைவேற்றலாம்.

போலீஸ் உத்தியோகஸ்தன் பெயருக்கு எழுதப்பட்ட வாரன்ட்.

80. ஆளைப்பிடிக்கிற வாரன்டை நிறைவேற்றுகிற போலீஸ் உத்தியோகஸ்தனாவது மற்றவனாவது அந்த வாரன்டிலுள்ள சங்கதியை பிடிக்கப்படுகிற நபருக்குத் தெரிவிக்கவேண்டும்; வாரன்டைக் காட்டச்சொல்லி அந்த நபர் கேட்டால் அதைக் காட்டவேண்டும்.

வாரன்டிலுள்ள சங்கதியை தெரிவிப்பது.

81. ஆளைப்பிடிக்கிற வாரன்டை நிறைவேற்றுகிற போலீஸ் உத்தியோகஸ்தனாவது மற்றவனாவது, பிடிக்கப்பட்டவனைச் சட்டப்படி யாரிடத்திற்குக் கொண்டு போகவேண்டியதோ அந்த கோர்ட்டுக்கு முன்பாக

பிடிக்கப்பட்டவனை ஆலசியஞ்செய்யாமல் கோர்ட்டுக்கு

முன்பாகக்கொண்டு வருவது.

அவனை (ஜாமீனைக்குறித்த 76-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு) அனாவசியமான ஆலசியஞ் செய்யாமல் கொண்டுபோகவேண்டும்.

இன்ன இடத்தில்வாரன்டை நிறைவேற்றலாமென்பது.

82. ஆளைப்பிடிக்கிற வாரன்டை ப்ரிட்டிஷ் இந்தியாவிலே எந்த இடத்திலாவது நிறைவேற்றலாம்.

அதிகாரத்திற்கு வெளிப்பட்ட இடங்களில் நிறைவேற்றும்படி வாரன்டை அனுப்புதல்.

83. (1) வாரன்டைப் பிறப்பிக்கிற கோர்ட்டாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்கு வெளியில் வாரன்டை நிறைவேற்ற வேண்டியிருந்தால், அப்படிப்பட்ட கோர்ட்டார்-அந்த வாரன்டை யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் பெயருக்கனுப்பாமல், யாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் அதை நிறைவேற்ற வேண்டியதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்காவது டிஸ்ட்ரிக்ட் போலீஸ் ஸூபெரின்டெண்டெண்டுக்காவது, ப்ரெஸிடென்ஸி பட்டணத்தில் போலீஸ் கம்மிஷனருக்காவது தபால் மார்க்கமாயாகிலும் வேறே விதமாயாகிலும் அனுப்பலாம்.

(2) அந்த வாரன்ட் அப்படி யாருக்கு அனுப்பப்படுகிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டாவது டிஸ்ட்ரிக்ட் ஸூபெரின்டெண்டாவது கம்மிஷனராவது அதன்மேல் தம்முடைய பெயரை எண்டார்ஸ் பண்ணி, கூடுமானால் இதில் முன்னே சொல்லியிருக்கிற விதமாக தம்முடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் அதை நிறைவேற்றும்படி செய்யவேண்டும்.

அதிகாரத்துக்கு வெளிப்பட்ட இடங்களில் நிறைவேற்றும்படி போலீஸ் உத்தியோகஸ்தன் பெயருக்கு அனுப்பப்பட்ட வாரன்ட்.

84. (1) யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் பெயருக்கு அனுப்பப்பட்ட வாரன்டானது அதைப் பிறப்பித்த கோர்ட்டாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்கு வெளியில் நிறைவேற்றப்படவேண்டியிருந்தால், அந்த வாரன்டை யாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் நிறைவேற்றவேண்டியதோ அந்த மாஜிஸ்ட்ரேட் அல்லது ஸ்டேஷன் தலைமை உத்தியோக அந்தஸ்த்துக்குக் குறைப்படாத போலீஸ் உத்தியோகஸ்தனிடத்திற்கு எண்டார்ஸ் செய்யப்படுவதற்காக அதை அவன் சாதாரணமாய்க் கொண்டுபோகவேண்டும்.

(2) அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டாவது போலீஸ் உத்தியோகஸ்தனாவது அதன்மேல் தன்னுடைய பெயரை எண்டார்ஸ்செய்ய வேண்டும்; அப்படிப்பட்ட எண்டார்ஸ்மென்டானது-யார் பெயருக்கு அந்த வாரன்ட் கொடுக்கப்படுகிறதோ அந்த போலீஸ் உத்தியோகஸ்தன் அதை அப்படிப்பட்ட எல்லைக்குள் நிறைவேற்றுவதற்குப் போதுமான அதிகாரமுள்ளதாகும்; அப்படிப்பட்ட வாரன்டை நிறைவேற்றுவதில் உதவி செய்யும்படி அவ்விடத்திய போலீஸார் கேட்டுக்கொள்ளப்பட்டால் அவர்கள் அந்த உத்தியோகஸ்தனுக்கு அப்படியே உதவி செய்யவேண்டும்.

(3) யாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் அந்த வாரன்டை நிறைவேற்றவேண்டியதோ அந்த மாஜிஸ்ட்ரேட் அல்லது போலீஸ் உத்தியோகஸ்தனிடத்திலே எண்டார்ஸ்மென்ட் வாங்குவதற்காக நேரிடும் ஆலசியத்தினாலே வாரன்டை நிறைவேற்றுவதற்குத் தடங்கலுண்டாகுமென்று நம்புவதற்கு ஹேதுவிருந்தால், அது யார் பெயருக்கு கொடுக்கப்படுகிறதோ அந்த போலீஸ் உத்தியோகஸ்தன் அதைப் பிறப்பித்த கோர்ட்டாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்கு வெளியில் எவ்விடத்திலாவது அப்படிப்பட்ட எண்டார்ஸ்மென்ட் இல்லாமலே அதை நிறைவேற்றலாம்.

(4) இந்தப் பிரிவானது கல்கத்தா-பம்பாய் இந்த பட்டணங்களிலுள்ள போலீஸாருக்குக்கூடப் பிரயோகப்படுகிறது.

85. ஆளைப்பிடிக்கிற வாரன்டானது அது எவ்விடத்தில் பிறப்பிக்கப்பட்டதோ அந்த டிஸ்ட்ரிக்ட்டுக்கு வெளியில் நிறைவேற்றப்பட்டால், வாரன்ட் பிறப்பித்த கோர்ட்டார்-பிடிக்கப்பட்ட இடத்திலிருந்து இருபது மைலுக்குள்ளாவது, யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் ஆள் பிடிக்கப்பட்டானோ அந்த மாஜிஸ்ட்ரேட் அல்லது டிஸ்ட்ரிக்ட் போலீஸ் ஸூபெரின்டெண்டென்ட் அல்லது ப்ரெஸிடென்ஸி பட்டணத்தில் போலீஸ் கம்மிஷனரைவிடச் சமீபத்திலாவதிராவிட்டாலும், 76-வது பிரிவின் ஜாமீன் வாங்கப்படாவிட்டாலும், பிடிக்கப்பட்டவனை அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட் அல்லது கம்மிஷனர் அல்லது டிஸ்ட்ரிக்ட் ஸூபெரின்டெண்டென்ட் முன்பாகக் கொண்டுபோகவேண்டும்.

எவன்மேல் வாரன்ட் பிறப்பிக்கப்பட்டதோ அவன் பிடிப்பட்டபின்பு நடவடிக்கை.

பிடிக்கப் பட்டவன் யாருக்குமுன்பாகக் கொண்டுவரப்படுகிறுனே அந்தமாஜிஸ்ட்ரேட் நடத்த வேண்டியது.

86. (1) அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டாவது டிஸ்ட்ரிக்ட் ஸூபெரின்டென்டென்டாவது கம்மிஷனராவது பிடிக்கப்பட்ட நபர் வாரன்ட் பிறப்பித்த கோர்ட்டாரால் உத்தேசிக்கப்பட்ட நபராகத் தோற்றினல், அவனை அப்படிப்பட்ட கோர்ட்டினிடத்திற்குக் காவலோடு போகும்படி உத்தரவு செய்ய வேண்டும்.

ஆனால், அந்த குற்றம் ஹாஜர் ஜாமீன் வாங்கப்படத்தக்கதாயிருந்து அவனும் அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட் அல்லது டிஸ்ட்ரிக்ட் ஸூபெரின்டென்டென்ட் அல்லது கம்மிஷனருக்குத் திருப்தியாகும்படி ஹாஜர் ஜாமீன் கொடுக்க இஷ்டங்கொண்டு சித்தமாயிருந்தாலும், வாரன்டின்மேல் 76-வது பிரிவின்படி யாதொரு கட்டளை என்டார்ஸ் செய்யப்பட்டிருந்து அப்படிப்பட்டவனும் அப்படிப்பட்ட கட்டளையினல் வேண்டியிருக்கிற ஜாமீன்கொடுக்க இஷ்டங்கொண்டு சித்தமாயிருந்தாலும், மாஜிஸ்ட்ரேட்டாவது டிஸ்டிரிக்ட் ஸூபெரின்டென்டென்டாவது கம்மிஷனராவது அப்படிப்பட்ட ஜாமீன் வாங்கிக்கொண்டு அந்த பத்திரத்தை வாரன்ட் பிறப்பித்த கோர்ட்டுக்கு அனுப்ப வேண்டும்

(2) இந்தப் பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினலும் 76-வது பிரிவின்படி ஜாமீன்வாங்குவதற்கு யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனுக்குத் தடையுண்டாவதாக எண்ணக்கூடாது.

C.—பிரசித்தஞ் செய்வதும் ஜப்தி பண்ணுவதும்.

மறைந்து போகிற நபரைக்குறித்து இஸ்தியார்.

87. (1) எவன்மேல் யாதொரு கோர்ட்டாரால் வாரன்ட் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட நபர் அந்த வாரன்டை நிறைவேற்றக்கூடாதபடி மறைந்து போயாவது ஒளித்துக்கொண்டாவதிருக்கிறுனென்று நம்புவதற்கு (சாட்சியங்கேட்ட பின்பாகிலும் மற்றப்படியாகிலும்) அந்த கோர்ட்டாருக்கு முகாந்தரமிருந்தால், அந்தக் கோர்ட்டார் எழுத்துமூலமாய் இஸ்தியார் பிரசித்தஞ்செய்யப்படுகிற தேதிமுதல் முப்பது நாளைக்குக் குறையாமல் நிர்ணயஞ் செய்யப்பட்ட ஓர் காலத்தில் குறிக்கப்பட்ட ஓரிடத்திலே ஹாஜராகவேண்டியதென்று இதில் உத்தரவு செய்யலாம்.

(2) அப்படிப்பட்ட இஸ்தியாரைப் பிரசித்தஞ்செய்யவேண்டிய தெப்படியென்ருல் :—

(a) அந்த நபர் வழக்கமாய் வாசஞ்செய்கிற பட்டணம் அல்லது கிராமத்தில் யாவரும் அறியும்படியான இடத்திலே அதைப் பஹிரங்கமாய்ப் படிக்கவேண்டும் ;

(b) அந்த நபர் சாதாரணமாய் வாசஞ்செய்கிற வீடு அல்லது குடி நிலத்தில் எல்லாருக்கும் தெரியும்படியான இடத்திலாவது அப்படிப்பட்ட பட்டணம் அல்லது கிராமத்தில் எல்லாருக்கும் தெரியும்படியான இடத்திலாவது அதை ஒட்டவேண்டும் ; மேலும்,

(c) கோர்ட் வீட்டில் எல்லாருக்கும் தெரியும்படியான இடத்திலே அதற்கொரு நகலை ஒட்டவேண்டும்.

(3) இன்னதினத்தில் இஸ்தியார் கிரமமாய்ப் பிரசித்தஞ்செய்யப்பட்டதென்று அந்த இஸ்தியாரைப் பிறப்பிக்கிற கோர்ட்டார் எழுத்துமூலமாய்க் கொடுக்கிற ஸ்டேட்மென்டானது இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிறபடி செய்யப்பட்ட தென்பதற்கும், அந்த தினத்தில் இஸ்தியார் பிரசித்தஞ்செய்யப்பட்டதென்பதற்கும் முடிவான சாட்சியாகும்.

மறைந்து போய் விடுகிறவனுடைய சொத்தை ஜப்தி பண்ணுவது.

88. (1) 87-வது பிரிவின்படி இஸ்தியார் பிறப்பிக்கிற கோர்ட்டார் பிரசித்தஞ் செய்யப்பட்ட நபருடைய யாதொரு அசையும் பொருளையாவது அசையாப் பொருளையாவது அவ்விரண்டையுமாவது ஜப்தி பண்ணும்படி எப்பொழுதாகிலும் உத்தரவு செய்யலாம்.

(2) அப்படிப்பட்ட உத்தரவினுலே, அது செய்யப்படுகிற டிஸ்ட்ரிக்ட்டுக்குள் அப்படிப்பட்ட நபருடைய யாதொரு சொத்தை ஜப்தி செய்வதற்கு அதிகாரமுண்டாகும் ; மேலும், அந்த டிஸ்ட்ரிக்ட்டுக்கு வெளியில் அப்படிப்பட்ட நபருக்குச் சொந்தமாயிருக்கிற யாதொரு சொத்தை ஜப்திசெய்வதற்காக, அந்த சொத்து யாருடைய டிஸ்ட்ரிக்ட்டிலிருக்கிறதோ அந்த டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட் அதன்மேல் எண்டார்ஸ் செய்வாராகில், அதினுல் அதிகாரமுண்டாகும்.

(3) ஜப்திபண்ணும்படி உத்தரவு செய்யப்பட்ட சொத்து கடன் அல்லது வேறே அசையும்பொருளாயிருக்கிறதானல் இந்தப் பிரிவின் படி ஜப்தியை—

(a) கைப்பற்றுவதனுலாகிலும்,

(b) ரிஸீவரை நியமிப்பதனுலாகிலும்,

(c) பிரசித்தஞ் செய்யப்பட்டவனுக்காவது அவன் பட்சத்தில் எவனுக்காவது அந்தப்பொருளை ஒப்பிக்கக்கூடாதென்று தடுக்கிற எழுத்துமூலமான உத்தரவினுலாகிலும்,

(d) கோர்ட்டாருக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி அந்த வகைகள் யாவற்றினுலாகிலும் அவைகளில் ஏதாவதிரண்டிலாகிலும், செய்யவேண்டும்.

(4) ஜப்தி பண்ணும்படி உத்தரவு செய்யப்பட்ட சொத்து அசையாப்பொருளாயிருக்கிறதானல், இந்தப் பிரிவின்படி ஜப்தியை, ஸர்க்காருக்குக் கிஸ்தி செலுத்துகிற நில விஷயத்தில், அந்த நிலமிருக்கிற டிஸ்ட்ரிக்டின் கலெக்டர் மூலமாய்ச் செய்யவேண்டும் மற்ற சகல விஷயங்களிலும்—

(e) ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளுவதனுலாகிலும்,

(f) ரிஸீவரை நியமிப்பதனுலாகிலும்,

(g) பிரசித்தஞ் செய்யப்பட்ட நபருக்காவது அவன் பட்சத்தில் எவனுக்காவது குத்தகை அல்லது வாடகைப் பணத்தைச் செலுத்தக்கூடாதென்றாவது தடுக்கிற எழுத்துமூலமான உத்தரவினுலாகிலும்,

(h) கோர்ட்டாருக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி அந்த வகைகள் யாவற்றினுலாகிலும் அவைகளில் ஏதாவதிரண்டிலாகிலும், அந்த ஜப்தியைச் செய்யவேண்டும்

(5) ஜப்தி பண்ணும்படி உத்தரவு செய்யப்பட்ட சொத்து ஆடுமாடு முதலிய ஜீவஜெந்துவாயாவது அழியத்தக்க வஸ்துவாயாவதிருந்தால், கோர்ட்டார் - தங்களுக்கு யுக்தமென்று தோற்றும்பட்சத்தில் அதை உடனே விற்றுவிடும்படி உத்தரவுசெய்யலாம்; அந்த விஷயத்தில் விற்றுமுதலானது கோர்ட்டார் உத்தரவின்படி வினியோகப்படவேண்டும்.

(6) இந்தப் பிரிவின்படி நியமிக்கப்பட்ட ரிஸீவருடைய அதிகாரங்களும் அலுவல்களும் உத்தரவாதங்களும் ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 36-ம் அத்தியாயப்படி நியமிக்கப்பட்ட ரிஸீவருக்கிருப்பது போலவே இருக்கவேண்டும்.

ஜப்தி சொத்துக்குச் செய்யப்பட்ட தாவாக்களைப் பைசல்செய்வது.

(6-A) பிரசித்தஞ் செய்யப்பட்ட நபரல்லாத வேறே யாதொரு நபர்-இந்தப் பிரிவின்படி யாதொரு சொத்து ஜப்தி செய்யப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாத காலத்துக்குள்ளாக, தாவாசெய்கிறவருக்காவது ஆட்சேபனை செய்கிறவருக்காவது அந்த சொத்தில் பாத்தியதை இருக்கிறதென்னும் ஹேதுவின் மேலும், அந்த பாத்தியதையானது இந்தப் பிரிவின்படி ஜப்தி செய்யப்படத்தக்கதல்லவென்னும் ஹேதுவின்மேலும் அப்படிப்பட்ட சொத்துக்கு ஏதாவது தாவாசெய்தாலும், அந்தப்படி அதை ஜப்திசெய்வதற்கு ஏதாவது ஆக்ஷேபனை செய்தாலும், கோர்ட்டார் அந்த தாவாவை அல்லது ஆட்சேபனையைக்குறித்து விசாரணை பண்ணவேண்டும்; மேலும் அந்த தாவா அல்லது ஆட்சேபனையை முழுவதுமாவது சிறிதுமட்டிலுமாவது ஏற்றுக்கொள்ளலாம் அல்லது தள்ளிவிடலாம்.

இந்த உட்பிரிவில் கொடுக்கப்பட்ட கெடுவு காலத்துக்குள் செய்யப்பட்ட யாதொரு தாவா அல்லது ஆட்சேபனையை, தாவா செய்கிறவர் அல்லது ஆட்சேபிக்கிறவர் இறந்துபோகிற பட்சத்திலே, அவருடைய சட்டப்படிக்கான பிரதிநிதி நடத்திக்கொண்டுபோகலாம்.

(6-B) (6-a)-குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட தாவாக்கள் அல்லது ஆட்சேபனைகளை, எந்தக் கோர்ட்டாரால் ஜப்தி உத்தரவு பிறப்பிக்கப்படுகிறதோ அந்தக் கோர்ட்டாரிடத்தில் செய்துகொள்ளலாம்; அல்லது தாவாவாகிலும் ஆட்சேபனையாகிலும் (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளை அனுசரித்து ஒரு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது பிரதான ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது எண்டார்ஸ் செய்திருக்கும் உத்தரவின்படி ஜப்தி செய்யப்பட்ட சொத்து விஷயமானதாயிருந்தால், அந்த தாவாக்கள் அல்லது ஆட்சேபனைகளை அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டின் கோர்ட்டில் செய்துகொள்ளலாம்.

(6-C) அப்படிப்பட்ட ஒவ்வொரு தாவா அல்லது ஆட்சேபனையை எங்கு செய்துகொள்ளப்பட்டதோ அந்த கோர்ட்டில் விசாரணை செய்யப்படவேண்டும்.

ஆனல், அது ஒரு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது பிரதான ராஜதானி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் செய்துகொள்ளப்பட்டால், அந்த மாஜிஸ்ட்ரேட்டுகள் அதை சந்தர்ப்பத்துக்கேற்றபடி தங்களுக்கு கிழ்ப்பட்ட யாதொரு முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கும், அல்லது யாதொரு ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுக்கும் தீர்மானிப்பதற்கு அனுப்பலாம்.

(6-D) எவருடைய தாவாவாவது ஆட்சேபனையாவது (6-a) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவினுல் முழுவதுமாவது சிறிதுமட்டிலாவது தள்ளிவிடப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு நபர்-அப்படிப்பட்ட உத்தரவின் தேதியிலிருந்து ஒரு வருஷ காலத்துக்குள், விவாதத்திலிருக்கும் சொத்து விஷயமாய் தமக்கு என்ன பாத்தியதை இருப்பதாகச் சொல்லிக்கொள்ளுகிறரோ அந்த பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்வதற்காக வியாஜ்ஜியம் தொடரலாம்; ஆனல், அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் ஏதேனும் தொடரப்பட்டால் அதில் என்ன முடிவு செய்யப்படுகிறதோ அதற்குட்பட்டு, அந்த உத்தரவு முடிவானதாகும்.

(6-E) பிரஸித்தஞ்செய்யப்பட்ட நபர் இஸ்தியாரில் குறிக்கப்பட்ட காலத்திற்குமுன்னே ஆஜரானல், கோர்ட்டார் ஜப்தியிலிருக்கிற சொத்தை விடுதலைசெய்ய ஒரு உத்திரவு செய்யவேண்டும்.

(7) பிரசித்தஞ்செய்யப்பட்ட நபர் இஸ்தியாரில் கண்டிருக்கிற காலத்திற்குள் ஹாஜராகாவிட்டால், ஜப்தியிலிருக்கிற சொத்தைக் கவர்ன்மெண்டாருடைய இஷ்டப்படி செய்யவேண்டும்; ஆனல், அது சிக்கிரமாயும் தனிச்சையாயும் அழிந்துபோகும்படியானதாயிராவிட்டாலும், அதை விற்ருல் சொந்தக்காரனுக்குப் பிரயோசனகரமாயிருக்குமென்று கோர்ட்டாருக்குத் தோற்றுவிட்டாலும், ஜப்தி தேதி முதலாவது, (6-a) குறிபிட்ட உட்பிரிவின்படி செய்துகொள்ளப்பட்ட தாவா அல்லது ஆட்சேபனை அந்த உட்பிரிவுகளின்படி தீர்மானிக்கப்பட்ட பின்பாவது, ஆறுமாதங் கழிகிறவரையிலே அதை விற்கக்கூடாது; மேற்சொல்லியபடி அது அழியும்படியானதாயிருக்கிற விஷயத்திலும் சொந்தக்காரனுக்குப் பிரயோசன முள்ளதாயிருக்கிற விஷயத்திலும் கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றும்போதும் அதை விற்கும்படிச் செய்யலாம்.

89. எவனுடைய சொத்து 88-வது பிரிவின் (7) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கவர்ன்மெண்டாருடைய இஷ்டத்திலிருக்கிறதோ அல்லது இருந்திருக்கிறதோ அப்படிப்பட்டவனெவனுவது ஜப்தி தேதிமுதல் இரண்டு வருஷத்திற்குள், யாருடைய உத்தரவினுலேசொத்து ஜப்திசெய்யப்பட்டதோ அந்தக் கோர்ட்டுக்கு முன்பாவது, அது எந்த கோர்ட்டுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறதோ அந்த கோர்ட்டுக்கு முன்பாவது தானேவந்து ஹாஜராளுலும் பிடித்துக்கொண்டு வரப்பட்டாலும், அவன் வாரன்ட் நிறைவேற்றப்படுவதினின்றும் தப்பித்துக் கொள்ளும்பொருட்டு மறைந்து போகவில்லை அல்லது ஒளித்துக்கொள்ளவில்லையென்றும், இஸ்தியாரில் கண்டிருக்கிற காலத்திற்குள் தான் வந்து ஹாஜராகக்கூடும்படி அதைக் குறித்துத் தனக்கு அறிக்கையாகவில்லையென்றும் அந்தக் கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய் ருஜுசெய்கிறபட்சத்தில், அப்படிப்பட்ட சொத்தாவது, அது விற்கப்பட்டிருந்தால், அந்த விற்பனையின் நிகர வரும்படியாவது, அதில் ஒரு பாகமாத்திரம் விற்கப்பட்டிருந்தால், அந்த விற்பனையின் நிகர வரும்படியும் அந்த சொத்தின் மிகுதியுமாவது, ஜப்தியினிமித்தம் நேரிட்ட சகல செலவுகளையும் அதிலிருந்து செலுத்தினபின்பு, அவனுக்கு ஒப்பிக்கப்படவேண்டும்.

ஜப்தி செய்யப்பட்டசொத்தைமறுபடி கொடுத்து விடுவது.

D.—கட்டளைகளைக்குறித்த வேறே நிபந்தனைகள்.

90. ஜூரர் அல்லது அஸெஸரல்லாத யாவனொருவன் ஹாஜராகும்படி ஸம்மன் பிறப்பிப்பதற்கு இந்த சட்டத்தினுலே கோர்ட்டுக்கு அதிகார முண்டாயிருக்கிற எந்த விஷயத்திலாவது, கோர்ட்டார்—

ஸம்மனுக்குப் பர்த்தியாவது ஸம்மனேடு கூடவாவது வாரன்ட் பிறப்பிப்பது.

(a) அந்த ஸம்மன் பிறப்பிப்பதற்கு முன்னமேயாவது, அதைப் பிறப்பித்த பின்பு அவன் ஹாஜராவதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்னமேயாவது, அவன் மறைந்து போய்விட்டானென்றுகிலும் ஸம்மன்படி நடக்கமாட்டானென்றுகிலும் நம்புவதற்குத் தங்களுக்கு முகாந்தரம் தோற்றினுலும்,

(b) அந்தக் காலத்தில் அவன் ஹாஜராகாமலிருந்து, ஸம்மன் பிரகாரம் அவன் ஹாஜராவதற்குக் கூடுமானபடி அது நியாயமான காலத்திற்குள் கிரமமாய்ச் சேர்ப்பிக்கப்பட்டதென்று

ருஜுவாகி, அப்படி அவன் வராமைக்காக் நியாயமான முகாந்தரம் தெரிவிக்கப்படாதிருந்தாலும்,

தங்களுக்குண்டாகிய ஹேதுக்களை எழுதிவைத்த பின்பு, அவனைப் பிடிப்பதற்கு வாரன்ட் பிறப்பிக்கலாம்.

ஹாஜராவதற்கு முச்சிலிக்கா வாங்க அதிகாரம்.

91. எவன் ஹாஜராவதற்காகவோ அல்லது எவனைப் பிடிப்பதற்காகவோ யாதொரு கோர்ட்டில் கோர்ட் செய்கிற உத்தியோகஸ்தர் சம்மனையாவது வாரன்டையாவது பிறப்பிக்க அதிகாரமுடையவராயிருக்கிறாரோ அப்படிப்பட்டவனெவனாகிலும் அந்தக் கோர்ட்டில் ஹாஜராவதற்காக அப்படிப்பட்டவனை ஜாமீன்தாரர்களோடாவது ஜாமீன்தாரர்களில்லாமலாவது முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கச் சொல்லி உத்தரவு செய்யலாம்.

ஹாஜராவதற்காக எழுதிக் கொடுக்கப்பட்ட முச்சிலிக்காவின்படி நடவா விட்டால் பிடிப்பது.

92. இந்த சட்டப்பிரகாரம் வாங்கப்பட்ட யாதொரு முச்சிலிக்காவின்படி யாதொரு கோர்ட்டுக்கு முன்பாக ஹாஜராகக் கடமைப்பட்டிருக்கிறவனெவனாவது அப்படி ஹாஜராகாவிட்டால், அந்தக் கோர்ட்டிலே கோர்ட்செய்கிற உத்தியோகஸ்தரானவர் அப்படிப் பட்டவனை பிடித்துத் தமக்குமுன் கொண்டுவரும்படி வாரன்ட் பிறப்பிக்கலாம்.

இந்த அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகள் ஸம்மன்களுக்கும் ஆளைப்பிடிக்கிற வாரன்டுகளுக்கும் சாதாரணமாய்ச் சம்பந்தப்படுவது.

93. ஸம்மனையும் வாரன்டையும் அவைகளைப் பிறப்பிப்பதையும் சேர்ப்பிப்பதையும் நிறைவேற்றுவதையுங்குறித்து இந்த அத்தியாயத்தில் சொல்லியிருக்கிற நிபந்தனைகள் இந்த சட்டப்படி பிறப்பிக்கப்பட்ட பிரதி ஸம்மனுக்கும் ஆளைப்பிடிக்கிற பிரதி வாரன்டுக்கும் கூடியமட்டில் சம்பந்தப் படவேண்டும்.

7-ம் அத்தியாயம்.

தஸ்தாவேஜு முதலிய அசையும்பொருளைக் கொண்டுவந்து காட்டும்படி நிர்பந்திப்பதற்கும் அக்கிரமமாய் அடைத்துவைக்கப்பட்டவர்களை. கண்டுபிடிப்பதற்காகவுங் கட்டளைக்குறித்து.

A.—தஸ்தாவேஜு முதலியதைக் கொண்டுவரும்படி ஸம்மன்.

தஸ்தாவேஜு முதலிய பொருளைக் கொண்டுவந்து காட்டும்படி ஸம்மன்.

94. (1) யாதொரு கோர்ட்டாராவது, கல்கத்தா, பம்பாய்-இந்த பட்டணங்களின் எல்லைக்குவெளியில் யாதோரிடத்திலே, யாதொரு போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுவது, அப்படிப்பட்ட கோர்ட்டாராலாகிலும் கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் உத்தியோகஸ்தனுலாகிலும் உத்தியோகஸ்தனுக்கு முன்பாகவாகிலும் இந்த சட்டப்படி செய்யப்படுகிற யாதொரு முதல் விசாரணைக்காகவாவது, விசாரணைக்காகவாவது, பரிசீலனைக்காகவாவது வேறே நடவடிக்கைக்காகவாவது யாதொரு தஸ்தாவேஜு முதலிய பொருள் கொண்டுவந்து காட்டப்படுவது அவசியமென்றுகிலும் யுக்தமென்றுகிலும் அபிப்பிராயப்பட்டால், அந்த தஸ்தாவேஜாவது பொருளாவது யாருடைய வசத்திலாகிலும் அதிகாரத்திலாகிலுமிருக்கிறதாக நம்பப்படுகிறதோ அந்த நபருக்கு, அந்தக்கோர்ட்டார் ஸம்மனைப் பிறப்பித்தாவது, அந்த உத்தியோகஸ்தன் எழுத்துமூலமான உத்தரவு பிறப்பித்தாவது, அந்த ஸம்மனிலாகிலும் உத்தரவிலாகிலும் கண்டிருக்கிற காலத்தில் அதில் குறித்த இடத்திலே அதைக் கொண்டுவந்து காட்டும்படிக்காவது ஹாஜராகி அதைக்கொண்டுவந்து காட்டும்படிக்காவது உத்தரவு செய்யலாம்.

(2) தஸ்தாவேஜு முதலிய பொருளைக் கொண்டுவந்து காட்டும்படி மாத்திரம் இந்தப் பிரிவின்படி உத்தரவு செய்யப்பட்டவனெவனுவது அதைக் காட்டுவதற்குத் தானே ஹாஜராகாமல் அந்த தஸ்தாவேஜையாவது பொருளையாவது கொண்டுவந்து காட்டும்படி செய்வானுகில், அந்த உத்தரவின்படி நடந்துகொண்டவனுக எண்ணப்படுவான்.

(3) 1872-ம்வருஷத்திய இந்துதேசசத்துச் சாட்சி ஆக்ட் 123, 124-வது பிரிவுகளுக்குப் பாதகமுண்டுபண்ணுவதாகவாவது, தபால் இலாக்கா அல்லது டெலிக்ராப் இலாக்கா அதிகாரிகளுடைய வசத்திலிருக்கிற யாதொரு கடிதம் டெலிக்ராம் முதலிய தஸ்தாவேஜுக்காகி

லும், யாதொரு சிப்பம் அல்லது வஸ்துவுக்காகிலும் பிரயோகப்படுவதாகவாவது இந்தப் பிரிவிலுள்ள எந்த நிபந்தனையையும் எண்ணக்கூடாது.

கடிதங்களைக்குறித்தும் டெலிகிராம்களைக்குறித்தும் நடவடிக்கை.

95. (1) அப்படிப்பட்ட இலாக்கா வசத்திலிருக்கிற யாதொரு தஸ்தாவேஜு அல்லது சிப்பம் அல்லது வஸ்துவானது இந்த சட்டப்படி செய்யப்படுகிற யாதொரு முதல் விசாரணை-விசாரணை-பரிசிலனை முதலிய நடவடிக்கைகாக வேண்டியிருக்கிறதென்று டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது ஹைக்கோர்ட்டாராவது ஸெஷன் கோர்ட்டாராவது அபிப்பிராயப்பட்டால், அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டாகிலும் கோர்ட்டாராகிலும் தாங்கள் உத்தரவுசெய்கிற நபரிடத்தில் அந்த தஸ்தாவேஜையாவது, சிப்பத்தையாவது வஸ்துவையாவது ஒப்பிக்கும்படி தபாலிலாக்கா அதிகாரிகளுக்கோ டெலிக்ராப் இலாக்கா அதிகாரிகளுக்கோ உத்தரவு செய்யலாம்.

(2) அப்படிப்பட்ட யாதொரு தஸ்தாவேஜு அல்லது சிப்பம் அல்லது வஸ்துவானது அப்படிப்பட்ட யாதொரு காரியத்துக்காகவேண்டியிருக்கிறதென்று வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாவது யாதொரு போலீஸ் கம்மிஷனராவது போலீஸ் டிஸ்ட்ரிக்ட் ஸூபெரின்டெண்டென்டாவது அபிப்பிராயப்பட்டால், அவர்-அப்படிப்பட்ட யாதொரு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்-பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட் அல்லது கோர்ட்டாருடைய உத்தரவு வருகிறவரையிலே, அப்படிப்பட்ட தஸ்தாவேஜு அல்லது சிப்பம் அல்லது வஸ்துவைக்குறித்துச் சோதனைபோடுவிக்கும்படியாயும் அதை மறித்துவைத்திருக்கும்படியாயும் சங்கதிக்குத் தக்கபடி தபாலிலாக்கா அதிகாரிகளுக்காவது டெலிக்ராப் இலாக்கா அதிகாரிகளுக்காவது உத்தரவு செய்யலாம்.

B.—சோதனை வாரன்டுகள்.

இன்னபடிக்கானால் சோதனைவாரன்ட் பிறப்பிக்கலாம்.

96. (1) யார் பெயருக்கு 94-வது பிரிவின்படி ஸம்மனாவது உத்தரவாவது, 95-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கட்டளையாவது அனுப்பப்பட்டிருக்கிறதோ அல்லது அனுப்பப்படலாமோ அந்த நபர் அப்படிப்பட்ட ஸம்மன் அல்லது கட்டளையில் உத்தரவு செய்திருக்கிறபடி அந்த தஸ்தாவேஜு முதலிய பொருளைக் கொண்டுவரமாட்டானென்று நம்புவதற்கு யாதொரு கோர்ட்டாருக்கு முகாந்தரமிருந்தாலும்,

அப்படிப்பட்ட தஸ்தாவேஜு அல்லது வஸ்து யாவனொருவனுடைய ஸ்வாதீனத்திலிருக்கிறதென்று கோர்ட்டாருக்குத் தெரியாவிட்டாலும்,

பொதுவாய்ச் சோதனைபோடுவதனாலாவது பார்வையிடுவதனாலாவது இந்த சட்டப்படியான யாதொரு விசாரணை-பரிசிலனை முதலிய நடவடிக்கையை நடத்துவதற்கு உதவியாயிருக்குமென்று கோர்ட்டாருக்குத் தோற்றினாலும்,

அந்த கோர்ட்டார் சோதனை வாரன்ட் பிறப்பிக்கலாம்; அந்த வாரன்ட் யார் பெயருக்கு அனுப்பப்படுகிறதோ அதன்படிக்கும் இதில் பின்னால் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படிக்கும் சோதனை போடலாம், அல்லது பார்வையிடலாம்.

(2) தபாலிலாக்கா அல்லது டெலிக்ராப் இலாக்கா அதிகாரிகளுடைய வசத்திலிருக்கிற தஸ்தாவேஜு அல்லது சிப்பம் அல்லது வேறே வஸ்துவைக்குறித்துச் சோதனை வாரன்ட் கொடுப்பதற்கு, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது தவிர வேறே எந்த மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும் இதில் சொல்லியிருக்கிற எந்த நிபந்தனையினாலும் அதிகாரமுண்டாகமாட்டாது.

வாரன்டில் வரையறை ஏற்படுத்த அதிகாரம்.

97. கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத்தோற்றினால், இன்ன இடத்திலாவது அந்த இடத்தின் இன்ன பாகத்திலாவது மாத்திரம் சோதனைபோடவேண்டியதென்றாகிலும் பார்வையிடவேண்டியதென்றாகிலும் வாரன்டில் கண்டெழுதலாம்; அதற்குமேல், நிறைவேற்றும்படி எவனிடத்தில் அந்த வாரன்ட் ஒப்பிக்கப்படுகிறதோ அவன் அப்படி கண்டிருக்கும் இடம் அல்லது பாகத்தை மாத்திரம் சோதனை போடவேண்டும், அல்லது பார்வையிடவேண்டும்.

திருட்டுச் சொத்து சிருஷ்டனை தஸ்தாவேஜு முதலியதிருக்கிறதென்று, அனுமானிக்கப் பட்டவீட்டைச் சோதனைபோடுவது.

98. (1) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாவது இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாவது, சங்கதி தெரியவருவதன்மேல் தமக்கு அவசியமாகத் தோற்றுகிற விசாரணை செய்தபின்பு திருட்டுச்சொத்தை வைத்திருப்பதற்காவது விற்பதற்காவது,

சிருஷ்டனை தஸ்தாவேஜுகளையாகிலும் கள்ளமுத்திரைகளையாகிலும் மாறுபாடான ஸ்டாம்புகளையாகிலும் கள்ள நாணயத்தையாகிலும், கள்ள நாணயஞ் செய்வதற்காவது மாறுபாடான ஸ்டாம்புகள் போடுவதற்காவது சிருஷ்டனை செய்வதற்காவது ஆயுதங்களையாகிலும் சாமான்களையாகிலும் வைத்திருப்பதற்காவது விற்பதற்காவது செய்வதற்காவது யாதோரிடம் உபயோகிக்கப்படுகிற தென்றாகிலும் ;

ஏதாகிலும் சிருஷ்டனை தஸ்தாவேஜுகளாவது கள்ளமுத்திரைகளாவது மாறுபாடான ஸ்டாம்புகளாவது கள்ள நாணயமாவது, கள்ள நாணயம் செய்வதற்காகிலும் மாறுபாடான ஸ்டாம்புகள் போடுவதற்காகிலும் சிருஷ்டனை செய்வதற்காகிலும் உபயோகிக்கப்பட்ட ஆயுதங்கள் அல்லது சாமான்களாவது யாதோரிடத்தில் வைக்கப்பட்டாவது வைத்து வைக்கப்பட்டாவதிருக்கிற தென்றாகிலும்,

அல்லது, ஒரு டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட், ஸப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் அல்லது ஒரு பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் சங்கதி தெரியவருவதன்மேல் தமக்கு அவசியமாகத்தோற்றுகிற விசாரணை செய்தபின்பு இந்தியன் பீனல் கோட் 292-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபடி காமதூர சம்பந்தமான வஸ்துக்களை வைத்திருப்பதற்காவது, விற்பதற்காவது, செய்வதற்காவது யாதோரிடம் உபயோகப்படுத்தப்பட்டாவது, அல்லது எவ்விடத்திலாகிலும் அப்படிப்பட்ட காமதூர சம்பந்தமான வஸ்துக்கள் வைக்கப்பட்டாவது சேகரிக்கப்பட்டாவது இருக்கிறதென்றாகிலும்,

நம்புவதற்கு முகாந்தரமிருந்தால், அவர்-தம்முடைய வாரன்டைக்கொண்டு அடியில் கண்டிருக்கிற காரியங்களைச் செய்யும்படி கான்ஸ்டெபில் அந்தஸ்த்துக்கு மேற்பட்ட யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு அதிகாரங் கொடுக்கலாம்—

(a) வேண்டியிருக்கிற சகாயத்தோடு அப்படிப்பட்ட இடத்தில் நுழைவதற்கும்,

(b) வாரன்டில் கண்டிருக்கிறபடி அதைச் சோதனை போடுவதற்கும்,

(c) திருடினதென்றாவது சட்டத்துக்கு விரோதமாய் அடையப்பட்டதென்றாவது சிருஷ்டனை செய்யப்பட்டதென்றாவது மாறுபடானது அல்லது கள்ளமானதென்றாவது அவன் நியாயமாய் அனுமானித்து அவ்விடத்தில் கண்டுபிடிக்கிற

யாதொரு சொத்து-தஸ்தாவேஜுகள்-முத்திரைகள்-ஸ்டாம்புகள் அல்லது நாணயங்களையும் மேற்சொல்லிய ஏதாவது ஆயுதங்களையும் சாமான்களையும் அல்லது அப்படிப்பட்ட யாதொரு காமதூர சம்பந்தமான வஸ்துக்களையும் ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுவதற்கும்,

(d) அப்படிப்பட்ட சொத்து-தஸ்தாவேஜுகள்-முத்திரைகள்-ஸ்டாம்புகள்-நாணயங்கள்-ஆயுதங்கள் அல்லது சாமான்களையும் அல்லது காமதூர சம்பந்தமான வஸ்துக்களையும் மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் கொண்டுபோவதற்கும் அல்லது நேரஸ்தனை மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன் கொண்டுபோகிற வரையிலே அவைகளை அவ்விடத்திலேதானே காப்பதற்கும், அல்லது பத்திரமான யாதோரிடத்திலே அவைகளை மற்றப்படி சேர்த்துவைப்பதற்கும்,

(e) அப்படிப்பட்ட யாதொரு சொத்து திருடப்பட்டதென்றுவது, மற்றப்படி சட்டத்துக்கு விரோதமாய் அடையப்பட்டதென்றுவது, அப்படிப்பட்ட தஸ்தாவேஜுகள்-முத்திரைகள் ஸ்டாம்புகள்-நாணயங்கள்-ஆயுதங்கள் சாமான்கள் அல்லது அப்படிப்பட்ட காமதூர சம்பந்தமான வஸ்துகள்-சிருஷ்டனை செய்யப்பட்டனவென்றுவது மாறுபாடு செய்யப்பட்டனவென்றுவது, கள்ளஞ்செய்யப்பட்டனவென்றுவது, அப்படிப்பட்ட ஆயுதங்கள் அல்லது சாமான்கள் கள்ளநாணயம் செய்வதற்காகிலும் மாறுபாடான ஸ்டாம்புகள் போடுவதற்காகிலும் சிருஷ்டனை செய்வதற்காகிலும் அல்லது மேற்சொல்லிய காமதூர சம்பந்தமான வஸ்துக்களை விற்பதற்காவது விற்க எண்ணியாவது, வாடகைக்குவிடவாவது பங்கீடுசெய்வதற்காவது, பஹிரங்கமாய் காண்பிக்கவாவது, பரவசெய்தற்காவது இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யவாவது, உபயோகிக்கப்பட்டனவென்றுவது உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டனவென்றுவது தெரிந்தாகிலும் அனுமானிப்பதற்கு நியாயமான முகாந்தரமிருந்தாகிலும், அப்படிப்பட்ட சொத்து தஸ்தாவேஜுகள்-முத்திரைகள்-ஸ்டாம்புகள் - நாணயங்கள் - ஆயுதங்கள் அல்லது சாமான்களை வைத்திருப்பதற்காவது விற்பதற்காவது செய்வதற்காவது வைத்திருப்பதற்காவது உட்

கையாயிருந்தவனுகத்தோற்றி அப்படிப்பட்ட இடத்தில் கண்டுபிடிக்கப்படுகிற பிரதி நபரையும் காவல்செய்து மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் கொண்டுபோவதற்கும்,

(2) இந்தப் பிரிவில்—

(a) கள்ள நாயணம்,

(b) கள்ள நாணயமென்று அனுமானிக்கப்பட்ட நாணயம்,

(c) கள்ளநாணயம் செய்வதற்கான ஆயுதங்கள் அல்லது சாமான்கள்,

ஆகிய இவைகளின் விஷயமாய் கண்டிருக்கும் நிபந்தனைகள், முறையே,—

(a) 1889-ம்ஞூத்திய குடிஜனங்களின் உலோக நாணய வியாபக ஆக்டுக்கு விரோதமாய்ச்செய்தாவது, 1878-ம்ஞூத்திய ஸீ கஸ்டம்ஸ் ஆக்ட் 18-வது பிரிவின்படி தற்காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு விளம்பரத்துக்கு விரோதமாய் ப்ரிடிஷ் இந்தியாவில் கொண்டுவரப்பட்டாவதிருக்கிற உலோகத்துண்டுகளுக்கும்,

(b) அவ்வாறு செய்யப்பட்டதென்றாவது, அவ்வாறு ப்ரிட்டிஷ் இந்தியாவில் கொண்டுவரப்பட்ட தென்றாவது, குடிஜனங்களின் உலோகநாணய வியாபகத்தைக் குறித்த 1889-ம் ஞூத்து ஆக்ட்டுக்கு விரோதமாய் வெளிவிட உத்தேசிக்கப்பட்டாவதிருக்கிறதாக அனுமானிக்கப்பட்ட உலோகத்துண்டுகளுக்கும்,

(c) மேற்சொல்லிய உலோகநாணய வியாபக ஆக்ட்டுக்கு விரோதமாய் உலோகத்துண்டுகளைச் செய்வதற்கான ஆயுதங்கள் அல்லது சாமான்களுக்கும்,

எவ்வளவு தூரம்வரையில் பிரயோகப்படுமோ அவ்வளவு வரையில் பிரயோகப்படும்.

அதிகாரத்துக்கு வெளியிலுள்ள இடங்களில் சோதனை போட்டு அகப்பட

99. சோதனை வாரன்ட் பிறப்பித்த கோர்ட்டாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்கப்பால் எவ்விடத்திலாவது அதை நிறைவேற்றுகையில், எதற்காகச் சோதனை போடப்படுகிறதோ அந்தப் பொருள்களில் எதுவாகிலும் கண்டுபிடிக்கப்பட்டால், அந்த இடத்தி

கிறபொருளை இன் னறுசெய்வது.

ற்கு அந்த வாரன்ட் பிறப்பித்த கோர்ட்டைவிட அவ்விடத்தில் அதிகாரஞ்செலுத்துகிற மாஜிஸ்ட்ரேட் சமீபமாயிராத பட்சத்தில், அந்தப் பொருள்களையும் இதில் பின்னுல் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படி அவைகளுக்குத் தயார்செய்யப்பட்ட ஜாபிதாவையும் அந்த கோர்ட்டாரிடத்திற்கு உடனே கொண்டுபோகவேண்டும்; அந்தக் கோர்ட்டைவிட அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட் சமீபமாயிருக்கிற பட்சத்தில் அந்த ஜாபிதாவையும் பொருள்களையும் அந்த மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு உடனே கொண்டு போகவேண்டும்; அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர்-அவைகளை அப்படிப்பட்ட கோர்ட்டுக்குக் கொண்டுபோகவேண்டியதில்லை யென்பதற்குத் தகுந்த முகாந்தரமில்லாத பட்சத்தில், அதை அந்தக்கோர்ட்டுக்குக் கொண்டுபோகும்படி உத்தரவு செய்யவேண்டும்.

சில பிரசுரங்கள் பறிமுதலாய் விட்டதாக நிர்ணயிக்கவும், அவைகளுக்காக சோதனை வாரண்டுகள் பிறப்பிக்கவும் அதிகாரம்.

99-A. **(1)** **(a)** அச்சுக்கூடத்தையும் புஸ்தகங்களை ரெஜிஸ்டர் செய்வதையுங்குறித்த 1867-ம் வருஷத்து ஆக்டில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடிக்குள்ள யாதொரு சமாசார பத்திரிகையாகிலும் புஸ்தகமாகிலும்,

(b) யாதொரு தஸ்தவேஜாகிலும்,

எங்கே அச்சிடப்பட்டதாயிருந்தாலுஞ்சரி, அதில் ராஜதுரோக சம்பந்தமான யாதொரு விஷயம், அதாவது எந்த விஷயத்தைப் பிரசுரித்தால் இந்தியன் பினல் கோட் 124A, 153-A, 295-A, பிரிவுகளின்படி தண்டனை விதிக்கத்தக்கதாகுமோ அப்படிப்பட்ட யாதொரு விஷயம், அல்லது மஹாராஜா சக்ரவர்த்தியவர்களுடைய பிரஜைகளில் பல ஜாதியார்களுள் விரோதத்தையாவது துவேஷத்தையாவது உண்டு பண்ணுகிற அல்லது உண்டு பண்ணக்கூடிய யாதொரு விஷயம், அல்லது அப்படிப்பட்ட யாதொரு வகுப்பார்களுடைய மதவுணர்ச்சியை வேண்டுமென்றே வன்மத்துடன் தூஷணைசெய்யும் எண்ணத்தோடு அந்த வகுப்பார்களுடைய மதத்தையாவது மதக் கோட்பாடுகளையாவது அவமதித்தல், அடங்கியிருப்பதாகப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தோற்றினுல், பிரதேச கவர்ன்மெண்டார்-பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய், அப்படிப்பட்ட விஷயம் அடங்கியிருக்கும் சமாசார பத்திரிகையின் பிரசுரத்தின் ஒவ்வொரு பிரதியும் அப்படிப்பட்ட புஸ்தகம் அல்லது வேறே தஸ்தவே

ஜின் ஒவ்வொரு பிரதியும் மஹாராஜா சக்ரவர்த்தியவர்களுக்குப் பறிமுதலாய் விட்டதாக நிர்ணயிக்கலாம்; அந்தப்படி நிர்ணயிக்கையில், அவர்கள்-அப்படி தாங்கள் அபிப்பிராயப்படுவதற்குள்ள காரணங்களைக் கண்டெழுதவேண்டும்; அதன்மேல், எந்தப் போலீஸ் உத்தியோகஸ்தராகிலும்-அவை ப்ரிடிஷ் இந்தியாவில் எங்கே காணப்பட்டாலுஞ் சரி அவைகளைக் கைப்பற்றலாம்; மேலும், எந்த மாஜிஸ்ட்ரேட்டாவது வாரன்ட் பிறப்பித்து அதன் மூலமாய் அப்படிப்பட்ட பிரசுரத்தின் யாதொரு பிரதியாகிலும், அப்படிப்பட்ட யாதொரு புஸ்தகம் அல்லது வேறே தஸ்தவேஜாகிலும் இருக்கக்கூடிய அல்லது இருப்பதாக நியாயமாய் சந்தேகிக்கக்கூடிய யாதொரு வளவில் பிரவேசித்து அது விஷயமாய் சோதனைபோடுவதற்கு, ஸப் இன்ஸ்பெக்டரின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துள்ள யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தருக்கு அதிகாரம் கொடுக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் "தஸ்தவேஜு" என்பதில், யாதொரு (பெய்ன்டிங்) வர்ணப்படம், வரிவடிவம் அல்லது போடொக்ராப் என்னும் சாயப்படம் என்பதும், அல்லது கண்ணுக்குத் தெரியும்படியான வேறே யாதொரு பிரதிரூபம் என்பதும் அடங்கும்.

பறிமுதல் உத்தரவை ரத்துசெய்யும்படி ஹைகோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது.

99-B. 99-A பிரிவின் பிரகாரம் எந்த சமாசாரபத்திரிகை, புஸ்தகம் அல்லது வேறே தஸ்தவேஜின் விஷயமாய்ப் பறிமுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு சமாசாரபத்திரிகை, புஸ்தகம் அல்லது வேறே தஸ்தவேஜில் ஏதேனும் அக்கறையுள்ளவராயிருக்கும் யாதொரு நபர்-எந்த சமாசாரபத்திரிகை, புஸ்தகம் அல்லதுவேறே தஸ்தவேஜின் விஷயத்தில் ஷை உத்தரவு செய்யப்பட்டதோ அந்த சமாசாரபத்திரிகையின் பிரசுரம், புஸ்தகம் அல்லது வேறே தஸ்தவேஜில் ராஜதுரோக சம்பந்தமான எவ்வித விஷயமும் அடங்கியில்லையென்னும் காரணத்தைக்கொண்டு ஷை உத்தரவை ரத்துசெய்யவேண்டுமென்று, அந்த உத்தரவின் தேதியிலிருந்து இரண்டு மாதத்துக்குள் ஹைகோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

ஸ்பெஷல் பெஞ்ச் என்னும் விசே

99-C. அப்படிப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும்-மூன்று ஜட்ஜுகள் அடங்கிய ஹைகோர்ட்டைச் சேர்ந்த ஸ்பெஷல் பென்சு என்னும் விசேஷ

ஷ நியாயசபையார் விசாரிப்பது.

நியாயசபையாரால் விசாரித்துத் தீர்மானிக்கப் படும்.

99-D. (1) ஷை விண்ணப்பத்தை வரப்பெற்றுக்கொள்ளுவதன் மேல், ஷை விசேஷ நியாயசபையார்-சமாசாரபத் திரிகையின் எந்த பிரசுரம், புஸ்தகம் அல்லது வேறே தஸ்தவேஜின் விஷயத்தில் அந்த விண்ணப் பம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறதோ அந்த பிர சுரம், புஸ்தகம் அல்லது வேறே தஸ்தவேஜில் 99-A பிரிவைச் சேர்ந்த (1) அடையாளமிட்ட உட்பிரிவில் குறிப்பிட் டிருக்கும் தன்மையுள்ள ராஜதுரோக சம்பந்தமான விஷயம் அடங்கி யிருந்ததாக திருப்தியடையாத பட்சத்திலே, ஷை பறிமுதல் உத் தரவை ரத்துசெய்யவேண்டும்.

விசேஷ நியாயச பையார் பறிமுதலை ரத்துசெய்து உத்த ரவு பிறப்பிப்பது.

(2) விசேஷ நியாயசபையில் இருக்கும் ஜட்ஜுகளுக்குள் அபி ப்பிராயபேதம் ஏற்படும் பட்சத்திலே, அந்த ஜட்ஜுகளுக்குள் பெரும் பான்மையோரின் அபிப்பிராயத்தை அனுசரித்து தீர்மானம் செய்யப் படும்.

99-E. யாதொரு சமாசாரபத்திரிகை சம்பந்தமாய்ச் செய்து கொள்ளப்பட்ட அப்படிப்பட்ட யாதொரு விண் ணப்பத்தைப்பற்றி விசாரிக்கும்போது, அந்த சமா சாரபத்திரிகையில் அடங்கியவைகளாய் ராஜது ரோக சம்பந்தமான விஷயமென்று சொல்லப்படு கிற வார்த்தைகள், அடையாளங்கள் அல்லது கண் ணுக்குத் தெரியும்படியான பிரதி ரூபங்களின் தன்மை அல்லது போக்கு இப்படிப்பட்டதென்று ருஜுசெய்வதற்கு உதவியாக ஷை சமாசாரபத்திரிகையின் எந்தப் பிர தியையாகிலும் சாட்சியமாகக் கொடுக்கலாம்.

சமாசார பத்திரி கைகளின் தன்மை அல்லது போக்கு இப்படிப்பட்ட தெ ன்பதைக் குறித்து ருஜுசெய்வதற்கா ன சாட்சியம்.

99-F. சௌகரியமாயிருக்கக்கூடிய மட்டில் சீக்கிரமாக ஒவ் வொரு ஹைகோர்ட்டாரும்-அப்படிப்பட்ட விண் ணப்பங்களின் விஷயத்தில் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையைக் குறித்தும், அவைகளின் செலவுத் தொகையைக் குறித்தும், அவைகளின் மேல் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை நிறைவேற்று

ஹைகோர்ட்டில் அனுசரிக்கப்படும் நடவடிக்கை முறை.

வதைக் குறித்தும் ஒழுங்கேற்படுத்துவதற்காக விதிகள் தயார்செய்ய வேண்டும்; மேலும், அந்த விதிகள் தயார்செய்யப்படுகிற வரையிலே, வியாஜ்ஜியங்களும் அப்பீல்களுமல்லாத வேறே விவகாரங்களின் விஷயத்தில் அந்தக் கோர்ட்டுகளில் அநுசரிக்கப்பட்டுவரும் அநுஷ்டானமே ஷை விண்ணப்பங்களுக்கும் சாத்தியமானவரையில் பிரயோகப்படும்.

விசாரணை அதிகாரத்துக்குத் தடை ஏற்பட்டிருப்பது.

99-G. 99-A பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட எந்த உத்தரவைப் பற்றியாகிலும் நடத்தப்பட்ட எந்த நடவடிக்கையைப்பற்றியாகிலும் எந்தக் கோர்ட்டாரும் 99-B பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படிச்கன்றி மற்றப்படி ஆட்சேபிக்கக்கூடாது.

C—அக்கிரமமாய் அடைத்துவைக்கப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பது.

அக்கிரமமாய் அடைத்து வைக்கப்பட்டவர்களுக்காகச் சோதனைபோடுவது.

100. யாதொரு இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாவது ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாவது, எப்படிப்பட்ட சங்கதிகளில் ஒருவனை அடைத்துவைத்திருந்தால் அது குற்றமாகுமோ அப்படிப்பட்ட சங்கதிகளில் யாவனொருவனை அடைத்துவைத்திருக்கிறதென்று நம்புவதற்கு முகாந்தரமிருந்தால், அவர் சோதனை வாரன்ட் பிறப்பிக்கலாம்; அந்த வாரன்ட் யார் பெயருக்கு அனுப்பப்படுகிறதோ அவன் அப்படி அடைத்துவைக்கப்பட்டிருக்கிறவனுக்காகச் சோதனை போடலாம்; அப்படி சோதனை போடுகையில் அந்த வாரன்டின்படியே போடவேண்டியதுமல்லாமல், அப்படிப்பட்டவன் அகப்பட்டால் அவனை மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் உடனே கொண்டுபோகவும் வேண்டும்; அவர் அந்த சங்கதியைப்பற்றின விஷயங்களிலே நியாயமாகத்தோற்றுகிற உத்தரவு செய்யவேண்டும்.

D.—சோதனை போடுவதைக்குறித்த பொது நிபந்தனைகள்.

சோதனை வாரண்டுகளை இன்னார் பெயருக்கு அனுப்புவது முதலியவை.

101. 43, 75, 77, 79, 82, 83, 84-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகள் 96, 98, 99-A அல்லது 100-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட சகல சோதனை வாரன்டுகளுக்கும் கூடியமட்டில் பிரயோகப்படவேண்டும்.

மூடியிருக்கிற இடத்தைத் தங்கள் வசத்தில் வைத்திருப்பவர்கள் சோதனை போட வொட்டுவது.

102. (1) இந்த அத்தியாயத்தின்படி சோதனை போடுவதற்காவது பார்வையிடுவதற்காவது உள்ளாயிருக்கிற யாதொரு இடம் மூடப்பட்டிருந்தால், அந்த இடத்தில் வாசஞ்செய்துகொண்டாகிலும் அதைத் தன் வசமாய் வைத்துக்கொண்டாகிலு மிருக்கிறவன் வாரன்டை நிறைவேற்றுகிற உத்தியோகஸ்தனுவது மற்றவனுவது கேட்பதன்மேலும் அந்த வாரன்டைக் காட்டுவதன்மேலும், அவனைத் தாராளமாய் உள்ளே விடவேண்டியதுமல்லாமல் அதில் சோதனை போடுவதற்கு நியாயமான அனுகூலங்களை யெல்லாம் செய்யவும்வேண்டும்.

(2) அந்த இடத்திற்குள் அப்படி போகக்கூடாவிட்டால், வாரன்டை நிறைவேற்றுகிற உத்தியோகஸ்தனுவது மற்றவனுவது 48-வது பிரிவில் சொல்லியிருக்கிற விதமாய் நடத்தலாம்.

(3) அந்த இடத்தின் உள்ளேயாவது, அருகாமையிலாவது யாதொரு நபர், எந்த வஸ்துக்காகச் சோதனை போடவேண்டியிருக்கிறதோ அந்த வஸ்துவைத் தன் தேகத்தில் எவ்விடத்திலாவது மறைக்கிறதாக நியாயமாய் அனுமானிக்கப்பட்டால், அந்த நபரைச் சோதனை போடலாம். அந்த நபர் ஸ்திரீயாயிருக்கும் பட்சத்தில், 52-வது பிரிவில் சொல்லியிருக்கும் விஷயங்களை அனுசரிக்கவேண்டும்.

சாட்சிகளுக்கு எதிரிலே சோதனை போடுவது.

103. (1) இந்த அத்தியாயத்தின்படி சோதனை போவதற்கு முன்னமே, சோதனைபோடப்போகிற உத்தியோகஸ்தனுவது மற்றவனுவது சோதனைபோடவேண்டிய இடமிருக்கிற பிரதேசத்தின் பெருந்தன்மையான இரண்டு அல்லது மேற்பட்ட குடித்தனக்காரர்களை, சோதனை போடுகையில் வந்திருந்து பார்க்கும்படி அழைக்கவேண்டும்; மேலும், அவர் அவசியமானல், அந்தக் குடித்தனக்காரர்களுக்கு அல்லது அவர்களில் யாதொருவருக்கு அந்தப்படி செய்யும்படி எழுத்து மூலமாய் உத்தரவு பிறப்பிக்கலாம்.

(2) அவர்களுக் கெதிரிலே அப்படி சோதனை போடவேண்டும்; அப்படி சோதனை போடுகையில் கைப்பற்றப்பட்ட சகல பொருள்களைக் குறித்தும் அதது அகப்பட்ட இடங்களைக்குறித்தும் அந்த உத்தியோகஸ்தனுவது மற்றவனுவது ஜாபிதா தயார் செய்யவேண்டியதுமல்லாமல், அதில் அந்த சாட்சிகள் கையெழுத்துப்பண்ணவும் வேண்டும்;

ஆனால், இந்தப் பிரிவின்படி சோதனைபோடுகையில் வந்து பார்த்துக் கொண்டிருக்கிற யாதொரு நபரைக் கோர்ட்டார் பிரத்தியேகமாய் ஸம்மன் அனுப்பி வரவழைத்தாலொழிய, அந்த சோதனையைக் குறித்துச் சாட்சியாகக் கோர்ட்டிலே அவரை ஹாஜராகச்சொல்லக்கூடாது.

சோதனை போடப்படுகிற இடத்தில் குடியிருப்பவன் கூடயிருக்கலாம்.

(3) சோதனை போடப்படுகிற இடத்தில் குடியிருப்பவனையாவது அவன் பட்சத்தில் யாதொரு நபரையாவது பிரதி விஷயத்திலும் சோதனைக்காலத்தில் வந்திருக்கவொட்டவேண்டும்; இந்தப் பிரிவின்படி தயார்செய்யப்பட்டு ஷை சாட்சிகளால் கையெழுத்துப் போடப்பட்டிருக்கிற ஜாபிதாவுக்கு நகலை, அப்படி குடியிருப்பவனாவது அப்படிப்பட்ட நபராவது கொடுக்கச் சொல்லிக்கேட்டால் அவனுக்கு அதைக் கொடுக்கவேண்டும்.

(4) 102-வது பிரிவு (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு நபர் சோதிக்கப்பட்டால், சுவாதீனம் செய்யப்பட்ட சகல வஸ்துக்களின் ஜாபிதா ஒன்றைத் தயார்செய்து அதன் நகல் ஒற்றை அந்த நபருக்கு அவனுடைய வேண்டுகோளின்மேல் கொடுக்கவேண்டும்.

(5) சோதனை போடுகையில் வந்திருந்து பார்க்கும்படி இந்தப் பிரிவின்படி யாதொரு நபர் எழுத்து மூலமான உத்தரவினால் அழைக்கப்படும்போது, அவர் அந்தப்படி வந்திருந்து பார்க்கமாட்டேனென்று நியாயமான காரணமில்லாமல் மறுத்தாலும் அந்தப்படி செய்ய அசட்டைபண்ணினாலும், அவர் இந்தியன் பினல் கோட் 197-வது பிரிவின்படி குற்றம் செய்தவராகக் கருதப்படுவார்.

E.—பலவகைப்பட்டவை.

கொண்டு வந்து காட்டப்பட்ட தஸ்தாவேஜு முதலியதை நிறுத்திக்கொள்ள அதிகாரம்.

104. யாதொரு கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால், தங்களுக்கு முன்பாக இந்த சட்டப்படி கொண்டுவந்து காட்டப்படுகிற யாதொரு தஸ்தாவேஜு முதலிய பொருளை மறியல் செய்யலாம்.

மாஜிஸ்ட்ரேட்டானவர் தனக்கெதிரிலே சோதனை போடுவிக்கலாம்.

105. எந்த மாஜிஸ்ட்ரேட்டாவது எதைச் சோதனைபோடும்படி சோதனை வாரன்ட் பிறப்பிக்கத் தமக்கு அதிகாரமிருக்கிறதோ அந்த இடத்தைத் தமக்கு எதிரிலே சோதனைபோடும்படி உத்தரவு செய்யலாம்.

4-ம் பாகம்.

குற்றங்களைத் தடுப்பது.

8-ம் அத்தியாயம்.

ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்காதிருப்பதற்காகவும் நல்ல நடத்தைக்காகவும் ஜாமீனைக்குறித்து.

A.—குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல் ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்காதிருப்பதற்காக ஜாமீன்.

குற்றவாளி யென்று தீர்மானிக்கப்படுவதன்மேல் ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்காதிருப்பதற்காக ஜாமீன்.

106. (1) இந்தியன் பினல்கோட் 8-ம் அத்தியாயத்தின் 143, 149, 153-A அல்லது 154 பிரிவுகளின்படிக்கல்லாமல் மற்றப்படி, அந்த அத்தியாயத்தின்படி தண்டனை விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றத்தைச் செய்ததாகவாவது, தாக்கினதாகவாவது ஜனங்களுடைய அமரிக்கையை கெடுக்கத்தக்க வேறே குற்றத்தைச் செய்ததாகவாவது, அப்படிப்பட்ட குற்றத்திற்கு உடந்தையாயிருந்ததாகவாவது, குற்றஞ்சாட்டப்பட்டவனாகிலும், அநியாயமாய்ப் பயப்படுத்துவது என்னும் குற்றஞ்சாட்டப்பட்டவனாகிலும், அந்த குற்றத்தைக்குறித்து ஹைகோர்ட்-ஸெஷன் கோர்ட்-இராஜதானி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்-டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்-ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் அல்லது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு முன்பாகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டால்,

அப்படிப்பட்ட-கோர்ட்டார் அவனிடத்திலே ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்காதிருக்கும்படி முச்சிலிக்கா வாங்குவது அவசியமாயிருக்கிறதென்று அபிப்பிராயப்படுகிற பட்சத்தில்,

அப்படிப்பட்ட கோர்ட்டார்-அவனுக்குச் சிட்சை விதிக்கிற காலத்தில், மூன்று வருஷத்திற் கதிகப்படாமல் எவ்வளவுகாலம் நிச்சயிப்பது தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிறதோ அவ்வளவு காலம் வரையிலே ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்காமல் நடந்துகொள்ளுகிறதாக ஜாமீன்தாரர்கள் சகிதமாயாவது ஜாமீன்தாரர்களில்லாமலாவது அவனுடைய வாழ்க்கை ஸ்திதிக்குத் தக்கபடி ஒரு

தொகைக்கு முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கச் சொல்லி உத்தரவு செய்யலாம்.

(2) அப்பீலின்மேலாவது மற்றப்படியாவது குற்றஸ்தாபனை ரத்துசெய்யப்பட்டால், அப்படி எழுதிகொடுக்கப்பட்ட முச்சிலிக்கா செல்லாததாகும்.

(3) 407-வது பிரிவின்படி அப்பீல்களை விசாரிக்கும் யாதொரு கோர்ட்டார் உள்பட அப்பில் கோர்ட்டார் அல்லது ஹைகோர்ட்டாருங்கூடத் தங்களுக்குக் கொடுத்திருக்கும் பரிசீலனை செய்யும் அதிகாரத்தைச் செலுத்தும்பொழுது, இந்தப் பிரிவின்படி உத்தரவு செய்யலாம்.

B.—மற்றவிஷயங்களிலே ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்காதிருப்பதற்காக ஜாமீனும் நல்ல நடத்தைக்காக ஜாமீனும்.

மற்ற விஷயங்களிலே ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்காதிருப்பதற்காக ஜாமீன்.

107. (1) யாதொரு இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக்காவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்காவது, யாவனொருவன் ஜனங்களுடைய அமரிக்கையை அல்லது பொதுஜன சமாதானத்தைக் கெடுப்பான் போலிருக்கிறதாகவாகிலும், என்ன செய்வதனாலே ஜனங்களுடைய அமரிக்கையாவது பொதுஜன சமாதானமாவது ஒருவேளை கெடலாமோ அப்படிப்பட்ட யாதொரு அக்கிரமமான காரியத்தைச் செய்வான்போலிருக்கிறதாகவாகிலும், சங்கதி தெரிவிக்கப்பட்டால், அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் தான்-நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கு தகுந்த காரணங்களிருப்பதாய்த் தோன்றினால், ஒரு வருஷத்திற்கு மேற்படாமல் எவ்வளவு காலத்தை நிச்சயிப்பது தமக்குத் தகுதியாகத் தோற்றுகிறதோ அவ்வளவு காலத்திற்கு ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்காமல் நடந்துகொள்ளுவதற்காக, ஜாமீன்தாரர்கள் சகிதமாயாகிலும் ஜாமீன்தாரர்களில்லாமலாகிலும் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கச்சொல்லி ஏன் அவனுக்கு உத்தரவு செய்யக்கூடாதோ அதற்கு முகாந்தரம் தெரிவிக்கும்படி இதில் பின்னால் சொல்லியிருக்கிற விதமாய் அவனுக்கு உத்தரவு செய்யலாம்.

(2) எவன் விஷயமாய்ச் சங்கதி தெரிவிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபராவது, எந்த இடத்தில் ஜன அமரிக்கைக்குக் கெடுதி அல்

லது கலகம் உண்டாகுமென்று அச்சங்கொள்ளப்பட்டிருக்கிறதோ அந்த இடமாவது, மாஜிஸ்ட்ரேட்டின் அதிகார வரம்பின் பிரதேச எல்லைகளுக்குள்ளிருந்தாலன்றி மற்றப்படி இந்தப் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் நடத்தக்கூடாது; மேலும், எவன் விஷயமாய்ச் சங்கதி தெரிவிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபரும் எந்த இடத்தில் ஜன அமரிக்கைக்குக் கெடுதி அல்லது கலகம் உண்டாகுமென்று அச்சங்கொள்ளப்பட்டிருக்கிறதோ அந்த இடமும் மாஜிஸ்ட்ரேட்டினுடைய அதிகார வரம்பின் பிரதேச எல்லைகளுக்குள்ளிருந்தாலொழிய, பிரதான ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் அல்லது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது வேறு எந்த மாஜிஸ்ரேட் முன்னிலையிலும் எந்த நடவடிக்கைகளும் நடத்தக்கூடாது.

(1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிரவர்த்திக்க அதிகாரம் கொடுக்கப் பெற்றிராத மாஜிஸ்ட்ரேட் நடத்தவேண்டிய நடவடிக்கை.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி காரியம் நடத்த அதிகாரங் கொடுக்கப்பெற்றிராத யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர்-யாதொரு நபர் ஜனங்களுடைய அமரிக்கையை வெகுசாய்க் கெடுப்பான் அல்லது பொது ஜன சமாதானத்தை வெகுசாய்க் கலக்குவான் அல்லது ஜனங்களுடைய அமரிக்கைக்குக் கெடுதியையாவது, பொதுஜன சமாதானத்துக்குக் கலகத்தையாவது ஒருவேளை உண்டுபண்ணத்தக்க யாதொரு அக்கிரமமான காரியத்தை வெகுசாய்ச் செய்வான் என்றும், அந்த நபரைக் காவலில் மறியல்செய்து வைப்பதனாலல்லாமல் வேறு விதமாய் ஜனங்களுடைய அமரிக்கைக்குண்டாகும் கெடுதியையாவது, கலகத்தையாவது தடுக்கமுடியாதென்றும் தாம் நம்புவதற்கு முகாந்தரமிருந்தால், அந்த மாஜிஸ்ட்ரேட் அல்லது கோர்ட்டார் தங்களுடைய நியாயங்களைப் பதிவு செய்த பிறகு, (அந்த நபர் முன்னதாகவே காவலிலாவது கோர்ட்டார் முன்பாகவாவதிராவிட்டால்) அந்த நபரைப் பிடிப்பதற்காக வாரன்ட் பிறப்பித்து, அந்த் கேஸை விசாரிக்க அதிகாரங் கொடுக்கப்பெற்றிருக்கிற மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில், தங்களுடைய நியாயங்களின் ஒரு நகல் சகிதமாய் அவனை அனுப்பிக்கலாம்.

(4) (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாருக்கு முன் ஒருவன் அனுப்பப்படுகிறானோ அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர், தமக்கு யுக்தமாகத்தோற்றினால் இந்த அத்தியாயத்தின்படி தாமே பின்னும் நடவடிக்

கை நடத்துகிற வரையில் அந்த நபரைக் காவலில் மறியல்செய்து வைக்கலாம்.

ராஜத் துரோகமான விஷயத்தைப் பரவச்செய்யும் நபர்களின் நன்னடக்கைக்காக ஜாமீன்.

108. பிரதான பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுக்காவது அல்லது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது இதற்கென்று பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமாய் அதிகாரங்கொடுக்கப் பெற்றிருக்கிற ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் அல்லது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்காவது, தம்முடைய அதிகாரவரம்பின் உள்ளேயாகிலும் வெளியேயாகிலும்—

(a) யாதொரு ராஜத் துரோகமான விஷயம் அதாவது எந்த விஷயமானது பிரசித்தஞ்செய்யப்பட்டால் இந்தியன் பினல் கோட் 124A-வது பிரிவின்படி தண்டிக்கப்படத் தக்கதோ அந்த விஷயத்தையேனும்,

(b) எந்த விஷயம் பிரசித்தஞ்செய்யப்பட்டால் இந்தியன் பினல் கோட் 153A-வது பிரிவின்படி தண்டிக்கப்படத் தக்கதோ அந்த விஷயத்தையேனும்,

(c) ஒரு ஜட்ஜூக்குச் சம்பந்தப்பட்டதும், இந்தியன் பினல் கோடின்படி அநியாயமாய்ப் பயப்படுத்தல் என்னுங் குற்றத்துக்காவது அவதூறு என்னும் குற்றத்துக்காவது ஒத்ததுமாயிருக்கிற யாதொரு விஷயத்தையேனும்,

வாய்ச்சொல்லினாலோ அல்லது எழுத்துமூலமாயோ அல்லது மனதார வேறே யாதொரு விதமாகவோ பரவச்செய்கிற அல்லது பரவச்செய்ய எத்தனிக்கிற அல்லது பரவச்செய்வதற்கு எவ்விதமாவாவது உடந்தையாயிருக்கிற யாதொரு நபர், அந்த மாஜிஸ்ட்ரேட்டினுடைய அதிகார வரம்புக்குள்ளிருக்கிறனென்று சங்கதி தெரிய வருமாகில், அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர்-தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கு தகுந்த காரணங்களிருப்பதாய்த் தோற்றினால், ஒரு வருஷத்திற்கு மேற்படாமல் எவ்வளவு காலத்தை நிச்சயிப்பது தமக்குத் தகுதியாகத் தோற்றுகிறதோ அவ்வளவு காலத்திற்கு அவனுடைய நன்னடக்கைக்காக ஜாமீன்தாரர்கள் சகிதமாயாகிலும் ஜாமீன்தாரர்களில்லாமலாகிலும் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கச்சொல்லி ஏன் அவனுக்கு உத்தரவு செய்யக்கூடாதோ அதற்கு முகாந்தரம் தெரிவிக்கும்படி

(இதில் பின்னால் சொல்லியிருக்கிற விதமாய்) அவனுக்கு உத்தரவு செய்யலாம்.

அச்சுக்கூடங்களையும் புஸ்தகங்களை ரெஜிஸ்ட்டர் செய்வதையுங் குறித்த 1867-ம்ளுத்து 25-வது ஆக்டில் குறித்திருக்கும் விதிகளின் படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டாவது, அவ்விதிகளுக் கிணங்கி பதிப்பிக் கப்பட்டு அச்சடிக்கப்பட்டு அல்லது பிரசுரஞ்செய்யப்பட்டாவதிருக்கிற யாதொரு பிரசுரத்தி லடங்கியிருக்கும் ஏதேனும் விஷயத்தைக் குறித்து அந்தப் பிரசுரத்தின் பத்திராதிபர் மேலாவது, சொந்தக்காரர்மேலாவது அச்சடித்தவர்மேலாவது, பிரசுரஞ்செய்தவர் மேலாவது, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் அல்லது பிரதேச கவர்ன்மெண்டார் அல்லது இது விஷயமாய் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் அதிகாரங்கொடுக்கப்பெற்றிருக்கிற எந்த உத்தியோகஸ்தர், ஆகிய இவர்களுடைய உத்தரவுபடிக்கோ அல்லது உத்தரவை அனுசரித்தோ அன்றி மற்றப்படி இந்தப் பிரிவின் பிரகாரம் எந்த நடவடிக்கைகளும் நடத்தக்கூடாது.

ஜார்சுற்றிகளிடத்திலும் அனுமானிக்கப்பட்டவர்களிடத்திலும் நல்ல நடத்தைக்காக ஜாமீன் வாங்குவது.

109. இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக்காவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்காவது—

(a) அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டினுடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் எவனாகிலும் தானிருப்பதை மறைப்பதற்கு ஜாக்கிரதைப்படுகிறானென்றும், யாதொரு குற்றஞ் செய்யும்பொருட்டு அவன் அப்படி ஜாக்கிரதைப்படுகிறானென்று நம்புவதற்கு முகாந்தர மிருக்கிறதென்றாகிலும்,

(b) வெளிக்கு ஜீவனோபாயத்திற்குத் தகுந்தவகை இல்லாதவனாவது தன்னைக் குறித்துத் திருப்திகரமாய் விவரஞ்சொல்ல மாட்டாதவனாவது அப்படிப்பட்ட எல்லைக்குள் இருக்கிறானென்றாகிலும், தெரியவந்தால்,

அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் ஒரு வருஷத்திற்கு மேற்படாமல் எவ்வளவு காலத்தை நிச்சயிப்பது தமக்குத் தகுதியாகத்தோற்றுகிறதோ அவ்வளவு காலத்திற்கு அப்படிப்பட்டவனுடைய நல்ல நடத்தைக்காக ஜாமீன்தாரர்கள் சகிதமாய் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கச்

சொல்லி ஏன் அவனுக்கு உத்தரவு செய்யக்கூடாதோ அதற்கு முகாந்தரம் தெரிவிக்கும்படி இதில் பின்னால் சொல்லியிருக்கிற விதமாய் அவனுக்கு உத்தரவு செய்யலாம்.

வழக்கமாய்க் குற்றஞ்செய்கிறவர்களிடத்திலிருந்து நல்ல நடத்தைக்காக ஜாமீன் வாங்குவது.

110. இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக்காவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது இது விஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்ற ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்காவது, தம்முடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் யாதொரு நபர்,

(a) வழக்கமாய்க் கொள்ளையடிக்கிறவனென்றாகிலும் கன்னமிடுகிறவனென்றாகிலும் திருடுகிறவனென்றாகிலும் சிருஷ்டலை செய்கிறவனென்றாகிலும்,

(b) திருட்டுச் சொத்தென்று தெரிந்து அதை வழக்கமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறவனென்றாகிலும்,

(c) வழக்கமாய்த் திருடர்களை ஆதரிக்கிறான் அல்லது அவர்களுக்கு இடங்கொடுக்கிறானென்றாகிலும், திருட்டுச் சொத்தை மறைப்பதினாலாவது, பைசல்செய்வதினாலாவது, வழக்கமாய்ச் சகாயஞ்செய்கிறானென்றாகிலும்,

(d) மனிதர்களைத் திருட்டுத்தனமாய்க் கொண்டுபோவது, அக்கிரமமாய் இட்டுக்கொண்டுபோதல், வெருட்டி வாங்குவது, மோசஞ்செய்வது அல்லது கெடுதிசெய்வது என்னும் குற்றத்தையாவது, இந்தியன் பினல் கோட் 12-ம் அத்தியாயத்தின்படி தண்டனை விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றத்தையாவது அல்லது அந்த கோடின் 489-A, 489-B, 489-C, அல்லது 489-D, பிரிவுகளின்படியாவது தண்டனை விதிக்கத்தக்க யாதொரு குற்றத்தையாவது செய்வதில் வழக்கமாய்ப் பிரவர்த்திக்கிறானென்றாகிலும் அப்படி பிரவர்த்திக்க வழக்கமாய் எத்தனிக்கிறானென்றாகிலும், குற்றத்திற்கு உடந்தையாயிருக்கிறானென்றாகிலும்,

(e) ஜனங்களுடைய அமரிக்கைக்குக் கெடுதியுண்டாக்கத் தக்க குற்றங்களை வழக்கமாய்ச் செய்கிறானென்றாகிலும் செய்ய

எத்தனிக்கிறானென்றாகிலும், செய்வதில் உடந்தையாயிருக்கிறானென்றாகிலும்,

(f) ஜாமீனில்லாமல் சுயேச்சையாய்த் திரிவதனால் ஜனங்களுக்குத் தீங்கு விளைவிக்கத்தக்க அவ்வளவு துணிவுடையவனாகவும் அபாயகரமானவனாகவு மிருக்கிறானென்றாகிலும்,

தெரியவந்தால்; அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் மூன்று வருஷத்திற்கு மேற்படாமல் எவ்வளவு காலத்தை நிச்சயிப்பது தமக்குத் தகுதியாகத் தோற்றுகிறதோ அவ்வளவு காலத்திற்கு அப்படிப்பட்டவனுடைய நல்ல நடத்தைக்காக ஜாமீன்தாரர்கள் சகிதமாய் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கச்சொல்லி ஏன் அவனுக்கு உத்தரவு செய்யக்கூடாதோ அதற்கு முகாந்தரம் தெரிவிக்கும்படி இதில் பின்னால் சொல்லியிருக்கிற விதமாய் அவனுக்கு உத்தரவுசெய்யலாம்.

111. [1923-ம் ௵ 12-வது ஆக்டால் இந்த பிரிவு ரத்து.]

112. 107-வது பிரிவின்படியாவது 108-வது பிரிவின்படியாவது 109-வது பிரிவின்படியாவது 110-வது பிரிவின்படியாவது பிரவர்த்திக்கிற மாஜிஸ்ட்ரேட்டானவர்-அப்படிப்பட்ட பிரிவின் பிரகாரம் முகாந்தரம் தெரிவிக்கும்படி எவனுக்காவது உத்தரவு செய்வது அவசியமாயிருக்கிறதென்று எண்ணுவாராகில், அவர், தமக்குத் தெரியவந்த சங்கதியின் சாராம்சத்தையும் எழுதிக்கொடுக்கவேண்டிய முச்சிலிக்காவின் தொகையையும் அது செல்லவேண்டிய காலத்தையும் ஜாமீன் கேட்கிறதானால் இத்தனைபேர் ஜாமீன் கொடுக்கவேண்டுமென்பதையும் அவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கவேண்டுமென்பதையும் இன்ன வகுப்பினராயிருக்கவேண்டுமென்பதையும் கண்டெழுதி உத்தரவு செய்யவேண்டும்.

உத்தரவு செய்வது.

113. யார் விஷயத்தில் அப்படிப்பட்ட உத்தரவு செய்யப்படுகிறதோ அவன் கோர்ட்டில் ஹாஜராயிருந்தால், அதை அவனுக்குப் படித்துக் காட்டவாவது வேண்டும்: அல்லது அவன் கேட்டுக்கொண்டால் அதன் சாராம்சத்தை அவனுக்கு விவரித்துச் சொல்லவாவது வேண்டும்.

கோர்ட்டில் ஹாஜராயிருக்கிற நபர் விஷயத்தில் நடவடிக்கை.

114. அப்படிப்பட்டவன் கோர்ட்டில் ஹாஜராயிராவிட்டால் மாஜிஸ்ட்ரேட்டானவர் கோர்ட்டுக்குமுன் ஹாஜராகும்படி அவனுக்கு ஸம்மன் பிறப்பிக்கவேண்டும்;

அப்படி ஹாஜராயிராத நபர் விஷய

10

த்தில் ஸம்மன் அல்லது வாரன்ட்.

அப்படிப்பட்டவன் காவலிலிருப்பானாகில் அவன் யாருடைய காவலிலிருக்கிறானோ அந்த உத்தியோகஸ்தன் அவனைக் கோர்ட்டுக்கு முன்பாகக்கொண்டு வரவேண்டுமென்று வாரன்ட் பிறப்பிக்கவேண்டும்.

ஆனால், போலீஸ் உத்தியோகஸ்தனுடைய ரிபோர்ட்டின் மேலாவது வேறே யாதொரு கேள்வியின்மேலாவது, ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்கும்படியான குற்றம் செய்யப்படுமென்று பயப்படுவதற்கு முகாந்தரமிருக்கிறதென்றும், அப்படிப்பட்டவனை உடனே பிடிக்காமல் மற்றப்படிச் செய்வதனாலே அப்படி ஜனங்களுடைய அமரிக்கைக்குக் கெடுதியுண்டாவதைத் தடுக்கமுடியாதென்றும், அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோற்றினால், அவர் அவனைப் பிடிப்பதற்காக எப்போதாவது வாரன்ட் பிறப்பிக்கலாம்; (மேற்கண்ட ரிபோர்ட் அல்லது கேள்விப்பட்ட சங்கதியின் சாராம்சத்தை மாஜிஸ்ட்ரேட் எழுதிக்கொள்ளவேண்டும்.)

112-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவுக்கு நகலை ஸம்மனோடாவது வாரன்டோடாவது அனுப்புவது.

115. 114-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு ஸம்மன் அல்லது வாரன்டோடும், 112-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவுக்கு நகலை அனுப்பவேண்டும்; அந்த ஸம்மனைச் சேர்ப்பிக்கிற அல்லது வாரன்டை நிறைவேற்றுகிற உத்தியோகஸ்தன் அது யாருக்குச் சேர்ப்பிக்கப்படுகிறதோ அல்லது அதன்படி எவன் பிடிக்கப்படுகிறானோ அவனுக்கு அந்த நகலை ஒப்பிக்கவேண்டும்.

நேரில் ஹாஜராகவேண்டியதில்லையென்று உத்தரவு செய்ய அதிகாரம்.

116. மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்குப் போதுமான முகாந்தரம் காணப்பட்டால், ஜனங்களுடைய அமரிக்கை கெடாமல் நடந்துகொள்ளுவதற்காக முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கச்சொல்லி ஏன் உத்தரவு செய்யக்கூடாதோ அதற்குக் காரணத்தைத் தெரிவிக்கும்படி கேட்கப்பட்டவனெவனாகிலும் நேரில் ஹாஜராகவேண்டியதில்லையென்று நிவர்த்தி செய்யலாம்; மேலும், அவனுக்குப் பர்த்தியாய் ப்ளீடர் வந்து ஹாஜராகும்படி அனுமதி கொடுக்கலாம்.

கேள்விப்பட்ட சங்கதி நிஜமா வெ

117. (1) 112-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவானது கோர்ட்டில் ஹாஜராயிருக்கிற யாவனொருவனுக்கு 113-வது பிரிவின்படி படித்துக் காட்டப்

ன்பதைக் குறித்து விசாரணை. பட்டாகிலும் விவரித்துச் சொல்லப்பட்டாகிலு மிருக்கும் போதாவது, 114-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஸம்மனை அனுசரித்து எவனுகி லும் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாக ஹாஜராகும் போதாவது, 114-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட வாரன்டை நிறைவேற்றுகையில் எவனுகிலும் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகக் கொண்டுவரப்படும் போதாவது, மாஜிஸ்ட்ரேட்டானவர் தாம் கேள்விப்பட்ட எந்த சங்கதி யைப்பற்றி நடவடிக்கை நடத்தப்பட்டிருக்கிறதோ அதன் உண்மை யைக்குறித்து விசாரிக்கவும் அவசியமாகத் தோற்றுகிற இன்னும் சாட் சியத்தைக் கேட்கவும் தொடங்கவேண்டும்.

(2) ஜனங்களுடைய அமரிக்கை கெடாமல் நடந்துகொள்வ தாக ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று உத்தரவில் சொல்லியிருந்தால், ஸம்மன் கேஸுகளில் பரிசீலனைகளை நடத்துவதற்காகவும் சாட்சியத் தைப் பதிவுசெய்வதற்காகவும் இதில் பின்னல் சொல்லியிருக்கிற வித மாயும், நல்ல நடத்தை நடப்பதாக ஜாமீன்கொடுக்கவேண்டுமென்று உத்தரவில் சொல்லியிருந்தால் வாரன்ட் கேஸுகளில் பரிசீலனை நடத் துவதற்காகவும் சாட்சியத்தைப் பதிவுசெய்வதற்காகவும் இதில் பின் னல் சொல்லியிருக்கிற விதமாயும், கூடுமானமட்டிலே அப்படிப்பட்ட விசாரணையைச் செய்யவேண்டும்; ஆனல், குற்றப்பத்திரிகை தயார் செய்யவேண்டிய அவசியமில்லை.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்படும் விசாரணை முடிவாகிற வரையிலே, மாஜிஸ்ட்ரேட்டானவர் - ஜனங்களுடைய அமரிக்கை கெடாமலாகிலும், ஜனங்களுக்குள் கலகம் நேரிடவொட் டாமலாகிலும் யாதொரு குற்றம் செய்யப்படாமலாகிலும் தடுப்பதற் காகவாவது பொதுஜன பந்தோபஸ்து நிமித்தமாகவாவது உடனே ஏற்பாடுகள் செய்வது அவசியமென்று தாம் அபிப்பிராயப்படுகிற பக்ஷத்திலே, யார் விஷயமாக 112-வது பிரிவின்படி உத்தரவு பிறப் பிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபரை, மேற்படி விசாரணை முடிகிற வரையில். ஜனங்களுடைய அமரிக்கை கெடாமல் பார்த்துக்கொள்வ தாக ஜாமீன்தாரர்கள் சகிதமாகவோ ஜாமீன்தாரர்கள் இல்லாமலோ ஒரு முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கும்படி கட்டளையிடலாம்; அப்படி கட்டளையிடுவதற்கான காரணங்களை எழுதிவைக்கவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கப்படுகிறவரையிலாவது

அப்படி எழுதிக்கொடுக்கத் தவறினால் மேற்படி விசாரணை முடிவாகிற வரையிலாவது காவலில் அவனை மறியல்செய்து வைக்கலாம்.

ஆனால்:—

(a) 108, 109 அல்லது 110 பிரிவுகளின்படிக்கல்லாமல் வேறே யாதொரு நடவடிக்கையில், எவரையும், நல்ல நடத்தைக்காக ஜாமீன் முச்சலிக்கை எழுதிக்கொடுக்கும்படி கேட்கக் கூடாது.

(b) மேலும் தொகையைப்பற்றியாகிலும் சரி, ஜாமீன் நிபந்தனைகளைப்பற்றியாகிலும் சரி, ஜாமீன்தாரர்களுடைய சங்கியைப் பற்றியாகிலும் சரி அவர்களுடைய பொருப்பின் தன்மையைப்பற்றியாகிலுஞ்சரி, அப்படிப்பட்ட முச்சிலிக்காவின் ஷரத்துக்கள், 112-வது பிரிவின்படி, செய்யப்பட்ட உத்திரவில் அதிகமாயிருக்கக்கூடாது.

(4) இந்தப் பிரிவிலுள்ள காரியங்களின் பொருட்டு, ஒருவன் வழக்கமாய்க் குற்றஞ்செய்கிறவனென்கிற சங்கதியை அல்லது அவனை ஜாமீன் வாங்காமல் யதேச்சையாகத் திரியும்படி விட்டால் ஜனங்களுக்கு அபாயமுண்டாகக் கூடுமென்று எண்ணும்படியாக அவன் அவ்வளவு துணிகரமுள்ளவனாகவும், அபாயகரமானவனாகவும் இருக்கிறானென்கிற சங்கதியை (அவன் குற்றஞ்செய்வதில்) பெயர்போனவனென்கிற சாட்சியத்தினாலாவது மற்றப்படியாவது ருஜூப்படுத்தலாம்.

(5) எதன் விஷயமாய் விசாரணை நடந்துவருகிறதோ அந்த விஷயத்தில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்கள் சம்பந்தப்பட்டிருந்தால், மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி ஒரே விசாரணையிலாவது, தனித்தனி விசாரணையிலாவது அவர்கள் விஷயமாய்ப் பிரவர்த்திக்கலாம்.

ஜாமீன் கொடுக்கச்சொல்லி உத்தரவு.

118. அப்படி விசாரணை செய்வதன்மேல், சங்கதிக்குத் தக்கபடி ஜனங்களுடைய அமரிக்கையைக் காப்பாற்றுவதற்காகவாவது நல்ல நடத்தை நடப்பதற்காகவாவது, எவன் விஷயத்தில் அப்படி விசாரணை செய்யப்படுகிறதோ அவன் ஜாமீன்தாரர்கள் சகிதமாயாகிலும் ஜாமீன்தாரர்களில்லாமலாகிலும் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கவேண்டியது அவசியமென்று ருஜூவானால், மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்பிரகாரமே உத்தரவு பண்ணவேண்டும்.

ஆனால்—

முதலாவது.—112-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவில் கண்டிருப்பதற்கு வேறான தன்மையுள்ள ஜாமீனையாவது அதில் சொல்லியிருக்கிறதைவிட அதிகமான தொகைக்கு ஜாமீனையாவது அதில் கண்டிருக்கும் காலத்தைவிட அதிகமான காலத்திற்கு ஜாமீனையாவது கொடுக்கச்சொல்லி எவனுக்கும் உத்தரவு செய்யக்கூடாது ;

இரண்டாவது.—ஒவ்வொரு முச்சிலிக்காவிலும் எழுதுகிற தொகையை, அந்த சங்கதியைப்பற்றின விஷயங்களைச் செவ்வையாய் யோசித்து நிச்சயிக்கவேண்டியது மல்லாமல், அது வெகுசாய் அதிகப்பட்டிருக்கவுங்கூடாது.

மூன்றாவது.—எவனைப்பற்றி அப்படி விசாரணை செய்யப்படுகிறதோ அவன் மைனராயிருந்தால், அவனுடைய ஜாமீன்தாரர்கள் மாத்திரம் அந்த முச்சிலிக்காவை எழுதிக்கொடுக்கவேண்டும்.

எவன்மேல் அறிக்கை செய்யப்பட்டதோ அவனை நிவர்த்திப்பது.

119. 117-வது பிரிவின்படி விசாரணை செய்வதன்மேல், சங்கதிக்குத் தக்கபடி ஜனங்களுடைய அமரிக்கையைக் காப்பாற்றுவதற்காகவாவது நல்ல நடத்தை நடப்பதற்காகவாவது, எவன் விஷயத்தில் அப்படி விசாரணை செய்யப்படுகிறதோ அவன் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கவேண்டியது அவசியமென்று ருஜுவாகாவிட்டால், மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்தப் பொருள்படும்படி ரிகார்டில் எழுதிவைக்கவேண்டும் ; விசாரணை செய்யும்பொருட்டு மாத்திரம் அப்படிப்பட்டவன் காவலிலிருப்பானாகில் அவனை விடுதலை செய்யவேண்டும் ; அப்படிப்பட்டவன் காவலிலிராவிட்டால் அவனை நிவர்த்திக்கவேண்டும்.

C.—ஜாமீன்கொடுக்கும்படி உத்தரவுசெய்யப்பட்ட பின்பு சகல விஷயங்களிலும் நடத்தவேண்டிய நடவடிக்கை.

ஜாமீன்கொடுக்கவேண்டிய கால ஆரம்பம்.

120. (1) ஜாமீன் கொடுக்கச்சொல்லி எவன் விஷயமாய் 106, அல்லது 118-வது பிரிவின்படி உத்தரவு செய்யப்படுகிறதோ அவனுக்கு, அந்த உத்திரவு செய்யப்படுங்காலத்தில் காவல் தண்டனை விதிக்கப்பட்டாலும், அவன் காவல் தண்டனை அனுபவித்துக்கொண்டிருந்தாலும், அப்படி ஜாமீன் கொடுக்கவேண்டிய காலமானது அப்படிப்பட்ட தண்டனை முடிவாவது முதற்கொண்டு ஆரம்பமாகவேண்டும்.

(2) மற்ற விஷயங்களிலே அப்படிப்பட்ட காலமானது போதுமான காரணத்தைக்கொண்டு மாஜிஸ்ட்ரேட்டானவர் இன்னும் ஒற்றி ஓர் தேதியை நிர்ணயித்தாலன்றி மற்றப்படி அந்த உத்தரவின் தேதி முதற்கொண்டு ஆரம்பமாகவேண்டும்.

முச்சிலிக்காவில் எழுத வேண்டுவது.

121. அப்படிப்பட்டவனெவனாவது எழுதிக்கொடுக்கவேண்டிய முச்சிலிக்காவினாலே சங்கதிக்குத் தக்கபடி ஜனங்களுடைய அமரிக்கையைக் காப்பாற்றுவதாகவாவது நல்ல நடக்கை நடப்பதாகவாவது அவன் கட்டுப்படவேண்டும்; பின்சொல்லிய விஷயத்தில் காவல் தண்டனை விதிக்கப்படத்தக்க எவ்வித குற்றத்தையாகிலும் செய்வது செய்ய எத்தனப்படுவது அல்லது அதற்கு உடந்தையாயிருப்பது எங்கே நடந்தபோதிலும், அது முச்சிலிக்காவை மீறினதாகிறது.

ஜாமீன்தாரர்களை நிராகரிக்க அதிகாரம்.

122 (1) இந்த அத்தியாயத்தின்படி கொண்டுவரப்படுகிற யாதொரு ஜாமீன்தாரரையாவது, அல்லது முன்னமே தன்னால் அல்லது தனக்கு முன்னிருந்தவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜாமீன்தாரரையாவது, முச்சிலிக்காவின் காரியங்களுக்காக தகுதியற்றவரென்கிற ஹேதுவின்மேல் ஒரு மாஜிஸ்ட்ரேட் அப்படிப்பட்ட ஜாமீன்தாரனை அங்கிகரியாமல் நிராகரிக்கலாம்:

ஆனால், அப்படி அங்கிகரியாமல் நிராகரிப்பதற்கு முன் அவர் அந்த ஜாமீன்தாரன் தகுதியுள்ளவனா என்பதைப்பற்றி தாமே பிரமாண பூர்வகமாய் விசாரணைசெய்யவேண்டும் அல்லது தமக்குக் கீழ்ப்பட்டுள்ள ஒரு மாஜிஸ்ட்ரேட்டை அப்படிப்பட்ட விசாரணைசெய்து அதன்மேல் ரிபோர்ட் அனுப்பும்படி செய்யவேண்டும்.

(2) அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டானவர் விசாரணைசெய்வதற்கு முன் ஜாமீன்தாரருக்கும் ஜாமீன்தாரரை ஆஜர்படுத்தினவருக்கும் நியாயமான நோட்டீஸ் கொடுத்து தனக்குமுன் கொண்டுவரப்பட்ட சாட்சியத்தின் சாராம்சத்தை எழுதிவைக்கவேண்டும்.

(3) ஜாமீனுக்காக உத்தரவுசெய்த மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு முன்னாவது (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி தம்மால் நியமிக்கப்பட்ட ஒரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்னாவது அப்படி கொடுக்கப்பட்ட சாட்சியத்தைப்பற்றியும் அந்த மாஜிஸ்ட்ரேட் ரிபோர்ட் ஏதாவது செய்திருந்தால் அதைப்பற்றியும் ஆலோசித்த பிறகு, முச்சிலிக்

காவின் காரியங்களுக்காக ஜாமீன்தாரன் தகுதியற்றவனென்று தெரிந்து திருப்தியடைந்தால், அப்படிப்பட்ட ஜாமீன்தாரனை அங்கீகரியாமல் நிராகரித்து உத்தரவு செய்யவேண்டும்; மேலும் அப்படிசெய்வதற்கான காரணங்களை அவர் எழுதிவைக்கவேண்டும்.

ஆனல், முன்னமே அங்கீகரிக்கப்பட்ட யாதொரு ஜாமீன்தாரரை பிறகு அங்கீகரியாமல் நிராகரித்து உத்தரவு செய்வதற்கு முன்னல், ஜாமீன்தாரர் யாருக்காக ஏற்பட்டாரோ அந்த நபரை மாஜிஸ்ட்ரேட்டானவர் தனக்கு யுக்தமாய்த் தோற்றுகிறபடி ஒரு ஸம்மனாவது வாரன்டாவது பிறப்பித்து தன் முன் கொண்டுவரும்படி செய்யவேண்டும்.

123. (1) 106 அல்லது 117-வது பிரிவின்படி ஜாமீன்கொடுக்கச்சொல்லி உத்தரவு செய்யப்பட்ட யாதொரு நபர், எவ்வளவு காலத்திற்கு அந்த ஜாமீன் கொடுக்கவேண்டியதோ அந்த காலம் ஆரம்பமாகிற தேதியிலாவது அதற்கு முன்பாவது அப்படிப்பட்ட ஜாமீனைக் கொடுக்காவிட்டால், அந்தக்காலம் கழிகிறவரையிலாகிலும், ஜாமீன் கொடுக்கச் சொல்லி உத்தரவு செய்த கோர்ட்டாருக்காவது மாஜிஸ்ட்ரேட்டாருக்காவது அவன் அந்த காலத்திற்குள் ஜாமீன்கொடுக்கிற வரையிலாகிலும், அவனை இதில் பின்னல் அடுத்துச் சொல்லியிருக்கிற விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களிலே சிறைச்சாலைக்கு அனுப்பவேண்டும், அவன் முன்னமேயே சிறைச்சாலையிலிருந்தால் அவனைச் சிறைச்சாலையிலேயே வைத்திருக்கவேண்டும்.

ஜாமீன்கொடாத பட்சத்தில் காவல்.

(2) ஒரு வருஷத்திற்கு அதிகமான காலத்திற்கு ஜாமீன்கொடுக்கச்சொல்லி மாஜிஸ்ட்ரேட் அப்படிப்பட்ட நபருக்கு உத்தரவு செய்திருந்து, அந்த நபர் மேற்சொல்லிய அப்படிப்பட்ட ஜாமீன் கொடாவிட்டால், அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் -ஸெஷன் ஜட்ஜ் அவர்களுடைய உத்தரவு கிடைக்கிறவரையிலாவது, அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டானவர் இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாயிருக்கிற பட்சத்தில் ஹைகோர்ட்டாருடைய உத்தரவு கிடைக்கிறவரையிலாவது, அவனை சிறைச்சாலையில் வைத்துவைக்கும்படி வாரன்ட் பிறப்பிக்கவேண்டும்; நடவடிக்கைகளை அசந்தர்ப்பமில்லாமல் கூடுமான சீக்கிரத்திலே அப்படிப்பட்ட கோர்ட்டாரிடத்திற்கு அனுப்பவேண்டும்.

இன்னபடிக் காரணல் நடவடிக்கைகளை ஹைகோர்ட்டாரிடத்திற்காவது ஸெஷன் கோர்ட்டாரிடத்திற்காவது அனுப்புவது.

(3) அந்தக் கோர்ட்டார் அந்த நடவடிக்கைகளைப் பரிசோதித்துத் தங்களுக்கு அவசியமாகத் தோற்றுகிற இன்னும் அறிக்கை அல்லது சாட்சியத்தை மாஜிஸ்ட்ரேட்டினிடத்திலிருந்து கேட்டறிந்த பின்பு, அந்த விஷயத்திலே தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற உத்தரவு செய்யலாம்;

ஆனால், ஜாமீன் கொடாமற் போவதற்காக எவனுகிலும் சிறைச்சாலையில் வைக்கப்பட்டால் அந்தக்காலமானது மூன்று வருஷத்திற்கு மேற்படக்கூடாது.

(3a) ஒரே நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கும்பொழுது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களிடமிருந்து ஜாமீன் கேட்கப்பட்டிருந்து, அவர்களில் யாதொருவர் விஷயமாய் நடவடிக்கைகள் (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஸெஷன் ஜட்ஜுக்காவது ஹைகோர்ட்டாருக்காவது ஆலோசனைக்கு அனுப்பப்பட்டால், அப்படி அனுப்பும் பொழுது அந்த நபர்களில் மற்ற எவன், அவன் கொடுக்கவேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்ட ஜாமீனைக் கொடுக்கவில்லையோ அவனுடைய கேஸையும் சேர்த்தனுப்பவேண்டும்; மேலும், அப்படி செய்யும் பட்சத்தில், (2), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளின் நிபந்தனைகள் அப்படிப்பட்ட மற்றொரு நபரின் கேஸுக்கும் பிரயோகப்படும்; ஆனால், அவன் காவலில் வைக்கப்படக்கூடிய (ஏதேனும்) காலமானது எந்த காலத்துக்கு அவன் ஜாமீன்கொடுக்கவேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டதோ அந்த காலத்துக்கு அதிகமாயிருக்கக்கூடாது.

(3b) யாதொரு ஸெஷன் ஜட்ஜானவர் (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது (3 a) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது தமக்கு முன் கொண்டுவரப்பட்டிருக்கிற எவையேனும் நடவடிக்கைகளை தமக்கு யுக்தமாகத் தோற்றினுல் யாதொரு அடிஷனல் ஸெஷன் ஜட்ஜுக்காவது அஸிஸ்டன்ட் ஸெஷன் ஜட்ஜுக்காவது மாற்றலாம்; அந்தப்படி மாற்றப்படுவதன்மேல், அந்த அடிஷனல் ஸெஷன் ஜட்ஜாகிலும் அஸிஸ்டன்ட் ஸெஷன் ஜட்ஜாகிலும்-அப்படிப்பட்ட நடவடிக்கைகள் விஷயமாய் இந்தப் பிரிவின்படி யாதொரு ஸெஷன் ஜட்ஜுக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தலாம்.

(4) ஜாமீனானது ஜெயிலின் விசாரணை உத்தியோகஸ்தருக்குக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டால், அவர் அந்த விஷயத்தை உத்தரவு யாரால் பிறப்பிக்கப்பட்டதோ அந்த கோர்ட் அல்லது மாஜிஸ்ட்ரேட்

டுக்கு உடனே தெரிவித்து, அந்த கோர்ட் அல்லது மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவுகளை எதிர்பார்க்கவேண்டும்.

காவல் இப்படிப் பட்டதென்பது.

(5) ஜனங்களுடைய அமரிக்கையைக் காப்பாற்றுவதற்காக ஜாமீன் கொடுக்கத் தவறிப்போகிற பட்சத்தில் விதிக்கிற காவலானது வெறுங்காவலாயிருக்கவேண்டும்.

(6) நல்ல நடத்தைக்காக ஜாமீன்கொடுக்கத் தவறிப்போகிற பட்சத்தில் விதிக்கிற காவலானது-108 பிரிவின்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டதாயிருந்தால் வெறுங்காவலும், 109-வது அல்லது 110-வது பிரிவுகளின்படியாயிருந்தால், அந்தந்த விஷயத்தில் கோர்ட்டாராவது மாஜிஸ்ட்ரேட்டாவது உத்தரவு செய்கிறபடி கடுங்காவலாகிலும் வெறுங்காவலாகவாகிலு மிருக்கலாம்.

ஜாமீன் கொடாமைக்காகக் காவலில் வைக்கப்பட்டவர்களை விட்டுவிட அதிகாரம்.

124. (1) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது பிரதான ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டாவது, இந்த அத்தியாயத்தின்படி ஜாமீன்கொடுக்கத் தவறிப்போனதற்காக காவலில் வைக்கப்பட்ட யாதொரு நபரை விட்டுவிடுவதனாலே ஜனங்களுக்காவது வேறே எவனுக்காவது இடர் நேரிடாதென்று அபிப்பிரயப்பட்டால், அவர் அப்படிப்பட்டவனை விட்டுவிடும்படி உத்தரவுசெய்யலாம்.

(2) யாதொரு நபர் இந்த அத்தியாயத்தின்படி ஜாமீன்கொடுக்கத் தவறிப்போனதற்காகக் காவலில் வைக்கப்பட்டால், பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது (தம்மிலும் உயர்ந்த கோர்ட்டாரால் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி) ஜாமீன் தொகையையாகிலும், ஜாமீன்தாரர்களின் சங்கியையாகிலும் எவ்வளவு காலத்திற்கு ஜாமீன் வேண்டியிருக்கிறதோ அந்தக் காலத்தையாகிலும் குறைக்கும்படி உத்தரவு செய்யலாம்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்படுகிற உத்திரவினால், அப்படிப்பட்ட நபரை, நிபந்தனைகளில்லாமலாவது, அல்லது அவர் ஒப்புக்கொள்ளுகிற நிபந்தனைகளின்படியாவது விடுதலைசெய்யலாம்.

ஆனல், ஏற்படுத்தப்பட்ட யாதொரு நிபந்தனைகள் அந்த நபர் முச்சலிக்கை கொடுக்க உத்திரவு செய்யப்பட்ட காலம் முடிந்த பிறகு செல்லத்தக்கதல்ல.

(4) நிபந்தனைகளுடன் விடுதலைசெய்வதைக்குறித்து, பிரதேச கவர்ன்மென்டார் ஷரத்துகள் ஏற்படுத்தலாம்.

(5) அப்படிப்பட்ட நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்ட நபர், எந்த டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது பிரதான பிரஸி டென்ஸி மாஜிஸ்ட்ரேட்டால் விடுதலைசெய்யப்பட்டாரோ அல்லது அவர்களுக்குப்பின் வருகிற மாஜிஸ்ட்ரேட்டாரின் கருத்தில், முச்சலிக் காவின்படி நடக்கவில்லை என்பதினுல் விடுதலை உத்தரவை ரத்துசெய் யலாம்.

(6) (5) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நிபந்தனைகளுடன் விடு தலைசெய்யப்பட்ட உத்திரவு ரத்துசெய்யப்பட்டால், அப்படிப்பட்ட நபரை ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் வாரன்டில்லாமல் பிடித்து அந்த டிஸ்ட்டிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது பிரதான ராஜதானி மாஜிஸ் ட்ரேட் முன் கொண்டுவரப்படலாம்.

அப்பொழுது அந்த நபர் முன் உத்திரவின் பிரகாரம், எதற்காக காவலில்வைக்கப்பட்டாரோ அல்லது காவலில்வைக்க உத்திரவு செய் யப்பட்டதோ அதன் மிகுதியாயிருக்கும் காலத்திற்கு (அந்த காலமா னது விடுதலை செய்யப்பட்ட நிபந்தனைகளை மீறி நடந்தது முதல், நியாய மாய் எந்த காலத்தில் விடுதலைசெய்யப்படுவதற்கு அர்ஹருவானே அதற்கு சரியான ஒரு காலமாகும்) அந்த டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது பிரதான பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் அந்த நபரை மிகுதி யாயுள்ள காலத்திற்கு காவலில் வைக்கும்படி உத்திரவு செய்யலாம்.

இந்த உட்பிரிவின்படி சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்ட ஒரு நபர் 122-வது பிரிவின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு முதலில் உத்திரவு செய்த கோர்ட்டாருக்காவது மாஜிஸ்ட்ரேட்டுக்காவது அல்லது அவர் களுக்கு பின் வருபவர்களுக்காவது, முன் உத்திரவின்படி எப்பொழு தாவது ஜாமீன்கொடுத்தால் மேற்சொல்லிய மீதியுள்ள காலத்திற்கு விடுதலைசெய்யப்படலாம்.

ஜனங்களுடைய அமரிக்கையைக் கா ப்பாற்றுவதற்காக

125. பிரதான ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது ஜனங்களுடைய அமரிக்கை யைக் கெடுக்காதிருப்பதற்காகவோ நன்னடக்கைக் காகவோ தம்முடைய டிஸ்ட்ரிக்ட்டிலே தம்முடைய

வாவது நன்னடக்கைக்காகவாவது கொடுக்கப்பட்ட யாதொரு முச்சலிக்காவை ரத்துசெய்ய டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரம்.

கோர்ட்டுக்கு மேற்படாத யாதொரு கோர்ட்டாருடைய உத்தரவினால் இந்த அத்தியாயத்தின்படி எழுதிக்கொடுக்கப்பட்ட யாதொரு முச்சிலிக்காவைப் போதுமான காரணங்களைப்பற்றி எப்போதாகிலும் ரத்துசெய்யலாம்; அப்படிச் செய்கையில் அந்தக் காரணங்களை எழுதிவைக்கவேண்டும்.

ஜாமீன்தாரர்களை நிவர்த்திசெய்வது.

126. (1) வேறொருவனுடைய அமரிக்கையான நடத்தை அல்லது நல்ல நடத்தைக்காகப் பிணைப்பட்டிருக்கிற எந்த ஜாமீன்தாரனாவது, இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும் ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும்; முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும், இந்த அத்தியாயப் பிரகாரம் அவருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் எழுதிக்கொடுக்கப்பட்ட யாதொரு முச்சிலிக்காவை ரத்துபண்ணும்படி எப்போதாவது மனுசெய்து கொள்ளலாம்.

(2) அப்படி மனுசெய்யப்படுவதன்மேல், மாஜிஸ்ட்ரேட்டானவர் யாருக்காக அந்த ஜாமீன்தாரன் பிணைப்பட்டிருக்கிறானோ அந்த நபரைத் தமக்கு முன் ஹாஜராகும்படிக்காவது கொண்டுவரும்படிக்காவது, தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற பிரகாரம் ஸம்மன் அல்லது வாரன்ட் பிறப்பிக்கவேண்டும்.

முச்சிலிக்காவை ரத்துசெய்வதும், புதுப்பிப்பதும்.

126-A. 122-வது பிரிவின் (3) குறிப்பிட்ட உட்பிரிவின் நிபந்தனைகளின்படியாவது, 126-வது பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது யாதொரு நபர் ஹாஜராவதற்காக ஒரு ஸம்மனாவது வாரண்டாவது பிறப்பிக்கப்பட்டிருந்து, அந்த நபர் ஆஜரானாலும் அல்லது கொண்டுவரப்பட்டாலும், மாஜிஸ்ட்ரேட் அந்த நபரால் எழுதி கொடுக்கப்பட்ட முச்சலிக்காவை ரத்துபண்ணவேண்டியதுமல்லாமல், அந்த முச்சிலிக்காவின் காலத்தில் எவ்வளவு கழிந்துபோகாமலிருக்கிறதோ அவ்வளவு காலத்திற்கு, ஆதியில்கொடுத்த ஜாமீனைப்போலவே அதே மாதிரியாய்ப் புது ஜாமீன் கொடுக்கும்படி அந்த நபருக்கு உத்தரவு செய்யவும் வேண்டும். அப்படிப்பட்ட பிரதி உத்தரவையும், 121, 122, 123, 124-வது பிரிவுகளின்பொருட்டு சங்கதிக்குத் தக்கபடி 106 அல்லது 108-வது பிரிவின் பிரகாரம் செய்யப்பட்ட உத்தரவாக எண்ணவேண்டும்.

9 - ம் அத்தியாயம்.

சட்டத்துக்கு விரோதமான கூட்டங்கள்.

மாஜிஸ்ட்ரேட்டாவது போலீஸ் உத்தியோகஸ்தனாவது உத்தரவுசெய்வதன்மேல் கூட்டம் கலைந்து போகவேண்டும்.

127. (1) சட்டத்துக்கு விரோதமான யாதொரு கூட்டத்தை யாவது ஜனங்களுடைய அமரிக்கைக்குக் கெடுதி பண்ணுவதுபோலிருக்கிற ஐந்துபேர் அல்லது அதிகமானவர்கள் கூடியிருக்கிற யாதொரு கூட்டத்தை யாவது கலைந்துபோகும்படி எந்த மாஜிஸ்ட்ரேட்டாகிலும் போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனாகிலும் உத்தரவு பண்ணலாம்; அதற்கு மேல் அப்படிப்பட்ட கூட்டத்திலுள்ள நபர்கள் அப்பிரகாரமே கலைந்து போகவேண்டும்.

(2) கல்கத்தா பட்டணத்திலுள்ள போலீஸாருக்கும் இந்தப் பிரிவு பிரயோகப்படுகிறது.

படைச்சேவகர்கள் தவிர மற்றவர்களைக்கொண்டு கலைப்பது.

128. அப்படி உத்தரவு செய்யப்படுவதன்மேல், அப்படிப்பட்ட யாதொரு கூட்டத்தார் கலைந்துபோகாவிட்டாலும் அப்படி உத்தரவு செய்யப்படாதிருக்கையிலே, கலைந்துபோகாமலிருக்க நிச்சயித்துக்கொண்டிருப்பதாக அவர்களுடைய நடத்தையினாலே தெரிய வந்தாலும், இராஜதானிகளுக்குள்ளேயாகிலும் இராஜதானிகளுக்கு வெளியிலாகிலும் யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாவது போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனாவது அப்படிப்பட்ட கூட்டத்தைக் கட்டாயமாய்க் கலைத்துவிடத் தொடங்கலாம்; மேலும், அந்த கூட்டத்தைக் கலைக்கும்பொருட்டும், அவசியமானால் அதில் சேர்ந்திருக்கிற நபர்களை-அந்தக் கூட்டத்தைக் கலைப்பதற்காகவாவது அவர்களைக் சட்டப்படி தண்டனைக்குக் கொண்டு வருவதற்காகவாவது பிடித்துக் காவற்படுத்தும்பொருட்டும், மஹாராஜா அவர்களுடைய ராணுவத்தைச் சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தன் அல்லது படைச்சேவகனாகவாகிலும் 1869-ம் வருஷத்து இந்தியன் வாலன்டியர்ஸ் ஆக்டின்படி சேர்த்துக் கொள்ளப்பட்ட யாதொரு வாலன்டியராகவாகிலும் இராமலும் அப்படிப்பட்டவனாகப் பிரவர்த்திக்காமலுமிருக்கிற யாதொரு ஆண்பிள்ளையினுடைய சகாயத்தைக் கேட்கலாம்.

129. அப்படிப்பட்ட யாதொரு கூட்டத்தை வேறே விதமாக்க கலைக்கக்கூடாமையாய், ஜனங்களுடைய பத்திரத்திற்காக அதைக்

படைச்சேவகர்களைக்கொண்டு கலைப்பது.

கலைக்கவேண்டியது அவசியமாயிருந்தால், ஹாஜரிலிருக்கிறவர்களுக்குள் உயர்ந்த அந்தஸ்தையுடைய மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்படிப்பட்ட கூட்டத்தைப் படைச்சேவகர்களைக் கொண்டு கலைத்துவிடலாம்.

கூட்டத்தைக் கலைக்கும்படி மாஜிஸ்ட்ரேட் கேட்டுக்கொண்டால் சேனைகளின் கம்மாண்டிங் ஆபீஸருடைய கடமை.

130. (1) படைச்சேவகர்களைக்கொண்டு அப்படிப்பட்ட யாதொரு கூட்டத்தைக் கலைக்கும்படி மாஜிஸ்ட்ரேட் நிச்சயிக்கும்போது அவர்-மஹாராஜா அவர்களுடைய ராணுவத்தைச்சேர்ந்த எந்த படைச்சேவகர்களையாவது 1869-ம்வருஷத்து இந்தியன் வாலன்டியர்ஸ் ஆக்டின்படி சேர்த்துக்கொள்ளப்பட்ட எந்த வாலன்டியர்களையாவது கம்மாண்ட் செய்கிற யாதொரு கம்மிஷன்ட் அல்லது நன் கம்மிஷன்ட் ஆபீஸரைப் படைச்சேவர்களைக்கொண்டு அந்தக் கூட்டத்தைக் கலைத்துவிடும்படிக்கும், அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் யாரைப்பிடித்துக் காவற்படுத்தும்படி மாஜிஸ்ட்ரேட் உத்தரவுசெய்கிறாரோ அல்லது கூட்டத்தைக் கலைக்கும்பொருட்டாவது சட்டப்படி தண்டனைக்குக் கொண்டுவரும்பொருட்டாவது யாரைப்பிடித்துக் காவற்படுத்துவது அவசியமாயிருக்குமோ அப்படிப்பட்டவர்களைப் பிடித்துக் காவற்படுத்தும்படிக்கும் கேட்கலாம்.

(2) அப்படிப்பட்ட பிரதி ஆபீஸரும் கேட்டுக்கொள்ளப்பட்டபடி தமக்கு யுக்தமாகத்தோற்றுகிற விதமாய்ச் செய்யவேண்டும்; ஆனால், அப்படிச்செய்வதில் அவர்-கூட்டத்தைக் கலைப்பதற்கும் அப்படிப்பட்டவர்களைப் பிடித்து மறியல் படுத்துவதற்கும் எவ்வளவு குறைவாகச் செய்யக்கூடுமோ அதைவிட அதிகமாய் வலுமை செய்யவுங் கூடாது, நபருக்கும் சொத்துக்கும் கெடுதிசெய்யவுங்கூடாது.

கூட்டத்தைக் கலைக்கக் கம்மிஷன்ட்மிலிட்டெரி ஆபீஸருக்கு அதிகாரம்.

131. அப்படிப்பட்ட யாதொரு கூட்டத்தினாலே ஜனங்களுடைய பத்திரத்திற்குப் பிரத்தியட்சமாய் அபாயம் உண்டாக்குகிறபோது மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரிவித்துக் கொள்ளுவதற்குக் கூடாதபட்சத்தில், மஹாராஜா அவர்களுடைய ராணுவத்தைச் சேர்ந்த யாதொரு கம்மிஷன்ட் ஆபீஸரானவர் படைச்சேவகர்களைக்கொண்டு அந்தக் கூட்டத்தைக் கலைத்துவிடலாம்; மேலும் அந்தக் கூட்டத்தைக் கலைக்கும்பொருட்டாவது சட்டப்படி

தண்டிக்கும் பொருட்டாவது அதைச்சேர்ந்த எந்த நபர்களையாகிலும் பிடித்துக் காவற்படுத்தலாம்; ஆனால், இந்தப் பிரிவின்படி அவர் பிரவர்த்தித்துக்கொண்டிருக்கையில் யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கூடுமானால், அவர் அப்படியே தெரிவிக்கவேண்டியதுமல்லாமல், அந்தப்படி தாம் பிரவர்த்தித்துக்கொண்டிருக்கலாமோ கூடாதோ வென்பதைக் குறித்து அந்த மாஜிஸ்ட்ரேட் சொல்லுகிற கற்பனைகளின்படி அதற்குப்பின் நடந்துகொள்ளவேண்டும்.

அந்த அத்தியாயத்தின்படி செய்யப்பட்ட காரியங்களைக் குறித்பிராதுக்குச் சம்ரக்ஷணைக்காப்பு.

132. இந்த அத்தியாயத்தின்படி செய்யப்பட்டதாகப் பொருள்படுகிற யாதொரு காரியத்திற்காக யாதொரு நபரின்மேல் பிராது செய்யவேண்டுமானால், அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாருடைய அனுமதியில்லாமல் எந்த க்ரிமினல் கோர்ட்டிலும் பிராது செய்யக்கூடாது;

ஆனால், மஹாராஜ சக்ரவர்த்தியவர்களுடைய சேனையைச் சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது படைச்சேவகன்மேல் அப்படிப்பட்ட பிராது எதையும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியில்லாமல் எந்த க்ரிமினல் கோர்ட்டிலும் தொடரக்கூடாது. மேலும்—

(a) இந்த அத்தியாயத்தின்படி நல்ல எண்ணத்தோடு பிரவர்த்திக்கிற மாஜிஸ்ட்ரேட் அல்லது போலீஸ் உத்தியோகஸ்தனும்,

(b) 131-வது பிரிவின்படி நல்ல எண்ணத்தோடு பிரவர்த்திக்கிற ஆபீஸரும்,

(c) 128 அல்லது 130-வது பிரிவின்படி கேட்டுக்கொள்ளப்படுவதன்மேல் அந்தப்பிரகாரம் நல்ல எண்ணத்தோடு யாதொரு காரியத்தைச் செய்கிறவனும்,

(d) தான் கீழ்ப்படவேண்டிய யாதொரு உத்தரவின் பிரகாரம் யாதொரு காரியத்தைச் செய்கிற யாதொரு கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தன்-படைச்சேவகன் அல்லது வாலண்டியரும்,

அதனாலே குற்றஞ்செய்திருப்பதாக எண்ணப்படமாட்டார்கள்.

10-ம் அத்தியாயம்.

ஜனங்களுக்குத் தடைமுதலிய சங்கடங்கள்.

தடை முதலிய சங்கடத்தை நிவர்த்திபண்ணும்படி ஈரொட்டான உத்தரவு.

133. (1) போலீஸ் ரிபோர்ட் அல்லது வேறே அறிக்கை பெற்றுக்கொள்வதன்மேலும் தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற (ஏதேனும்) சாட்சியத்தை வாங்குவதன்மேலும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும் ஸப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும் முதல்ப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும்,

சட்டப்படி பொது ஜனங்கள் உபயோகிக்கிற அல்லது உபயோகிக்கக்கூடிய யாதொரு வழி, நதி அல்லது கால்வாயிருந்தாவது யாதொரு பொதுவான இடத்திலிருந்தாவது சட்டத்துக்கு விரோதமாய் உண்டாயிருக்கிற யாதொரு தடங்கல் அல்லது சங்கடத்தை நிவர்த்திசெய்ய வேண்டுமென்றாவது,

யாதொரு வர்த்தகம் அல்லது தொழிலை நடத்துவதாகிலும் யாதொரு சரக்கு அல்லது வியாபாரப்பொருளை வைத்திருப்பதாகிலும் ஜனங்களின் ஆரோக்கியத்துக்காயினும் தேக சௌக்கியத்துக்காயினும் கெடுதி உண்டுபண்ணுகிறதென்றும் அதனால் அப்படிப்பட்ட வர்த்தகம் அல்லது தொழிலை தடுத்துவிடவேண்டுமென்றாவது ஒழுங்குபடுத்த வேண்டுமென்றாவது அப்படிப்பட்ட சரக்கு அல்லது வியாபாரப் பொருளை அப்புறப்படுத்தவேண்டுமென்றாவது அதை வைத்திருப்பதைப்பற்றி ஒழுங்கேற்படுத்தவேண்டுமென்றாவது,

பற்றி எரியும்படியான அல்லது வெடிக்கும்படியான விதமாக யாதொரு கட்டிடத்தைக் கட்டுவதையாகிலும் யாதொரு வஸ்துவைப் போட்டுவைப்பதையாகிலும் தடுக்கவேண்டுமென்றாவது நிறுத்திவிட வேண்டுமென்றாவது,

யாதொரு கட்டிடம், கூடாரம் அல்லது கட்டுக்கோப்பாகிலும் யாதொரு மரமாகிலும் ஒருவேளை இடிந்துவிழுந்து அக்கம் பக்கத்தில் வாசஞ்செய்துகொண்டோ தொழில் நடத்திக்கொண்டோ இருக்கிற அல்லது அந்த வழியாய் போக்குவரவுசெய்கிற நபர்களுக்கு தீங்கு உண்டு பண்ணக்கூடிய நிலைமையிலிருக்கிறதென்றும் அதனால் அப்படிப்பட்ட கட்டிடம், கூடாரம் அல்லது கட்டுப்போப்பை எடுத்துவிடுவது, மராமத்து பண்ணுவது அல்லது அதற்கு முட்டுக்கொடுப்பதாயினும் அப்படிப்பட்ட மரத்தை எடுத்துவிடுவது அல்லது அதற்கு முட்டுக் கொடுப்பதாயினும் அவசியமென்றாவது,

அப்படிப்பட்ட யாதொரு வழி அல்லது பொதுவான இடத்துக்குச் சமீபத்திலிருக்கிற யாதொரு குளம் கிணறு அல்லது குழியைச் சுற்றி பொது ஜனங்களுக்கு அபாயமுண்டாகாதபடி அடைப்பு அடைக்கவேண்டுமென்றாவது,

யாதொரு அபாயகரமான பிராணியைக் கொன்றுவிடவேண்டுமென்றாவது, அடைத்துவைக்கவேண்டுமென்றாவது மற்றப்படி ஒருவகை செய்யவேண்டுமென்றாவது தோற்றினால்,

அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர்-அப்படி தடங்கல் அல்லது சங்கடம் உண்டுபண்ணுகிற நபருக்காயினும் அப்படிப்பட்ட வர்த்தகம் அல்லது தொழில் நடத்துகிற நபருக்காயினும் அப்படிப்பட்ட சரக்கு அல்லது வியாபாரப் பொருளை வைத்துக்கொண்டிருக்கிற நபருக்காயினும் அப்படிப்பட்ட கட்டிடம், கூடாரம், கட்டுக்கோப்பு, வஸ்து, குளம், கிணறு அல்லது குழிக்குச் சொந்தக்காரராகவாவது அதைத் தம் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவராகவாவது அதன் விசாரணை வஹிக்கிறவராகவாவதுள்ள நபருக்காயினும் அப்படிப்பட்ட பிராணி அல்லது மரத்துக்குச் சொந்தக்காரராகவாவது அதைத் தம் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவராகவாவதுள்ள நபருக்காயினும், உத்தரவிலே ஒரு காலத்தை நிர்ணயித்தெழுதி அந்த காலத்திற்குள், சங்கதிக்குத் தக்கபடி,

அப்படிப்பட்ட தடங்கல் அல்லது சங்கடத்தை நிவர்த்திசெய்யும்படிக்காவது,

அப்படிப்பட்ட வர்த்தகம் அல்லது தொழிலை நடத்தாமல் நிறுத்திவிடும்படிக்காவது கட்டளையிடப்படக்கூடிய விதமாய் வேறே இடத்தில் நடத்தும்படிக்காவது அது விஷயமாய் ஒழுங்கேற்படுத்தும்படிக்காவது,

அப்படிப்பட்ட சரக்கு அல்லது வியாபாரப்பொருளை அப்புறப்படுத்தும்படிக்காவது அதை வைத்திருப்பதைப்பற்றி கட்டளையிடப்படக்கூடிய விதமாய் ஒழுங்கேற்படுத்தும்படிக்காவது,

அப்படிப்பட்ட கட்டிடம், கூடாரம் அல்லது கட்டுக்கோப்பைக் கட்டுவது அல்லது போடுவதைத் தடுக்கும்படிக்காவது நிறுத்தும்படிக்காவது அதை எடுத்துவிடும்படிக்காவது மராமத்து செய்யும்படிக்காவது அதற்கு முட்டுக்கொடுக்கும்படிக்காவது,

அப்படிப்பட்ட மரத்தை எடுத்துவிடும்படிக்காவது அதற்கு முட்டுக்கொடுக்கும்படிக்காவது,

அப்படிப்பட்ட வஸ்து போட்டுவைத்திருப்பதை வேறு வகை செய்து மாற்றும்படிக்காவது,

அப்படிப்பட்ட குளம், கிணறு அல்லது குழிக்கு அடைப்பு அடைக்கும்படிக்காவது,

ஷை உத்தரவில் கண்டவிதமாய் அப்படிப்பட்ட அபாயகரமான பிராணியைக் கொன்றுவிடும்படிக்காவது அடைத்து வைக்கும்படிக்காவது ஒருவகைசெய்யும்படிக்காவது, அவன் அப்படி செய்வதற்கு ஆட்சேபனை செய்தால்,

அந்த உத்தரவில் நிர்ணயிக்கப்பட்ட காலத்திலே அதில் குறிக்கப்பட்ட இடத்தில் தமக்கு முன்பாகவாகிலும் முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பைச்சேர்ந்த வேறொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகவாகிலும் ஹாஜராகி இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிற விதமாய் அந்த உத்தரவைத் திருத்தச்சொல்லி அல்லது ரத்துபண்ணச் சொல்லிக் கேட்டுக்கொள்ளும்படிக்காவது, ஒரு ஈரொட்டான உத்திரவுசெய்யலாம்.

(2) இந்தப் பிரிவின்படி யாதொரு மாஜிஸ்ட்ரேட் கிரமமாய்ச் செய்திருக்கிற எந்த உத்தரவையும் யாதொரு ஸிவில் கோர்ட்டிலே ஆட்சேபிக்கக்கூடாது.

விவரணம் —"பொதுவான இடம்" என்பதில்-கவர்ன்மெண்டைச் சேர்ந்த சொத்தென்பதும் தண்டு இறங்குகிற இடமென்பதும் சௌக்கியத்திற்காகவும் உல்லாசத்திற்காகவும் காலியாய் விட்டிருக்கிற இடமென்பதும்-அடங்கும்.

உத்தரவைச் சேர்ப்பிப்பது அல்லது பிரசித்தஞ் செய்வது.

134. (1) கூடுமானால், ஸம்மன் சேர்ப்பிப்பதைக்குறித்து இதில் சொல்லியிருக்கிற விதமாய் அந்த உத்தரவை, அது எவனுக்காகச் செய்யப்பட்டதோ அவனுக்குச் சேர்ப்பிக்கவேண்டும்.

(2) அப்படிப்பட்ட உத்தரவை அப்படிச் சேர்ப்பிப்பதற்குக் கூடாமையானால், பிரதேச கவர்ன்மெண்டார் விதியைக்கொண்டு உத்தரவு செய்கிறவிதமாய் அதை விளம்பரத்தினாலே பிரசித்தம்பண்ணவேண்டும்; மேலும், அதற்கு ஒரு நகலை அப்படிப்பட்டவனுக்குச் சங்கதி தெரியவருவதற்கு மிகவும் தகுதியான இடம் அல்லது இடங்களிலே ஒட்டவேண்டும்.

உத்தரவு செய்யப்பட்டவன் அந்தப்படி செய்யவேண்டும். இல்லா விட்டால் காரணம் தெரிவிக்க வேண்டும் அல்லது மத்தியஸ்தரை நியமிக்கும்படி கேட்டுக்கொள்ளவேண்டும்.

135. எவனுக்கு அப்படிப்பட்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகிறதோ அந்த நபர்—

(a) உத்தரவில் கண்டிருக்கிற காலத்திற்குள்ளாகவும் மாதிரியாகவும், அதில் சொல்லியிருக்கிற விதமாய் உத்தரவு பண்ணியிருக்கிற காரியத்தைச் செய்யவேண்டும்; அல்லது,

(b) அந்த உத்தரவின் பிரகாரம் ஹாஜராகி, அந்த உத்தரவு பிறப்பிக்கக்கூடாதென்பதற்குக் காரணம் தெரிவிக்கவாவது, அது நியாயமும் யுக்தமுமானதோ அல்லவோவென்று பரிசீலனை செய்வதற்கு மத்தியஸ்தரை நியமிக்கும்படி அந்த உத்தரவு பிறப்பித்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு மனுசெய்து கொள்ளவாவது வேண்டும்.

அவன் அந்தப்படி நடவாவிட்டால் இன்னதாகுமென்பது.

136. அப்படிப்பட்ட நபர் 135-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி அந்தக் காரியத்தைச் செய்யாவிட்டாலும், ஹாஜராகிக் காரணத்தைத் தெரிவிக்காவிட்டாலும், மத்தியஸ்தரை நியமிக்கும்படி மனுசெய்து கொள்ளாவிட்டாலும், அவன் அந்த விஷயத்தில் இந்தியன் பினல்கோட் 188-வது பிரிவில் சொல்லியிருக்கிற தண்டனைக்குள்ளாவான்; மேலும் அந்த உத்தரவை அறுதியாகச் செய்துவிடவேண்டும்.

காரணம் தெரிவிக்க அவன் ஹாஜரானால் நடவடிக்கை.

137. (1) அவன் ஹாஜராகி அந்த உத்தரவுக்கு விரோதமாய்க் காரணம் தெரிவித்தால், அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்த விஷயத்தில் யாதொரு ஸம்மன் கேஸில் போலவே, சாட்சியம் வாங்கவேண்டும்.

(2) அந்த உத்தரவு நியாயமும் யுக்தமுமானதல்லவென்று மாஜிஸ்ட்ரேட்டுக்குத் திருப்தியானால், அந்த விஷயத்திலே இன்னும் நடவடிக்கை நடத்தக்கூடாது.

(3) மாஜிஸ்ட்ரேட்டுக்கு அப்படி திருப்தியாகாவிட்டால், அந்த உத்தரவை அறுதியாய்ச் செய்துவிடவேண்டும்.

அவன் மத்தியஸ்தரை நியமிக்கும் படி கேட்டால் நடவடிக்கை.

138. (1) மத்தியஸ்தரை நியமிக்கும்படி 135-வது பிரிவின் பிரகாரம் மனுவைப் பெற்றுக் கொள்வதன்மேல், மாஜிஸ்ட்ரேட்டானவர்—

(a) ஐந்துபேருக்குக் குறையாமல் ஒற்றைப்படையாக உடனே மத்தியஸ்தரை நியமிக்கவேண்டும்; அவர்களில் தலைவரையும் மற்ற அத்தியட்சர்களில் பாதிபேரையும் அந்த மாஜிஸ்ட்ரேட் ஏற்படுத்தவேண்டும்; மற்ற அத்தியட்சர்களை அந்த மனுதாரன் ஏற்படுத்தவேண்டும்;

(b) மேலும், அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர், தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற இடத்தில் தமக்குத் தகுதியாகக் காணுகிற காலத்திலே அந்தத் தலைவரையும் அத்தியட்சர்களையும் வரும்படி ஸம்மனனுப்பி வரவழைக்கவேண்டும்; அன்றியும்,

(c) அவர்கள் தங்களுடைய தீர்மானத்தை இன்னகாலத்திற்குள் அனுப்பவேண்டுமென்று காலம் நிச்சயிக்கவேண்டும்,

(2) அப்படி நிச்சயிக்கப்பட்ட காலத்தை, தகுந்த காரணம் காட்டும்பட்சத்தில், மாஜிஸ்ட்ரேட்டானவர் அதிகப்படுத்தலாம்.

மத்தியஸ்தர் மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவை நியாயமானதென்று நிச்சயித்தால் நடவடிக்கை.

139. (1) மத்தியஸ்தராவது மத்தியஸ்தரில் பெருந்தொகையாராவது-மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவு பிரதமத்தில் செய்யப்பட்டபடிக்காகிலும், மாஜிஸ்ட்ரேட்டுக்கு அங்கீகாரமாகிற திருத்துப்பாட்டுக்குட்பட்டாகிலும், நியாயமும் யுக்தமுமானதென்று தீர்மானித்தால், அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்படிப் பட்ட திருத்துப்பாடு ஏதாகிலுமிருந்தால் அதற்குட்பட்டு அந்த உத்தரவை உறுதியாய்ச் செய்து விடவேண்டும்.

(2) மற்ற விஷயங்களிலே இந்த அத்தியாயத்தின்படி இன்னும் எந்த நடவடிக்கையும் நடத்தக்கூடாது.

பொதுஜன சுதந்திரம் மறுக்கப்பட்டால் நடவடிக்கை.

139-A. (1) பொது ஜனங்கள் உபயோகிக்கும்படியான யாதொரு வழி-நதி-கால்வாய்-அல்லது இடம் இவற்றின் தடங்கல் அல்லது சங்கடம், அசங்கியம் அல்லது அபாயம் முதலியதை தடுக்கும்பொருட்டு 133-வது பிரிவின்படி எந்த நபருக்கு உத்திரவு

செய்யப்படுகிறதோ அவர் தனக்கு முன் ஹாஜராவதின்மேல் மாஜிஸ்ட்ரேட்டானவர் அவரை அப்படிப்பட்ட வழி-நதி-கால்வாய் அல்லது இடத்தில் பொதுஜன சுதந்திரம் இல்லையென்பதை மறுக்கிறாரா என்று கேட்டு மறுப்பதானால், அந்த மாஜிஸ்ட்ரேட் 137 அல்லது 138-வது பிரிவுகளின்படி பிரவர்த்திப்பதற்கு முன், அந்த விஷயத்தைக்குறித்து விசாரணை செய்யவேண்டும்.

(2) அப்படிப்பட்ட விசாரணையில் மறுப்பதற்கு ஆதாரமாக யாதொரு நம்பகமுள்ள சாட்சியம் இருப்பதாய் அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு தோற்றினால், அப்படிப்பட்ட சுதந்தரத்தை ஒரு தகுந்த வழியில் கோர்ட்டார் நிர்மானிப்பதற்காக அவர் நடவடிக்கைகளை நிறுத்திவைக்கலாம். அப்படிப்பட்ட சாட்சியம் இல்லையென்று தெரிந்தால், அவர் 137 அல்லது 138-வது பிரிவுகளில் சொல்லப்பட்ட விதமாயாவது அல்லது வேறு விதமாகவோ நடத்தலாம்.

(3) (1)-வது உட்பிரிவின்படி மாஜிஸ்ட்ரேட்டினால் கேட்கப்பட்ட ஒரு நபர் அதில் குறிப்பிடப்பட்ட பொது ஜன சுதந்திரம் இல்லையென்பதை மறுக்கத்தவறினாலும், அல்லது மறுத்து அதற்கு ஆதாரமான நம்பத்தகுந்த சாட்சியம் கொடுக்கத் தவறினாலும், அதன்பின் நடவடிக்கைகளிலே, அப்படிப்பட்ட மறுத்தல் செய்வதற்கு அனுமதிக்கப்படவுமாட்டார், அல்லது 138-வது பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட மத்தியஸ்தர்களும் அப்படிப்பட்ட பொது ஜன சுதந்தரத்தைக்குறித்து கேட்கவும் விசாரிக்கவும் கூடாது.

உத்தரவை அறுதியாய்ச் செய்த விஷேதன்மேல் நடவடிக்கை.

140. (1) யாதொரு உத்தரவானது 136, 137 அல்லது 139-வது பிரிவின்படி அறுதியாய்ச் செய்துவிடப்பட்டால், மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்த உத்தரவு கொடுக்கப்பட்டவனுக்கு அதைக் குறித்து நோட்டிஸ் கொடுக்கவேண்டும்; மேலும், அந்த நோட்டிஸில் நிச்சயிக்கப்படுகிற காலத்திற்குள் அந்த உத்தரவினால் செய்யவேண்டியிருக்கிற காரியத்தைச் செய்யவேண்டுமென்று அவனுக்கு உத்தரவு பண்ணவேண்டியதுமல்லாமல், அவன் அந்தப்படிச் செய்யாவிட்டால் இந்தியன் பினல் கோட் 188-வது பிரிவில் சொல்லியிருக்கிற தண்டனைக்கு அவன் உள்ளாவானென்று அவனுக்குத் தெரியப்படுத்தவும் வேண்டும்.

(2) நிச்சயிக்கப்பட்ட காலத்திற்குள் அந்தக் காரியம் செய்யப் படாவிட்டால், மாஜிஸ்ட்ரேட்டானவர் அதைச் செய்விக்கலாம்; மேலும், அதற்குண்டான செலவை, தம்முடைய உத்தரவின்படி எடுத்துவிடப் பட்ட யாதொரு கட்டிடம் சரக்குமுதலியபொருளை விற்றுவது, தம்முடைய அதிகாரப் பிரதேச எல்லைக் குள்ளாகிலும் எல்லைக்கு வெளியிலாகிலும் மேற்படியானுடையதாகிற வேறே யாதொரு அசையும்பொருளை ஜப்திசெய்து விற்றுவது வசூல் பண்ணலாம். அப்படிப்பட்ட வேறே பொருள் அந்த எல்லைக்கு வெளி யிலிருந்தால், ஜப்திசெய்யவேண்டிய பொருள் யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் இருக்கிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டினல் என் டார்ஸ் பண்ணப்படுவதன்மேல் அதை ஜப்திசெய்து விற்பதற்கு அந்த உத்தரவினலே அதிகாரங் கொடுக்கவேண்டும்.

உத்தரவின் படி நடவாவிட்டால் இன்னதாகு மென்பது.

(3) இந்தப் பிரிவின்படி நல்ல எண்ணத்தோடு செய்யப்பட்ட யாதொரு காரியத்தைக்குறித்து வழக்கு பிடிக்கப்படாது.

141. அஜாக்கிரதையினலாவது வேறே எவ்விதத்தினலாவது மனுதாரன் மத்தியஸ்தர் நியமனத்தைத் தடுத்தாலும், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள்ளாவது மாஜிஸ்ட்ரேட் தமக்கு யுக்தமாகத்தோற்றி இன்னும் காலம் கொடுத்திருந்தால் அந்தக் காலத்திற் குள்ளாவது, நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர் எந்தக் காரணத்தினலாகிலும் தங்களுடைய தீர்மானத்தை அனுப்பாவிட்டாலும், மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற உத்தரவு பிறப்பிக்கலாம்; அந்த உத்தரவானது 140-வது பிரிவில் சொல்லியிருக்கிற விதமாய் நிறைவேற்றப்படும்.

மத்தியஸ்தரை நியமிக்கத் தவறிப் போனலும் தீர்மானத்தை அனுப்பாவிட்டாலும் நடவடிக்கை.

142. (1) 133-வது பிரிவின்படி உத்தரவுசெய்கிற மாஜிஸ்ட் ரேட்டானவர் ஜனங்களுக்குப் பெரிதான அபாயம் அல்லது பலமான தீங்கு அடுத்து நேரிடுவதாயிருப் பதை நேரிடவொட்டாமல் தடுப்பதற்கு உடனே தகுந்தவகை செய்யவேண்டிய தவசியமென்று அபிப்பிராயப்பட்டால், மத்தியஸ்தரை நியமிக்கிற தாகவாவது நியமித்தாவது இருந்தாலும் இராவிட்டாலும், அவர் எவ னுக்காக அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதோ அவனுக்கு ஷை விஷயம் தீர்மானிக்கப்படும் வரையில் அந்த அபாயம் அல்லது தீங்கை,

விசாரணையாகிற வரையில் இன்ஜங்ஷன் என்னும் கட்டளை.

நிவர்த்திசெய்யவாகிலும் தடுக்கவாகிலும் அவசியமான இன்ஜங்ஷன் என்னும் கட்டளை பிறப்பிக்கலாம்.

(2) அந்தக் கட்டளையில் கண்டிருக்கிறபடி அப்படிப்பட்டவன் உடனே செய்யாவிட்டால், மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்த அபாயத்தை நிவர்த்திசெய்வதற்காவது அந்த தீங்கைத் தடுப்பதற்காவது தமக்குத் தகுதியாய்த் தோற்றுகிற வகைகளைத் தாமே செய்யலாம் அல்லது செய்விக்கலாம்.

(3) இந்தப் பிரிவின்படி மாஜிஸ்ட்ரேட்டினால் நல்ல எண்ணத்தோடு செய்யப்பட்ட யாதொரு காரியத்தைக்குறித்து வழக்கு பிடிக்கப்படாது.

ஜனங்களுக்குச் சங்கடங்களை மேலும்மேலும் உண்டு பண்ணுதிருக்கும் படிக்காகிலும் உண்டு பண்ணிக்கொண்டே யிராதபடிக்காகிலும் மாஜிஸ்ட்ரேட் தடுக்கலாம்.

143. டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது, ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாவது, இந்த விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாராலாகிலும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாகிலும் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாவது, இந்தியன் பினல் கோடிலாகிலும் உரித்தாகப் பிரத்தியேகமான அல்லது ஒரிடத்திற்குறிய யாதொரு சட்டத்திலாகிலும் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, ஜனங்களுக்குச் சங்கடத்தை மேலுமேலும் உண்டுபண்ணுதிருக்கும்படிக்காவது உண்டுபண்ணிக்கொண்டே யிராதபடிக்காவது யாவனொருவனுக்கு ஆக்கியாபிக்கலாம்.

---

11 - ம் அத்தியாயம்.

தடை முதலிய சங்கடங்கள் அல்லது அஞ்சத்தக்க அபாயம் நேரிடுகிற அவசரமான விஷயங்களிலே சிறிதுகாலத்திற்கான கட்டளைகள்.

தடைமுதலிய சங்கடங்கள் அல்லது அஞ்சத்தக்க அபாயம் நேரிடுகிற அவசரமான விஷயங்களிலே இடைநியான உத்தரவைத் தட்ச

144. (1) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது, பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாவது, இந்தப் பிரிவின்படி பிரவர்த்திக்க தகுந்தகாரணம் இருந்து, பிரதேச கவர்ன்மெண்டாராலாகிலும் பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாலாகிலும், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாலாகிலும் பிரத்தியேகமாய் அதிகாரம் கொடுக்கப்

ணம் பிறப்பிக்க அ-திகாரம். பெற்ற (மூன்றாவதுவகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாயிராத) வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாவது, உடனே தடுப்பதாயினும் தீவரமான பரிகாரம் தேடுவதாயினும் தகுதியாயிருக்கிறதென்று அபிப்பிராயப்படுகிற விஷயங்களிலே,

அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் - இன்னகாரியம் செய்யாதிருக்க வேண்டுமென்றாகிலும், யாவனொருவனுடைய ஸ்வாதீனத்திலாவது அவனுடைய நிர்வாகத்திற்குள்ளாவதிருக்கிற இன்னபொருள் விஷயத்தில் இன்ன ஒழுங்கு செய்யவேண்டுமென்றாகிலும், எவனுக்காவது உத்தரவு செய்வதினாலே, நியாயமாய்த் தன்னுடைய வேலையில் அமர்ந்திருக்கிற யாதொரு நபருக்குத் தடங்கல்-இடைஞ்சல் அல்லது தீங்கு உண்டாவதையாவது உண்டாகும்போலிருப்பதையாவது மனிதப் பிராணனுக்காகிலும் சவுக்கியத்திற்காகிலும் பத்திரத்திற்காகிலும் அபாயத்தையாவது, பொதுஜன சமாதானத்தைக் கெடுப்பதையாவது, குழப்பத்தையாவது சண்டை சச்சரவையாவது தடுக்கலாம்போலிருக்கிறதென்றாகிலும் தடுப்பதற்கு அனுகூலமாயிருக்குமென்றாகிலும் தமக்குத் தோற்றினால் அப்படியே எழுத்துமூலமாய் உத்தரவுசெய்யலாம்; அந்த உத்தரவில் அந்த விஷயத்தைப்பற்றின முக்கியமான-சங்கதிகளை எழுதவேண்டியதுமல்லாமல் அதை 134-வது பிரிவில் சொல்லியிருக்கிற விதமாய்ச் சேர்ப்பிக்கவும் வேண்டும்.

(2) அவசரமான விஷயங்களிலாவது, யாருக்கு உத்தரவுசெய்யப்படுகிறதோ அவனுக்கு நியாயமான காலத்திற்குள் இருக்கிற சங்கதிகளின்பேல் நோட்டீஸ் கொடுக்க அவகாசமில்லாத விஷயங்களிலாவது, இந்தப் பிரிவின்படியான உத்தரவை (ex-parte) எக்ஸ் பார்ட்டியாய்ப் பிறப்பிக்கலாம்.

(3) ஒரு குறிப்பான நபருக்காவது, ஒரு குறிப்பான இடத்திற்குப் போக்குவரவாயிருக்கும்போதாகிலும் வரும்போதாகிலும் பொதுவாய் ஜனங்களுக்காவது இந்தப் பிரிவின்படியான உத்தரவை அனுப்பலாம்.

(4) யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர் தாமாவது தமக்குக் கீழ்ப்பட்ட யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாவது உத்தியோகத்தில் தமக்கு முன்னிருந்தவராலாவது இந்தப் பிரிவின்படி செய்திருக்கிற யாதொரு உத்தரவை தாமேயாகிலும் அல்லது தடுக்கப்பட்டவன் மனுசெய்து கொள்வதின்மேலாகிலும், ரத்து பண்ணலாம் அல்லது மாற்றலாம்.

(5) அப்படிப்பட்ட மனு வரப்பற்றிக்கொள்வதன்மேல், மாஜிஸ்ட்ரேட்டானவர், அந்த மனுதாரர் கூடுமான சீக்கிரத்திலே தானே நேரிலாகிலும் அல்லது ப்ளீடர் மூலமாயாகிலும் ஆஜராவதற்கு சாத்தியமாகும்படி செய்து, அந்த உத்திரவுக்கு பாதகமானவைகளை தெரியப்படுத்தும்படி கேட்கலாம்; மேலும், மாஜிஸ்ட்ரேட்டானவர் மனுவை முழுவதுமாகிலும் சிறிதுமட்டிலாகிலும் தள்ளிவிட்டால் அப்படிச்செய்வதற்குரிய காரணங்களை எழுதிவைக்கவேண்டும்.

(6) மனிதப் பிராணனுக்காவது-சவுக்கியத்துக்காவது பத்திரத்துக்காவது ஆபாயம் நேரிடுகிற விஷயங்களிலாகிலும், குழப்பம் அல்லது சண்டைசச்சரவு நேரிடும்போலிருக்கிற விஷயங்களிலாகிலும், ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரமூலமாய் அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் மற்றப்படி உத்தரவு செய்தாலொழிய, இந்தப் பிரிவின்படி செய்யப்படுகிற எந்த உத்தரவும் அது செய்யப்பட்டதுமுதல் இரண்டு மாதத்திற்கதிகமாய்ச் செலாவணியாய்க் கொண்டிருக்கமாட்டாது.

12-ம் அத்தியாயம்.

அசையாப்பொருளைக்குறித்து விவாதங்கள்.

நிலம் முதலானதைக்குறித்து உண்டாகிற விவாதத்தினாலே அமரிக்கையைக்கெடுக்கும்படியான கலகமுண்டாவது போலிருந்தால் நடவடிக்கை.

145. (1) ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்கும்போலிருக்கிற விவாதமானது தம்முடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் யாதொரு நிலம் அல்லது நீரைக் குறித்தாவது அதன் எல்லைகளைக் குறித்தாவது உண்டாயிருக்கிறதென்று, போலீஸ் ரிபோர்ட்டின் மேலாகிலும் வேறே அறிக்கையின் மேலாகிலும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்காவது திருப்தியாய்த் தெரியவந்தால், அவர் எழுத்துமூலமாய் உத்தரவு பிறப்பிக்கவேண்டும்; அந்த உத்தரவில்-எதனாலே அப்படி தமக்குத் திருப்தியாயிற்றோ அந்த முகாந்தரங்களை எழுதிவைப்பதுமல்லாமல், அந்த விவாதத்தில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள் இன்னகாலத்திற்குள் தம்முடைய கோர்ட்டிலே நேராகவாகிலும் அவர்களுக்காக ப்ளீடராகிலும் ஹாஜராகி, விவாதத்திலிருக்கிற பொருளின் உண்மையான ஸ்வாதீனத்தைக் குறித்துத் தங்கள்

தங்களுக்குண்டாகிய சுதந்தரத்தை எழுத்துமூலமாய்த் தெரிவிக்க வேண்டுமென்று கண்டெழுதவேண்டும்.

(2) இந்தப்பிரிவின் காரியங்களுக்காக "நிலம் அல்லது நீர்" என்னும் சொற்றொடரிலே கட்டிடம், சந்தை, மீன்பிடித்துறை, மாசூல் அல்லது நிலத்தின் இதர மாசூல் ஆகிய இவையும் இப்படிப்பட்ட யாதொரு சொத்தின் வாடகை அல்லது லாபமும் அடங்கும்.

(3) மாஜிஸ்ட்ரேட்டானவர் உத்தரவுசெய்கிற நபர் அல்லது நபர்களுக்கு ஸம்மன் சேர்ப்பிப்பதற்காக இந்த சட்டத்தில் ஏற்படுத்தியிருக்கிற பிரகாரம் உத்தரவின் ஒரு பிரதியைச் சேர்ப்பித்து, குறைந்த பட்சம் ஒரு பிரதியை விவாதத்திலிருக்கிற பொருளிலாவது அதன் சமீபத்திலாவதுள்ள ஒரு பகிரங்கமான இடத்தில் ஒட்டிப் பிரசித்தஞ் செய்யவேண்டும்.

இன்னாருடைய ஸ்வாதீனத்தில் இருக்கிறதென்று விசாரணை.

(4) பிறகு, மாஜிஸ்ட்ரேட்டானவர் விவாதப்பொருளை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்கு அப்படிப் பட்டவர்களிலே இன்னாருக்குச் சிலாக்கியமான பாத்தியதை யிருக்கிறதென்கிற விஷயத்தை யோசிக்காமல், சுதந்தரத்தைக்குறித்து அப்படி தெரிவிக்கப்பட்ட சங்கதிகளைப் படித்து, கட்சிக்காரர்களை விசாரித்து, அவர்களில் அவனவன் கொண்டுவருகிற அப்படிப்பட்ட எல்லா சாட்சியத்தையும் வாங்கி, அந்த சாட்சியத்தினால் இன்னபடியாகிறதென்று யோசித்து, தமக்கு அவசியமாகத் தோற்றினால் இன்னும் ஏதாவது சாட்சியத்தைக் கேட்டறிந்து, அதைக் குறித்துத் தீர்மானிக்கக்கூடிய பட்சத்தில் மேற்படி பொருளை மேலேசொன்ன உத்தரவின் தேதியில் அவர்களில் எவனாவது அப்படி ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டிருந்தானவென்றும், அப்படி வைத்துக்கொண்டிருந்தால் அவன் இன்னானென்றும் தீர்மானிக்கவேண்டும்.

ஆனால் அப்படிப்பட்ட உத்தரவின் தேதிக்கு முன்னே அடுத்த இரண்டு மாதத்துக்குள்ளாக எந்தக் கட்சிக்காரனாவது பலாத்காரமாயும் அநியாயமாயும் ஸ்வாதீனத்தினின்று நீக்கப்பட்டானென்று மாஜிஸ்ட்ரேட்டுக்குக் காணப்பட்டால், அப்படி ஸ்வாதீனத்தினின்றும் நீக்கப்பட்டவனை மேற்படி தேதியில் அவன் ஸ்வாதீனத்தில் இருந்ததாகவே மாஜிஸ்ட்ரேட்டானவர் பாவிக்கவேண்டும்.

அன்றியும், மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்த கேஸ் மிகவும் அவசரமானதென்று நினைத்தால், இந்தப் பிரிவின்படி தாம் தீர்மானிக்கும்

வரையில் விவாதப்பொருளை எப்பொழுதாகிலும் அவர் ஜப்திசெய்ய லாம்.

(5) ஹாஜராகவேண்டுமென்று அப்படி உத்தரவுசெய்யப்பட்ட எந்த கட்சிக்காரனாவது அக்கறையுள்ள வேறே எந்த நபராவது மேற்சொல்லிய விவாதமிருக்கவில்லையென்றாகிலும் இருந்திருக்கவில்லையென்றாகிலும் ருஜுப்படுத்துவதற்கு இந்த பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினாலும் தடையுண்டாகமாட்டாது; அப்படிப்பட்ட விஷயத்திலே மாஜிஸ்ட்ரேட்டானவர் தாம்செய்த மேற்படி உத்தரவை ரத்துபண்ணவேண்டும்; ஆனால், அப்படிப்பட்ட ரத்துக்குட்பட்டு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவானது முடிவானதாகும்.

ஸ்வாதினத்தில் வைத்திருப்பவன் வியாஜ்ஜியம் நடத்திச் சட்டப்படி நீக்கப்படுகிற வரையில் அப்படியே வைத்துக்கொண்டிருப்பது.

(6) அப்படிப்பட்டவர்களில் ஒருவன் மேற்படி பொருளை அந்தக் காலத்திலே அப்படி ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்தானென்றாவது அப்படி வைத்துக்கொண்டிருந்ததாகக் கொள்ளவேண்டுமென்றாவது (4) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த முதல் விலக்கு நிபந்தனையின்படி. மாஜிஸ்ட்ரேட் தீர்மானித்தால், அவர்-கிரமமாய் வியாஜ்ஜியம் நடத்தி அதிலிருந்து நீக்கப்படுகிறவரையில் அது தன் ஸ்வாதீனத்திலிருக்க அப்படிப்பட்டவன் பாத்தியஸ்தனென்று உத்தரவு பிறப்பிக்கவேண்டியதுமல்லாமல், அப்படி ஸ்வாதீனத்திலிருந்து நீக்கப்படுகிற வரையில் ஸ்வாதினத்தைக்குறித்து எவ்வளவேனும் கலகஞ்செய்யக்கூடாதென்று அந்த உத்தரவில் காணவும்வேண்டும். மேலும், (4) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த முதல் விலக்கு நிபந்தனையின்படி அவர் நடவடிக்கை நடத்தும்போது, அவர்-பலாத்காரமாயும் அக்கிரமமாயும் ஸ்வாதீனத்தினின்றும் நீக்கப்பட்டிருக்கும் நபருக்கு மறுபடியும் ஸ்வாதினம் கொடுக்கலாம்.

(7) அப்படிப்பட்ட யாதொரு நடவடிக்கைக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு கட்சிக்காரர் இறந்துபோனால், மாஜிஸ்ட்ரேட்டானவர் இறந்துபோன அந்தக் கட்சிக்காரரின் சட்டசம்மதமான பிரதிநிதியை மேற்படி நடவடிக்கைக்கு ஒரு கட்சிக்காரராய்ச் சேர்க்கும்படிச்செய்யலாம்; அதன்மேல், அவர் மேற்படி விசாரணையை நடத்திக் கொண்டுபோகவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட நடவடிக்கையின் காரியத்துக்காக, இறந்துபோன யாதொரு கக்ஷிக்காரரின் சட்டசம்மதமான பிரதிநிதி இன்னாரென்பதைக் குறித்து யாதொரு விவாதம் உண்

டானல், இறந்துபோன கக்ஷிக்காரரின் பிரதிநிதிகளாகச் சுதந்தரம் கொண்டாடும் சகல நபர்களையும் அதற்குக் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கவேண்டும்.

(8) தமக்குமுன் விசாரணையாய்க்கொண்டிருக்கும் இந்தப்பிரிவின்படிக்கான யாதொரு நடவடிக்கையிலே விவாதப்பொருளாயிருக்கிற யாதொரு சொத்தைச்சேர்ந்த ஏதாவது மாசூலாகிலும் இதர விலை பொருளாகிலும் சீக்கிரத்திலும் இயற்கையாகவும் அழிந்துபோகத் தக்கதென்று மாஜிஸ்ட்ரேட் அபிப்பிராயப்பட்டால், அவர் அந்த சொத்தைத் தக்கபடி பந்தோபஸ்தில் வைத்திருப்பதற்காவது விற்பதற்காவது உத்தரவுசெய்யலாம்; அந்த விசாரணை முடிவாவதன்மேல், அவர் அந்த சொத்தையாகிலும் அதன் விற்றுமுதலையாகிலும் ஒருவகை செய்வதைக்குறித்து தமக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி உத்தரவு செய்யவேண்டும்.

(9) இந்தப் பிரிவின்படிக்கான நடவடிக்கைகளில் எந்த தசையிலாவது கட்சிக்காரர்கள் மனுசெய்துகொள்வதன்மேல், மாஜிஸ்ட்ரேட்டானவர்-தமக்கு யுக்தமாகத் தோற்றினால், யாதொரு சாட்சியை ஆஜராகும்படிக்கும், யாதொரு தஸ்தவேஜை அல்லது வஸ்துவை ஆஜர்ப்படுத்தும்படிக்கும் சம்மன் பிறப்பிக்கலாம்.

(10) இந்தப் பிரிவிலுள்ளதெவுதும் 107-வது பிரிவின்படி மாஜிஸ்ட்ரேட்டுக்குள்ள அதிகாரங்களைக் குறைப்பதாக எண்ணக்கூடாது.

விவாதப் பொருளை ஜப்தியில் வைக்க அதிகாரம்.

146. (1) விவாதப்பொருள் அந்தக்காலத்தில் அப்படிப்பட்டவர்களில் எவனுடைய ஸ்வாதீனத்திலுமிருந்ததில்லையென்று அந்த மாஜிஸ்ட்ரேட் தீர்மானித்தாலும், அந்த விவாதப்பொருள் அப்போது அவர்களில் இன்னானுடைய ஸ்வாதீனத்திலிருந்ததென்று திருப்திகரமாய்த் தாம் தெரிந்துகொள்ளக் கூடாவிட்டாலும் அவர் அதைக்குறித்துக் கட்சிக்காரர்களுக் குண்டாயிருக்கிற பாத்தியதையையாவது இன்னான் அதை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கப் பாத்தியஸ்தனென்றாவது தகுந்த கோர்ட்டார் தீர்மானிக்கிற வரையில் அந்த விவாதப்பொருளை ஜப்தியில் வைக்கலாம்.

ஆனல், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது விவாதப்பொருளை ஜப்தியில்வைத்த மாஜிஸ்ட்ரேட் இனி அந்த விவாதப்பொருளில் அமரிக்கையை கெடுக்கும்படியான யாதொரு கெடுதியும் நேரிடாதென்று

தெரிந்து திருப்தியடைந்தால் ஐப்தியை எப்போதாவது நீக்கிவிட லாம்.

(2) விவாதப் பொருளை மாஜிஸ்ட்ரேட்டானவர் ஐப்திசெய்யும் பட்சத்தில் அவர்-தகுதியென்று நினைத்தால் அந்த சொத்திற்கு யாதொரு ஸிவில் கோர்ட்டாரால் ரிஸீவர் நியமிக்கப்பட்டிராமலிருந்தால், அதற்கு ஒரு ரிஸீவரை நியமிக்கலாம்; அப்படிப்பட்ட ரிஸீவர், மாஜிஸ்ட்ரேட்டின் அதிகாரத்துக் குட்பட்டு, ஸிவில் ப்ரொஸீஜர் கோடின்படி நியமிக்கப்பட்ட ரிஸீவருக்குள்ள எல்லா அதிகாரங்களையும் உடைத்தாயிருப்பார்.

ஆனால், விவாதத்திலுள்ள சொத்துக்கு பின்னல் யாதொரு ஸிவில் கோர்ட்டாரால் ஒரு ரிஸீவர் நியமிக்கப்படும் பக்ஷத்தில், அவருக்கு மாஜிஸ்ட்ரேட்டினால் நியமிக்கப்பட்ட ரிஸீவரானவர் மேற்படி சொத்தை சுவாதினம் செய்யவேண்டும்; அதன்மேல் பிந்திய ரிஸீவரை வேலையினின்றும் விடுதலைசெய்யவேண்டும்.

அசையாப்பொருள் முதலியவைகளை உபயோகிக்கும் பாத்தியதைகளைக் குறித்த விவாதங்கள்.

147. (1) தம்முடைய அதிகாரப் பிரதேச எல்லைகளுக்குள்ளாக, 145 (2)-வது பிரிவில் விவரித்தபடி யாதொரு நிலம் அல்லது நீரை உபயோகித்துக்கொள்வதற்கு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லிக் கொள்ளப்படும் யாதொரு பாத்தியதையாவது (வசதியுரிமையாக சுதந்தரித்துக் கேட்கப்பட்டாலுஞ்சரி மற்றப்படி சுதந்தரித்துக் கேட்கப்பட்டாலுஞ்சரி) அப்படிப்பட்ட பாத்தியதையைக்குறித்து ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்கும்போலிருக்கிற விவாதமானது உண்டாயிருக்கிறதென்று போலீஸ் ரிபோர்ட் மூலமாகவோ வேறு அறிக்கை மூலமாகவோ யாதொரு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும், ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும், முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும் திருப்திகரமாய்த் தெரியவந்தால், அவர் தான் திருப்தியடைவதற்குரிய காரணங்களை எழுதி, அந்த விவாதத்தில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களை மாஜிஸ்ட்ரேட் நிர்ணயிக்கிற காலத்தில் கோர்ட்டிலே நேரிலாகிலும் அல்லது ப்ளீடர் மூலமாயாகிலும் ஆஜராகும்படிக்கும், தங்களுக்கு உண்டான தனித் தனிப்பாத்தியங்களைக்குறித்து எழுத்துமூலமான வாக்குமூலம் கொடுக்கும்படிக்கும் எழுத்து-மூலமான உத்திரவுசெய்யலாம்; அதற்கு பிறகு அவர் அந்தச் சங்கதியைக்குறித்து 145-வது பிரிவில் நிபந்தனை கண்டி

ருக்கிறபடி அந்த விசாரணைக்கு மேற்படி பிரிவின் நிபந்தனைகள் எவ்வளவு பொருத்தமாயிருக்கிறதோ அவற்றை விசாரணை செய்யலாம்.

(2) அப்படிப்பட்ட பாத்தியதை இருப்பதாக அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோற்றினால், அவர் அந்த பாத்தியதையைச் செலுத்தும் விஷயத்தில் எவரும் தலையிடக்கூடாதென்று தடுப்பதற்காக உத்தரவு செய்யலாம்.

ஆனால், அந்த பாத்தியதையானது வருஷம் முழுவதும் செலுத்தப்படத்தக்கதாயிருந்தால், விசாரணை ஆரம்பிக்கப்பட்டதற்கு அடுத்து முற்பட்ட மூன்று மாதத்துக்குள்ளாக அந்த பாத்தியதை செலுத்தப்பட்டிருந்தாலன்றி மற்றப்படிக்காவது குறித்த சில ருதுக்களில் மாத்திரமாகிலும் குறித்த சில சமயங்களில் மாத்திரமாகிலும் அந்த பாத்தியதை செலுத்தப்படத்தக்கதாயிருந்தால், அப்படி விசாரணை ஆரம்பித்ததற்குமுன் அப்படிப்பட்ட ருதுக்களில் கடைசி ருதுவிலாயினும் அப்படிப்பட்ட சமயங்களில் கடைசி சமயத்திலாயினும் அந்த பாத்தியதை செலுத்தப்பட்டிருந்தாலன்றி மற்றப்படிக்காவது, அப்படிப்பட்ட உத்தரவு எதுவும் செய்யக்கூடாது.

(3) அப்படிப்பட்ட பாத்தியதை இல்லையென்று அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோற்றினால், இருப்பதாகச் சொல்லிக்கொள்ளப்படும் அந்த பாத்தியதையை எவரும் செலுத்தக்கூடாதென்று தடுப்பதற்காக அவர் ஒரு உத்தரவு செய்யலாம்.

(4) இந்தப் பிரிவின்படி செய்யப்படும் ஒரு உத்தரவானது தகுந்த அதிகாரமுள்ள யாதொரு ஸிவில் கோர்ட்டாரால் பின்னிட்டு செய்யப்படுகிற யாதொரு தீர்மானத்துக்குட்பட்டதாகும்.

பிரதேச விசாரணை.

148. (1) இந்த அத்தியாயத்திலுள்ள காரியங்களுக்காகப் பிரதேச விசாரணை அவசியமாயிருக்கும்போதெல்லாம், அந்த விசாரணை நடத்தும்படி யாதொரு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாவது தமக்குக் கீழ்ப்பட்ட யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு உத்தரவு செய்யலாம்; மேலும், அவர் நடந்துகொள்ளுவதற்காக, அவசியமாகத் தோற்றுகிற கற்பனைகளை எழுதி அவருக்குக் கொடுக்கலாம்; அன்றியும், விசாரணைக்கு அவசியமாய்ப் பிடிக்கிற செலவு முழுமையையுமாவது அதில் எவ்வளவையாவது இன்னார் செலுத்த வேண்டுமென்று நிர்ணயிக்கலாம்.

(2) விசாரணை நடத்தும்படி உத்தரவுசெய்யப்பட்டவர் எழுதுகிற ரிபோர்ட்டை அந்த விஷயத்தில் சாட்சியமாகப் படிக்கலாம்.

செலவைக் குறித்து உத்தரவு.

(3) இந்த அத்தியாயத்தின்படி நடத்தப்படுகிற யாதொரு நடவடிக்கையைச்சேர்ந்த எந்த கட்சிக்காரனுக்காகிலும் ஏதாகிலும் செலவு நேரிட்டிருந்தால், 145, 146 அல்லது 147-வது பிரிவின்படி தீர்மானஞ் செய்கிற மாஜிஸ்ட்ரேட்டானவர்-அந்த நடவடிக்கையைச் சேர்ந்த அப்படிப்பட்ட கட்சிக்காரனாவது வேறே யாதொரு கட்சிக்காரனாவது, அந்த செலவு முழுமையையுமாகிலும் அதில் ஒரு பாகத்தையாகிலும் இன்ன விதப்படியாகிலும் இன்னான் அதைச் செலுத்தவேண்டுமென்று உத்தரவுசெய்யலாம். அப்படிப்பட்ட செலவுகளில் சாட்சிகள் விஷயமாயும் ப்ளீடர்களுடைய கட்டண விஷயமாயும் செலவழிக்கப்பட்ட எந்த தொகைகள் கோர்ட்டார் நியாயமானவையென்று நினைக்கக்கூடுமோ அந்த தொகைகளும் அடங்கலாம்.

13-ம் அத்தியாயம்.

குற்றங்களைச் செய்யவொட்டாமல் தடுப்பதற்குப் போலீஸார் பிரவேசிப்பது.

பிடிக்கக் கூடிய குற்றங்களைப் போலீஸார் தடுப்பது.

149. பிடிக்கக்கூடிய யாதொரு குற்றத்தைச் செய்யவொட்டாமல் தடுக்கும்பொருட்டுப் பிரதி போலீஸ் உத்தியோகஸ்தனும் பிரவேசிக்கலாம்; அப்படிப்பட்ட குற்றத்தைச் செய்வதைத் தடுப்பதற்குத் தன்னாலான முயற்சியும் செய்யவேண்டும்.

அப்படிப்பட்ட குற்றங்கள் செய்ய எத்தனிக்கப்படுவதை அறிக்கைசெய்வது.

150. பிரதி போலீஸ் உத்தியோகஸ்தனும் பிடிக்கக்கூடிய குற்றமெதுவாவது செய்ய எத்தனிக்கப்படுவதைக் குறித்துத் தனக்குத்தெரியவருகிற சங்கதியைத் தான் எவனுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறானோ அந்த போலீஸ் உத்தியோகஸ்தனுக்கும், அப்படிப்பட்ட யாதொரு குற்றஞ்செய்வதைத் தடுப்பதாவது விசாரிப்பதாவது எவனுடைய கடமையாயிருக்கிறதோ அந்த வேறே யாதொரு உத்தியோகஸ்தனுக்கும் அறிக்கை பண்ணவேண்டும்.

அப்படிப்பட்ட குற்றங்களைத் தடுக்கும்பொருட்டு ஆளைப் பிடிப்பது.

151. பிடிக்கக்கூடிய குற்றமெதுவாவது செய்ய எத்தனிக்கப்படுகிறதென்று தெரிந்துகொள்ளுகிற போலீஸ் உத்தியோகஸ்தனுன்வன்-அந்த குற்றத்தை நடக்கவொட்டாமல் வேறே வகையாய்த் தடுப்பது கூடாமையானதென்று தனக்குத் தோற்றினல் அப்படிச் செய்ய எத்தனப்படுகிறவனை மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவில்லாமலும் வாரண்டில்லாமலும் பிடிக்கலாம்.

பொதுவானசொத்துக்குக் கெடுதி செய்யவொட்டாமல் தடுப்பது.

152. யாதொரு பொதுவான ஸ்தாவர ஜங்கம சொத்துக்குக் கெடுதிசெய்ய எத்தனப்படுவதைப் போலீஸ் உத்தியோகஸ்தன் பார்த்தால் அதைத் தடுப்பதற்கும், யாதொரு பொதுவான நில அடையாளத்தையாவது போயாக்கட்டையையாவது கப்பல் செலுத்துவதற்கு உபயோகமான வேறே அடையாளத்தையாவது எடுத்துவிடவொட்டாமலும் அவைகளுக்குக் கெடுதிசெய்யவொட்டாமலும் தடுப்பதற்கும், வேருெருவருடைய உத்தரவில்லாமல் அவன்தானே பிரவேசிக்கலாம்.

குண்டு-படி முதலிய அளவைகளைப் பார்வையிடுவது.

153. (1) யாதொரு போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுனவன் அந்த ஸ்டேஷன் சரஹத்துக்குள் எந்த இடத்திலாகிலும் நிறுப்பதற்காகக் கள்ளக் குண்டுகளாவது அளப்பதற்காகக் கள்ள படி மரக்கால் முதலியவைகளாவது நிறுப்பதற்காகக் கள்ளக்கருவிகளாவது இருக்கிறதென்று நம்புவதற்குத் தனக்கு ஹேதுவிருந்தால், அவ்விடத்திலே வைக்கப்பட்டாகிலும் உபயோகிக்கப்பட்டாகிலு மிருக்கிற நிறுப்பதற்கான குண்டுகளையாவது அளப்பதற்கான படி முதலானவைகளையாவது நிறுப்பதற்கான கருவிகளையாவது பார்வையிடும் பொருட்டாகிலும் சோதனைபோடும் பொருட்டாகிலும் அப்படிப்பட்ட யாதோரிடத்தில் வாரண்டில்லாமல் நுழையலாம்.

(2) அந்த இடத்திலே கள்ளக்குண்டு-படி அல்லது நிறுப்பதற்கான கருவிகளை அவன் கண்டுபிடித்தால், அவன் அவைகளைக் கைப்பற்றலாம்; அப்படிச் செய்தவுடனே தகுந்த அதிகாரமுடைய மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் அப்படி கைப்பற்றினதைக்குறித்து அறிக்கை செய்யவேண்டும்.

5-ம் பாகம்.

போலீஸாருக்குச் சங்கதிதெரிவிப்பதும் முதல்விசாரணை செய்வதற்கு அவர்களுக்குண்டான அதிகாரமும்.

14-ம் அத்தியாயம்.

பிடிக்கக் கூடிய கேஸுகளில் சங்கதிதெரிவிப்பது.

154. பிடிக்கக்கூடிய யாதொரு குற்றம் செய்யப்பட்டதைக் குறித்துப் போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனிடத்திலே வாய்மொழியாய்ச் சங்கதி தெரிவிக்கப்பட்டால், அப்படிப்பட்ட பிரதிசங்கதியையும் அந்த உத்தியோகஸ்தனாவது அவன் சொல்லுகிறபடியாவது எழுதவேண்டியதுமல்லாமல், அதைச் சங்கதி தெரிவித்தவனுக்குப் படித்துக்காட்டவும்வேண்டும்; அப்படிப்பட்ட பிரதிசங்கதியும் எழுத்துமூலமாய்த் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் மேற்சொல்லியபடி எழுதப்பட்டிருந்தாலும், அதைத் தெரிவிக்கிறவன் அதில் கையெழுத்துப் பண்ணவேண்டும்; அதன் சாராம்சத்தை-இது விஷயத்தில் அவ்விடத்திய கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படுகிற நமூனாப் பிரகாரம் அந்த உத்தியோகஸ்தன் வைக்கிற புஸ்தகத்தில், எழுதிக் கொள்ளவேண்டும்.

பிடிக்கக் கூடாத கேஸுகளில் சங்கதி தெரிவிப்பது.

155. (1) பிடிக்கக்கூடாத குற்றமானது போலீஸ் ஸ்டேஷன் சரஹத்துக்குள் செய்யப்பட்டதைக்குறித்து அந்த ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனிடத்திலே சங்கதி தெரிவிக்கப்பட்டால், அந்த உத்தியோகஸ்தன் அந்த சங்கதியின் சாராம்சத்தைமேற்சொல்லியபடி வைக்கப்படுகிற புஸ்தகத்தில் எழுதிக்கொண்டு அப்படி சங்கதி தெரிவித்தவனை மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்குப் போகச்சொல்லவேண்டும்.

பிடிக்கக் கூடாத கேஸுகளை முதல் விசாரணை செய்வது.

(2) பிடிக்கக்கூடாத யாதொரு கேஸைப் பரிசிலனை செய்யவாவது பரிசிலனைக்குக் கம்மிட் பண்ணவாவது அதிகாரமுடைய முதல்வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவில்லாமலாகிலும் யாதொரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவில்லாமலாகிலும், எந்த போலீஸ் உத்தியோகஸ்தனும் அப்படிப்பட்ட கேஸை முதல் விசாரணை செய்யலாகாது.

(3) அப்படிப்பட்ட உத்தரவு பெற்றுக்கொள்வதன்மேல் யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனானவன்- (வாரண்டில்லாமல் ஆளேப்பிடிக்கும்படியான அதிகாரந் தவிர) பிடிக்கக்கூடிய கேஸில் போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தன் செலுத்தும்படியான அதிகாரங்களை அந்த முதல்விசாரணையைக் குறித்துச் செலுத்தலாம்.

பிடிக்கக் கூடிய கேஸுகளை முதல் விசாரணை செய்வது.

156. (1) போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனானவன்-எப்படிப்பட்ட கேஸை அந்த ஸ்டேஷன் சரஹத்துக்குள்ளடங்கிய பிரதேச விஸ்தீரணத்தில் அதிகாரமுடைத்தாயிருக்கிற கோர்ட்டார் விசாரணையாவது பரிசீலனையாவது செய்யும் இடத்தைக் குறித்து 15-ம் அத்தியாயத்தில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படி விசாரணை செய்யவாகிலும் பரிசீலனை பண்ணவாகிலும் அதிகாரமுடையவர்களாவார்களோ அப்படிப்பட்ட பிடிக்கக்கூடிய யாதொரு கேஸை மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவில்லாமல் முதல்விசாரணை செய்யலாம்.

(2) அப்படிப்பட்ட யாதொரு கேஸில் போலீஸ் உத்தியோகஸ்தன் நடத்துகிற நடவடிக்கையானது-அந்தக் கேஸை விசாரணை செய்ய இந்தப் பிரிவின்படி அந்த உத்தியோகஸ்தனுக்கு அதிகாரமுண்டாயிருக்கவில்லை யென்கிற ஹேதுவின்மேல் எந்த தசையிலும் ஆட்சேபிக்கப்படாது.

(3) 190-வது பிரிவின்படி அதிகாரங் கொடுக்கப் பெற்றுள்ள எந்த மாஜிஸ்ட்ரேட்டாவது மேலே சொல்லியிருக்கிற பிரகாரம் முதல் விசாரணை செய்யும்படி உத்தரவு பண்ணலாம்.

பிடிக்கக் கூடிய குற்றம் நடந்ததாக அனுமான முண்டானல் நடவடிக்கை.

157. (1) போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தன் 156-வது பிரிவின்படி முதல்விசாரணை செய்ய அதிகாரமுடைத்தாயிருக்கிற யாதொரு குற்றஞ் செய்யப்பட்டதென்று அறிக்கையின் மேலாவது வேறே விதமாயாவது அவன் அனுமானிப்பதற்கு ஹேதுவிருந்தால், அவன் போலீஸ் ரிபோர்ட்டின்மேல் அந்த குற்றத்தை விசாரணைசெய்ய அதிகாரமுடைய மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதைக்குறித்து உடனே ரிபோர்ட் அனுப்பிவிட்டு, அந்த குற்றத்தைச்சேர்ந்த சங்கதிகளையும் வயணங்களையும் முதல் விசாரணை செய்யவும், அவசியமானல், நேரஸ்தன் இன்னு

னென்று தெரிந்துகொண்டு அவனைப் பிடிப்பதற்காக ஏற்பாடுகள் செய்யவும், அவ்விடத்திற்கு நேராய்த்தானாவது போகவேண்டும், அல்லது தனக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களில் இது விஷயமாய் பிரதேச கவர்ன்மெண்டார் பொதுவான அல்லது தனியான உத்திரவினால் நிர்ணயிக்கிற அந்தஸ்துக்குக் கீழ்ப்பட்டிராத அந்தஸ்துள்ள ஒருவனை அனுப்பவாவதுவேண்டும்.

ஆனால் :—

இன்னபடிக்கிருந்தால் இடத்திற்குப் போய் முதல் விசாரணை செய்ய வேண்டியதில்லை.

(a) இன்னான் அப்படிப்பட்ட குற்றஞ் செய்தானென்று பெயரைச்சொல்லி அவன்மேல் சங்கதி தெரிவிக்கப்பட்டால், அந்த குற்றம் பலமானதாயிராத பட்சத்தில், போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தன் அவ்விடத்திலே முதல் விசாரணை செய்வதற்கு நேராய்ப் போகவேண்டியதுமில்லை; தனக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தனை அனுப்பவேண்டியதுமில்லை;

தலைமைப் போலீஸ் உத்தியோகஸ்தன் முதல் விசாரணை செய்வதற்குத் தகுந்த ஹேது காணாவிட்டால் இன்னது செய்வது.

(b) முதல் விசாரணை செய்யத் தொடங்குவதற்குப் போதுமான ஹேதுவில்லையென்று போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்குத் தோற்றினால், அவன் அந்த குற்றத்தைக் குறித்து முதல் விசாரணை செய்யவேண்டியதில்லை.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த விலக்கான நிபந்தனையின் (a), (b) குறிப்பிட்ட பகுதிகளில் சொல்லியிருக்கிற விஷயங்கள் ஒவ்வொன்றிலும், அந்த உட்பிரிவில் உத்தரவு செய்கிறபடி பூர்த்தியாய் நடந்துகொள்ளாமைக்காகத் தனக்குண்டான ஹேதுக்களைப் போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தன் மேற்கண்ட தன்னுடைய ரிபோர்ட்டில் எழுதவேண்டும். மேலும், (b) குறிப்பிட்ட பகுதியில் சொல்லியிருக்கிற விஷயத்திலே, அந்த உத்தியோகஸ்தன்-சங்கதி தெரிவிப்பவனுக்கு, அந்தக் கேஸில் தான் முதல் விசாரணை செய்யப்போவதில்லை அல்லது செய்விக்கப்போவதில்லையென்னும் சங்கதியை பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய விதமாய் உடனே தெரியப்படுத்தவும் வேண்டும்.

158. (1) 157-வது பிரிவின்படி மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பப்படுகிற பிரதி ரிபோர்ட்டையும், அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் பொதுவான அல்லது பிரத்

157-வது பிரிவின்படி ரிபோர்ட்டுக

ளை இன்னபடி அனுப்புவது. நியோகமான உத்தரவினாலே அந்த விஷயத்தில் நியமிக்கிற மேலான போலீஸ் உத்தியோகஸ்தன் மூலமாய் அனுப்பவேண்டுமென்று அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் உத்தரவு செய்தால் அந்தப்பிரகாரமே அனுப்பவேண்டும்.

(2) அந்த மேலான உத்தியோகஸ்தனானவன் தனக்கு யுக்தமாகத் தோற்றுகிற உத்தரவுகளைப் போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்குக் கொடுக்கலாம்; மேலும், அப்படிப்பட்ட உத்தரவுகளை அந்த ரிபோர்ட்டின்மேல் எழுதின பின்பு, அதை மாஜிஸ்ட்ரேட்டுக்கு ஆலசியமில்லாமல் அனுப்பவேண்டும்.

முதல் விசாரணை யாவது பிரதம விசாரணையாவது செய்ய அதிகாரம்.

159. அப்படிப்பட்ட ரிபோர்ட் வந்ததன்மேல் அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் முதல்விசாரணை செய்யும்படி உத்தரவு பண்ணலாம்; அல்லது தமக்கு யுக்தமாகத் தோற்றினால், இந்த சட்டத்திற் சொல்லியிருக்கிற விதமாய் அந்த கேஸைக்குறித்துப் பிரதம விசாரணை நடத்தவாவது, மற்றப்படி அதைப் பைசல் செய்யவாவது உடனே ஆரம்பிக்கலாம்; அல்லது தமக்குக் கீழ்ப்பட்ட யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு அவ்வாறு செய்யும்படி உத்தரவு பண்ணலாம்.

சாட்சிகளை ஹாஜராகும்படி உத்தரவுசெய்யப் போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு அதிகாரம்.

160. இந்த அத்தியாயத்தின்படி முதல்விசாரணை செய்கிற யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் - அந்த கேஸைச் சேர்ந்த சங்கதிகள் எவனுக்குத் தெரிந்திருக்கிறதென்று அறிக்கையினாலாவது வேறே விதத்தினாலாவது தோற்றுகிறதோ அப்படிப்பட்டவன் தன்னுடைய ஸ்டேஷன் அல்லது அடுத்த யாதொரு ஸ்டேஷன் சரஹத்துக்குள்ளிருப்பானாகில், அவனுக்கு எழுத்து மூலமாய் உத்தரவு அனுப்பித் தனக்கு முன் ஹாஜராகும்படி கட்டளையிடலாம்; அப்படிப்பட்டவன் அந்த உத்தரவின்படி ஹாஜராகவேண்டும்.

போலீஸார் சாட்சிகளை விமரிசை செய்வது.

161. (1) இந்த அத்தியாயத்தின்படி முதல் விசாரணை செய்கிற யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனாவது, அப்படிப்பட்ட உத்தியோகஸ்தனுடைய வேண்டுகோளின்மேல் பிரவர்த்திப்பவனாய், பிரதேச

கவர்ன்மெண்டாரால் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்திரவினால் நிர்ணயிக்கப்படக்கூடிய அந்தஸ்துக்குக் கீழ்ப்பட்டிராத யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனாவது இது விஷயத்திற்காக அந்த கேஸைச்சேர்ந்த சங்கதிகளும் வயனங்களும் எவனுக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கப்படுகிறதோ அவனை வாய்மொழியாக விமரிசை செய்யலாம்.

(2) அப்படிப்பட்டவன் எந்த சவால்களுக்கு ஜவாப்சொன்னால் க்ரிமினல் சம்பந்தமான குற்றஞ் சாட்டப்படுவதற்காவது தண்டனைக்காவது பறிமுதலுக்காவது தான் உள்ளாகக்கூடுமோ அப்படிப்பட்ட சவால்கள் தவிர, அந்த உத்தியோகஸ்தன் மேற்படி கேஸைக் குறித்துத் தன்னைக்கேட்கிற மற்ற சவால்களுக்கெல்லாம் ஜவாப் சொல்லவேண்டியவனாவான்.

போலீஸாருக்குச் சொல்லப்பட்ட சங்கதிகளுக்கு கையெழுத்து பண்ணக் கூடாது; அப்படிப்பட்ட சங்கதிகளை சாட்சியமாக உபயோகிப்பது.

162. (1) இந்த அத்தியாயத்தின்படி முதல் விசாரணை நடத்துகையில் போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு யாதொரு நபரால் சொல்லப்பட்ட எந்த சங்கதியும் எழுதிவைக்கப்பட்டால், அந்த சங்கதியைச் சொல்லுகிறவன் அதில் கையெழுத்துபண்ணவுங்கூடாது; அப்படிப்பட்ட யாதொரு சங்கதியையாவது ரெகார்டையாவது அதை ஒரு போலீஸ் டைரி (தினசரிக் குறிப்பு) புஸ்தகத்திலாயினுஞ்சரி மற்றப்படியாயினுஞ்சரி எழுதிவைத்திருந்தால் அப்படிப்பட்ட யாதொரு ரெகார்டையாவது அப்படிப்பட்ட சங்கதி அல்லது ரெகார்டின் யாதொரு பாகத்தையாவது அந்த சங்கதி சொல்லப்பட்ட காலத்தில் எதைக்குறித்து முதல் விசாரணை நடந்துகொண்டிருந்ததோ அந்த குற்றத்தின் விஷயமாய் நடக்கும் யாதொரு விசாரணை அல்லது பரிசிலனையில் (இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி) எந்தக் காரியத்துக்காகவும் உபயோகிக்கவுங்கூடாது:

ஆனால், யார் சொன்ன சங்கதி மேலே சொல்லியபடி எழுதிவைக்கப்பட்டிருக்கிறதோ அந்த சாட்சி அப்படிப்பட்ட விசாரணை அல்லது பரிசிலனையிலே பிராது தரப்பில் அழைக்கப்படும்பொழுது, கோர்ட்டார் குற்றஞ்சாட்டப்பட்டவனுடைய வேண்டுகோளின்மேல் அப்படி எழுதிவைத்திருப்பதைப் பார்வையிடவேண்டும்; அதன்மேல் கோர்ட்டார்-அப்படிப்பட்ட சங்கதியின் யாதொரு பாகமானது கிரமமாய் ருஜூசெய்யப்பட்டால் அதை, 1872-ம் வருஷத்திய இந்துதேசத்துச்

சாட்சியாக்டின் 145-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிற விதமாய் அப்படிப்பட்ட சாட்சி சொல்வதை மறுப்பதற்காக உபயோகிக்கும் பொருட்டு, அதன் நகலொன்றை குற்றஞ்சாட்டப்பட்டவனுக்குக் கொடுக்கும்படி உத்தரவு செய்யலாம். அப்படிப்பட்ட சங்கதியின் யாதொரு பாகமானது அவ்விதமாய் உபயோகிக்கப்பட்டால், அதன் யாதொரு பாகத்தை அந்த சாட்சியை மறுவிமரிசை செய்வதிலும் உபயோகிக்கலாம்; ஆனால், அந்த சாட்சியின் எதிர் விமரிசையில் உதகரிக்கப்பட்ட யாதொரு விஷயத்தை விவரிக்கும் காரியத்திற்காக மாத்திரமே அப்படி உபயோகிக்கலாம்.

ஆனால், மேலும் அப்படிப்பட்ட சங்கதியின் யாதொரு பாகம், விசாரணை அல்லது பரிசீலனையின் முக்கியாம்சத்துக்கு சம்பந்தப்படாததாய் இருந்தாலும், அல்லது அதை குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு நியாயப்படி தெரிவிக்கவேண்டுவது முக்கியமல்ல என்பதாலும், பொது நன்மைக்கு தகாததாயிருப்பதாகவும் அந்தக் கோர்ட்டார்-அபிப்பிராயப்பட்டால், அந்த அபிப்பிராயத்தை எழுதி (அதற்குறிய காரணமில்லாமலே) அப்படிப்பட்ட பாகத்தை குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு கொடுக்கப்படுகிற சாட்சியத்தின் நகலிலிருந்து எடுத்துவிடலாம்.

(2) இந்தப் பிரிவிலுள்ள தெதுவும் 1872-ம் ஞூத்திய இந்து தேசத்துச் சாட்சி ஆக்ட் 32-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின் நிபந்தனைகளில் அடங்குகிற யாதொரு வாக்குமூலத்திற்குப் பிரயோகப்படுவதாகப் எண்ணப்படமாட்டாது.

சங்கதி தெரிவிக்கும்படி உட்படுத்தக்கூடாது.

163. (1) போலீஸ் உத்தியோகஸ்தனாவது அதிகார முடைத்தாயிருக்கிற மற்றவனாவது 1872-ம்ஞூத்திய இந்து தேசத்துச் சாட்சி ஆக்ட் 24-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி உட்படுத்தவுங்கூடாது, பொருட்டவுங்கூடாது, ஆசைகாட்டவுங்கூடாது, இப்படி செய்விக்கவுங்கூடாது.

(2) ஆனால், இந்த அத்தியாயத்தின்படி முதல் விசாரணை நடத்துகையில், எவனாவது தன் இஷ்டமாய் எதையாகிலும் வெளிப்படுத்தக் கருத்துக்கொண்டால் அதை வெளிப்படுத்தவொட்டாமல் அவனைப் போலீஸ் உத்தியோகஸ்தனாவது மற்றவனாவது எச்சரிக்கையினாலாகிலும் வேறெவ்விதத்தினாலாகிலும் தடுக்கக்கூடாது.

வாக்கு மூலங்களையும் ஒப்புக்கொள்வதையும் ரிகார்ட் பண்ண அதிகாரம்.

164. (1) போலீஸ் உத்தியோகஸ்தனல்லாத ஒவ்வொரு ப்ரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டும் முதல் வகுப்பு இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளும் இது விஷயத்திற்காக பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்து, இந்த அத்தியாயத்தின்படி முதல் விசாரணை செய்யப்படுகையிலாவது, அதற்குப் பின்பு விசாரணை அல்லது பரிசீலனை ஆரம்பமாவதற்கு முன்னமே எப்போதாவது, தம்மிடத்தில் சொல்லுகிற வாக்குமூலத்தையாகிலும் ஒப்புக்கொள்வதையாகிலும் ரிகார்ட் பண்ணலாம்.

(2) சாட்சியத்தை ரிகார்ட் பண்ணுவதைக்குறித்து இதில் பின்னால் சொல்லியிருக்கிற எந்த விதமாய் ரிகார்ட் பண்ணினால் அந்த சங்கதியைப்பற்றின விஷயங்களுக்கு மிகவும் தகுந்ததென்று அவருக்குத் தோற்றுகிறதோ அந்த விதமாய் அந்த வாக்குமூலங்களை ரிகார்ட் பண்ணவேண்டும். அப்படி ஒப்புக்கொள்வதை 364-வது பிரிவில் சொல்லியிருக்கிற விதமாய் ரிகார்ட்செய்து கையெழுத்துப் பண்ணவேண்டும்; அதற்குப் பின்பு, அப்படிப்பட்ட வாக்குமூலங்களையாவது ஒப்புக்கொள்வதையாவது, அந்தக் கேஸை யார் விசாரணைசெய்யப் போகிறாரோ அல்லது பரிசீலனை செய்யப்போகிறாரோ அந்த மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு அனுப்பவேண்டும்.

(3) அப்படி ஒப்புக்கொண்டவனை விசாரணை செய்வதன்மேல், அந்த மாஜிஸ்ட்ரேட், அவன் ஒப்புக்கொண்டதை எழுதி வைப்பதற்கு முன், அதை ஒப்புக்கொள்ளுகிற நபருக்கு, அவன் அப்படி ஒப்புக்கொள்ள கட்டுப்பட்டிருக்கவில்லையென்றும், அப்படி அவன் ஒப்புக்கொள்ளுகிற விஷயத்திலே, அது அவனுக்கு விரோதமாக சாட்சியத்தில் உபயோகப்படுத்தப்படலாமென்பதையும் . தெரிவிக்கவேண்டும். அவன் தன்னிஷ்டமாய் அப்படி ஒப்புக்கொண்டானென்று நம்புவதற்கு ஹேதுவிருந்தாலொழிய அப்படி ஒப்புக்கொள்வதை எந்த மாஜிஸ்ட்ரேட்டும் ரிகார்ட் பண்ணக்கூடாது; அப்படி ஒப்புக்கொள்வதை அவர் ரிகார்ட் பண்ணினால், அந்த ரிகார்டினடியிலே பின்னால் வருகிற பொருள்படும்படியாக அவர் யாதாஸ்து எழுதவேண்டும்; அதாவது :-

"நான், இன்னானுக்கு (பெயர்) அவன் அதை ஒப்புக்கொள்ள கட்டுப்பட்டிருக்கவில்லையென்றும், அப்படி ஒப்புக்கொண்ட எந்த விஷயமாகிலும் அவனுக்கு விரோதமாக சாட்சியத்தில் உபயோகிக்கப்

படலாமென்பதையும் தெரிவித்தேன். இது வலிய ஒப்புக்கொள்ளப் பட்டதென்று நான் நம்புகிறேன். அது என் முன்பாக என் காதா ரக்கேட்டு எழுதப்பட்டு, இப்படி ஒப்புக்கொண்டவனுக்கு அது படித் துக் காட்டப்பட்டது ; அது சரியானதென்று அவன் ஒத்துக்கொண் டான் ; அவன் சொன்ன சங்கதி இதில் பூர்த்தியாயும் சரியாயும் எழு தியிருக்கிறது."

(கையொப்பம்) எ. பி.,
" மாஜிஸ்ட்ரேட்."

விவரணம் :—ஒப்புக்கொள்வதையாவது வாக்குமூலத்தையாவது வரப்பெற்றுக்கொண்டும் ரிகார்ட் செய்துகொண்டு மிருக்கிற மாஜிஸ்ட் ரேட்டானவர், அந்தக் கேஸை விசாரணைசெய்ய அதிகாரவரம்புடைய மாஜிஸ்ட்ரேட்டாக இருக்கவேண்டிய அவசியமில்லை.

போலீஸ் உத்தி யோகஸ்தன் சோத னைபோடுவது.

165. (1) யாதொரு போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோ கஸ்தனுக்காவது முதல்விசாரணை செய்கிற போ லீஸ் உத்தியோகஸ்தனுக்காவது முதல்விசாரணை செய்ய அதிகாரமிருக்கிற யாதொரு குற்றத்தைக் குறித்து முதல் விசாரணை நடத்தும் காரியங்க ளுக்கு அவசியமானதென்று நம்புவதற்கு நியாயமான காரணங்களி ருக்கிற யாதொரு பொருளானது, அவன் எதன் விசாரணை வகிக்கி முனே அல்லது எதைச் சேர்ந்திருக்கிறுனே அந்தப் போலீஸ் ஸ்டே ஷன் சரஹத்துக்குள்ளிருக்கிற யாதொரு இடத்தில் காணப்படுமென் றும், அவனுடைய அபிப்பிராயப்படி அந்தப் பொருளை அனவசிய மான ஆலசியமில்லாமல் மற்றப்படி அடையமுடியாதென்றும் அவன் நம்புவதற்குள்ள முகாந்தரங்களை எழுதி, அதிலே சாத்தியமான வரை யிலே எதற்காக சோதனைபோடவேண்டுமோ அந்தப் பொருளைக் கண்டு, அந்த உத்தியோகஸ்தன்-அந்த ஸ்டேஷன் சரஹத்துக்குள்ளி யிருக்கிற யாதொரு இடத்திலே அதற்காக சோதனைபோடலாம் அல் லது சோதனை போடுவிக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நடவடிக்கை நடத்துகிற யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் கூடுமானுல் நேரில் சோதனை போடவேண்டும்.

(3) அவன் நேரில் சோதனை போடக்கூடாமையாயிருந்து, சோதனைபோடத் தகுந்த வேறே எவனுவது அப்போது ஹாஜரிலிரா

விட்டால், அப்படிச் செய்வதற்குண்டான காரணங்களை எழுதி அவன் தனக்குக் கீழ்ப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தனைச் சோதனைபோடச் சொல்லலாம்; மேலும், சோதனைபோடவேண்டிய இடத்தையும் சாத்தியமான வரையில் எதற்காக சோதனைபோடவேண்டுமோ அந்த பொருளையும் கண்டு உத்தரவு எழுதி அந்த கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தனுக்குக் கொடுக்கவேண்டும்; அதற்குமேல் அந்தக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தன் அந்த இடத்தில் அப்படிப்பட்ட பொருளைக்குறித்துச் சோதனைபோடலாம்.

(4) சோதனை வாரண்டுகளைக் குறித்து இந்த சட்டத்தில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளும், சோதனைகள் விஷயமாய் 102-வது 103-வது பிரிவுகளில் கண்ட பொதுவான நிபந்தனைகளும், இந்தப் பிரிவின்படி போடப்பட்ட சோதனைக்குக் கூடியமட்டில் பிரயோகப் படவேண்டும்.

(5) (1) அல்லது (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளின்படி செய்யப்பட்ட யாதொரு ரெகார்டின் நகல்களை, அப்படிப்பட்ட குற்றங்களை விசாரிக்க அதிகாரமுடைய சமீபத்திலுள்ள மாஜிஸ்ட்ரேட்டுக்கு உடனே அனுப்பவேண்டும். சோதனை போடப்பட்ட இடத்தின் சொந்தக்காரர் அல்லது ஸ்வாதினத்திலிருப்பவர் அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு மனுசெய்து கொள்ளுவதன்மேல், அவைகளுக்கு நகல் கொடுக்கப் படும்.

ஆனால், மாஜிஸ்ட்ரேட்டுக்கு சில விசேஷ காரணத்தினால் அதை கட்டணமில்லாமலே கொடுப்பது தகுதியாகத்தோற்றினாலொழிய மற்றப்படி, அதற்குறிய கட்டணத்தை அவன் செலுத்தவேண்டும்.

இன்ன விஷயத்திலே போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தன் வேறொருவனைச் சோதனை வாரண்ட் பிறப்பிக்கச் சொல்லலாம்.

166. (1) போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனாவது, முதல் விசாரணை செய்யும் ஸப்-இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்கு குறையாத ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனாவது, தன்னுடைய ஸ்டேஷன் சரஹத்துக்குள் தான் எந்த விஷயத்தில் சோதனைபோடுவிக்கலாமோ அப்படிப்பட்ட யாதொரு விஷயத்தில் அதே டிஸ்ட்ரிக்ட்டிலாவது வேறொரு டிஸ்ட்ரிக்டிலாவதிருக்கிற வேறொரு போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்கு யாதொரு இடத்தில் சோதனை போடுவிக்கும்படி சொல்லலாம்.

(2) அப்படி சொல்லப்படுவதன்மேல், அப்படிப்பட்ட உத்தியோகஸ்தனானவன் 165-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி நடத்த வேண்டியது மல்லாமல் ஏதாவது பொருள் அகப்பட்டால் அதை யார் சொன்னதன்மேல் சோதனைபோடப்பட்டதோ அந்த உத்தியோகஸ்தனுக்கு அனுப்பவும்வேண்டும்.

(3) வேறொரு போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனை (1) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரம் சோதனை போடுவிக்கும்படி சொல்வதனால் நேரிடும் காலதாமதத்தினாலே யாதொரு குற்றம் செய்யப்பட்டதைக் குறித்த சாக்ஷியம் மறைத்துவிடப்படும் அல்லது அழித்துவிடப்படுமென்று நம்புவதற்கு நியாயமிருக்கும்போதெல்லாம் வேறொரு போலீஸ் ஸ்டேஷன் சரஹத்துக்குள்ளிருக்கிற யாதொரு இடமானது தன் சொந்த ஸ்டேஷன் சரஹந்துக்குள்ளிருந்தாற் போலவே 175-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளை அனுசரித்து அந்த இடத்தை, யாதொரு போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனாவது இந்த அத்தியாயத்தின்படி முதல் விசாரணைசெய்யும் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனாவது சோதனைபோடுவது அல்லது சோதனைபோடுவிப்பது சட்டசம்மதமாகும்.

(4) (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி சோதனைபோடும் யாதொரு உத்தியோகஸ்தன் எந்த போலீஸ் ஸ்டேஷன் சரஹத்துக்குள் அந்த இடம் இருக்கிறதோ அந்த போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்கு அந்த சோதனையைக் குறித்து உடனே நோடீஸ் அனுப்பவேண்டியதுமல்லாமல், 103-வது பிரிவின்படி தயார்செய்யப்பட்ட ஜாபிதா ஏதாகிலுமிருந்தால் அந்த ஜாபிதாவின் நகல் ஒன்றையும் அந்த நோடீஸுடன் அனுப்பவேண்டும். மேலும், அந்த குற்றத்தை விசாரிக்க அதிகாரமுடைய சமீபத்திலுள்ள மாஜிஸ்ட்ரேட்டுக்கு 165-வது பிரிவின் (1), (3) உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டபடி ரெகார்டுகளின் நகலையனுப்பவும்வேண்டும்.

(5) சோதனையிடப்பட்ட இடத்தின் சொந்தக்காரர் அல்லது ஸ்வாதீனத்திலிருப்பவர் மனுசெய்துகொள்வதன்மேல், (4) குறிப்பிட்ட உட்பிரிவின்படி மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பப்பட்ட எந்த ரெகார்டுக்காவது நகல் கொடுக்கலாம்.

ஆனால், மாஜிஸ்ட்ரேட்டுக்கு சில விசேஷ காரணத்தினால் அதை கட்டணமில்லாமலே கொடுப்பது தகுதியாய் தோற்றினாலொழிய, மற்றப்படி அதற்குரிய கட்டணத்தை அவன் செலுத்தவேண்டும்.

இருபத்தி நான்குமணி நேரத்திற்குள் முதல் விசாரணைசெய்து முடிக்கக்கூடாவிட்டால் நடவடிக்கை.

167. (1) யாதொரு நபர் பிடித்து காவலில் மறியல்செய்து வைக்கப்பட்ட பின்பு செய்யப்படுகிற முதல் விசாரணையாவது 61-வது பிரிவில் நிர்ணயித்திருக்கிற இருபத்திநான்குமணி நேரத்திற்குள்ளாக முடிய மாட்டாதென்று தோற்றினால், குற்றஞ்சாட்டுதலாவது சங்கதியாவது தகுந்த ஆதாரத்தோடிருக்கிறதென்று நம்புவதற்கு ஹேதுவிருக்குமாகில், போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனாவது முதல் விசாரணை செய்யும் போலீஸ் உத்தியோகஸ்தனாவது, அவன் ஸப் இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்கு கீழ்பட்டிராமலிருந்தால் இதில் பின்னால் நிர்ணயித்திருக்கிற டயரி புஸ்தகத்தில் அந்த கேஸைக்குறித்து எழுதியிருக்கிற சங்கதிகளுக்கு நகலை அதிசமீபத்திலுள்ள மாஜிஸ்ட்ரேட்டுக்கு உடனே அனுப்பவேண்டியதுமல்லாமல், குற்றஞ் சாட்டப்பட்டவனையும் அந்த மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு அப்போதே அனுப்பவேண்டும்.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவன் யாரிடத்திற்கு இந்தப் பிரிவின்படி அனுப்பப்படுகிறானோ அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர், அந்தக் கேஸைப் பரிசிலனை செய்யத் தமக்கு அதிகாரமிருந்தாலும் மிராவிட்டாலும், தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற காவலில் மொத்தத்தில் பதினைந்து நாளைக் கதிகப்படாமல் எவ்வளவு காலத்திற்காவது குற்றஞ் சாட்டப்பட்டவனை வைத்துவைப்பதற்காக அப்போதைக்கப்போது அதிகாரங்கொடுக்கலாம். அந்தக் கேஸைப் பரிசீலனை செய்யவாவது பரிசீலனைக்காகக் கம்மிட்பண்ணவாவது அவருக்கு அதிகாரமில்லாதிருந்து, அப்படி இன்னும் காவலில் வைத்துவைப்பது அவசியமென்று அவருக்குத் தோற்றினால், அப்படிப்பட்ட அதிகாரமுடைய மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்குக் குற்றஞ்சாட்டப்பட்டவனைக் கொண்டு போகும்படி அவர் உத்தரவு செய்யலாம்.

ஆனால், இது விஷயத்திற்காக பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமாய் அதிகாரம் கொடுக்கப்பட்டிராத எந்த 3-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டும், 2-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டும் எவனரயும் போலீஸ்காவலில் வைக்கும்படி அநுமதிக்கக்கூடாது.

(3) போலீஸாருடைய காவலில் வைக்க இந்தப் பிரிவின்படி உத்தரவு செய்கிற மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்படி செய்வதற்குத் தமக்குண்டான ஹேதுக்களை எழுதிவைக்கவேண்டும்.

(4) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட் தவிர வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட் அப்படிப்பட்ட உத்தரவு கொடுத்தால், அவர்-அப்படி கொடுப்பதற்குத் தமக்குண்டான ஹேதுக்கள் சகிதமாய்த் தம்முடைய உத்தரவுக்கு நகலே, நேராய்த் தாம் யாருக்குக் கீழ்ப்பட்டிருக்கிருரோ அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பவேண்டும்.

கீழ்ப்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தன் முதல் விசாரணை செய்வதைக் குறித்து ரிபோர்ட் பண்ணுவது.

168. கீழ்ப்பட்ட யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் இந்த அத்தியாயத்தின்படி யாதொரு முதல்விசாரணை செய்தால், அவன் அந்த விசாரணை இன்னபடி முடிந்ததென்று போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்கு ரிபோர்ட் பண்ணவேண்டும்.

சாட்சியம் குறைவாயிருந்தால் குற்றஞ் சாட்டப்பட்டவனை விட்டுவிடுவது.

169. இந்த அத்தியாயத்தின்படி முதல்விசாரணை செய்வதன் மேல், போதுமான சாட்சியமாவது அனுமானிப்பதற்கு நியாயமான ஹேதுவாவது இல்லாமையினுலே குற்றஞ் சாட்டப்பட்டவனை மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு அனுப்புவதற் கிடமில்லையென்று போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்காவது முதல் விசாரணைசெய்யும் போலீஸ் உத்தியோகஸ்தனுக்காவது தோற்றினுல் அப்படி குற்றஞ்சாட்டப்பட்டவன் காவலிலிருக்கிறபட்சத்தில் அவன்-போலீஸ் ரிபோர்ட்டின்மேல் அந்த குற்றத்தைத் தன் விசாரணையில் வைத்துக்கொண்டு குற்றஞ்சாட்டப்பட்டவனைப் பரிசீலனை செய்யவாவது பரிசீலனைக்குக் கம்மிட் பண்ணவாவது அதிகாரமுடைய மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன் ஹாஜராகும்படி உத்தரவு செய்யப்பட்டால் அந்தக் காலத்தில் ஹாஜராவதாக, அந்த உத்தியோகஸ்தன் உத்தரவு செய்கிறபடி ஜாமீன்தாரர்கள் சகிதமாயாகிலும் ஜாமீன்தாரர்களில்லாமலாகிலும், முச்சிலிக்கா எழுதிக் கொடுப்பதன்மேல், அவனை அந்த உத்தியோகஸ்தன் விட்டுவிடவேண்டும்.

சாட்சியம் போதுமானதா யிருந்தால் மாஜிஸ்ட்ரேட்டு

170. (1) இந்த அத்தியாயத்தின்படி முதல் விசாரணை செய்வதன்மேல், மேற்சொல்லிய பிரகாரம் போதுமான சாட்சியமாவது நியாயமான ஹேதுவாவது இருக்கிறதென்று போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்கு தோற்றினுல், அந்த உத்தியோகஸ்

க்குக்கேஸை அனுப்புவது.

தன்-போலீஸ் ரிபோர்ட்டின்மேல் குற்றத்தைத் தன் விசாரணையில் வைத்துக்கொண்டு குற்றஞ் சாட்டப்பட்டவனைப் பரிசிலனை செய்யவாவது பரிசிலனைக்குக் கம்மிட் பண்ணவாவது அதிகாரமுடைய மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு அப்படி குற்றஞ் சாட்டப்பட்டவனைக் காவலோடு அனுப்பவேண்டும்; அந்தக் குற்றம் ஜாமீன் வாங்கத்தக்க குற்றமாயிருந்து குற்றஞ் சாட்டப்பட்டவனும் ஜாமீன் கொடுக்கச் சக்தியுள்ளவனுயிருந்தால், அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன் குறித்த தினத்தில் அவன் ஹாஜராவதாகவும், மற்றப்படி உத்தரவு செய்யப்படுகிறவரையில் அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் தினந்தோறும் ஹாஜராய்க்கொண்டிருப்பதாகவும் அவனிடத்தில் ஜாமீன் வாங்கவேண்டும்.

(2) இந்தப் பிரிவின்படி போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தன் குற்றஞ்சாட்டப்பட்டவனை மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு அனுப்பினாலும், அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் ஹாஜராவதாக அவனிடத்திலே ஜாமீன் வாங்கினாலும், அந்த உத்தியோகஸ்தன் அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் கொண்டுவந்து காட்டவேண்டியதாயிருக்கும்படியான யாதொரு ஆயுதத்தையாவது வேறே வஸ்துவையாவது அவரிடத்திற்கு அனுப்பவேண்டியதுமல்லாமல் குற்றஞ் சாட்டப்பட்டவன்மேல் கொண்டுவரப்பட்ட பிராது விஷயத்தில் (சங்கதிக்குத் தக்கபடி) முச்சிலிக்காவில் குறித்திருக்கிற பிரகாரம் மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் ஹாஜராகிப் பிராது நடத்துவதாகவாவது சாட்சியஞ்சொல்லுவதாகவாவது முச்சிலிக்கா எழுதிகொடுக்கும்படி, பிராதுக்காரன் (யாராவதிருந்தால்) அவனுக்கும், அந்த கேஸைச்சேர்ந்த சங்கதிகள் தெரிந்திருப்பதாக அந்த உத்தியோகஸ்தனுக்குத் தோற்றுகிறவர்களில் எத்தனைபேர் அவசியமென்று அந்த உத்தியோகஸ்தன் எண்ணுகிறானோ அவர்களுக்கும் உத்தரவு பண்ணவேண்டும்.

(3) அந்த முச்சிலிக்காவில் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டாவது ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டாவது கண்டெழுதப்பட்டால், அப்படிப்பட்ட கோர்ட் என்பது, அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்த கேஸை விசாரணைக்காகிலும் பரிசிலனைக்காகிலும் எந்த கோர்ட்டுக்கு அனுப்பலாமோ அந்த கோர்ட்டென்று அர்த்தமாவதாக எண்ணவேண்டும்; ஆனால் அப்படி அனுப்புவதைக்குறித்து அந்த பிராதுக்காரனுக்காவது சாட்சிகளுக்காவது நியாயமான அறிக்கை செய்யவேண்டும்.

(4) [1926-ம் வருஷத்து 2-வது ஆக்டால் ரத்து.]

(5) எவனுக்கெதிரிலே முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கப்படுகிறதோ அந்த உத்தியோகஸ்தன் அதை எழுதிக்கொடுத்தவர்களில் ஒருவனுக்கு அதற்கு நகலொன்றைக் கொடுத்தபின்பு, அசலைத் தன்னுடைய ரிபோர்ட்டோடுகூட மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பவேண்டும்.

போலீஸ் உத்தியோகஸ்தனோடு கூடவரும்படி பிராதுக்காரர்களுக்கும் சாட்சிக்காரர்களுக்கும் உத்தரவு பண்ணக்கூடாது.

171. பிராதுக்காரனாவது சாட்சியாவது மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு வரும்போது, போலீஸ் உத்தியோகஸ்தனோடுகூட வரும்படி அவனுக்கு உத்தரவு செய்யவுங்கூடாது;

பிராதுக்காரர்களையும் சாட்சிகளையும் நிர்ப்பந்தப்படுத்தக்கூடாது.

அவனுக்கு அனுவசியமான நிர்ப்பந்தமாகிலும் அசந்தர்ப்பமாகிலும் உண்டுபண்ணவுங்கூடாது; ஹாஜராவதாக அவனிடத்தில் முச்சிலிக்கா கேட்பதுதவிர வேறே யாதொரு ஜாமீன் கொடுக்கச்சொல்லி அவனைக் கேட்கவுங்கூடாது;

மறுக்கிற பிராதுக்காரனையாவது சாட்சியையாவது காவலோடு அனுப்பலாம்.

ஆனால், யாதொரு பிராதுக்காரனாவது சாட்சியாவது ஹாஜராக மாட்டேனென்றாலும், 170-வது பிரிவில் உத்தரவு செய்திருக்கிறபடி முச்சிலிக்கா எழுதிக்கொடுக்க மாட்டேனென்றாலும், அப்படிப்பட்டவனைப் போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனானவன் மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்குக் காவலோடு அனுப்பலாம்; அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் அவனை முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கிறவரையிலாவது அந்தக் கேஸ் விசாரணை முடிகிறவரையிலாவது காவலில் வைத்திருக்கலாம்.

முதல் விசாரணை செய்கையில் நடவடிக்கைகளை டயரி புஸ்தகத்தில் எழுதுவது.

172. (1) இந்த அத்தியாயத்தின்படி முதல்விசாரணை செய்கிற பிரதி போலீஸ் உத்தியோகஸ்தனும், தனக்கு அறிக்கை எட்டின காலத்தையும், தான் எப்போது விசாரணை செய்யத்தொடங்கி அதை எப்போது முடிக்கிறானோ அந்தக் காலத்தையும், தான் பார்வையிட்ட இடம் அல்லது இடங்களையும் தன்னுடைய முதல் விசாரணையினாலே நிச்சயிக்கப்பட்ட சங்கதிகளின் விவரத்தையும் கண்டு முதல்விசாரணையில் தான் நடத்துகிற நடவடிக்கைகளை (diary) டயரி புஸ்தகத்தில் தினந்தோறும் எழுதிவரவேண்டும்.

(2) யாதொரு க்ரிமினல் கோர்ட்டார் தங்கள் கோர்ட்டில் விசாரணையிலாவது பரிசிலனையிலாவதிருக்கிற யாதொரு கேஸைச்சேர்ந்த போலீஸ் டயரி புஸ்தகங்களை வரவழைக்கலாம்; மேலும், அந்தக் கேஸிலே சாட்சியமாகவல்லாமல் அப்படிப்பட்ட விசாரணையிலாகிலும் பரிசிலனையிலாகிலும் அதற்குச் சகாயமாக அந்த டயரி புஸ்தகங்களை உபயோகிக்கலாம். குற்றஞ் சாட்டப்பட்டவனாவது அவனுடைய ஏஜென்டுகளாவது அந்த டயரி புஸ்தகங்களை வரவழைக்க அர்ஹரல்ல; கோர்ட்டார் அவைகளைப் பார்வையிட்டதனாலேயே மாத்திரம் அவனாவது அவர்களாவது அவைகளைப் பார்ப்பதற்கு அர்ஹராகவுமாட்டார்கள்; ஆனால், அவைகளை எழுதின போலீஸ் உத்தியோகஸ்தன் தன்னுடைய ஞாபகக்குறிக்காக அவைகளை உபயோகப்படுத்தினாலும், அந்த போலீஸ் உத்தியோகஸ்தன் சொல்லுவதற்கு எதிரிடையாகக் கோர்ட்டார் அவைகளை உபயோகப்படுத்தினாலும், சங்கதிக்கு தக்கபடி, 1872-ம்௵ 1-வது இந்துதேசத்துச் சாட்சி ஆக்ட் 161-வது பிரிவிலாவது 145-வது பிரிவிலாவது சொல்லியிருக்கிற நிபந்தனைகள் பிரயோகப்படவேண்டும்.

போலீஸ் உத்தியோகஸ்தனுடைய ரிபோர்ட்.

173. (1) இந்த அத்தியாயத்தின்படி செய்யப்படும் ஒவ்வொரு முதல்விசாரணையையும் வீணான ஆலசியம் இல்லாமல் செய்து முடிக்கவேண்டும்; அது முடிந்தவுடனே, போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனானவன்—

(a) யாதொரு போலீஸ் ரிபோர்ட்டின்மேல் குற்றத்தைப் பிடிக்க அதிகாரமுடைய மாஜிஸ்ட்ரேட்டுக்கு, உபயவாதிகளின் பெயர்களையும், அறிக்கை இப்படிப்பட்டது என்பதையும், அந்தக் கேஸைச்சேர்ந்த சங்கதிகள் தெரிந்திருக்கிறவர்களாகக் காணுகிறவர்களுடைய பெயர்களையும், குற்றஞ்சாட்டப்பட்டவன் (பிடிக்கப்பட்டிருந்தால்) அவன் காவலோடு அனுப்பப்பட்டிருக்கிறானா, அல்லது அவனுடைய முச்சிலிக்காவின்மேல் விடுதலை செய்யப்பட்டிருக்கிறானா என்பதையும், அப்படி விடுதலை செய்யப்பட்டிருந்தால் ஜாமீன்தாரர்கள் சகிதமாகவா ஜாமீன்தாரர்களில்லாமலா அவன் முச்சிலிக்கா எழுதிக்கொடுத்திருக்கிறான் என்பதையும் கண்டெழுதி பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படுகிற நமூனாப்படி ஒரு ரிபோர்ட் அனுப்பவேண்டும்; மேலும்,

(b) தான் நடத்தின நடவடிக்கையைப்பற்றி, குற்றஞ்செய்யப்பட்டதைக் குறித்த சங்கதியை முதலில் தெரிவித்த யாதொரு நபருக்குப்

பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படும் விதமாய்த் தெரிவிக்க வேண்டும்.

(2) 158-வது பிரிவின்படி மேலான போலீஸ் உத்தியோகஸ்தன் நியமிக்கப்பட்டிருந்தால், பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவைக்கொண்டு பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளைசெய்திருக்கிற எந்த விஷயங்களிலாகிலும், அந்த ரிபோர்ட்டை அந்த உத்தியோகஸ்தன் மூலமாய் அனுப்பவேண்டும்; அந்த உத்தியோகஸ்தன் மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவு வருகிறவரையிலே இன்னும் முதல் விசாரணைநடத்தும்படி போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்கு உத்தரவு பண்ணலாம்.

(3) இந்தப் பிரிவின்படி அனுப்பப்படுகிற ரிபோர்ட்டினாலே, குற்றஞ் சாட்டப்பட்டவனை முச்சிலிக்கா வாங்கிக்கொண்டு விடுதலை செய்திருக்கிறதென்று தெரியவந்தால், மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்த முச்சிலிக்காவை நிவர்த்திசெய்வதற்காவது மற்றப்படியாவது தனக்கு யுக்தமாகத் தோற்றுகிற உத்தரவு செய்யவேண்டும்.

(4) இந்தப் பிரிவின்படி அனுப்பப்பட்ட யாதொரு ரிபோர்ட்டின் நகலுக்கு மனுசெய்துகொள்ளப்படுவதன்மேல், விசாரணை அல்லது பரிசீலனை ஆரம்பிப்பதற்கு முன்னமே குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு கொடுக்கப்படவேண்டும்.

ஆனால், மாஜிஸ்ட்ரேட்டுக்கு சில விசேஷ காரணத்தினால் அதை கட்டண மில்லாமலே கொடுப்பது தகுதியாய் தோற்றினாலொழிய, மற்றப்படி அதற்குறிய கட்டணத்தை அவன் செலுத்தவேண்டும்.

தற்கொலை முதலியதைக்குறித்துப் போலீஸார் விசாரணைசெய்து ரிபோர்ட் பண்ணுவது.

174. (1) எவனாவது—

(a) தற்கொலை செய்துகொண்டதாகவாகிலும்,

(b) வேறொருவனாலாவது யாதொரு பிராணியினாலாவது யந்திரத்தினாலாவது யாதொரு இடையூறினாலாவது மரணமடைந்ததாகவாகிலும்,

(c) வேறொருவன் குற்றஞ்செய்திருக்கிறானென்று நியாயமாய் அனுமானிப்பதற்கு இடமிருக்கிற சங்கதிகளில் இறந்துபோனதாகவாகிலும்,

கேள்விப்படுவதன்மேல், போலீஸ் ஸ்டேஷன் யார் வசத்திலிருக்கிறதோ அந்த உத்தியோகஸ்தனாவது இதன் விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்றிருக்கிற வேறே யாதொரு உத்தியோகஸ்தனாவது,

(Inquest) பிரதேச விசாரணைசெய்ய அதிகாரம் பெற்றவராய் அதிக சமீபத்திலிருக்கிற மாஜிஸ்ட்ரேட்டுக்கு அந்த சங்கதியை உடனே தெரியப்படுத்தவேண்டும்; மேலும், பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்பட்ட யாதொரு விதியிலாவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாலாகிலும் ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாலாகிலும் செய்யப்பட்ட யாதொரு பொதுவான உத்தரவிலாவது பிரத்தியேகமான உத்தரவிலாவது வேறே விதமாய்ச் சொல்லியிராதபட்சத்தில், அந்த உத்தியோகஸ்தன் அந்தப்பிரேதமிருக்கிற இடத்திற்குப்போய் அவ்விடத்திலே, அக்கம் பக்கத்திலிருக்கிற பெருந்தன்மையுள்ள இரண்டு அல்லது பல குடித்தனக்காரர்களைக் கூட வைத்துக்கொண்டு முதல் விசாரணைசெய்து, அந்தபிரேதத்தின்மேல் காயம்-முறிவு-சதைவு முதலிய துன்பக்குறிகள் காணப்பட்டால் அவைகளையும், அந்தக் குறிகள் எவ்விதமாய் அல்லது என்ன ஆயுதம் அல்லது கருவியினால்செய்யப்பட்டதாக தோற்றுகிறதோ அதையும் விவரமாயெழுதி, மரணமுண்டானதற்குத்தோற்றுகிற காரணமின்னதென்று ரிபோர்ட் எழுதவேண்டும்.

(2) அந்த ரிபோர்ட்டிலே அந்த போலீஸ் உத்தியோகஸ்தன் கையெழுத்து செய்யவேண்டியதுந்தவிர, (கூட இருந்த) மற்றவர்களுமாவது அவர்களுக்குள் எத்தனைபேர் அந்த விஷயத்திலே அபிப்பிராயத்தில் ஒன்றுபடுகிறார்களோ அவர்களாவது கையெழுத்து செய்யவும்வேண்டும்; மேலும், அதை டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது உடனே அனுப்பவேண்டும்.

(3) மரணமுண்டானதற்குக்காரணம் இன்னதென்பதைக்குறித்துச் சந்தேகமுண்டானாலும், வேறே யாதொரு காரணத்தைப்பற்றிப் பிரேதக்தைச் சோதனைக்கனுப்புவது யுக்தமானதென்று போலீஸ் உத்தியோகஸ்தனுக்குத்தோற்றினாலும், வெய்யில் மழை முதலிய கால பேதத்தையும் தூரத்தையும் யோசிக்கையில் பிரேதத்தைச் சோதனைக்கு அனுப்புவதனாலே அப்படி சோதனைபோடுவது பிரயோசனமில்

லாததாய்ப் போகும்படியாக வழியிலே அது அழுகிப்போகாதென்று தோற்றுகிறபட்சத்தில், இந்த விஷயத்திலே பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கிற விதிகளுக்குட்பட்டு அந்த உத்தியோகஸ்தனானவன்-சோதனை செய்யப்படும்பொருட்டு அந்தப் பிரேதத்தை அதி சமீபத்திலிருக்கிற ஸிவில் ஸர்ஜனுக்காவது பிரதேச கவர்ன்மெண்டாரால் இதற்காக நியமிக்கப்பட்ட தேர்ச்சியுள்ள வைத்தியனுக்காவது எடுத்தனுப்பவேண்டும்.

(4) சென்னப்பட்டணம் ப்ரெஸிடென்ஸியிலும் பம்பாய் ப்ரெஸிடென்ஸியிலும் கிராமப் பெரியதனக்காரன் இந்தப் பிரிவின்படியான முதல் விசாரணையைச் செய்யலாம்; பின்பு அவன்-பிரேத விசாரணைசெய்ய அதிகாரம் பெற்றவராய்ச் சமீபத்திலிருக்கிற மாஜிஸ்ட்ரேட்டுக்கு அந்த விசாரணையில் தேறுகடையாவதை ரிபோர்ட் பண்ண வேண்டும்.

(5) யாதொரு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட் அல்லது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கும், இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாராலாவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாலாவது பிரத்தியேகமாய் அதிகாரங்கொடுக்கப்பட்டிருக்கிற யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கும், பிரேத விசாரணை செய்ய அதிகாரமுண்டாயிருக்கிறது.

நபர்களை ஸம்மன் பண்ணி வரவழைக்க அதிகாரம்.

175. (1) 174-வது பிரிவின்படி நடவடிக்கை நடத்துகிற ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனானவன் உத்தரவு எழுதி அனுப்பி, மேற்படி முதல்விசாரணைக்காக மேற்கண்டபடி இரண்டு அல்லது பலபேர்களையும் அந்த விஷயத்தைச்சேர்ந்த சங்கதிகள் தெரிந்திருக்கிறவராகத் தோற்றுகிற வேறே யாதாமொருவரையும் வரவழைக்கலாம். அப்படி அழைக்கப்படுகிற பிரதிநபரும் ஹாஜராகவும், எந்த சவால்களுக்கு ஜவாப்சொன்னால் அவன் குற்றஞ்சாட்டப்படுவதற்காவது தண்டனைக்காவது பறிமுதலுக்காவது ஒருவேளை உள்ளாவதாயிருக்கலாமோ அப்படிப்பட்ட சவால்கள் தவிர மற்ற சகல சவால்களுக்கும் சரியாய் ஜவாப் சொல்லவும் கடமைப்பட்டவனாவான்.

(2) சங்கதிகளினாலே அது 170-வது பிரிவு பிரயோகப்படத்தக்க பிடிக்கக்கூடிய குற்றமாக வெளிப்படாவிட்டால், அப்படிப்பட்டவர்களுக்கு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஹாஜராகும்படி போலீஸ் உத்தியோகஸ்தன் உத்தரவு செய்யக்கூடாது.

மரணத்தின் காரணத்தைக் குறித்து மாஜிஸ்ட்ரேட் விசாரணை செய்வது.

176. (1) போலீஸாருடைய காவலிலிருக்கையில் எவனாவது இறந்துபோனால், பிரேத விசாரணைசெய்ய அதிகாரம்பெற்றவராய் அதிசமீபத்திலிருக்கிற மாஜிஸ்ட்ரேட்டானவர்-போலீஸ் உத்தியோகஸ்தனால் செய்யப்பட்ட முதல் விசாரணைக்குப் பதிலாகவாவது-அதோடு சேர்க்கையாகவாவது மரணத்தின் காரணத்தைக்குறித்து விசாரணை நடத்தவேண்டும்; 174-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின் (a), (b), (c), பகுதிகளில் சொல்லியிருக்கிற வேறே யாதொரு விஷயத்தில் அப்படி அதிகாரம்பெற்ற எந்த மாஜிஸ்ட்ரேட்டாவது மேற்கண்டபடி விசாரணை நடத்தலாம்; அவர் அப்படிச் செய்கிற பட்சத்தில், யாதொரு குற்றத்தைக்குறித்து விசாரணை நடத்துவதில் அவருக்கு என்னென்ன அதிகாரமுண்டோ அவைகளெல்லாம் இந்த விசாரணை நடத்துவதிலும் அவருக்குண்டு. அப்படிப் பட்ட விசாரணை நடத்துகிற மாஜிஸ்ட்ரேட்டானவர்-அந்த விஷயத்தைச் சேர்ந்த சங்கதிகளுக்குத் தக்கபடி, இதில் பின்னால் நிர்ணயித்திருக்கிற விதங்களில் எதன் பிரகாரமாவது அதைக் குறித்துத் தாம் கேட்கிற சாட்சியத்தை எழுதிவைக்கவேண்டும்.

புதைத்திருக்கிற பிரேதத்தை வெளியிலெடுப்பதற்கு அதிகாரம்.

(2) முன்னமே புதைக்கப்பட்டிருக்கிற யாதொரு பிரேதத்தை மரணமுண்டானதற்குக் காரணம் இன்னதென்று அறியும்பொருட்டுச் சோதனை செய்வது யுக்தமென்று அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோற்றினால் அவர் அந்தப் பிரேதத்தை வெளியிலெடுப்பித்துச் சோதனை போடுவிக்கலாம்.

6-ம் பாகம்.

பிராது நடத்துகையில் நடவடிக்கைகள்.

15-ம் அத்தியாயம்.

விசாரணைகளிலும் பரிசீலனைகளிலும் க்ரிமினல் கோர்ட்டாருடைய அதிகாரத்தைக்குறித்து.

A.—விசாரணை அல்லது பரிசீலனை செய்வதற்கு இடம்.

சாதாரணமாய் விசாரணை செய்வதற்

177. பிரதி குற்றத்தையும், யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் அது செய்யப்பட்

டதோ அப்படிப்பட்ட யாதொரு கோர்ட்டார் சாதாரணமாய் விசாரித்துப் பரிசீலனை செய்ய வேண்டும்.

கும் பரிசீலனை செய்வதற்கும் இடம்.

178. 177-வது பிரிவில் என்னசொல்லியிருந்தபோதிலும், யாதொரு டிஸ்ட்ரிக்ட்டில் பரிசீலனைக்குக் கம்மிட் பண்ணப்பட்ட எந்த கேஸுகளையாவது இனமான கேஸுகளையாவது யாதொரு ஸெஷன் டிவிஷனில் பரிசீலனை செய்யலாமென்று அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் உத்தரவு பண்ணலாம் :

வெவ்வேறு ஸெஷன் டிவிஷன்களில் கேஸுகளைப் பரிசீலனை செய்யும்படி உத்தரவு பண்ண அதிகாரம்.

ஆனல், அந்த உத்தரவானது-1861-ம்௵த்திய இந்துதேசத்து ஹைகோர்ட்டுகள் ஆக்ட் 15-வது பிரிவின்படியாவது, 1915-ம் ௵த்து இந்தியா கவர்ன்மெண்டு ஆக்ட் 107-வது பிரிவின்படியாவது, இந்த சட்டத்திலுள்ள 526-வது பிரிவின்படியாவது ஹைகோர்ட்டாரால் முன்னமே பிறப்பிக்கப்பட்ட எந்த உத்தரவுக்கும் விரோதமாயிருக்கக் கூடாது.

179. யாதொன்றைச் செய்திருப்பதனலும், அதனலே யாதொரு காரியம் சம்பவித்திருப்பதனலும், ஒருவன் யாதொரு குற்றம் செய்திருக்கிறனென்று அவன்மேல் குற்றஞ்சாட்டப்பட்டால், யாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் அப்படிப்பட்டது செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது அப்படிப்பட்ட யாதொரு காரியம் சம்பவித்திருக்கிறதோ அந்தக் கோர்ட்டார் அந்தக் குற்றத்தை விசாரணையாவது பரிசிலனையாவது செய்யலாம்.

குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றஞ் செய்யப்படுகிற டிஸ்ட்ரிக்டிலாவது அதனுலுண்டாகிற காரியம் சம்பவிக்கிற டிஸ்ட்ரிக்டிலாவது பரிசீலனை செய்யப்படத்தக்கவன்.

திருஷ்டாந்தங்கள்.

(a) A-என்பவனுக்கு X-என்னும் கோர்ட்டாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் காயஞ்செய்யப்பட்டு, அவன் Z-என்னும் கோர்ட்டாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் இறந்துபோகிறன். A-என்பவனுக்குச்செய்த அநியாய மரணமென்னும் குற்றத்தை X-என்னும் கோர்ட்டாராவது Z-என்னும் கோர்ட்டாராவது விசாரணைசெய்யலாம் அல்லது பரிசீலனை செய்யலாம்.

(b) A-என்பவனுக்கு X-என்னும் கோர்ட்டாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் காயஞ்செய்யப்படுகிறது ; அவன் Y-என்னும் கோர்ட்டாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் பத்து நாள் வரையிலும், Z-என்னும் கோர்ட்டா

ருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் இன்னும் பத்துநாள் வரையிலும் இரு ந்து Y, Z, என்னும் கோர்ட்டுகள் ஒவ்வொன்றின் அதிகாரப் பிரதேச எல்லைக் குள்ளும் தன்னுடைய வழக்கமான தொழிலைச் செய்ய சக்தியற்றவனுயிருக்கிறான். A-என்பவனுக்குக் கொடுந்தான்பமுண்டு பண்ணினதாகிய குற்றத்தை X-என் னும் கோர்ட்டாராவது Y-என்னும் கோர்ட்டாராவது Z-என்னும் கோர்ட்டாரா வது விசாரணை செய்யலாம் அல்லது பரிசீலனை செய்யலாம்.

(c) A-என்பவன் X-என்னும் கோர்ட்டாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் கெடுதிசெய்யப்படுவதாகப் பயமுறுத்தப்பட்டு, அவனை பயப்படுத்தின வனுக்குச் சொத்தை ஒப்பிக்கும்படி Y-என்னும் கோர்ட்டாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் அதனுல் உட்படுத்தப்படுகிறான். A-என்பவனுக்குச் செய் யப்பட்ட வெருட்டிவாங்குவதென்னும் குற்றத்தை X-என்னும் கோர்ட்டாரா வது Y-என்னும் கோர்ட்டாராவது விசாரணை செய்யலாம் அல்லது பரிசீலனை செய்யலாம்.

(d) A-என்பவன் பரோடா என்னும் சுதேச ராஜ்ஜியத்தில் காயமாக்கப் பட்டு அந்த காயத்தினுல் பூனுவில் இறந்துபோகிறான். A-என்பனை இறக்கும் படி செய்வித்த குற்றத்தைக் குறித்துப் பூனுவில் விசாரித்துப் பரிசீலனை செய்ய லாம்.

செய்கையானது வேறொரு குற்றத்திற்குச் சம்பந்தப்பட்டிருப்பதனுலே அதுவுங் குற்றமாகும்போது பரிசீலனைசெய்வதற்கு இடம்.

180. அதுவுங் குற்றமாயிருக்கிற வேறொரு செய்கை, அல்லது அதைச் செய்கிறவன் குற்றஞ்செய்யக்கூடியவனு யிருந்தால் குற்றமாகும்படியான வேறொரு செய் கைக்குச் சம்பந்தப்பட்டிருப்பதனுலே ஒரு செய் கை குற்றமாகும்போது, பிந்திய இந்த குற்றத் தைக்குறித்த பிராதை யாருடைய அதிகாரப் பிர தேச எல்லைக்குள் இவ்விரு செய்கைகளில் எதுவா வது செய்யப்பட்டதோ அந்தக் கோர்ட்டார் விசா ரணையாகிலும் பரிசீலனையாகிலும் செய்யலாம்.

திருஷ்டாந்தங்கள்.

(a) உடந்தை செய்யப்பட்டதென்னும் பிராதை, யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் உடந்தை செய்யப்பட்டதோ அந்தக் கோர்ட்டாராவது, உடந்தை செய்யப்பட்ட குற்றம் யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் செய்யப்பட்டதோ அந்தக் கோர்ட்டாராவது விசாரணைசெய்யலாம் அல்லது பரி சீலனை செய்யலாம்.

(b) திருட்டுச்சொத்து பெற்றுக்கொள்ளப்பட்டது அல்லது வைத்துக் கொள்ளப்பட்டதென்னும் பிராதை, யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் சொத்து திருடப்பட்டதோ அந்தக்கோர்ட்டாராவது, யாருடைய அதிகாரப் பிர தேச எல்லைக்குள் அவைகளில் எவ்வளவாகிலும் எப்போதாவது அயோக்கி

மாய்ப் பெற்றுக்கொள்ளப்பட்டதோ அல்லது வைத்துக்கொள்ளப்பட்டதோ அப்படிப்பட்ட எந்த கோர்ட்டாராவது விசாரணைசெய்யலாம் அல்லது பரிசீலனை பண்ணலாம்.

(c) திருட்டுத்தனமாய்க் கொண்டுவரப்பட்டவனென்று தெரிந்திருக்கிற நபரை அக்கிரமமாய் ஒளித்துவைத்திருப்பதென்னும் பிராதை, யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் அந்த நபர் அக்கிரமமாய் ஒளித்துவைக்கப்பட்டானோ அந்தக் கோர்ட்டாராவது, அப்படித் திருட்டுத்தனமாய்க் கொண்டுபோதல் என்னும் குற்றம் யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் நடந்ததோ அந்தக் கோர்ட்டாராவது விசாரணைசெய்யலாம் அல்லது பரிசீலனை பண்ணலாம்.

தந்நித் திருடன் அல்லது கொள்ளையடிக்கிற கூட்டத்தில் சேர்ந்தவனாயிருப்பது, காவலிலிருந்து ஓடிப்போவது முதலியவை.

181. (1) தந்நித்திருடனுயிருக்கிறு னென்கிற குற்றத்தையாவது, தந்நித் திருடனுயிருந்து கொலை செய்வதென்னுங் குற்றத்தையாவது, கூட்டக்கொள்ளையென்னுங் குற்றத்தையாவது, கொலையோடுங் கூடிய கூட்டக்கொள்ளை யென்னுங் குற்றத்தையாவது, கொள்ளையடிக்கிற கூட்டத்தில் சேர்ந்திருந்தானென்கிற குற்றத்தையாவது, காவலிலிருந்து தப்பித்துக்கொண்டோடிப்போனுனென்கிற குற்றத்தையாவது, குற்றஞ் சாட்டப்பட்டவன் யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் இருக்கிறுனே அந்தக் கோர்ட்டார் விசாரணைசெய்யலாம் அல்லது பரிசிலனை பண்ணலாம்.

அக்கிரமமாய் உபயோகித்துக் கொள்ளுவதும் அநியாயமான நம்பிக்கைத் துரோகமும்.

(2) அக்கிரமமாய் உபயோகித்துக்கொள்வதென்னுங் குற்றத்தையாவது, அநியாயமான நம்பிக்கைத் துரோகமென்னுங் குற்றத்தையாவது, யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் அந்த குற்றத்தைச் சேர்ந்த சொத்தில் எவ்வளவாகிலும் குற்றஞ் சாட்டப்பட்டவனுல் வாங்கிக்கொள்ளப்பட்டதோ அல்லது வைத்துக்கொள்ளப்பட்டதோ அல்லது அந்த குற்றஞ் செய்யப்பட்டதோ அந்தக் கோர்ட்டார் விசாரணை செய்யலாம் அல்லது பரிசீலனை பண்ணலாம்.

திருட்டு.

(3) திருட்டுக் குற்றத்தையாவது, திருடாகிலும் திருட்டுச் சொத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பதாகிலும் அடங்கியிருக்கிற யாதொரு குற்றத்தையாவது, யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைகளுக்குள் அந்தக் குற்றம் செய்யப்பட்டதோ அல்லது திருடப்பட்ட சொத்தைத் திருடினவனுயினும் அது திருடப்பட்டதென்று தெரிந்தோ அல்லது திருடப்

பட்டதென்று நம்புவதற்கு முகாந்தரமிருந்தோ அதைப் பெற்றுக் கொண்டாவது வைத்துக்கொண்டாவதிருந்தவனுயினும் தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்தானே, அப்படிப்பட்ட கோர்ட்டார் விசாரணை செய்யலாம் அல்லது பரிசிலனை பண்ணலாம்.

திருட்டுத்தனமாய்க் கொண்டு போவதும் அக்கிரமமாய் இட்டுக்கொண்டு போவதும்.

(4) திருட்டுத்தனமாய்க் கொண்டுபோவது அல்லது அக்கிரமமாய் இட்டுக்கொண்டு போவதென்னுங் குற்றத்தை, திருட்டுத்தனமாய்க் கொண்டுபோகப்பட்ட அல்லது அக்கிரமமாய் இட்டுக்கொண்டு போகப்பட்ட நபர் யாருடைய அதிகாரவரம்பின் பிரதேச எல்லைகளுக்குள் திருட்டுத்தனமாய்க் கொண்டு போகப்பட்டானே அல்லது அக்கிரமமாய் இட்டுக் கொண்டு போகப்பட்டானே அல்லது அழைத்துக்கொண்டு போகப் பட்டானே அல்லது மறைக்கப்பட்டானே அல்லது மறியல் செய்யப் பட்டானே அப்படிப்பட்ட கோர்ட்டார் விசாரணை செய்யலாம் அல்லது பரிசிலனை செய்யலாம்.

குற்றஞ் செய்யப்பட்ட இடம் அநிச்சயமாயிருந்தாலும், ஒரே ஒரு டிஸ்ட்ரிக்ட்டிலில்லாவிட்டாலும், குற்றம் தொடர்ச்சியாய் நடந்து கொண்டேயிருந்தாலும் பலசெய்கைகள் அடங்கினதாயிருந்தாலும், விசாரணை அல்லது பரிசிலனை செய்வதற்கு இடம்.

182. பல பிரதேச விஸ்தீர்ணங்களில் எதிலே குற்றஞ் செய்யப்பட்டதென்று நிச்சயப்படாவிட்டாலும்,

யாதொரு குற்றமானது ஒரு பிரதேச விஸ்தீரணத்தில் கொஞ்சமும் வேறொன்றில் மற்றதுமாகச் செய்யப்பட்டாலும்,

குற்றமானது தொடர்ச்சியாய்ச் செய்யப்பட்டு, ஒன்றிலல்லாமல் பல பிரதேச விஸ்தீரணங்களில் நடந்துகொண்டே யிருப்பதானுலும்,

அது பல பிரதேச விஸ்தீரணங்களிலே செய்யப்பட்ட பல செய்கைகள் அடங்கினதாயிருந்தாலும்,

அப்படிப்பட்ட பிரதேச விஸ்தீரணங்களி லெதிலாவதொன்றில் அதிகாரஞ் செலுத்துகிற கோர்ட்டார் அதை விசாரணை செய்யலாம் அல்லது பரிசிலனை பண்ணலாம்.

பயணத்தில் செய்யப்படுகிற குற்றம்.

183. யாதொரு பயணமாவது சபராவது போய்க்கொண்டிருக்கையில் ஒருவனுல் செய்யப்பட்ட யாதொரு குற்றத்தை, அந்தப் பயணம் போகையிலாகிலும் சபர் போகையிலாகிலும் யாருடைய அதிகாரப் பிர

தேச எல்லைவழியாய் அல்லது எல்லைக்குள் குற்றஞ்செய்தவனாவது எவனுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்யப்பட்டதோ அவனாவது சென்றானோ, அல்லது எது விஷயமாய்க் குற்றஞ்செய்யப்பட்டதோ அந்தப் பொருள் சென்றதோ அந்தக் கோர்ட்டார் பரிசீலனை செய்யலாம் அல்லது விசாரணை பண்ணலாம்.

ரெயில்வேயையும், டெலிக்ராபையும் போஸ்டாபீஸையும் ஆயுதங்களையுங்குறித்த ஆக்ட்டுகளுக்கு விரோதமாய்ச் செய்யப்படுங் குற்றங்கள்

184. ரெயில்வேயைக் குறித்தாவது டெலிக்ராபைக் குறித்தாவது தபாலாபீஸைக் குறித்தாவது ஆயுதங்களையும் மருந்து குண்டு முதலிய சாமான்களையுங் குறித்தாவது அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற யாதொரு சட்டதிட்டத்திலுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமாய்ச் செய்யப்படுகிற சகல குற்றங்களையும், ராஜதானியிலே அந்தக் குற்றம் செய்வதாகச் சொல்லியிருந்தாலும் இராவிட்டாலும் அந்த ராஜதானியிலே விசாரணை செய்யலாம் அல்லது பரிசீலனை பண்ணலாம்.

ஆனால், நேரஸ்தனும் அவன்மேல் பிராது நடத்துவதற்கு அவசியமான சகல சாட்சிகளும் அந்த ராஜதானிக்குள் அகப்படுகிறதாயிருக்கவேண்டும்.

சந்தேகமுண்டாகிறவிஷயத்தில், இன்ன டிஸ்ட்ரிக்ட்டிலே விசாரணை அல்லது பரிசீலனை நடக்கவேண்டுமென்று ஹைகோர்ட்டார் தீர்மானிப்பது.

185. (1) யாதொரு குற்றத்தை, ஒரே ஹைகோர்ட்டாருக்கு கீழ்ப்பட்ட இரண்டு அல்லது பல கோர்ட்டுகளில், எதில் பரிசீலனை செய்யவேண்டியதோ அல்லது விசாரணை செய்யவேண்டியதோவென்று சந்தேகமுண்டானால், அதை அந்த ஹைக்கோர்ட்டார் தீர்மானிக்கவேண்டும்.

(2) ஒரே ஹைக்கோர்ட்டாருக்கு கீழ்ப்பட்டிராத இரண்டு அல்லது பல கோர்ட்டுகள் ஒரே குற்றத்தை விசாரித்தால், எந்த ஹைக்கோர்ட்டாரின் க்ரிமினல் அப்பீல் அதிகாரப் விஸ்தீர்ணப்பிரதேச எல்லைகளுக்குள் அதன் முதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதோ அவர்கள் தங்களுக்கு கீழ்ப்பட்ட யாதொரு கோர்ட்டில் அப்படிப்பட்ட குற்றவாளியின் விசாரணையை நடத்தும்படி உத்திரவிடலாம்; அப்படி உத்திரவிடப்பட்டால், அந்த நபரின்மேலுள்ள அந்த குற்றத்தின் மற்ற சகல நடவடிக்கைகளையும் நிறுத்திவிடவேண்டும்.

ஆனால், அப்படிப்பட்ட ஹைகோர்ட்டார் அந்த விஷயம் தெரிவிக்கப்படுவதன்மேலும் அப்படி தீர்மானிக்காவிட்டால், வேறே எந்த ஹைகோர்ட்டாரின் க்ரிமினல் அப்பீல் அதிகார விஸ்தீரணப்பிரதேச எல்லைகளுக்குள் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் தீராமலிருக்கிறதோ அவர்கள், அம்மாதிரியாய்ச் செய்யவேண்டுமென்று உத்திரவிடலாம். அப்படி செய்யப்படுவதன்மேல், அதன் மற்ற எல்லா நடவடிக்கைகளும் நிறுத்திவிடவேண்டும்.

அதிகாரப் பிரதேசத்துக்கு வெளியில் செய்யப்பட்ட குற்றத்திற்காக ஸம்மனாவது வாரண்டாவது பிறப்பிக்க அதிகாரம்.

186. (1) ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாவது, இந்த விஷயத்திலே பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமாய் அதிகாரங் கொடுக்கப்பட்டிருந்தால் முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாவது, தம்முடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள்ளிருக்கிறவனெவனாகிலும் 177 முதல் 184 உட்பட அது வரையிலுள்ள பிரிவுகளில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படிக்காவது அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற வேறே யாதொரு சட்டப்படிக்காவது அந்தப் பிரதேச எல்லைக்குள் விசாரணையாகிலும் பரிசிலனையாகிலும் செய்யக்கூடாததாயிருந்தபோதிலும், அந்தந்த காலத்தில் வழங்கிக்கொண்டிருக்கிற யாதொரு சட்டப்படி ப்ரிட்டிஷ் இந்தியாவிலே பரிசிலனை செய்யப்படத்தக்கதான யாதொரு குற்றத்தை (ப்ரிட்டிஷ் இந்தியாவுக்குள்ளாவது ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியிலாவது) மேற்படி எல்லைக்கு வெளியிலே செய்திருக்கிறானென்று நம்புவதற்கு முகாந்தரமிருப்பதாகத் தெரிந்துகொண்டால், அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர்-அந்த குற்றம் அப்படிப்பட்ட பிரதேச எல்லைக்குள் செய்யப்பட்டிருந்தாற்போலவே அதை விசாரணைசெய்யலாம்; மேலும், தமக்குமுன் ஹாஜராகும்படி இதில் முன்னமே சொல்லியிருக்கிறவிதமாய் அப்படிப்பட்டவனை நிர்ப்பந்திக்கலாம்; அன்றியும் அந்த குற்றத்தை விசாரணைசெய்யவாவது பரிசிலனை செய்யவாவது அதிகாரமுடைய மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு அப்படிப்பட்டவனை அனுப்பலாம்; அந்த குற்றமானது ஜாமீன் வாங்கத்தக்கதாயிருந்தால், அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன் அவன் ஹாஜராவதற்காக ஜாமீன்காரர்கள் சகிதமாயாகிலும் ஜாமீன்காரர்களில்லாமலாகிலும் முச்சிலிக்கா வாங்கலாம்.

ஆளைப் பிடிப்பதன்மேல் மாஜிஸ்ட்ரேட்டினுடைய நடவடிக்கை.

(2) அப்படி அதிகாரமுடைய மாஜிஸ்ட்ரேட்டுகள் ஒருவரல்லாமல் பலராயிருந்து, அப்படிப்பட்டவனை இன்ன மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு அனுப்பவேண்டுமென்பதைக் குறித்தாவது இன்ன மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாக அவனை ஹாஜராகும்படி கடமைப்படுத்தவேண்டுமென்பதைக் குறித்தாவது இந்தப் பிரிவின்படி பிரவர்த்திக்கிற மாஜிஸ்ட்ரேட்டுக்குத் திருப்திகரமாய்த் தோன்றுவிட்டால், அந்த சங்கதியை ஹைகோர்ட்டாருடைய உத்தரவுக்காக ரிபோர்ட் பண்ணவேண்டும்.

ஸபார்டினேட் மாஜிஸ்ட்ரேட்டினால் வாரன்ட் பிறப்பிக்கப்பட்டால் நடவடிக்கை.

187. (1) ராஜதானி மாஜிஸ்ட்ரேட் அல்லது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் தவிர வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டிரேட்டினால் 186-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட வாரன்டைக்கொண்டு அந்த நபர் பிடிக்கப்பட்டால் அவனை, அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர்-அந்த குற்றத்தை விசாரணை செய்யவாவது பரிசிலனை செய்யவாவது அதிகாரமுடைய மாஜிஸ்ட்ரேட் அப்படிப்பட்டவனைப் பிடிக்கும்படி தம்முடைய வாரன்ட் பிறப்பித்திராத பட்சத்தில், தாம் யாருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறாரோ அந்த டிஸ்ட்ரிக்ட் அல்லது ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு அனுப்பவேண்டும்; அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட் வாரன்ட் பிறப்பித்திருக்கிற பட்சத்தில், பிடிக்கப்பட்டவனை அந்த வாரன்டை நிறைவேற்றுகிற போலீஸ் உத்தியோகஸ்தனிடத்திலாவது ஒப்பிக்கவேண்டும்; அல்லது அந்த வாரன்ட் பிறப்பித்த மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்காவது அனுப்பவேண்டும்.

(2) பிடிக்கப்பட்டவன் எதைச் செய்ததாகச் சொல்லப்படுகிறானோ அல்லது அனுமானிக்கப்படுகிறானோ அந்த குற்றமானது, 186-வது பிரிவின்படி பிரவர்த்திக்கிற மாஜிஸ்ட்ரேட்டினுடைய கோர்ட் தவிர அந்த டிஸ்ட்ரிக்டிலேயே இருக்கும் வேறே யாதொரு க்ரிமினல் கோர்ட்டாரால் விசாரணையாவது பரிசிலனையாவது செய்யப்படத்தக்கதாயிருந்தால், அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்படிப்பட்டவனை அந்தக் கோர்ட்டாரிடத்திற்கு அனுப்பவேண்டும்.

ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியில் செய்யப்பட்ட குற்றங்களுக்காக ப்ரிட்

188. மஹாராணியவர்களுடைய யாதொரு சுதேச இந்திய குடியானவன் ப்ரிட்டிஷ் இந்தியா

டிஷ் குடிகள் உள்ளாயிருப்பது.

வின் எல்லைக்கு வெளியிலும் அப்புறத்திலும் எவ்விடத்திலாவது குற்றஞ்செய்தாலும்,

(a) இந்தியாவில் யாதொரு ஈதேச அரசன் அல்லது அதிபதியினுடைய ராஜ்ஜியங்களில் யாதொரு ப்ரிட்டிஷ் குடியானவன் குற்றஞ்செய்தாலும்,

(b) இந்தியாவில் யாதொரு சுதேச அரசன் அல்லது அதிபதியினுடைய ராஜ்ஜியங்களில் மஹாராணியவர்களுடைய ஊழியன் (ப்ரிட்டிஷ் குடியாயிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி,) குற்றஞ்செய்தாலும்,

ப்ரிட்டிஷ் இந்தியாவிற்குள் அவன் அகப்படுகிற எந்த இடத்திலாயினும் அந்த குற்றஞ்செய்யப்பட்டிருந்தாற்போலவே அப்படிப்பட்ட குற்றத்தைக்குறித்து அவன் மேல் தொடரலாம் :

பிராதைக்குறித்து விசாரணைசெய்வது தகுதியென்று பொலிட்டிகல் ஏஜென்ட் ஸெர்ட்டிபை பண்ணுவது.

ஆனால், இந்த அத்தியாயத்திலுள்ள முந்திய பிரிவுகளில் எதிலாவது என்னசொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே அப்படிப்பட்ட யாதொரு குற்றம் செய்யப்பட்டதாய்ச் சொல்லப்படுகிற ராஜ்ஜியத்திற்காகப் பொலிட்டிகல் ஏஜென்ட் ஒருவரிருந்தால் அவர்-அந்த குற்றத்தைக் குறித்த பிராது ப்ரிட்டிஷ் இந்தியாவில் விசாரிக்கப்படவேண்டுமென்று தாம் அபிப்பிராயப்படுவதாக ஸெர்டிபை செய்தாலொழிய, அந்தக் குற்றத்தைக் குறித்த பிராதை ப்ரிட்டிஷ் இந்தியாவிலே விசாரணை செய்யக்கூடாது ; பொலிட்டிகல் ஏஜென்ட் இல்லாதிருக்கும் பட்சத்தில் பிரதேச கவர்ன்மெண்டாருடைய உத்தரவைப்பெறவேண்டும்.

மேலும், எவன்மேலாவது இந்தப்பிரிவின்படி நடத்தப்படுகிற நடவடிக்கைகள் அதே குற்றம் ப்ரிட்டிஷ் இந்தியாவில் செய்யப்பட்டிருந்தால் அதைக்குறித்து அப்படிப்பட்டவன்மேல் பின்னிட்டு நடவடிக்கைகள்-நடத்துவதற்குத் தடையாயிருக்குமாகில், அந்த நடவடிக்கைகள்-ப்ரிட்டிஷ் இந்தியாவின் எல்லைக்கு வெளியிலிருக்கிற எந்த ராஜ்ஜியத்திலாகிலும் அதே குற்றத்தைக் குறித்து, குற்றஞ்செய்தவர்களைப் பிடித்து ஒப்பிப்பதையுங் குறித்த 1903-ம் வருஷத்து இந்தியா ஆக்ட்டின்படி அவன்மேல் இன்னும் நடவடிக்கைகள் நடத்துவதற்குத் தடையாயிருக்கவேண்டும்.

189. 188-வது பிரிவில் சொல்லியிருக்கிற யாதொரு குற்றத்தைக்குறித்து விசாரணையாவது பரிசிலனையாவது நடந்துகொண்டிருக்கையில், தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால் பிரதேச கவர்ன்மெண்டார் அந்த குற்றஞ்செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிற ராஜ்ஜியத்திலாகிலும் ராஜ்ஜியத்திற்காகவாகிலுமிருக்கிற பொலிட்டிகல் எஜென்டுக்கு முன்பாகவாவது யாதொரு ஜுடிஷல் உத்தியோகஸ்தருக்கு முன்பாகவாவது சொல்லப்பட்ட வாக்குமூலங்களுக்காகிலும் கொண்டு வந்து காட்டப்பட்ட (exhibit) தஸ்தாவேஜுகளுக்காகிலும் நகல்களை, அப்படி விசாரணையாவது பரிசிலனையாவது செய்கிற கோர்ட்டார் அந்த வாக்குமூலங்களாகிலும் தஸ்தாவேஜுகளாகிலும் சம்பந்தப்படுகிற சங்கதிகளைக்குறித்துக் சாட்சியம் வாங்கும்படி எந்த விஷயத்தில் கம்மிஷனென்னுங் கட்டளை பிறப்பிக்கக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு விஷயத்திலே அந்தக் கோர்ட்டார் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டியதென்று உத்தரவு செய்யலாம்.

வாக்கு மூலங்களுக்கும் தஸ்தாவேஜுகளுக்கும் நகல்களைச் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளும்படி உத்தரவு செய்ய அதிகாரம்.

B—நடவடிக்கைகளை நடத்தத்தொடங்குவதற்கு இன்னின்னவை யிருக்கவேண்டுமென்பது.

190. (1) இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடிக்குத் தவிர, யாதொரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டும், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டும், இந்த விஷயத்தில் பிரத்தியேகமாய் அதிகாரம் பெற்றிருக்கிற வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டும், யாதொரு குற்றத்தை—

மாஜிஸ்ட்ரேட்டுகள் குற்றங்களை விசாரணை செய்வது.

(a) எந்த சங்கதிகள் சேர்ந்து அப்படிப்பட்ட குற்றமாகிறதோ அவைகளைக் குறித்துப் பிராது வரப்பற்றிக்கொள்வதன்மேலும்,

(b) அந்த சங்கதிகளைக் குறித்து யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தரால் எழுத்து மூலமான ரிபோர்ட்டைப் பெற்றுக்கொள்வதன்மேலும்,

(c) அப்படிப்பட்ட குற்றம் செய்யப்பட்டதென்று போலீஸ் உத்தியோகஸ்தன் தவிர வேறொருவனால் சங்கதி தெரிவிக்கப்படுவதன்மேலும், அல்லது தான் அறிந்தாவது அனுமானித்தாவது இருப்பதன்மேலும்,

விசாரணை செய்யலாம்.

(2) எந்த குற்றங்களை எந்த மாஜிஸ்ட்ரேட் பரிசிலனை செய்யலாமோ அல்லது பரிசிலனைக்குக் கம்மிட் பண்ணலாமோ அப்படிப்பட்ட குற்றங்களை, (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த (a) அல்லது (b) குறிப்பிட்ட பகுதியின் பிரகாரம் விசாரணை செய்யும்படி பிரதேச கவர்ன்மெண்டாராவது பிரதேச கவர்ன்மெண்டாருடைய சாதாரணமான அல்லது பிரத்தியேகமான உத்தரவுக்குட்பட்டு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரங்கொடுக்கலாம்.

(3) முதல்வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பைச் சேர்ந்த எந்த மாஜிஸ்ட்ரேட் எந்தக் குற்றங்களைப் பரிசிலனை செய்யலாமோ அல்லது பரிசிலனைக்குக் கம்மிட் பண்ணலாமோ அப்படிப்பட்ட குற்றங்களை, (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த (c) குறிப்பிட்ட பகுதியின்படி விசாரணைசெய்ய பிரதேச கவர்ன்மெண்டார் அவருக்கு அதிகாரங்கொடுக்கலாம்.

குற்றஞ் சாட்டப்பட்டவனுடைய மனுவின்மேல் ட்ரான்ஸ்பர் செய்வது அல்லது கம்மிட் பண்ணுவது.

191. முந்திய பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (c) குறிப்பிட்ட பகுதியின்படி மாஜிஸ்ட்ரேட் ஒரு குற்றத்தை விசாரிக்குங் காலையில், யாதொரு சாட்சியத்தைக் கேட்பதற்குமுன் வேறொரு கோர்ட்டாரால் தன்னுடைய கேஸைப் பரிசிலனை செய்ய அர்ஹனா யிருக்கிறானென்று குற்றஞ் சாட்டப்பட்ட அந்த நபருக்குச் சொல்லவேண்டும்; அவனாவது, குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் பலராயிருந்தால் அவர்களில் எவனாவது அந்த மாஜிஸ்ட்ரேட் பரிசிலனை செய்வதற்கு ஆட்சேபித்தால், அந்த மாஜிஸ்ட்ரேட்டினால் பரிசிலனை செய்யப்படுவதற்குப் பதிலாக அந்தக்கேஸை ஸெஷன் கோர்ட்டுக்குக் கம்மிட் பண்ணவேண்டும்; அல்லது வேறொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு மாற்றவேண்டும்.

மாஜிஸ்ட்ரேட்டுகள் வேறொருமாஜிஸ்ட்ரேட்டுக்குக் கேஸ்களை அனுப்புவது.

192. (1) யாதொரு பிரதான ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டாவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாவது விசாரணைக்குத் தாம் ஏற்றுக்கொண்ட எந்த கேஸையாகிலும் தமக்குக் கீழ்ப்பட்டிருக்கிற யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு விசாரணைக்காயினும் பரிசிலனைக்காயினும் அனுப்பலாம்.

(2) முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட் யாதொரு கேஸை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டிருந்தால், குற்றம் சாட்டப்பட்டவனைப் பரிசிலனை செய்யவாவது பரிசிலனை செய்வதற்கு அவனைக் கம்மிட்பண்ணவாவது இந்த சட்டப்படி அதிகாரமுடையவராய் அவருடைய டிஸ்ட்ரிக்ட்டிலிருக்கிற வேறே யாதொரு குறித்த மாஜிஸ்ட்ரேட்னிடத்திற்கு விசாரணைக்காகிலும் பரிசிலனைக்காகிலும் அந்த கேஸை அனுப்பும்படி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் அவருக்கு அதிகாரங்கொடுக்கலாம்; அப்படிப்பட்ட வேறே மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்பிரகாரமே அந்த கேஸைப் பைசல்செய்யலாம்.

ஸெஷன் கோர்ட்டார் குற்றங்களைக்குறித்து விசாரணை நடத்துவது.

193. (1) இந்த சட்டத்திலாவது அந்தந்த காலத்தில் வழங்கி வருகிற வேறே யாதொரு சட்டதிட்டத்திலாவது வெளிப்படையாய் வேறே விதமாக விதித்திருக்கிறபடிக்குத் தவிர, எந்த ஸெஷன் கோர்ட்டாரும் குற்றஞ் சாட்டப்பட்டவன் கம்மிட்பண்ணைக் கிரமமாய் அதிகாரம்பெற்ற மாஜிஸ்ட்ரேட்டினால்கம்மிட் பண்ணப்பட்டாலொழிய, அசல் விசாரணை அதிகாரமுடைய கோர்ட்டாராக யாதொரு குற்றத்தைக்குறித்து விசாரணை நடத்தக்கூடாது.

(2) அடிஷனல் ஸெஷன் ஜட்ஜுகளும் உதவி ஸெஷன் ஜட்ஜுகளும் பிரதேச கவர்ன்மெண்டார் எப்படிப்பட்ட கேஸுகளைப் பரிசிலனை செய்யும்படி சாதாரணமான கட்டளை மூலமாயாவது பிரத்தியேகமான கட்டளை மூலமாயாவது தங்களுக்கு உத்தரவு செய்கிறார்களோ, அல்லது டிவிஷன் ஸெஷன் ஜட்ஜானவர் சாதாரணமான கட்டளை மூலமாயாவது பிரத்தியேகமான கட்டளை மூலமாயாவது பரிசிலனைக்காக எப்படிப்பட்ட கேஸுகளைத் தங்களுக்கு அனுப்புகிறாரோ அவைகளை மாத்திரம் பரிசிலனை செய்யவேண்டும்.

குற்றங்களைக் குறித்து ஹைகோர்ட்டார் விசாரணை நடத்துவது.

194. (1) ஹைகோர்ட்டார் இதில் பின்னால் சொல்லியிருக்கிற விதமாய்த் தங்களுக்குக் கம்மிட் செய்யப்படுவதன்மேல் யாதொரு குற்றத்தைக் குறித்து விசாரணை நடத்தலாம்.

1861-ம் வருஷத்திய இந்து தேசத்து ஹைகோர்ட்டுகளின் ஆக்ட்டின்படிக்காவது, 1915-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டின்படிக்காவது இந்த சட்டத்தின் வேறு யாதொரு நிபந்தனையின்படிக்காவது கொடுக்கப்பட்ட லெட்டர்ஸ் பேடென்ட் என்னும் அதிகார பத்திரத்

திறுள்ள நிபந்தனைகளுக்கு இதில் சொல்லியிருப்பதேதனுலும் பாதக முண்டாவதாக எண்ணக்கூடாது.

அட்வொகேட் ஜெனரல் தெரிவிக்கும் சங்கதிகள்.

(2) (a) இந்த சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் அல்லது பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியை முன்னதாகப்பெற்றுக்கொண்டு அட்வொகேட் ஜெனரலானவர்-இங்கிலாந்தில் நீதிவிசாரணை நடத்தும் ஹைகோர்ட்டிலே அரசன் சார்பாக மஹாராஜா அவர்களுடைய அட்டர்ணி ஜெனரல் எந்தெந்த விஷயங்களுக்காகச் சங்கதி தெரிவிக்கலாமோ அந்த சகல விஷயங்களைப்பற்றியும், ஹைகோர்ட்டாருடைய அதிகாரவரம்புக்குட்பட்ட நபர்களுக்கு விரோதமாய் அந்த ஹைகோர்ட்டாருக்குச் சங்கதிகள் தெரிவிக்கலாம்.

(b) அவ்விதமான ஒவ்வொரு சங்கதியையும்பற்றி, அதேமாதிரியான சங்கதிகளின் விஷயமாய் மஹாராஜா அவர்களுடையஅட்டர்ணி ஜெனரலவர்களால் அந்த கேஸின் கூலாம்சங்களும் மேற்சொல்லிய ஹைகோர்ட்டின் வழக்கமும் நடவடிக்கையும் எவ்வளவு தூரம் இடங்கொடுக்குமோ அதுவரையிலே என்னென்ன நியாயமான நடவடிக்கைகள் நடத்தலாமோ அந்த நடவடிக்கைகளை நடத்தலாம்.

(c) அப்படிப்பட்ட யாதொரு சங்கதியைக் கொண்டாவது அதன் மூலமாயாவது வசூல்செய்யப்படுகிற அல்லது விதிக்கப்படுகிற எல்லா அபராதங்களும் தண்டனைத் தொகைகளும் பறிமுதல்களும் கடன்களும் பணத்தொகைகளும் இந்தியா கவர்ன்மெண்டாரைச் சேரவேண்டும்.

(d) இந்த பிரிவின் நிபந்தனைகளை அமுலுக்குக் கொண்டுவரும் பொருட்டு ஹைகோர்ட்டார் விதிகளேற்படுத்தலாம்.

சட்டப்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுக் குண்டாகிய அதிகாரத்துக் குள்ளாகாமல் அவ்ச்சியம் செய்வதைக் குறித்து பிராது.

195. (1) (a) இந்தியன் பினல் கோட் 172-முதல் 188-வரையில் (இரண்டு முட்பட) உள்ள பிரிவுகளின்படி தண்டிக்கப்படத்தக்க யாதொரு குற்றஞ் செய்யப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட ஸர்க்கார் உத்தியோகஸ்தராவது வேறே எந்த ஸர்க்கார் உத்தியோகஸ்தருக்கு அவர் கீழ்ப்பட்டிருக்கிறரோ அந்த உத்தியோகஸ்தராவது எழுத்து மூலமாய் பிராது செய்யாவிட்டால், அப்படிப்பட்ட குற்றத்தைக் குறித்த பிராதையும் ;

(b) அதே கோட் 193, 194, 195, 196, 199, 200, 205, 206, 207, 208, 209, 210, 211, அல்லது 228-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க யாதொரு குற்றமானது யாதொரு கோர்ட்டில் நடத்தப்படுகிற நடவடிக்கையிலாவது நடவடிக்கை சம்பந்தமாயாவது செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் பட்சத்தில், அப்படிப்பட்ட கோர்ட்டாராகிலும் வேறே எந்த கோர்ட்டாருக்கு அப்படிப்பட்ட கோர்ட்டார் கீழ்ப்பட்டிருக்கிறார்களோ அந்த கோர்ட்டாராகிலும் எழுத்து மூலமாய் பிராது செய்யாவிட்டால், அப்படிப்பட்ட குற்றத்தைகுறித்து பிராதையும் ;

பொது நீதி விவகார முறைக்கு விரோதமாய்ச் செய்யப்படும் சில குற்றங்களைக்குறித்து பிராது.

(c) அதே கோட் 463-வது பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள அல்லது 471, 475, அல்லது 476-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க யாதொரு குற்றமானது யாதொரு கோர்ட்டில் நடத்தப்படுகிற நடவடிக்கையைச் சேர்ந்த எந்த கட்சிகாரனுலாகிலும் அந்த நடவடிக்கையில் சாட்சியமாக கொண்டுவந்து காட்டப்படுகிற அல்லது கொடுக்கப்படுகிற ஒரு தஸ்தவேஜு விஷயமாய்ச் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும்பட்சத்தில் அப்படிப்பட்ட கோர்ட்டாராவது வேறே எந்த கோர்ட்டாருக்கு அப்படிப்பட்ட கோர்ட்டார் கீழ்ப்பட்டிருக்கிறார்களோ அந்த கோர்ட்டாராவது எழுத்து மூலமாய் பிராது செய்யாவிட்டால், அப்படிப்பட்ட குற்றத்தைக்குறித்த பிராதையும்,

சாட்சியமாககொடுக்கப்படுகிற தஸ்தவேஜுகளுக்குச் சம்பந்தப்பட்ட சில குற்றங்களைக்குறித்து பிராது.

எந்த கோர்ட்டாரும் பிடிக்கக்கூடாது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் (b) (c) குறிப்பிட்ட பகுதிகளில் "கோர்ட்டார்" என்னும் வார்த்தையில் ஸிவில், ரெவினியு அல்லது க்ரிமினல் கோர்ட்டார் என்பதும் அடங்கும்; ஆனால், அதில் 1908-ம்ளு௵த்து 16-வது ஆக்ட்டாகிய இந்தியா ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டின்படி ரெஜிஸ்ட்டரார் அல்லது ஸப்ரெஜிஸ்ட்ரார் என்பது அடங்காது:

(3) இந்தப் பிரிவின் காரியங்களுக்காக, அப்பீல் செய்யும்படியான டிக்ரிகள் அல்லது அப்படிப்பட்ட முதல் கோர்ட்டாரின் தண்டனையின்மேல், எந்த கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளலாமோ அதற்கும், சாதாரணமாய் ஒரு ஸிவில் கோர்ட்டாரின் டிக்ரியின்மேல் அப்பீல் இல்லாத விஷயத்தில், எந்த பிரதான கோர்ட்டாரின் சாதா

ரண அசல் ஸிவில் விசாரணை அதிகார வரம்பின் பிரதேச எல்லைகளுக்குள் அப்படிப்பட்ட சிவில் கோர்ட் இருக்கிறதோ அதற்கும், அந்த கோர்ட்டுகள் தாழ்ந்திருப்பவைகளாய் எண்ணப்படும், ஆனால்:—

(a) அவ்விதமான அப்பீல்கள் ஒரு கோர்ட்டுக்கு அதிகமான கோர்ட்டுகளில் செய்யப்படும் விஷயத்திலே தாழ்ந்த அதிகார வரம்புடைய அப்பீல் கோர்ட்டானது மேற்படி முதல் கோர்ட் எதற்கு உட்பட்டிருக்கவேண்டுமோ அந்த கோர்ட்டாக எண்ணப்படவேண்டும்.

(b) அவ்விதமான அப்பீல்கள் ஸிவில் கோர்ட்டிலும் ரெவினியு கோர்ட்டிலும் செய்யப்படும் விஷயத்திலே, மேற்படி கோர்ட்டானது எதன் விஷயமாய்க் குற்றஞ் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த கேஸின் சுபாவத்திற்குத் தக்கபடி அந்த ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டுக்குத் தாழ்ந்ததாக எண்ணப்படவேண்டும்;

(4) இந்தப் பிரிவின் காரியங்களின் பொருட்டுப் பிரதி கோர்ட்டும் அந்தக் கோர்ட்டிலிருந்து வேறெந்த கோர்ட்டுக்குச் சாதாரணமாய் அப்பீல் செய்யப்படுகிறதோ அந்தக் கோர்ட்டுக்கு மாத்திரம் உட்பட்டிருப்பதாக எண்ணப்படும். அதாவது—

(a) அவ்விதமான அப்பீல்கள் ஒரு கோர்ட்டுக்கு அதிகமான கோர்ட்டுகளில் செய்யப்படும் விஷயத்திலே தாழ்ந்த அதிகார வரம்புடைய அப்பீல் கோர்ட்டனது மேற்படி முதல் கோர்ட் எதற்கு கீழ்ப்பட்டிருக்கவேண்டுமோ அந்த கோர்ட்டாக எண்ணப்படவேண்டும்;

(b) அவ்விதமான அப்பீல்கள் ஸிவில் கோர்ட்டிலும் ரெவினியு கோர்ட்டிலும் செய்யப்படும் விஷயத்திலே மேற்படி கோர்ட்டானது எதன் விஷயமாய்க் குற்றஞ் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த கேஸின் சுபாவத்திற்குத் தக்கபடி அந்த ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டுக்குத் தாழ்ந்ததாக எண்ணப்படவேண்டும்;

(c) எவ்விதமான அப்பீலும் செய்யக்கூடாமலிருக்கும் பட்சத்திலே, மேற்படி முதல் கோர்ட்டானது எதன் அசல் அதிகார வரம்பின் பிரதேச எல்லைகளுக்குள் அது இருக்

கிறதோ அந்த முக்கியமான கோர்ட்டுக்குத் தாழ்ந்ததாக எண்ணப்படவேண்டும்.

(5) (1)-வது உட்பிரிவின் (a) பகுதியின்படி யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தரால் ஒரு பிராது செய்யப்பட்டிருந்தால், அந்த உத்தியோகஸ்தர் கீழ்ப்பட்டிருக்கிற யாதொரு அதிகாரி அந்தப்பிராதை வாபீஸ் பெற்றுக்கொள்ளும்படி உத்திரவிடலாம். அப்படிச்செய்வதின் மேல், அவர் அந்த உத்திரவின் நகலொன்றை கோர்ட்டாருக்கு அனுப்பவேண்டும். அதை வரப்பெற்றுக்கொள்வதன்மேல், கோர்ட்டார் அந்தப் பிராதின் மேல் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளக்கூடாது.

ஸர்க்காருக்கு விரோதமாய்ச் செய்யப்படுகிற குற்றங்களைக்குறித்துப் பிராது.

196. இந்தியன் பினல் கோடின் 6-வது அல்லது 9-A அத்தியாயத்திலுள்ள பிரிவுகளில் 127-வது பிரிவு தவிர மற்றப் பிரிவுகளின்படிக்காவது, மேற்படி கோடு 108-A பிரிவின்படிக்காவது, 153-A பிரிவின்படிக்காவது, 294 A பிரிவின்படிக்காவது, 295-A பிரிவின்படிக்காவது 505 பிரிவின்படிக்காவது தண்டிக்கப்படத்தக்க யாதொரு குற்றத்தைக் குறித்து, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாலாகிலும், அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாராலாகிலும், இந்த விஷயத்தில் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற, யாதொரு உத்தியோகஸ்தராகிலும், கொடுக்கப்படுகிற உத்தரவின்படிக்காவது அவர்களிடத்தில் அதிகாரம் பெற்றுக்கொண்டாவது பிராது செய்யப்பட்டாலொழிய அதை எந்தக் கோர்ட்டாரும், பிடிக்கக்கூடாது.

சில வகையைச் சேர்ந்த குற்றம்பொருந்திய சதியோசனைகளைக் குறித்துப் பிராது.

196-A. (1) இந்தியன் பினல் கோட் 120-B பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றம் பொருந்திய சதியோசனையின் உத்தேசமானது குற்றத்தைத் தவிர வேறே யாதொரு சட்டவிரோதமான காரியத்தையாகிலும், சட்டவிரோதமான முகாந்தரங்களினால் சட்டசம்மதமான யாதொரு காரியத்தையாகிலும், 196-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படுகிற யாதொரு குற்றத்தையாகிலும் செய்வதாயிருக்கிற விஷயத்திலே, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாலாவா

வது பிரதேச கவர்ன்மெண்டாராலாவது, இந்த விஷயத்தில் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராலாவது கொடுக்கப்படுகிற உத்தரவின்படிக்காகிலும் அவர்களிடத்தில் அதிகாரம் பெற்றுக்கொண்டாகிலும் பிராது செய்யப்பட்டாலொழிய, அல்லது

(2) அந்த சதியோசனையின் உத்தேசமானது பிடிக்கக்கூடாத யாதொரு குற்றத்தையாகிலும், மரண தண்டனையாவது தீவாந்தர சிட்சையாவது இரண்டு வருஷத்திற்கோ அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கோ கடினகாவல் தண்டனையாவது விதிக்கப்பட்டத்தக்கதாயிராமல் பிடிக்கக்கூடியதாயிருக்கிற யாதொரு குற்றத்தையாகிலும் செய்வதாயிருக்கிற விஷயத்திலே, பிரதேச கவர்ன்மெண்டாராயினும் பிரதேச கவர்ன்மெண்டாரால் இது விஷயமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு சிப் பிரெஸிடென்ஸி (ராஜதானி) மாஜிஸ்ட்ரேட்டாயினும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாயினும் விவகாரம் தொடங்குவதற்கு எழுத்து மூலமான உத்தரவைக்கொண்டு சம்மதித்திருந்தாலொழிய, அந்த சதியோசனைக் குற்றத்தை எந்தக் கோர்ட்டாரும் பிடிக்கக்கூடாது ;

ஆனால், அந்தக் குற்றம்பொருந்திய சதியோசனையானது 195-வது பிரிவைச்சேர்ந்த (4) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படுகிற சதியோசனையாயிருந்தால், அப்படிப்பட்ட சம்மதி அவசியமில்லை.

சில விஷயங்களில் பிரதம விசாரணை.

196-B. 196-வது அல்லது 196-A-வது பிரிவில் உதகரிக்கப்பட்ட யாதொரு குற்றத்தின் விஷயத்திலே, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது பிரதான ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது-அந்தப் பிரிவுகளிலாகிலும் இந்தக் கோடின் வேறே யாதொரு பாகத்திலாகிலும் என்னசொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறைபாத அந்தஸ்துள்ள ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் பிரதம விசாரணை செய்யவேண்டுமென்று உத்தரவு செய்யலாம் ; அப்படி செய்யும் விஷயத்தில் அப்படிப்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தன் 155 (3)-வது பிரிவில் சொல்லப்பட்ட அதிகாரங்களை உடையவனாவான்.

ஜட்ஜுகள் மேலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மேலும் பிராது.

197. (1) பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியாவது அல்லது யாதொரு உயர்ந்த அதிகாரியினுடைய அனுமதியாவது இல்லாமல் உத்தியோகத்திலிருந்து நீக்கப்படக்கூடாத யாதொரு நபர் இந்தியன் பினல் கோடின் 19-வது பிரிவின் தாத்பரியப்படிக்குள்ள ஒரு ஜட்ஜ், யாதொரு மாஜிஸ்ட்ரேட் அல்லது சார்க்கார் உத்தியோகஸ்தர்மேல், அவர் தம்முடைய உத்தியோக அலுவல்களைச்செய்ய பிரவர்த்திக்கையிலாவது பிரவர்த்திக்க உத்தேசிக்கையிலாவது செய்திருப்பதாகச் சொல்லப்படும் யாதொரு குற்றஞ்சாட்டப்பட்டால், பிரதேச கவர்ன்மெண்டாரின் முன் அனுமதியில்லாமல் எந்தக் கோர்ட்டாரும் அந்தக் குற்றத்தைக் குறித்து செய்யப்பட்ட பிராதை பிடிக்கக்கூடாது.

பிராது நடத்துவதைக் குறித்து கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

(2) அந்த கவர்ன்மெண்டார் அப்படிப்பட்ட ஜட்ஜ், மாஜிஸ்ட்ரேட் அல்லது ஸர்க்கார் உத்தியோகஸ்தர் மேல் பிராதை நடத்தவேண்டிய நபரையும் விதத்தையும் குற்றம் அல்லது குற்றங்களையும் நிர்ணயிக்கலாம்; மேலும், எதற்கு முன்பாகப் பரிசீலனை நடத்தப்படவேண்டியதோ அந்தக் கோர்ட்டையும் குறிக்கலாம்.

உடன்படிக்கை மீறுவதைக் குறித்தும் அவதூறைக்குறித்தும் விவாக சம்பந்தமான குற்றங்களைக்குறித்தும் பிராது.

198. இந்தியன் பினல் கோட் 19 அல்லது 21-வது அத்தியாயத்திற்காவது, அதே கோடில் 493 முதல் 496-உட்பட அதுவரையிலுள்ள பிரிவுகளுக்காகவது உட்பட்ட யாதொரு குற்றத்தைக் குறித்து அப்படிப்பட்ட குற்றத்தினுல் அநியாய மடைந்தவனெவனுவது பிராது செய்தாலல்லாமல் எந்தக் கோர்ட்டாரும் அதைப் பிடிக்கக்கூடாது.

ஆனுல், அந்தப்படி அநியாயமடைந்த நபர் தேச வழக்கங்களையும் ஆசாரங்களையும் உத்தேசித்து வெளியில் வரும்படி நிர்ப்பந்திக்கப்படக்கூடாத ஒரு ஸ்திரீயாயிருந்தாலும், 18-வயதுக்குட்பட்டிருந்தாலும் உன்மத்தனுயிருந்தாலும் பயித்தியக்காரனுயிருந்தாலும் அல்லது நோயினுலாவது பலவீனத்தினுலாவது பிராதுசெய்ய சக்தியற்றிருந்தாலும், கோர்ட்டாரின் அனுமதியுடன் வேறே ஒரு நபர் அவன் அல்லது அவளுடைய சார்பில் பிராது செய்யலாம்.

199. இந்தியன் பினல் கோட் 497 அல்லது 498-வது பிரிவுக்குட்பட்ட யாதொரு குற்றத்தைக்குறித்து, சம்பந்தப்பட்ட ஸ்திரீயினுடைய சுனவனுவது, அவனில்லாவிட்டால், அந்த குற்றஞ்செய்யப்பட்ட காலத்திலே அவனுக்காக அந்த ஸ்திரீயைத் தன் வசத்தில் வைத்துக்கொண்டிருந்த வேறே யாதொரு நபராவது கோர்ட்டாருடைய அனுமதியின் மேல் பிராது செய்தாலல்லாமல், எந்தக் கோர்ட்டாரும் அதை பிடிக்கக் கூடாது.

விபசாரஞ்செய்வதைக் குறித்தாவது விவாகமான ஸ்திரீயை வசியப்படுத்துவதைக்குறித்தாவது பிராது.

ஆனால், அப்படிப்பட்ட சுனவன் 18 வயதுக்குட்பட்டிருந்தாலும் உன்மத்தனுயிருந்தாலும் பயித்தியக்காரனுயிருந்தாலும் அல்லது நோயினுலாவது பலவினத்தினுலாவது பிராதுசெய்யச் சக்தியற்றிருந்தாலும் கோர்ட்டாரின் அனுமதியுடன் வேறே ஒரு நபர் அவனுடைய சார்பில் பிராது செய்யலாம்.

199-A. 198-வது அல்லது 199-வது பிரிவின் கீழ்வரும் எந்த விஷயத்திலாவது, எவர் விஷயமாய் பிராதுசெய்ய வேண்டுமென்று கோரப்படுகிறதோ அந்த நபர் 18-வயதுக்குட்பட்டாவது பைத்தியக்காரனுகவாவது இருந்து, அனுமதிக்காக விண்ணப்பம்செய்து கொள்ளும் நபர் தகுந்த அதிகாரியினுல் அந்த மைனர் அல்லது பைத்தியக்காரருக்கு தகுந்த அதிகாரியாய் நியமிக்கப்பட்ட அல்லது நிச்சயிக்கப்பட்ட கார்டியனுயிராத பட்சத்திலே, அப்படிப்பட்ட கார்டியன் எவரேனுமிருப்பதாய் கோர்ட்டாருக்கு திருப்திகரமாய்த் தெரியவந்தால் அவருக்கு நோடீஸ் கொடுக்கப்படவேண்டும்; மேலும், கோர்ட்டார்-அந்த விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டபடி செய்வதற்குமுன் அப்படிப்பட்ட கார்டியன் சொல்ல விரும்பக்கூடிய யாதொரு ஆட்சேபனையைக் கேட்கவேண்டும்.

துன்பமடைந்த நபரல்லாத வேறே நபர் பிராது செய்வதற்கு சட்டப்படிக்கான கார்டியன் ஆட்சேபிப்பது.

16-ம் அத்தியாயம்.

மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் பிராதுகளைக் குறித்து.

200. யாதொரு குற்றத்தைக்குறித்துப் பிராதுசெய்யப்படுவதன்மேல் அதைப் பிடிக்கிற மாஜிஸ்ட்ரேட்டானவர்-பிராதுக்காரனைப் பிரமாணத்தின்மேல் உடனே விமரிசை செய்யவேண்டும்; அந்த விமரிசையின்

பிராதுக்காரனை விமரிசைசெய்வது.

சாராம்சத்தை எழுதிக்கொண்டு, அதில் பிராதுக்காரன் கையெழுத்து பண்ணவேண்டியதுமல்லாமல் மாஜிஸ்ட்ரேட்டும் கையெழுத்து பண்ணவேண்டும் :

ஆனால்—

(a) பிராது எழுத்து மூலமாய்ச் செய்யப்பட்டால், 192-வது பிரிவின்படி விசாரணைக்காகக் கேஸை அனுப்புவதற்கு முன்னமே மாஜிஸ்ட்ரேட் பிராதுக்காரனை விமரிசை செய்யவேண்டியிருப்பதாக இதில் சொல்லியிருப்பதைதனாலும் எண்ணக்கூடாது :

(aa) தன்னுடைய உத்தியோக அலுவல்களைச் செய்துகொண்டிருக்கையில் பிரவர்த்திக்கிற அல்லது பிரவர்த்திப்பதாகப் பொருள்படுகிற யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தனாவது, ஒரு கோர்ட்டாராவது எழுத்து மூலமாய்ப் பிராது செய்யப்பட்டிருக்கிற எந்த விஷயத்திலாகிலும், இதிற்கண்டதைதனாலும் பிராதுக்காரனை விமரிசைசெய்ய வேண்டுமென்பதில்லை.

(b) அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாயிருந்தால், அந்தந்த விஷயத்தில் அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி அப்படிப்பட்ட விமரிசையைப் பிரமாணத்தின்மேலாவது பிரமாணஞ்செய்யாமலாவது நடத்தலாம் ; எழுந்து மூலமாய் பிராதுசெய்யப்பட்டிருக்கிற விஷயத்தில் அந்த சங்கதியை எழுதி வைக்கவேண்டிய அவசியமில்லை ; ஆனால், மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றினால், பிராது சங்கதி தம்மிடத்திற்குக் கொண்டுவரப்படுவதற்கு முன்னமே, அதை எழுதிக்கொண்டு வரச்செய்யலாம் ;

(c) 192-வது பிரிவின்படி விசாரணைக்குக் கேஸ் அனுப்பப்பட்டிருந்து அப்படி அதை அனுப்புகிற மாஜிஸ்ட்ரேட்டானவர் பிராதுக்காரனை முன்னமே தானே விமரிசை செய்திருந்தால் அது யாருக்கு அப்படி அனுப்பப்படுகிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் பிராதுக்காரனை மறுபடியும் விமரிசை செய்யக் கடமைப்பட்டவரல்ல.

கேஸைப் பிடிக்க அதிகாரமில்லாத மாஜிஸ்ட்ரேட் நடத்துவது.

201. (1) யாதொரு கேஸை விசாரிக்க அதிகாரமில்லாத மாஜிஸ்ட்ரேட்டுக்கு எழுத்துமூலமாய் பிராதுசெய்யப்பட்டிருந்தால் அவர் அந்தப் பிராது திரும்பக் கொடுத்துவிடப்பட்டதென்று அதன்மேல் எண்டார்ஸ்செய்து தகுந்த அதிகாரமுடைய கோர்ட்டாரிடத்தில் கொடுத்துக்கொள்ளப்படுவதற்காக அதைத் திரும்பக் கொடுத்துவிடவேண்டும்.

(2) அந்தப் பிராது எழுத்துமூலமாய்ச் செய்யப்பட்டிராவிட்டால் அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் பிராது கொடுப்பவனைத் தகுதியான கோர்ட்டுக்கு போகும்படி உத்தரவுசெய்யலாம்.

கட்டளை பிறப்பிப்பதை நிறுத்திவைப்பது.

202. (1) யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர்-பிடிக்கத் தாம் அதிகாரம் பெற்றிருக்கிற யாதொரு குற்றத்தைக் குறித்த பிராதையாவது, 192-வது பிரிவின்படி தமக்கு அனுப்பப்பட்டிருக்கிற யாதொரு பிராதை யாவது வரப்பெற்றுக்கொள்வதன்மேல், தமக்குத் தகுதியாகத்தோற்றுகிறபடி, எவன்மேல் பிராதுசெய்யப்பட்டதோ அவனை ஹாஜராகும்படி கட்டாயப்படுத்துவதற்கு கட்டளை பிறப்பிப்பதை நிறுத்திவைத்து, அந்தப் பிராது யதார்த்தமோ அபத்தமோ வென்று நிச்சயித்தறியும்பொருட்டு, அந்தக் கேஸை அவர் தாமே விசாரணை செய்யலாம், அல்லது அவர் மூன்றாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டல்லாமல் வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாயிருந்தால், தமக்கு கீழ்ப்பட்ட யாதொரு மாஜிஸ்ட்ரேட்டையாகிலும் யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனையாகிலும் தமக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி வேறே யாதொரு நபரையாகிலும் விசாரணை பண்ணும்படியோ அல்லது முதல் விசாரணை செய்யும்படியோ கட்டளையிடலாம்; அந்தப்படி செய்வதற்குள்ள நியாயங்களை எழுதிவைக்கவேண்டும்.

ஆனால், ஒரு கோர்ட்டாரால் பிராதுசெய்யப்பட்டிருக்கிற விஷயத்தில் தவிர, மற்றப்படி 200-வது பிரிவின் நிபந்தனைகளின்படி பிராதுக்காரனை பிரமாணத்தின்மேல் விசாரணை செய்திருந்தாலொழிய, அப்படிப்பட்ட கட்டளை எதுவும் செய்யவேண்டியதில்லை.

(2) மாஜிஸ்ட்ரேட் அல்லது போலீஸ் உத்தியோகஸ்தனல்லாத வேறே யாதொரு நபர் இந்தப் பிரிவின்படி விசாரணை பண்ணினும் முதல் விசாரணை செய்தாலும், அப்படிப்பட்ட நபர்-வாரண்டில்

லாமல் பிடிப்பதற்குண்டான அதிகாரம் அவருக்கு இராதே தவிர, போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்கு இந்தக் கோடினு லுண்டாகிய மற்ற சகல அதிகாரங்களையும் செலுத்தவேண்டும்.

(2-a) இந்தப் பிரிவின்படி ஒரு கேஸைக்குறித்து விசாரணை செய்கிற யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர்-தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற பக்ஷத்திலே, பிரமாணத்தின் மேல் சாட்சிகளின் சாட்சித்தை எடுத்துக்கொள்ளலாம்.

(3) கல்கத்தா-பம்பாய்-இந்தப் பட்டணங்களிலுள்ள போலீஸாருக்குங்கூட இந்தப்பிரிவு பிரயோகப்படுகிறது.

பிராதைத் தள்ளிவிடுவது.

203. யாருக்கு முன்பாகப் பிராதுசெய்யப்படுகிறதோ அல்லது யாருக்கு விசாரணைக்காக அது அனுப்பப்பட்டிருக்கிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர், பிராதுக்காரன் பிரமாணத்தின்மேல் சொல்லும் (ஏதேனும்) சங்கதியையும், 202-வது பிரிவின்படி இதற்குமுன் செய்யப்பட்ட (ஏதேனும்) முதல் விசாரணை அல்லது விசாரணையின் முடிவை யோசித்த பின்பும், நடவடிக்கை நடத்துவதற்குப் போதுமான முகாந்தரமில்லையென்று அவருக்குத் தோற்றினால், அந்தப் பிராதைத் தள்ளிவிடலாம். அப்படிப்பட்ட விஷயத்தில் தாம் அவ்வாறு செய்வதற்குத் தமக்குள்ள நியாயங்களைச் சங்கிரகமாக ரிகார்ட்செய்யவேண்டும்.

17-ம் அத்தியாயம்.

மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு முன்பாக நடவடிக்கைகள் ஆரம்பிப்பதைக் குறித்து.

கட்டளை பிறப்பிப்பது.

204. (1) யாதொரு குற்றத்தைக்குறித்த பிராதைப் பிடிக்கிற மாஜிஸ்ட்ரேட்டானவர் நடவடிக்கை நடத்துவதற்குப் போதுமான முகாந்தரமிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டு, அந்த கேஸானது இரண்டாவது ஷெட்யூல் நான்காவது கலத்தின்படி முதலிலே ஸம்மன் பிறப்பிக்கப்படவேண்டிய கேஸாயிருப்பதாகத் தோற்றினால், அவர் குற்றஞ்சாட்டப்பட்டவன் ஹாஜராவதற்காக ஸம்மன் பிறப்பிக்கவேண்டும். அந்தக் கேஸானது அந்தக் கலத்தின்படி முதலிலே வாரன்ட் பிறப்பிக்கப்படவேண்டிய கேஸாயிருப்பதாகத் தோற்றினால், அவர் குற்றஞ்சாட்டப்

பட்டவனைத் தமக்கு முன்பாகவாவது (தமக்கு அதிகாரமில்லாதிருக்கும் பட்சத்தில்) தகுந்த அதிகாரமுடைய வேறே மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகவாவது ஓர் காலத்தில் கொண்டுவரும்படி செய்யும்பொருட்டாகிலும் ஹாஜராகும்படி செய்யும்பொருட்டாகிலும், வாரன்ட் பிறப்பிக்கலாம்; அல்லது தமக்கு யுக்தமாகத் தோற்றினால் ஸம்மன் பிறப்பிக்கலாம்.

(2) இந்தப் பிரிவிலுள்ள தெதனாலும் 90-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்குப் பாதகமுண்டாவதாக எண்ணக்கூடாது.

(3) தற்காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற யாதொரு சட்டத்தின் எவ்வித ப்ராஸெஸ் கட்டணங்களாவது இதர கட்டணங்களாவது செலுத்தவேண்டியிருந்தால், அக்கட்டணங்கள் செலுத்தப்படும் வரையில் ப்ராஸெஸ் என்னும் கட்டளைப் பிறப்பிக்கக் கூடாது; மேலும், அக்கட்டணங்கள் நியாயமான காலத்திற்குள் செலுத்தப்படாவிட்டால் மாஜிஸ்ட்ரேட்டானவர் பிராதைத் தள்ளி விடலாம்.

குற்றஞ்சாட்டப்பட்டவன் நேராய் ஹாஜராக வேண்டியதில்லையென்று மாஜிஸ்ட்ரேட் உத்தரவு செய்யலாம்.

205. (1) மாஜிஸ்ட்ரேட் ஸம்மன் பிறப்பித்தால் அவர் தமக்குக் காரணம் தோற்றுகிற பட்சத்தில், குற்றஞ்சாட்டப்பட்டவன் நேரில் ஹாஜராகவேண்டியதில்லையென்று நிவர்த்தித்து அவனுக்குப் பர்த்தியாய் அவனுடைய ப்ளீடர் ஹாஜராகலாமென்று அவனுக்குச் செலவுகொடுக்கலாம்.

(2) ஆனால், கேஸை விசாரணையாவது பரிசீலனையாவது செய்கிற மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றினால், நடவடிக்கை நடந்துகொண்டிருக்கையி லெப்போதாகிலும் குற்றஞ்சாட்டப்பட்டவனை நேரில் ஹாஜராகச்சொல்லி உத்தரவுசெய்யலாம். மேலும், அவசியமானால் அப்படி ஹாஜராகும்படி இதில் முன்னமே சொல்லியிருக்கிற விதமாய் நிர்ப்பந்திக்கலாம்.

18-ம் அத்தியாயம்.

ஸெஷன் கோர்ட்டாராலாவது ஹைகோர்ட்டாராலாவது பரிசீலனை செய்யப்படத்தக்க கேஸுகளை விசாரணை பண்ணுவதைக் குறித்து.

206. (1) யாதொரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாவது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாவது, இந்த விஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டாரால் அதிகாரங் கொடுக்கப்பெற்ற (மூன்றாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாயிராத) யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாவது-ஸெஷன் கோர்ட்டாராலாகிலும் ஹைகோர்ட்டாராலாகிலும் பரிசீலனை செய்யப்படத்தக்க யாதொரு குற்றத்தைக்குறித்து அப்படிப்பட்ட கோர்ட்டுக்குப் பரிசீலனைக்காக எவனையாவது கம்மிட்பண்ணலாம்.

பரிசீலனைக்குக் கம்மிட் பண்ண அதிகாரம்.

(2) ஆனால், மற்றப்படி இதில் சொல்லியிருக்கிறபடிக்குத் தவிர, ஸெஷன் கோர்ட்டாரால் பரிசீலனை செய்யப்படத்தக்கவனெவனையும் பரிசீலனைக்காக ஹைகோர்ட்டுக்குக் கம்மிட்பண்ணக்கூடாது.

207. ஸெஷன் கோர்ட்டாராலாவது ஹைகோர்ட்டாராலாவது மாத்திரம் கேஸ் பரிசீலனை செய்யப்படத்தக்கதாயிருந்தாலும், அதை அந்தக் கோர்ட்டார் பரிசீலனைசெய்யவேண்டியதென்று மாஜிஸ்ட்ரேட் அபிப்பிராயப்பட்டாலும், மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு முன்பாக நடத்தப்படும் விசாரணைகளில் அடியில் கண்டிருக்கிற நடவடிக்கையை அனுசரிக்கவேண்டும்.

கம்மிட் பண்ணுவதற்கு முன்னிட்ட விசாரணையில் நடவடிக்கை.

208. (1) குற்றஞ்சாட்டப்பட்டவன் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன் ஹாஜராவதன்மேலாவது கொண்டுவரப்படுவதன்மேலாவது, அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் பிராதுக்காரனெவனாகிலு மிருந்தால் அவன் சொல்வதைக் கேட்கவும், பிராது பட்சத்திலாவது குற்றஞ்சாட்டப்பட்டவன் பட்சத்திலாவது கொண்டுவரப்படுகிற சகல சாட்சியத்தையுமாகிலும் தான் வரவழைத்திருக்கும்படியான சகல சாட்சியத்தையுமாகிலும் இதில் பின்னால் சொல்லியிருக்கிற விதமாய் வாங்கவும் தொடங்கவேண்டும்.

கொண்டுவரப்படும் சாட்சியத்தைக் கேட்பது.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவன் பிராது பட்சத்திலிருக்கிற சாட்சிகளைச் சவால்செய்யலாம்; அந்த விஷயத்தில் அவர்களைப் பிராது நடத்துவோன் திரும்ப விமரிசை செய்யலாம்.

பின்னும் சாட்சியங் கொண்டுவரும்படி கட்டளை.

(3) பிராதுக்காரனாவது பிராது நடத்துகிற உத்தியோகஸ்தராவது குற்றஞ் சாட்டப்பட்டவனாவது யாதொரு சாட்சியை ஹாஜராகும்படிக்காகிலும் யாதொரு தஸ்தாவேஜையாவது வஸ்துவையாவது கொண்டுவந்து காட்டும்படிக்காகிலும் நிர்ப்பந்திப்பதற்குக் கட்டளை பிறப்பிக்கும்படி மாஜிஸ்ட்ரேட்டுக்கு மனுசெய்துகொண்டால், அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்படிப்பட்ட கட்டளை பிறப்பிப்பது அனாவசியமென்று தமக்குத் தோற்றாவிட்டால், அந்த கட்டளையைப் பிறப்பிக்கவேண்டும்; அது அனாவசியமென்று தோற்றுகிற பட்சத்தில் அதற்குண்டான ஹேதுக்களை எழுதிவைக்கவேண்டும்.

(4) ராஜதானி மாஜிஸ்ட்ரேட் தமக்குண்டான ஹேதுக்களை எழுதிவைக்கவேண்டியிருப்பதாக இந்தப் பிரிவில் சொல்லியிருப்பதெதனாலும் என்னக்கூடாது.

இன்னபடிக்கானால் குற்றஞ்சாட்டப்பட்டவனை விடுதலைசெய்வது.

209. (1) 208-வது பிரிவு (1),(3) குறிப்பிட்ட உட்பிரிவுகளில் கண்டிருக்கிற சாட்சியம் வாங்கப்பட்டு, குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு விரோதமாய்ச் சாட்சியத்திலே தெரியவருகிற ஏதாவது சங்கதிக்குச் சமாதானஞ் சொல்ல அவனுக்குச் சமயங்கிடைக்கும்படி அவர் அவனை (அவசியமாயிருந்தால்) விமரிசை செய்திருக்கும்போது, அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் குற்றஞ் சாட்டப்பட்டவனைப் பரிசிலனைக்குக் கமிட் பண்ணுவதற்குப் போதுமான முகாந்தரமில்லையென்று கண்டுகொண்டால், அப்படிப்பட்டவனைத் தமக்கு முன்பாகவாவது வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகவாவது பரிசிலனை செய்யவேண்டுமென்று தமக்குத் தோற்றாதபட்சத்தில் அவர் தமக்குள்ள நியாயங்களை ரெகார்ட்செய்து அவனை விடுதலை செய்யவேண்டும்; பரிசிலனை செய்யவேண்டுமென்று தோற்றினால் அவர் அந்தப்படியே நடத்தவேண்டும்.

(2) குற்றஞ் சாட்டுக்கு ஆதாரமில்லையென்று மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோற்றினால், அந்தக்கேஸ் நடக்கிற முன்னிட்ட எந்த தசையிலாவது, குற்றஞ்சாட்டப்பட்டவனை விடுதலை செய்வதற்கு அவருக்

குந் நடையுண்டாவதாக இந்தப்பிரிவிற் சொல்லியிருப்பதெதனுலும் என்னக்கூடாது; குற்றஞ்சாட்டுக்கு ஆதாரமில்லையென்று தமக்குத் தோற்றுகிற முகாந்தரங்களை அந்த மாஜிஸ்ட்ரேட் எழுதிவைக்கவேண்டும்.

இன்னபடிக்காரல் குற்றபத்திரிகை எழுதுவது.

210. (1) அப்படிப்பட்ட சாட்சியம் வாங்கி, அப்படிப்பட்ட விமரிசை (ஏதாவது) செய்தால் அதையுஞ்செய்த பின்பு, குற்றஞ் சாட்டப்பட்டவனைப் பரிசீலனைக்குக் கம்மிட்பண்ணப் போதுமான முகாந்தரமிருக்கிறதென்று மாஜிஸ்ட்ரேட் திருப்தியடைந்தால், அவர் நேரஸ்தன்மேல் சாட்டப்பட்ட குற்றம் இன்னதென்று கண்டு தம் கைப்படக் குற்றபத்திரிகை எழுதவேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டவனுக்குக் குற்றபத்திரிகையைப் படித்துக்காட்டுவதும் அவனுக்கு நகல் கொடுப்பதும்.

(2) அப்படிப்பட்ட குற்றபத்திரிகை தயார் செய்யப்பட்டவுடனே, குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு அதைப் படித்து விவரமாய்ச் சொல்லவேண்டியது; அதற்கு நகல்வேண்டுமென்று அவன் கேட்டால் கட்டணம் ஒன்றும் வாங்காமலே அதை அவனுக்குக் கொடுக்கவேண்டும்.

பரிசீலனை செய்யப்படுகையில் குற்றஞ் சாட்டப்பட்டவனுடைய பட்சத்தில் சொல்லவேண்டிய சாட்சிகளின் ஜாபிதா.

211. (1) குற்றஞ் சாட்டப்பட்டவன் பரிசீலனை செய்யப்படுகையில் சாட்சி சொல்லுவதற்காக அவன் யாரையாகிலும் ஸம்மனனுப்பி வரவழைக்கவேண்டுமென்று கோரினல், அப்படிப்பட்ட சாட்சிகளின் பெயர் முறையை உடனே சொல்லும்படியாவது எழுதிக்கொடுக்கும்படியாவது அவனுக்கு உத்தரவு செய்யவேண்டும்.

பின்னும் வேறே ஜாபிதா.

(2) மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றினல், பின்பு எப்போதாவது பின்னும் வேறே சாட்சி ஜாபிதா கொடுக்கும்படி குற்றஞ் சாட்டப்பட்டவனுக்குச் செலவு கொடுக்கலாம்; ஹைகோர்ட்டுக்கு முன்பாகப் பரிசீலனைக்குக் குற்றஞ்சாட்டப்பட்டவன் கம்மிட் பண்ணப்பட்டிருந்தால், அவனுடைய பரிசீலனையில் சாட்சிசொல்லுவதற்காக அவன் யாரை ஸம்மனனுப்பி வரவழைக்கவேண்டுமென்று கோருகிறுனே அந்த சாட்சிகளைக்குறித்துப் பின்னும் வேறே ஜாபிதாவை அப்படிப்பட்ட பரிசீலனைக்கு முன்னமே எப்போதாவது க்ளார்க் ஆவ்தி

க்ரவுன் என்னும் உத்தியோகஸ்தரிடத்தில் கொடுப்பதற்கு அவனுக்குத் தடையுண்டாவதாக இந்தப் பிரிவிற் சொல்லியிருப்பதெதனுலும் எண்ணக்கூடாது.

அப்படிப்பட்ட சாட்சிகளை விமரிசைசெய்ய மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரம்.

212. மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத்தோற்றினல், 211-வது பிரிவின்படி தம்மிடத்தில் கொடுக்கப்பட்ட யாதொரு ஜாபிதாவில் கண்டிருக்கிற சாட்சி எவரையாவது ஸம்மனனுப்பி வரவழைத்து விமரிசை செய்யலாம்.

கம்மிட் பண்ணுகிற உத்திரவு.

213. (1) குற்றஞ்சாட்டப்பட்டவன் 211-வது பிரிவின் பிரகாரம் ஜாபிதா கொடுக்கும்படி உத்தரவு செய்யப்படுவதன்மேல் அப்படி ஜாபிதாகொடுக்க அவன் மறுத்திருந்தாலும், அவன் அப்படிப்பட்ட ஜாபிதா கொடுத்திருந்து, அதில் கண்டிருக்கிற சாட்சிகளில் யாரையாவது விமரிசைசெய்ய மாஜிஸ்ட்ரேட் விரும்புகிற பட்சத்தில் அப்படிப்பட்டவர்கள் 212-வது பிரிவின்படி ஸம்மனனுப்பி வரவழைத்து விமரிசை செய்யப்பட்டிருந்தாலும்,மாஜிஸ்ட்ரேட்டானவர்(சங்கதிக்குத் தக்கபடி) ஹைகோர்ட்டாராலாவது ஸெஷன் கோர்ட்டாராலாவது பரிசீலனை செய்யப்படுவதற்காகக் குற்றஞ் சாட்டப்பட்டவனைக் கம்மிட் பண்ணுவதற்கு உத்தரவு எழுதலாம்; அப்படிச் செய்கையில் அப்படி கம்மிட் பண்ணுவதற்குண்டான ஹேதுக்களையும் சுருக்கமாய் எழுதவேண்டும். (ஆனல், ராஜதானி மாஜிஸ்ட்ரேட் அப்படி ஹேதுக்களை எழுத வேண்டியதில்லை.)

(2) மாஜிஸ்ட்ரேட்டானவர் குற்றவாளி பட்சத்திலிருக்கும் சாட்சிகளைக்கேட்ட பிறகு குற்றவாளியைக் கம்மிட்செய்வதற்குப்போதுமான முகாந்தரங்கள் இல்லையென்று தாம் திருப்தியடைந்தால் அவர் குற்றபத்திரிகையை ரத்துசெய்து குற்றவாளியை விடுதலைசெய்யலாம்.

214. [இந்த பிரிவு 1923-ம்வருஷத்து 12-வது ஆக்டால் ரத்து.]

213-வது பிரிவின்படி செய்யப்பட்ட கம்மிட்மென்டை ரத்து செய்தல்.

215. 213-வது பிரிவின்படி தகுந்த அதிகாரமுடைய மாஜிஸ்ட்ரேட்டினுலாவது, 478-வது பிரிவின்படி ஸிவில் அல்லது ரெவின்யு கோர்ட்டாராவது ஒருதரஞ் செய்யப்பட்ட கம்மிட்மென்டானது ஹைகோர்ட்டாரால் மாத்திரம் சட்ட விஷயத்தைப்பற்றித்தான் ரத்து செய்யப்படக்கூடும்.

குற்றஞ் சாட்டப்பட்டவனைக் கம்மிட் செய்தபோது அவன் பட்சத்துச் சாட்சிகளுக்கு ஹாஜராகும்படி ஸம்மன்.

216. குற்றஞ் சாட்டப்பட்டவன் 211-வது பிரிவின்படி சாட்சி ஜாபிதா கொடுத்திருந்து அவனைப் பரிசீலனைக்குக் கம்மிட் பண்ணியிருந்தால், மாஜிஸ்ட்ரேட்டானவர்-அந்த ஜாபிதாவில் கண்டிருக்கிற சாட்சிகளில் தமக்குமுன் ஹாஜராகாதிருக்கிறவர்களுக்கு, குற்றஞ் சாட்டப்பட்டவன் எந்தக் கோர்ட்டுக்குக் கம்மிட்செய்யப்பட்டிருக்கிறனே அதற்கு முன்பாக ஹாஜராகும்படி ஸம்மனனுப்பவேண்டும்.

ஆனல், குற்றஞ் சாட்டப்பட்டவன் ஹைகோர்ட்டுக்குக் கம்மிட் செய்யப்பட்டிருந்தால், தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற பட்சத்தில் மாஜிஸ்ட்ரேட்டானவர்- அந்த சாட்சிகளை க்ளர்க் ஆவ் தி க்ரௌன் என்னும் உத்தியோகஸ்தர் ஸம்மனனுப்பி வரவழைக்கும்படி விட்டுவிடலாம் ; அப்பிரகாரமே அந்த சாட்சிகள் ஸம்மனனுப்பி வரவழைக்கப்படலாம் :

பணம் கட்டினலொழிய அனுவசியமான சாட்சியை ஸம்மனனுப்பி வரவழைக்க நிராகரிப்பது.

மேலும், அலைக்கழிப்பு அல்லது ஆலசியம் உண்டுபண்ணும் பொருட்டாவது, நீதி நடக்கவொட்டாமல் செய்ய வேண்டுமென்ருவது யாதொரு சாட்சியை ஜாபிதாவில் சேர்ந்திருப்பதாக மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோற்றினல், அவர்-அந்த சாட்சி முக்கியமென்று நம்புவதற்கு நியாயமான முகாந்தரமிருந்தால் அதைத் தமக்குத் திருப்தியாகும்படி தெரிவிக்கச் சொல்லி, குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு உத்தரவு செய்யலாம் ; அப்படி தமக்குத் திருப்தியாகாவிட்டால், (சாட்சியை வரவழைக்க நிராகரிப்பதற்குத் தமக்குள்ள ஹேதுக்களை ரிகார்ட்செய்து) அந்த சாட்சிக்கு ஸம்மனனுப்ப நிராகரிக்கலாம் ; அல்லது அந்த சாட்சியை ஹாஜர் செய்விப்பதைப்பற்றிப் பிடிக்கும் செலவுக்காகவும் தகுதியான மற்றெல்லாச் செலவுகளுக்காகவும் அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு எவ்வளவு அவசியமாகத் தோற்றுகிறதோ அவ்வளவு பணத்தைக் கட்டச் சொல்லி அவனுக்கு ஸம்மனனுப்புவதற்கு முன்னமே உத்தரவு செய்யலாம்.

பிராதுக்காரர்களிடத்திலும் சாட்சிகளிடத்திலும் முச்சிலிக்கா வாங்குவது

217. (1) யார் ஸெஷன் கோர்ட்டாருக்கு முன்பாகவாவது ஹைகோர்ட்டாருக்கு முன்பாகவாவது அவசியமாய் ஹாஜராக வேண்டியவர்களாயும், மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் ஹாஜராகியுமிருக்கிருர்களோ அப்

படிப்பட்ட பிராதுக்காரர்களும் பிராது பட்சத்திலும் குற்றஞ் சாட்டப்பட்டவன் பட்சத்திலுமிருக்கிற சாட்சிகளும், சங்கதிக்குத் தக்கபடி பிராதை நடத்தவாகிலும் சாட்சி சொல்லவாகிலும் ஸெஷன் கோர்ட்டிலாவது ஹைகோர்ட்டிலாவது அழைக்கப்படும்போது ஹாஜராவதாகப் பிணைப்பட்டு அவருக்கெதிரில் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கவேண்டும்.

ஹாஜராகவாவது முச்சிலிக்கா எழுதிக் கொடுக்கவாவது மாட்டேனென்றால் காவலில் வைப்பது.

(2) யாதொரு பிராதுக்காரனாவது சாட்சியாவது ஸெஷன் கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் ஹைகோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் ஹாஜராகமாட்டேனென்றாலும், மேற்சொல்லியபடி முச்சிலிக்கா எழுதிக் கொடுக்கமாட்டேனென்றாலும், அவன் அப்படிப்பட்ட முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கிறவரையிலாவது ஸெஷன் கோர்ட்டிலாகிலும் ஹைகோர்ட்டிலாகிலும் அவன் ஹாஜராகவேண்டிய காலம் வரையிலாவது அவனை மாஜிஸ்ட்ரேட்டானவர் காவலில் வைத்துவைக்கலாம்; அப்படி அவன் ஹாஜராகவேண்டிய காலத்தில் சங்கதிக்குத் தக்கபடி ஸெஷன்கோர்ட்டுக்காவது ஹைகோர்ட்டுக்காவது மாஜிஸ்ட்ரேட்டானவர் அவனைக் காவலோடு அனுப்பவேண்டும்.

கம்மிட்மென்டை இன்னபடிக் காணுல் தெரிவிப்பது.

218. (1) குற்றஞ் சாட்டப்பட்டவன் பரிசீலனைக்குக் கம்மிட் பண்ணப்பட்டால், மாஜிஸ்ட்ரேட்டானவர்-இது விஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டால், நியமிக்கப்படுகிற நபருக்கு அந்த கம்மிட்மென்ட் சங்கதியும் குற்ற பத்திரிகை சங்கதியும் முன்னதாகவே தெரிந்திருக்கிறதென்று தமக்குத் திருப்திகரமாய்த் தோற்றவிடில், அந்த கம்மிட்மென்ட் சங்கதியையும் குற்ற பத்திரிகை மாதிரியாகவே அந்த குற்றத்தையுங் கண்டெழுதி மேற்படி நபருக்கு ஒரு உத்தரவு அனுப்பவேண்டும்;

குற்ற பத்திரிகை முதலானவைகளை ஹைகோர்ட் அல்லது ஸெஷன் கோர்ட்டுக்கு அனுப்புவது.

மேலும், குற்ற பத்திரிகையையும் விசாரணையைச்சேர்ந்த ரிகார்டையும் சாட்சியமாகக் காட்டவேண்டியதாயிருக்கிற யாதொரு ஆயுத முதலிய சாமானையும், ஸெஷன் கோர்ட்டாரிடத்திற்காவது, ஹைகோர்ட்டுக்குக் (கம்மிட்செய்திருக்கிற பட்சத்தில்) க்ளர்க் ஆவ் தி க்ரவுன் அல்லது இது விஷயத்தில் ஹை

கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிடத்திற்காவது அனுப்பவேண்டும்.

இங்லீஷில் தர்ஜுமா செய்து ஹைகோர்ட்டுக்கு அனுப்புவது.

(2) ஹைகோர்ட்டுக்குக் கம்மிட் செய்யப்பட்டால், அந்த ரிகார்டில் யாதொரு பாகமானது இங்கிலீஷிலிராத பட்சத்தில், அதற்கு இங்கிலீஷ் தர்ஜுமாவை அந்த ரிகார்டோடுகூட அனுப்பவேண்டும்.

பின்பு சேர்க்கப்பட்ட சாட்சிகளை ஸம்மனனுப்பி வரவழைக்க அதிகாரம்.

219. (1) கம்மிட் செய்தபிறகு பரிசிலனை ஆரம்பத்திற்குமுன்னமே, பின்னும் சேர்க்கப்பட்ட சாட்சிகளை கம்மிட் செய்கிற மாஜிஸ்ட்ரேட்டாவது, அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட் இல்லாவிட்டால் வேறே அதிகாரங் கொடுக்கபெற்ற அல்லது 206-வது பிரிவின்படி அனுமதிக்கப்பட்ட யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர், தமக்குத் தகுதியென்று தோற்றினுல் ஸம்மனனுப்பி வரவழைத்து விமரிசை செய்யலாம்; மேலும், ஹாஜராகிச் சாட்சி சொல்லும்படி இதில் முன்னமே கண்டிருக்கிற விதமாய் அவர்களை உடன்படுத்தலாம்.

(2) அப்படிப்பட்ட விமரிசையைக் கூடுமானுல் குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கெதிரில் நடத்தவேண்டும்; அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டா யிராதபட்சத்தில், அந்த சாட்சிகள் சொல்லுகிற சாட்சியத்திற்கு ஒரு நகலைக்குற்றஞ் சாட்டப்பட்டவனுக்குச் செலவில்லாமல் கொடுக்கவேண்டும்.

பரிசீலனை நடக்கிறவரையில் குற்றஞ் சாட்டப்பட்டவனைக் காவலில் வைப்பது.

220. பரிசீலனை நடக்கிறவரையிலும் பரிசீலனை நடக்கும்போதும், ஜாமீன் வாங்குவதைக் குறித்து இந்த சட்டத்திற் சொல்லியிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு மாஜிஸ்ட்ரேட்டானவர் வாரண்ட் எழுதி அதைக்கொண்டு காவலுக்குக் குற்றஞ் சாட்டப்பட்டவனைக் கம்மிட் பண்ணவேண்டும்.

---

19 - ம் அத்தியாயம்.

குற்றபத்திரிகையைக் குறித்து.

குற்றபத்திரிகை எழுதிகிற விதம்.

குற்ற பத்திரிகையில் குற்றத்தை எழுதுவது.

221. (1) குற்றஞ்சாட்டப்பட்டவன்மேல் சொல்லப்படுகிற குற்றத்தை, இந்த சட்டப்படியான ஒவ்வொரு குற்றப் பத்திரிகையிலும் எழுதவேண்டும்.

குற்றத்திற் குறித்திருக்கிற பெயரைக் கண்டெழுதினால் போதும்.

(2) எதனாலே குற்றம் ஏற்பாடாகிறதோ அந்த சட்டத்திலே அதற்குக் குறிப்பான யாதொருபெயர் சொல்லியிருந்தால், அந்தப்பெயரினாலே மாத்திரம் அந்தக் குற்றத்தைக் குற்றபத்திரிகையிலெழுதலாம்.

குற்றத்திற்குக் குறிப்பான பெயர் இல்லாவிட்டால் அதை இன்னபடி எழுதுவது.

(3) எதனாலே குற்றம் ஏற்பாடாகிறதோ அந்த சட்டத்திலே அதற்குக் குறிப்பான யாதொரு பெயர்சொல்லியிராவிட்டால் குற்றஞ் சாட்டப்பட்டவன் மேல் சுமத்தப்பட்ட சங்கதியைக்குறித்து அவனுக்குத் தெரிவிப்பதற்கு அந்த குற்றத்தின் விவரத்திலே எவ்வளவு வேண்டியதோ அவ்வளவு எழுதவேண்டும்.

(4) எதற்கு விரோதமாய்க் குற்றஞ் செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறதோ அந்த சட்டத்தையும் அந்த சட்டத்தின் பிரிவையும் குற்றபத்திரிகையில் கண்டெழுதவேண்டும்.

குற்றச் சாட்டில் குறிப்பாய் அடங்கியிருப்பது இன்னது.

(5) குற்றஞ் சாட்டப்பட்டதென்கிற சங்கதியாவது சாட்டப்பட்ட குற்ற ஏற்பாட்டுக்குச் சட்டப்படி வேண்டிய சகல சட்டசம்பந்தமான திட்டங்களும் இந்த பலான கேஸிலே நிறைவேறவிருக்கிறதென்று சொல்லுவதற்குச் சமானமாகும்.

குற்ற பத்திரிகை இன்ன பாஷையில் எழுதுவது.

(6) ராஜதானிகளிலே குற்றபத்திரிகையை இங்க்லீஷில் எழுதவேண்டும்; மற்ற இடங்களிலே அதை இங்க்லீஷிலாவது கோர்ட்டில் வழங்குகிற பாஷையிலாவது எழுதவேண்டும்.

முன்னே சிட்சையாயிருப்பதை இன்னபடிக்காணுல் கண்டெழுதுவது.

(7) குற்றஞ் சாட்டப்பட்டவன் யாதொரு குற்றத்தைக் குறித்து முன்னதாய்க் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டு, அந்தப்படி முன்னதாய்க் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் காரணத்தினுல் பிந்திய யாதொரு குற்றத்துக்காக அதிக தண்டனையாவது வேறே வகையான தண்டனையாவது விதிக்கப்படுவதற்குட்பட்டிருந்து, பிந்திய குற்றத்துக்காக விதிக்க கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றும் தண்டனையை உறுத்தும்பொருட்டு அப்படிப்பட்ட முந்திய தீர்மானத்தை ரூபிக்க உத்தேசித்தால், அப்படிப்பட்ட முந்திய தீர்மான சங்கதியையும் அது செய்யப்பட்ட தேதியையும் இடத்தையும் குற்றபத்திரிகையில் எழுதவேண்டும். மேலும், அது எழுதப்பட்டிராதிருந்தால், சிட்சை விதிக்கப்படுவதற்கு முன்னமோ எப்போதாவது அதைக் கோர்ட்டார் சேர்க்கலாம்.

திருஷ்டாந்தங்கள்.

(a) ஏ-என்பவன் பி-என்பவனைக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்படுகிறுன். இது ஏ-என்பவனுடைய செய்கையானது இந்தியன் பினல் கோடின் 299-வது 300-வது பிரிவுகளில் கொலையைக் குறித்துச் சொல்லியிருக்கிற விவரணத்திற் குட்பட்டதென்றும், அந்தக் கோடிலுள்ள பொது விலக்குகளில் எதற்காவது உட்படவில்லையென்றும், 300-வது பிரிவைச் சேர்ந்த ஐந்து விலக்குகளில் எதற்காவது உட்படவில்லை அல்லது 1-வது விலக்குக் குட்பட்டால் அந்த விலக்கைச் சேர்ந்த மூன்று நிபந்தனைகளில் எதுவாவதொன்று அதற்குச் சம்பந்தப்படுகிறதென்றும் சொல்லுவதற்குச் சமானமாகிறது.

(b) சுடுவதற்கான ஆயுதத்தினுலே ஏ-என்பவன் பி-என்பவனுக்குக் மனதாரக் கொடுந்துன்ப முண்டுபண்ணினதாக இந்தியன் பினல் கோட் 326-வது பிரிவின்படி குற்றஞ் சாட்டப்படுகிறுன். இது இந்தியன் பினல் கோட் 335-வது பிரிவில் அந்த விஷயத்தைக்குறித்துச் சொல்லப்படவில்லையென்றும் பொது விலக்குகள் அதற்குச் சம்பந்தப்படவில்லையென்றும் சொல்லுவதற்குச் சமானமாகிறது.

(c) ஏ-என்பவன், கொலை-மோசஞ்செய்வது-திருட்டு-வெருட்டி வாங்குவது விபசாரம் அல்லது அநியாயமாய் பயப்படுத்துவது அல்லது மாறுபாடான சொத்து அடையாளத்தை உபயோகிப்பதென்னும் குற்றஞ் சாட்டப்படுகிறுன். இந்தியன் பினல் கோடில் அந்தக்குற்றங்களைக் குறித்துச் சொல்லியிருக்கிற விவரணங்களை உதகரிக்காமல். ஏ-என்பவனது கொலை அல்லது மோசஞ்செய்வது, அல்லது திருட்டு அல்லது வெருட்டிவாங்குவது, அல்லது விபசாரம், அல்லது அநியாயமாய் பயப்படுத்துவது என்னும் குற்றஞ்செய்தானென்ருவது மாறுபா

டான சொத்து அடையாளத்தை உபயோகித்தானென்றுவது குற்றபத்திரிகையில் எழுதலாம்; ஆனால் எந்த பிரிவுகளின்படி அந்த குற்றத்திற்காகத் தண்டனை விதிக்கத் தக்கதோ அந்தப் பிரிவுகளைப் பிரதி விஷயத்திலும் குற்றபத்திரிகையில் உதாரிக்கவேண்டும்.

(d) ஸர்க்கார் உத்தியோகஸ்தனுக்குச் சட்டப்படிக்குள்ள அதிகாரத்தினாலே சொத்து விற்கப்படுகையில் அந்த விற்பனையை வேண்டுமென்று தடுத்ததாக எ-என்பவன் இந்தியன் பினல்கோட் 184-வது பிரிவின்படி குற்றஞ்சாட்டப்படுகிறான். குற்றபத்திரிகையில் அந்த சொத்துகளையே எழுதவேண்டும்.

காலத்தையும் இடத்தையும் நபரையும் குறித்து விவரங்கள்.

222. (1) சாட்டப்பட்ட குற்றம் செய்யப்பட்ட காலத்தையும் இடத்தையும், எந்த நபருக்காவது அது செய்யப்பட்டிருந்தால் அந்த நபர் அல்லது எந்தப் பொருள் விஷயமாயாவது அது செய்யப்பட்டிருந்தால் அந்தப் பொருளையுங்குறித்து, குற்றஞ் சாட்டப்பட்டவன்மேல் பிராது செய்யப்படுகிற சங்கதியை அவனுக்குத் தெரிவிப்பதற்கு நியாயமாய்ப் போதுமானதாயிருக்கிற விவரங்களைக் குற்றபத்திரிகையில் எழுதவேண்டும்.

(3) குற்றஞ்சாட்டப்பட்டவன் பணவிஷயமாய் அயோக்கியமாக நம்பிக்கைத்துரோகம் செய்தானென்றுவது அயோக்கியமாய்த் தன் சொந்தத்திற்கு உபயோகித்துக்கொண்டானென்றுவது குற்றஞ் சாட்டப்பட்டால், இன்னின்ன தொகைகளென்றுகிலும் சரியான தேதிகளையாகிலும் குறிக்காமலே, எதன் விஷயமாகச் சாட்டப்பட்ட குற்றம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறதோ அந்த மொத்தத் தொகையையும் எந்தத் தேதிகளின் இடையிலே குற்றம் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தத் தேதிகளையும் குறித்தால் போதுமானதாகும்; அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட குற்றபத்திரிகையானது 234-வது பிரிவின் அர்த்தத்தின்படி ஒரு குற்றத்தின் குற்றபத்திரிகையாக எண்ணப்படவேண்டும்:

ஆனால், அந்தத் தேதிகளில் முதல் தேதிக்கும் கடைசி தேதிக்கும் இடையிலுள்ள காலமானது ஒரு வருஷத்திற்கு அதிகப்பட்டிருக்கக்கூடாது

இன்னடிக்காரணல் குற்றஞ்செய்த விதத்தைக் கண்டெழுதவேண்டும்.

223. கேஸின் தன்மையானது 221-வது 222-வது பிரிவுகளில் கண்டிருக்கிற விவரங்கள் குற்றஞ் சாட்டப்பட்டவன்மேல் பிராது செய்யப்படுகிற சங்கதியை அவனுக்குச் செவ்வையாய்த் தெரிவிப்பதற்குப் போ

தாமையாயிருக்கும்படியானதானால், சாட்டப்பட்டகுற்றம் செய்யப்பட்ட விதத்தைக் குறித்து அப்படித் தெரிவிப்பதற்குப் போதுமானதாயிருக்கும்படியான விவரங்களையும் குற்றபத்திரிகையில் எழுதவேண்டும்.

திருஷ்டாந்தங்கள்.

(a) ஓர்காலத்தில் ஓரிடத்திலே ஒருவித பொருளைத் திருடினதாக எ-என்பவன் குற்றஞ் சாட்டப்படுகிறான். திருடின விதத்தைக் குற்றபத்திரிகையில் எழுதவேண்டியதில்லை.

(b) இன்னகாலத்தில் இன்ன இடத்திலே பி-என்பவனை மோசஞ்செய்ததாக எ-என்பவன் குற்றஞ்சாட்டப்படுகிறான். பி-என்பவனை எ-என்பவன் மோசஞ்செய்த விதத்தைக் குற்றபத்திரிகையில் கண்டெழுதவேண்டும்.

(c) இன்னகாலத்தில் இன்ன இடத்திலே பொய் சாட்சியஞ் சொன்னதாக எ-என்பவன் குற்றஞ் சாட்டப்படுகிறான். எ-என்பவன் சொன்ன சாட்சியத்தில் பொய்யானதென்று சொல்லப்பட்ட பாகத்தைக் குற்றபத்திரிகையில் எழுதவேண்டும்.

(d) இன்னகாலத்தில் இன்ன இடத்திலே ஸர்க்கார் உத்தியோகஸ்தனாகிய பி-என்பவன் தன்னுடைய ஸர்க்கார் அலுவலை நடத்திக்கொண்டிருக்கையில் அவனைத் தடுத்ததாக எ-என்பவன் குற்றஞ் சாட்டப்படுகிறான் பி-என்பவன் அலுவலை நடத்திக்கொண்டிருக்கையில் அவனை எ-என்பவன் தடுத்தவிதத்தைக் குற்றபத்திரிகையில் எழுதவேண்டும்.

(e) இன்னகாலத்தில் இன்ன இடத்திலே பி-என்பவனைக் கொலைசெய்ததாக எ-என்பவன் குற்றஞ் சாட்டப்படுகிறான். பி-என்பவனை எ-என்பவன் கொலை செய்தவிதத்தைக் குற்றபத்திரிகையில் எழுதவேண்டியதில்லை.

(f) பி-என்பவனைத் தண்டனையினின்றும் தப்புவிக்கவேண்டுமென்கிற எண்ணத்தோடு சட்டத்திலுள்ள உத்தரவுக்குக் கீழ்ப்படியவில்லையென்பதாக எ-என்பவன் குற்றஞ்சாட்டப்படுகிறான். சாட்டப்பட்ட கீழ்ப்படியாமையையும் அதிக்கிரமிக்கப்பட்ட சட்டத்தையும் குற்றபத்திரிகையில் கண்டெழுதவேண்டும்.

குற்ற பத்திரிகையிலிருக்கும் வார்த்தைகளை எதன்படி குற்றம் தண்டிக்கப்படத்தக்கதோ அந்தசட்டத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம் அர்த்தம் பண்ணுவது.

224. பிரதி குற்றபத்திரிகையிலும் யாதொரு குற்றத்தை விவரிப்பதற்கு உபயோகிக்கப்பட்டிருக்கிற வார்த்தைகள் எதன்படி அந்தக் குற்றம் தண்டிக்கப்படத்தக்கதோ அப்படிப்பட்ட சட்டத்தில் அதற்குச் சொல்லியிருக்கிற அர்த்தத்திலே உபயோகிக்கப்பட்டிருப்பதாக எண்ணப்படும்.

225. குற்றமெழுதப்படுவதிலாவது குற்றபத்திரிகையில் எழுதவேண்டியிருக்கிற விவரங்கள் எழுதப்படுவதினுலாவது நேரிடுகிற எந்த பிசகையும், குற்றத்தை எழுதாமலாவது அந்த விவரங்களை எழுதாமலாவது விட்டுவிடுவதையும், அப்படிப்பட்டதனுலே குற்றஞ் சாட்டப்பட்டவன் வாஸ்தவமாய்த் தப்பாகபோகும்படி செய்யப்பட்டிருந்தாலும், நியாயவழி உண்டானாலுமொழிய, அந்தக்கேஸ் நடத்துகையில் எந்த தெசையிலாவது முக்கியமானதாக எண்ணக் கூடாது.

பிழைகளிருந்தால் இன்னதாகுமென்பது.

திருஷ்டாந்தங்கள்.

(a) எ-என்பவன் "தான் அடைந்தகாலத்தில் கள்ளநாணயமென்று தெரிந்து அப்படிப்பட்டதைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டிருந்ததாக" இந்தியன் பினல்கோட் 242-வது பிரிவின்படி குற்றஞ் சாட்டப்படுகிறான். "மோசடியாக" என்கிற வார்த்தையானது குற்றபத்திரிகையில் விட்டுப்போகிறது. இப்படி விட்டுப்போனதனுலே எ-என்பவன் வாஸ்தவமாய் வழிதப்பிப் போனுனென்று தோற்றினுலொழிய, அந்தப் பிழையை முக்கியமானதாக எண்ணக் கூடாது.

(b) பி-என்பவனை மோசஞ்செய்ததாக எ-என்பவன் குற்றஞ் சாட்டப்படுகிறான்; அவன் பி-என்பவனை மோசஞ்செய்தவிதம் குற்றபத்திரிகையில் எழுதாமலாவதிருக்கிறது அல்லது பிசகாய் எழுதியாவதிருக்கிறது. எ-என்பவன் தன் பட்சத்தில் வாதித்து, சாட்சிகளை அழைத்து, நடந்த காரியத்தைக் குறித்துத் தன் சங்கதிகளைச் சொல்லியிருக்கிறான். மோசஞ் செய்த விதத்தை எழுதாமல் விட்டுவிட்டது முக்கியமானதல்லவென்று கோர்ட்டார் இதனுலே ஊகித்துக்கொள்ளலாம்.

(c) பி-என்பவனை மோசஞ்செய்ததாக எ-என்பவன் குற்றஞ்சாட்டப்படுகிறான்; அவன் பி-என்பவனை மோசஞ்செய்தவிதம் குற்றபத்திரிகையில் எழுதியிருக்கவில்லை. எ-என்பவனுக்கும் பி-என்பவனுக்கும் அனேக விவகாரங்கள் நடந்திருக்கின்றன. அவைகளில் எதற்கு அந்தப் பிராது சம்பந்தப்படுகிறதென்று தெரிந்துகொள்ள எ-என்பவன் வகையில்லாதவனுய்த் தன்பட்சத்தில் வாதிக்கவில்லை. இந்த சங்கதிகளினுலே கோர்ட்டார்-மோசஞ்செய்யப்பட்ட விதத்தை எழுதாமல் விட்டுவிட்டது இந்த விஷயத்தில் முக்கியமான பிழையென்று ஊகித்துக்கொள்ளலாம்.

(d) 1882-ம் ஞு ஜனவரிம் 21வ கோடாபக்ஷ் என்பவனைக் கொலை செய்ததாக எ-என்பவன் குற்றஞ் சாட்டப்படுகிறான். வாஸ்தவத்தில் கொலையுண்டவனுடைய பெயர் ஹைதர்பக்ஷ். கொலையின்தேதி 1882-ம் ஞு ஜனவரிம் 20வ ஒருகொலை தவிர வேறே யாதொரு கொலையும் எ-என்பவன்மேல் சாட்டப்படவில்லை. அவன் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாக ஹைதர் பக்ஷ்

என்பவனுடைய விஷயத்தைப்பற்றியே நடந்த விசாரணையைக் கேட்டிருந்தான். இந்த சங்கதிகளினுலே கோர்ட்டார் எ-என்பவன் வழிதப்பிப்போகவில்லையென்றும் குற்றபத்திரிகையில் அந்தப் பிழை முக்கியமானதல்லவென்றும் ஊகித்துக் கொள்ளலாம்.

(e) எ-என்பவன் 1882-ம்ஸு ஜனவரிமீ 20உ ஹைதர் பக்ஷ் என்பவனைக் கொலைசெய்ததாகவும் (அந்த கொலைக்காக அவனைப் பிடிக்க எத்தனப்பட்ட) கோடா பக்ஷ் என்பவனை 1882-ம்ஸு ஜனவரிமீ 21உ கொலைசெய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டான். ஹைதர் பக்ஷ் என்பவனுடைய கொலைக்காகக் குற்றஞ் சாட்டப்பட்டபோது அவன் கோடா பக்ஷ் என்பவனுடைய கொலைக்காகப் பரிசீலனை செய்யப்பட்டான். அவன் பட்சத்தில் வந்திருந்த சாட்சிக்காரர்கள் ஹைதர் பக்ஷ் என்பவனுடைய கேஸைச்சேர்ந்த சாட்சிகள். இதனுலே கோர்ட்டார் எ-என்பவன் வழிதப்பிப்போனுனென்றும் அந்தப் பிழை முக்கியமானதென்று ஊகித்துக்கொள்ளலாம்.

226. குற்ற பத்திரிகை யில்லாமலாவது, அபூர்த்தியாகவாகிலும் பிழையாகவாகிலும் எழுதப்பட்ட குற்றப்பத்திரிகையின்மேலாவது எவனுகிலும் பரிசிலனைக்குக் கம்மிட் பண்ணப்பட்டால், கோர்ட்டாராவது ஹைகோர்ட் விஷயத்திலே க்ளர்க் ஆவ் தி க்ரவுன் என்னும் உத்தியோகஸ்தராவது, குற்றபத்திரிகை எழுதுகிற விதத்தைக்குறித்து இந்த சட்டத்தில் சொல்லியிருக்கிற விதிகளை யோசித்து சங்கதிக்குத் தக்கபடி குற்றபத்திரிகை தயார்செய்யலாம், அல்லது குற்றபத்திரிகையோடு பின்னும்சேர்க்கலாம், அல்லது அதை மாற்றலாம்.

குற்ற பத்திரிகை யில்லாமலாவது பூர்த்தியாய்க் குற்றபத்திரிகை எழுதாமலாவது ஒருவன் கம்மிட் செய்யப்பட்டால் நடவடிக்கை.

திருஷ்டாந்தங்கள்.

1. சி-என்பவனைக் கொலைசெய்ததாக எ-என்பவன் குற்றஞ் சாட்டப்படுகிறுன். சி-என்பவனைக் கொலைசெய்யும்பொழுது உடந்தையாயிருந்த ஓர் குற்றத்தைச் சேர்க்கலாம் அல்லது பர்த்தியாக அமைக்கலாம்.

2. எ-என்பவன் இந்தியன் பினல்கோட் 467-வது பிரிவின்படி பெறுமான பத்திரத்தை சிருஷ்டனை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்படுகிறுன். 193-வது பிரிவின்படி பொய் ருஜு உண்டுபண்ணின ஒரு குற்றத்தைச் சேர்க்கலாம்.

3. எ-என்பவன் திருட்டுச்சொத்தைத் தனக்கு அது திருட்டுச்சொத்தென்று தெரிந்திருந்தும் வாங்கிக்கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறுன்; பரிசீலனை செய்யுங்காலையில் கள்ள நாணயம் செய்வதற்காகத் தன்வசத்தில் ஆயுதங்களை வைத்திருக்கிறுனென்று இடைச்சம்பவமாகத் தெரியவருகிறது. இந்தியன் பினல்கோட் 235-வது பிரிவின்படி ஓர் குற்றத்தைச்சேர்க்க முடியாது.

குற்ற பத்திரிகையைக் கோர்ட்டார் மாற்றலாம்.

227. (1) யாதொரு கோர்ட்டார்-தீர்ப்பு சொல்லப்படுவதற்கு முன்னமே எப்போதாகிலும், ஸெஷன் கோர்ட்டார் அல்லது ஹைகோர்ட்டாருக்கு முன்பாகப் பரிசீலனைகள் நடக்கிற விஷயத்திலே ஜூரியினுடைய நிர்மாணம் சொல்லப்படுவதற்கு முன்னமே யாவது அஸெஸர்களுடைய அபிப்பிராயம் தெரிவிக்கப்படுவதற்கு முன்னமேயாவது எப்போதாகிலும் யாதொரு குற்றபத்திரிகையை மாற்றலாம் அல்லது அதனுடன் சேர்க்கலாம்.

(2) அப்படி மாற்றின அல்லது சேர்த்த ஒவ்வொன்றையும் குற்றஞ் சாட்டப்பட்டவனுக்குப் படித்து விவரமாய்ச் சொல்லவேண்டும்.

மாற்றின பின்பு இன்னபடிக்கானல் உடனே பரிசீலனை செய்யத் தொடங்கலாம்.

228. 226 அல்லது 227-வது பிரிவின்படி குற்ற பத்திரிகை தயார் செய்யப்பட்ட வுடனேயாவது மாற்றினவுடனேயாவது சேர்த்தவுடனேயாவது பரிசீலனை செய்யத்தொடங்கினால் அதனாலே குற்றஞ்சாட்டப்பட்டவனுக்குத் தன் பட்சத்தில் வாதிக்கவாகிலும் பிராஸிக்யூட்டருக்கு அந்தக் கேஸை நடத்தவாகிலும் பிரதிபந்தமுண்டாக மாட்டாது போலிருக்கிறதென்று கோர்ட்டாருக்குத் தோற்றுகிற பட்சத்தில், அந்த குற்றபத்திரிகை தயார் செய்யப்பட்டபின்பாவது அப்படி மாற்றின பின்பாவது அப்படிசேர்த்தபின்பாவது கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால், புதிதாய் ஏற்படுத்தப்பட்ட அல்லது மாற்றப்பட்ட குற்ற பத்திரிகையானது ஆதி குற்றபத்திரிகையா யிருந்தாற்போலவே பரிசீலனையை நடத்தலாம்.

இன்னபடிக்கானல் மறுபடி முதலிலிருந்து பரிசீலனை செய்யும்படி உத்தரவு பண்ணலாம் அல்லது பரிசீலனையை நிறுத்திவைக்கலாம்.

229. குற்ற பத்திரிகையை அப்படிப் புதிதாய் ஏற்படுத்தினவுடனேயாவது மாற்றினவுடனேயாவது சேர்த்தவுடனேயாவது பரிசீலனை செய்யத்தொடங்கினால் அதனாலே மேற்சொல்லியபடி குற்றஞ் சாட்டப்பட்டவனுக்காகிலும் பிராஸிக்யூட்டருக்காகிலும் பிரதிபந்தமுண்டாகும்போலிருக்கிறதென்று கோர்ட்டாருக்கு தோற்றுகிற பட்சத்தில், கோர்ட்டார் முதலிலிருந்து மறுபடி பரிசீலனைசெய்யும்படி உத்தரவு பண்ணலாம், அல்லது அவசியமான காலம் வரையில் பரிசீலனையை நிறுத்திவைக்கலாம்.

230. புதிதாய் ஏற்படுத்தப்பட்டாவது மாற்றப்பட்டாவது சேர்க்கப்பட்டாவதிருக்கிற குற்றபத்திரிகையில் கண்டிருக்கிற குற்றமானது அதைக்குறித்துப் பிராது நடத்துவதற்கு முந்திய அனுமதிவேண்டியிருக்கிற குற்றமாயிருந்தால், புதிதாய் ஏற்படுத்தப்பட்ட அல்லது மாற்றப்பட்ட குற்ற பத்திரிகை எந்த சங்கதிகளின்மேல் ஆதாரப்பட்டிருக்கிறதோ அதே சங்கதிகளைக் குறித்துப் பிராதை நடத்துவதற்கு முன்னதாகவே அனுமதிபெற்றிராதபட்சத்தில், அப்படிப்பட்ட அனுமதி பெறுகிறவரையிலே அந்தக்கேஸை நடத்தக்கூடாது.

மாற்றப்பட்ட குற்ற பத்திரிகையில் கண்டிருக்கிற குற்றத்தைக் குறித்துப் பிராது நடத்த முன்னதாய் அனுமதி வேண்டியிருந்தால் நடவடிக்கைகளை நிறுத்திவைப்பது.

231. பரிசீலனை ஆரம்பத்திற்குப்பின்பு கோர்ட்டாரால் குற்ற பத்திரிகை மாற்றப்படுகிற அல்லது அதனுடன் சேர்க்கப்படுகிற விஷயங்களிலெல்லாம், முன்னே விசாரிக்கப்பட்டிருக்கும் எந்த சாட்சியையாவது மறுபடி அழைத்து அல்லது ஸம்மனனுப்பி மறுபடி வரவழைத்து, அப்படி மாற்றப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட சங்கதி விஷயமாய் அவனை விமரிசைசெய்யும்படிக்கும் கோர்ட்டாருக்கு முக்கியமென்று தோற்றுகிற இன்னுமிருக்கும் சாட்சிகளை அழைக்கும்படிக்கும் ப்ராஸிக்யூட்டருக்கும் குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கும் செலவு கொடுக்கவேண்டும்.

குற்ற பத்திரிகை மாற்றப்பட்டால் சாட்சிகளை மறுபடி அழைப்பது.

232. (1) யாதொரு அப்பீல் கோர்ட்டாராவது, மேற்பரிசோதனை அதிகாரஞ் செலுத்துவதிலாகிலும் 27-ம் அத்தியாயத்தின்படிக்குண்டான அதிகாரஞ் செலுத்துவதிலாகிலும் ஹைகோர்ட்டாவது, யாதொரு குற்றத்தைக் குறித்துக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டவனெவனாகிலும் யாதொரு பிராது எழுதப்படாமையினாலாவது குற்றபத்திரிகையிலுள்ள யாதொரு பிழையினாலாவது தன் பட்சத்தில் வாதிப்பதில் வழிதப்பிப்போனானென்று அபிப்பிராயங்கொண்டால், அந்தக்கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத்தோற்றுகிற எந்தவிதமாயாவது ஏற்படுத்தப்பட்ட குற்ற பத்திரிகையின்மேல் மறுபடியும் புதிதாய்ப் பரிசீலனை நடத்தும்படி உத்தரவு செய்யவேண்டும்.

முக்கியமான பிழையிருந்தால் இன்னதாகுமென்பது.

(2) அந்தக் கேஸைச்சேர்ந்த சங்கதிகள் ருஜுவான சங்கதிகளைப்பற்றிக் குற்றஞ்சாட்டப்பட்டவன்மேல் ஸ்திரமான பிராது கொண்டுவரக் கூடாமையானவைகளாயிருக்கிறதென்று அந்தக்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள் குற்ற ஸ்தாபனையை அடித்துவிடவேண்டும்.

திருஷ்டாந்தம்.

ஏ-என்பவன் வாஸ்தவமானதென்றாவது மெய்யானதென்றாவது அவன் கெட்ட எண்ணத்தோடு உபயோகித்த அல்லது உபயோகிக்க எத்தனப்பட்ட சாட்சியமானது பொய்யென்றாகிலும் உண்டுபண்ணப்பட்டதென்றாகிலும் அவனுக்குத்தெரியுமென்று கண்டெழுதாவது விட்டுப்போயிருக்கிற குற்றபத்திரிகையின்மேல் இந்தியன் பீனல் கோட் 196-வது பிரிவின்படி ஒரு குற்றத்திற்காகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுகிறான். ஏ-என்பவனுக்கு அப்படிதெரிந்தேயிருக்கலாமென்றும், குற்றபத்திரிகையில் அது அவனுக்குத்தெரிந்ததென்று கண்டெழுதாமல் போனதனாலே அவன் தன் பட்சத்து வாதத்தில் வழிதப்பிப்போயிருக்கலாமென்று கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டால், திருத்தப்பட்ட குற்றபத்திரிகையின்மேல் மறுபடி புதிதாய்ப் பரிசீலனை நடத்தும்படி அவர்கள் உத்தரவு பண்ணவேண்டும்; ஆனால், ஏ-என்பவனுக்கு அப்படி தெரிந்திராதென்று நடவடிக்கைகளினாலே நம்புவதற்கு இடமிருந்தால், அவர்கள் குற்ற ஸ்தாபனையை அடித்துவிடவேண்டும்.

தப்புபிராதுகளை ஒன்றாய்ச் சேர்ப்பது.

வெவ்வேறு குற்றத்திற்கு வெவ்வேறு குற்றபத்திரிகை

233. யாவனொருவன்மேல் சாட்டப்படுகிற வெவ்வேறான பிரதி குற்றத்திற்கும் வெவ்வேறு பிராது இருக்கவேண்டும். அப்படிப்பட்ட பிரதி பிராதையும் தனித்தனியே பரிசீலனை செய்யவேண்டும்; ஆனால், 234, 235, 236, 239-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிற விஷயங்களில் அப்படிக்கில்லை

திருஷ்டாந்தம்.

ஒரு தருணத்தில் திருடினதாகவும் மற்றொரு தருணத்தில் கொடுந்துன்ப முண்டுபண்ணினதாகவும் ஏ-என்பவன் குற்றஞ்சாட்டப்படுகிறான். திருட்டுக்கும் கொடுந்துன்ப முண்டுபண்ணினதற்கும் ஏ-என்பவன்மேல் வெவ்வேறு பிராது தயார்செய்து தனித்தனியே பரிசீலனை செய்யவேண்டும்.

ஒரே இனமான மூன்று குற்றங்கள் ஒரு வருஷத்திற்குள் செய்யப்பட்டால்

234. (1) ஒன்றுக்குமேற்பட்ட ஒரே இனமான பல குற்றங்கள் ஒருவன்மேல் சாட்டப்பட்டிருந்து, அந்த குற்றங்கள் ஒரே நபர் விஷயமாய் செய்யப்பட்டிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி அவைகளில் முதல் குற்றஞ்செய்யப்பட்டது முதற்கொண்டு

அவைகளைக் குறித்து ஒன்றாய்ப் பிராதுசெய்யலாம்.

கடைசிக்குற்றம்செய்யப்பட்டதுவரையிலே காலத்தைக் கணக்குசெய்கையில் அப்படிப்பட்ட குற்றங்கள் பன்னிரண்டு மாதகாலத்திற்குள்ளாகச்செய்யப்பட்டிருக்குமாகில், அவைகளில் மூன்றுக்கதிகப்படாமல் எத்தனை குற்றத்திற்காவது அவன்மேல் பிராது தயார்செய்து ஒரே தடவையில் பரிசீலனைபண்ணலாம்.

(2) இந்தியன் பினல்கோடிலுள்ள அதே பிரிவின்படிக்காவது உரித்ததாகப் பிரத்தியேகமான அல்லது ஒரிடத்திற்குறிய யாதொரு சட்டத்திலுள்ள அதே பிரிவின்படிக்காவது குற்றங்களுக்கு ஒரே அளவு தண்டனை விதிக்கப்படத்தக்கதாயிருந்தால் அந்த குற்றங்கள் ஒரே இனமான குற்றங்களாயிருக்கின்றன.

ஆனால், இந்தப் பிரிவின் காரியங்களுக்காக, இந்தியன் பினல்கோட் 379-வது பிரிவின்படி தண்டனை விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றத்தை மேற்படி கோட் 380-வது பிரிவின்படி தண்டனை விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றம் எந்த இனத்தைச்சேர்ந்ததோ அதே இனத்தைச்சேர்ந்த குற்றமாக எண்ணவேண்டும்; மேலும், இந்தியன் பினல் கோடைச்சேர்ந்த எந்தப் பிரிவின்படியாவது, யாதொரு விசேஷ அல்லது பிரதேச சட்டத்தைச்சேர்ந்த எந்தப் பிரிவின்படியாவது தண்டனை விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றத்தை அப்படிப்பட்ட குற்றத்தைச்செய்ய எத்தனிப்பதும் குற்றமாயிருந்தால் அப்படி எத்தனிப்பது எந்த இனத்தைச்சேர்ந்த குற்றமாகுமோ அதே இனத்தைச்சேர்ந்த குற்றமாக எண்ணவேண்டும்.

ஒன்றைவிட அனேக குற்றங்களைக் குறித்துப் பரிசீலனை.

235. (1) ஒரே விவகாரமாகும்படி பிணைந்திருக்கிற ஒரடுக்குச் செய்கைகளில், ஒன்றைவிடப் பல குற்றங்கள் அதே நபரினால் செய்யப்பட்டால் அப்படிப்பட்ட பிரதி குற்றத்திற்காகவும் அவன் மேல் பிராது தயார்செய்து ஒரே தடவையில் அவனைப் பரிசீலனை பண்ணலாம்.

இரண்டு விவரத்திற்குள் குற்றமடங்குவது.

(2) செய்ததாகச் சொல்லப்பட்ட செய்கைகள்-அந்தந்தகாலத்தில் வழங்கிவருவதாய், குற்றங்களைக்குறித்து விவரஞ்சொல்லியாவது தண்டனை விதித்தாவதிருக்கிற யாதொரு சட்டத்திலுள்ள இரண்டு அல்லது மே

ழ்பட்ட வெவ்வேறு விவரங்களுக்குட்பட்டிருக்கிற குற்றமானால், அவைகளைக்குறித்துக் குற்றஞ்சாட்டப்படுகிறவன்மேல் அப்படிப்பட்ட பிரதி குற்றத்திற்காகவும் பிராது தயார்செய்து ஒரே தடவையில் அவனைப் பரிசிலனை பண்ணலாம்.

செய்கைகள் ஒரு குற்றமானாலும் அவைகள் ஒன்றாய்ச் சேரும்போது வேறொரு குற்றமாவது.

(3) பல செய்கைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செய்கைகள் வெவ்வேறாய் சேராதிருக்கையிலே ஒரு குற்றமாகும்படியானதாயிருந்து அப்படிப்பட்ட பல செய்கைகள் ஒன்றாய்ச் சேரும்போது வேறொரு குற்றமாகிற பட்சத்தில், அந்தச் செய்கைகள் ஒன்றாய்ச் சேருவதனாலே ஏற்பட்ட குற்றத்திற்கு அப்படிப்பட்ட செய்கைகளில் ஒன்று அல்லது மேற்பட்ட செய்கைகளினால் ஏற்பட்ட யாதொரு குற்றத்திற்கும், அவைகளைக் குறித்துக் குற்றஞ்சாட்டப்பட்டவன்மேல் பிராது தயார்செய்து ஒரே தடவையில் அவனைப் பரிசிலனை பண்ணலாம்.

(4) இந்தப் பிரிவிற் சொல்லியிருப்பதெதனாலும் இந்தியன் பினல் கோட் 71-வது பிரிவுக்குப் பாதகமுண்டாகமாட்டாது.

திருஷ்டாந்தங்கள்.

(1)-வது உட்பிரிவுக்கு—

(a) சட்டப்படி காவலிலிருக்கிறவனாகிய பி-என்பவனை எ-என்பவன் விடுவிக்கிறான்; அப்படிசெய்கையில் பி-என்பவன் எவனுடைய காவலிலிருந்தானோ அந்த கான்ஸ்டேபிலாகிய சி-என்பவனுக்கு கொடுந்துன்ப முண்டுபண்ணுகிறான். இந்தியன் பினல் கோட் 225-வது, 336-வது, பிரிவுகளுக்குட்பட்ட குற்றங்களுக்காக எ-என்பவன் மேல் தனித்தனி பிராது தயார்செய்து அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

(b) விபசாரஞ் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு எ-என்பவன் பகற்காலத்தில் வீட்டினிடமாய் நுழைகிறான்; அப்படி நுழைந்த வீட்டில் பி-என்பவனுடைய மனைவியோடு விபசாரஞ்செய்கிறான். இந்தியன் பினல்கோட் 454-வது, 497-வது பிரிவுகளுக்குட்பட்ட குற்றங்களுக்காக எ-என்பவன்மேல் தனித்தனி பிராது தயார்செய்து அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

(c) எ-என்பவன் சி-என்பவனுடைய மனைவியாகிய பி-என்பவளோடு விபசாரஞ் செய்யவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு, பி-என்பவளை ஆசை காட்டி சி-என்பவனிடத்திலிருந்து கொண்டுபோய் விடுகிறான்; பின்பு அவளோடு விபசாரஞ்செய்கிறான். இந்தியன் பினல் கோட் 491-வது 492-வது பிரிவுகளுக்குட்பட்ட குற்றங்களுக்காக எ-என்பவன்மேல் தனித்தனி பிராது தயார்செய்து அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

(d) இந்தியன் பினல் கோட் 466-வது பிரிவின்படி தண்டிக்கப்படத் தக்கதான பல சிருஷ்டனைகள் செய்வதற்கு உபயோகிக்கவேண்டுமென்கிற எண்ணத்தோடு பல முத்திரைகளை அவைகள் மாறுபாடானதென்று தெரிந்து எ-என்பவன் தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறான்; இந்தியன் பினல் கோட் 473-வது பிரிவின்படி, ஒவ்வொரு முத்திரை வைத்துக்கொண்டிருப்பதைக் குறித்தும் எ-என்பவன்மேல் தனித்தனி பிராது தயார்செய்து அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

(e) பி-என்பவனுக்குத் தீங்குசெய்ய வேண்டுமென்கிற எண்ணத்தோடு எ-என்பவன் பி-என்பவன்மேல் க்ரிமினல் விவகாரம் நடத்துவதற்கு நியாயப்படிக்காவது சட்டப்படிக்காவது ஆதாரமில்லையென்று தனக்குத் தெரிந்திருந்தும் அவன்மேல் அப்படிப்பட்ட விவகாரம் நடத்தத் தொடங்குகிறான்; மேலும், குற்றஞ் செய்ததாக பி-என்பவன்மேல் அக்குற்றங்களைச் சாட்டுவதற்கு நியாயப்படிக்காவது சட்டப்படிக்காவது ஆதாரமில்லையென்று தனக்குத் தெரிந்திருந்தும் அவன்மேல் அபத்தமாய் அப்படி குற்றஞ்சாட்டுகிறான். இந்தியன் பினல் கோட் 211-வது, பிரிவின்படி இரண்டு குற்றங்களுக்காக எ-என்பவன் மேல் தனித்தனி பிராது தயார்செய்து அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

(f) குற்றஞ்செய்ததாக பி-என்பவன் பிராதுசெய்வதற்கு நியாயப்படிக்காவது சட்டப்படிக்காவது ஆதாரமில்லையென்று தனக்குத் தெரிந்திருந்தும், எ-என்பவன் பி-என்பவனுக்குத் தீங்குசெய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு அவன்மேல் அபத்தமாய் அப்படி குற்றஞ்சாட்டுகிறான். மரண தண்டனைக்குட்பட்ட குற்றஞ் செய்தவனாக பி-என்பவனைத் தீர்மானிக்கும்படி செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு பரிசீலனையில் எ-என்பவன் பி-என்பவன்மேல் பொய்சாட்சி சொல்லுகிறான். இந்தியன் பினல் கோட் 211-வது 194-வது பிரிவுகளுக்குட்பட்ட குற்றங்களுக்காக எ-என்பவன்மேல் தனித்தனி பிராது தயார் செய்து அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

(g) எ-என்பவன் வேறே ஆறுபெயரோடு கூடிக்கொண்டு, கலகம்-கொடுந்துன்பம் என்னுங் குற்றங்களையும், ஸர்க்கார் உத்தியோகஸ்தன் அப்படிப்பட்டவனாகத் தன்னுடைய அலுவலை நடத்துகையில் கலகத்தை யடக்குவதற்கு முயற்சி செய்யும்போது அப்படிப்பட்டவனைத் தாக்குவது என்னும் குற்றங்களுக்காக எ என்பவன்மேல் தனித்தனி பிராது தயார்செய்து அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

(h) பி, சி, டி-என்பவர்களைப் பயப்படுத்தவேண்டுமென்கிற எண்ணத்தோடு எ-என்பவன் அவர்களுக்குத் தீங்குசெய்வதாக ஏககாலத்தில் அவர்களை வெருட்டுகிறான். இந்தியன் பினல் கோட் 506-வது பிரிவுக்குட்பட்ட மூன்று குற்றங்களில் அதற்காக எ-என்பவன்மேல் தனித்தனி பிராது தயார்செய்து அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

(a) முதல் (h) வரையிலுள்ள திருஷ்டாந்தங்களில் அதிலதிலே கண்டிருக்கிற வெவ்வேறு பிராதுகளைக் குறித்து ஒரே காலத்தில் பரிசீலனை செய்யலாம்.

2-வது உட்பிரிவுக்கு—

(i) ஏ-என்பவன் பி-என்பவனைப் பிரம்பினாலே அக்கிரமமாய் அடிக்கிறான். இந்தியன் பினல் கோட் 352-வது 323-வது பிரிவுகளுக்குட்பட்ட குற்றங்களுக்காக ஏ-என்பவன்மேல் தனித்தனி பிராது தயார்செய்து அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

(j) திருடப்பட்ட அநேக தானிய மூட்டைகள் ஒளித்துவைக்கப்படுவதற்காக ஏ, பி-என்பவர்களிடத்தில் ஒப்பிக்கப்படுகின்றன; அவைகள் திருட்டுச்சொத்தென்று அவர்களுக்குத் தெரியும்; அதற்குமேல் சுயேச்சையாய் உதவிசெய்கிறார்கள். இந்தியன் பினல் கோட் 411-வது 414-வது பிரிவுகளுக்குட்பட்ட குற்றங்களுக்காகத் தனித்தனி ஏ, பி என்பவர்கள் மேல் பிராது தயார்செய்து அவர்களைக் குற்றவாளிகளென்று தீர்மானிக்கலாம்.

(k) ஏ-என்பவள் தன்னுடைய குழந்தையை நிராதரவாய்ப் போட்டுவிடுவதனாலே அதற்கு மரணமுண்டுபண்ணலாம் போலிருக்கிறதென்று தெரிந்து அதை அப்படியே போட்டுவிடுகிறாள். இந்தியன் பினல் கோட் 317-வது 301-வது பிரிவுகளுக்குட்பட்ட குற்றங்களுக்காக ஏ-என்பவள்மேல் தனித்தனி பிராது தயார்செய்து அவளைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

(l) ஸர்க்கார் உத்தியோகஸ்தனுகிய பி-என்பவனை இந்தியன் பினல்கோட் 167-வது பிரிவுக்குட்பட்ட குற்றத்திற்காகக் குற்றவாளியாக்கும் பொருட்டு ஏ-என்பவன் ஒரு சிருஷ்டிக்கப்பட்ட தஸ்தவேஜைச் சரியான சாட்சியமாக அயோக்கியமாய் உபயோகிக்கிறான். அதே கோட் (466-வது பிரிவோடுவாசிக்கப்பட்ட) 471-வது பிரிவுக்கும் 196-வது பிரிவுக்கும் உட்பட்ட குற்றங்களுக்காக ஏ-என்பவன்மேல் தனித்தனி பிராது தயார்செய்து அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

3-வது உட்பிரிவுக்கு—

(m) ஏ-என்பவன் பி-என்பவனைக் கொள்ளையடிக்கிறான்; அப்படிச்செய்வதில் அவனுக்கு மனதாரத் துன்ப முண்டுபண்ணுகிறான். இந்தியன் பினல் கோட் 323-வது, 392-வது; 394-வது பிரிவுகளுக்குட்பட்ட குற்றங்களுக்காக ஏ-என்பவன்மேல் தனித்தனி பிராது தயார்செய்து அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

செய்யப்பட்ட குற்றம் இன்னதென்று ஏற்படாதது சந்

236. ஒரே ஒரு செய்கையானது ஒரு தொடர்ச் செய்கைகளாவது ருஜுப்படுத்தக்கூடுமான சங்கதிகளால் பல குற்றங்களில் எது ஏற்படுமென்று சந்தேகிக்கும்படியான தன்மையுள்ளதாயிருந்தால், குற்றஞ்சாட்

சேகமா யிருந்தால் இன்னது செய்வது

டப்பட்டவன்மேல் அப்படிப்பட்ட குற்றங்கள் யாவற்றையுமாவது அவைகளிலெதையாவது செய்ததாகப் பிராது கொண்டுவரலாம்; மேலும், அப்படிப்பட்ட பிராதுகள் எத்தனையையாவது ஒருமிக்கப் பரிசீலனை செய்யலாம்; அப்படிக்கில்லாவிட்டால், மேற்படி குற்றங்களில் ஒன்றில்லாவிட்டாலும் வேறே ஏதாவதொன்றைச் செய்திருப்பதாக அவன்மேல் பிராதுகொண்டுவரலாம்.

திருஷ்டாந்தங்கள்.

(a) திருட்டு, திருட்டுச்சொத்தைப் பெற்றுக்கொள்வது, அநியாயமான நம்பிக்கைத் துரோகம் அல்லது மோசஞ்செய்வதென்னும் குற்றமாகும்படியான ஒருசெய்கை எ-என்பவன்மேல் சாட்டப்படுகிறது. திருட்டையும், திருட்டுச்சொத்தைப் பெற்றுக்கொள்வதையும் அநியாயமான நம்பிக்கைத் துரோகத்தையும், மோசத்தையும் செய்தானென்று அவன்மேல் பிராது தயார்செய்யலாம், அல்லது திருட்டையாவது திருட்டுச்சொத்தைப் பெற்றுக்கொள்வதையுமாவது அநியாயமான நம்பிக்கைத் துரோகத்தையாவது மோசத்தையாவது செய்தானென்று அவன்மேல் பிராது தயார்செய்யலாம்.

(b) பி-என்பவன் சி-என்பவனைத் தண்டால் அடிக்க தான் பார்த்ததாக எ-என்பவன் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகப் பிரமாணத்துடன் வாக்குமூலம் கொடுக்கிறான். ஸெஷன் கோர்ட்டாருக்கு முன் பி-என்பவன் சி-என்பவனை ஒருபொழுதிலும் அடிக்கவில்லையென்று எ-என்பவன் பிரமாணத்துடன் வாக்குமூலங் கொடுக்கிறான். ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிற இவ்விரண்டு வாக்குமூலங்களில் இன்னதுபொய்யென்று ருஜூப்படுத்த முடியாதபோதினும் ஒன்றில்லாவிட்டால் மற்றொன்றைக்கொண்டு எ-என்பவன்மேல் பிராது தயார்செய்து மனப்பூர்வகமாய்ப் பொய்சாட்சியம் கொடுத்ததாகக் குற்றவாளியென்று தீர்மானித்து தண்டிக்கப்படலாம்.

ஒரு குற்றத்திற்காக ஒருவன்மேல் பிராது செய்யப்பட்டாலும் அவனைவேறொரு குற்றத்திற்காகக் குற்றவாளியென்று தீர்மானிக்கக்கூடும்.

237. 236-வது பிரிவில் கண்டிருக்கிற விஷயத்திலே, குற்றஞ் சாட்டப்பட்டவன்மேல் ஒரு குற்றத்திற்காகப் பிராது கொண்டுவரப்பட்டால், அந்தப்பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி அவன்மேல் சாட்டியிருக்கக்கூடுமான வேறொரு குற்றத்தைச் செய்தானென்று சாட்சியத்தினால் தோற்றுகிற பட்சத்தில், அவன் செய்திருப்பதாக ரூபிக்கப்படுகிற குற்றத்திற்காக அவன்மேல் பிராது கொண்டுவரப்படாமற் போனபோதிலும் அந்த குற்றத்திற்காக அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

திருஷ்டாந்தம்.

ஏ-என்பவன்மேல் திருட்டு சுமத்தப்படுகிறது. அநியாயமான நம்பிக்கைத் துரோகம் அல்லது திருட்டுச்சொத்தைப் பெற்றுக்கொள்ளுவதென்னும் குற்றத்தை அவன் செய்தானென்று தோற்றுகிறது. அநியாயமான நம்பிக்கைத் துரோகம் அல்லது திருட்டுச்சொத்தைப் பெற்றுக்கொண்டதற்காக அவன்மேல் பிராது கொண்டுவரப்படாமற் போனபோதிலும் (சங்கதிக்குத் தக்கபடி) அந்தக் குற்றங்களிலொன்றுக்காக அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

ருஜுவான குற்றம் பிராதுசெய்யப்பட்ட குற்றத்தில் அடங்கியிருந்தால் இன்னபடி.

238. (1) பல விவரங்களடங்கிய ஒரு குற்றத்தைக்குறித்து ஒருவன்மேல் பிராதுகொண்டுவரப்பட்டிருந்து, அந்த விவரங்களில் சிலது மாத்திரம் சேர்ந்து, பூர்த்தியும் அந்த குற்றத்தைவிடச் சிறியதுமான ஒரு குற்றமாக ஏற்பட்டு, அப்படி ஒன்றாய்ச் சேர்ந்த விவரங்கள் ருஜுவாகி மற்ற விவரங்கள் ருஜுவாகாத பட்சத்தில், அந்த சிறிய குற்றத்தைக்குறித்து அவன்மேல் பிராதுகொண்டு வரப்படாதிருந்தபோதிலும், அதற்காக அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

(2) ஒருவன்மேல் யாதொரு குற்றத்தைக்குறித்துப் பிராது கொண்டுவரப்பட்டு, சங்கதிகள் ருஜுவாவதனாலே அந்தக்குற்றம் பின்னும் சிறிய குற்றமாக ஏற்படுகிற பட்சத்தில், அந்த சிறிய குற்றத்தைக்குறித்து அவன்மேல் பிராது கொண்டுவரப்படாதிருந்தபோதினும் அதற்காக அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

(2-A) குற்றஞ்சாட்டப்பட்டவன் ஒரு குற்றத்தைச் செய்தானென்று அவன்மேல் பிராது கொண்டுவரப்பட்டிருந்தால், அந்தக் குற்றத்தைச்செய்ய எத்தனித்ததாக பிரத்தியேகமாய்ப் பிராதுகொண்டுவரப்பட்டிராதபோதிலும், அந்தப்படி எத்தனித்ததற்காக அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

(3) 198 அல்லது 199-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி பிராதுசெய்யப்படாதிருக்கும்போது, அந்தப் பிரிவில் கண்டிருக்கிற யாதொரு குற்றத்தைக் குறித்துக் குற்றவாளியென்று தீர்மானிப்பதற்கு அதிகாரமுண்டாவதாக இந்தப் பிரிவிற் சொல்லியிருப்பதெதனாலும் எண்ணக்கூடாது.

திருஷ்டாந்தங்கள்.

(a) ஏ-என்பவன் சரக்கு கொண்டுபோகிறவனாக அவனிடத்தில் நம்பி ஒப்பிக்கப்பட்ட சொத்து விஷயத்தில் அநியாயமான நம்பிக்கைத் துரோகம்செய்

தானென்று இந்தியன் பினல் கோட் 407-வது பிரிவின்படி குற்றஞ்சாட்டப்படு கிறான்; அந்த சொத்து விஷயமாய் 406-வது பிரிவின்படி அவன் அநியாயமான நம்பிக்கைத் துரோகம் செய்தானென்றும், ஆனால் சரக்கு கொண்டுபோகிறவ னாக அது அவனிடத்தில் நம்பி ஒப்பிக்கப்படவில்லையென்றும் தோன்றுகிறது. 406-வது பிரிவின்படி அநியாயமான நம்பிக்கைத் துரோகத்திற்காக அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

(b) எ-என்பவன் கொடுந்துன்ப முண்டுபண்ணினதாக இந்தியன் பினல் கோட் 325-வது பிரிவின்படி குற்றஞ்சாட்டப்படுகிறான். ஐ்நியில் மிகுந்த கோபம் தனக்கு மூட்டப்பட்டதனாலே தான் அப்படிச்செய்ததாக அவன் ருஜுப் படுத்துகிறான். அந்த கோட் 335-வது பிரிவின்படி அவனைக் குற்றவாளி யென்று தீர்மானிக்கலாம்.

எப்படிப்பட்டவர்கள்மேல் கூட்டாகப் பிராது தயார் செய்யலாமென்பது.

239. அடியிற்கண்ட நபர்கள்மேல் சேர்க்கையாகப் பிராது தயார்செய்து அவர்களைப் பரிசீலனை பண்ணலாம்; அவர்கள் யாரென்றால் :—

(a) ஒரே விவகாரத்தில் செய்யப்பட்டதான ஒரே குற்றம் சாட்டப்பட்ட நபர்கள்;

(b) ஒரு குற்றம் சாட்டப்பட்ட நபர்களும், அந்தக் குற்றம் செய்வதற்கு உடந்தையாய் இருந்ததாக அல்லது எத்தனப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட நபர்களும்;

(c) 234-வது பிரிவின் தாற்பரியப்படி ஒரே இனத்தைச் சேர்ந்தவைகளாய் பன்னிரண்டுமாத காலத்துக்குள்ளாகக் கூட்டாய்ச் செய்யப்பட்டிருக்கும் பல குற்றங்கள் சாட்டப்பட்ட நபர்கள்;

(d) ஒரே விவகாரம் நடந்துகொண்டிருக்கும்பொழுது செய்யப்பட்ட வெவ்வேறு குற்றங்கள் சாட்டப்பட்ட நபர்கள்;

(e) திருட்டு, வெருட்டிவாங்குவது அல்லது அக்கிரமமாய் உபயோகித்துக்கொள்வதென்பது அடங்கிய குற்றங்கள் சாட்டப்பட்ட நபர்களும், முதலில் சொல்லப்பட்ட நபர்களால் செய்யப்பட்ட குற்றங்களினால் எந்தசொத்தின் சுவாதீனம் மாறியிருக்கிறதோ அந்த சொத்தைப் பெற்றுக்கொண்டதாகவாவது அதை வைத்துக்கொண்டிருப்பதாகவாவது அல்லது அதை ஒருவகைசெய்ததிலாகி

லும் மறைக்கதிலாகிலும் உதவி செய்ததாகவாவது குற்றஞ்சாட்டப்பட்ட, அல்லது கடைசியாகச்சொன்ன குற்றங்களில் எதையாகிலும் செய்வதற்கு உடந்தையாயிருந்ததாகவாவது எத்தனப்பட்டதாகவாவது குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களும்;

(f) எதன் சுவாதீனம் ஒரே குற்றத்தினல் மாறியிருக்கிறதோ அப்படிப்பட்ட திருட்டுச் சொத்தின் விஷயமாய் இந்தியன் பினல் கோட் 411-வது, 414-வது பிரிவுகளின்படிக்காவது அவைகளில் ஒன்றின்படிக்காவது குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களும்;

(g) கள்ள நாணய சம்பந்தமாக இந்தியன் பினல்கோட் 12-ம் அத்தியாயத்தின்படிக்கான யாதொரு குற்றம் சாட்டப்பட்ட நபர்களும் அதே நாணய சம்பந்தமாக மேற்படி அத்தியாயத்தின்படிக்கான வேறே யாதொரு குற்றம் சாட்டப்பட்ட, அல்லது அப்படிப்பட்ட யாதொரு குற்றத்தைச் செய்வதற்கு உடந்தையாயிருந்ததாக அல்லது எத்தனப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களும்.

மேலும், இந்த அத்தியாயத்தின் முந்திய பாகத்தில் கண்ட நிபந்தனைகள் கூடுமானமட்டிலே அப்படிப்பட்ட சகல பிராதுகளுக்கும் பிரயோகப்படவேண்டும்.

திருஷ்டாந்தங்கள்.

(a) எ. பி-என்பவர்கள் ஒரே நபரைக் கொலைசெய்ததாகக் குற்றஞ் சாட்டப்படுகிறார்கள். அந்த கொலைக்காக எ. பி-என்பவர்கள்மேல் ஒன்றாகப் பிராது தயார்செய்து அவர்களைப் பரிசிலனை பண்ணலாம்.

(b) எ, பி- என்பவர்கள்மேல் கொள்ளையடிப்பதென்னும் குற்றஞ் சாட்டப்படுகிறது; கொள்ளை அடித்துக்கொண்டிருக்கையில் எ-என்பவன் கொலை செய்கிறான்; அதில் பி-என்பவனுக்கு யாதொரு சம்பந்தமுமில்லை, எ, பி-என்பவர்களிரண்டுபேர் மீதும் கொள்ளையடிக்கதென்னும் குற்றத்திற்காகவும் எ-என்பவன்மேல் மாத்திரம் கொலைக்காகவும் பிராது தயார்செய்து அதற்காக அவர்களை ஒன்றாய்ப் பரிசிலனை பண்ணலாம்.

(c) எ. பி-என்பவர்கள் இரண்டுபேர் மேலும் ஒரு திருட்டு சுமத்தப்படுகிறது; அதே காரியம் நடந்துகொண்டிருக்கையில் பி-என்பவன் செய்ததாக வேற்ற இரண்டு திருட்டுகள் அவன்மேல் சுமத்தப்படுகிறது; எ, பி-என்பவர்களிரண்டுபேர்மேலும் அந்த ஒரு திருட்டுக்காகவும் பி-என்பவன்மேல் மாத்திரம் மற்ற இரண்டு திருட்டுகளுக்காகவும் பிராது தயார்செய்து அதற்காக அவ்விரண்டு பேரையும் ஒன்றாய்ப் பரிசிலனை பண்ணலாம்.

பல பிராதுகளில் ஒன்றைக் குறித்துக்குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல் மற்றப் பிராதுகளைத் தள்ளிக்கொள்வது.

240. ஒரே நபர்மேல் ஒன்றுக்கு மேற்பட்ட பல தலைப்புகளுடைய குற்ற பத்திரிகை ஏற்படுத்தப்பட்டு, அவைகளில் ஒன்று அல்லது பலவற்றைக்குறித்துக் குற்றஸ்தாபனை செய்யப்பட்டிருக்கும்போது, பிராதுக்காரனாவது பிராதை நடத்துகிற உத்தியோகஸ்தராவது கோர்ட்டாருடைய சம்மதியின்மேல் நிலுவை நிற்கிற பிராது அல்லது பிராதுகளைத் தள்ளிக்கொள்ளலாம்; அல்லது கோர்ட்டாரே தங்களிஷ்டமாய் அப்படிப்பட்ட பிராது அல்லது பிராதுகளை விசாரணை செய்வதையாகிலும் பரிசீலனை பண்ணுவதையாகிலும் நிறுத்திவிடலாம். அந்த குற்றஸ்தாபனை ரத்துசெய்யப்படாவிட்டால், அப்படி தள்ளிக்கொள்வது அப்படிப்பட்ட பிராது அல்லது பிராதுகளைக் குறித்துக் குற்றவாளியல்லவென்று விடுதலை செய்வதாகும்; குற்றஸ்தாபனை ரத்துசெய்யப்படுகிற பட்சத்தில் மேற்படி கோர்ட்டார் (குற்றஸ்தாபனை ரத்துசெய்கிற கோர்ட்டாருடைய உத்தரவுக்குட்பட்டு) அப்படி தள்ளிக்கொள்ளப்பட்ட பிராது அல்லது பிராதுகளைக் குறித்து விசாரணையாவது பரிசீலனையாவது நடத்தலாம்.

20-ம் அத்தியாயம்.

ஸம்மன் கேஸுகளை மாஜிஸ்ட்ரேட்டுகள் பரிசீலனை செய்வதைக்குறித்து.

ஸம்மன் கேஸுகளிலே நடவடிக்கை.

241. ஸம்மன் கேஸுகளின் பரிசீலனையிலே அடியில் கண்டிருக்கிற நடவடிக்கைகளை மாஜிஸ்ட்ரேட்டுகள் அனுசரிக்கவேண்டும்.

பிராது சங்கதியைத்தெரிவிப்பது.

242. குற்றஞ் சாட்டப்பட்டவன் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன் ஹாஜரானாலும் கொண்டுவரப்பட்டாலும், அவன்மேல் சாட்டப்பட்ட குற்றத்தின் விவரங்களை அவனுக்குத் தெரிவித்து, குற்றவாளியென்று அவனைத் தீர்மானிக்காதிருப்பதற்கு ஏதாவது நியாயமிருக்கிறதாவென்று அவனைக் கேட்கவேண்டும்; ஆனால், ஒழுங்குப்படி குற்றபத்திரிகை ஏற்படுத்த வேண்டுவதில்லை.

பிராதை எதார்த்தமென்று ஒப்புக்கொண்டால் குற்றவாளியென்று தீர்மானிப்பது.

243. குற்றஞ்சாட்டப்பட்டவன் தன்மேல் சாட்டப்பட்ட குற்றத்தைத் தான்செய்ததாக ஒப்புக்கொண்டால், அவன் ஒப்புக்கொள்வதைக் கூடியமட்டில் அவன் சொன்னமாதிரியாகவே எழுதிக்கொள்ளவேண்டும்; குற்றவாளியென்று அவனைத் தீர்மானிக்காதிருப்பதற்குப் போதுமான காரணத்தை அவன் தெரிவிக்காவிட்டால் மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்பிரகாரமே அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

அப்படி ஒப்புக்கொள்ளாவிட்டால் நடவடிக்கை.

244. (1) மாஜிஸ்ட்ரேட்டானவர் குற்றஞ்சாட்டப்பட்டவனை முந்திய பிரிவின்படி குற்றவாளியென்று தீர்மானிக்காவிட்டாலாவது குற்றஞ் சாட்டப்பட்டவன் அப்படி ஒப்புக்கொள்ளாவிட்டாலாவது, மாஜிஸ்ட்ரேட்டானவர் பிராதுக்காரனென்றவனுவதிருந்தால், அவன் சொல்லுகிறதைக் கேட்கவும், பிராதுக்கு ஆதாரமாய்க் கொண்டுவரப்படுகிற சகல சாட்சியத்தையும் வாங்கவும் தொடங்கவேண்டும். மேலும், குற்றஞ் சாட்டப்பட்டவன் சொல்லுகிறதைக் கேட்கவும் அவன் பட்சத்தில் அவன் கொண்டுவருகிற சகல சாட்சியத்தையும் வாங்கவும் தொடங்கவேண்டும்

ஆனால், பிராது ஒரு கோர்ட்டாரால் செய்யப்பட்டிருந்தால் மாஜிஸ்ட்ரேட்டானவர் எந்த விஷயத்திலாகிலும் பிராதுக்காரராக எவரையும் விசாரிக்கவேண்டுவதில்லை.

(2) பிராதுக்காரனுவது குற்றஞ் சாட்டப்பட்டவனுவது மனு செய்து கொள்வதன்மேல், தனக்கு யுக்தமாகத் தோற்றினல் மாஜிஸ்ட்ரேட்டானவர் யாதொரு சாட்சி ஹாஜராகவேண்டுமென்றாவது யாதொரு தஸ்தவேஜையாகிலும் இதர பொருளையாகிலும் அவன்கொண்டுவந்து காட்டவேண்டுமென்றாவது கட்டளையிட்டு அவனுக்கு ஸம்மன் பிறப்பிக்கலாம்.

(3) அப்படிப்பட்ட மனுவின்மேல் யாதொரு சாட்சியை ஸம்மனனுப்பி வரவழைப்பதற்கு முன்னமே, பரிசீலனையின்பொருட்டு ஹாஜராவதற்காக அவனுக்கு நியாயமாய்ப் பிடிக்கும் செலவுக்காகக் கோர்ட்டில் பணங் கட்டச்சொல்லி மாஜிஸ்ட்ரேட் கேட்கலாம்.

245. (1) மாஜிஸ்ட்ரேட்டானவர் 244-வது பிரிவில் சொல்லியிருக்கிற சாட்சியத்தையும், தம் இஷ்டமாகவே தாம் பின்னும் கொண்டுவரும்படி செய்கிற வேறே சாட்சியத்தையும் வாங்குவதன்மேலும் (தமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபட்சத்தில்) குற்றஞ் சாட்டப்பட்டவனை விமரிசை செய்வதன்மேலும், குற்றஞ் சாட்டப்பட்டவனை குற்றவாளியல்லவென்று தீர்மானித்தால், குற்றவாளி யல்லவென்று விடுதலைசெய்கிற உத்தரவை அவர் ரிகார்ட் பண்ணவேண்டும்.

குற்றவாளியல்லவென்று விடுதலை செய்வது.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவனை மாஜிஸ்ட்ரேட் குற்றவாளியென்று தீர்மானித்தால், அவர் 349-வது பிரிவிலாவது 562-வது பிரிவிலாவது கண்ட நிபந்தனைகளின்படி நடவடிக்கை நடத்தினாலன்றி மற்றப்படி அவனுக்கு சட்டப்படி தண்டனை விதிக்கவேண்டும்.

சிட்சை விதிப்பது.

246. பிராதாவது ஸம்மனாவது எப்படிப்பட்டதா யிருந்தபோதிலும், இந்த அத்தியாயத்தின்படி பரிசீலனை செய்யப்படத்தக்கதாய், ஒப்புக்கொள்ளப்பட்ட அல்லது ருஜுவான சங்கதிகளினாலே குற்றஞ்சாட்டப்பட்டவன் செய்திருக்கிறதாகத் தோற்றுகிற யாதொரு குற்றத்தைக் குறித்து மாஜிஸ்ட்ரேட்டானவர் 243-வது, அல்லது 245-வது பிரிவின்படி அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

பிராது அல்லது ஸம்மன் எப்படியிருந்தபோதிலும் தீர்மானத்திற்கு நிமித்தமில்லை.

247. பிராது செய்யப்படுவதன்மேல் ஸம்மன் பிறப்பிக்கப்பட்டிருந்து, குற்றஞ்சாட்டப்பட்டவன் ஹாஜராவதற்காக நியமிக்கப்பட்ட தினத்திலாவது பின்பு எப்போது கேஸ் விசாரணைக்கு அழைக்கப்படுகிறதோ அந்த தினத்திலாவது பிராதுக்காரன் ஹாஜராகாவிட்டால், மாஜிஸ்ட்ரேட்டானவர்-இதில் முன்னமே என்னசொல்லி யிருந்தபோதிலும், ஏதாவது ஏதுவைப்பற்றி வேறொரு நாளைக்கு அந்தக் கேஸ் விசாரணையை நிறுத்திவைப்பது தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற பட்சத்தில், குற்றஞ் சாட்டப்பட்டவனைக் குற்றவாளி யல்லவென்று விடுவிக்கவேண்டும்.

பிராதுக்காரன் ஹாஜராகாமை.

ஆனால், பிராதுக்காரன் ஸர்க்கார் உத்தியோகஸ்தனுயிருந்து அவன் நேராக ஹாஜராயிருக்கவேண்டி யிராதபட்சத்தில் மாஜிஸ்ட்ரேட்டானவர் அவன் ஹாஜராவது அவசியமில்லையென்று சொல்லிக் கேஸைகளை விசாரணைசெய்யத் தொடங்கலாம்.

பிராதைத்தள்ளிக் கொள்வது.

248. இந்த அத்தியாயத்திற்குட்பட்ட யாதொரு கேஸிலே முடிவான உத்தரவு செய்யப்படுவதற்கு முன்னமே எப்போதாவது பிராதுக்காரனுனவன் தன்னுடைய பிராதைத் தள்ளிக்கொள்ளும்படி தனக்குச் செலவு கொடுப்பதற்குப் போதுமான முகாந்தரமிருக்கிறதென்று மாஜிஸ்ட்ரேட்டுக்குத் திருப்திகரமாய்த் தெரிவித்தால், மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்தப் பிராதை தள்ளிக்கொள்ளும்படி அவனுக்கு உத்தரவுகொடுக்கலாம்; அதற்குமேல் குற்றஞ் சாட்டப்பட்டவனைக் குற்றவாளியல்லவென்று விடுவிக்கவேண்டும்.

பிராதுக்காரனில் லாவிட்டால் நடவடிக்கைகளை நிறுத்த அதிகாரம்.

249. பிராது செய்யப்படுவதன்மேலல்லாமல் மற்றப்படி தொடரப்பட்ட யாதொரு கேஸிலே, ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினுடைய அனுமதியை முன்னதாய்ப் பெற்றுக்கொண்டு வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாவது, குற்றவாளியல்லவென்ருகிலும் குற்றவாளியென்ருகிலும் தீர்ப்பு சொல்லாமலே எந்த தெசையிலாவது நடவடிக்கைகளை நிறுத்திவிடலாம்; அதற்குமேல் குற்றஞ் சாட்டப்பட்டவனை விடுதலைசெய்யலாம்; நடவடிக்கைகளை அப்படி நிறுத்திவிடுவதற்குண்டான ஹேதுக்களை அவர் எழுதிவைக்கவேண்டும்

ஸம்மன் கேஸுகளிலும் வாரண்ட் கேஸுகளிலும் வினையச்செய்யப்படும் பிராதுகள்.

பொய்யாகவாவது வினையாவது அலக்கழிக்கும்படியாவது செய்யப்பட்ட பிராதுகள்.

250. (1) பிராதின்பேலாவது யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தனுக்காவது மாஜிஸ்ட்ரேட்டுக்காவது தெரிவிக்கப்பட்ட சங்கதியின்பேலாவது கொண்டுவரப்படுகிற யாதொரு கேஸிலே, ஒருவராகிலும் பலராகிலும் மாஜிஸ்ட்ரேட்டின் முன், யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினுல் பரிசீலனை செய்யத்தக்க யாதொரு குற்றத்தைச் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு, அந்தக்கேஸ் யாரால் விசாரணை செய்யப்படுகிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் குற்றஞ்சாட்

டப்பட்ட சகலரையுமாகிலும் அவர்களில் எவனையாகிலும் விடுதலைசெய்தாவது குற்றவாளியல்லவென்று விடுவித்தாவது, அவர்கள் மேலாகிலும் அவர்களில் எவன்மேலாகிலும் செய்யப்பட்ட பிராது பொய்யாக செய்யப்பட்டதென்றும் வீணாகவோ அல்லது அலைக்கழிக்கவோ தொடரப்பட்டதென்றும் அபிப்பிராயப்படுகிற பக்ஷத்திலே, மாஜிஸ்ட்ரேட்டானவர்-தமக்கு யுக்தமாகத் தோற்றுமாகில், விடுதலை செய்கிற அல்லது குற்றவாளியல்லவென்று விடுவிக்கிற தம்முடைய உத்தரவிலேயே யாருடைய பிராது அல்லது சங்கதியின்மேல் குற்றஞ் சாட்டப்பட்டதோ அந்த நபர் ஹாஜரிலிருந்தால், குற்றஞ் சாட்டப்பட்ட அந்த நபருக்காகிலும் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் ஒருவனல்லாமல் பலரிருந்தால் அவர்களில் ஒவ்வொருவனுக்குமாகிலும் எவனுக்காகிலும் ஏன் பிரதிபலன் கொடுக்கக்கூடாதோ அதற்குக் காரணத்தை உடனே காட்டும்படி கேட்கலாம். ஹாஜராயிராவிட்டால் அப்படிப்பட்ட நபருக்கு அவன் ஹாஜராகி மேற்கண்டபடி ஏன் செய்யக்கூடாது என்பதற்கு காரணம் தெரிவிக்கும்படி, சம்மன் பிறப்பிக்க உத்திரவிடலாம்.

(2) மாஜிஸ்ட்ரேட்டானவர்-அந்தப் பிராதுக்காரனாவது சங்கதி தெரிவித்தவனாவது காட்டும் யாதொரு காரணத்தை எழுதிவைத்து அதைப்பற்றி ஆலோசிக்கவேண்டும்; செய்யப்பட்ட பிராதானது பொய்யானதென்றும் வீணாகவோ அலைக்கழிக்கும்படியாகவோ செய்யப்பட்டதென்றும் அவருக்குத் திருப்திகரமாய்த் தெரியவந்தால், அந்த பிராதுக்காரனாவது சங்கதி தெரிவித்தவனாவது குற்றஞ் சாட்டப்பட்டவனுக்காகிலும் அவர்களில் ஒவ்வொருவனுக்குமாகிலும் எவனுக்காகிலும் நூறு ரூபாய்க்கு அதிகப்படாமலும் அந்தமாஜிஸ்ட்ரேட் மூன்றாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாய் இருந்தால் அவர் நிர்ணயிக்கிறபடி 50-ரூபாய்க்கு மேற்படாமலும் பிரதிபலன் கொடுக்கவேண்டுமென்று கட்டளையிடலாம். இந்தப்படி கட்டளையிடுவதற்குள்ள நியாயங்களை எழுதிவைக்கவேண்டும்.

(2-a) மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்தப் பிரதிபலனைக் கொடுக்கும்படி கட்டளையிடுகிற உத்தரவினால், அந்தப் பிரதிபலனைச் செலுத்தும்படி உத்தரவு செய்யப்பெற்றிருக்கும் நபர் அந்தப்படி செலுத்தாத பக்ஷத்திலே முப்பது தினத்துக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு வெறுங்காவல் தண்டனையை அடையவேண்டுமென்று பின்னும் உத்தரவு செய்யலாம்.

(2-b) (2-a) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு நபர் காவலில் வைக்கப்பட்டால், இந்தியன் பினல் கோட் 68-வது 69-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகள் கூடுமானமட்டிலே பிரயோகப்பட வேண்டும்.

(2-c) இந்தப் பிரிவின்படி யாதொரு குற்றஞ் சாட்டப்பட்டவனுக்குப் பிரதிபலன் செலுத்தும்படி உத்தரவு செய்யப்பெற்றிருக்கிற எந்த நபருக்கும், அப்படிப்பட்ட உத்தரவு காரணமாக, அவரால் செய்யப்பட்ட பிராது அல்லது தெரிவிக்கப்பட்ட சங்கதி விஷயமாய் ஸிவில் அல்லது க்ரிமினல் சம்பந்தமான யாதொரு பொறுப்பினின்றும் நிவாரணை ஏற்படாது.

ஆனால், இந்தப் பிரிவின்படி யாதொரு குற்றஞ் சாட்டப்பட்டவனுக்குச் செலுத்தப்பட்ட யாதொரு தொகையை, அதே விஷயத்தைக் குறித்து பின்னிட்டு ஏற்படக்கூடிய யாதொரு ஸிவில் வியாஜ்ஜியத்தில் அப்படிப்பட்ட நபருக்குக் கொடுக்கவேண்டிய பிரதிபலனைத் தீர்மானிப்பதில் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

(3) 2-வது அல்லது 3-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டினால் (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது அல்லது வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினால் 50-ரூபாய்க்கு மேற்பட்டு அப்படிப்பட்ட பிரதிபலன் கொடுக்கும்படி யாருக்கு உத்தரவுசெய்யப்பட்டிருக்கிறதோ அந்தப் பிராதுக்காரன் அல்லது சங்கதிதெரிவித்தவன் அந்த மாஜிஸ்ட்ரேட்டினால் பரிசிலனைசெய்யப்பட்டுக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டாலெப்படியோ அப்படியே அந்த உத்தரவின்மேல் அது பிரதிபலன் கொடுப்பதற்குச் சம்பந்தப்படுகிற வரையிலே அப்பீல் செய்யலாம்.

(4) யாதொரு கேஸிலே குற்றஞ் சாட்டப்பட்டவனுக்குப் பிரதிபலன் கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருந்து அது (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அப்பீல் செய்வதற்குள்ளாவதாயிருந்தால் அப்பீல் செய்வதற்குக் கொடுக்கப்பட்டிருக்குங்காலம் கழிவதற்கு முன்னாவது அப்பீல் செய்யப்பட்டிருந்தால் அப்பீல் தீர்மானிக்கப்படுவதற்கு முன்னாவது அதைக்குறித்து அப்படி அப்பீல் செய்யக்கூடாதநானால், அந்த உத்தரவின் தேதியிலிருந்து ஒரு மாதம் கழிகிறவரையிலாவது அவனுக்குப் பிரதிபலனைக் கொடுக்கக்கூடாது.

---

21 - ம் அத்தியாயம்.

வாரன்ட் கேஸுகளை மாஜிஸ்ட்ரேட்டுகள் பரிசீலனை செய்வதைக் குறித்து.

வாரன்ட் கேசுகளில் நடவடிக்கை

251. வாரன்ட் கேஸுகளைப்பரிசீலனைசெய்வதில் மாஜிஸ்ட்ரேட்டுகள் அடியிற்கண்டிருக்கிற நடவடிக்கையை அனுசரிக்கவேண்டும்.

பிராது பட்சத்துச் சாட்சியம்.

252. (1) குற்றஞ் சாட்டப்பட்டவன் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன் ஹாஜரானாலும் கொண்டுவரப்பட்டாலும், அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் பிராதுக்காரனெவனுவதிருந்தால் அவன் சொல்லுகிறதைக் கேட்கவும் பிராதுக்கு ஆதாரமாகக்கொண்டுவரப்படுகிற சகல சாட்சியத்தையும் வாங்கவும் தொடங்கவேண்டும்.

ஆனல், அந்தப் பிராது ஒரு கோர்ட்டாரால் செய்யப்பட்டிருந்தால், மாஜிஸ்ட்ரேட்டானவர் எந்த விஷயத்திலாகிலும், பிராதுதாரராக எவரையும் விசாரிக்கவேண்டுவதில்லை.

(2) மாஜிஸ்ட்ரேட்டானவர்-அந்த கேஸின் சங்கதிகளை அறிந்திருந்து பிராது பட்சத்தில் சாட்சியஞ்சொல்லக் கூடுமானவர்கள்போலிருக்கிற நபர்கள் பெயரைப் பிராதுக்காரனிடத்திலாவது வேறேவிதமாயாவது நிச்சயமாய் தெரிந்துகொண்டு, அவர்களுக்குள் தமக்கு அவசியமாகத் தோற்றுகிறவர்களைத் தமக்குமுன் சாட்சியஞ்சொல்வதற்கு ஸம்மனனுப்பி வரவழைக்கவேண்டும்.

குற்றஞ் சாட்டப்பட்டவனை விட்டுவிடுவது.

253. (1) 252-வது பிரிவில் சொல்லியிருக்கிற சகல சாட்சியத்தையும் வாங்கி, குற்றஞ்சாட்டப்பட்டவனை மாஜிஸ்ட்ரேட்டுக்கு அவசியமாகத் தோற்றுகிற ஏதாவது விமரிசையுஞ் செய்தபின்பு, அதற்கு எதிர்மொழிசொல்லி மறுக்காவிட்டால் குற்றஞ் சாட்டப்பட்டவனைக் குற்றவாளியென்று தீர்மானிப்பதற்கு ஹேதுவிருக்குமோ அப்படிப்பட்ட யாதொரு சங்கதியும் அவன்மேல் ருஜுவாகவில்லையென்று மாஜிஸ்ட்ரேட் கண்டுகொள்ளுகிற பட்சத்தில், அவர் அவனை விட்டுவிடவேண்டும்.

(2) பிராதுக்கு ஆதாரமில்லையென்று மாஜிஸ்ட்ரேட் அபிப்பிராயப்பட்டால், குற்றஞ் சாட்டப்பட்டவனை அந்தக்கேஸ் நடக்கிற

முன்னிட்ட எந்த தெசையிலாவது விட்டுவிடுவதற்கு அவருக்குத் தடையுண்டாவதாக இந்தப்பிரிவிற் சொல்லியிருப்பதெதனுலும் எண்ணக்கூடாது; மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்படி பிராதுக்காதாரமில்லையென்று நம்புவதற்குத் தமக்குண்டான ஹேதுக்களை எழுதிவைக்க வேண்டும்.

குற்றம் ருஜுவானதாய்த் தெரியவந்தால் குற்றபத்திரிகை எழுதுவது.

254. அந்த கேஸில் அப்படிப்பட்ட சாட்சியம் வாங்கி விமரிசையுஞ் செய்யும்போதாவது அதற்கு முந்திய எந்தஷெதசையிலாவது மாஜிஸ்ட்ரேட்டானவர் - இந்த அத்தியாயத்தின்படி பரிசீலனை செய்யப்படத்தக்கயாதொரு குற்றத்தைக் குற்றஞ் சாட்டப்பட்டவன் செய்திருக்கிருனென்று நிச்சயமாய்க்கொள்ளுவதற்கு முகாந்தரமிருப்பதாக அபிப்பிராயப்பட்டால், அந்தக் குற்றத்தைப் பரிசிலனைசெய்ய அவருக்கதிகாரமிருந்து அதற்காகத் தகுந்த தண்டனையும் அவர் விதிக்கக்கூடுமென்று. அவருக்குக் காணுகிற பட்சத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவன்மேல் அவர் குற்ற பத்திரிகை எழுத வேண்டும்.

குற்றஞ் சாட்டப்பட்டவன் ஒப்புக்கொள்வது.

255. (1) பின்பு குற்றபத்திரிகையைக் குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு படித்து விவரமாய்ச்சொல்லி, அவன் குற்றவாளியா அல்லது தன் பட்சத்தில் ஏதாவது வாதிக்கப்போகிருனுவென்று அவனைக் கேட்க வேண்டும்.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவன் தான் குற்றவாளிதானென்று ஒப்புக்கொண்டால் மாஜிஸ்ட்ரேட்டானவர் அவன் ஒப்புக்கொள்வதை எழுதிக்கொள்ளவேண்டும்; தமக்கு யுக்தமாகத் தோற்றினல் அதன்மேல் அவனைக் குற்றவாளியென்று அவர் தீர்மானிக்கலாம்.

குற்றவாளியென்று முன்னமே தீர்மானிக்கப்பட்டிருக்கிற விஷயங்களில் நடவடிக்கை.

255-A. 221-வது பிரிவைச்சேர்ந்த (7) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி முன்னதாய்க் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருப்பதைக் குற்றபத்திரிகையில் காணும் விஷயத்திலே, குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்ற பத்திரிகையில் சொல்லப்பட்டபடி தான் முன்னதாய் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாக ஒப்புக்கொள்ளாவிட்டால், மாஜிஸ்ட்ரேட்டானவர்-மேற்படி குற்றஞ் சாட்டப்பட்டவனை 255-வது பிரிவைச்

சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது 258-வது பிரிவின்படியாவது குற்றவாளியென்று தீர்மானித்த பிறகு, முன்னதாய் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டதைக் குறித்து சாட்சியம் எடுத்து அதைப்பற்றி ஒரு தீர்மானம் எழுதி வைக்கவேண்டும்.

குற்றஞ் சாட்டப்பட்டவன் பட்சத்தில் சொல்லிக்கொள்வது.

256. (1) குற்றஞ் சாட்டப்பட்டவன் நியாயவாதம் பண்ண மாட்டேனென்றாலும் நியாயவாதம் பண்ணினாலும் தன்னைப் பரிசீலனை செய்யும்படி தாவாசெய்தாலும், பிராது பட்சத்தில் எவர்களுடைய சாட்சியம் எடுத்துக்கொள்ளப்பட்டதோ அந்த சாட்சிகளில் யாரையாவது ரத்துசவால்செய்ய விரும்புகிறானென்றும் அப்படி விரும்பும் பட்சத்தில் இன்னானை அந்தப்படி ரத்து சவால்செய்யத் தான் விரும்புகிறானென்றும் மாஜிஸ்ட்ரேட்டுக்குத்தகுதியாக தோற்றுகிற காரணங்களை எழுதி, உடனேயாவது, கேஸின் அடுத்த விசாரணை ஆரம்பமாகும்போதாவது சொல்லும்படி அவனைக் கேட்கவேண்டும். அவன் அவ்வாறு விரும்புவதாகச்சொன்னால் அவன் சொல்லும் சாட்சிகளைத் திரும்பக்கூப்பிட்டு ரத்துசவாலும் புனர் விசாரணையும் யாதேனுமிருந்தால் அது முடிந்த பிறகு அவர்களை விடுதலைசெய்யவேண்டும், பிராது பட்சத்தில் இன்னமிருக்கிற எந்த சாட்சிகளின் சாட்சியத்தையாவது அப்புறம் கேட்கவேண்டும்; மேலும், ரத்து சவாலும் புனர் விசாரணையும் யாதேனுமிருந்தால் அது முடிந்தபிறகு அவர்களையுங்கூட விடுதலை செய்யவேண்டும். அதன் பிறகு அவன் தன் பட்சத்தில் வாதிக்கும்படிக்கும் தன் சாட்சியத்தைக் கொண்டுவரும்படிக்கும் அவனுக்கு உத்தரவு செய்யவேண்டும்.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவன் எதாவது விவரப்பத்திரிகை கொடுத்தால் மாஜிஸ்ட்ரேட்டானவர் அதை ரிகார்டோடு தாக்கல்செய்து கொள்ளவேண்டும்.

குற்றஞ் சாட்டப்பட்டவன் கேட்டுக் கொள்வதன்மேல் சாட்சியம் கொ

257. (1) யாதொரு சாட்சியை விமரிசை செய்யும்பொருட்டாவது ரத்து சவால் செய்யும்பொருட்டாவது ஹாஜராகும்படி நிர்ப்பந்திப்பதற்காகவாகிலும், யாதொரு தஸ்தவேஜு முதலிய பொருளைக்கொண்டு வந்து காட்டும்படி நிர்ப்பந்திப்பதற்காகவாகிலும்

ண்டிவரும்படி சீர்பந்திப்பதற்குக் கட்டளை.

யாதொரு கட்டளை பிறப்பிக்கும்படி குற்றஞ்சாட்டப்பட்டவன் தன்பட்சத்தில் வாதிக்க ஆரம்பித்த பிறகு மாஜிஸ்ட்ரேட்டுக்கு மனுசெய்துகொண்டால், மாஜிஸ்ட்ரேட்டானவர் - அலைக்கழிக்கும்பொருட்டாவது ஆலசியம் பண்ணும்பொருட்டாவது நீதி தவறிப்போகும் பொருட்டாவது அந்த மனுசெய்துகொள்ளப்பட்டதென்கிற ஹேதுவின்மேல் அதை நிராகரிக்கவேண்டுமென்று தமக்குத் தோற்றினாலொழிய அப்படிப்பட்ட கட்டளையைப் பிறப்பிக்கவேண்டும். அப்படிப்பட்ட ஹேதுவை அவர் எழுதி ரிகார்ட் பண்ணவேண்டும்.

ஆனால், குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்ற பத்திரிகை ஏற்படுத்தப்பட்ட பிறகு யாதொரு சாட்சியை ரத்து சவால் செய்தாலும், அல்லது ரத்து சவால்செய்ய அவனுக்கு அனுகூலம் வாய்த்திருந்தாலும் மாஜிஸ்ட்ரேட்டானவர் நியாய விஷயங்களுக்காக அவசியமென்று தாம் திருப்தியடைந்தாலன்றி மற்றபடி அந்த சாட்சியை ஹாஜராயிருக்கும்படி இந்தப் பிரிவின் பிரகாரம் கட்டாயப்படுத்தக்கூடாது.

(2) அப்படிப்பட்ட மனுவின்மேல் யாதொரு சாட்சியை ஸம்மனனுப்பி வரவழைப்பதற்கு முன்னமே, பரிசீலனையின் பொருட்டு ஹாஜராவதற்காக அவனுக்கு நியாயமாய்ப்பிடிக்கும் செலவுக்காகக் கோர்ட்டில் பணம் கட்டச்சொல்லி மாஜிஸ்ட்ரேட் கேட்கலாம்.

குற்றவாளியல்லவென்று விடுவிப்பது.

258. (1) இந்த அத்தியாயத்திற்குட்பட்ட எந்த கேஸில் குற்றப்பத்திரிகை தயார் செய்யப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு கேஸிலே, குற்றஞ்சாட்டப்பட்டவனைக் குற்றவாளியல்லவென்று மாஜிஸ்ட்ரேட் தீர்மானித்தால், அவர் அவனைக் குற்றவாளியல்லவென்று விடுவிப்பதற்கான உத்தரவை ரிகார்ட் பண்ணவேண்டும்.

குற்றவாளியென்று தீர்மானிப்பது.

(2) இந்த அத்தியாயத்தின்படி யாதொரு கேஸிலே குற்றஞ்சாட்டப்பட்டவனைக் குற்றவாளியென்று மாஜிஸ்ட்ரேட் தீர்மானித்தால் அவர் 349-வது பிரிவிலாவது 562-வது பிரிவிலாவது கண்ட நிபந்தனையனுசரித்து தாம் நடவடிக்கை நடத்தினாலன்றி மற்றப்படி, சட்டப்பிரகாரம் அவனுக்குச் சிட்சை விதிக்கவேண்டும்.

பிராதுக்காரன் ஹாஜராகாமற போவது.

259. பிராது செய்யப்படுவன்மேல் நடவடிக்கை நடத்தப்பட்டிருந்து, அந்தக்கேஸை விசாரணைசெய்வதற்கு நிச்சயிக்கப்பட்ட யாதொரு தினத்திலே பிராதுக்காரன் ஹாஜராகாவிட்டால், அந்தக் குற்றம் சட்டப்படி ராஜியாகக்கூடியதாயிருக்கிற பட்சத்திலாவது அல்லது பிடிக்கக்கூடாததா யிருக்கிறபட்சத்திலாவது, மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றுமாகில், இதில் முன்னமே என்னசொல்லியிருந்தபோதினும், குற்றப்பத்திரிகை தயார்செய்யப்படுவதற்கு முன்னமே எப்போதாவது, குற்றஞ் சாட்டப்பட்டவனை விடுதலை செய்யலாம்.

22-ம் அத்தியாயம்.

சுருக்கவகையான பரிசீலனைகளைக் குறித்து.

சுருக்க வகையாய்ப் பரிசீலனைசெய்ய அதிகாரம்.

260. (1) இந்த சட்டத்தில் என்னசொல்லியிருந்தபோதிலும்—

(a) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டும்,

(b) இந்த விஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்றிருக்கிற யாதொரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டும்,

(c) முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டினுடைய அதிகாரங்களையுடையவர்களாய், இந்த விஷயத்திலே பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமாய் அதிகாரங்கொடுக்கப் பெற்றிருக்கிற மாஜிஸ்ட்ரேட்டுகளின் சபையாரும்,

அவர் அல்லது அவர்களுக்குச் சரியாகத் தோற்றுகிறபடி அடியில் கண்டிருக்கிற குற்றங்கள் யாவற்றையுமாவது அவைகளிலெதையாவது சுருக்கவகையாய்ப் பரிசீலனைசெய்யலாம்.

(a) ஆறு மாதத்திற்கதிகப்பட்ட காலத்திற்குக் காவல் தண்டனையாவது தன்னீர்மேலேற்றும் தண்டனையாவது மரண தண்டனையாவது விதிக்கப்படத்தக்கதல்லாத குற்றங்கள்;

(b) இந்தியன் பினல் கோட் 264, 265, 266-வது பிரிவுகளின்படி படிக்கட்டு முதலிய எடுத்தலளவைகளுக்கும் படி

மரக்கால் முதலிய முகத்தலளவைகளுக்கும் சம்பந்தமான குற்றங்கள் ;

(c) அதே கோட் 323-வது பிரிவின்படி துன்பம் ;

(d) அதே கோட் 379, 380 அல்லது 381-வது பிரிவின்படி திருடப்பட்ட சொத்தின் கிரயம் ஐம்பது ரூபாய்க் கதிகப்படாத திருட்டு ;

(e) அதே கோட் 403-வது பிரிவின்படி, அநியாயமாய் உபயோகப்படுத்திக் கொள்ளப்பட்ட சொத்து ஐம்பது ரூபாய்க்கு அதிகப்படாதபோது, அந்த சொத்தை அநியாயமாய் உபயோகித்தல் ;

(f) அதே கோட் 411-வது பிரிவின்படி, திருடப்பட்ட சொத்தின் கிரயம் ஐம்பது ரூபாய்க்கு அதிகப்படாதபோது, அந்த திருட்டுச்சொத்தைப் பெற்றுக்கொள்வது அல்லது வைத்துக்கொண்டிருப்பது ;

(g) அதே கோட் 414-வது பிரிவின்படி, திருடப்பட்ட சொத்தின் கிரயம் ஐம்பது ரூபாய்க்கு அதிகப்படாதபோது, அந்த திருட்டுச்சொத்தை மறைப்பதற்காவது யாதொரு வகை செய்வதற்காவது உதவிபண்ணுவது ;

(h) அதே கோட் 427-வது பிரிவின்படி கெடுதி ;

(i) அதே கோட் 448-வது பிரிவின்படி, வீட்டினிடமாய் நுழைவதும், 451, 456, 457-வது பிரிவின்படிக்கான குற்றங்களும் ;

(j) அதே கோட் 504-வது பிரிவின் பிரகாரம், அமரிக்கையைக் கெடுக்கும்படிச் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு பழிக்கலும், 506-வது பிரிவின்படி, அநியாயமாய்ப் பயப்படுத்துதலும் ;

(k) மேற்படி குற்றங்களில் எதற்காவது உடந்தையாயிருப்பது ;

(l) மேற்படி குற்றங்களில் எதையாவது செய்ய எத்தனப்படுவதும் குற்றமாகும்போது அந்த எத்தனம் ;

(m) ஆடுமாடுகள் துராக்கிரதமாய் நுழைவதைக் குறித்த 1871-ம் வருஷத்து ஆக்ட் 20-வது பிரிவின்படிக்கான குற்றங்கள்.

ஆனல், எந்தக்கேஸில் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் 34-வது பிரிவினுல் கொடுக்கப்பட்ட விசேஷ அதிகாரங்களைச் செலுத்துகிருரோ அப்படிப்பட்ட கேஸைச் சுருக்கவகையாய்ப் பரிசீலனைசெய்யக்கூடாது.

(2) சுருக்கவகையாய்ப் பரிசீலனை செய்யும்போது மாஜிஸ்ட்ரேட்டுக்காவது மாஜிஸ்ட்ரேட் சபையாருக்காவது அந்தக் கேஸின் சுபாவத்தை யோசிக்கையிலே சுருக்கவகையாய்ப் பரிசீலனைசெய்வது சரியல்லவென்று தோற்றும் பட்சத்தில் மாஜிஸ்ட்ரேட்டாவது மாஜிஸ்ட்ரேட் சபையாராவது பரீட்சைசெய்தாயிருக்கும் எந்த சாட்சிகளையேனும், அழைத்து இந்தசட்டத்தில் ஏற்படுத்தியிருக்கிறபடி அந்தக் கேஸைப் புனர் விசாரணைசெய்ய ஆரம்பிக்கலாம்.

குறைந்த அதிகாரம் கொடுக்கப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளின் நியாயசபைக்கு மேற்படி அதிகாரங்கொடுக்க அதிகாரம்.

261. அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார்-இரண்டாவது அல்லது மூன்றுவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக் குண்டான அதிகாரங்கள் கொடுக்கப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளின் யாதொரு நியாய சபைக்கு, அடியில் கண்டிருக்கிற குற்றங்க ளெல்லாவற்றையுமாவது அவைகளிலெதையாவது சுருக்கவகையாய்ப் பரிசீலனை செய்யும்படி அதிகாரங்கொடுக்கலாம் :—

(a) இந்தியன் பினல் கோட் 277, 278, 279, 285, 286, 289, 290, 292, 293, 294, 323, 334, 336, 341, 352, 426, 447, 504-வது பிரிவுகளுக்குட்பட்ட குற்றங்கள்;

(b) மியுனிசிபல் ஆக்டுகளுக்கும், போலீஸ் ஆக்டுகளில் (கன்ஸர்வன்ஸி) சீராய் வைத்திருப்பதைக் குறித்த பிரிவுகளுக்கும் விரோதமாய்ச் செய்யப்பட்டு, அபராத மாத்திரமாயாவது அபராதத்துடனுகிலும் அபராதமில்லாமலாகிலும் ஒரு மாதத்திற்கதிகப்படாமல் காவல் தண்டனையாவது விதிக்கப்படத்தக்க குற்றங்கள்;

(c) மேற்படி குற்றங்களிலெதற்காவது உடந்தையாயிருப்பது;

(d) மேற்படி குற்றங்களிலெதையாவது செய்வதற்கு எத்தனப்படுவதும் குற்றமாகும்போது அந்த எத்தனம்,

262. (1) இந்த அத்தியாயத்தின்படி நடத்தப்படுகிற பரிசிலனைகளிலே, இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடிக்குத் தவிர, ஸம்மன் கேஸுகளைக்குறித்து விதித்திருக்கிற நடவடிக்கைகளை ஸம்மன் கேஸுகள் விஷயத்தில் அனுசரிக்கவேண்டும்; வாரன்ட் கேஸுகளைக்குறித்து விதித்திருக்கிற நடவடிக்கைகளை வாரன்ட் கேசுகள் விஷயத்தில் அனுசரிக்கவேண்டும்.

ஸம்மன் கேஸுகளையும் வாரன்ட் கேஸுகளையும் குறித்த நடவடிக்கைகள் சம்பந்தப்படுவது.

(2) இந்த அத்தியாயத்தின்படி குற்ற ஸ்தாபனை செய்யப்படுகிற விஷயத்திலே மூன்று மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்குக் காவல் தண்டனை விதிக்கக்கூடாது.

காவல் தண்டனை அளவு.

263. அப்பீலில்லாத கேஸுகளிலே, மாஜிஸ்ட்ரேட்டாவது மாஜிஸ்ட்ரேட்டுகளின் நியாயசபையாராவது சாட்சிகளின் வாய்ப்பிரப்பை ரிகார்ட் பண்ணவேண்டியதில்லை ஒழுங்குபடி குற்றபத்திரிகை எழுதவேண்டியதில்லை; ஆனால், அவராவது அந்த சபையாராவது அடியில் கண்டிருக்கிற விவரங்களைப் பிரதேச கவர்ன்மெண்டாரால் உத்தரவு செய்யப்படுகிற விதமாய் எழுதவேண்டும்; அவையாவன:—

அப்பீலில்லாத கேசுகளில் ரிகார்ட்.

(a) தொடர்ச்சியான லக்கம்;

(b) குற்றஞ்செய்யப்படுகிற தேதி;

(c) ரிபோர்ட் அல்லது பிராதின் தேதி;

(d) பிராதுகாரனிருந்தால் அவனுடைய பெயர்;

(e) குற்றஞ் சாட்டப்பட்டவனுடைய பெயரும் தகப்பன் பெயரும் வாசஸ்தலமும்.

(f) பிராது செய்யப்பட்ட குற்றம், குற்றமேதாவது ருஜுவானால் அந்த குற்றமும்.
260-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின் (d), (e), (f) அல்லது (g) குறிப்பிட்ட பகுதிகளிலடங்கும் கேஸுகளில் எது விஷயமாய் அந்தக் குற்றஞ் சாட்டப்பட்டதோ அந்த சொத்தின் கிரயமும்;

(g) குற்றஞ் சாட்டப்பட்டவனுடைய (plea) மூலறப்பாடும் அவனுடைய விசாரிணை ஏதாவதிருந்தால் அதுவும்;

(h) தீர்மானமும் குற்றவாளியென்று தீர்மானிக்கிற விஷயத்தில் அதற்குண்டான ஹேதுக்களுக்குச் சங்கிரகமும் ;
(i) சிட்சை அல்லது வேறே முடிவான உத்தரவு ;
(j) நடவடிக்கை முடிந்த தேதி ;

அப்பீலுக் குட்பட்ட கேஸுகளில் ரிகார்ட்.

264. (1) மாஜிஸ்ட்ரேட்டாலாவது மாஜிஸ்ட்ரேட்டுகளின் நியாய சபையாராலாவது சுருக்கவகையாய்ப் பரிசிலனைசெய்யப்பட்டு, அப்பீலுக் குட்பட்டதாயிருக்கிற ஒவ்வொரு கேஸிலும், அந்தமாஜிஸ்ட்ரேட்டாகிலும் நியாயசபையாராகிலும் சிட்சை விதிப்பதற்கு முன்னமே, சாட்சியத்தின் சாராம்சத்தையும் 263-வது பிரிவில் குறித்திருக்கிற விவரங்களையும் கண்டு தீர்ப்பு எழுதவேண்டும்.

(2) அப்படிப்பட்ட தீர்ப்புமாத்திரந்தான் இந்தப் பிரிவிற் குட்பட்ட கேஸுகளிலே ரிகார்டாயிருக்கவேண்டும்.

ரிகார்டையும் தீர்ப்பையும் எழுதுகிற பாஷை.

265. (1) கோர்ட் செய்கிற உத்தியோகஸ்தரானவர் 263-வது பிரிவின்படி எழுதப்படுகிற ரிகார்டுகளையும் 264-வது பிரிவின்படி எழுதப்படுகிற தீர்ப்புகளையும் இங்கிலீஷிலாவது கோர்ட்டில் வழங்குகிற பாஷையிலாவது எழுதவேண்டும் ; அல்லது அந்த உத்தியோகஸ்தர் யாருக்கு நேராய்க் கீழ்ப்பட்டிருக்கிறாரோ அந்தக் கோர்ட்டார் உத்தரவுசெய்தால் தம் சொந்த பாஷையிலெழுதவேண்டும்.

ராயஸக் காரரை வைத்துக் கொள்ளும்படி மாஜிஸ்ட்ரேட்டுகளின் நியாய சபைக்கு அதிகாரங் கொடுக்கலாம்.

(2) அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் - சுருக்கவகையாய்க் குற்றங்களைப் பரிசிலனைசெய்ய அதிகாரம்பெற்ற மாஜிஸ்ட்ரேட்டுகளின் யாதொரு நியாய சபைக்கு அந்த நியாய சபையார் யாருக்கு நேராய்க் கீழ்ப்பட்டிருக்கிறார்களோ அந்தக்கோர்ட்டாரால் இந்த விஷயத்திலே நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தரைக் கொண்டு மேற்படி ரிகார்டையாவது தீர்ப்பையாவது தயார்செய்விக்கும்படி அதிகாரம் கொடுக்கலாம் ; அப்படி தயார் செய்யப்பட்ட ரிகார்டிலாகிலும் தீர்ப்பிலாகிலும் அந்த நியாய சபையின் அத்தியட்சர்களில் யாரார்வந்திருந்து நடவடிக்கை நடத்துகிறாரோ அந்தப் பிரதி அத்தியட்சரும் கையெழுத்துப் பண்ணவேண்டும்.

(3) அவ்வாறு அதிகாரங் கொடுக்கப்பெற்றிராவிட்டால் அந்த நியாய சபையின் ஒரு அத்தியட்சரால். தயார்செய்யப்பட்டு மேலே

சொல்லியபடி கையெழுத்திடப்பட்டிருக்கிற ரிகார்டானது தகுதியான ரிகார்டாகவேண்டும்.

(4) நியாயசபையில் அபிப்பிராய பேதமுண்டானால் மாறுன அபிப்பிராயங்கொண்ட அத்தியட்சர் பிரத்தியேகமாகத் தீர்மானத்தை எழுதலாம்.

23-ம் அத்தியாயம்.

ஹைகோர்ட்டுகளுக்கு முன்பாகவும் ஸெஷன் கோர்ட்டுகளுக்கு முன்பாகவும் நடக்கிற பரிசீலனைக் குறித்து.

A.—பீடிகா விதிகள்.

ஹைகோர்ட் என்பதற்கு அர்த்தம்.

266. 276-வது 307-வது பிரிவுகள் தவிர இந்த அத்தியாயத்திலும் 18-வது அத்தியாயத்திலுமுள்ள காரியங்களின் பொருட்டு ஹைகோர்ட் என்னும் வார்த்தையானது 1861-ம் ௵த்து இந்திய ஹைகோர்ட்டுகளின் ஆக்டின்படியாவது 1915-ம் ௵த்து இந்தியாகவர்ன்மெண்டு ஆக்டின்படியாவது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஹைகோர்ட் என்று அர்த்தமாவதுமல்லாமல், மத்திய மாகாணம், அயோத்தியை, ஸிந்து இவ்விடங்களின் ஜுடிஷியல் கமிஷனரின் கோர்ட்டென்பதும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்த அத்தியாயத்திலுள்ள காரியங்களின்பொருட்டு ஹைகோர்ட்டுகளாயிருப்பதாக இந்தியா கெஜட்டில் விளம்பர மூலமாய் நிர்ணயிக்கிற வேறே கோர்ட்டுகளென்பதுங்கூட அந்த சொற்றொடரில் அடங்கும்.

ஹைகோர்ட்டுக்கு முன்பாக நடக்கிற பரிசீலனைகள் ஜூரியால் நடத்தப்படவேண்டும்.

267. இந்த அத்தியாயத்திற் குட்பட்ட ஹைகோர்ட்டாருக்கு முன் நடக்கிற சகல பரிசீலனைகளும் ஜூரியால் நடத்தப்படும்;

மேலும், இதில் என்னசொல்லி யிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இந்த சட்டத்தின்படிக்காவது, 1861-ம் ௵த்து இந்திய ஹைகோர்ட்டுகளாக்டின்படியாவது 1915-ம் ௵த்திய இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டின்படியாவது ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு ஹைகோர்டுக்கு அனுப்பப்பட்ட சகல க்ரிமினல் கேசுகளிலும், ஹைகோர்டார் உத்தரவுசெய்தால் அப்படியே ஜூரி பரிசீலனை நடத்தலாம்.

ஸெஷன் கோர்ட்டாருக்கு முன்பாக நடக்கிற பரிசீலனைகளை ஜூரியைக்கொண்டாவது அஸெஸர்களோடாவது நடத்துவது.

268. ஸெஷன் கோர்ட்டாருக்கு முன்பாகச் சகல பரிசீலனைகளையும் ஜூரியைக்கொண்டாவதுசெய்யவேண்டும் ; அல்லது அஸெஸர்களுடைய சகாயத்தோடாவது நடத்தவேண்டும்.

ஸெஷன் கோர்ட்டிலே ஜூரி மூலமாய்ப் பரிசீலனை நடத்தும்படி அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் உத்தரவு பண்ணலாம்.

269. (1) யாதொரு ஸெஷன் கோர்ட்டாருக்கு முன்பாகச் சகல குற்றங்களையுமாகிலும், இன்னவகையான குற்றங்களையுமாகிலும் யாதொரு டிஸ்டிரிக்டிலே ஜூரியைக்கொண்டு பரிசிலனை செய்யவேண்டியதென்று அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார், சர்க்கார் கெஜட்டில் உத்தரவு பிறப்பித்துக் கட்டளையிடலாம் ; மேலும், அப்படிசெய்த உத்தரவை ரத்துபண்ணலாம் அல்லது மாற்றலாம்.

(2) அல்லாமலும் யாதொரு குற்றத்தின் பரிசீலனையை ஜூரிகளைக்கொண்டு நடத்தவேண்டியதாயிருக்கிற யாதொரு டிஸ்ட்ரிக்ட்டின் விஷயத்திலே ஜட்ஜானவர் தமக்குச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பத்தின்மேலாவது தமது சொந்த இஷ்டத்தின்மேலாவது திட்டஞ் செய்வாராகில், அப்படிப்பட்ட குற்றங்களின் பரிசீலனையைப் பிரத்தியேகமான ஜூரி ஜாபிதாவிலிருந்து வரவழைக்கப்பட்ட ஜூரர்களால் நடத்தவேண்டுமென்று அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் மேலேகண்ட மாதிரியான உத்தரவைப் பெற்றுக்கொண்டு கட்டளையிடலாம் ; மேலும், அப்படிசெய்த கட்டளையை ரத்துபண்ணலாம் அல்லது மாற்றலாம்.

(3) குற்றஞ் சாட்டப்பட்டவன்மேல் பல குற்றங்களைக் கூறித்து ஒரே பரிசிலனையில் பிராது செய்யப்பட்டிருந்து, அவைகளில் சில ஜூரியால் பரிசீலனை செய்யப்படத்தக்கவைகளாயும் மற்றவை ஜூரியால் பரிசிலனை செய்யப்படத்தக்கதல்லாதவைகளாயும் இருக்கிற பட்சத்தில், அப்படிப்பட்ட குற்றங்களிலே ஜூரியால் பரிசீலனை செய்யப்படத்தக்க குற்றங்களைப்பற்றி ஜூரியைக்கொண்டு அவனைப் பரிசீலனைசெய்யவேண்டும் ; ஜூரியால் பரிசிலனை செய்யப்படத்தக்கதாயிராதகுற்றங்களைப்பற்றி அஸெஸர்களான ஜூரர்களுடைய சகாயத்தைக் கொண்டு ஸெஷன் கோர்ட்டார் அவனைப் பரிசிலனை செய்யவேண்டும்.

ஸெஷன் கோர்ட்டுக்கு முன்பாகப் பரிசிலனையைப் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் நடத்துவது.

270. ஸெஷன்கோர்ட்டுக்கு முன்பாகப் பிரதி பரிசிலனையிலும், பப்ளிக் ப்ராஸிக்யூட்டரான வர் பிராதை நடத்தவேண்டும்.

B.—நடவடிக்கைகளை ஆரம்பிப்பது.

பரிசிலனையைத் தொடங்குவது.

271. (1) பரிசிலனையை ஆரம்பிக்கக் கோர்ட்டார் சித்தமாயிருக்கும்போது, குற்றஞ் சாட்டப்பட்டவன் கோர்ட்டாருக்கு முன்பாக ஹாஜராகவாவதுவேண்டும், அல்லது அவனைக் கொண்டுவரவாவதுவேண்டும்; குற்ற பத்திரிகையைக் கோர்ட்டிலே படித்து அவனுக்கு விவரமாய்ச் சொல்லி, சாட்டப்பட்ட குற்றத்தை அவன்செய்திருக்கிறானென்று அல்லது பரிசிலனைசெய்யச் சொல்லுகிறானென்று அவனைக் கேட்கவேண்டும்.

குற்றவாளி என்று ஒப்புக்கொள்வது.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவன் தான் குற்றவாளிதானென்று ஒப்புக்கொண்டால், அவன் ஒப்புக்கொள்வதை ரிகார்ட் பண்ணவேண்டும்; அதன்மேல் அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

ப்ளீட் பண்ண நிராகரிப்பது அல்லது பரிசிலனை பண்ணச் சொல்லுவது

272. குற்றஞ் சாட்டப்பட்டவன் ப்ளீட் பண்ணமாட்டேனென்றாலும் ப்ளீட் பண்ணுவிட்டாலும், தன்னைப் பரிசிலனை செய்யச்சொன்னாலும், கோர்ட்டார் இதில் பின்னால் உத்தரவுசெய்யப்படுகிற ஜூரர்களையாவது அஸெஸர்களையாவது தெரிந்தெடுத்துக் கேஸை பரிசிலனை செய்யத்தொடங்கவேண்டும்.

அதே ஜூரியாவது அஸெஸர்களாவது வரிசையாய்ப் பலபேர்களைப் பரிசிலனைசெய்வது

ஆனால், இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடி ஆட்சேபனைசெய்வதற்கான சுதந்தரத்திற்குள்ளாகி, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எத்தனைபேரை வரிசையாய்ப் பரிசிலனைசெய்வது கோர்ட்டாருக்கு யுக்தமாகக் காண்கிறதோ அத்தனைபேரை அதேஜூரி பரிசிலனை செய்யலாம்; அல்லது அவர்களுடைய பரிசிலனையில் அதே அஸெஸர்கள் சகாயஞ்செய்யலாம்.

சிலக்காதபிராதுகளின்மேல் பதிவு.

273. (1) ஹைகோர்ட்டுக்கு முன்பாக நடக்கும் பரிசிலனைகளிலே, யாதொரு குற்றபத்திரிகையாவது அதில் யாதொரு பாகமாவது குற்றஞ் சாட்டப்பட்டவ

ணைப் பரிசீலனைசெய்யத் தொடங்குவதற்கு முன்னமே எப்போதாகி லும் பரிஷ்காரமாய் நிலைக்காததாக ஹைகோர்ட்டுக்குத் தோற்றுமா கில், ஜட்ஜானவர் அந்த குற்ற பத்திரிகையின்மேல்அந்தப்படி எழுதி வைக்கலாம்.

அந்தப் பதிவினு லே இன்னதாகு மென்பது.

(2) அப்படி எழுதிவைப்பது சங்கதிக்குத் தக்கபடி அந்த குற்ற பத்திரிகையின்மேலாவது குற்ற பத்திரிகை யின் பாகத்தின் மேலாவது நடவடிக்கைகளை நிறுத்திவைக்கும்படியான பிரயோசன முள்ளதா கும்.

C.—ஜூரியைத் தெரிந்தெடுப்பது.

ஜூரியின் சங்கி யை.

274. (1) ஹைகோர்ட்டுக்கு முன்பாக நட க்கும் பரிசீலனைகளிலே ஜூரி ஒன்பதுபேர் இருக் கவேண்டும்.

(2) ஸெஷன் கோர்ட்டுக்கு முன் ஜூரியைக்கொண்டு செய்ய ப்படுகிற பரிசீலனைகளில் ஜூரி ஐந்து பேருக்குக் குறையாமலும் ஒன் பது பேருக்கு அதிகப்படாமலும், இன்ன டிஸ்ட்ரிக்டுக்கென்றாகிலும், அந்த டிஸ்ட்ரிக்ட்டில் இன்ன இனமான குற்றங்களுக்கென்றாகிலும் செய்யப்பட்ட உத்தரவைக்கொண்டு அவ்வவ்விடத்திய கவர்ன்மெண் டார் ஒற்றைப்படையாக எத்தனைபேர் இருக்கவேண்டுமென்று உத்த ரவு செய்கிறார்களோ அத்தனைபேர் இருக்கவேண்டும்.

ஆனால், குற்றஞ் சாட்டப்பட்ட நபர் மரணதண்டனை விதிக்கத் தக்க குற்றஞ்செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டால், ஜூரர்கள் ஏழு பேருக்கு குறையாமலும், சாத்தியப்படுமானல் ஒன்பது பேர்களும் இருக்கவேண்டும்.

யுரோப்பியர்களை யும் இந்தியப்ரிடிஷ் குடிகளையும் மற்ற வர்களையும் பரிசீல னை செய்வதற்கு ஜூரி.

275. (1) இந்தக்கோடின் நிபந்தனைகளின்படி ஒரு யுரோப்பி யன் அல்லது இந்திய ப்ரிடிஷ் குடியாய் இருக்கப் பட்ட ஒரு நபரை, ஹைகோர்ட்டார் அல்லது ஸெஷன்ஸ் கோர்ட்டாருக்கு முன் ஜூரியால் பரி சிலனை செய்யப்படுகையிலே, அந்த நபர் - முதல் ஜூரி அழைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவதற் கு முன்னமே கேட்டுக்கொண்டால், ஜூரர்களில் பெருந்தொகையார், யுரோப்பிய ப்ரிடிஷ் குடிகள் விஷயத்திலே

யுரோப்பியர்கள் அல்லது அமெரிக்கர்களாயும், இந்திய ப்ரிடிஷ் குடிகள் விஷயத்தில் இந்தியர்களாயும், இருக்கவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஜூரியால் பரிசீலனை செய்யப்படுவதிலே, இந்தக் கோடின் நிபந்தனைகளின்படி யாதொரு நபர் - (யுரோப்பிய ப்ரிடிஷ் குடியல்லாத) ஒரு யுரோப்பியன் அல்லது அமெரிக்கனாக காணப்பட்டால், அந்த யுரோப்பியனாவது, அமெரிக்கனாவது முதல் ஜூரர் அழைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னமே கேட்டுக்கொண்டால், சாத்தியப்படுகிற விஷயத்திலே, ஜூரர்களில் பெருந் தொகையார் யுரோப்பியர்கள் அல்லது அமெரிக்கர்களாய் இருக்க வேண்டும்.

ஜூரர்களைச் சீட்டுப்போட்டுத் தெரிந்தெடுப்பது.

276. ஜூரர்களாகப் பிரவர்த்திக்க வரவழைக்கப்பட்டவர்களுக்குள்ளே, ஹைகோர்ட்டார் அப்போதைக்கப் போது விதியைக்கொண்டு உத்தரவு செய்கிறவிதமாய்ச் சீட்டுப்போட்டு ஜூரர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும்;

விலக்கு. ஆனல்—

இப்போதிருக்கும் வழக்கம் அப்படியே இருப்பது.

முதலாவது, இந்தப் பிரிவின்படி யாதொரு கோர்ட்டுக்காக விதிகள் செய்யப்படுகிற வரையில், ஜூரர்களைத் தெரிந்தெடுப்பதைக் குறித்து அந்தக் கோர்ட்டில் இப்போது வழங்கிக்கொண்டிருக்கும் ஆசாரத்தையே அனுசரிக்கவேண்டும்:

வரவழைக்கப்படாதவர்களை இன்னபடிக்கானல் ஜூரர்களாக எடுத்துக்கொள்வது.

இரண்டாவது, வரவழைக்கப்பட்டவர்கள் குறைவுபடுகிற பக்ஷத்தில், வேண்டியிருக்கிற ஜூரர்களைக் கோர்ட்டாருடைய அனுமதியின்மேல், வந்திருக்கும்படியான அப்படிப்பட்ட மற்றவர்களிலிருந்து தெரிந்தெடுத்துக் கொள்ளலாம்;

ஸ்பெஷல் ஜூரர்களுக்கு முன்பாகப் பரிசீலனை.

மூன்றுவது, யாதொரு ஹைகோர்ட்டாருக்கு முன் நடத்தப்படும் பரிசீலனையில், அப்படிப்பட்ட ஹைகோர்ட்டார் சாதாரணமாய் எந்த இடத்தில் விசாரணை நடத்துகிறார்களோ அந்தப் பட்டணத்திலே—

(a) மரண தண்டனைக்குட்பட்ட குற்றஞ்செய்ததாக ஒருவன் மேல் பிராது கொண்டுவரப்பட்டாலும்,

(b) வேறே யாதொரு விஷயத்தில் ஹைகோர்ட் ஜட்ஜ் எவராவது உத்தரவுசெய்தாலும் ;

ஸ்பெஷல் ஜூரியைக்குறித்து இதின்பின்னால் நிர்ணயித்திருக்கிற ஜாபிதாவிலிருந்து ஜூரர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும்.

நான்காவது. சில குற்றங்களின் பரிசீலனை பிரத்தியேகமான ஜூரிகளால் நடத்தலாமென்று அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாரால் நிர்ணயித்திருக்கிற யாதொரு டிஸ்ட்ரிக்ட்டிலே, ஜட்ஜானவர் எந்த கேஸில் உத்தரவுசெய்கிறாரோ அந்த கேஸில் 325-பிரிவில் நிர்ணயித்திருக்கிற பிரத்தியேகமான ஜூரி ஜாபிதாவிலிருந்து ஜூரர்களைத்தெரிந்தெடுக்கவேண்டும்.

ஜூரர்களுடைய பெயர்களைக் கூப்பிடுவது.

277. (1) பிரதி ஜூரரும் தெரிந்தெடுக்கப்படுகையில், அவருடைய பெயரை உரக்கக் கூப்பிடவேண்டும் ; அவர் ஹாஜராவதன்மேல், குற்றஞ் சாட்டப்பட்டவனை அவரால் பரிசீலனை செய்யப்படுவதற்கு ஆட்சேபனை யுண்டாவென்று கேட்கவேண்டும்.

ஜூரர்களைக்குறித்து ஆட்சேபனை.

(2) அப்போது குற்றஞ் சாட்டப்பட்டவனாவது ப்ராஸிக்யூட்டராவது அந்த ஜூரரைக்குறித்து ஆட்சேபிக்கலாம் ; அப்படிச்செய்கையில் ஆட்சேபனைக் குண்டான ஹேதுக்களைச சொல்லவேண்டும்.

ஹேதுக்கள்சொல்லாமல் ஆட்சேபம்.

ஆனால், ஹைகோர்ட்டிலே, ஹேதுக்கள் சொல்லாமல் ஆட்சேபனை செய்யப்பட்டால் ராஜாங்கத்தின் பட்சத்தில் எட்டு ஆட்சேபனைகள் வரையிலும், குற்றஞ்சாட்டப்பட்டவன் ஒருவனாயிருந்தாலும் பலராயிருந்தாலும் இடங்கொடுக்கவேண்டும்.

ஆட்சேபனைக்குள்ள ஹேதுக்கள்.

278. அடியில் கண்டிருக்கிற ஹேதுக்களில் எதன்மேலாவது யாதொரு ஜூரரைக் குறித்துச் செய்யப்பட்ட யாதொரு ஆட்சேபனையானது கோர்ட்டாருக்குத் திருப்திகரமாயிருந்தால் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும்—

(a) ஜூரரிடத்திலுள்ள ஏதோ ஒரு அனுமேயமான அல்லது வாஸ்தவமான பட்சபாதம் ;

(b) அந்நிய தேசத்தானயிருப்பது, அந்தக்காலத்தில் வழங்கி வருகிற யாதொரு சட்டப்படிக்காவது சட்டத்தைப்போல ஊர்ஜிதமாயிருக்கிற விதிப்படிக்காவது வேண்டியிருக்கிற திறமையில் குறைவு, அல்லது இருபத்தொரு வயதுக்கு உட்பட்டாவது அறுபது வயதுக்கு மேற்பட்டாவதிருப்பது ஆகிய நபரைப்பற்றின ஆட்சேபம்.

(c) வழக்கத்தினாலாவது மத வைராக்கியத்தினாலாவது லௌகிகக் கவலைகளையெல்லாம் ஒழித்திருக்கிறாரென்பது ;

(d) அந்தக் கோர்ட்டிலாவது அந்தக் கோர்ட்டின் கீழாவது அவர் யாதொரு உத்தியோகஞ் செய்கிறாரென்பது ;

(e) அவர் யாதொரு போலீஸ் அலுவலை நடத்துகிறார் அல்லது யாதொரு போலீஸ் அலுவல் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பது ;

(f) யாதொரு குற்றத்தைக் குறித்து அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறாரென்பதனாலே அப்படிப்பட்டவர் ஜூரியாகப் பிரவர்த்திப்பதற்குத் தகாதவரென்று கோர்ட்டாருக்கு அபிப்பிராய முண்டானால் அப்படிப்பட்டது ;

(g) எந்தப் பாஷையில் சாட்சியஞ் சொல்லப்படுகிறதோ அல்லது அந்தச் சாட்சியம் மொழி பெயர்க்கப்பட்டால் எந்தப் பாஷையில் அது மொழி பெயர்க்கப்படுகிறதோ அந்தப் பாஷையைத் தெரிந்துகொள்ள அவருக்குச்சக்தியில்லையென்பது ;

(h) வேறே யாதொரு சங்கதியினாலே அவர் ஹாஜராயிருக்கத் தகாதவராகிறாரென்று கோர்ட்டாருக்கு அபிப்பிராய முண்டானால் அப்படிப்பட்டது.

ஆட்சேபனையின் தீர்மானம்.

279. (1) யாதொரு ஜூரரைக்குறித்துச் செய்யப்பட்ட பிரதி ஆட்சேபத்தையும் கோர்ட்டார் தீர்மானிக்கவேண்டும் ; அந்தத் தீர்மானம் ரிகார்ட் செய்யப்படவேண்டியது மல்லாமல் முடிவானதுமாகும்.

மேல் ஆட்சேபனை ஏற்றுக் கொள்ளப்படுகிற

(2) ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளப்பட்டால், அப்படிப்பட்ட ஜூரருக்குப் பதிலாக, ஸம்மன்படி வந்திருக்கிறவர்களில் 276-வது பிரிவில் விதித்திருக்கிற விதமாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட வேறே யாதொரு ஜூ

தோ அந்த ஜூரரு க்குப்பதிலாக வே றோஏற்படுத்துவது.

ரர் ஹாஜரில்லாவிட்டால், அப்போது ஜூரர்களின் ஜாபிதாவிலே பெயர் தாக்கலாய்க் கோர்ட்டில் வந்திருக்கிற வேறே யாதொரு நபரையாவது, ஜூரியாகப் பிரவர்த்திக்கத் தகுந்தவரென்று கோர்ட்டாருக்குத் தோற்றி அவ்விடத்தில் வந்திருக்கிற வேறே யாதொரு நபரையாவது ஏற்படுத்த வேண்டும்.

ஆனல், அப்படிப்பட்ட ஜூரர் அல்லது வேறேநபரைக்குறித்து 279-வது பிரிவின்படி ஆட்சேபணை செய்யப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட்டால் அப்படி ஏற்படுத்தக்கூடாது.

ஜூரியில் தலைவன்.

280. (1) ஜூரர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பிறகு, அவர்கள் தங்களிலொருவரைத் தலைவராக நியமித்துக்கொள்ளவேண்டும்.

(2) அந்தத் தலைவரானவர் - ஜூரி ஆலோசனையில் தலைமையாயிருக்கவும், ஜூரியின் தீர்மானத்தைச் சொல்லவும், ஜூரியாவது ஜூரர்களிலெவராவது தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற சங்கதியைக் கோர்ட்டாரைக் கேட்கவும் வேண்டும்.

(3) ஜூரியில் பெருந்தொகையார், நியாயமானதென்று ஜட்ஜ் நினைக்கிற காலத்திற்குள் ஒரு தலைவரை நியமிப்பதில் ஒருமைப்படாவிட்டால், அந்தத் தலைவரைக் கோர்ட்டார் நியமிக்கவேண்டும்.

ஜூரர்களைப் பிரமாணஞ் செய்விப்பது.

281. தலைவர் நியமிக்கப்பட்ட பின்பு, 1873-ம்வருஷத்திய இந்து தேசத்துப் பிரமாண ஆக்ட்டின்படி ஜூரர்களைப் பிரமாணஞ் செய்விக்க வேண்டும்.

ஜூரர் ஹாஜரில்லாமற் போவது முதலிய சங்கதிகளில் நடவடிக்கை.

282. (1) ஜூரியால் பரிசீலனை நடந்துகொண்டிருக்கையில், தீர்மானம் தெரிவிக்கப்படுவதற்கு முன்னமே எப்போதாவது, யாதொரு ஜூரரானவர் யாதொரு தகுந்த காரணத்தினாலே பரிசீலனை முழுவதும் ஹாஜரிலிருக்கத் தடைபட்டாலும், யாதொரு ஜூரர் வராதிருந்து, அவரை வரும்படிசெய்வதற்குச் சாத்தியப்படாவிட்டாலும், எந்தப் பாஷையில் சாட்சியம் சொல்லப்படுகிறதோ அல்லது அந்தச் சாட்சியத்தை மொழிபெயர்க்கிற பட்சத்தில் அது எந்தப் பாஷையில் மொழிபெயர்க்கப்படுகிறதோ அந்தப் பாஷையைத் தெரிந்துகொள்ள யாதொரு ஜூரருக்குச் சக்தியில்லையென்

று தெரியவந்தாலும், நூதனமாய் ஒரு ஜூரரையாவது சேர்க்கவேண்டும்; அல்லது அந்த ஜதை ஜூரியை எடுத்துவிட்டு வேறே ஜதை ஜூரியையாவது தெரிந்தெடுக்கவேண்டும்.

(2) இந்த இரண்டு வகைகளில் எதுசெய்தபோதிலும், பரிசீலனையை மறுபடி முதலிலிருந்து நடத்தவேண்டும்.

கைதிக்கு வியாதியுண்டானால் ஜூரியை விடுதலைசெய்வது.

283. மேலும், (bar) மறியற் கூட்டிலிருக்கக் கைதி அசக்தனாய்விட்டால், ஜட்ஜானவர் ஜூரியை விடுதலை பண்ணலாம்.

D.—அஸெஸர்களைத் தெரிந்தெடுப்பது.

அஸெஸர்களைத் தெரிந்தெடுக்கிற விதம்.

284. அஸெஸர்களைச் சகாயமாய்வைத்துக்கொண்டு பரிசீலனை செய்கிறதினால், அஸெஸர்களாகப் பிரவர்த்திக்க வரவழைக்கப்பட்டவர்களுக்குள் மூன்றுக்கு குறையாமலும் சாத்தியப்படுமானால் நான்கு பெயரைத் தெரிந்தெடுக்கவேண்டும்.

யுரோப்பியர்களையும் இந்திய ப்ரிடிஷ் குடிகளையும் மற்றவர்களையும் பரிசீலனை செய்வதற்கு அஸெஸர்கள்.

284-A. (1) இந்தக்கோடின் நிபந்தனைகளின்படி ஒரு யுரோப்பியன் அல்லது இந்திய ப்ரிடிஷ் குடியாய் இருக்கப்பட்ட ஒரு நபரை அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு செய்யப்படுகிற ஒரு பரிசீலனையிலே குற்றஞ்சாட்டப்பட்ட அந்த யுரோப்பியன் அல்லது இந்திய ப்ரிடிஷ் குடி ஒருவனாயிருந்தாலும், அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட யுரோப்பிய ப்ரிடிஷ் குடிகள் பலராயிருந்தாலும், அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட இந்திய ப்ரிடிஷ் குடிகள் பலராயிருந்தாலும் கூட்டாய் அவர்களெல்லோருமாக முதல் அஸெஸர் தெரிந்தெடுக்கப்படுவதற்கு முன்னே அப்படிக் கேட்டுக்கொண்டால், அஸெஸர்கள் எல்லோரும், யுரோப்பிய ப்ரிடிஷ் குடிகள் விஷயத்திலே யுரோப்பியர்கள் அல்லது அமெரிக்கர்களாய் இருக்கப்பட்ட நபர்களாயும், இந்திய ப்ரிடிஷ் குடிகள் விஷயத்தில் இந்தியர்களாயும் இருக்கவேண்டும்.

(2) இந்த கோடின் நிபந்தனைகளின்படி (யுரோப்பியன் ப்ரிடிஷ் குடியல்லாத) ஒரு யுரோப்பியன் அல்லது அமெரிக்கனாக இருக்கப்பட்ட ஒரு நபரை அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு செய்யப்படுகிற ஒரு பரிசீலனையிலே, அந்தயுரோப்பியன் அல்லது அமெரிக்-

கன் முதல் அஸெஸர் தெரிந்தெடுக்கப்படுவதற்கு முன்னமே கேட்டுக் கொண்டால் சாத்தியப்படுகிற விஷயத்திலே, அஸெஸர்களெல்லோ ரும், யுரோப்பியனாவது அமெரிக்கனாவாவது இருக்கப்பட்ட நபர் களாய் இருக்கவேண்டும்.

ஹாஜரிருக்கிற அஸெஸருக்குக் கூடாமையானல் இன்னது செய்வது.

285. (1) அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு பரிசீலனை நடந்துகொண்டிருக்கையில் தீர்மானத்திற்கு முன்னமே எப்போதாவது யாதொரு அஸெஸருக்கு யாதொரு தகுந்த காரணத்தினலே அந்தப்பரிசீலனை முழுவதுமிருக்கத் தடங்கலுண்டானலும், அவர் வராதிருந்து அவரை ஹாஜராகும்படிச் செய்வதற்குச் சாத்தியப்படாவிட்டாலும், மற்ற அஸெஸர் அல்லது அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு அந்தப் பரிசீலனையை நடத்த வேண்டும்.

(2) எல்லா அஸெஸர்களுக்கும் ஹாஜரிலிருக்கத் தடங்கலுண்டானலும், அவர்களெல்லோரும் வராதிருந்தாலும், நடவடிக்கையை நிறுத்தி, வேறே புது அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு பரிசீலனையை மறுபடி முதலிலிருந்து நடத்தவேண்டும்.

DD - கூட்டுப்பரிசீலனை.

கூட்டாய்க் குற்றஞ் சாட்டப்பட்ட யுரோப்பியன் அல்லது இந்திய ப்ரிடிஷ் குடியையும், யுரோப்பியன் அல்லது அமெரிக்கனையும் மற்றவர்களோடு பரிசீலனை செய்வது

285-A. ஒரு யுரோப்பியன் அல்லது அமெரிக்கனல்லாத வேறொரு நபரோடு கூட்டாய் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு யுரோப்பியன் அல்லது அமெரிக்கனாவது அல்லது இந்தியனல்லாத யாதொரு நபரோடு ஒரு இந்திய ப்ரிடிஷ் குடி கூட்டாய் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிற யாதொரு கேஸிலே, அந்த யுரோப்பியன் இந்திய ப்ரிடிஷ் குடி அல்லது அமெரிக்கன் ஒரு ஸெஷன் கோர்ட்டாருக்கு முன்பாக பரிசீலனைக்காக கம்மிட் செய்யப்பட்டால், அவனும் அப்படிப்பட்ட வேறே நபரும் கூட்டாய் விசாரணை செய்யப்படலாம். ஆனல், அவன் 275-வது அல்லது 284-A பிரிவுகளின்படி தான் பரிசீலனை செய்யப்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டதனல் அப்படி பரிசீலனை செய்யப்பட்டால், குற்றஞ்சாட்டப்பட்ட மற்ற நபர் தன்னையும் பிரத்தியேகமாய்ப் பரிசீலனைசெய்யவேண்

மென்று கேட்டுக்கொண்டால் அவனையும் அப்படியே இந்த அத்தியாயத்தின் நிபந்தனைகளின்படி பரிசீலனை செய்யவேண்டும்.

E.—பிராது பக்ஷத்து நடவடிக்கைக்காகவும் குற்றஞ் சாட்டப்பட்டவன் பக்ஷத்தில் வாதிப்பதற்காகவும் முடிவுவரையில் செஷன்ஸ்களின் பரிசீலனை.

பிராது நடத்துவதற்குக் கேஸ் ஆரம்பம்.

286. (1) ஜூரர்களாவது அஸெஸர்களாவது தெரிந்தெடுக்கப்பட்ட பின்பு, ப்ராஸிக்யூட்டரானவர் சாட்டப்பட்ட குற்றத்தின் விவரத்தை இந்தியன் பினல் கோடிலிருந்தாகிலும் வேறே யாதொரு சட்டத்திலிருந்தாகிலும் எடுத்துவாசித்து, குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றவாளியென்று இன்ன சாட்சியத்தினால் தாம் ருஜுப்படுத்தக் கோருகிறதாகச் சுருக்கமாய்ச் சொல்லித் தம்முடைய கேஸை ஆரம்பிக்கவேண்டும்.

சாட்சிகளின் விமரிசை.

(2) பின்பு ப்ராஸிக்யூட்டரானவர் தம் சாட்சிகளை விமரிசை செய்யவேண்டும்.

குற்றஞ் சாட்டப்பட்டவனை மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாக விமரிசை செய்தது சாட்சியமாகும்.

287. கமிட் செய்கிற மாஜிஸ்ட்ரேட்டினாலாவது அவருக்கு முன்பாகவாவது குற்றஞ்சாட்டப்பட்டவனை விமரிசைசெய்து கிரமமாய் ரிகார்ட் செய்யப்பட்டிருப்பது ப்ராஸிக்யூட்டரால் கொடுக்கப்பட்டுச் சாட்சியமாக வாசிக்கப்படும்.

பிரதமவிசாரணையில் கொடுக்கப்பட்ட சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கது.

288. குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கெதிரிலே, 18-வது அத்தியாயத்தின்படி யாதொரு சாட்சியால் கொடுக்கப்பட்டுக் கிரமமாய் எழுதிவைக்கப்பட்டிருக்கிற சாட்சியத்தை, அந்தச் சாட்சி கொண்டுவரப்பட்டு விமரிசை செய்யப்படுவானாகில் கோர்ட் செய்கிற ஜட்ஜுக்கு யுக்தமாகத் தோற்றினால் அந்தக்கேஸின் சகல காரியங்களுக்காகவும் 1872-ம் வருஷத்து இந்து தேசத்து சாட்சி ஆக்டின்படி நிபந்தனைகளுக்குட்பட்டு சாட்சியமாகக் கொள்ளலாம்.

பிராது பக்ஷத்துச் சாட்சிகளை விமரிசை செய்த பின்பு நடவடிக்கை.

289. (1) பிராதுபக்ஷம் சாட்சிகளின் விமரிசையும் குற்றஞ் சாட்டப்பட்டவனுடைய விமரிசை ஏதாவதிருந்தால் அதுவும் முடிந்தபின்பு, சாட்சிகளை அழைக்க அபிப்பிராயப்படுகிறானென்று குற்றஞ் சாட்டப்பட்டவனைக் கேட்கவேண்டும்.

(2) அப்படிப்பட்ட அபிப்பிராயம் இல்லையென்று அவன் சொன்னால், ப்ராஸிக்யூட்டரானவர் கேஸின் சங்கதியைத்தொகுத்துச்சொல்லலாம்; குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றஞ் செய்திருக்கிறானென்பதற்கு ருஜூவில்லையென்று கோர்ட்டார் நினைப்பார்களாகில், அந்தக் கோர்ட்டார் அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு பரிசீலனை செய்யப்பட்ட கேஸிலே குற்றவாளியல்லவென்று தீர்மானமெழுதலாம்; ஜூரியைக்கொண்டு பரிசீலனை செய்யப்பட்ட கேஸிலே குற்றவாளியல்லவென்று தீர்மானம் சொல்லும்படி ஜூரிக்குக் கற்பிக்கலாம்.

(3) குற்றஞ் சாட்டப்பட்டவனாவது குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் பலரிருந்தால் அவர்களிலெவனாவது சாட்சிகளை யழைக்கத் தான் அபிப்பிராயப்படுகிறதாகச் சொன்னால், குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றஞ் செய்தானென்பதற்கு ருஜூவில்லையென்று கோர்ட்டார் எண்ணுவார்களாகில், அப்போது கோர்ட்டார் அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு பரிசீலனை செய்யப்பட்ட கேஸிலே, குற்றவாளியல்லவென்று தீர்மானமெழுதலாம்; ஜூரியைக்கொண்டு பரிசீலனை செய்யப்பட்ட கேஸிலே குற்றவாளியல்லவென்று தீர்மானம் சொல்லும்படி ஜூரிக்குக் கற்பிக்கலாம்.

(4) குற்றஞ் சாட்டப்பட்டவனாவது குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் பலரிருந்தால், அவர்களிலெவனாவது சாட்சிகளை யழைக்கத் தான் அபிப்பிராயப்படுவதாகச்சொல்லி, அந்தக் குற்றத்தை அவன் செய்திருக்கிறானென்பதற்கு ருஜூவிருக்கிறதென்று கோர்ட்டார் நினைத்தாலும், சாட்சிகளையழைக்கத் தனக்கு அபிப்பிராயமில்லையென்று அவன் சொல்லுவதன்மேல் ப்ராஸிக்யூட்டரானவர் அந்தக் கேஸின் சங்கதிகளைத் தொகுத்துச்சொல்லி, குற்றஞ்சாட்டப்பட்டவன் அந்தக்குற்றஞ் செய்திருக்கிறானென்பதற்கு ருஜூவிருக்கிறதென்று கோர்ட்டார் நினைத்தாலும், குற்றஞ்சாட்டப்பட்டவனைத் தன் பட்சத்தில் வாதிக்கும்படி கோர்ட்டார் அவனுக்கு உத்தரவுசெய்யவேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டவன் பட்சத்தில் வாதிப்பது.

290. குற்றஞ் சாட்டப்பட்டவனாவது அவனுடைய ப்ளீடராவது அப்போது, எதை ஆதாரமாகக் கொள்ளத் தான் உத்தேசிக்கிறானோ அந்தச் சங்கதிகள் அல்லது சட்டத்தையும், பிராது பட்சத்துச் சாட்சியத்தைக் குறித்துத் தனக்கு அவசியமாகத் தோற்

டிகிற கூலாம்சத்தையும் எடுத்துச்சொல்லித் தன்னுடைய கேஸை ஆரம்பிக்கலாம். பின்பு அவன் தன்பட்சம் சாட்சிகளிருந்தால் அவர்களை விமரிசைசெய்யலாம்; அவர்களை எதிர் விமரிசையும் மறு விமரிசையும் செய்கிறபட்சத்தில் அப்படியான பிறகு, அவன் தன்னுடைய கேஸின் சங்கதியைத் தொகுத்துச் சொல்லலாம்.

சாட்சிகளை விமரிசை செய்வதைக் குறித்தும் அவர்களை ஸம்மனனுப்பி வரவழைப்பதைக் குறித்தும் குற்றஞ் சாட்டப் பட்டவனுக்குள்ள சுதந்தரம்.

291. குற்றஞ் சாட்டப்பட்டவனால் முந்தி குறிக்கப்படாத யாதொரு சாட்சி ஹாஜராயிருந்தால், குற்றஞ் சாட்டப்பட்டவன் அந்த சாட்சியை விமரிசைசெய்துவிடவேண்டும்; ஆனால், 211-வது, 231-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறபடிக்குத் தவிர, குற்றஞ் சாட்டப்பட்டவன் எவரால் தான் பரிசிலனைக்குக் கமிட் பண்ணப்பட்டானோ அந்த மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் கொடுக்கப்பட்ட ஜாபிதாவில் கண்டிருக்கிற சாட்சிகள் தவிர வேறே யாதொரு சாட்சியையும் ஸம்மனனுப்பி வரவழைக்கும்படி சுதந்தரித்துச்சொல்ல அவனுக்குப் பாத்தியதையில்லை.

மறுமொழி சொல்ல ப்ராஸிக்யூட்டருக்குள்ளசுதந்தரம்.

292. ப்ராஸிக்யூட்டரானவர்—

(a) குற்றஞ் சாட்டப்பட்டவனாவது குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் எவனாவது வாய்மொழியாய் யாதொரு சாட்சியம் கொடுத்தாலும்;

(b) கோர்ட்டாருடைய அனுமதியின்பேரில் ஒரு சட்ட சம்பந்தமான விஷயத்தைக் குறித்தும்;

(c) கோர்ட்டாரின் அனுமதியின்பேரில், யாதொரு குற்றஞ் சாட்டப்பட்ட நபர் தன்பட்சத்தில் வாதிக்க ஆரம்பித்த பிறகு, ருஜுசெய்யவேண்டிய அவசியமில்லாத யாதொரு தஸ்தவேஜைக்கொண்டு வந்தாலும்,—இவைகளுக்கு மறுமொழி சொல்ல சுதந்தரமுடையவராவர்.

ஆனால், (c) பகுதியில் குறிப்பிட்ட யாதொரு விஷயத்திலே, மறுமொழிசொல்ல கோர்ட்டார் வேறே விதமாய் உத்திரவுகொடுத்தாலொழிய, அப்படிக் கொண்டுவரப்பட்ட தஸ்தவேஜைக் குறித்துமட்டும் சொல்ல அனுமதிக்கப்படுவார்.

ஜூரியாவது அஸெஸர்களாவது பார்வையிடுவது.

293. (1) சாட்டப்பட்ட குற்றம் எவ்விடத்தில் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறதோ அந்த இடத்தையாவது, பரிசிலனைக்கு முக்கியமான வேறே யாதொரு காரியம் எவ்விடத்தில் நடந்ததாகச் சொல்லப்படுகிறதோ அந்த வேறோரிடத்தையாவது, ஜூரியாகிலும் அஸெஸர்களாகிலும் பார்வையிடவேண்டுமென்று கோர்ட்டார் எண்ணுகிறபட்சத்தில், அந்தப்படியே உத்தரவுசெய்யவேண்டும்; அதற்குமேல் ஜூரியையாவது அஸெஸர்களையாவது கோர்ட் உத்தியோகஸ்தர் தம்முடைய வசமாய் ஒரு கூட்டமாக இட்டுக்கொண்டு, கோர்ட்டாரால் நியமிக்கப்படுகிறவன் அவர்களுக்குக் காட்டுகிற மேற்படி இடத்திற்குப் போகவேண்டும்.

(2) அந்த உத்தியோகஸ்தரானவர் கோர்ட்டாருடைய அநுமதியில்லாமல் ஜூரி அல்லது அஸெஸர்களில் எவரோடாவது வேறே எவனையாகிலும் பேசவொட்டவுங்கூடாது; எவ்வித அறிவிப்பும் செய்யவொட்டவுங் கூடாது; கோர்ட்டார் மற்றப்படி உத்தரவு செய்தாலொழிய, பார்வையிட்டானபின்பு உடனே அவர்களைக் கோர்ட்டுக்கு மறுபடியும் இட்டுக்கொண்டு வந்துவிடவேண்டும்.

இன்னபடிக்கானல் ஜூரரையாவது அஸெஸரையாவது விமரிசை செய்யலாம்.

294. யாதொரு ஜூரராவது அஸெஸராவது ஒற்றுமையான யாதொரு சங்கதியை நேராய்த் தெரிந்துகொண்டவராயிருந்தால், அது தனக்குத் தெரியுமென்று ஜட்ஜுக்குத் தெரிவிப்பது அவருடைய கடமையாகும்; அதற்குமேல் அவரை வேறே யாதொரு சாட்சி விமரிசை செய்கிறவிதமாகவே பிரமாணஞ் செய்வித்து விமரிசையும் எதிர்விமரிசையும் மறுவிமரிசையுஞ் செய்யலாம்.

பரிசிலனையை நிறுத்திப் பின்புநடத்தப்படுங் காலத்தில் ஜூரியாவது அஸெஸர்களாவது வந்திருப்பது.

295. பரிசிலனை நிறுத்திவைக்கப்பட்டால், பின்பு பரிசிலனை நடத்துங்காலத்திலும் பின்னிட்டு நடத்தும் அந்தந்தகாலத்திலும் பரிசிலனை முடிகிற வரையிலே ஜூரியாவது அஸெஸர்களாவது வந்திருக்கவேண்டும்.

ஜூரியை அடைத்துவைப்பது.

296. ஹைகோர்ட்டார் ஒருநாளைக் கதிகமாய் அந்தக் கோர்ட்டுக்கு முன்பாக யாதொரு பரிசிலனை நடக்குங்காலத்திலும் ஜூரியை ஒன்றாய் வைத்திருப்பதைக் குறித்து அப்போதைக்கப்போது விதிகள் செய்ய

லாம்; அந்த விதிகளுக்குட்பட்டு, கோர்ட் செய்கிற ஜட்ஜானவர் கோர்ட் உத்தியோகஸ்தர் வசத்திலே ஜூரர்களை ஒன்றாய் வைத்திருக்கவேண்டியதோ, அல்லது அவர்களை அவரவர்வீட்டுக்குப் போக வொட்டவேண்டியதோ அதைக்குறித்து உத்தரவுபண்ணலாம்.

F.—ஜூரியால் பரிசீலனை செய்யப்பட்ட கேஸுகளில் பரிசீலனை முடிவு.

297. ஜூரியால் பரிசீலனை செய்யப்படுகிற கேஸுகளிலே குற்றஞ் சாட்டப்பட்டவன் பட்சத்து வாதமும் அதற்கு ஏதாவது ப்ராஸிக்யூட்டருக் கெதிர்வாதமிருந்தால் அதுவும் முடிந்தபின்பு, கோர்ட்டார் பிராதுபட்சம் சாட்சியத்தையும் குற்றஞ் சாட்டப்பட்டவன் பட்சம் சாட்சியத்தையும் தொகுத்துச் சொல்லி, ஜூரி அனுசரித்து நடக்கவேண்டிய சட்டத்தையும் எடுத்துக்காட்டி அவர்களுக்குக் கற்பனைகள் சொல்லவேண்டும்.

ஜூரிக்குக் கற்பனைகள் சொல்லுவது.

ஜட்ஜினுடைய கடமை.

298. (1) அப்படிப்பட்ட கேஸுகளிலே—

(a) பரிசீலனை நடந்துகொண்டிருக்கையில் சட்ட சம்பந்தமாய் ஏற்படுகிற சகல விஷயங்களையும், முக்கியமாய், ருஜுப்படுத்த உத்தேசிக்கப்படுகிற சங்கதிகளின் ஒற்றுமையைக் குறித்த சகல விஷயங்களையும், உபயத்திராளாலாவது அவர்கள் பட்சத்திலாவது கேட்கப்படுகிற சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதா வென்பதையும் அப்படி கேட்கப்படுகிற கேள்விகள் கிரமமானவைகளா வென்பதையும் தீர்மானிப்பதும்; தமக்கு யுக்தமாகத் தோற்றினால், உபயத்திராளால் ஆட்சேபிக்கப்பட்டாலும் படாவிட்டாலும், ஏற்றுக்கொள்ளத்தகாத சாட்சியங் கொண்டுவருவதைத் தடுப்பதும்;

(b) பரிசீலனையில் சாட்சியமாகக் கொடுக்கப்பட்ட சகல தஸ்தவேஜுகளின் அர்த்தத்தையும் வாக்கியங்களின் பொருத்தத்தையுங் குறித்துத் தீர்மானிப்பது;

(c) குறிப்பான விஷயங்களைக் குறித்துச் சாட்சியங் கொடுக்கக் கூடுமானதாய்ச் செய்யும்பொருட்டு ருஜுப்படுத்துவதற்கு அவசியமாயிருக்கும்படியான சங்கதியைச் சேர்ந்த சகல விஷயங்களைக் குறித்தும் தீர்மானிப்பதும்;

(d) உண்டான யாதொரு விஷயத்தைத் தாம் தீர்மானிக்கவேண்டியதோ அல்லது ஜூரி தீர்மானிக்கவேண்டியதோவென்று நிச்சயிப்பதும், ஜட்ஜினுடைய கடமையாகும்.

இந்த அம்சத்தைப்பற்றி: அவர்செய்கிற தீர்மானத்தின்படி ஜூரர்கள் நடந்துகொள்ளவேண்டும்.

(2) ஜட்ஜானவர் தமக்கு யுக்தமாகத்தோற்றினால், கேஸை அவர் தொகுத்துச் சொல்லுகையில், நடவடிக்கைக்கு ஒற்றுமையானதாகிய சங்கதியைப்பற்றின யாதொரு விஷயத்தைக் குறித்தாவது சட்டமும் சங்கதியும் கலந்திருக்கிற யாதொரு விஷயத்தைக் குறித்தாவது தமது அபிப்பிராயத்தை ஜூரிக்குச்சொல்லலாம்.

திருஷ்டாந்தங்கள்.

(a) கேஸிலே சாட்சியாயிராத ஒருவனுடைய வாய்ப்பிறப்பைக் குறித்த சாட்சியத்தை எற்றுக்கொள்ளத்தக்கதாகச் செய்யும்படியான சங்கதிகள் ருஜுவாயிருக்கிறதென்கிற ஹேதுவின்மேல் அப்படிப்பட்ட வாய்ப்பிறப்பை ருஜுப்படுத்தும்படி பிரேரேபனை செய்யப்படுகிறது.

அந்தச் சங்கதிகள் உண்டாயிருக்கிறது ருஜு செய்யப்பட்டதோ இல்லையோவென்று நிச்சயிப்பது ஜட்ஜியினுடைய காரியமேயல்லாமல் ஜூரியினுடைய காரியமல்ல.

(b) அசல் பிரதி போக்கடிந்து போய்விட்டதென்றாவது அழிந்துப் போடப்பட்டதென்றாவது சொல்லப்படுகிற தஸ்தவேஜைக்குறித்து உபசாட்சியஞ் சொல்லும்படி பிரேரேபனை செய்யப்படுகிறது.

அசல் பிரதி போக்கடிந்து போய்விட்டதென்றாவது அழிந்துவிடப்பட்டதென்றாவது நிச்சயிப்பது ஜட்ஜினுடைய கடமை.

ஜூரியினுடைய கடமை.

299. ஜூரியினுடைய கடமை என்னவென்றால்—

(a) சங்கதிகளைக் குறித்து இன்ன கருத்து எதார்த்தமானதென்று நிச்சயிப்பதும், பின்பு அப்படிப்பட்ட கருத்தின் பிரகாரம் ஜட்ஜ் வழிகாட்டுகிறபடி என்ன தீர்மானம் சொல்லவேண்டியதோ அந்தத் தீர்மானத்தைச் சொல்லுவதும் ;

(b) வழக்கமில்லாத அர்த்தத்திலே பிரயோகிக்கப்பட்டிருக்கிற வார்த்தைகள் தஸ்தவேஜுகளில் பிரயோகிக்கப்பட்டிருந்தாலும் இராவிட்டாலும், அப்படிப்பட்ட வார்த்தைகள் இன்ன அர்த்தம் கொள்ளுகின்றனவென்றும், (சட்டத்தைப்பற்றின சொற்கள் தவிர மற்ற) குறிப்புச்சொற்கள் இன்ன அர்த்தங்

சொல்லுகிறதென்றும் நிச்சயிப்பது அவசியமாயிருந்தால், அப்படிப்பட்ட சகல வார்த்தைகளின் அர்த்தத்தையும் சொற்களின் அர்த்தத்தையும் நிச்சயிப்பதும் ;

(c) சங்கதியைப்பற்றிய அம்சங்களாக எண்ணவேண்டியதென் றுசட்டத்தில் சொல்லியிருக்கிற சகல அம்சங்களையும் தீர் மானிப்பதும் ;

(d) இன்னதென்று குறிக்காமல் பொதுப்பட்ட வசனங்கள் குறிப்பான விஷயங்களுக்குச் சம்பந்தப்படுகிறதோ சம் பந்தப்படவில்லையோவென்று தீர்மானிப்பதுமே ; ஆனால், அப்படிப்பட்ட வசனங்கள் சட்டசம்பந்தமான நடவடிக் கைக்குச் சம்பந்தப்படுகிற விஷயத்திலாவது, அவைகளின் அர்த்தம் சட்டத்தினாலே நிச்சயிக்கப்பட்டிருக்கிற விஷயத் திலாவது, அவைகளின் அர்த்தத்தை நிச்சயிப்பது ஜட்ஜியி னுடைய கடமையாகும்.

திருஷ்டாந்தங்கள்.

(a) எ - என்பவன் பி - என்பவனைக் கொலைசெய்ததற்காகப் பரிசீலனை செய்யப்படுகிறான்.

கொலைக்கும் அநியாய மரணத்திற்குமுள்ள பேதத்தை ஜூரிக்கு விளரிப் பதும் சங்கதிகளின் இன்னின்ன நோக்கத்தைக்கொண்டு கொலைசெய்தவனென் றாவது அநியாய மரணமுண்டு பண்ணினவனென்றாவது எ - என்பவனைத் தீர் மானிக்கவேண்டி யிருக்கிறதென்றாகிலும், குற்றவாளி யல்லவென்று அவனை விடு தலை செய்யவேண்டி யிருக்கிறதென்றாகிலும் அவர்களுக்குச் சொல்லுவதும் ஜட் ஜியினுடைய கடமையாகும்.

சங்கதிகளின் நோக்கங்களில் இன்னது எதார்த்தமென்று நிச்சயித்து ஜட்ஜ் வழிகாட்டினது சரியானதாயிருந்தாலும் பிசகானதாயிருந்தாலும் ஜூரி அதை ஒத்துக்கொண்டாலும் ஒத்துக்கொள்ளாவிட்டாலும், ஜட்ஜ் வழி காட்டியபடி தீர் மானம் சொல்லுவது ஜூரியின் கடமை.

(b) விஷயமானது நியாயமான திறமையோடாவது தகுந்த ஜாக்கிரதை யோடாவது வேலை செய்யப்பட்டதோ இல்லையோவென்பது—இன்ன அம்சத் தைக் குறித்து ஒருவனுக்கு நியாயமான நம்பிக்கை உண்டாயிருந்ததோ இல்லை யோ வென்பது.

இவைகளில் ஒவ்வொன்றும் ஜூரி நிச்சயிக்கும்படியான விஷயம்.

300. ஜூரியைக்கொண்டு பரிசீலனைசெய்கிற கேஸுகளிலே, ஜட்ஜானவர் சங்கதிகளை எடுத்துச்சொல்லி முடித்த பின்பு, ஜூரி தங்களுடைய தீர்மானத்தைக்குறித்து ஆலோசிக்கப்போகலாம்.

ஆலோசிக்கப் போவது.

கோர்ட்டாருடைய உத்தரவில்லாமல், ஜூரர் தவிர வேறொருவரும் அப்படிப்பட்ட ஜூரியில் எவரோடாவது பேசவுங்கூடாது எவ்விதமாய் சமாசாரப் போக்குவரவு செய்யவுங்கூடாது.

301. ஜூரி தங்கள் தீர்மானத்தை ஆலோசித்த பின்பு, அவர்கள் தீர்மானம் இன்னதென்றாவது பெருந்தொகையாருடைய தீர்மானம் இன்னதென்றாவது அவர்களில் தலைவராயிருப்பவர் ஜட்ஜூக்குத் தெரிவிக்க வேண்டும்.

தீர்மானத்தைத் தெரிவிப்பது.

302. ஜூரி ஒருமிக்காவிட்டால், ஜட்ஜானவர் அவர்களை இன்னும் ஆலோசிக்கப் போகச்சொல்லலாம்; ஜட்ஜூக்கு நியாயமாகத் தோற்றுகிற காலத்திற்குப்பின்பு, ஜூரி ஒருமிக்காவிட்டாலும் அவர்கள் தங்கள் தீர்மானத்தைச் சொல்லலாம்.

ஜூரி அபிப்பிராயத்தில் வேறு பட்டால் இன்னது செய்வது.

303. (1) கோர்ட்டாரால் வேறே விதமாய் உத்தரவு செய்யப்பட்டாலொழிய, குற்றஞ்சாட்டப்பட்டவன் எவைகளைக் குறித்துப் பரிசீலனை செய்யப்படுகிறானோ அந்த குற்றங்களைக் குறித்தெல்லாம் ஜூரி தீர்மானஞ் சொல்லவேண்டும்; அவர்களுடைய தீர்மானம் இன்னதென்று நிச்சயிப்பதற்கு அவசியமான சவால்களை ஜட்ஜ் அவர்களைக் கேட்கலாம்.

ஒவ்வொரு பிராதைக்குறித்தும் தீர்மானஞ் சொல்வது: ஜட்ஜானவர் ஜூரியைச் சவால் கேட்கலாம்.

(2) அப்படிப்பட்ட சவால்களையும் அவைகளுக்கு ஜவாப்புகளையும் ரிகார்ட் பண்ணவேண்டும்.

சவால்களையும் ஜவாப்புகளையும் ரிகார்ட் பண்ணுவது.

304. தற்செயலாயாவது பிசகினாலாவது தப்பாய்த்தீர்மானஞ் சொல்லப்பட்டால், அது ரிகார்ட் செய்யப்படுவதற்கு முன்னமேயாகிலும் ரிகார்ட் செய்யப்பட்ட பின்பு அடுத்து உடனேயாகிலும் அந்தத்தீர்மானத்தை ஜூரி திருத்தலாம்; கடைசியாய்த் திருத்தப்பட்டபடி அந்தத் தீர்மானமிருக்கவேண்டும்.

தீர்மானத்தைத் திருத்துவது.

305. (1) ஹைகோர்ட்டுக்கு முன்பாகப் பரிசீலனை செய்யப்பட்ட யாதொரு கேஸிலே, ஜூரி தங்கள் அபிப்பிராயத்தில் ஒருமைப்பட்டாலும், அவர்களில் ஆறு பேர் ஒரு அபிப்பிராயப்பட்டு அவர்களோடு ஜட்

ஹைகோர்ட்டிலே இன்னபடிக்கானால் தீர்மானம் சொல்லுவது.

ஜானவர் ஏகோபித்தாலும் அந்த அபிப்பிராயத்தின்படி ஜட்ஜானவர் தீர்ப்பைச் சொல்லவேண்டும்

(2) அப்படிப்பட்ட யாதொரு கேஸிலே ஜூரி தாங்கள் ஒருமைப் படுவதில்லையென்று தெரிந்துகொண்டபோதிலும், அவர்களில் ஆறு பேர் ஒரு அபிப்பிராயப்பட்டால், அப்படியே தலைவன் ஜட்ஜூக்குத் தெரிவிக்கவேண்டும்.

மற்ற விஷயங்களிலே ஜூரியை விடுதலைசெய்வது.

(3) பெருந்தொகையாரோடு ஜட்ஜானவர் ஏகோபியாவிட்டால், அவர் ஜூரியை உடனே விடுதலை பண்ணவேண்டும்.

(4) அபிப்பிராயத்தில் ஒருமைப்படுகிறவர்கள் ஆறுபேர் இல்லாவிட்டால், ஜட்ஜானவர் தமக்கு நியாயமாகத்தோற்றுகிற காலங் கடந்தபின்பு ஜூரியை விடுதலை செய்யவேண்டும்.

ஸெஷன் கோர்ட்டிலே இன்னபடிக்கானல் தீர்மானஞ் சொல்லுவது.

306. (1) ஸெஷன் கோர்ட்டுக்கு முன்பாகப் பரிசீலனை செய்யப்பட்ட யாதொரு கேஸிலே, ஜூரர்கள் அல்லது ஜூரர்களில் பெருந்தொகையாருடைய தீர்மானத்தினின்று வேறுபடுவதைத் தெரிவிப்பது ஜட்ஜூக்கு அவசியமாகத் தோற்றுவிட்டால், அப்பிரகாரமே அவர் தீர்ப்புச் சொல்லவேண்டும்.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றவாளியல்லவென்று விடுதலை செய்யப்பட்டால், குற்றவாளியல்லவென்று விடுதலைத் தீர்ப்பை ஜட்ஜ் ரிகார்ட் பண்ணவேண்டும். குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டால், ஜட்ஜானவர் 562-வது பிரிவிற் கண்ட நிபந்தனைகளை அநுசரித்து நடவடிக்கை நடத்தினாலன்றி மற்றப்படி, சட்டபிரகாரம் அவனுக்கு சிட்சை விதிக்கவேண்டும்.

ஸெஷன் ஜட்ஜ் தீர்மானத்தினின்று வேறுபட்டால் நடவடிக்கை.

307. (1) அப்படிப்பட்ட யாதொரு கேஸிலே குற்றஞ்சாட்டப்பட்ட யாதொரு நபர் எவைகளின்மேல் பரிசிலனை செய்யப்பட்டானோ அப்படிப்பட்ட பிராதுகள் எல்லாவற்றையுங் குறித்தாவது அவைகளில் எதைக் குறித்தாவது ஜூரர்களாகிலும் ஜூரர்களில் பெருந்தொகையாராகிலும் தெரிவித்த தீர்மானத்தை ஜட்ஜ் முற்றிலும் ஒத்துக்கொள்ளாமல், நீதி நடப்பிக்கும்பொ

ருட்டு அதனுலே குற்றஞ்சாட்டப்பட்ட அந்த நபர் விஷயமாய் அந்த கேஸை ஹைகோர்ட்டாருக்கு அனுப்புவது அவசியமென்று தெளிவாக அபிப்பிராயப்பட்டால், அவர் அப்படியே அந்தக்கேஸை அனுப்பவேண்டும்; அப்படிச்செய்கையில் அவர் தம்முடைய அபிப்பிராயத்திற்குண்டான ஹேதுக்களை ரிகார்ட் பண்ணவும், குற்றவாளி யல்லவென்று விடுதலைத் தீர்மானம் தெரிவிக்கப்பட்டிருந்தால், செய்யப்பட்டிருப்பதாகத் தாம் எண்ணுகிற குற்றத்தைக்கண்டெழுதவும் வேண்டும்; மேலும், அப்படிப்பட்ட விஷயத்தில், குற்றஞ்சாட்டப்பட்டவன் மேல் 310-வது பிரிவின் நிபந்தனைகளின்படி பின்னும் குற்றஞ்சாட்டப்பட்டால், அவர் - ஷை தீர்மானம் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டதாக இருந்தாலெப்படியோ அப்படியே அப்படிப்பட்ட குற்றச்சாட்டு விஷயமாய் அவனை பரிசீலனைசெய்யத் தொடங்கவேண்டும்.

(2) ஜட்ஜானவர் இந்தப்பிரிவின்படி யாதொருகேஸை அனுப்பினால், குற்றஞ்சாட்டப்பட்ட அந்த நபர் எவைகளின்மேல் பரிசீலனை செய்யப்பட்டானே அந்தப் பிராதுகளிலெதைக்குறித்தாகிலும் அவன் குற்றவாளியல்லவென்ருவது குற்றவாளிதானென்ருவது அவர் தீர்ப்பு ரிகார்ட் பண்ணக்கூடாது; ஆனால், அவர் குற்றஞ் சாட்டப்பட்ட அந்த நபரை மறுபடி காவலுக்காவது அனுப்பலாம், அல்லது அவனை ஹாஜர் ஜாமீன் வாங்கிக்கொண்டாவது விடலாம்.

(3) அப்படி அனுப்பப்பட்ட கேஸைக் குறித்துப் பிரவர்த்திப்பதில், ஹைகோர்ட்டார் அப்பீலில் தாங்கள் செலுத்தும்படியான அதிகாரங்களிலெதையாவது செலுத்தலாம்; மேலும் அதற்குட்பட்டு சாட்சியம் முழுவதையும் யோசித்தபிறகும், ஸெஷன் ஜட்ஜினுடைய அபிப்பிராயத்தையும் ஜூரியினுடைய அபிப்பிராயத்தையும் தீர்க்கமாய் யோசித்தபிறகும், பிராது தயார்செய்து ஜூரிமுன் கொண்டுவரப்பட்டதன்மேல் அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்ட அந்த நபரை எதைக்குறித்துக் குற்றவாளியென்று தீர்மானிக்கக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு குற்றத்தைக் குறித்து ஹைகோர்ட்டார் அவனைக் குற்றவாளியென்ருவது குற்றவாளி யல்லவென்ருவது தீர்மானிக்கவேண்டும்; அவர்கள் அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கிறபட்சத்தில், ஸெஷன் கோர்ட்டார் விதித்திருக்கத்தக்க சிட்சையை விதிக்கலாம்.

G.—ஜூரியை விடுதலை செய்தபின்பு குற்றஞ்சாட்டப்பட்டவனை மறுபடி பரிசீலனை பண்ணுவது.

ஜூரியை விடுதலைசெய்தபின்பு குற்றஞ் சாட்டப்பட்டவனை மறுபடி பரிசீலனை பண்ணுவது.

308. ஜூரி விடுதலைசெய்யப்பட்டால், குற்றஞ் சாட்டப்பட்டவனை (சங்கதிக்குத் தக்கபடி) காவலிலே வைத்துக்கொண்டாவது ஜாமீன்மேல் விட்டாவதிருந்து, அவனை மறுபடி பரிசீலனை செய்யவேண்டியதில்லையென்று ஜட்ஜுக்குத் தோற்றினலொழிய, வேறே ஜூரியைக்கொண்டு அவனைப் பரிசீலனை செய்யவேண்டும்; அவனை மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டியதில்லையென்றுதோற்றினல் அந்தப்படியே ஜட்ஜானவர் குற்றபத்திரிகையில் பதிவுசெய்யவேண்டும்; அப்படி பதிவுசெய்வது அவனைக் குற்றவாளியல்லவென்று விடுதலைசெய்வதாகும்.

H.—அஸெஸர்களோடு பரிசீலனை செய்யப்பட்ட கேஸுகளிலே பரிசீலனையின் முடிவு.

அஸெஸர்களுடைய அபிப்பிராயங்களைச்சொல்லுவது.

309. (1) அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு பரிசீலனை செய்யப்பட்ட கேஸிலே, குற்றஞ் சாட்டப்பட்டவன் பட்சத்துவாதமும் அதற்கு ஏதாவது ப்ராஸிக்யூட்டருக்கு எதிர்வாதமிருந்தால் அதுவும் முடிந்தபின்பு, கோர்ட்டார் பிராதுபட்சம் சாட்சியத்தையும் எதிரிபக்கம் சாட்சியத்தையும் தொகுத்துச் சொல்லலாம்; பிறகு குற்றஞ் சாட்டப்பட்டவன் எவைகளைக்குறித்து பரிசீலனை செய்யப்பட்டானே அப்படிப்பட்ட பிராதுகள் எல்லாவற்றையுங் குறித்து அஸெஸர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களைச்சொல்லவேண்டும்; அதன்மேல் ஜட்ஜானவர் - அவர்களுடைய அபிப்பிராயங்கள் இன்னவையென்று நிச்சயமாய் அறியும்பொருட்டு அவர்களை அவசியமாயிருக்கும் கேள்விகளைக் கேட்கலாம். அப்படிப்பட்ட சகல கேள்விகளையும் அவைகளுக்குக் கொடுக்கப்பட்ட மறுமொழிகளையும் ரெகார்ட் பண்ணவேண்டும்.

தீர்ப்பு.

(2) அப்போது ஜட்ஜானவர் தீர்ப்புச் சொல்லவேண்டும்; ஆனல் அப்படிச் சொல்லுகையில் அஸெஸர்களுடைய அபிப்பிராயத்தை ஒத்துச் செய்யவேண்டுமென்பதில்லை.

(3) குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டால், ஜட்ஜானவர் 562-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளை யனுசரித்து நடவடிக்கை நடத்தினாலன்றி மற்றப்படி, சட்டப்பிரகாரம் அவனுக்குச் சிட்சை விதிக்கவேண்டும்.

I.—குற்றவாளியென்று முன்னமேயே தீர்மானிக்கப்பட்டிருக்கிற விஷயத்தில் நடவடிக்கை.

குற்றவாளி யென்று முன்னமே தீர்மானிக்கப்பட்டிருக்கிற விஷயத்தில் நடவடிக்கை.

310. ஜூரியைக்கொண்டாவது அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டாவது செய்யப்பட்ட யாதொரு பரிசீலனை விஷயத்தில், குற்றஞ் சாட்டப்பட்டவன் மேல் யாதொரு குற்றத்துக்காகப் பிராதுகொண்டு வரப்பட்டு, முன்னமே குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருப்பது காரணமாக அந்தப் பிற்பட்ட குற்றத்திற்காக அதிக தண்டனையாவது வேறு வகையான தண்டனையாவது விதிக்கப்படுவதற்குட்பட்டிருப்பதாக அவன்மேல் பின்னும் பிராது கொண்டுவரப்பட்டால், இந்த அத்தியாயத்தைச் சேர்ந்த முந்திய நிபந்தனைகளில் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கை முறையை அடியிற்கண்டபடி வேறுபடுத்திக் கொள்ளவேண்டும்; அதாவது :—

(a) (i) குற்றஞ் சாட்டப்பட்டவன் பிந்திய குற்றத்திற்காக குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டாலன்றி மற்றப்படியும் அப்படி தீர்மானிக்கப்படுகிறவரையிலும் அல்லது,

(ii) பிந்திய குற்றத்தைப்பற்றிய பிராதின்மேல் ஜூரர்கள் தங்களுடைய தீர்மானம் கொடுத்திருந்தாலன்றி அல்லது அந்தப்பிராதின்மேல், அஸெஸர்களின் அபிப்பிராயமானது ரெகார்ட் செய்யப்பட்டிருந்தாலன்றி,

அப்படி பின்னும் செய்யப்பட்ட பிராதைக் கோர்ட்டில் படித்து அதைக் குறித்துப் பேசும்படி குற்றஞ் சாட்டப்பட்டவனைக் கேட்கவுங் கூடாது, பிராது தரப்பில் அதைப்பற்றி உதகரிக்கவுங்கூடாது, அதுவிஷயமாய் எவ்வித சாட்சியமும் கொண்டுவரவுங்கூடாது.

(b) அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு நடத்தப்படும் யாதொரு பரிசீலனையில் கோர்ட்டார் - தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபட்சத்திலே, முந்திய குற்றஸ்தாபனையைக் குறித்த பிராதின் விஷயமாய் குற்றஞ்சாட்டப்பட்

டவனைப் பரிசிலனை செய்யலாம் அல்லது பரிசிலனை செய்யாமலிருக்கலாம்.

குற்றவாளியென்று முன்னமே நிர்மாணிக்கப்பட்டிருக்கிறதைச் சாட்சியமாக எப்பொழுது சொல்லலாம்.

311. அடுத்த முந்திய பிரிவில் என்னசொல்லி யிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, குற்றவாளியென்று முன்னமே நிர்மாணிக்கப்பட்ட விஷயமானது, 1872-ம் வருஷத்திய இந்துதேசத்துச் சாட்சிய ஆக்ட்டின் நிபந்தனைகளின்படி ஒற்றுமையானதா யிருக்கும் பட்சத்தில் குற்றவாளியென்று முன்னமே நிர்மாணிக்கப்பட்டதைப் பின்பு செய்த குற்றத்தைப் பரிசிலனை செய்யும்பொழுது சாட்சியமாகச் சொல்லலாம்.

J.—ஹைகோர்ட்டுக்காக ஜூரோர்களின் ஜாபிதாவும், அந்த கோர்ட்டுக்கு ஜூரோர்களை வரவழைப்பதும்.

ஸ்பெஷல் ஜூரோர்களின் சங்கியை.

312. ஸ்பெஷல் ஜூரோர்களுடைய ஜாப்தாவிலே எந்தக் காலத்திலாகிலும் பெயர் பதியக்கூடிய நபர்களின் சங்கியை இவ்வளவென்று ஹைகோர்ட்டார் நிர்ணயிக்கலாம்.

ஆனால் யுரோப்பியர்களிலாவது அமெரிக்கர்களிலாவது இந்தியர்களிலாவது குறிப்பிட்ட சங்கியை இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கக்கூடாது.

சாதாரணமான ஜூரோர்களுக்கும் ஸ்பெஷல் ஜூரோர்களுக்கும் ஜாபிதாக்கள்.

313. (1) க்ளர்க் ஆவ் தி க்ரவுனானவர் ஹைகோர்ட்டாரால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்படுகிற விதிகளுக்குட்பட்டு, அந்தந்த வருஷத்தில் ஏப்ரல் மாதம் முதல்தேதிக்கு முன்னமே,—

(a) சாதாரணமான ஜூரோர்களாகப் பிரவர்த்திப்பதற்குட்பட்ட சகலமானவர்களுடைய ஜாபிதாவையும்,

(b) ஸ்பெஷல் ஜூரோர்களாக மாத்திரம் பிரவர்த்திப்பதற்குட்பட்டவர்களுடைய ஜாபிதாவையும்,

தயார்செய்யவேண்டும்.

(2) பிந்திய ஜாபிதாவைத் தயார்செய்வதில் அதிலே பெயர் பதிவு செய்யப்படுகிறவர்களுடைய ஆஸ்தியையும் யோக்கியதையையும் கல்வித்திறத்தையும் யோசித்துச் செய்யவேண்டும்.

(3) முந்திய வருஷத்திற்கு ஸ்பெஷல்ஜூரர்களின் ஜாபிதாவிலே தன்பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கும் ஹேதுவினாலே மாத்திரம் எவனும் தன்பெயரை ஸ்பெஷல் ஜூரர்களின் ஜாபிதாவில் பதிவு செய்வித்துக்கொள்ள அர்ஹனாகமாட்டான்.

(4) பங்காளத்திலே போர்ட் உல்லியத்திலுள்ள ஹைகோர்ட் விஷயத்திலே ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாவது அவ்விடத்திய கவர்ன்மெண்டாராவது, மற்ற ஹைகோர்ட்டுகள் விஷயத்திலே அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாரும், சம்பளம் வாங்கிக்கொண்டு ஸர்க்காரில் சேவிக்கிற யாதொரு உத்தியோகஸ்தனை ஜூரராகப் பிரவர்த்திப்பதினின்றும் நிவர்த்திசெய்யலாம்.

ஜாபிதாக்கள் தயார்செய்கிற உத்தியோகஸ்தர் யுக்தப்படி செய்வது.

(5) க்ளர்க் ஆவ் தி க்ரவுனவர் மேற்சொல்லிய விதிகளுக்குட்பட்டு, தமக்குக் கிரமமாகத் தோற்றுகிற பிரகாரம் மேற்படி ஜாபிதாக்களைப் பூர்த்தியாய்த் தமது இஷ்டப்படி தயார்செய்யலாம்; அவருடைய தீர்மானத்தின்மேல் அப்பீலுங்கூடாது புனர்விமரிசையுங் கூடாது.

பிரதம ஜாபிதாக்களையும் திருத்தப்பாடான ஜாபிதாக்களையும் பிரசித்தப்படுத்துவது.

314. (1) சாதாரணமான ஜூரர்களாகவும் ஸ்பெஷல் ஜூரர்களாகவும் பிரவர்த்திப்பதற்குட்பட்டவர்களுடைய பிரதம ஜாபிதாக்களில் அதிலதிலே க்ளர்க் ஆவ் தி க்ரவுன் கையெழுத்துச்செய்து, அவைகள் தயார் செய்யப்பட்ட பின்பு அடுத்துவருகிற ஏப்ரல்மாதம் பதினைந்தாம் தேதிக்கு முன்னமே அவ்விடத்திய ஸர்க்கார் கெஜட்டில் அவைகளை ஒருதரம் பிரசித்தம் பண்ணவேண்டும்.

(2) சாதாரணமான ஜூரர்களாகவும் ஸ்பெஷல் ஜூரர்களாகவும் பிரவர்த்திப்பதற்குட்பட்டவர்களுடைய திருத்துப்பாடான ஜாபிதாக்களை அதிலதிலே மேற்சொல்லியபடி கையெழுத்துச் செய்து, அவைகள் தயார் செய்யப்பட்ட பின்பு, அடுத்துவருகிற மே மாதம் முதல் தேதிக்கு முன்னமே அவ்விடத்திய ஸர்க்கார் கெஜட்டில் ஒருதரம் பிரசித்தம் பண்ணவேண்டும்.

(3) மேற்படி ஜாபிதாக்களின் நகல்களைக் கோர்ட் வீட்டில் யாவருக்குந் தெரியும்படியான இடத்திலே ஒட்டவேண்டும்.

ராஜதானியிலே ஸம்மனனுப்பி வரவழைக்கப்பட வேண்டிய ஜூரர்களின் சங்கியை.

315. (1) மேற்சொல்லிய திருத்துப்பாடான ஜாபிதாக்களில் கண்டிருக்கிறவர்களுக்குள், முறையே ஸ்பெஷல் ஜூரிகளாகவோ சாதாரணமான ஜூரிகளாகவோ பிரவர்த்திப்பதற் குட்பட்டவர்களில் எத்தனைபேர் இருப்பது அவசியமென்று க்ளார்க் ஆவ் தி க்ரவுன் அபிப்பிராயப்படுகிறாரோ அத்தனைபேரை, ஒவ்வொரு ஹைகோர்ட்டும் சாதாரணமாய் எந்த இடத்தில் விசாரணை நடத்துகிறதோ அந்தப் பட்டணத்தில் பிரதி ஸெஷனுக்கும் ஸம்மனனுப்பி வரவழைக்கவேண்டும்.

(2) எவரையாவது சேர்க்காமல் சங்கியை பூர்த்தியாகாவிட்டாலொழிய, ஒருவரையும் ஆறுமாதத்தில் ஒருதரத்திற்கதிகமாக அப்படி ஸம்மனனுப்பி வரவழைக்கக்கூடாது.

உப ஸம்மன்கள்.

(3) யாதொரு ஸெஷன் நடந்துகொண்டிருக்கையில், அப்படி வரவழைக்கப்பட்டவர்களின் சங்கியை போதுமானதல்லவென்று தோற்றினால், மேற்சொல்லியபடி பிரவர்த்திப்பதற்குட்பட்ட மற்றவர்களில் எத்தனை பெயர் வேண்டியிருக்குமோ அத்தனைபெயரை அந்த ஸெஷனுக்கு ஸம்மனனுப்பி வரவழைக்கவேண்டும்.

ராஜதானிகளுக்கு வெளியில் ஜூரர்களை ஸம்மனனுப்பி வரவழைப்பது.

316. யாதொரு ஹைகோர்ட்டார் க்ரிமினல் விவகாரத்திலே தங்களுடைய அசல் விசாரணை அதிகாரத்தைச் செலுத்துவதற்காக, எந்த இடத்தில் அப்படிப்பட்ட ஹைக்கோர்ட்டார் சாதாரணமாய் விசாரணை நடத்துகிறார்களோ அந்த பட்டணத்துக்கு வெளியிலுள்ள யாதோரிடத்திலே (sitting) விசாரணை நடத்த உத்தேசித்திருப்பதைக்குறித்து அறிக்கை செய்திருக்கும்போதெல்லாம், அவ்விடத்திலுள்ள ஸெஷன் கோர்ட்டார் ஹைக்கோர்ட்டாரால் கொடுக்கப்படும் யாதொரு உத்தரவுக்குட்பட்டு ஸெஷன்கோர்ட்டுக்கு ஜூரர்களை ஸம்மனனுப்பி வரவழைப்பதைக் குறித்து இதில் பின்னால் சொல்லியிருக்கிற விதமாய்த் தங்களுடைய சொந்த ஜாபிதாவிலிருந்து ஜூரர்கள் போதுமான பெயரை ஸம்மனனுப்பி வரவழைக்கவேண்டும்.

மிலிட்டெரி ஜூரர்கள்.

317. (1) ஜூரர்களாக அப்படி ஸம்மனனுப்பி வரவழைக்கப்பட்டவர்களுமல்லாமல், மேற்படி ஸெஷன்கோர்ட்டார் தங்களுக்கு அவசியமாகத் தோற்றினால், கம்

மாண்டிங் ஆபீஸருக்கு எழுதித் தெரிந்துகொண்டபின்பு, விசாரணை நடத்தப்போகிற இடத்திற்குப் பத்து மைலுக்குள்ளாக வாசஞ் செய்துகொண்டு மஹாராஜா அவர்களுடைய சேனையிலாவது ஆகாயப்படையிலாவது கம்மிஷன்ட் நன்கம்மிஷண்ட் ஆபீஸர்களாயிருக்கிறவர்களில், மேற்சொல்லியபடி ஹைகோர்ட்டாருக்கு முன்பாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர்களைப் பரிசீலனை செய்வதற்காக வேண்டியிருக்கிற ஜூரி சங்கியைப் பூர்த்திசெய்ய எத்தனை பெயர் வேண்டியிருக்கிறதாகக் கோர்ட்டாருக்குத் தோன்றுகிறதோ அத்தனைபெயரை ஸம்மனனுப்பி வரவழைக்கவேண்டும்.

(2) அப்படி வரவழைக்கப்பட்ட சகல ஆபீஸர்களும் இந்தச் சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் நிமித்தமில்லாமல் அப்படிப்பட்ட ஜூரிகளாகப் பிரவர்த்திப்பதற் குள்ளாவார்கள்; ஆனால், அவசரமான உத்தியோக அலுவலைபற்றியாவது உத்தியோகத்தைச் சேர்ந்த வேறே யாதொரு முக்கியமான ஹேதுவைப்பற்றியாவது எவரை வரவழைக்காமல் விடவேண்டியதென்று அவருடைய கம்மாண்டிங் ஆபீஸர் கோருகிறாரோ அப்படிப்பட்ட ஆபீஸரை ஸம்மனனுப்பி வரவழைக்கக்கூடாது.

318. 315, 316 அல்லது 317 - வது பிரிவின்படி ஸம்மனனுப்பி வரவழைக்கப்பட்டவரெவராவது ஸம்மனில் சொல்லியிருக்கிறபடி ஹாஜராவதற்கு நியாயமான முகாந்தரமில்லாமல் தவறிப்போனாலும், ஹாஜராகியும் ஜட்ஜிடத்தில் செலவு பெற்றுக்கொள்ளாமல் போய்விட்டாலும், ஹாஜராகும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கையில் கோர்ட் நிறுத்தி வைக்கப்பட்டபின்பு ஹாஜராகாவிட்டாலும், அப்படிப்பட்டவர் அலட்சியஞ்செய்தவராக எண்ணப்பட்டு, ஜட்ஜினுடைய உத்தரவினால் அவருக்கு யுக்தமாகத் தோற்றுகிற அபராதத்திற்குள்ளாவார்; அந்த அபராதத்தைச் செலுத்தாவிட்டால், அது செலுத்தப்படுகிறவரையிலே ஆறுமாதத்திற்கு அதிகப்படாத ஒருகாலத்திற்கு ஸிவில் ஜெயிலில் வைக்கப்படுவார்.

ஜூரர்கள் ஹாஜராகாமை.

ஆனால், கோர்ட்டார் அவ்வாறு விதிக்கும் யாதொரு அபராதத்தையாவது காவல்தண்டனையையாவது தங்களுடைய யுக்தப்படி குறைக்கலாம்.

K.—ஸெஷன் கோர்ட்டுக்கு ஜூரார்கள் அஸெஸர்கள் இவர்களுடைய ஜாபிதாவும். அந்தகோர்ட்டுக்கு ஜூரார்களையும் அஸெஸர்களையும் வரவழைப்பதும்.

ஜூரார்களாகவாவது அஸெஸர்களாகவாவது பிரவர்த்திப்பதற்குள்ளாயிருப்பது.

319. இதில் அடுத்துப் பின்னால் சொல்லப்படுகிறவர்கள் தவிர, இருபத்தொரு வயதுமுதல் அறுபதுவயதுவரையிலுள்ள மற்ற புருஷர்களெல்லோரும், அவர்கள் வாசஞ்செய்யும் டிஸ்ட்ரிக்டிலாவது,

அவ்வவ்விடத்திய சந்தர்ப்பங்களை யோசித்து அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் இதன்விஷயமாய் இன்னுஞ் சிறிய விஸ்தீர்ணத்தை நிர்ணயித்திருந்தால் அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விஸ்தீரணத்திற்குள்ளாவது,

நடத்தப்படுகிற யாதொரு பரிசிலனையிலே ஜூரார்களாகவாகிலும் அஸெஸர்களாகவாகிலும் பிரவர்த்திப்பதற்குள்ளாவார்கள்.

விலக்கப்பட்டவர்கள்.

320. ஜூரார்களாகவாவது அஸெஸர்களாகவாவது பிரவர்த்திக்க வேண்டியதில்லையென்று விலக்கப்பட்டவர்கள் யாரரென்றால்.—

(a) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அந்தஸ்துக்கு மேற்பட்ட விவில் உத்தியோகத்திலிருக்கிற சகல உத்தியோகஸ்தர்களும்;

(aa) இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டின்படி ஸ்தாபிக்கப்பட்ட சட்ட நிரூபண சபைகளின் மெம்பர்களும், இந்தியா சட்டசபை, இராஜாங்க சபைகளின் மெம்பர்களும்;

(b) சம்பளம் பெறுகிற ஜட்ஜுகளும்;

(c) கமிஷனர்களும் ரெவினியு அல்லது கஸ்டம் கலெக்ட்டர்களும்;

(d) போலீஸ் உத்தியோகஸ்தர்களும், இலாக்காவில் தீர்வை செலுத்தாமல் சரக்குகளைக் கொண்டுபோகாதபடி தடுக்கும்படியான அலுவலிலிருக்கிறவர்களும்;

(e) ரெவினியு வசூல்செய்கிற அலுவலிலிருக்கிறவர்களில் அலுவலைப்பற்றி யாரை விலக்கிவிடுவது யுக்தமென்று கலெக்டர் நினைக்கிறாரோ அவர்களும்;

(f) தங்கள் தங்கள் மதங்களிலே வாஸ்தவமாய் குருக்கள் அல்லது மினிஸ்ட்டர்வேலை செய்கிறவர்களும் ;

(g) மஹாராஜா அவர்களுடைய சேனையிலிருக்கிறவர்களும் ஆகாயப்படையிலுள்ளவர்களும் அந்தந்த காலத்தில் வழங்கி வருகிற யாதொரு சட்டத்தினாலே ஜூரர்கள் அல்லது அஸெஸர்களாகப் பிரவர்த்திக்கும்படி பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்படுகிறபோது தவிர, மற்றப்படி அவர்களும் ;

(h) ஸர்ஜன்களும், பஹிரங்கமாய் இடைவிடாமல் வைத்தியஞ் செய்துகொண்டிருக்கிற மற்றவர்களும் ;

(i) (1879-ம் வருஷத்து 1 நியாயவாதிகளாக்ட்டில் விவரித்திருக்கிறபடி) வாஸ்தவமாய் அப்பியாசிக்கிற நியாயவாதிகளும் ;

(j) தபாலாபீஸ் மின் தபாலென்னும் டிலிக்ராப் இந்த டிபார்ட்மென்டுகளில் உத்தியோகஞ் செய்கிறவர்களும் ;

(k) ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 640 - வது 641 - வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளின்படி கோர்ட்டில் நேராய் ஹாஜராகவேண்டியதில்லையென்று நிவர்த்திசெய்யப்பட்டவர்களும் ;

(l) ஜூரர்களாகவாவது அஸெஸர்களாகவாவது பிரவர்த்திக்கவேண்டியதில்லையென்று அவ்வவ்விடத்திய கவர்ன்மென்டாரால் நிவர்த்திசெய்யப்பட்ட மற்றவர்களும்.

ஜூரர்களையும் அஸெஸர்களையும் குறித்த ஜாபிதா.

321. (1) ஸெஷன் ஜட்ஜுகளும், டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் அல்லது பிரதேச கவர்ன்மென்டாரால் இந்த விஷயத்தில் நியமிக்கப்படுகிற வேறே உத்தியோகஸ்தரும், யாரார் ஜூரர்களாகவாவது அஸெஸர்களாகவாவது பிரவர்த்திப்பதற்குள்ளாகி அப்படிப்பட்டவர்களாகப் பிரவர்த்திப்பதற்குத் தகுந்தவர்களென்று ஸெஷன் ஜட்ஜுக்கும் கலெக்டர் அல்லது மேற்சொல்லிய வேறே உத்தியோகஸ்தருக்கும் தோற்றி, 278 - வது பிரிவு (b) முதல் (h) உள்பட அதுவரையிலுள்ள உட்பிரிவுகளின்படி திருப்திகரமாய் ஆட்சேபிக்கப்படமாட்டார்கள் போலிருப்பதாகத் தெரிகிறதோ அவர்களைக் குறித்து அகராதிவரிசையாக ஒரு ஜாபிதா எழுதித் தயார் செய்யவேண்டும்.

(௨) அந்த ஜாபிதாவிலே அப்படிப்பட்ட பிரதி மனுஷனுடைய பெயரையும் இருப்பிடத்தையும் அந்தஸ்து அல்லது அலுவலையும் கண்டெழுதவேண்டும்; மேலும் அப்படிப்பட்டவன் யுரோப்பியனாக வாவது அமெரிக்கனாகவாவதிருந்தால், அவன் இன்னவம்சத்தானென்று அந்த ஜாபிதாவில் கண்டெழுதவேண்டும்.

ஜாபிதாவைப் பிரசித்தஞ்செய்வது.

322. கலெக்டர் அல்லது மேற்சொல்லிய வேறே உத்தியோகஸ்தருடைய ஆபிஸிலும், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலும், அப்படிப்பட்ட ஜாபிதாவுக்கு நகல்களையும், அந்த நகல்களின் எக்ஸ்ட்ராக்ட்டில் கண்டிருக்கிறவர்கள் எவ்விடத்தில் அல்லது எதற்குச் சமீபத்தில் வாசஞ்செய்கிறார்களோ அந்தப்பட்டணம் அல்லது பட்டணங்களில் எல்லோருக்கும் தெரியும்படியான இடத்தில் அந்த நகல்களிலிருந்தெடுக்கப்படும் எக்ஸ்ட்ராக்டுகளையும் ஒட்டவேண்டும்.

ஜாபிதாவுக்கு ஆட்சேபனை

323. அந்த ஜாபிதாவைக்குறித்து ஆட்சேபங்களை நோட்டிஸில் கண்டிருக்கிற காலத்தில் ஸெஷன் ஜட்ஜும் கலெக்டர் அல்லது மேற்சொல்லிய வேறே உத்தியோகஸ்தரும் கேட்டுத் தீர்மானஞ் செய்வார்களென்று நோட்டிஸ் எழுதி அப்படிப்பட்ட ஒவ்வொரு நகல் அல்லது எக்ஸ்ட்ராக்டோடும் சேர்க்கவேண்டும்.

ஜாபிதாவைத் திருத்துவது.

324. (1) அப்படிப்பட்ட ஆட்சேபங்களைக் கேட்பதற்காக ஸெஷன் ஜட்ஜானவர் கலெக்டர் அல்லது மேற்சொல்லிய வேறே உத்தியோகஸ்தரோடுகூட உட்கார்ந்து, நோட்டிஸில் குறிக்கப்பட்ட காலத்தில் அதில் கண்டிருக்கிற இடத்திலே அந்த ஜாபிதாவை மறுபடி பரிசோதித்து, அதைத் திருத்துவிக்கவேண்டுமென்கிற அக்கறையுள்ளவர் (ஏதாவது) ஆட்சேபஞ்சொன்னால் அதைக்கேட்டு, யார் ஜூரர் அல்லது அஸெஸராகப் பிரவர்த்திப்பதற்குத் தகுந்தவனல்லவென்று தங்களுக்குத் தோற்றுகிறதோ அவனுடைய பெயரையும் 320 - வது பிரிவினால் அப்படி பிரவர்த்திக்கவேண்டியதில்லையென்று விலக்கப்பட்டபடி நிவர்த்தியாவதற்குச் சுதந்தரத்தை ஸ்தாபிக்கிறவனுடைய பெயரையும் அடித்துவிட்டு, அந்த ஜாபிதாவில் கண்டெழுதப்படாத எந்த நபர் அப்படி பிரவர்த்திக்கத் தகுந்தவனென்று தங்களுக்குத் தோற்றுகிறதோ அவனுடைய பெயரை அதிலெழுதவேண்டும்.

(2) ஸெஷன் ஜட்ஜாவும் கலெக்ட்டர் அல்லது மேற்சொல்லிய வேறே உத்தியோகஸ்தரும் அபிப்பிராயத்தில் வேறுபட்டால், கருதிய ஜூரர் அல்லது அஸெஸருடைய பெயரை ஜாபிதாவில் எழுதாமல் தள்ளிவிடவேண்டும்.

(3) திருத்தி எழுதப்பட்ட ஜாபிதாப் பிரதியொன்றில் ஸெஷன் ஜட்ஜாவும் கலெக்டர் அல்லது மேற்சொல்லிய வேறே உத்தியோகஸ்தரும் கையெழுத்துப்போட்டு, அதை ஸெஷன் கோர்ட்டுக்கு அனுப்பவேண்டும்.

(4) அந்த ஜாபிதாவைத் தயார்செய்வதிலும் மறுபடி பரிசோதிப்பதிலும் ஸெஷன் ஜட்ஜாவும் கலெக்ட்டர் அல்லது வேறே உத்தியோகஸ்தரும் செய்கிற உத்தரவே முடிவானதாகும்.

(5) நிவர்த்திசெய்யும்படி இந்தப்பிரிவின்பிரகாரம் கேட்டுக்கொள்ளாவிட்டால், பின்பு அந்த ஜாபிதா மறுபடி பரிசோதிக்கப்படுகிறவரையில் அந்தச் சுதந்தரத்தை விட்டுவிட்டதாக எண்ணவேண்டும்.

ஜாபிதாவை வருஷந்தோறும் திருத்துவது.

(6) அப்படி தயார்செய்து மறுபடி பரிசோதிக்கப்பட்ட ஜாபிதாவை வருஷத்திற்கொருதடவை மறுபடியும் பரிசோதிக்கவேண்டும்.

(7) அப்படி பரிசோதிக்கப்பட்ட ஜாபிதாவானது புதிதாய் ஏற்படுத்தப்பட்ட ஜாபிதாவென்று எண்ணப்படுவதுமல்லாமல், முதலில் தயார்செய்யப்பட்ட ஜாபிதாவைக்குறித்து இதில் முன்னமே சொல்லியிருக்கிற எல்லா விதிகளுக்கும் உட்படவும் வேண்டும்.

விசேஷ ஜூரர்களின் ஜாபிதா தயார்செய்வது.

325. ஜட்ஜ் உத்தரவு செய்வாராகில் விசேஷ ஜூரியைக் கொண்டு சில குற்றங்களைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று எந்த டிஸ்ட்ரிக்ட்டுக்காகப் பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயித்திருக்கிறார்களோ அந்த டிஸ்ட்ரிக்ட்டின் விஷயத்திலே ஸெஷன் ஜட்ஜாவும் அந்த டிஸ்ட்ரிக்ட் கலெக்ட்டர் அல்லது மேலே சொன்ன வேறே உத்தியோகஸ்தரும் - இதில் முன்னமே குறிக்கப்பட்ட திருத்தமான ஜாபிதாவோடுங்கூட, திருத்தமான ஜாபிதாவிற் கண்டிருப்பவர்களுக்குள்ளே சொத்தின் விஷயமாகவாவது கல்வியின் விஷயமாகவாவது மேலான யோக்கியதை பெற்றிருக்கிற காரணத்தினால் விசேஷ ஜூரர்களாயிருந்து பிரவர்த்திக்கத் தகுதியானவர்களென்று ஷை ஸெஷன்

ஜட்ஜாவது கலெக்டர் அல்லது வேறே உத்தியோகஸ்தரும் யாரைப்பற்றி அபிப்பிராயப்படுகிறார்களோ அந்த ஜூரர்களின் பெயர்களடங்கிய ஒரு விசேஷ ஜாபிதாவையும் தயார்செய்யவேண்டும்; ஆனால், அப்படிப்பட்ட விசேஷ ஜூரியினால் பரிசிலனை செய்யப்படாத கேஸுகளிற் சாதாரண ஜூரராகப் பிரவர்த்திக்க அந்த நபருக்குள்ள உத்தரவாதம் நிவர்த்தியாகுமென்றாவது ஒருபோதும் கொள்ளவேண்டியதில்லை.

ஜூரர்களையும் அஸெஸர்களையும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் ஸம்மனனுப்பி வரவழைப்பது.

326. (1) ஸெஷனில் பரிசிலனையை ஜூரியைக்கொண்டு நடத்துவதற்கும், அஸெஸர்களுடைய சகாயத்தினாலே நடத்துவதற்கும், ஸெஷன் ஜட்ஜானவர் மறுபடி பரிசோதிக்கப்பட்ட மேற்படி ஜாபிதாவிலாவது மேற்படி விசேஷ ஜாபிதாவிலாவது கண்டிருக்கிறவர்களிலே எத்தனைபெயர் வேண்டியிருக்கிறதென்று தமக்குத் தோற்றுகிறதோ அத்தனை பெயர்களுக்கு ஸம்மனனுப்பும்படி, ஸெஷன் கோர்ட் கூடுவதற்காக அப்போதைக்கப்போது தம்மால் நிச்சயிக்கப்படுகிற காலத்திற்கு அதவா ஏழுநாள் முன்னதாய் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்குச் சாதாரணமாகக் கடிதமனுப்பவேண்டும்; அப்படிச் செய்கையில், அப்படிப்பட்ட யாதொரு பரிசிலனைக்கு எத்தனைபேர் வேண்டியதோ அதற்கு இரட்டிப்புப் பெயருக்குக் குறையாமலும், குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒரு யூரோப்பியன் அல்லது அமெரிக்கனாக இருந்தால், பரிசிலனை செய்வதற்கு வேண்டிய ஜூரர் அல்லது அஸெஸர்களைத் தெரிந்தெடுப்பதற்கு போதுமான யூரோப்பியன் அல்லது அமெரிக்கர்களுக்கும்கூட சேர்த்து ஸம்மனனுப்பி வரவழைக்கவேண்டும்.

(2) ஆறுமாதத்திற்குள்ளாக வந்திருந்தவர்களைத் தள்ளிவிட்டு மற்றவர்களுடைய பெயர்களைக் கோர்ட்டில் பஹிரங்கமாய்ச் சீட்டுப் போட்டு எத்தனைபெயருக்கு ஸம்மனனுப்பவேண்டியதோ அத்தனை பெயர்களை எடுக்கவேண்டும்; தள்ளிவிடப்பட்டவர்களைச் சேர்க்காமல் தொகையாகாவிட்டால் அவர்களையுஞ் சேர்த்துக்கொள்ளவேண்டும்; இவ்விதமாய்ச் சீட்டுப்போட்டு எடுக்கப்பட்டவர்களுடைய பெயர்களை மேற்படி கடிதத்தில் கண்டெழுதவேண்டும்.

(3) குற்றஞ் சாட்டப்பட்டவன் கேட்டுக்கொண்டதனால், 275-வது பிரிவின் நிபந்தனைகளின்படி பரிசிலனை செய்யப்படுவதற்கு அர்ஹனாயிருந்தால், ஜூரர்களாய் தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் ஜாபிதாவிலிருந்து, ஜூரியாக அமைக்கப்படுவதற்கு வேண்டிய நபரை,

சந்தர்ப்பத்துக்கேற்றபடி யுரோப்பியர்களாகவாவது அல்லது யுரோப்பியர்களும் அமெரிக்கர்களுமாகவாவது அல்லது இந்தியர்களாகவாவது அடங்கிய சரியான தொகையுடையதாய் அந்த ஜூரி மொத்தமாகிறவரையிலே, நிர்ணயிக்கப்பட்ட விதமாயாவது அல்லது 276 - வது பிரிவில் சொல்லியிருக்கிறபடியாவது சீட்டுப்போட்டு நியமிக்கவேண்டும்.

ஆனால், யுரோப்பியர்களிலும் அமெரிக்கர்களிலும் சரியான தொகை வேறு வகையால் அகப்படாத யாதொரு விஷயத்தில், அந்தக் கோர்ட்டார் - ஜூரிக்கு எத்தனை பெயர் வேண்டுமோ அத்தனை பெயரை சேகரிப்பதற்காக, 320 - வது பிரிவின்படி நிவர்த்திக்கப் பட்டிருக்கிறாரென்கிற ஹேதுவின்மேல் ஜாப்தாவினின்றும் நீக்கப்பட்டிருக்கிறவரெவரையாகிலும், தங்களுக்கு யுக்தமாய்த் தோற்றினால், ஸம்மன்செய்து வரவழைக்கலாம்.

(4) (3) குறிப்பிட்ட உட்பிரிவின் விலக்கு நிபந்தனையின்படி, கோர்ட்டார்-மஹாராஜா அவர்களுடைய சேனையிலிருக்கிற யாதொரு நபரை, ஜூரராகப் பிரவர்த்திப்பதற்கு ஸம்மன் செய்யவேண்டியிருந்தால், 316-வது பிரிவின் நிபந்தனைகள், ஒரு பரிசீலனைக்கு ராணுவ உத்தியோகஸ்தர்களை ஜூரராக ஸம்மன் செய்து வரவழைப்பதற்கு 317-வது பிரிவின்படிக்கான நிபந்தனைகளுக்கும் பிரயோகப்படும்.

வேறேஜதை ஜூரர்களையாவது அஸெஸர்களையாவது வரவழைக்க அதிகாரம்.

327. ஸெஷன் கோர்ட்டார் தங்களுக்கு முன்பாக நடக்கும் பரிசீலனைகள் அதிகமாயிருந்து அதனாலே ஒரே ஜதை ஜூரர்களாவது அஸெஸர்களாவது ஸெஷன் முழுமையும் வருவது தொந்தரையா யிருந்தாலும், வேறே காரணங்களைப்பற்றி ஜூரர்களையாவது அஸெஸர்களையாவது (மறுபடியும்) வரவழைக்க வேண்டியது அவசியமாகக் காணப்பட்டாலும், 326-வது பிரிவில் கண்டிருக்கிறகாலத்திலல்லாமல் மற்றக்காலங்களிலே ஜூரர்கள் அல்லது அஸெஸர்களை ஸம்மனனுப்பி வரவழைக்கும்படி உத்தரவு செய்யலாம்.

ஸம்மனெழுதுகிற விதமும் அதில் காணவேண்டிய விஷயங்களும்.

328. ஜூரருக்காவது அஸெஸருக்காவது அனுப்பப்படுகிற பிரதி ஸம்மனும் எழுத்துமூலமாயிருக்கவேண்டும். மேலும், அதில் குறிக்கப்பட்ட காலத்தில் கண்டிருக்கிற இடத்திலே அவர் ஜூரராகவோ அல்லது அஸெஸராகவோ வந்திருக்க வேண்டியதென்று அதில் கண்டெழுதவேண்டும்.

இன்னபடிக்கானால் ஸர்க்கார் உத்தியோகஸ்தனுக்காவது ரெயில்வே உத்தியோகஸ்தனுக்காவது வரவேண்டியதில்லையென்று உத்தரவு செய்யலாம்.

329. ஜூரராகவாவது அஸெஸராகவாவது பிரவர்த்திப்பதற்கு ஸம்மனனுப்பப்பட்டவனெவனாகிலும் ஸர்க்கார் உத்தியோகஸ்தனாகவாவது ரெயில்வேகம்பெனியாருடைய உத்தியோகஸ்தனாகவாவதிருந்தால், எந்தக் கோர்ட்டில் அவன் அப்படிப்பட்டவனாகப் பிரவர்த்திக்க ஸம்மனனுப்பி வரவழைக்கப்படுகிறானோ அந்தக் கோர்ட்டார்-அவன் ஜூரராகவோ அஸெஸராகவோ வந்தால் ஜனசமூக வேலைக்குக் குந்தகமுண்டாகுமென்று அவன் வேலைசெய்கிற ஆபீஸ்தலைவர் தெரிவிப்பதன்மேல் அதுசரியென்று தோற்றுகிறபட்சத்தில், அவன் வரவேண்டியதில்லையென்று உத்தரவுசெய்யலாம்.

ஜூரர் அல்லது அஸெஸரை ஹாஜரிலிருக்க வேண்டியதில்லையென்று கோர்ட்டார் உத்தரவுசெய்யலாம்.

330. (1) தகுந்த காரணத்தைப்பற்றி ஸெஷன் கோர்ட்டார் யாதொரு குறித்த ஸெஷனில் எந்த ஜூரராவது அஸெஸராவது ஹாஜரிலிருக்கவேண்டியதில்லையென்று அவருக்கு உத்தரவு செய்யலாம்.

பன்னிரண்டு மாதம் வரையில் மறுபடியும் ஜூரர்களாகப் பிரவர்த்திக்க வேண்டிய உத்தரவாதத்தினின்றும் விசேஷ ஜூரர்களைக் கோர்ட்டார் நிவர்த்திக்கலாம்.

(2) விசேஷ ஜூரியைக்கொண்டு நடத்தப்பட்ட யாதொரு பரிசீலனை முடிவானதன்மேல் தங்களுக்கு யுக்தமாகத்தோற்றினால் ஸெஷன் கோர்ட்டார் - அந்த விசேஷ ஜூரியில் ஜூரர்களாயிருந்தவர்களைப் பன்னிரண்டு மாதம்வரையில் மறுபடியும் ஜூரர்களாயிருக்கும்படி அழைக்கக்கூடாதென்று சட்டமிடலாம்.

வந்திருக்கிற ஜூரர்கள் அல்லது அஸெஸர்களுடைய ஜாபிதா.

331. (1) பிரதி ஸெஷனிலும் ஜூரர்களாகவும் அஸெஸர்களாகவும் வந்திருக்கிறவர்களுடையபெயர்களை அந்தந்த ஸெஷனில் மேற்படி கோர்ட்டார் ஒரு ஜாபிதாவில் எழுதுவிக்கவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஜாபிதாவை ஜூரர்களைக்குறித்தும் அஸெஸர்களைக் குறித்தும் 324 - வது பிரிவின்படி மறுபடியும் பரிசோதித்துச் செய்யப்பட்ட ஜாபிதாவோடுகூட வைத்திருக்கவேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி தயார்செய்யப்பட்ட ஜாபிதாவில் கண்டிருக்கிற பெயர்களில் அதையதை மறுபடி பரிசோதிக்கப்பட்ட மேற்படி ஜாபிதாவின் பக்கத்தில் குறிப்பிடவேண்டும்.

ஜூரராவது அஸெஸராவது வராவிட்டால்தண்டனை.

332. (1) ஜூரராகவாவது அஸெஸராகவாவது வரும்படி ஸம்மனனுப்பப்பட்டவனெவனாகிலும் நியாயமான காரணமில்லாமல் ஸம்மன்படி வராதிருந்தாலும்; வந்திருந்தும் கோர்ட்டாருடைய உத்தரவில்லாமல் போய்விட்டாலும், வரும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கையில் கோர்ட் நிறுத்திவைக்கப்பட்ட பின்பு வராவிட்டாலும், அப்படிப்பட்டவன் ஸெஷன்கோர்ட்டாருடைய உத்தரவினால் நூறுரூபாய்க் கதிகப்படாத அபராதத்திற்குள்ளாவான்.

(2) அப்படிப்பட்ட அபராதத்தை, மேற்படி உத்தரவுசெய்கிற கோர்ட்டாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் அப்படிப்பட்ட ஜூரர் அல்லது அஸெஸருடையதாயிருக்கிற யாதொரு அசையும் பொருளை ஜப்திசெய்து விற்று டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் வசூல் பண்ணவேண்டும்.

(3) அந்தப்படி விதிக்கப்பட்ட யாதொரு அபராதத்தைக் கோர்ட்டார் - நல்ல காரணம் தெரிவிக்கப்படுவதன்மேல், வஜா செய்யலாம், அல்லது குறைக்கலாம்.

(4) ஜப்திசெய்து விற்பதனாலே அந்த அபராதம் வசூலாகாவிட்டால், அப்படிப்பட்ட ஜூரர் அல்லது அஸெஸரை, அந்த அபராதம் அதற்குள்ளாகச் செலுத்தப்படாதபட்சத்தில், ஸெஷன்கோர்ட்டாருடைய உத்தரவினால் பதினைந்து நாள்வரையிலே ஸிவில் ஜெயிலில் வைக்கலாம்.

L.—ஹைகோர்ட்டுகளுக்குப் பிரத்தியேகமான நிபந்தனைகள்.

பிராதைநடத்தாமல் நிறுத்திவிட அட்வொகேட் ஜெனரலுக்கு அதிகாரம்.

333. ஜூரி தீர்மானஞ் சொல்லுவதற்கு முன்னமே யாதொரு ஹைகோர்ட்டில் இந்தச் சட்டத்தின்படி யாதொரு பரிசிலனை நடந்துகொண்டிருக்கையிலெப்போதாவது, அட்வொகேட் ஜெனரலானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றினால், குற்றபத்திரிகையைத் தொடர்ந்து பிரதிவாதியின்மேல் தாம் இனி பிராது

நடத்துவதில்லையென்று மஹாராஜா அவர்கள் பட்சத்திலே கோர்ட்டாருக்குத் தெரிவிக்கலாம்; அதற்குமேல் பிரதிவாதியின்மீது அப்படிப்பட்ட குற்றபத்திரிகையைத் தொடர்ந்து நடத்தப்படும் சகல நடவடிக்கைகளும் நிறுத்திவிடப்படும்; பிரதிவாதியும் அதினின்றும் விட்டுவிடப்படுவான். ஆனால், அப்படி விட்டுவிடுவது, கோர்ட்செய்கிற தட்டு வேறே விதமாய் உத்தரவு செய்யாத பட்சத்தில், குற்றவாளியல்லவென்று விடுதலைசெய்வதாக மாட்டாது.

விசாரணை நடத்துங்காலம்.

334. பிரதி ஹைகோர்ட்டாரும் க்ரிமினல் விவகாரத்திலே அசல் விசாரணை அதிகாரஞ் செலுத்துவதற்காக அந்தக் கோர்ட்டின் சீவ் ஜஸ்டிஸ் ஆனவர் அப்போதைக்கப்போது நியமிக்கிற நாள்களிலும் ஒன்றுக்கொன்று இடையில் அனுகூலமாயிருக்கும்படி நியமிக்கிற காலங்களிலும் விசாரணை நடத்தவேண்டும்.

விசாரணை நடத்துமிடம்.

335. (1) ஹைகோர்ட்டார் இப்போது விசாரணை நடத்திக்கொண்டுவருகிற இடத்திலாவது, போர்ட் உல்லியத்திலுள்ள ஹைகோர்ட் விஷயத்தில் ஆலோசனைசபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களும் மற்ற ஹைகோர்ட்டுகள் விஷயத்தில் அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாரும் வேறே ஏதாவது இடத்தை நியமித்தால் அந்த இடத்திலாவது விசாரணை நடத்தவேண்டும்.

(2) ஆனால், ஹைகோர்ட்டார் அப்போதைக்கப்போது, போர்ட் உல்லியத்திலுள்ள ஹைகோர்ட் விஷயத்தில் ஆலோசனைசபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுடைய சம்மதியின்மேலும், மற்ற சகல விஷயத்திலும் அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாருடைய சம்மதியின்மேலும், தங்களுடைய அப்பீலதிகாரப்பிரதேச எல்லைகளுக்குள் தாங்கள் நியமிக்கிற மற்ற இடங்களிலே விசாரணை நடத்தலாம்.

நடத்தப்போகிற விசாரணைகளைக் குறித்து விளம்பரம்.

(3) சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் உத்தரவு செய்கிற உத்தியோகஸ்தரானவர் க்ரிமினல் விவகாரத்திலே ஹைகோர்ட்டின் அசல் விசாரணை அதிகாரஞ் செலுத்துவதற்காகச் செய்யப்போகும் சகல விசாரணைகளையுங் குறித்து அவ்வவ்விடத்திய ஸர்க்கார் கெஜட்டில் முன்னதாகவே விளம்பரஞ் செய்யவேண்டும்.

336. (இந்த பிரிவு 1923-ம்ஸூ 12-வது ஆக்டால் ரத்து.)

24-ம் அத்தியாயம்.

விசாரணைகளைக்குறித்தும் பரிசீலனைகளைக்குறித்தும் பொது நிபந்தனைகள்.

உடன் குற்றவாளியை மன்னிப்பதாகச்சொல்லுவது.

337. (1) ஸெஷன் கோர்ட்டாராலேயேயாவது ஹைகோர்ட்டாராலேயேயாவது முழுவதும் பரிசீலனை செய்யப்படத்தக்க, அல்லது பத்து வருஷ காலத்துக்கு அதிகப்படாமல் காவல் தண்டனை விதிக்கப்படத்தக்க, அல்லது இந்தியன் பினல்கோட் 211-வது பிரிவின்படி ஏழு வருஷ காலத்துக்கு அதிகப்படாமல் காவல்தண்டனை விதிக்கப்படத்தக்க, அல்லது இந்தியன் பினல்கோடின் 216-a, 369, 401, 435, 477-a வது பிரிவுகளில் யாதொன்றின்படிக்காவது செய்யப்பட்ட யாதொரு குற்றத்தின் விஷயத்திலே, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது, ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது, ஸப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டாவது, அல்லது யாதொரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாவது, முதல் விசாரணை அல்லது பரிசீலனை அல்லது விசாரணையின் எந்த தசைகளிலாவது, குற்றத்தில் நேராகவாகிலும் நேராயல்லாமலாகிலும் சம்பந்தப்பட்டிருப்பதாகவாயினும், அதற்கு உட்கையாயிருந்ததாகவாயினும் எண்ணப்பட்ட யாதொரு நபரின் சாட்சியத்தை அடையும் பொருட்டு, அந்த நபர்-அப்படிப்பட்ட குற்றத்தைக் குறித்தும் அதைச் செய்வதில் முதலாளியாகவாவது உடந்தைக்காரனாகவாவது சம்பந்தப்பட்டிருந்த மற்றப் பிரதி நபலரைக் குறித்தும் தனக்குத் தெரிந்திருக்கிற சங்கதிகளையெல்லாம் எதார்த்தத்தில் முழுவதும் வெளிப்படுத்துவதாய் உடன்பட்டால் அவனை மன்னிப்பதாகச் சொல்லலாம்.

ஆனால் அந்தக்குற்றம் பரிசீலனையிலாவது விசாரணையிலாவதிருக்கிற விஷயத்திலே, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாய் இராத எந்த முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டும், அவர் பரிசீலனை அல்லது விசாரணைசெய்கிற மாஜிஸ்ட்ரேட்டாய் இருந்தாலல்லாமல், இதனால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்தக்கூடாது. மேலும், அந்தக் குற்றம் முதல் விசாரணையிலிருந்தால், அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட் எந்த இடத்தில்

அந்த குற்றத்தைக் குறித்து பரிசிலனை அல்லது விசாரணைசெய்ய லாமோ அந்தப் பிரதேச அதிகார மாஜிஸ்ட்ரேட்டாய் இருந்து, மேற் சொல்லிய அதிகாரத்தை செலுத்துவதற்கு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட் ரேட்டினுடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டும் செலுத்தலாம்.

(1-a) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி மன்னிக்கிறதாகச் சொல் லுகிற பிரதி மாஜிஸ்ட்ரேட்டும், அப்படிச் சொல்லுவதற்குண்டான அவருடைய நியாயங்களை எழுதிவைக்கவேண்டும். அதற்காக குற்ற ஞ்சாட்டப்பட்டவன் மனுசெய்துகொண்டால், அதன் நகல் ஒன்றை அவனுக்குக் கொடுக்கவேண்டும்.

ஆனால், மாஜிஸ்ட்ரேட் சில விசேஷ காரணத்தினால் அந்த நக லுக்கு கட்டணமில்லாமலே கொடுப்பது தகுதியாகத் தோற்றினலொ ழிய மற்றப்படி அதற்குரிய கட்டணத்தை அவன் செலுத்தவேண்டும்.

(2) இந்தப் பிரிவின்படி மன்னிப்புக்கு ஒப்புக்கொள்ளுகிற பிரதி நபரையும் அந்தக் குற்றத்தை விசாரிக்கும் மாஜிஸ்ட்ரேட்டின் கோர்ட்டிலும் அதன்பின் நடவடிக்கைகள் ஏதாவதிருந்தாலும் அவை களிலும், சாட்சியாக விமரிசை செய்யவேண்டும்.

(2-a) மன்னிப்பதாகச் சொல்வதை யாதொரு நபர் ஒப்புக் கொண்டு (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விமரிசை செய்யப்பட்டிருக் கிற ஒவ்வொரு விஷயத்திலும், யாருக்கு முன்பாக அந்த விவகாரம் விசாரணையாய்க் கொண்டிருக்கிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர்- குற்றஞ்சாட்டப்பட்டவன் யாதொரு குற்றத்தைச் செய்திருக்கிறு னென்று நம்புவதற்கு நியாயமான முகாந்தரமிருப்பதாகத் தெரிந்து திருப்தியடைந்தால் சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஸெஷன் கோர்ட்டுக் கோ ஹைகோர்ட்டுக்கோ அவனைப் பரிசிலனைக்காக கம்மிட் பண்ண வேண்டும்.

(3) அப்படிப்பட்ட நபர் ஏற்கனவே ஜாமீன்மேல் விடுதலையா யிருந்தாலன்றி மற்றப்படி, பரிசிலனை செய்து முடிகிறவரையில் அவ னைக் காவலில் வைத்திருக்கவேண்டும்.

மன்னிக்கிறதாகச் சொல்லும்படி உத் தரவுபண்ண அதி காரம்.

338. கம்மிட் பண்ணப்பட்ட பின்பு தீர்ப்புசெய்யப்படுவதற்கு முன்னமே எப்போதாவது, யாருக்குக் கம்மிட் செய்யப்பட்டதோ அந்தக் கோர்ட்டார் அப்படிப் பட்ட யாதொரு குற்றத்தில் நேராகவாவது நேரா

யல்லாமலாவது சம்பந்தப்பட்டிருப்பதாகவாகிலும் அதற்கு உடந்தையா யிருந்ததாகவாகிலும் எண்ணப்பட்ட யாதொரு நபரின் சாட்சியத் தைப் பரிசீலனை காலத்தில் அடையும்பொருட்டு, அந்த நபரை மேற் கண்ட உடன்பாட்டின்படி மன்னிப்பதாகச்சொல்லலாம், அல்லது மன்னிப்பதாகச் சொல்லும்படி கம்மிட்செய்கிற மாஜிஸ்ட்ரேட்டுக்கா வது உத்தரவு பண்ணலாம்.

மன்னிக்கிறதாக எவனுக்குச் சொல் லப்பட்டதோ அவ னைக் கம்மிட் பண் ணுவது.

339. (1) 337 அல்லது 338-வது பிரிவின்படி மன்னிப்பு செய்கிறதாகச் சொல்லியிருக்கும்போது, அப்ப டிச் சொன்னதை ஒத்துக்கொண்ட யாதொரு நபர் எதன்மேல் அப்படிச் சொல்லப்பட்டதோ அந்த உடன்பாட்டை, முக்கியமான யாதொரு சங்கதியை வேண்டுமென்று மறைப்பதனலாவது பொய்ச்சாட்சியம் சொல்வதனலாவது அதிக்கிரமித்துவிட்டதாக தாம் அபிப்பிராயப்படுவதாய் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் ஸெர்ட்டிபை செய் தால், எதைக் குறித்து அப்படி மன்னிப்பு செய்கிறதாகச் சொல் லப்பட்டதோ அந்தக் குற்றத்திற்காகவாவது அதே சங்கதி சம்பந்த மாய் அவன் செய்திருப்பதாகத் தோற்றுகிற வேறே யாதொரு குற் றத்திற்காகவாவது அப்படிப்பட்ட நபரைப்பரிசீலனை பண்ணலாம்.

ஆனல், அப்படிப்பட்ட நபரை குற்றஞ்சாட்டப்பட்ட இதர நபர் களுடன்கூட சேர்த்து பரிசீலனை செய்யக்கூடாது; மேலும், அவன் எந்த திட்டங்களின்படி அந்தப்படி மன்னிக்கிறதாகச் சொல்லப்பட் டதோ அந்தத் திட்டங்களின்படி தான் நடந்துகொண்டிருப்பதாக அப்படிப்பட்ட பரிசீலனையில் வாதிக்க சுதந்தரமுடையவனவான்; அப்படி வாதிக்கும் விஷயத்தில் அந்த திட்டங்களின்படி அவன் நடந் துகொள்ளவில்லையென்று ருஜுப்பிப்பது பிராதுதரப்பாரின் பொறுப் பாகும்.

(2) அப்படிப்பட்ட பரிசீலனையில், அந்த மன்னிப்புக் குட் டாட்டிருந்த நபர் சொன்ன வாக்குமூலத்தை அவனுக்கு விரோதமாய்ச் சாட்சியமாகக் கொண்டுவரலாம்.

(3) அப்படிப்பட்ட வாக்குமூல சம்பந்தமாய்ப் பொய் சாட்சி யஞ் சொல்லப்பட்டதென்கிற குற்றத்தைக்குறித்த பிராதை ஹைகோ ர்ட்டாருடைய அனுமதியில்லாமல் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

339-வது பிரிவின்படி ஒரு நபரை பரிசிலனை செய்ய நடவடிக்கை.

339-A. (1) மன்னிப்புசெய்கிறதாய் சொல்லியிருப்பதை ஒப்புக்கொண்ட ஒரு நபரை கோர்ட்டார் 339-வது பிரிவின்படி பரிசிலனை செய்வதிலே—

(a) அந்தக் கோர்ட்டார் ஒரு ஹைகோர்ட்டாராகவாவது ஸெஷன் கோர்ட்டாராகவாவது இருந்தால், 271-வது பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி குற்றபத்திரிகையை படித்து காட்டி குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு அதை விவரமாய் சொல்லுவதற்கு முன்னமேயும்,

(b) அந்தக் கோர்ட்டு ஒரு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டாக இருந்தால், பிராது தரப்பிலே சாட்சிகளின் சாட்சியம் எடுக்கப்படுவதற்கு முன்னமேயும்,

எந்த திட்டங்களின்படி அவன் மன்னிக்கப்படுகிறதாகச் சொல்லப் பட்டதோ அதன்படி தான் நடந்துகொண்டிருப்பதாக வாதிக்கிறுனு வென்று குற்றஞ்சாட்டப்பட்டவனை கேட்கவேண்டும்.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவன் அப்படி வாதிக்கும் பக்ஷத்தில், கோர்ட்டார் அந்த வாதங்களை ரெகார்ட் செய்து பரிசிலனையை மேல் நடத்தவேண்டும். சந்தர்ப்பத்துக்கேற்றபடி, ஜூரர்களாவது அல்லது அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்ட கோர்ட்டாராவது அல்லது மாஜிஸ்ட்ரேட்டாவது, அந்த கேஸிலே தீர்மானம்சொல்லுவதற்கு முன்னே, குற்றஞ்சாட்டப்பட்டவன் எந்த நிபந்தனைகளின் மேல் மன்னிக்கப்படுகிறதாய் சொல்லப்பட்டதோ அதன்படி நடந்து கொண்டிருக்கிறானு இல்லையாவென்று தெரிந்துகொண்டு அவன் அந்தப்படியே நடந்துகொண்டதாக தெரியவந்தால், கோர்ட்டார், இந்தக் கோடில் என்னசொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே விடுதலை தீர்மானம் செய்யவேண்டும்.

யாருக்கு விரோதமாக நடவடிக்கை நடத்த ஆரம்பிக்கப்படுகிறதோ அந்த நபர் தன்பக்ஷத்தில் பேசவிப்பதற்கு அருக்குள்ள தகுதாரும், சாட்சியா

340. (1) யாதொரு க்ரிமினல் கோர்ட்டாருக்கு முன்பாகக் குற்றஞ்சாட்டி கொண்டுவரப்பட்ட யாதொரு நபருக்காவது, இந்தக் கோடின்படி அப்படிப்பட்ட யாதொரு கோர்ட்டிலே யாருக்கு விரோதமாக நடவடிக்கை நடத்த ஆரம்பிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு நபருக்

யிருக்க அவருக்குள் ளயோக்கியதையும்.

காவது தன் பட்சத்தில் ஒரு ப்ளீடரைப் பேசும்படிச்செய்யச் சுதந்தரமுண்டு.

(2) 107-வது பிரிவின்படிக்காகிலும், 10-வது, 11-வது, 12-வது அல்லது 36 வது அத்தியாயத்தின்படியாகிலும் 552-வது பிரிவின்படியாகிலும் அப்படிப்பட்ட யாதொரு கோர்ட்டிலே எந்த நபருக்கு விரோதமாக நடவடிக்கை நடத்த ஆரம்பிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு நபரை, அவன் அந்த நடவடிக்கையில் தன்னை சாட்சியமாக விமரிசை செய்யவேண்டுமென்று விரும்பினால் அப்படியே செய்யலாம்.

குற்றஞ் சாட்டப்பட்டவன் நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ளாவிட்டால் இன்னது செய்வது.

341. குற்றஞ் சாட்டப்பட்டவன் பைத்தியக்காரனல்லாவிட்டாலும், அவனை நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ளும்படிச் செய்யக்கூடாமையானல், கோர்ட்டார் விசாரணையையாவது பரிசீலனையையாவது நடத்தலாம்; ஹைகோர்ட்டல்லாத வேறே யாதொரு கோர்ட் விஷயத்திலே, அப்படிப்பட்ட விசாரணையினல் கம்மிட் பண்ணும்படி நேரிட்டாலும், அப்படிப்பட்ட பரிசீலனையினல் குற்றவாளியென்று தீர்மானமானலும் அந்த நடவடிக்கைகளை, அந்தக் கேஸைச் சேர்ந்த சங்கதிகளைக்குறித்து ரிபோர்ட் சகிதமாய், ஹைகோர்ட்டுக்கு அனுப்பவேண்டும்; அதன்மேல் ஹைகோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

குற்றஞ் சாட்டப்பட்டவனை விமரிசைசெய்ய அதிகாரம்.

342. (1) குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு விரோதமாய்ச் சாட்சியத்தினல் தெரியவருகிற யாதொரு சங்கதியைக் குறித்துச் சமாதானஞ் சொல்ல அவனுக்குக் கூடுமானதாகச் செய்யும்பொருட்டு, யாதொரு விசாரணை அல்லது பரிசீலனை நடத்தும் எந்தத்தெசையிலாவது கோர்ட்டார் குற்றஞ் சாட்டப்பட்டவனை முன்னதாய் உஷார்ப்படுத்தாமல், தாங்கள் அவசியமாக நினைக்கிற சவால்களை அவனுக்குப் போடலாம்; பிராது பட்சம் சாட்சிகளை விமரிசை செய்தான பின்பு, அவனைத் தன்பட்சத்தில் வாதிக்கும்படி உத்தரவு செய்வதற்கு முன்னமே, மேற்சொல்லிய காரியத்தின் பொருட்டு அந்தக் கேஸைக் குறித்துச் சாதாரணமாய் அவனைச் சவால் கேட்கவேண்டும்.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவன் அப்படிப்பட்ட சவால்களுக்கு ஜவாப்பு சொல்லமாட்டே னென்பதற்காகிலும் பொய் ஜவாப்பு சொல்லுவதற்காகிலும் தண்டிக்கப்படத்தக்கவனாகமாட்டான்; ஆனால், அப்படி ஜவாப்பு சொல்லமாட்டேனென்பதனாலாகிலும் பொய் ஜவாப்பு சொல்லுவதனாலாகிலும் கோர்ட்டாரும் ஜூரியிருந்தால் அவர்களும் தங்களுக்கு நியாயமாகத் தோற்றுகிறபடி ஊகிக்கலாம்.

(3) குற்றஞ் சாட்டப்பட்டவன் சொல்லுகிற ஜவாப்பைக் குறித்து அப்படிப்பட்ட விசாரணை அல்லது பரிசிலனையில் யோசிக்கலாம்; மேலும், அந்த ஜவாப்பினாலே அவன் செய்திருப்பதாகத் தெரியவரும்படியான வேறே யாதொரு குற்றத்தைக்குறித்து வேறு விசாரணை அல்லது பரிசிலனையில் அவன் பட்சத்திலாகிலும் அவனுக்கு விரோதமாயாகிலும் அதைச் சாட்சியமாகக் கொண்டுவரலாம்.

(4) குற்றஞ் சாட்டப்பட்டவனைப் பிரமாணம் செய்விக்கக் கூடாது.

343. 337 - வது 338 - வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறபடிக்குத் தவிர, குற்றஞ் சாட்டப்பட்டவனுக்குத் தெரிந்திருக்கிற யாதொரு சங்கதியை வெளிப்படுத்தும்படியாவது அடக்கிவிடும்படிக்காவது அவனைச் செய்யும்பொருட்டு, ஆசைகாட்டியாகிலும் வெருட்டியாகிலும் வேறே எவ்விதமாயாகிலும் அவனை உட்படுத்தக்கூடாது.

சங்கதியை வெளிப்படுத்தும்படி வெருட்டுதல் முதலியவை செய்யக் கூடாது.

344. (1) யாதொரு சாட்சி ஹாஜரில்லாமையினாலாவது வேறே யாதொரு நியாயமான காரணத்தினாலாவது, யாதொரு விசாரணை அல்லது பரிசிலனையை ஆரம்பிப்பதை ஒற்றிவைப்பதாகிலும் அதை நிறுத்திவைப்பதாகிலும் அவசியமாகவாவது யுக்தமாகவாவதிருந்தால், கோர்ட்டார் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றினால், அதற்குண்டான ஹேதுக்களைக் கண்டு எழுத்துமூலமாய் உத்தரவு பிறப்பித்து, தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற திட்டப்படி தங்களுக்கு நியாயமாகக் காணுகிற காலம்வரையில் அதை அப்போதைக்கப்போது ஒற்றிவைக்கலாம் அல்லது நிறுத்திவைக்கலாம்; மேலும் குற்றஞ் சாட்டப்பட்ட

நடவடிக்கைகளை நடத்தாமலே நிறுத்திவைக்கவாவது வேறொரு நாள்வரையில் நிறுத்திவைக்கவாவது அதிகாரம்.

வன் காவலிலிருப்பானுகில் அவனை வாரண்டைக்கொண்டு மறுபடி காவலுக்கனுப்பலாம் ;

காவலுக் கனுப்பு வது.

ஆனல் ஒரு தடவையில் பதினைந்து நாளைக் கதிகப்பட்ட காலத்திற்கு மாஜிஸ்ட்ரேட்டானவர் குற்றஞ்சாட்டப்பட்டவனை இந்தப் பிரிவின்படி மறுபடியுங் காவலுக்கனுப்பக்கூடாது.

(2) ஹைகோர்ட் தவிர வேறே யாதொரு கோர்ட்டாரால் இந்தப்பிரிவின்படி செய்யப்பட்ட பிரதி உத்தரவும், எழுத்துமூலமாயிருக்கவேண்டியதுமல்லாமல், கோர்ட் செய்கிற ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது அதில் கையெழுத்துப் பண்ணவும் வேண்டும்.

மறுபடி காவலுக்கு அனுப்புவதற்கு நியாயமான காரணம்.

விவரணம்.—குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றஞ் செய்திருப்பானென்கிற அனுமான முண்டாவதற்குப் போதுமான சாட்சியங் கிடைத்திருந்து, அவனை மறுபடி காவலுக்கனுப்புவதனுலே இன்னும் சாட்சியம் கிடைக்கலாம்போலிருக்கிறதென்று தோற்றினல், மறுபடி காவலுக்கனுப்புவதற்கு இது தகுந்த காரணமாகும்.

குற்றங்களுக்கு ராஜியாவது.

345. (1) அடியில் அடுத்துவருகிற ஜாபிதாவில் முதல் இரண்டு கலங்களிலே குறிப்பிடப்பட்டு, இந்தியன் பினல் கோடிலுள்ள பிரிவுகளின்படி தண்டிக்கப்படத்தக்கதான குற்றங்களுக்கு, அந்த ஜாபிதாவிலுள்ள மூன்றுவது கலத்தில் சொல்லியிருக்கிறவர்கள் ராஜியாய்ப் போகலாம் :

குற்றம்.	சம்பந்தப்படத்தக்க இந்தியன் பினல் கோடிலுள்ள பிரிவுகள்.	குற்றத்திற்கு இன்னர் ராஜியாய்ப் போகலாம்.
ஒருவனுடைய மதசம்பந்தமான உணர்ச்சிக்குச் சங்கட முண்டுபண்ணவேண்டுமென்று தேர்ந்த எண்ணங்கொண்டு பேசுவது முதலானதைச்செய்வது.	298	எவனுடைய மத சம்பந்தமான உணர்ச்சிக்குச்சங்கட முண்டுபண்ண உத்தேசிக்கப்பட்டதோ அவன்.

துன்பமுண்டுபண்ணுவது ...	323,334	எவனுக்குத் துன்பஞ் செய்யப்பட்டதோ அவன்.
எவனையாவது அக்கிரமமாய்த் தடுப்பது அல்லது அடைப்பது.	341,342	தடுக்கப்பட்ட அல்லது அடைக்கப்பட்ட நபர்.
தாக்குவது அல்லது அநியாயமாய்ப்பலவந்தஞ்செய்வது.	352,355,358	எவன் தாக்கப்பட்டானோ அல்லது அநியாயமாய்ப்பலவந்தஞ் செய்யப்பட்டானோ அவன்.
சட்டத்துக்கு விரோதமாய்க் கட்டாயமாக வேலை வாங்குவது.	374	வேலைசெய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டவன்.
கெடுதிசெய்வது, செய்யப்பட்ட கெடுதி அல்லது நஷ்டம் ஸர்க்கார்மனிதனல்லாதவனுக்குச் செய்யப்பட்ட கெடுதி அல்லது நஷ்டமாக மாத்திரம் இருந்தால்.	426, 427	எவனுக்குக் கெடுதி அல்லது நஷ்டம் உண்டு பண்ணப்பட்டதோ அவன்.
துராக்கிரதமாய் நுழைவது ...	447	எதில் ஒருவன் நுழைந்தானோ அந்தச் சொத்தைத் தன் ஸ்வாதீனத்தில் வைத்திருப்பவன்.
வீட்டினிடமாய் நுழைவது ...	448	
ஊழியஞ்செய்வதாக உடன்பட்டிருக்கிறபடி அக்கிரமமாய் நடவாதிருப்பது.	490,491,492	குற்றஞ் செய்தவன் எவனிடத்தில் உடன்படிக்கைசெய்தானோஅவன்.
விபசாரஞ்செய்வது	497	அந்த ஸ்திரீயின் புருஷன்.
விவாகமான ஒரு ஸ்திரீயைக் கெட்ட எண்ணத்தோடு வசியப்படுத்துவது, இட்டுக்கொண்டு போவது அல்லது மடக்கி வைத்திருப்பது.	498	
அவதூறு செய்வது	500	அவதூறு செய்யப்பட்டவன்.
அவதூறாகுமென்று தெரிந்திருக்கிற சங்கதியை அச்சுப்போடுவது அல்லது செதுக்குவது.	501	
அவதூறான சங்கதி இருக்கிறதென்று தெரிந்து, அந்த சங்கதி எதில் அச்சுப்போட்டாவது செதுக்கியாவதிருக்கிறதோ அதை விற்பது.	502	
அமரிக்கையைக் கெடுக்கும்படி செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு பழிப்பது.	504	பழிக்கப்பட்டவன்.
அநியாயமாய்ப் பயப்படுத்துவது, அந்தக் குற்றத்திற்கு ஏழுவருஷத்திற்குக் காவல்தண்டனை விதிக்கப்படத்தக்கதாயிருக்கும்போது தவிர.	506	பயப்படுத்தப்பட்டவன்.
ஒருவன் கடவுளின் கோபத்திற்கு பாத்திரனாகச் செய்யப்படுவானென்று அவனை நம்பும்படி செய்வது.	508	எவனுக்கு துன்பஞ்செய்யப்பட்டதோ அவன்.

(2) அடுத்துப் பின் வருகிற ஜாபிதாவின் முதல் இரண்டு கலங்களில் குறிப்பிடப்பட்டு, இந்தியன் பினல் கோடிலுள்ள பிரிவுகளின்படி தண்டிக்கப்படத்தக்கதான குற்றங்களுக்கு, அப்படிப்பட்ட குற்றத்தைக்குறித்து செய்யப்பட்ட யாதொரு பிராது யாருக்கு முன்பாக நடந்துகொண்டிருக்கிறதோ அந்தக்கோர்ட்டார் அனுமதிகொடுப்பதன்மேல், அந்த ஜாபிதாவின் மூன்றுவது கலத்திற்கண்ட நபர்கள் ராஜியாய்ப்போகலாம் :

குற்றம்.	சம்பந்தப்படத்தக்க இந்தியன் பினல் கோடின் பிரிவுகள்.	குற்றத்துக்கு இன்னுர் ராஜியாய்ப் போகலாமென்பது.
அபாயமான ஆயுதங்களினுலாவது சாதனத்தினுலாவது மனதாரத் துன்பமுண்டுபண்ணுவது.	324	யாருக்குத் துன்பம் உண்டுபண்ணப்படுகிறதோ அந்த நபர்.
மனதாரக் கொடுந்துன்பம் உண்டுபண்ணுவது.	325	ஷை
சடுதியில் மிகுந்த கோபமூட்டப்படுவதனுலே மனதாரக் கொடுந்துன்பம் உண்டுபண்ணுவது.	335	ஷை
பிறருடைய பிராணனுக்காவது சரீரக்ஷேமத்துக்காவது அபாயம் உண்டுபண்ணும்படியான யாதொரு காரியத்தைத் துடுக்காகவும் அஜாக்கிரதையாகவும்செய்து அதனுலே துன்பம் உண்டுபண்ணுவது.	337	ஷை
பிறருடைய பிராணனுக்காவது சரீரக்ஷேமத்துக்காவது அபாயம் உண்டுபண்ணும்படியான யாதொரு காரியத்தைத் துடுக்காகவும் அஜாக்கிரதையாகவும்செய்து அதனுலே கொடுந்துன்ப முண்டுபண்ணுவது.	338	ஷை
யாதொரு நபரை மூன்று நாளைக்காகிலும் அதற்கு மேற்பட்டாகிலும் அக்கிரமமாய் அடைத்துவைப்பது.	343	அடைத்துவைக்கப்பட்ட நபர்.
ஒருவருக்கும் தெரியாமல் யாதொரு நபரை அக்கிரமமாய் அடைத்துவைப்பது.	346	ஷை
ஒருவனை அக்கிரமமாய் அடைத்துவைக்க எத்தனப்படுகையில் தாக்குவது அல்லது குற்றம்பொருந்திய பலவந்தம்செய்வது.	357	தாக்கப்பட்ட அல்லது பலவந்தம் செய்யப்பட்ட நபர்.

சொத்தை அயோக்கியமாய் உபயோகித்துக்கொள்வது.	403	அயோக்கியமாய் உபயோகித்துக் கொள்ளப்பட்டசொத்தின் சொந்தக்காரர்.
மோசஞ்செய்வது	417	மோசஞ்செய்யப்பட்ட நபர்.
எவனுடைய பிரயோசனத்தைச் சட்டப்பிரகாரமாகிலும் நியாயமான உடன்படிக்கை பிரகாரமாகிலும்தான் காக்கவேண்டியவனாயிருந்தும் அவனை மோசஞ்செய்வது.	418	ஷை
ஆள் மாறாட்டமாய் மோசஞ்செய்வது.	419	ஷை
சொத்தை ஒப்பிக்கும்படி மோசஞ்செய்து அயோக்கியமாய் உடன்படுத்துவது அல்லது பெறுமான பத்திரத்தை அழிப்பது அல்லது திருத்துவது.	420	ஷை
தண்ணீரை அக்கிரமமாய் வேறொரு வழியாகத் திருப்பி நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான வேலைக்குத் தீங்குசெய்வதனால் ஏற்படும் நஷ்டம் அல்லது சேதமானது ஸர்க்கார் சம்பந்தமல்லாத ஒரு நபருக்கு நேரிட்ட நஷ்டம் அல்லது சேதமாயிருந்தால் அப்படி தீங்குசெய்வதனால் கெடுதி செய்வது.	430	எவனுக்கு நஷ்டம் அல்லது சேதம் ஏற்படுகிறதோ அந்த நபர்.
காவல் தண்டனை விதிக்கத்தக்க (திருட்டல்லாத வேறே) குற்றத்தைச் செய்யும்பொருட்டு வீட்டினிடமாய் நுழைவது.	451	அந்தப்படி நுழைந்திருக்கும் வீட்டை ஸ்வாதீனத்தில் வைத்திருக்கும் நபர்.
மாறுபாடான வர்த்தக அடையாளத்தையாவது சொத்து அடையாளத்தையாவது உபயோகிப்பது.	482	அப்படி உபயோகிக்கப்பட்டதினால் எந்த நபருக்கு நஷ்டம் அல்லது கெடுதி செய்யப்பட்டதோ அந்த நபர்.
வேறொருவனால் உபயோகிக்கப்பட்ட வர்த்தக அடையாளம் அல்லது சொத்து அடையாளத்தைப்போல கள்ள அடையாளஞ்செய்வது.	483	எந்த நபருடைய வர்த்தகம் அல்லது சொத்தின் அடையாளம் கள்ளஞ் செய்யப்பட்டதோ அந்த நபர்.
கள்ளத்தனமான வர்த்தக அடையாளம் அல்லது சொத்து அடையாளம் போடப்பட்டிருக்கிற சரக்கை அப்படித் தெரிந்து விற்றாலும், அல்லது விற்பனைக்காக வைத்திருந்தாலும் அ க்கேற் காட்டினாலும், [illegible]	486	ஷை

காக்கவோ அல்லது கைத்தொழில் விஷயத்திற்காகவோ தன் வசத்தில் வைத்துக்கொண்டிருப்பது.		
ஒரு ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்கையிலாவது, ஒரு புருஷன் தன் பெண்சாதி உயிரோடிருக்கையிலாவது வேறொரு விவாகஞ்செய்துகொள்வது.	494	அப்படி கலியாணஞ்செய்துகொள்ளுகிறவருடைய புருஷன் அல்லது பெண்சாதி
ஒரு ஸ்திரீயின் நாணத்தைப் பழிக்க வேண்டுமென்ற உத்தேசத்தோடு வார்த்தைகளைச் சொல்வது, தொனிசெய்வது, சேஷ்டைபண்ணுவது அல்லது யாதொரு வஸ்துவைக் காட்டுவது அல்லது யாதொரு ஸ்திரீ இருக்கிற மறைவான இடத்தில் நுழைவது.	509	எந்த ஸ்திரீயைப் பழிக்க உத்தேசிக்கப்படுகிறதோ அல்லது எந்த ஸ்திரீ இருக்கும் மறைவான இடத்தில் நுழைந்தென்னும் குற்றம் செய்யப்படுகிறதோ அந்த ஸ்திரீ.

(3) இந்த பிரிவின்படி எந்த குற்றத்திற்காவது ராஜியாகத்தக்கதாயிருந்தால், அப்படிப்பட்ட குற்றத்தைச் செய்ய எத்தனிப்பதே குற்றமாகும்போது அப்படி எத்தனப்படுவதைக் குறித்தாவது அவ்விதமாக ராஜியாய்ப் போகலாம்.

(4) எவன் மற்றப்படியாயிருந்தால் இந்தப் பிரிவின்பிரகாரம் யாதொரு குற்றத்தைக்குறித்து ராஜியாய்ப்போகச் சமர்த்தையுள்ளவனாயிருப்பானோ அவன் 18 - வயதிற்குட்பட்டிருந்தாலும் உன்மத்தனாயிருந்தாலும், அவன் பட்சத்தில் கான்ட்ராக்ட்செய்யச் சமர்த்தையுள்ளவனெவனாவது அந்த குற்றத்திற்கு கோர்ட்டாருடைய அனுமதியின்பேரில் ராஜியாய்ப்போகலாம்.

(5) குற்றஞ் சாட்டப்பட்டவன் பரிசிலனைக்காகக் கம்மிட் பண்ணப்பட்டிருந்தாலும், அவன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டு அப்பீல் முடிவாகாமலிருந்தாலும், சந்தர்ப்பத்திற்கேற்றபடி, எந்தக் கோர்ட்டாருக்கு அவன் கம்மிட் பண்ணப்பட்டிருக்கிறானோ அந்த கோர்ட்டாருடைய அனுமதியில்லாமலாவது, யாருக்கு முன்பாக அப்பீல் விசாரணையாக வேண்டியதாயிருக்கிறதோ அந்த கோர்ட்டாருடைய அனுமதியில்லாமலாவது ஷை குற்றத்திற்காக ராஜியாவது கூடாது.

(5-a) ஒரு ஹைக்கோர்ட்டார்-439-வது பிரிவின்படி தங்களுக்குண்டான மேற்பரிசோதனை அதிகாரத்தை செலுத்துகையிலே, யாதொரு குற்றத்தைக் குறித்து இந்தப்பிரிவின்படி ராஜியாகக்கூடிய எந்த நபருக்காவது அப்படிச்செய்ய அனுமதிகொடுக்கலாம்.

(6) இந்தப் பிரிவின்படி யாதொரு குற்றத்திற்கு ராஜியாய்ப் போவது கைதுடன் அந்தக் குற்றத்தைக்குறித்து ராஜியாய்ப்போக யிருக்கிறதோ அந்த குற்றஞ் சாட்டப்பட்டவனைக் குற்றவாளி யல்லவென்று விடுதலை செய்வதாகும்.

(7) இந்தப் பிரிவினால் நிபந்தனை யேற்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, எந்தக் குற்றத்திற்கும் ராஜியாகக்கூடாது.

தாம் தைசல்செய்யக்கூடாத கேஸுகளிலே ப்ரொவின்ஷியல் மாஜிஸ்ட்ரேட் நடத்துவது.

346. (1) ராஜதானிகளுக்கு வெளியிலுள்ள எந்த டிஸ்ட்ரிக்ட்டிலாகிலும் யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாக விசாரணையாவது பரிசிலனையாவது நடந்துகொண்டிருக்கையில், அந்தக் கேஸானது அந்த டிஸ்ட்ரிக்ட்டிலுள்ள வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினால் பரிசிலனை செய்யப்படவேண்டியதாகவாகிலும் பரிசிலனைக்குக் கம்மிட் பண்ணப்படவேண்டியதாகவாகிலுமிருக்கிற கேஸாயிருக்கிறதென்று நிச்சயித்துக் கொள்ளுவதற்கு இடமிருப்பதாகச் சாட்சியத்தினாலே அவருக்குத் தோற்றினால், அவர் நடவடிக்கையை நிறுத்திவைத்து, தாம் யாருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறாரோ அப்படிப்பட்ட யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்காவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் உத்தரவு செய்கிறபடி அதிகாரமுடைய வேறே மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்காவது அந்தக் கேஸை அனுப்பவேண்டியதுமல்லாமல், அது இப்படிப்பட்டதென்று சுருக்கமாய் ரிபோர்ட் எழுதி அதையுங்கூட அனுப்பவேண்டும்.

(2) யாரிடத்திற்கு அந்தக் கேஸ் அனுப்பப்படுகிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கதிகாரமிருந்தால், அந்த கேஸைத் தாமே பரிசிலனை பண்ணலாம், அல்லது அதிகாரமுடையவராய்த் தமக்குக் கீழ்ப்பட்டிருக்கிற யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு அதை அனுப்பலாம், அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவனைப் பரிசிலனைக்குக் கம்மிட் பண்ணலாம்.

விசாரணை அல்லது பரிசிலனை ஆரம்பித்த பின்பு கேஸைக் கம்மிட் பண்ணவேண்டியதே

347. (1) யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாக விசாரணை நடக்கையிலாவது, தீர்ப்பில் கையெழுத்துச் செய்வதற்கு முன்னமே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகப் பரிசிலனை நடக்கையிலாவது, அந்தக் கேஸானது ஸெஷன் கோர்ட்டாராலாகிலும் ஹை

ன்று மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரியவந்தால் இன்னது செய்வது.

கோர்ட்டாராலாகிலும் பரிசீலனை செய்யப்படவேண்டிய கேஸென்று நடவடிக்கைகளின் எந்தத் தசையிலாவது அவருக்குத் தோற்றி, பரிசீலனைக்குக் கம்மிட்பண்ண அவருக்கதிகாரமிருக்கிற பட்சத்தில், அவர் குற்றஞ் சாட்டப்பட்டவனை இதில் முன்னமே சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படி கம்மிட் பண்ணவேண்டும்.

(2) பரிசீலனைக்குக் கம்மிட் பண்ண அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கதிகாரமில்லாவிட்டால், அவர் 346-வது பிரிவின்படி நடத்தவேண்டும்.

நாணயஞ் செய்வதற்காவது முத்திரைக்கடிதாசிச் சட்டத்திற்காவது சொத்திற்காவது விரோதமாய்ச்செய்யப்பட்ட குற்றங்களுக்காக முந்திக் குற்றவாளியாக்கப் பட்டவர்களைப் பரிசீலனை செய்வது.

348. (1) இந்தியன் பினல்கோட் 12-ம் அத்தியாயம் அல்லது 17-ம் அத்தியாயத்தின்படி மூன்றுவருஷத்திற்காவது அதற்கு மேற்பட்ட காலத்திற்காவது காவலில் வைக்கும்படியான தண்டனை விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றத்திற்காக எவனுகிலும் குற்றவாளியாக்கப்பட்டிருந்து, அந்த அத்தியாயங்களில் எதன்படிக்காவது மூன்று வருஷத்திற்காகிலும் அதற்குமேற்பட்ட காலத்திற்காகிலும் காவலில் வைக்கும்படியான தண்டனை விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றம் மறுபடி சாட்டப்படுவானுகில், குற்றஞ்சாட்டப்பட்டவனை கம்மிட் பண்ணுவதற்கு போதுமான முகாந்தரங்கள் இருப்பதாக யாருக்கு முன் அந்த கேஸ் நடந்து கொண்டிருக்கிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட் தெரிந்து திருப்தியடைகிற பட்சத்திலே, அந்தக்கேஸை தான் பரிசீலனைசெய்ய அதிகாரமிருந்தால் அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவானுகில் தாமே தகுந்த தண்டனை விதிக்கக்கூடுமென்று அபிப்பிராயப்பட்டாலன்றி மற்றப்படி அப்படிப்பட்டவனைச் சங்கதிக்குத் தக்கபடி ஸெஷன் கோர்ட்டுக்காவது ஹைகோர்ட்டுக்காவது கம்மிட் பண்ணவேண்டும்.

ஆனல், 30 - வது பிரிவின்படி அந்த ஜில்லாவிலுள்ள யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டிருந்தால், ஸெஷன் கோர்ட்டுக்குக் கம்மிட் செய்வதற்குப் பர்த்தியாக அந்த கேஸை அவருக்கு மாற்றிவிடலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு நபர் ஸெஷன் கோர்ட்டுக்காவது ஹைகோர்ட்டுக்காவது கம்மிட் பண்ணப்பட்டால், அந்த விசாரணையிலாகிலும் பரிசீலனையிலாகிலும் அவனோடு கூட்டாய்க் குற்றம் சாட்டப்பட்ட வேறே யாதொரு நபரை, அம்மாதிரியே கம்மிட் பண்ணவேண்டும்; ஆனால், மாஜிஸ்ட்ரேட்டானவர் - தமக்குத் தகுதியாகத் தோற்றினால், 209-வது பிரிவின்படி அப்படிப்பட்ட வேறே நபரை விடுதலைசெய்யலாம்.

போதுமான தண்டனை மாஜிஸ்ட்ரேட் செய்யக்கூடாதபோது நடக்குமவிதம்.

349. (1) அதிகாரமுடைய இரண்டாவது அல்லது மூன்றாவதுவகுப்பு மாஜிஸ்ட்ரேட்டானவர் பிராதுபட்சம் சாட்சியத்தையும் குற்றஞ் சாட்டப்பட்டவன் பட்சம் சாட்சியத்தையும் கேட்டபின்பு குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றவாளிதானென்று அபிப்பிராயப்பட்டு, விதிப்பதற்கு அந்த மாஜிஸ்ட்ரேட்டிற்கு அதிகாரமிருப்பதைவிட இன்னுங் கடுஞ்சிட்சையாகிலும் அதற்கு வேறான சிட்சையாகிலும் அவனடையவேண்டியதென்றாவது 106-வது பிரிவின்படி அவனை முச்சிலிக்கா எழுதிக் கொடுக்கச்சொல்லி உத்தரவு செய்யவேண்டியதென்றாவது எண்ணுவாராகில், அவர் அந்த அபிப்பிராயத்தை எழுதிவைத்து, தான் யாருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறாரோ அந்த டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்காவது சப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்காவது தம்முடைய நடவடிக்கைகளையும் குற்றஞ் சாட்டப்பட்டவனையும் அனுப்பலாம்.

(1-a) குற்றஞ்சாட்டப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் கூட்டாய்ப் பரிசீலனை செய்யப்பட்டு, அந்தப்படி குற்றம் சாட்டப்பட்டவர்களில் எவன் விஷயமாயாவது (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நடவடிக்கை நடத்துவது அவசியமென்று மாஜிஸ்ட்ரேட் அபிப்பிராயப்படுகிற பட்சத்திலே, அவர்-குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் யார் குற்றவாளிகளென்று தாம் அபிப்பிராயப்படுகிறாரோ அப்படிப்பட்டவர்களையெல்லாம் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினிடமாவது ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டினிடமாவது அனுப்பவேண்டும்.

(2) யாரிடத்திற்கு நடவடிக்கைகள் அனுப்பப்படுகிறதோ அந்தமாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத்தோற்றினால், கட்சிக்காரர்களை விமரிசை செய்வதுமல்லாமல், அந்தக் கேஸிலே முன்னதாய்ச் சாட்சியஞ் சொல்லியிருக்கிற யாதொரு சாட்சியையும் மறுபடி அழைப்

பித்து விமரிசைசெய்யலாம்; மேலும், வேறே சாட்சிகளையும் அழைப்பித்து அவர்களுடைய சாட்சியத்தையுங் கேட்கலாம்; அதற்குமேல் அந்தக் கேஸிலே தமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடிக்கும் சட்டத்திற்கு ஒத்திருக்கும்படிக்கும் தீர்ப்பு - சிட்சை அல்லது உத்தரவு செய்ய வேண்டும்.

ஆனால், அவர் 32, 33 - வது பிரிவுகளின்படி விதிப்பதற்குத் தமக்கு அதிகாரமிருக்கிற தண்டனையைவிட இன்னுங் கடுந்தண்டனையை விதிக்கக்கூடாது.

ஒரு மாஜிஸ்ட்ரேட்டினால் சிறிதும் வேறொரு மாஜிஸ்ட்ரேட்டினால் சிறிதும் எழுதிவைக்கப்பட்ட சாட்சியத்தின்மேல் குற்றஸ்தாபனை அல்லது கம்மிட்மென்ட்.

350. (1) யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர் யாதொரு விசாரணை அல்லது பரிசீலனையில் சாட்சியம் முழுமையுமாவது அதில் யாதொரு பாகத்தையாவது கேட்டு ரிகார்ட் செய்த பின்பு, அதில் அதிகாரஞ் செலுத்துவதை விட்டுவிட்டு, அவருக்குப் பதிலாக அப்படிப்பட்ட அதிகாரமுடைய வேறொரு மாஜிஸ்ட்ரேட் அந்த அதிகாரத்தைச் செலுத்த வந்திருக்கும்போது, அப்படி வந்திருக்கிற மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு முன்னிருந்தவரால் அப்படி ரிகார்ட் செய்யப்பட்ட சாட்சியத்தின்மேலாகிலும் தமக்கு முன்னிருந்தவர் சிறிது ரிகார்ட்செய்தும் மற்றதைத் தாம் ரிகார்ட்செய்துமிருக்கிற சாட்சியத்தின்மேலாகிலும் பிரவர்த்திக்கலாம்; அல்லது அவர் சாட்சிகளை மறுபடி ஸம்மனனுப்பி வரவழைத்து விசாரணை அல்லது பரிசீலனையை மறுபடி ஆரம்பிக்கலாம்;

ஆனால்:—

(a) எந்தப் பரிசீலனையிலாவது, இரண்டாவது வந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் தம்முடைய நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்போது, குற்றஞ் சாட்டப்பட்டவன் சாட்சிகளையாகிலும் அவர்களிலெவனையாகிலும், மறுபடி ஸம்மனனுப்பி வரவழைத்து மறுதரம் விமரிசை செய்யவேண்டுமென்று கேட்கலாம்;

(b) ஹைகோர்ட்டாராவது, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கீழ்ப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளால் பரிசீலனை செய்யப்பட்ட கேஸுகளிலே டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது, குற்ற

ஸ்தாபனைசெய்த மாஜிஸ்ட்ரேட்டினால் முழுவதும் ரிகார்ட் செய்யப்படாத சாட்சியத்தின்மேல் செய்யப்பட்ட யாதொரு குற்றஸ்தாபனையினாலே குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு முக்கியமாய்ப் பாதக முண்டாயிருக்கிறதென்று அபிப்பிராயப்படுகிற பட்சத்தில், அந்தக் கோர்ட்டாராவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது, அப்பீல் செய்யப்பட்டிருந்தாலும் இராவிட்டாலும், புதிதாய் விசாரணை அல்லது பரிசிலனை நடத்தும்படி உத்தரவு செய்யலாம்.

(2) நடவடிக்கைகள் 346-வது பிரிவின்படி நிறுத்திவைக்கப்பட்டிருக்கிற அல்லது நடவடிக்கைகள் 349-வது பிரிவின்படி மேலான மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிற கேஸுகளுக்கு இந்தப் பிரிவில் சொல்லியிருப்பதெதுவும சம்பந்தப்படயாட்டாது.

(3) இந்தக் கோடிற்கண்ட நிபந்தனைகளின்படி யாதொரு கேஸ் ஒரு மாஜிஸ்ட்ரேட்டினிடமிருந்து இன்னொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு மாற்றப்பட்டால், முதல்சொன்ன மாஜிஸ்ட்ரேட்டானவர் (1) குறிப்பிட்ட உட்பிரிவின் தாற்பரியப்படி அதில் அதிகாரம் செலுத்துவதை விட்டுவிட்டிருப்பதாகவும் அவருக்கு பதிலாக பின்சொன்ன மாஜிஸ்ட்ரேட் வந்திருப்பதாகவும் எண்ணப்படுவார்.

350-A. யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுகளடங்கிய ஒரு நியாயசபையாரால் செய்யப்பட்ட ஒரு உத்திரவு அல்லது தீர்மானமானது அந்த சபையின் அமைப்பில் மாறுதல் ஏற்பட்டிருப்பதின் ஒரு காரணமாக செலாவணியற்றதாய்போகாது. ஆனால், எந்த கேஸிலே அப்படிப்பட்ட உத்திரவு அல்லது தீர்மானம் செய்யப்பட்டதோ அந்த சபையானது 15-வது, 16-வது பிரிவுகளின்படி ஏற்படுத்தப்பட்டதாயும், அதைச்சேர்ந்த மாஜிஸ்ட்ரேட்டுகள் அந்த சபையின் நடவடிக்கை முழுவதிலும் ஆஜராயும் இருந்திருக்கவேண்டும்.

நியாயசபைகளின் அமைப்பில் மாறுதல்கள்.

351. (1) பிடிக்கப்பட்டாவது ஸம்மன் செய்யப்பட்டாவது வந்திராவிட்டாலும் க்ரிமினல் கோர்ட்டில் வந்திருக்கிறவனெவனையாவது, சாட்சியத்தினாலே அவன் செய்திருப்பதாகத் தோற்றி விசாரிப்பதற்கு அந்தக் கோர்ட்டார் அதிகாரமுடைத்தாயிருக்கிற யா

கோர்ட்டில் வந்திருக்கிற ஆஸாமிகளை மறிப்பது.

தொரு குற்றத்தைக்குறித்து விசாரணை அல்லது விமரிசைசெய்வதற்காக அந்தக் கோர்ட்டார் மறியல்செய்து, அவன் பிடிக்கப்பட்டாவது ஸம்மன் செய்யப்பட்டாவதிருந்தாற்போல அவன்மேல் நடவடிக்கை நடத்தலாம்.

(2) 18-ம் அத்தியாயத்தின்படி விசாரணை நடந்துகொண்டிருக்கையிலாவது, பரிசீலனை ஆரம்பிக்கப்பட்ட பின்பாவது அப்படி மறியல் செய்யப்படுமாகில், அப்படிப்பட்டவனைக் குறித்து நடவடிக்கைகளைப் புதிதாய் ஆரம்பித்து, சாட்சிகளை மறுபடி விமரிசைசெய்ய வேண்டும்.

கோர்ட்டுகள் பஹிரங்கமானவைகளாயிருப்பது.

352. யாதொரு குற்றத்தை விசாரணை அல்லது பரிசீலனை செய்யும்பொருட்டு யாதொரு க்ரிமினல் கோர்ட் கூடுகிற இடமானது பஹிரங்கமான கோர்ட்டாக எண்ணப்படும்; அவ்விடத்திற்கு ஜனங்கள் வசதியாய்க் கொள்ளக்கூடிய வரையிலே சாதாரணமாய்ப் போகலாம்.

ஆனல், கோர்ட்செய்கிற ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது தமக்கு யுக்தமாகத் தோற்றினல், யாதொரு குறித்த கேஸ் விசாரணை அல்லது பரிசீலனை நடந்துகொண்டிருக்கிற எந்த தசையிலாகிலும், சாதாரணமாய் ஜனங்களாவது குறிக்கப்பட்டவனெவனுவது கோர்ட்டாரால் உபயோகிக்கப்பட்ட அறை அல்லது கட்டிடத்திற்கு வரக்கூடாதென்ருகிலும் அவ்விடத்திலிருக்கக்கூடாதென்ருகிலும் உத்தரவு செய்யலாம்.

---

25 - ம் அத்தியாயம்.

விசாரணைகளிலும் பரிசீலனைகளிலும் சாட்சியம் வாங்குகிற விதத்தையும் அதை ரிகார்ட்பண்ணுகிற விதத்தையுங் குறித்து.

குற்றஞ் சாட்டப்பட்டவனுக் கெதிரில் சாட்சியம் வாங்குவது.

353. வெளிப்படையாய் வேறே விதமாகச் சொல்லியிருக்கிறபடிக்குத் தவிர, 18, 20, 21, 22, 23-ம் அத்தியாயங்களின்படி வாங்கப்பட்ட சகல சாட்சியத்தையும், குற்றஞ் சாட்டப்பட்டவனுக் கெதிரிலாவது, அவன் நேராய் ஹாஜராகவேண்டியதில்லையென்று உத்தரவு செய்யப்பட்டிருக்குமாகில் அவனுடைய ப்ளீடருக் கெதிரிலாவது வாங்கவேண்டும்,

ராஜதானிக்குக் குவெளியில் சாட்சியத்தை ரிகார்ட் பண்ணுகிறவிதம்.

354. (ராஜதானி மாஜிஸ்ட்ரேட் தவிர வேறே) யாதொரு மாஜிஸ்ட்ரேட் அல்லது ஸெஷன் ஜட்ஜினுலாவது அவருக்கு முன்பாகவாவது இந்தச் சட்டப்படி நடத்தப்படுகிற (சுருக்கவகைப் பரிசீலனைகள் தவிர மற்ற) விசாரணைகளிலும் பரிசீலனைகளிலும், சாட்சிகளின் வாய்ப்பிறப்பை அடியில் கண்டிருக்கிற விதமாய் ரிகார்ட் பண்ணவேண்டும்.

ஸம்மன் கேஸுகளிலும் முதல்வகுப்பு இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் சில குற்றங்களைக் குறித்துச் செய்கிற பரிசீலனைகளிலும் ரிகார்ட்.

355. (1) ராஜதானி மாஜிஸ்ட்ரேட் தவிர வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகப் பரிசீலனை செய்யப்பட்ட ஸம்மன் கேஸுகளிலும், 260-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த (b) முதல் (m) உட்பட அதுவரையிலுள்ள பகுதிகளில் சொல்லியிருக்கிற குற்றங்கள் முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டினுல் பரிசீலனை செய்யப்படுகையில் அந்தக் கேஸுகளிலும், (பரிசிலனை நடந்துகொண்டிராவிட்டால்) 514-வது பிரிவின்படிக்கான சகல நடவடிக்கைகளிலும் மாஜிஸ்ட்ரேட்டானவர் சாட்சி விசாரிகை நடக்கையில் பிரதி சாட்சியினுடைய வாய்ப்பிறப்பின் சாராம்சத்திற்கு யாதாஸ்து எழுதவேண்டும்.

(2) அப்படிப்பட்ட யாதாஸ்தை மாஜிஸ்ட்ரேட்டானவர் தன் கையினுலேயே எழுதிக் கையெழுத்துப் போடவேண்டும்; அதற்குமேல் அது ரிகார்டில் சேரவேண்டும்.

(3) மேற்சொல்லியபடி யாதாஸ்து எழுதுவதற்கு மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தடங்கலுண்டானுல், அப்படி தான் எழுதக்கூடாமைக்குண்டான ஹேதுவை அவர் ரிகார்ட் பண்ணவேண்டியதுமல்லாமல்; அப்படிப்பட்ட யாதாஸ்தைப் பஹிரங்கமான கோர்ட்டில் தான் சொல்லி எழுதுவித்து அதில் தம் கைச்யெழுத்துப் போடவேண்டும்; அதற்குமேல் அந்த யாதாஸ்து ரிகார்டில் சேரவேண்டும்.

ராஜதானிக்குக் வெளியில் மற்ற [illegible] ரிகார்ட்.

356. (1) ஸெஷன் கோர்ட்டுக்கு முன்பாகவும் (ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுகள் தவிர வேறே) மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு முன்பாகவும் நடக்கிற மற்ற சகல பரிசீலனைகளிலும், 18, 18-ம் அத்தியாயங்களின்படி செய்கிற சகல விசாரணைகளிலும், பிரதி சாட்சியின்

வாய்ப்பிறப்பையும் கோர்ட்டில் வழங்குகிற பாஷையில் மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷன் ஜட்ஜாவது எழுதவேண்டும், அல்லது தமக்கு எதிரிலே தமக்குக் கேட்கும்படி தம்முடைய உத்தரவு பிரகாரம் தம்முடைய நேரான மேல்விசாரணைக்குள்ளாக எழுதுவிக்கவேண்டும்; அப்படிப்பட்டதில் அந்த மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷன் ஜட்ஜாவது கையெழுத்துப் பண்ணவேண்டும்.

இங்கிலீஷில் சொல்லப்பட்ட சாட்சியம்.

(2) அப்படிப்பட்ட சாட்சிக்காரன் தன்னுடைய சாட்சியத்தை இங்கிலீஷில் சொன்னால், அதை மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷன் ஜட்ஜாவது இங்கிலீஷில் தம் கையால் எழுதலாம்; குற்றஞ் சாட்டப்பட்டவன் இங்கிலீஷ் பாஷைதெரிந்தவனாகவாகிலும், கோர்ட்டில் வழங்குகிறபாஷை இங்கிலீஷாகவாகிலும் இராவிட்டால், அந்த சாட்சியத்தைக் கோர்ட்டில் வழங்குகிற பாஷையில் தர்ஜுமாசெய்வித்து, கையெழுத்து மூலமாய் உறுதிசெய்யப்பட்ட அந்தத் தர்ஜுமாவை ரிகார்டில் சேர்க்கவேண்டும்.

(2-a) அப்படிப்பட்ட சாட்சிக்காரன் தன்னுடைய சாட்சியத்தை இங்கிலீஷில் அல்லாமலும், கோர்ட்டில் வழங்குகிறபாஷையல்லாத வேறே யாதொரு பாஷையில் சொன்னாலும், அதை மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷன் ஜட்ஜாவது அந்த பாஷையிலேயே தம் கையால் எழுதலாம், அல்லது தமக்கு எதிரிலே தமக்குக் கேட்கும்படி தம்முடைய உத்திரவு பிரகாரம் தம்முடைய நேரான மேல் விசாரணைக்குள்ளாக எழுதுவிக்கவேண்டும். அப்படிப்பட்ட சாட்சியத்தை கோர்ட்டில் வழங்குகிறபாஷையிலாவது இங்கிலீஷிலாவது தர்ஜுமாசெய்வித்து கையெழுத்துமூலமாய் உறுதி செய்யப்பட்ட அந்தத் தர்ஜுமாவை ரெகார்டில் சேர்க்கவேண்டும்.

சாட்சியத்தைமாஜிஸ்ட்ரேட்டாவது ஜட்ஜாவது தாமே எழுதிக்கொள்ளாவிட்டால் யாதாஸ்து எழுதுவது.

(3) சாட்சியத்தை மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷன் ஜட்ஜாவது எழுதாத கேஸுகளிலே அவர் அந்தந்த சாட்சி விமரிசை நடக்கையில், அந்தந்தச் சாட்சி சொல்லுகிற சாட்சியத்தின் சாராம்சத்திற்கு யாதாஸ்து எழுதவேண்டும்; அப்படிப்பட்ட யாதாஸ்தை அந்த மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷன்ஜட்ஜாவது தம் கையினாலேயே எழுதிகையெழுத்துப் போடவேண்டும்: அதற்குமேல் அது ரிகார்டில் சேரவேண்டும்.

(4) மேற்சொல்லியபடி யாதாஸ்து எழுதுவதற்கு மாஜிஸ்ட்ரேட்டுக்காவது ஸெஷன் ஜட்ஜுக்காவது தடங்கலுண்டானால், அப்படி தாம் எழுதக்கூடாமைக்குண்டான ஹேதுவை அவர் ரிகார்ட் பண்ண வேண்டும்.

சாட்சியத்தை ரிகார்ட் பண்ணுகிற பாஷை.

357. (1) யாதொரு டிஸ்டிரிக்டிலாவது டிஸ்டிரிக்டின் பாகத்திலாவது யாதொரு ஸெஷன் கோர்ட்டுக்கு முன் பாகவாகிலும் யாதொரு மாஜிஸ்ட்ரேட் அல்லது யாதொரு வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு முன் பாகவாகிலும் நடத்தப்படுகிற நடவடிக்கைகளிலாவது, 356-வது பிரிவில் சொல்லியிருக்கிற விஷயங்களிலே, யாதொரு சாட்சிக்காரனுடைய சாட்சியத்தை எழுதிக்கொள்வதற்கு யாதொரு தகுந்த காரணத்தினாலே ஸெஷன் ஜட்ஜுக்காகிலும் மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும் தடங்கலுண்டானாலொழிய, அவர் ஒவ்வொரு சாட்சிக்காரனுடைய சாட்சியத்தையும் தம்முடைய சுயபாஷையில் தம்கையினாலே எழுதவேண்டியதென்று அவ்வவ்விடத்திய கவர்ன்மென்டார் உத்தரவு பண்ணலாம்; அப்படி எழுதுவதற்குத் தடங்கலுண்டாகிற விஷயத்தில் அப்படி தாம் எழுதக்கூடாமைக்குண்டான ஹேதுவை ரிகார்ட் செய்து அப்படிப்பட்ட சாட்சியத்தைப் பஹிரங்கமான கோர்ட்டில் தாம் சொல்லி எழுதுவிக்கவேண்டும்.

(2) அப்படி எழுதப்பட்ட சாட்சி வாக்குமூலத்திலே ஸெஷன் ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது கையெழுத்துப் பண்ணவேண்டும்; அதற்குமேல் அது ரிகார்டில் சேரவேண்டும்.

ஆனால், ஸெஷன் ஜட்ஜ் அல்லது மாஜிஸ்ட்ரேட்டினுடைய சுயபாஷையானது இங்கிலீஷ் அல்லாவிட்டாலும், கோர்ட்டில் வழங்குகிற பாஷையல்லாவிட்டாலும், சாட்சியத்தை இங்கிலீஷிலாவது கோர்ட்டில் வழங்குகிற பாஷையிலாவது எழுதும்படி அவருக்கு அவ்விடத்திய கவர்ன்மென்டார் உத்தரவு செய்யலாம்.

355-வது பிரிவிற்கண்டிருக்கிற கேஸுகளிலே மாஜிஸ்ட்ரேட்டானவர் செ

358. 355-வது பிரிவிற்கண்டிருக்கிற இனமான கேஸுகளிலே, மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத்தோற்றினால், 356-வது பிரிவில் சொல்லியிருக்கிற விதமாய் யாதொரு சாட்சியின் வாய்ப்பிறப்பை எழுதலாம், அல்லது அந்த மாஜிஸ்ட்ரேட்டினுடைய

ல்லப்பட்டிருக்கிற ஏதாவதொரு விதமாய்ச் செய்வது.

அதிகாரப் பிரதேச எல்லைக்குள் 357 - வது பிரிவில் சொல்லியிருக்கிற உத்தரவை அவ்விடத்திய கவர்ன்மெண்டார் செய்திருந்தால், அந்த 357-வது பிரிவில் சொல்லியிருக்கிற விதமாய் எழுதலாம்.

356 அல்லது 357-வது பிரிவின்படி சாட்சியத்தை எழுதுகிற ஒழுங்கு.

359. (1) 356 அல்லது 357 - வது பிரிவின்படி எழுதப்படுகிற சாட்சிபத்தைச் சாதாரணமாய்ச் சவால் ஜவாப்பாக எழுதாமல் விருத்தாந்தமாக எழுதவேண்டும்.

(2) மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷன் ஜட்ஜாவது தமக்கு யுக்தமாகத்தோற்றினால், குறித்த யாதொரு சவாலையும் ஜவாப்பையும் தாமே எழுதலாம், அல்லது எழுதுவிக்கலாம்.

அப்படிப்பட்ட சாட்சியம் எழுதிமுடிந்தபின்பு அதைக் குறித்து இன்னது செய்வது.

360. (1) பிரதி சாட்சியினுடைய வாய்ப்பிறப்பையும் 356 - அல்லது 357 - வது பிரிவின்படி எழுதி முடித்தவுடனே குற்றஞ் சாட்டப்பட்டவன் ஹாஜரிலிருந்தால் அவனுக் கெதிரிலாவது, அவனுக்காக ப்ளீடர்வந்திருந்தால் அவருக்கெதிரிலாவது, அதைச் சாட்சிக்கு வாசித்துக் காட்டவேண்டும்; பின்பு அவசியமானால் அதைத் திருத்தவேண்டும்.

(2) சாட்சியத்தைச் சாட்சிக்கு வாசித்துக்காட்டுகையில் அதில் எதுவாவது சரியாயிருக்கவில்லையென்று அவன் சொன்னால், மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷன் ஜட்ஜாவது அந்த சாட்சியத்தைத் திருத்தாமல், அதைக் குறித்து அந்த சாட்சி செய்த ஆட்சேபத்தை அதன்மேல் யாதாஸ்தாக எழுதலாம், அப்படி செய்கையில் தமக்கு அவசியமாகத் தோற்றுகிற ஷராக்களை அதன்மேல் எழுதவேண்டும்.

(3) ஒரு பாஷையில் சொல்லப்பட்ட சாட்சியத்தை வேறொரு பாஷையில் எழுதினால், அது எழுதப்பட்ட பாஷை அந்தச் சாட்சிக்குத் தெரியாதபட்சத்தில், அப்படி எழுதப்பட்ட சாட்சியத்தை அது சொல்லப்பட்ட பாஷையிலாவது அவனுக்குத் தெரிந்திருக்கிற வேறே எந்த பாஷையிலாவது அவனுக்கு மொழிபெயர்த்துச் சொல்லவேண்டும்.

குற்றஞ் சாட்டப் பட்டவனுக் காவது அவனுடைய ப்ளீடருக்காவது சாட்சியத்தை மொழி பெயர்த்துச் சொல்லுவது.

361. (1) குற்றஞ் சாட்டப்பட்டவனுக்குத் தெரியாத பாஷையிலே சாட்சியஞ் சொல்லப்பட்டிருந்து, அவன் நேராய் வந்திருக்கிற விஷயத்தில் அதை அவனுக்கு தெரிந்திருக்கிற பாஷையிலே பஹிரங்கமான கோர்ட்டில் அவனுக்கு தெரிவிக்க வேண்டும்.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவனுக்காக ப்ளீடர் வந்திருந்து கோர்ட்டில் வழங்குகிற பாஷையல்லாததாயும் ப்ளீடருக்குத் தெரியாததாயுமிருக்கிற வேறே பாஷையில் சாட்சியஞ் சொல்லப்பட்டால் அதை அந்த ப்ளீடருக்குக் கோர்ட்டில் வழங்குகிற பாஷையில் தெரிவிக்கவேண்டும்.

(3) முறையான ருஜுவுக்காகத் தஸ்தாவேஜுகள் தாக்கல் செய்யப்பட்டால், அதில் அவசியமாக காணுகிறமட்டிலே கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றினால் வேறு பாஷையில் தெரிவிக்க வேண்டும்.

ராஜதானி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் சாட்சியத்தை ரிகார்ட் பண்ணுவது.

362. (1) ஒரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டால் பரிசீலனை செய்யப்பட்டு அப்பீல் செய்துகொள்ளக்கூடியதாயிருக்கும் ஒவ்வொரு கேஸிலும், அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டானவர்-சாட்சிகள் சொல்லுகிற சாட்சியத்தைத் தம் கையினலேயே எழுதிக்கொள்ளவாவது வேண்டும், அல்லது பஹிரங்கமான கோர்ட்டில் தாம் சொல்லி எழுதுவிக்கவாவதுவேண்டும். அப்படி எழுதிக்கொள்ளப்பட்ட சகல சாட்சியத்திற்கும் மாஜிஸ்ட்ரேட் கையெழுத்து போடவேண்டும்; அதற்குமேல் அது ரிகார்டில் சேரவேண்டும்.

(2) அப்படி எழுதிக்கொள்ளுகிற சாட்சியத்தைச் சாதாரணமாய் விருத்தாந்தமாக எழுதவேண்டும்; ஆனல் மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றினல், குறித்த யாதொரு சவாலையாவது ஜவாப்பையாவது எழுதலாம், அல்லது எழுதுவிக்கலாம்.

(2-a) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட ஒவ்வொரு கேஸிலும், மாஜிஸ்ட்ரேட் குற்றஞ்சாட்டப்பட்டவன் விமரிசை செய்யப்பட்டதின் சாராம்சத்தை ஒரு யாதாஸ்தாக எழுதவேண்டும். அப்படிப்

பட்ட யாதாஸ்தில் அந்த மாஜிஸ்ட்ரேட் தாமே கையெழுத்து போட்டு அதை ரெகார்டோடு சேர்க்கவேண்டும்.

(3) ஒரே தருணத்தில் 35-வது பிரிவின்படி விதிக்கப்பட்ட சிட்சைகள் ஏககாலத்தில் அனுபவிக்கவேண்டுமென்று உத்தரவுசெய்யப்பட்டிருக்கும் காவல் தண்டனைகளாயிருந்தாலன்றி மற்றப்படி, அந்த சிட்சைகள் இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிற காரியங்களின் பொருட்டு ஒரே சிட்சையாக எண்ணப்படும்.

(4) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லப்பட்டவைகளல்லாத வேறே கேஸுகளிலே, ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டானவர் சாட்சியத்தை ரெகார்ட் செய்வதோ அல்லது குற்றபத்திரிகை தயார் செய்வதோ அவசியமல்ல.

சாட்சிசொல்லுகையில் சாட்சியினுடைய நடத்தையைக் குறித்த விசேஷங்களை எழுதுவது.

363. ஸெஷன் ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது யாதொரு சாட்சியினுடைய வாய்ப்பிறப்பை ரிகார்ட் செய்த பின், அவர் சாட்சி விமரிசை செய்யப்படுங்காலத்திலே அந்தச்சாட்சி நடந்துகொள்வதில் விசேஷமேதாவது தமக்குத் தோற்றினால் அதையும் ரிகார்ட் பண்ணவேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டவனைச் செய்த விமரிசையை இன்னபடி ரிகார்ட் பண்ணுவது.

364. (1) யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாலாவது, ராயல் சார்ட்டரினால் ஸ்தாபிக்கப்பட்ட ஹைகோர்ட் அல்லது வேறே யாதொரு கோர்ட்டாராலாவது, குற்றஞ்சாட்டப்பட்டவன் விமரிசை செய்யப்படும்போதெல்லாம், அப்படிப்பட்ட விமரிசை முழுமையையும் அதில் அவனைக்கேட்ட பிரதி சவாலையும் அவன் சொன்ன பிரதி ஜவாப்பையும், அவனை விமரிசைசெய்த பாஷையிலாவது, அது சாத்தியப்படாவிட்டால், கோர்ட்டில் வழங்குகிற பாஷையிலாவது இங்கிலீஷிலாவது பூர்த்தியாய் ரிகார்ட் பண்ணவேண்டும்; அந்த ரிகார்ட்டை அவனுக்குக் காட்டவாவதுவேண்டும், அல்லது படித்து காட்டவாவதுவேண்டும்; அது எழுதப்பட்ட பாஷை அவனுக்குத் தெரியாவிட்டால், அவனுக்குத்தெரிந்த பாஷையில் அதை அவனுக்குத் தெரிவிக்கவேண்டும்; அவன்சொன்ன ஜவாப்புகளை அவன் விவரித்தாவது பின்னும் வேறே ஜவாப்புகளையாவது சொல்லுவதற்குத் தடங்கலில்லை.

(2) அவன் எதார்த்தமென்று என்னசொல்லுகின்றானோ அதற்கிணங்கப் பூர்த்தியாய் எழுதியானபின்பு, அந்த ரிகார்ட்டிலே குற்ற

ஞ்சாட்டப்பட்டவனும் மாஜிஸ்ட்ரேட் அல்லது அந்தக்கோர்ட் ஜட்ஜாகும் கையெழுத்துப் பண்ணவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டாவது ஜட்ஜாவது தமக்கு முன்பாகத் தமக்குக் கேட்கும்படி விமரிசை எழுதப்பட்டதென்றும், குற்றஞ் சாட்டப்பட்டவன் சொன்னவார்த்தைமூலம் முழுவதும் சரியாய் ரிகார்ட் செய்திருக்கிறதென்றும் கண்டு தம் கைப்பட ஸெர்டிபை பண்ணவேண்டும்.

(3) குற்றஞ்சாட்டப்பட்டவனுடைய விமரிசையை மாஜிஸ்ட்ரேட்டாவது ஜட்ஜாவது தாமே ரிகார்ட்செய்யாத விஷயங்களிலே அவர் விமரிசை நடந்துகொண்டிருக்கையில், கோர்ட்டிலே வழங்குகிற பாஷையிலாவது போதுமானமட்டில் தமக்கு இங்கிலீஷ் தெரிந்திருந்தால் இங்கிலீஷிலாவது அதைக்குறித்து யாதாஸ்து எழுதவேண்டிய கடமையுள்ளவராவார்; அப்படிப்பட்ட யாதாஸ்தை மாஜிஸ்ட்ரேட்டாவது ஜட்ஜாவது தம் கையினாலே எழுதிக் கையெழுத்துப்பண்ணி ரிகார்டில் சேர்க்கவேண்டும். மேற்சொல்லியபடி மாஜிஸ்ட்ரேட்டுக்காவது ஜட்ஜுக்காவது யாதாஸ்து எழுதக்கூடாமையானால், அதைக் குறித்து அவர் முகாந்தரத்தை ரிகார்ட் பண்ணவேண்டும்.

(4) குற்றஞ் சாட்டப்பட்டவனை 263 - வது பிரிவின்படி செய்கிற விமரிசைக்கும் அல்லது யாதொரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட் நடத்துகிற பரிசீலனைக்கும் இந்தப்பிரிவில் சொல்லியிருப்பதெதுவும் சம்பந்தப்படுவதாக எண்ணக்கூடாது.

ஹைகோர்ட்டிலே சாட்சியத்தை ரிகார்ட் பண்ணுவது.

365. ராயல் சார்ட்டரினால் ஸ்தாபிக்கப்பட்ட பிரதி ஹைகோர்ட்டாரும், கோர்ட்டுக்கு முன்பாக வருகிறகேஸுகளிலே சாட்சியத்தை இன்னபடி எழுதிக்கொள்ளவேண்டியதென்று அப்போதைக்கப்போது பொதுவிதிசெய்து நிர்ணயிக்கவேண்டும்; அப்படி நிர்ணயிக்கப்பட்ட விதியை அனுசரித்து சாட்சியத்தை எழுதிக்கொள்ளவேண்டும்.

---

26 - ம் அத்தியாயம்.

தீர்ப்பைக்குறித்து.

தீர்ப்பு சொல்லுகிற விதம்.

366. (1) அசல் விசாரணை அதிகாரஞ் செலுத்துகிற யாதொரு க்ரிமினல் கோர்ட்டிலே ஒவ்வொரு பரிசீலனையிலும் செய்கிற தீர்ப்பை,—

(a) பரிசீலனை முடிந்தபிறகு உடனேயாவது, பிற்பாடு ஒரு காலத்தை நியமித்துக் கட்சிக்காரர்களுக்காகிலும் அவர்களுடைய நியாயவாதிகளுக்காகிலும் அதைப்பற்றித் தெரிவித்து அந்த காலத்திலாவது பஹிரங்கமான கோர்ட்டிலாயினும்,

(b) கோர்ட்டில் வழங்குகிற பாஷையிலாயினும், குற்றஞ்சாட்டப்பட்டவனாவது அவனுடைய நியாயவாதியாவது தெரிந்துக்கொள்ளும் வேறே யாதொரு பாஷையிலாயினும்,

சொல்லவேண்டும், அல்லது அந்தத்தீர்ப்பின் சாராம்சத்தை விவரித்துரைக்கவேண்டும் :

ஆனால், பிராதுபக்கத்தாராவது எதிர்வாதஞ் செய்பவராவது கேட்டுக்கொண்டால், கோர்ட் செய்கிற தலைமை ஜட்ஜானவர் தீர்ப்பு முழுவதையும் வாசித்துக்காட்டவேண்டும்.

(2) தீர்ப்பைக் கேட்பதற்கு, குற்றஞ் சாட்டப்பட்டவன் காவலிலிருந்தால் அவனை எதிரிலே கொண்டுவரவேண்டும்; காவலிலிராவிட்டால் ஹாஜராகும்படி அவனுக்கு உத்தரவு செய்யவேண்டும்; ஆனால், பரிசீலனைக்காலத்தில் அவன் நேரில் ஹாஜராகவேண்டியதில்லையென்று உத்தரவு செய்யப்பட்டிருந்து, சிட்சையானது அபராதமாத்திரம் விதிக்கிறசிட்சையாயிருந்தாலும், அவன் நிரபராதியென்று தீர்மானிக்கப்பட்டாலும், அவனுடைய நியாயவாதியாகிய ப்ளீடருக்கெதிரிலே தீர்ப்பைச் சொல்லலாம்.

(3) யாதொரு க்ரிமினல் கோர்ட்டாரால் இன்ன தினத்தில் அல்லது இடத்தில் தீர்ப்புகொடுக்கப்படுமென்று அறிக்கை செய்யப்பட்டிருந்தும் அந்த தினத்திலோ அல்லது இடத்திலோ யாதொரு கட்சிக்காரனாவது அவனுடைய ப்ளீடராவது வராமற்போன காரணத்தினால் மாத்திரமாகிலும் அந்த தினத்தையும் இடத்தையுங்குறித்த அறிக்கையைக் கட்சிக்காரர்களுக்கோ அவர்களுடைய ப்ளீடர்களுக்கோ அவர்களில் எவருக்கோ சேர்ப்பிக்க விடுபட்டுப்போன காரணத்தினால் மாத்திரமாகிலும் சேர்ப்பிப்பதில் நேரிட்ட குறைவு காரணத்தினால் மாத்திரமாகிலும் மேற்படி தீர்ப்பு செலாவணியாகாததாக எண்ணப்படமாட்டாது.

(4) 537 - வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின் வியாபகத்தை எவ்விதத்திலாவது வரையறுப்பதாக இந்தப்பிரிவிலுள்ள தெதையும் அர்த்தம் பண்ணுவது கூடாது.

367. (1) இந்தச் சட்டத்தில் வெளிப்படையாக வேறே விதமாய்ச் சொல்லியிருக்கிறபடிக்குத் தவிர, அப்படிப்பட்ட பிரதி தீர்ப்பையும் கோர்ட் செய்கிற உத்தியோகஸ்தராவது அல்லது அந்த உத்தியோகஸ்தர் சொல்லி கோர்ட்டில் வழங்குகிற பாஷையிலாவது, இங்கிலீஷிலாவது எழுதவேண்டும்; அது கோர்ட் செய்கிற உத்தியோகஸ்தரால் அவர் கைப்பட எழுதப்படாமலிருந்தால், அப்படிப்பட்ட தீர்ப்பின் ஒவ்வொரு பக்கத்திலும் அவர் கையெழுத்து செய்யவேண்டும்.

தீர்ப்பை எழுத வேண்டிய பாஷை.

மேலும், நிச்சயிப்பதற்கான அம்சம் அல்லது அம்சங்களையும் அவைகளின்மேல் தீர்மானத்தையும், தீர்மானத்திற்குண்டான ஹேதுக்களையும் அதில் எழுதி, அதைச்சொல்லுங் காலத்தில் பஹிரங்கமான கோர்ட்டிலே கோர்ட் செய்கிற உத்தியோகஸ்தர் தேதி போட்டுக் கையெழுத்துப் பண்ணவேண்டும்.

தீர்ப்பில் இன்னதைக் கண்டெழுதுவது.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டால் இன்ன குற்றத்திற்காக அப்படி தீர்மானிக்கப்பட்டானென்றும், இந்தியன் பினல்கோடிலாவது வேறே சட்டத்திலாவதிருக்கிற இன்ன பிரிவுப்படிக்கு அவனப்படி தீர்மானிக்கப்பட்டானென்றும் அவனுக்கு இன்னதண்டனை விதிக்கப்பட்டதென்றும் அதில் கண்டெழுதவேண்டும்.

(3) இந்தியன் பினல் கோடின்படி குற்றஸ்தாபனை செய்யப்பட்டிருந்து, அந்தக் குற்றமானது அந்தக் கோடிலுள்ள இரண்டு பிரிவுகளில் இன்ன பிரிவுக்காவது ஒரே பிரிவின் இரண்டு பாகங்களில் இன்ன பாகத்திற்காவது உட்படுகிறதென்று தெரியாமல் சந்தேகமுண்டானால், அதைக் கோர்ட்டார் பரிஷ்காரமாயெழுதி, இரண்டிலொன்றுக்குத் தீர்ப்புசெய்யவேண்டும்.

இரண்டிலொன்றுக்கு தீர்ப்புசெய்வது.

(4) அது குற்றவாளியல்லவென்கிற விடுதலைத் தீர்ப்பாயிருந்தால், குற்றஞ் சாட்டப்பட்டவன் எந்தக் குற்றத்தைச் செய்தவனல்லவென்று விடுதலைசெய்யப்படுகிறானோ அந்தக் குற்றத்தை அதில் கண்டெழுத வேண்டியதுமல்லாமல், அவனை விட்டுவிடவேண்டியதென்று அதில் உத்தரவு செய்யவும் வேண்டும்.

(5) குற்றஞ் சாட்டப்பட்டவன் மரணதண்டனைக் குட்பட்ட குற்றத்திற்காக குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டு, மரணதண்டனையல்லாத வேறே தண்டனையைக் கோர்ட்டார் அவனுக்கு விதிப்பார்களாகில், கோர்ட்டார் தங்களுடைய தீர்ப்பிலே, ஏன் மரணதண்டனை விதிக்கப்படவில்லையோ அந்த ஹேதுவைக் கண்டெழுத வேண்டும்.

ஆனால், ஜூரிகளைக்கொண்டு நடத்தப்படுகிற பரிசீலனைகளில் கோர்ட்டார் தீர்ப்பு எழுதவேண்டிய அவசியமில்லை; ஆனால், ஜூரிக்குச் சொல்லப்பட்ட கற்பனைகளின் பொருள்களை ஸெஷன் கோர்ட்டார் ரிகார்ட் பண்ணவேண்டும்.

(6) இந்தப் பிரிவின் காரியங்களுக்காக, 118 - வது அல்லது 123 - வது பிரிவின் (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்படுகிற ஒரு உத்திரவு, தீர்ப்பாகவும் எண்ணப்படவேண்டும்.

368. (1) எவனுக்காவது மரணதண்டனை விதிக்கப்பட்டால், அவன் சாகிறவரையில் கழுத்தில் கயிறுமாட்டி அவனைத் தொங்கவிடவேண்டியதென்று அந்த சிட்சையில் உத்தரவுபண்ணவேண்டும்.

மரணதண்டனை.

(2) தன்னீர்மேலேற்றும்படி விதிக்கிற சிட்சையிலே, சிட்சை விதிக்கப்பட்டவனை இன்ன இடத்திற்குக் கொண்டுபோக வேண்டியதென்று குறிக்கக்கூடாது.

தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனை.

369. இந்தக்கோடில் வேறே விதமாய் சொல்லியிருந்தாலும், அல்லது அந்தக் காலத்தில் அமுலிலிருக்கிற வேறே யாதொரு சட்டதிட்டத்தின்படியும், ராயல் சார்ட்டரினாலே ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு ஹைக்கோர்ட்டாரின் விஷயத்திலே, அந்த ஹைக்கோர்ட்டாரின் லெட்டர்ஸ் பேடன்ட் என்னும் அதிகாரப்பத்திரத்தின்படிக் கல்லாமல் மற்றப்படி வேறெந்தக் கோர்ட்டாரும், தங்களுடைய தீர்ப்பில் கையெழுத்து செய்தானபின்பு, எழுத்துப் பிழையைத் திருத்தும் பொருட்டாவது தவிர, அதை மாற்றவுங்கூடாது, புனராலோசனை பண்ணவுங்கூடாது.

தீர்ப்பைக் கோர்ட்டார் மாற்றக்கூடாது.

ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டினுடைய தீர்ப்பு.

370. இதில் முன்னமே சொல்லியிருக்கிற விதமாய்த் தீர்ப்பை ரிகார்ட் செய்யாமல், ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டானவர் அடியில் கண்டிருக்கிற விவரங்களை ரிகார்ட் பண்ணவேண்டும் :

(a) கேஸின் தொடர்ச்சியான நம்பர் ;

(b) குற்றஞ்செய்த தேதி ;

(c) பிராதுக்காரனிருந்தால் அவனுடைய பெயர் ;

(d) குற்றஞ் சாட்டப்பட்டவனுடைய பெயரும் (யுரோப்பியன் ப்ரிடிஷ் குடி விஷயத்தில் தவிர) அவனுடைய தகப்பன் பெயரும் வாசஸ்தலமும் ;

(e) பிராதாவது ருஜுவாவது செய்யப்பட்ட குற்றம் ;

(f) குற்றஞ் சாட்டப்பட்டவனுடைய ப்ளீயும் அவனை விசாரிசை செய்திருந்தால் அதுவும் ;

(g) முடிவான உத்தரவு ;

(h) அப்படிப்பட்ட உத்தரவின் தேதி ;

(i) காவல் தண்டனையாவது இருநூறு ரூபாய்க்கதிகப்பட்ட அபராதமாவது இவ்விரண்டு தண்டனையுமாவது மாஜிஸ்ட்ரேட் விதிக்கிற கேஸுகளிலெல்லாம், குற்ற ஸ்தாபனைக் குண்டான ஹேதுக்களின் சுருக்கம்.

தீர்ப்பைக் குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு விவரமாய்ச் சொல்லுறதும் அதற்கு நகல் கொடுப்பதும்.

371. (1) குற்றஞ் சாட்டப்பட்டவன் மனுசெய்துகொள்வதன்மேல் தீர்ப்புக்கு நகலையாவது, அவன் தர்ஜுமா வேண்டுமென்று கேட்டால், சாத்தியமானபட்சத்தில் அவனுடைய சொந்த பாஷையிலாகிலும், (சாத்தியமில்லாதபட்சத்தில்) கோர்ட்டில் வழங்குகிற பாஷையிலாகிலும் அதன் தர்ஜுமாவையாவது ஆலசியமில்லாமல் அவனுக்குக் கொடுக்கவேண்டும். ஸம்மன் கேஸ் தவிர வேறே யாதொரு கேஸிலே அப்படிப்பட்ட நகலைச் செலவில்லாமல் கொடுக்கவேண்டும்.

(2) ஸெஷன்கோர்ட்டிலே ஜூரியைக்கொண்டு நடத்தப்படுகிற பரிசிலனைகளில் குற்றஞ்சாட்டப்பட்டவன் மனுசெய்துகொள்வதன்மேல், ஜூரிக்குச் சொல்லப்பட்ட கற்பனைகளின் பொருள்களுக்கு நகல் ஆலசியஞ்செய்யாமல் செலவின்றி அவனுக்கு கொடுக்கவேண்டும்.

ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டிருக்கிற கேஸ்.

(3) ஸெஷன் ஜட்ஜானவர் குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு மரணதண்டனைவிதித்தால், அவன் அப்பீல் செய்துகொள்ள விரும்புகிறபட்சத்தில் இன்னகாலத்திற்குள் அவன் அப்பீல் செய்துகொள்ளவேண்டியதென்றுங்கூட அவனுக்கு ஜட்ஜ் சொல்லவேண்டும்.

இன்னபடிக்கானால் தீர்ப்பை தர்ஜுமாசெய்வது.

372. அசல் தீர்ப்பை நடவடிக்கைகளின் ரிகார்ட்டில் சேர்க்கவேண்டும்; கோர்ட்டில் வழங்குகிற பாஷையிலில்லாமல் வேறேபாஷையிலே அசலை ரிகார்ட் செய்திருந்தால், குற்றஞ் சாட்டப்பட்டவன் கேட்டுக்கொள்ளுகிற பட்சத்தில் கோர்ட்டில் வழங்குகிற பாஷையிலே அதற்குத் தர்ஜுமாவை அப்படிப்பட்ட ரிகார்டில் சேர்க்கவேண்டும்.

தீர்மானத்திற்கும் சிட்சைக்கும் நகலை ஸெஷன் கோர்ட்டார் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்புவது.

373. ஸெஷன் கோர்ட்டாரால் பரிசீலனை செய்யப்பட்ட கேஸுகளில், அந்தக் கோர்ட்டார் தாங்கள்செய்கிற தீர்மானத்திற்கும் சிட்சை விதித்தால் அதற்கும் ஒரு நகலெழுதி அதை, யாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் பரிசீலனை நடத்தப்பட்டதோ அந்த டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பவேண்டும்.

27-ம் அத்தியாயம்.

ஊர்ஜ்ஜிதம் செய்யப்படுவதற்காகச் சிட்சைதீர்ப்புகளை அனுப்புவதைக்குறித்து.

மரண தண்டனைத்தீர்ப்பை ஸெஷன் கோர்ட்டார் அனுப்புவது.

374. ஸெஷன் கோர்ட்டார் மரணதண்டனைவிதித்தால், நடவடிக்கைகளை ஹைக்கோர்ட்டாருக்கு அனுப்பவேண்டியதுமல்லாமல், சிட்சையை ஹைக்கோர்ட்டாரால் ஊர்ஜ்ஜிதஞ் செய்யப்படாதிருக்கையிலே நிறைவேற்றவுங்கூடாது.

375. (1) அப்படிப்பட்ட நடவடிக்கைகள் அனுப்பப்பட்ட போது, குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டவன் குற்றவாளி அல்லது குற்றவாளியல்லவென்பதைச்சேர்ந்த யாதொரு அம்சத்தைக்குறித்து இன்னும் விசாரிக்கவேண்டியதாகவாகிலும் இன்னும் சாட்சியம் கேட்கவேண்டியதாகவாகிலும் ஹைகோர்ட்டாருக்குத் தோற்றினால், அந்தக்கோர்ட்டார் தாங்களே அப்படிப்பட்ட விசாரணையைச் செய்யலாம் அல்லது சாட்சியத்தை வாங்கலாம், அல்லது ஸெஷன் கோர்ட்டாரை அப்படிச் செய்யும்படி உத்தரவுபண்ணலாம்.

இன்னும் விசாரணை நடத்தும்படியாவது இன்னும் சாட்சியம் வாங்கும்படியாவது உத்தரவுசெய்ய அதிகாரம்.

(2) ஜூரர்கள் அல்லது அஸெஸர்களுக்கெதிரிலே அப்படிப்பட்ட விசாரணை நடத்தவும்படாது, சாட்சியம் கேட்கவும்படாது; மேலும், ஹைகோர்ட்டார் வேறே விதமாய் உத்தரவுசெய்தாலொழிய, இன்னும் விசாரணை நடத்துகையிலாகிலும் சாட்சியங் கேட்கையிலாகிலும் குற்றவாளி வந்திருக்கவேண்டியதில்லையென்று உத்தரவு செய்யலாம்.

(3) ஹைகோர்ட்டார் அப்படிப்பட்ட ஏதாவது விசாரணையைச் செய்யாமலும் சாட்சியத்தைக் கேட்காமலுமிருந்தால், அப்படி விசாரணைசெய்ததனாலும் சாட்சியங் கேட்டதனாலும் தேறுகடையான சங்கதியை எழுதி ஸர்ட்டிபைசெய்து அந்தக்கோர்ட்டாருக்கு அனுப்பவேண்டும்.

376. அஸெஸர்களுடைய சகாயத்தைக் கொண்டு பரிசீலனை செய்யப்பட்டதாயிருந்தாலும், ஜூரியைக்கொண்டு பரிசீலனை செய்யப்பட்டதாயிருந்தாலும், 374-வது பிரிவின்படி அனுப்பப்பட்ட யாதொரு கேஸிலே ஹைக்கோர்ட்டார்.—

சிட்சையை வர்ஜ்ஜிதப் படுத்துவதற்காவது குற்றத்தின் தீர்மானத்தை ரத்து செய்வதற்காவது ஹைக்கோர்ட்டாருக்குள்ள அதிகாரம்.

(a) சிட்சையை வர்ஜ்ஜிதமாவது செய்யலாம், அல்லது சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வேறே யாதொரு சிட்சையையாவது விதிக்கலாம், அல்லது

(b) குற்றத்தின் தீர்மானத்தை ரத்துசெய்து குற்றஞ் சாட்டப்பட்டவனை எதைக்குறித்து ஸெஷன் கோர்ட்டார் குற்

றவாளியென்று தீர்மானித்திருக்கலாமோ அப்படிப்பட்ட யாதொரு குற்றத்தைக்குறித்து அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம், அல்லது அதே குற்றச்சாட்டின்மேலாவது திருத்தப்பாடான குற்றச்சாட்டின்மேலாவது மறுபடியும் வேறே பரிசிலனை நடத்தும்படி உத்தரவுசெய்யலாம், அல்லது

(c) குற்றஞ் சாட்டப்பட்டவனை குற்றவாளியல்லவென்று விடுதலைசெய்யலாம்.

ஆனால், அப்பீல் செய்வதற்குக் கொடுக்கப்பட்ட காலம் கழிகிறவரையிலாவது, அந்த காலத்திற்குள் அப்பீல் செய்யப்பட்டிருந்தால் அந்த அப்பீல் பைசலாகிறவரையிலாவது, இந்தப் பிரிவின்படி ஊர்ஜ்ஜிதஞ் செய்யும்படியான உத்தரவைப் பிறப்பிக்கக்கூடாது.

சிட்சையை ஊர்ஜ்ஜிதம் பண்ணுவதிலாவது வேறே சிட்சை விதிப்பதிலாவது இரண்டு ஜட்ஜுகள் கையெழுத்துப் பண்ணுவது.

377. அப்படி அனுப்பப்பட்ட பிரதி கேஸிலும், ஹைகோர்ட்டார் சிட்சையை ஊர்ஜ்ஜிதம் பண்ணினாலும், வேறே யாதொரு சிட்சை விதித்தாலும் உத்தரவு பிறப்பித்தாலும், அப்படிப்பட்டதை, அந்தக்கோர்ட்டில் இரண்டு அல்லது பல ஜட்ஜுகள் கூடியிருந்தால் அவர்களில் குறைந்தது இரண்டுபேர் தீர்மானித்து அதில் கையெழுத்துப் பண்ணவேண்டும்.

அபிப்பிராயம் வேறுபட்டால் நடவடிக்கை.

378. அப்படிப்பட்ட யாதொரு கேஸ் ஜட்ஜுகளின் சபையில் விசாரணை செய்யப்பட்டு, அந்த ஜட்ஜுகள் அபிப்பிராயத்தில் சமமாக வேறுபட்டால், அந்தக் கேஸை அவர்களுடைய அபிப்பிராய சகிதமாய் வேறொரு ஜட்ஜினுடைய பார்வைக்கு வைக்கவேண்டும்; அந்த ஜட்ஜானவர் தமக்கு யுக்தமாகதோற்றுகிறபடி விமரிசையும் விசாரணையும் செய்த பின்பு தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டும்; அந்த அபிப்பிராயத்தை அனுசரித்துத் தீர்ப்பாவது உத்தரவாவது பிறப்பிக்கவேண்டும்.

சிட்சையை ஊர்ஜ்ஜிதஞ்செய்ய

379. ஸெஷன் கோர்ட்டாரால் விதிக்கப்பட்ட மரணதண்டனையை ஹைக்கோர்ட்டாரின் ஊர்ஜ்ஜிதத்திற்கு தெரியப்படுத்தின கேஸுகளில், ஹைக்கோர்ட்டாரால்

ஹைகோர்ட்டாருக்கு அனுப்பியபின்பேரில் நடவடிக்கை.

மரண தண்டனையை ஊர்ஜிதம்செய்தோ அல்லது வேறே விதமாய் மாற்றியோ செய்கிற உத்திரவு பிறப்பித்த உடனே, ஹைகோர்ட்டின் பிரதான உத்தியோகஸ்தர் அந்த உத்திரவுக்கு நகலொன்று தயார்செய்து அதில் கோர்ட்டு முத்திரையும், தம் கையெழுத்தும் உத்தியோகப் பெயரும்போட்டு காலஹரணமின்றியில் ஸெஷன் கோர்ட்டாருக்கு அனுப்பவேண்டும்.

562-வது பிரிவின்படி பிரார்த்திக்க அதிகாரம் கொடுக்கப் பெற்றிராத மாஜிஸ்ட்ரேட் அனுப்பிய கேஸுகளில் நடவடிக்கை.

380. 562-வது பிரிவினால் நிபந்தனை கண்டிருக்கிறபடி முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்காவது ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது நடவடிக்கைகள் அனுப்பப்படுகிற விஷயத்திலே, அதன்மேல் அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர்-தம்மால் அந்த கேஸ் பிரதமத்தில் விசாரிக்கப்பட்டிருந்தால் தாம் என்ன சிட்சை விதித்திருப்பாரோ அல்லது என்ன உத்தரவு பிறப்பித்திருப்பாரோ அதே சிட்சையை விதிக்கலாம் அல்லது அதே உத்தரவைச் செய்யலாம்; மேலும் யாதொரு விஷயத்தைக்குறித்து இன்னும் விசாரணையாவது அதிக சாட்சியமாவது அவசியமென்று அவருக்குத் தோற்றினால், அவர் தாமே அப்படிப்பட்ட விசாரணையைச்செய்யலாம், அல்லது சாட்சியங்கேட்கலாம், அல்லது அப்படிப்பட்ட விசாரணை செய்யும்படிக்காகிலும் சாட்சியங் கேட்கும்படிக்காகிலும் உத்தரவு பண்ணலாம்.

---

28 - ம் அத்தியாயம்.

நிறைவேற்றுதலைக் குறித்து.

376-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவை நிறைவேற்றுவது.

381. ஸெஷன் கோர்ட்டாரால் விதிக்கப்பட்ட மரணதண்டனையானது ஊர்ஜிதமாகும்படி ஹைகோர்ட்டாருக்கனுப்பப்பட்டால் அந்த ஸெஷன் கோர்ட்டார் ஊர்ஜிதம்பண்ணுகிற உத்தரவையாவது அதன்மேல் ஹைகோர்ட்டாரால் செய்யப்பட்ட வேறே உத்தரவையாவது வரப்பற்றிக்கொள்வதன்மேல் வாரன்ட் பிறப்பிப்பதனாலாகிலும் அவசியமான வேறே வகைகள் செய்வதனாலாகிலும் அந்த உத்தரவை நிறைவேற்றுவிக்கவேண்டும்,

382. மரண தண்டனை விதிக்கப்பட்ட ஸ்திரி கர்ப்பமுள்ளவளாகக் காணப்பட்டால், ஹைக்கோர்ட்டார் அந்தச் சிட்சையை நிறைவேற்றாமல் நிறுத்திவைக்கும்படி உத்தரவு செய்யவேண்டும்; மேலும், தங்களுக்கு யுக்தமாகத்தோற்றினால், அதற்குப் பார்த்தியாக ஆயுள்பரியந்தம் தண்ணீர்மேலேற்றும்படியான சிட்சை விதித்தாலும் விதிக்கலாம்.

கர்ப்ப ஸ்திரிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை நிறுத்திவைப்பது.

383. 381-வது பிரிவில் சொல்லியிருக்கிற கேஸுகள் தவிர மற்றக் கேஸுகளில், குற்றஞ்சாட்டப்பட்டவனுக்குத் தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனையாவது காவல் தண்டனையாவது விதிக்கப்படுகிறபட்சத்தில், அந்தச் சிட்சையை விதிக்கிற கோர்ட்டார்-அவனை அடைத்துவைத்திருக்கும் அல்லது அடைத்துவைக்கப்போகும் ஜெயிலுக்கு உடனே வாரன்டை அனுப்பவேண்டும்; மேலும், குற்றஞ் சாட்டப்பட்டவன் அந்த ஜெயிலில் முன்னமேயே அடைத்து வைக்கப்பட்டிருந்தாலொழிய, அந்த வாரன்டுடனே அவனை அந்த ஜெயிலுக்கனுப்பவேண்டும்.

மற்றக் கேஸுகளிலே தண்ணீர் மேலேற்றும் படியான அல்லது காவலில் வைக்கும்படியான சிட்சைகளை நிறைவேற்றுவது.

384. காவலில் வைக்கும்படியான சிட்சையை நிறைவேற்றுவதைக் குறித்த பிரதி வாரன்டையும், எவ்விடத்தில் கைதி அடைத்து வைக்கப்பட்டிருக்கிறானோ அல்லது அவனை அடைத்துவைக்கவேண்டியதோ அந்த ஜெயிலையாவது வேறே இடத்தையாவது தம் வசத்தில் வைத்துக்கொண்டிருக்கிற உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டும்.

நிறைவேற்றுவதைக்குறித்த வாரன்டை இன்னொருபேருக் கனுப்புவது.

385. கைதியை ஜெயிலிலடைக்க வேண்டியதாயிருந்தால், அந்த வாரன்டை ஜெயிலரிடத்தில் ஒப்பிக்கவேண்டும்.

வாரன்டை இன்னொரிடத்தில் ஒப்பிப்பது.

386. (1) யாதொரு குற்றவாளி அபராதஞ் செலுத்தும்படி சிட்சை விதிக்கப்படுவானாகில், அந்தச் சிட்சை விதிக்கிற கோர்ட்டார் அந்தத் தொகையை அடியில்கண்ட வகைகளில் ஒன்றின்படிக்காவது அல்

அபராதத்தை வசூல் செய்வதற்கு வாரன்ட்.

லது இந்த வகைகளிலாவது வசூல்பண்ணுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்; அவையாவன—

(a) குற்றவாளியினுடையதாயிருக்கிற யாதொரு அசையும் பொருளை ஜப்திசெய்து விற்று அந்தத் தொகையை வசூல் பண்ணும்படி ஒரு வாரன்ட் பிறப்பிக்காவது,

(b) பாக்கிதாரனுடையதாய் இருக்கிற அசையும்பொருள் அல்லது அசையாப்பொருள் அல்லது இவை இரண்டையும் ஸிவில் முறையை அனுசரித்து அந்த அபராதத்தொகையை வசூல் பண்ணும்படி அந்த ஜில்லா கலெக்டருக்கு அதிகாரம் கொடுத்த ஒரு வாரன்டை அவருக்குப் பிறப்பிக்கவாவதுவேண்டும்.

ஆனால், அபராதம் செலுத்தப்படாவிட்டால், குற்றவாளியை காவலில் வைக்கவேண்டியதென்று சிட்சையில் உத்திரவு செய்திருந்து, அதைச் செலுத்தாததினாலே அந்தக் குற்றவாளி காவல் தண்டனையை முழுவதும் அனுபவித்திருந்தால், அந்தக்கோர்ட்டார், விசேஷ காரணங்களிருந்தால் எழுதி ரெகார்ட்செய்து, அப்படிப்பட்ட வாரன்டை பிறப்பிக்கவேண்டியது அவசியமென்று தீர்மானித்தாலொழிய, அந்த வாரன்டைப் பிறப்பிக்கக்கூடாது.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்படும் வாரன்டுகளை நிறைவேற்றவேண்டிய விதத்தைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காகவும், அப்படிப்பட்ட வாரன்டை நிறைவேற்றுகையில் ஜப்திசெய்யப்பட்ட எந்த சொத்தின் விஷயமாகவாகிலும் குற்றவாளியைத் தவிர வேறே யாதொரு நபரால் செய்யப்படும் எவையேனும் தாவாக்களைச் சுருக்கவகையாய்த் தீர்மானிப்பதற்காகவும் பிரதேச கவர்ன்மென்டார் விதிகள் செய்யலாம்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின் (b) பகுதியின்படி கோர்ட்டார் அந்த ஜில்லா கலெக்டருக்கு ஒரு வாரன்ட் பிறப்பித்தால், அப்படிப்பட்ட வாரன்டை 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் தாத்பரியப்படி ஒரு டிக்ரியாகவும் அப்படிப்பட்ட கலெக்டரை டிக்ரிபெற்றவராகவும் எண்ணவேண்டும்; மேலும், அதை அதே தொகைக்கான யாதொரு டிக்ரியை அதிசப்பத்திலுள்ள எந்த ஸிவில் கோர்ட்டார் நிறைவேற்றக்கூடுமோ அந்தக் கோர்ட்டார் நிறைவேற்றுவது

மல்லாமல் டிக்ரிகள் நிறைவேற்றப்படுவதைக் குறித்து அந்தக்கோடு லுள்ள நிபந்தனைகளெல்லாம் அப்படியே பிரயோகப்படும்.

ஆனால், அப்படிப்பட்ட எந்த வாரண்டையும், குற்றவாளியை ஜெயில் காவலில் வைப்பதினால் நிறைவேற்றக்கூடாது.

அப்படிப்பட்ட வாரண்டினால் இன்னதாகுமென்பது.

387. 386-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின் (a) பகுதியின்படி யாதொரு கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்ட ஒரு வாரன்டை அந்தக் கோர்ட்டாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் நிறைவேற்றலாம்; மேலும், அப்படிப்பட்ட எல்லைக்கு வெளியிலிருக்கிற அப்படிப்பட்ட யாதொரு பொருள் யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் அகப்படுகிறதோ அந்த டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினாலாவது பிரதான ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டினாலாவது என்டார்ஸ் செய்யப்படுமாகில், அப்படிப்பட்ட சொத்தை ஐப்தி செய்து விற்பதற்கு அதனாலே அதிகாரமுண்டாகும்.

காவல்தண்டனையை நிறைவேற்றுவதை நிறுத்திவைப்பது.

388. (1) யாதொரு குற்றவாளி அபராதம் செலுத்தும்படி மாத்திரம் சிட்சை விதிக்கப்பட்டும் அந்த அபராதத்தைச் செலுத்தாவிட்டால் அவன் காவலில் வைக்கப்படுவானென்று சிட்சை விதிக்கப்பட்டுமிருந்து, அபராதம் உடனே செலுத்தப்படாத பட்சத்தில், கோர்ட்டார்—

(a) உத்தரவு பிறப்பித்து, பேற்படி அபராதமானது அந்த உத்தரவின் தேதியிலிருந்து முப்பது தினங்களுக்கு மேற்படாத ஒரு தேதியன்றைக்காகிலும் அதற்கு முன்னதாகவாகிலும் மொத்தமாகச் செலுத்தப்பட வேண்டுமென்றாவது அடியிற்கண்டபடி இரண்டு அல்லது மூன்று தவணைகளாகச் செலுத்தப்படவேண்டுமென்றாவது அதில் காணலாம்; மேற்படி தவணைகளில் முதல் தவணைத் தொகையானது உத்தரவின் தேதியிலிருந்து முப்பது தினங்களுக்கு மேற்படாத ஒரு தேதியன்றைக்கும் அல்லது அதற்கு முன்பும் மற்ற தவணைத்தொகை அல்லது தொகைகள் சந்தர்ப்பத்துக்கேற்றபடி முப்பது தினங்களுக்கு மேற்படாமல் இடைக்காலம் அல்லது இடைக்காலங்கள் விட்டும் செலுத்தப்படத்தக்கவையாகும்; மேலும்,

(b) காவல் தண்டனையை நிறைவேற்றுவதை நிறுத்திவைத்து, சந்தர்ப்பத்துக்கேற்றபடி அபராதத்தையாவது அதன் தவணைத் தொகைகளையாவது எந்தத் தேதி அல்லது தேதிகளிலாகிலும் அவைகளுக்குமுன்பாகிலும் செலுத்தவேண்டுமோ அந்தத் தேதி அல்லது தேதிகளில் கோர்ட்டாருக்கு முன்பாகக் குற்றவாளி ஹாஜராவதற்காக ஷரத்து கண்டு, தங்களுக்கு யுக்தமாய்த் தோற்றுகிறபடி ஜாமீன்தாரர்கள் சகிதமாகவாயினும் ஜாமீன்தாரர்கள் இல்லாமலாயினும் அவன் முச்சலிக்கா எழுதிக்கொடுப்பதன்மேல் அவனை விட்டுவிடலாம்; மேலும், அவர்கள் சந்தர்ப்பத்துக் கேற்றபடி அபராதத் தொகையாவது யாதொரு தவணைத்தொகையாவது பிரஸ்தாப உத்தரவின்படி செலுத்தப்படத்தக்கதாகிற கடைசி தேதியன்றைக்காகிலும் அதற்கு முன்பாகிலும் வசூலாகாதிருக்கிற பட்சத்திலே, காவல் தண்டனையை உடனே நிறைவேற்றிவைக்கும்படி கட்டளையிடலாம்.

(2) தொகை செலுத்தும்படி உத்தரவு செய்யப்பட்டிருந்து அது வசூலாகாத பட்சத்தில் காவல் தண்டனை விதிக்கப்படக்கூடிய யாதொரு விஷயத்தில் அந்தத் தொகை உடனே செலுத்தப்படாமலிருக்குமானால், அப்படிப்பட்ட யாதொரு விஷயத்திலுங்கூட (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படத் தக்கவையாகும்; மேலும், மேற்படி உத்தரவு யார் விஷயமாய்ச் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த நபர் அந்த உட்பிரிவில் குறிப்பிட்டபடிக்குள்ள முச்சலிக்கா எழுதிக்கொடுக்கும்படி உத்தரவு செய்யப்படுவதன்மேல், அந்தப்படி செய்யத் தவறிப்போனால், கோர்ட்டார் உடனே காவல் தண்டனை விதித்துவிடலாம்.

இன்னார் வாரண்ட் பிறப்பிக்கலாமென்பது.

389. யாதொரு சிட்சை நிறைவேறுதலைக் குறித்துப் பிரதிவாரன்டையும், சிட்சை விதித்த ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது உத்தியோகத்தில் அவருக்குப் பர்த்திபாக வருகிறவராவது பிறப்பிக்கலாம்.

அபதண்டனையாத்திரம் விதிக்கும்படியான சிட்சையை நிறைவேற்றுவது.

390. குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு அபதண்டனை மாத்திரம் விதிக்கப்பட்டால், அந்தச் சிட்சையைக் கோர்ட்டார் நியமிக்கிற இடத்தில்

உத்தரவுசெய்கிற காலத்திலே 391 - வது பிரிவின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிறைவேற்றவேண்டும்.

காவல் தண்டனையோடுகூட அடி தண்டனையும் விதிக்கப்பட்டால் அதை நிறைவேற்றுவது.

391. (1) (a) அடி தண்டனைமட்டும் விதிக்கப்பட்டு கோர்ட்டார் உத்திரவிடுகிற அந்தந்தக் காலத்திலேயும் இடத்திலேயும் தான் ஹாஜராவதற்காக கோர்ட்டாருக்கு திருப்திகரமான ஜாமீன் கொடுத்தாலும், அல்லது

(b) காவல் தண்டனையோடுகூட அடி தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தாலும்,

அந்த அடி தண்டனையை அப்படிப்பட்ட சிட்சைத் தீர்ப்பு தேதிமுதல் பதினைந்துநாள் வரையில் நிறைவேற்றக்கூடாது; அந்தகாலத்திற்குள் அப்பீல் செய்யப்பட்டால், அந்த சிட்சைத் தீர்ப்பு அப்பீல் கோர்ட்டாரால் ஊர்ஜ்ஜிதம் செய்யப்படுகிறவரையில் நிறைவேற்றக்கூடாது: ஆனால், அந்த பதினைந்துநாள் கழிந்தபின்பு கூடுமான சீக்கிரத்திலாவது, அப்பீல் செய்யப்பட்டால், அந்தச்சிட்சைத் தீர்ப்பை ஊர்ஜ்ஜிதஞ் செய்த அப்பீல் கோர்ட்டார் அனுப்புகிற உத்தரவை வரப்பற்றிக் கொண்ட பின்பு கூடுமான சீக்கிரத்திலாவது அந்த அடி தண்டனையை நிறைவேற்றிவிடவேண்டும்.

(2) அடி தண்டனையை ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது தமக்கெதிரிலே நிறைவேற்றும்படி உத்தரவு செய்தாலொழிய, அந்தத்தண்டனையை ஜெயில் விசாரணை உத்தியோகஸ்தருக்கெதிரில் நிறைவேற்றவேண்டும்.

(3) குற்றஞ்சாட்டப்பட்டவன் விதிக்கப்பெற்ற காவல்தண்டனையின் காலவரையறை மூன்று மாதத்திற்குக் குறைந்திருக்குமானால், காவல் தண்டனையோடுங்கூட அடி தண்டனையும் அவனுக்கு விதிக்கக் கூடாது.

அடி தண்டனையைச் செய்கிறவிதம்.

392. (1) பதினாறு வயதாவது அதற்கு மேற்பட்ட வயதாவதுடையவன் விஷயத்தில், எவ்விதமாய் அந்த நபரின் உடம்பில் எந்தப்பக்கத்திலே அடிக்கும்படி அவ்வவ்விடத்தில் கவர்ன்மெண்டார் உத்தரவுசெய்கிறார்களோ அந்தப்படியே அரை அங்குலத்திற்குக்குறையாத (diameter) குறுக்களவுள்ள மெலீசு பிரம்பினால் அடி தண்டனையை நிறைவேற்றவேண்டும்; பதினாறு வயதிற்குட்பட்டவன்

விஷயத்திலே, எவ்விதமாய் உடம்பின் எந்தப் பாகத்திலே என்னகருவியைக்கொண்டு அடிக்கும்படி அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் உத்தரவு செய்கிறார்களோ அந்தப்படியே சிட்சிக்கவேண்டும்.

(2) எந்த விஷயத்திலும் அந்தத் தண்டனை முப்பது அடிக்கு அதிகப்படக்கூடாது. மேலும், பதினாறு வயதுக்குட்பட்டவன் விஷயத்திலே மேற்படி தண்டனை பதினைந்து அடிக்கு மேற்படக்கூடாது.

அடி தண்டனை இவ்வளவிற் கதிகப்படக் கூடாது.

393. அடிக்கும்படியான சிட்சையைப் பொறுத்துப் பொறுத்துப் பலதடவைகளாக நிறைவேற்றக்கூடாது: அடியில் கண்டிருக்கிறவர்களொவருக்கும் அடி தண்டனை விதிக்கக்கூடாது.

அடிப்பதைப்பொறுத்துப் பொறுத்துச் செய்யக்கூடாது.

இன்னாரை அடிக்கக்கூடாது.

(a) ஸ்திரீகள்.

(b) மரணதண்டனையாவது தன்னீர்மேலேற்றும்படியான தண்டனையாவது சிட்சை ஊழியமாவது ஐந்து வருஷத்திற்கு மேற்பட்ட காலத்திற்குக் காவல் தண்டனையாவது விதிக்கப்பட்ட புருஷர்கள் ;

(c) நாற்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டவர்களென்று கோர்ட்டார் எண்ணுகிற புருஷர்கள்.

394. (1) வைத்திய உத்தியோகஸ்தர் ஹாஜரிருந்தால் அவர் அடி தண்டனையைத் தாங்குவதற்குக் குற்றவாளி ஆரோக்கியமான ஸ்திதியிலிருக்கிறானென்று ஸெர்ட்டிபை செய்யாவிட்டாலும், வைத்திய உத்தியோகஸ்தர் ஹாஜரில்லாவிட்டால், ஹாஜராயிருக்கிற உத்தியோகஸ்தர் அல்லது மாஜிஸ்ட்ரேட்டுக்கு அந்தப்படி குற்றவாளி ஆரோக்கியமாயிருக்கிறானென்று தோற்றாவிட்டாலும் அடி தண்டனையை நிறைவேற்றக்கூடாது.

குற்றவாளி ஆரோக்கியமாயிராவிட்டால் அடிக்கக் கூடாது.

(2) அடி தண்டனையை நிறைவேற்றிக்கொண்டிருக்கையில் அந்தத்தண்டனையில் மிகுதியைத் தாங்குவதற்குக் குற்றவாளி ஆரோக்கியமான ஸ்திதியில் இருக்கவில்லையென்று வைத்திய உத்தியோகஸ்தர் ஸெர்ட்டிபை செய்தாலும், ஹாஜராயிருக்கிற உத்தியோகஸ்

தர் அல்லது மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோற்றினாலும், அடிப்பதை மூடிவாய் நிறுத்திவிடவேண்டும்.

395. (1) அடி தண்டனையானது முழுவதுமாகிலும் கொஞ்சமாகிலும் நிறைவேறாமல் 394-வது பிரிவின்படி தடைபடுகிற யாதொரு விஷயத்திலும், சிட்சைத் தீர்ப்புசெய்த கோர்ட்டார் அதை மறுபடி பரிசோதிக்கிறவரையிலே குற்றவாளியைக் காவலில் வைத்திருக்கவேண்டும்; மேற்படி கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால், அப்படிப்பட்ட தண்டனையை மன்னிக்கலாம்; அல்லது அடி தண்டனைக்குப் பர்த்தியாகவாவது அடி தண்டனையில் எவ்வளவு நிறைவேறாதிருக்கிறதோ அதற்குப் பர்த்தியாகவாவது அதே குற்றத்திற்காகக் குற்றவாளிக்கு விதித்திருக்கும்படியான வேறே யாதொரு தண்டனையோடுகூட, பன்னிரண்டுமாதத்திற்கதிகப்படாமல் எவ்வளவு காலத்திற்காவது காவல் தண்டனையாகிலும் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமாகிலும் அவனுக்கு விதிக்கலாம்.

394-வது பிரிவின்படி தண்டனை விதிக்கக்கூடாவிட்டால் நடவடிக்கை.

(2) அந்தக் குற்றவாளி சட்டப்படி உள்ளாகிற அல்லது விதிப்பதற்குக் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிற காலத்துக்கு மேற்பட்ட யாதொரு காலத்துக்குக் காவல்தண்டனையாவது, அந்தப்படி உள்ளாகிற அல்லது அதிகாரமிருக்கிற தொகைக்கு மேற்பட்ட தொகையளவுக்கு அபராதமாவது விதிக்க அந்தக் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டாவதாக இந்தப்பிரிவிற் சொல்லியிருப்பதைக்கொண்டும் எண்ணக்கூடாது.

369. (1) தப்பித்துக்கொண்டு ஓடிப்போன யாதொரு குற்றவாளிக்கு இந்தச் சட்டப்படி சிட்சை விதிக்கப்பட்டால், அப்படிப்பட்ட சிட்சை மரண தண்டனையாயிருந்தாலும், அபராதமாயிருந்தாலும் அடி தண்டனையாயிருந்தாலும், இதில் முன்னமே சொல்லியிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு அது உடனே நிறைவேறவேண்டும்; காவல் தண்டனையாயிருந்தாலும் சிட்சை ஊழியமாயிருந்தாலும் தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனையாயிருந்தாலும், அடியிற்கண்ட விதிகளின்படி அது நிறைவேறவேண்டும்; அவையாவன:—

தப்பித்துக்கொண்டு ஓடிப்போன குற்றவாளிகள் மேல் சிட்சையை நிறைவேற்றுவது.

(2) புது தண்டனையானது - அந்தக் குற்றவாளி தப்பித்துக் கொண்ட காலத்தில் அவன் அநுபவித்துக்கொண்டிருந்த தண்டனையைவிட அதிக கடுமையாயிருந்தால், அந்தப் புது தண்டனை உடனே நிறைவேறவேண்டும்.

(3) புது தண்டனையானது குற்றவாளி தப்பித்துக்கொண்ட காலத்தில் அவன் அநுபவித்துக்கொண்டிருந்த தண்டனையைவிட அதிக கடுமையாயிராவிட்டால், அவன் தப்பித்துக்கொண்டு ஓடிப்போன காலத்தில் அவனுடைய முன்னைய தண்டனையில் எவ்வளவு காலம் முடியாமலிருக்கிறதோ அவ்வளவு காலம் வரையிலே, அது காவலோ, சிட்சை ஊழியமோ அல்லது தண்ணீர்மேலேற்றுவதோ அதை அவன் அநுபவித்த பின்பு அந்தப் புது தண்டனை நிறைவேற வேண்டும்.

விவரணம் :—இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிற காரியங்களின் பொருட்டு—

(a) தண்ணீர்மேலேற்றுவது அல்லது சிட்சை ஊழியமாகிய தண்டனையானது காவல் தண்டனையைவிட அதிக கடுமையானதாக எண்ணப்படும்;

(b) தனிக்காவலோடுகூடிய காவல் தண்டனையானது தனிக் காவலில்லாத அதேமாதிரியான காவல் தண்டனையைவிட அதிக கடுமையானதாக எண்ணப்படும்;

(c) கடுங்காவல் தண்டனையானது தனிக்காவலோடாகிலும் தனிக்காவலில்லாமலாகிலு மிருக்கிற வெறுங்காவல் தண்டனையைவிட அதிக கடுமையானதாக எண்ணப்படும்.

வேறொரு குற்றத்திற்காக முன்னமேய்ச் சிட்சை விதிக்கப்பட்ட குற்றவாளியின்மேல் விதிக்கிற வேறு சிட்சை.

397. காவல் தண்டனையையாவது சிட்சை ஊழியத்தையாவது தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனையையாவது முன்னமேயே அநுபவித்துக்கொண்டிருக்கிறவனுக்கு, காவல் தண்டனையாகிலும் சிட்சை ஊழியமாகிலும் தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனையாகிலும் விதிக்கப்பட்டால், அந்தக் காவல் தண்டனையாவது சிட்சை ஊழியமாவது தண்ணீர்மே லேற்றும்படியான தண்டனையாவது, பிற்பாடு விதிக்கப்படும் தண்டனையை மேலே கண்டபடி முன்னமே விதிக்கப்பட்ட தண்டனையோடுகூட ஏககாலத்தில் அநுபவித்து வரவேண்டுமென்று கோர்ட்டார் கட்டளையிட்டாலன்றி மற்றப்படி, அவனுக்கு

முன்னதாய் விதிக்கப்பட்டிருக்கிற காவல் தண்டனை-சிட்சை ஊழியம் அல்லது தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனை முடிந்தவுடனே ஆரம்பிக்கவேண்டும்;

ஆனால், அவன் காவல்தண்டனை அனுபவித்துக்கொண்டிருந்து, பின்னிட்ட அப்படிப்பட்ட குற்றஸ்தாபனையைப்பற்றிய சிட்சையானது தண்ணீர்மேலேற்றுவதாக இருக்குமாகில், கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத்தோற்றினால், பின்சொல்லிய சிட்சையானது உடனேயாகிலும், அவனுக்கு முந்தி விதிக்கப்பட்டிருக்கிற காவல் தண்டனை முடிந்தவுடனேயாகிலும் ஆரம்பிக்கவேண்டியதென்று உத்தரவு செய்யலாம்.

மேலும் யாதொரு நபர் 123-வது பிரிவின்படி ஜாமீன் சவதரிக்கத் தவறியதனால் காவல் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று உத்திரவு செய்யப்பட்டு, அப்படிப்பட்ட தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கையிலேயே, அந்த உத்திரவு செய்யப்படுவதற்கு முன்னமே செய்யப்பட்ட யாதொரு குற்றத்திற்காக காவல் தண்டனை விதிக்கப்பட்டால், பின் சொல்லிய தண்டனையை உடனே நிறைவேற்ற ஆரம்பிக்கவேண்டும்.

396, 397-வது பிரிவுகளுக்குத்தொடர்பான நிபந்தனைகள்.

398. **(1)** யாவனொருவன் முந்திய அல்லது பிந்திய குற்றஸ்தாபனையைப்பற்றி உள்ளாயிருக்கிற தண்டனையில் எவ்வளவையாவது அவனுக்கு மன்னிக்கிறதாக 396 அல்லது 397 - வது பிரிவிலுள்ள தேதனுலும் என்னக்கூடாது.

(2) காவல்தண்டனை விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றத்திற்காக (substantive) பிரதம காவல்தண்டனையோடாவது தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனை அல்லது சிட்சை ஊழியத்தோடாவது, அபராதம் செலுத்தப்படாதபட்சத்தில் காவல்தண்டனை விதிக்கப்படுமென்று ஒரு தண்டனை சேர்க்கப்பட்டிருந்து, மேற்சொல்லிய தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கிறவன் இன்னும் விதிக்கப்பட்ட பிரதம சிட்சை அல்லது சிட்சைகளாகிய காவல்தண்டனை தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனை அல்லது சிட்சை ஊழியத்தை மேற்சொல்லிய தண்டனை நிறைவேறின பின்பு அனுபவிக்கவேண்டியவனாயிருந்தால், இன்னும் விதிக்கப்பட்ட சிட்சை அல்லது சிட்சைகளை அவன் அனுபவித்தாகிறவரையில் அபராதம் செலுத்தாமைக்காக விதிக்கப்பட்ட காவல்தண்டனையை நிறைவேற்றக்கூடாது.

சிறுவர்களை ஜெயிலில் அடைக்காமற் சீர்திருத்துஞ் சாலைகளில் அடைப்பது.

399. (1) பதினைந்து வயதுக்குட்பட்டவ னெவனுக்காவது யாதொரு க்ரிமினல் கோர்ட்டாரால் யாதொரு குற்றத்திற்காகக் காவல்தண்டனை விதிக்கப்பட்டால், அப்படிப்பட்டவனை க்ரிமினல் ஜெயிலிலடைக்காமல், அடைத்துவைப்பதற்குத் தகுந்த இடமாயும் தகுந்த பயிற்சிக்கும் உபயோகமான யாதொரு கைத்தொழில் பழக்கத்திற்கும் வசையுள்ளதாயும் அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாரால் ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு சீர்திருத்துஞ் சாலையிலாவது, அப்படிப்பட்டதில் அடைத்துவைப்பவர்களைப் பயிற்றுவதையும் பழக்குவதையுங்குறித்து அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படுகிற விதிகளுக்கு உட்பட இஷ்டமுள்ளவ ரெவராலாகிலும் வைக்கப்படுகிற யாதொரு சீர்திருத்துஞ் சாலையிலாவது அடைத்துவைக்கவேண்டியதென்று கோர்ட்டார் உத்தரவு பண்ணலாம்.

(2) இந்தப் பிரிவின்படி அடைக்கப்படுகிற சகலமானவர்களும் அப்படி ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்குட்படவேண்டும்.

(3) சீர்திருத்துஞ் சாலைகளைக் குறித்த 1897-ம்வருஷத்து 7-வது ஆக்ட் அந்தந்தகாலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கிற யாதொரு இடத்துக்கு இந்த பிரிவு பிரயோகப்படமாட்டாது.

சிட்சை நிறைவேற்றினபின் மேல் வாரண்டை ரிட்டரன் பண்ணுவது.

400. யாதொரு சிட்சையைப் பூர்த்தியாய் நிறைவேற்றின பின்பு, அதை நிறைவேற்றின உத்தியோகஸ்தர் வாரன்டின்மேல் சிட்சை நிறைவேற்றப்பட்ட விதத்தைக் கண்டெழுதி ஸெர்ட்டிபை செய்து தன் கையெழுத்துப்போட்டு அந்த வாரன்ட் எவ்விடத்தில் பிறப்பிக்கப்பட்டதோ அந்தக் கோர்ட்டுக்கு அதை ரிட்டரன் பண்ணவேண்டும்.

29-ம் அத்தியாயம்.

சிட்சைகளை நிறுத்திவைப்பதையும் மன்னிப்பதையும் குறைந்த சிட்சையாக மாற்றுவதையுங் குறித்து.

சிட்சையை நிறுத்திவைக்கவாவது

401. (1) ஒரு குற்றத்திற்காக எவனுக்காவது தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாகிலும் அவ்வவ்விடத்திய கவ

மன்னிக்கவாவது அதிகாரம்.

ர்ன்மெண்டாராகிலும், திட்டங்களில்லாமலாவது, சிட்சை விதிக்கப்பட்டவன் ஒத்துக்கொள்ளுகிற எவ்வித திட்டங்களின்மேலாவது, எப்போதாயினும் அவனுடைய சிட்சை நிறைவேறுவதை நிறுத்திவைக்கலாம், அல்லது அவனுக்கு விதிக்கப்பட்டிருக்கிற தண்டனை முழுமையையுமாகிலும் அதில் எவ்வளவையாகிலும் மன்னிக்கலாம்.

(2) யாதொரு சிட்சையை நிறுத்திவைக்கும்படிக்காவது மன்னிக்கும்படிக்காவது ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்காகிலும் அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாருக்காகிலும், மனு செய்யப்பட்டால், சங்கதிக்குத் தக்கபடி ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாவது அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாராவது, எந்தக் கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் எந்தக் கோர்ட்டாராலாகிலும் குற்றஸ்தாபனை செய்யப்பட்டதோ அல்லது ஊர்ஜிதம் பண்ணப்பட்டதோ அந்தக் கோர்ட்டிலே கோர்ட்செய்கிற ஜட்ஜை, அந்த மனுவில் கேட்டுக்கொண்டபடி செய்யலாமோ கூடாதோ என்பதைக் குறித்து அவர் கொள்ளுகிற அபிப்பிராயத்தையும் அப்படி அபிப்பிராயங் கொள்ளுவதற்கு அவருக்குண்டான ஹேதுக்களையும் தெரிவிக்கும்படியும், அந்தப்படி அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதோடுங்கூட அந்த பரிசிலனை சம்பந்தமான ரெகார்டுக்காவது அது சம்மந்தமாய் என்ன ரெகார்ட் இருக்கிறதோ அதற்காவது ஸெர்டிபை செய்யப்பட்ட ஒரு நகலை அனுப்பும்படியும் உத்தரவுசெய்யலாம்.

(3) எந்தத் திட்டத்தின்மேல் யாதொரு சிட்சை நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறதோ அல்லது மன்னிப்பு செய்யப்பட்டிருக்கிறதோ அந்தத் திட்டமானது நிறைவேற்றப்படவில்லையென்று சங்கதிக்குத் தக்கபடி ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாவது அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாராவது அபிப்பிராயப்பட்டால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாகிலும் அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாராகிலும் அப்படி நிறுத்திவைத்திருப்பதையாவது மன்னிப்பு செய்திருப்பதையாவது ரத்து பண்ணிவிடலாம்; அதற்குமேல் எவன்பட்சத்தில் அந்தச் சிட்சை நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறதோ அல்லது மன்னிப்பு செய்யப்பட்டிருக்கிறதோ அவன் காவலில் இராதிருந்தால் அவனை எந்தப் போலீஸ் உத்தியோகஸ்தனாவது வாரன்டில்லாமல் பிடித்துச் சிட்சையில் செல்லாகாத பாகத்தை அனுபவிக்கும்படி மறுபடியும் அனுப்பலாம்.

(4) எந்தத் திட்டத்தின்மேல் யாதொரு சிட்சை இந்தப் பிரிவின்படி நிறுத்திவைக்கப்படுகிறதோ அல்லது மன்னிக்கப்படுகிறதோ அந்தத் திட்டமானது எவன் பட்சத்தில் அப்படி சிட்சை நிறுத்திவைக்கப்படுகிறதோ அல்லது மன்னிக்கப்படுகிறதோ அவன் நிறைவேற்றவேண்டிய திட்டமாகவாவதிருக்கலாம், அல்லது அவனுடைய என்னத்திற்கு உட்படாததாகவாவதிருக்கலாம்.

(4-a) மேற்சொல்லிய உட்பிரிவுகளின் நிபந்தனைகள், இந்தக் கோடின் எந்தப் பிரிவுகளின்படிக்காவது அல்லது வேறே யாதொரு சட்ட திட்டத்தின்படிக்காவது ஒரு நபருடைய சுதந்தரம் வரையறுக்கப்பட்டாவது, அல்லது அவன்பேரிலாகிலும், அவனுடையசொத்தின் பேரிலாகிலும் பொறுப்பேற்படுத்தியிருந்தால், அதைக்குறித்து ஒரு க்ரிமினல் கோர்ட்டாரால் செய்யப்படுகிற யாதொரு உத்திரவுக்கும் பிரயோகப்படும்.

(5) தண்டனையைக் குறித்து மன்னிப்பாவது தாமசமாவது விட்டாற்றியாவது தணிவாவது கொடுப்பதற்கு மஹாராஜா அவர்களுக்காகிலும் கவர்னர் ஜெனரலவர்களுக்கு அப்படிப்பட்ட சுதந்தரம் கொடுக்கப்பட்டிருக்கும்பொழுது அவர்களுக்காகிலும் உண்டான அதிகாரத்திற்கு இதில் சொல்லியிருப்பதெதனாலும் பாதக முண்டாவதாக எண்ணக்கூடாது.

(5-a) மஹாராஜா சக்கரவர்த்தி அவர்களாலாவது அல்லது அவரால் சுதந்தரம் கொடுக்கப்பட்டிருக்கும்பொழுது கவர்னர் ஜெனரலவர்களாவது தனக்குண்டான அதிகாரத்தின்படி, சில திட்டங்களின் மேல் மன்னிப்புக் கொடுத்திருந்தால், அதனால் ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள், எத்தன்மையுள்ளவைகளாய் இருந்தபோதிலும் இந்தக்கோடின்படிக்கான தகுந்த அதிகாரமுடைய ஒரு கோர்ட்டாரால் விதிக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு நிர்யானமாய் எண்ணப்பட்டு அப்படியே பிணைப்படுத்தப்படலாம்.

(6) சிட்சைகளை நிறுத்திவைப்பதைக்குறித்தும், இன்ன திட்டங்களை யனுசரித்து விண்ணப்பங்களைக் கொடுத்துக்கொள்ளவேண்டுமென்பதைக்குறித்தும், அந்த விண்ணப்பங்களைக்குறித்து விவகரிக்கவேண்டுமென்பதைக்குறித்தும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களும் பிரதேச கவர்ன்மெண்டாரும் பொதுவான விதிகளைக் கொண்டாவது விசேஷ உத்தரவுகளைக்கொண்டாவது கட்டளை பிறப்பிக்கலாம்.

402. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாவது அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாராவது, சிட்சை அடைந்தவனுடைய சம்மதமில்லாமலே, அடியில் கண்டிருக்கிற சிட்சைகளில் ஏதாவதொன்றை அதன் பின்னால் கண்டிருக்கிற வேறே ஏதாவதொன்றிற்கு மாற்றிவிடலாம்;

தண்டனையைக் குறைந்த தண்டனையாகமாற்ற அதிகாரம்.

மரணதண்டனை, தண்ணீர் மேலேற்றும்படியான தண்டனை, சிட்சை ஊழியம், அவனுக்குச் சிட்சை விதிக்கும்படியான காலத்திற்கு அதிகப்படாத காலத்திற்குக் கடுங்காவல் தண்டனை, அவ்வளவு காலத்திற்கு வெறுங்காவல்தண்டனை, அபராதம்.

(2) இந்தப் பிரிவிலுள்ளதெதுகளாலும் இந்தியன் பினல்கோட் 54-வது அல்லது 55-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்கு பாதகமுண்டாகமாட்டாது.

---

30 - ம் அத்தியாயம்.

முந்திக் குற்றவாளி யல்லவென்று விடுதலை செய்தாவது குற்றவாளி யென்று தீர்மானித்தாவதிருப்பதைக் குறித்து.

403. (1) தகுந்த அதிகாரமுடைய கோர்ட்டாரால் ஒரு தரம் யாதொரு குற்றத்திற்காகப் பரிசீலனை செய்யப்பட்டு அந்த குற்றத்திற்காகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டாகிலும் குற்றவாளி யல்லவென்று விடுதலை செய்யப்பட்டாகிலு மிருக்கிற யாதொரு நபரை, அப்படிப்பட்ட குற்றஸ்தாபனைத் தீர்மானம் அல்லது விடுதலைத் தீர்மானம் செலாவணியாயிருக்கும்போது, அதே குற்றத்திற்காக மறுபடி பரிசீலனை செய்யவுங்கூடாது, அவன்மேல் தயார் செய்யப்பட்டிருந்த குற்றபத்திரிகை யல்லாமல் வேறே எதற்காக 236-வது பிரிவின்படி வேறே குற்றபத்திரிகை தயார்செய்யப்பட்டிருக்கத்தக்கதோ அல்லது வேறே எதற்காக 237-வது பிரிவின்படி அவனைக் குற்றவாளியாக்கி யிருக்கத்தக்கதோ அப்படிப்பட்ட வேறே யாதொரு குற்றத்திற்காக அதே சங்கதிகளின் மேல் அவனை மறுபடி பரிசீலனை செய்யவுங்கூடாது.

ஒருதரம் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டாவது குற்றவாளி யல்லவென்று விடுதலை செய்யப்பட்டாவதிருக்கிற நபரை அதே குற்றத்திற்காக மறுபடி பரிசீலனை செய்யக்கூடாது.

(2) யாதொரு குற்றத்திற்காகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டாவது குற்றவாளி யல்லவென்று விடுதலை செய்யப்பட்டாவதிருக்கிற யாதொரு நபரை, 235-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி முந்திய பரிசீலனையில் எதற்காக அவன்மேல் பிரத்தியேகமான குற்றபத்திரிகை தயார்செய்யப்பட்டிருக்கத்தக்கதோ அப்படிப்பட்ட பிரத்தியேகமான யாதொரு குற்றத்திற்காகப் பின்பு பரிசீலனை செய்யலாம்.

(3) சில சம்பவங்களை உண்டுபண்ணுகிற யாதொரு செய்கையினாலே ஏற்பாடான யாதொரு குற்றத்திற்காக ஒருவன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருந்து, அந்தச் சம்பவங்களும் அப்படிப்பட்ட செய்கையுஞ் சேர்ந்து, எதற்காக அவன் குற்றவாளியாக்கப்பட்டானோ அந்தக் குற்றமல்லாமல் வேறே குற்றமாகிறபட்சத்தில், அவன் குற்றவாளியாக்கப்பட்ட காலத்தில் அந்தச் சம்பவங்கள் நேரிடாதிருந்தாலும் நேரிட்டிருப்பதாகக் கோர்ட்டாருக்குத் தெரியவந்திராவிட்டாலும், பின்சொல்லிய அப்படிப்பட்ட வேறு குற்றத்திற்காகப் பின்பு அவனைப் பரிசீலனைசெய்யலாம்.

(4) ஏதாவது செய்கைகளினாலே ஏற்படுகிற யாதொரு குற்றத்திற்காக எவனாவது குற்றவாளியல்லவென்று விடுதலைசெய்யப்பட்டாகிலும் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டாகிலு மிருந்தபோதிலும், அதே செய்கைகளினால் அவன் செய்திருக்கும்படியானதாக ஏற்பட்டு அவன்மேல் பின்னிட்டு சாட்டப்படுகிற வேறே யாதொரு குற்றத்தைப் பரிசீலனைசெய்வதற்கு அவனை முதலில் பரிசீலனைசெய்த கோர்ட்டாருக்கு அதிகாரமில்லாவிட்டால், அப்படி விடுதலை செய்யப்பட்டாவது தீர்மானிக்கப்பட்டாவதிருக்கிற நபரின்மேல் அந்த வேறே யாதொரு குற்றத்திற்காகப் பின்னிட்டுக் குற்றபத்திரிகை தயார்செய்து அவனைப் பரிசீலனை பண்ணலாம்.

(5) 1897-ம் வருஷத்து 10-வது ஜெனரல் க்ளாஸெஸ் ஆக்ட் 26-வது பிரிவின் நிபந்தனைகளுக்காவது இந்த கோட் 188-வது பிரிவின் நிபந்தனைகளுக்காவது இந்தப் பிரிவிலுள்ள விதிகளால் யாதொரு பாதகமுண்டாக மாட்டாது.

விவரணம்.—பிராதைத் தள்ளிவிடுவதாவது, 219-வது பிரிவின்படி நடவடிக்கைகளை நிறுத்திவிடுவதாவது, குற்றஞ் சாட்டப்பட்டவனை விட்டுவிடுவதாவது, 273-வது பிரிவின்படி பிராதின்மேல் யா

தொரு பதிவுசெய்தாலாவது, இந்தப் பிரிவிலுள்ள காரியங்களின் பொருட்டுக் குற்றவாளியல்லவென்று விடுதலைசெய்ததாகமாட்டாது.

திருஷ்டாந்தங்கள்.

(a) ஏ-என்பவன் வேலைக்காரனாகத் திருட்டென்னுங் குற்றத்திற்குப் பரிசீலனை செய்யப்பட்டுக் குற்றவாளியல்லவென்று விடுதலை செய்யப்படுகிறான். அந்த விடுதலை செலாவணியாய்க் கொண்டிருக்கையில், பின்பு அவன்மேல் வேலைக்காரனாகத் திருட்டென்னுங் குற்றமாவது, அதே சங்கதிகளைப்பற்றி வெறும் திருட்டு மாத்திரமாவது அநியாயமான நம்பிக்கைத் துரோகமாவது சாட்டக் கூடாது.

(b) கொலை என்னும் குற்றத்திற்காக ஏ-என்பவன் பரிசீலனைசெய்யப்பட்டுக் குற்றவாளியல்லவென்று விடுதலைசெய்யப்படுகிறான். அப்போது கொள்ளையடித்தானென்கிற பிராது இல்லை; ஆனால், கொலை செய்யப்பட்ட காலத்தில் ஏ-என்பவன் கொள்ளையடித்தானென்று சங்கதிகளால் தெரியவருகிறது; பின்பு அவன்மேல் கொள்ளைக்காகக் குற்றபத்திரிகை தயார்செய்து அவனைப் பரிசீலனை பண்ணலாம்.

(c) கொடுந்துன்பமுண்டு பண்ணுவதென்னுங் குற்றத்திற்காக ஏ-என்பவன் பரிசீலனை செய்யப்பட்டுக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுகிறான். துன்பஞ் செய்யப்பட்டவன் பின்பு இறந்துபோகிறான். ஏ-என்பவனை அநியாய மரணத்திற்காக மறுபடி பரிசீலனை செய்யலாம்.

(d) ஏ-என்பவன் ஸெஷன் கோர்ட்டாருக்கு முன் குற்றஞ் சாட்டப்பட்டு, பி-என்பவனுக்கு அநியாய மரணமுண்டுபண்ணின குற்றத்திற்காகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுகிறான். பி-என்பவனைக் கொலைசெய்த குற்றத்திற்காக அதே சங்கதிகளைப்பற்றிப் பின்பு ஏ-என்பவனைப் பரிசீலனை செய்யலாகாது.

(e) பி-என்பவனுக்கு மனதாரத் துன்பமுண்டுபண்ணினதற்காக முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டானவர் ஏ-என்பவன்மேல் குற்றஞ்சுமத்தி அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கிறார். பி-என்பவனுக்கு மனதாரக்கொடுந்துன்பமுண்டுபண்ணினானென்கிற கேஸ் இந்தப்பிரிவு 3-வது பாராவுக்குட்பட்டாலொழிய, அதே சங்கதிகளின்மேல் அந்தக் கொடுந்துன்பத்திற்காக ஏ-என்பவனைப் பின்பு பரிசீலனைசெய்யலாகாது.

(f) பி-என்பவனுடைய சரீரத்திலிருந்து சொத்தைத் திருடினதற்காக இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டானவர் ஏ-என்பவன்மேல் குற்றஞ்சுமத்தி அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கிறார். அதே சங்கதிகளைப்பற்றிக்கொள்ளைக்காக ஏ-என்பவன்மேல் பின்னிட்டுக் குற்றஞ்சுமத்தி அவனை பரிசீலனை செய்யலாம்.

(g) டி-என்பவனைக் கொள்ளையடித்ததற்காக முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டானவர் ஏ, பி, சி-என்பவர்கள்மேல் குற்றஞ் சுமத்தி அவர்களைக் குற்ற

வாளியென்று தீர்மானிக்கிறார். அதை சங்கதிகளைப்பற்றிப் பலர் கூடிக் கொள்ளையடித்ததென்றும் குற்றத்திற்காக எ. பி. சி-என்பவர்கள்மேல் பின்பு குற்றஞ் சுமத்தி அவர்களைப் பரிசீலனைசெய்யலாம்.

7-ம் பாகம்.

அப்பீலையும் ஆலோசனைக்கு அனுப்புவதையும் மேற்பரிசோதனையையும் குறித்து.

31 - ம் அத்தியாயம்.

அப்பீல்களைக் குறித்து.

வேறேவகைசொல்லி யிருந்தாலொழிய அப்பீல் செய்யக்கூடாது.

404. இந்தச் சட்டத்திலாவது அந்தந்தக்காலத்தில் வழங்கி வருகிற வேறே யாதொரு சட்டதிட்டத்திலாவது சொல்லியிருக்கிறபடிக்கல்லாமல், யாதொரு க்ரிமினல் கோர்ட்டாருடைய தீர்ப்பின்மேலாகிலும் உத்தரவின்மேலாகிலும் அப்பீல்செய்யப்படாது.

ஜப்தி சொத்தை ஒப்பித்து விடும்படி செய்யப்பட்ட மனுவைத் தள்ளும்படி செய்த உத்தரவின் மேல் அப்பீல்.

405. எவனுகிலும் சொத்தையாவது அதை விற்றுவந்த பணத்தையாவது ஒப்பிக்கச்சொல்லி 89-வது பிரிவின்படி செய்துகொண்ட மனுவை எந்தக் கோர்ட்டாராகிலும் தள்ளிவிட்டிருந்தால், அந்தக்கோர்ட்டார் விதிக்கிற சிட்சைகளின்மேல் சாதாரணமாய் எந்தக் கோர்ட்டுக்கு அப்பீலுண்டோ அந்தக் கோர்ட்டுக்கு அவன் அப்பீல் செய்துகொள்ளலாம்.

நல்ல நடத்தைக்காகவும் அமெரிக்கையைக் கேட்க்காயலிருப்பதற்காகவும் ஜாமீன்கொடுக்கச்சொல்லி செய்யப்பட்ட உத்திரவின்மேல் அப்பீல்.

406. ஜனங்களுடைய அமெரிக்கையைக் காப்பாற்றுவதற்காகவாகிலும் நல்ல நடத்தைக்காகவாகிலும், 118-வது பிரிவின்படி ஜாமீன் கொடுக்கச்சொல்லி உத்திரவு செய்யப்பட்டவனெவனுவது அப்படிப்பட்ட உத்திரவின் மேல்—

(a) அது ஒரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டால் செய்யப்பட்டிருந்தால், ஹைகோர்ட்டாருக்கும்;

(b) அது வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டால் செய்யப்பட்டிருந்தால், ஸெஷன் கோர்ட்டாருக்கும், அப்பீல் செய்துகொள்ளலாம் ;

ஆனால், அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் பிரதேச சர்க்கார் கெஜட்டில் விளம்பரம் பிரசுரித்து, அதில் குறிப்பிட்ட எந்த டிஸ்ட்ரிக்டிலாவது, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டல்லாத வேறே ஒரு மாஜிஸ்ட்ரேட்டினால் செய்யப்பட்ட அப்படிப்பட்ட உத்திரவைக் குறித்து ஸெஷன் கோர்ட்டாருக்கல்லாமல், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கே அப்பீல்செய்து கொள்ளலாமென்று உத்திரவிடலாம்.

மேலும், எவர்களுக்கு விரோதமாக நடத்தப்படும் நடவடிக்கைகள் 123-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிலாவது (3-a) குறிப்பிட்ட உட்பிரிவிலாவது கண்ட நிபந்தனைகளை அனுசரித்து யாதொரு ஸெஷன் ஜட்ஜியினிடம் அனுப்பப்படுகிறதோ அப்படிப்பட்ட நபர்களுக்கு இந்தப் பிரிவிலுள்ளதெதுவும் பிரயோகப்படமாட்டாது

ஜாமீன்தாரனை அங்கீகரிக்காமல் நிராகரிக்கும் உத்தரவின்மேல் அப்பீல்.

406-A. 122-வது பிரிவின்படி ஒரு ஜாமீன்தாரனை அங்கீகரிக்காமல் நிராகரிக்கும் யாதொரு உத்தரவினால் துன்பமடைந்த யாதொரு நபர் அந்த உத்தரவுக்கு விரோதமாக—

(a) அது ஒரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டால் செய்யப்பட்டிருந்தால், ஹைகோர்ட்டாருக்கும் ;

(b) அது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டால் செய்யப்பட்டிருந்தால், ஸெஷன் கோர்ட்டாருக்கும், அல்லது ;

(c) அது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டல்லாத வேறே ஒரு மாஜிஸ்ட்ரேட்டால் செய்யப்பட்டிருந்தால், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கும்,

அப்பீல் செய்துகொள்ளலாம்.

இரண்டாவது அல்லது மூன்றாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் விதித்த தண்டனையின்மேல் அப்பீல்.

407. (1) இரண்டாவது அல்லது மூன்றாவது வகுப்பைச் சேர்ந்த மாஜிஸ்ட்ரேட்டினாலாகிலும் பரிசீலனை செய்யப்பட்டுக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டவனெவனாவது, இரண்டாவது வகுப்பு ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டினால் 349-வது பிரிவின்படி சிட்சை விதிக்கப்பட்டவனெவனாவது 380-

வது பிரிவின்படி யார் விஷயமாக உத்திரவு செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது சிக்ஷை விதிக்கப்பட்டிருக்கிறதோ அவனாவது, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கு அப்பீல்களை அனுப்புவது.

(2) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர்-இந்தப் பிரிவின்படி செய்யப்படுகிற யாதொரு அப்பீலையாகிலும் அப்படிப்பட்ட ஓரினமான அப்பீல்களையாகிலும், தனக்கு கீழ்ப்பட்டவராய், அப்படிப்பட்ட அப்பீல்களை விசாரணை செய்யப் பிரதேச கவர்ன்மென்டாரால் அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கிற எந்த முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாவது விசாரணை செய்யவேண்டுமென்று உத்தரவு பண்ணலாம்; அதற்குமேல் அந்த அப்பீலாவது ஓரினமான அப்பீல்களாவது அந்த ஸபார்டினேட் மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் கொடுத்துக்கொள்ளலாம். முன்னமேதானே டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் அவைகள் கொடுக்கப்பட்டிருந்தால் மேற்சொல்லிய ஸபார்டினேட் மாஜிஸ்ட்டிரேட்டினிடத்திற்கு அவைகள் அனுப்பப்படலாம். அப்படி கொடுத்துக்கொள்ளப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட யாதொரு அப்பீலையாவது ஓரினமான அப்பீல்களையாவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டினிடத்திலிருந்து வரவழைத்துக் கொள்ளலாம்.

அஸிஸ்ட்டான்ட் ஸெஷன் ஜட்ஜாவது முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாவது விதித்த சிட்சையின்மேல் அப்பீல்.

408. அஸிஸ்ட்டான்ட் ஸெஷன் ஜட்ஜினாலாகிலும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினாலாகிலும் வேறே யாதொரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட்டினாலாகிலும் பரிசிலனை செய்யப்பட்டுக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டவனெவனாவது, யாதொரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டினால் 349-வது பிரிவின்படி சிட்சை விதிக்கப்பட்டவனெவனாவது 380-வது பிரிவின்படி யார் விஷயமாக உத்திரவு செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது சிக்ஷை விதிக்கப்பட்டிருக்கிறதோ அவனாவது, ஸெஷன் கோர்ட்டாருக்கு அப்பீல் பண்ணிக்கொள்ளலாம்.

ஆனால் :—

(a) (ரத்துசெய்யப்பட்டது.)

(b) யாதொரு கேஸிலே, அஸிஸ்டான்ட் ஸெஷன் ஜட்ஜாவது 30-வது பிரிவின்படி பிரத்தியேகமாய் அதிகாரங்

கொடுக்கப்பெற்ற மாஜிஸ்ட்ரேட்டாவது நான்கு வருஷத்துக்கு அதிகப்பட்ட காலத்துக்குக் காவலில்வைக்கும்படியான யாதொரு சிட்சையையாவது தன்னீர்மேலேற்றும்படியான யாதொரு சிக்ஷையையாவது விதித்தால் குற்றஞ்சாட்டப்பட்டு அப்படிப்பட்ட பரிசீலனையில் சிக்ஷ விதிக்கப்பட்டிருக்கும் சகலருமாவது அவர்களில் எவராவது அப்பீல் ஹைகோர்ட்டுக்குச் செய்துகொள்ளவேண்டும்.

(c) யாதொரு நபர் இந்தியன் பினல் கோட் 124-A-வது பிரிவின்படி யாதொரு குற்றத்துக்காக மாஜிஸ்ட்ரேட்டினால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டால், அப்பீல் ஹைகோர்ட்டுக்குச் செய்துகொள்ளவேண்டும்.

ஸெஷன் கோர்ட்டாருக்குச் செய்யப்படும் அப்பீல்களை இன்னபடி விசாரணை பண்ணுவது.

409. ஸெஷன்கோர்ட்டாருக்காகிலும் ஸெஷன் ஜட்ஜுக்காகிலும் செய்துகொள்ளப்பட்ட அப்பீலை ஸெஷன் ஜட்ஜாவது அடிஷனல் ஸெஷன் ஜட்ஜாவது பரிசீலனை செய்யவேண்டும்.

ஆனால், ஒரு அடிஷனல் ஸெஷன் ஜட்ஜானவர், பிரதேச கவர்ன்மெண்டார் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்திரவு மூலமாய் கட்டளையிடுகிறபடியாவது அல்லது அந்த டிவிஷன் ஸெஷன் ஜட்ஜ் அவருக்கு அனுப்புகிற கேஸுகளைக்குறித்த அப்பீல்களை மட்டும் விசாரிக்கலாம்.

ஸெஷன் கோர்ட்டாருடைய சிட்சையின்மேல் அப்பீல்.

410. ஸெஷன் ஜட்ஜினாலாவது அடிஷனல் ஸெஷன் ஜட்ஜினாலாவது செய்யப்பட்ட பரிசீலனையில் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டவனெவனாவது ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டினால் விதிக்கப்பட்ட சிட்சையின்மேல் அப்பீல்.

411. ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டினால் பரிசீலனை செய்யப்பட்டுக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டவனெவனாவது தனக்கு அந்த மாஜிஸ்ட்ரேட்டினால் ஆறுமாதத்துக்கு மேற்பட்ட காவல் தண்டனையாகிலும் இருநூறு ரூபாய்க்கு மேற்பட்ட அபராத தண்டனையாகிலும் விதிக்கப்பட்டிருந்தால் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

குற்றஞ் சாட்டப்பட்டவன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டால், சில விஷயங்களில் அப்பீல் இல்லை.

412. இதில் முன்னமே என்னசொல்லியிருந்தபோதிலும், குற்றஞ் சாட்டப்பட்டவன் தான் குற்றவாளியென்று ஒப்புக்கொண்டு அதன்மேல் ஸெஷன் கோர்ட்டாராலாகிலும் யாதொரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாராலாகிலும் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாராலாகிலும் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டால் சிட்சையினளவு அல்லது சட்டப்படியான கிரமத்தைக் குறித்தல்லாமல் அப்பீல் செய்து கொள்ளக்கூடாது.

சொற்ப கேஸுகளில் அப்பீல் இல்லையாவது.

413. இதில் முன்னமே என்னசொல்லியிருந்தபோதிலும், ஸெஷன் கோர்ட்டார் ஒரு மாதத்திற்கு மேற்படாத காவல் தண்டனையை மாத்திரமாகிலும், அல்லது ஒரு ஸெஷன் கோர்ட்டாராவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது வேறே யாதொரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாவது ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத அபராத தண்டனையை மாத்திரமாகிலும் விதிக்கிற கேஸுகளில், குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டவன் அப்பீல் செய்து கொள்ளக்கூடாது.

விவரணம்.—முதன்மையான சிட்சையாகக் காவல் தண்டனை விதிக்கப்படாமல், அபராதத்தைச் செலுத்தாமைக்காக அந்தக் கோர்ட்டாராலாவது மாஜிஸ்ட்ரேட்டாலாவது விதிக்கப்படுகிற காவல் தண்டனையின்மேல் அப்பீல் கூடாது.

சுருக்க வகையான சில குற்றஞ்சாட்டனைகளின் மேல் அப்பீல் இல்லை.

414. இதில் முன்னமே என்ன சொல்லியிருந்தபோதிலும், சுருக்கவகையாய்ப் பரிசிலனை செய்யப்பட்ட கேஸுகளில், 260-வது பிரிவின்படி பிரவர்த்திக்க அதிகாரம்பெற்ற மாஜிஸ்ட்ரேட்டானவர் இருநூறு ரூபாய்க்கு மேற்படாத அபராத தண்டனை மாத்திரம் விதித்தால், அப்படிப்பட்ட கேஸுகளில் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டவன் அப்பீல் பண்ணிக்கொள்ளக் கூடாது.

413, 414-வது பிரிவுகளுக்கு விலக்கு.

415. 413-வது பிரிவிலாவது 414-வது பிரிவிலாவது சொல்லியிருக்கிற யாதொரு சிட்சையிலே அவைகளில் கண்டிருக்கிற தண்டனைகளிரண்டு அல்லது மேற்பட்ட தண்டனைகள் சேர்ந்திருக்குமாகில், அப்படிப்பட்ட சிட்சையின்மேல் அப்பீல் கொண்டுவரலாம்;

ஆனால், மற்றப்படி அப்பீலுக்குட்பட்டதாயிராத யாதொரு சிட்சையானது குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டவன் அமரிக்கையைக் கெடுக்காதிருப்பதற்கு ஜாமீன் கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்டானென்கிற ஹேதுவின்மேல் மாத்திரம் அப்பீல் செய்யப்படத்தக்கதாகமாட்டாது.

விவரணம்.—அபராதத்தைச் செலுத்தாமைக்காக விதிக்கப்பட்ட காவல் தண்டனையாவது இந்தப் பிரிவின் தாற்பரியப்படி இரண்டு அல்லது பல சிட்சைகள் சேர்ந்திருக்கிற தண்டனையாகமாட்டாது.

சில விஷயங்களில் அப்பீல் செய்து கொள்வதற்கான விசேஷ பாத்தியதை.

415-A. இந்த அத்தியாயத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் ஒரே பரிசீலனையில் குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்டு, அப்படிப்பட்ட நபர்களில் எவர்கள் விஷயமாய் அப்பீல் செய்யத்தக்க தீர்ப்பாவது உத்தரவாவது செய்யப்பட்டிருக்கிறதோ அந்த நபர்களில் எவனுகிலும் அப்பீல் செய்துகொண்டால், அப்படிப்பட்ட பரிசீலனையில் குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்ட நபர்கள் சகலருக்குமாயினும் அவர்களில் எவனுக்காயினும் அப்பீல் செய்து கொள்வதற்கான பாத்தியதை உண்டு.

416. இந்தப்பிரிவு 1923-ம் வருஷத்திய 12-வது ஆக்டால் ரத்து செய்யப்பட்டது.

குற்றவாளியல்லவென்று விடுதலை செய்கிற விஷயத்திலே கவர்ன்மெண்டார் பட்சத்தில் அப்பீல்.

417. ஹைக்கோர்ட் தவிர வேறெந்தக் கோர்ட்டாராவது அசலிலாகிலும் அப்பீலிலாகிலும் குற்றவாளியல்லவென்று விடுதலை செய்கிற உத்தரவின்மேல் ஹைக்கோர்ட்டாருக்கு அப்பீல் கொடுக்கும்படி பப்ளிக் ப்ராஸிக்யூட்டருக்குப் பிரதேச கவர்ன்மெண்டார் உத்தரவு செய்யலாம்.

இன்ன விஷயங்களில் அப்பீல் ஏற்றுக்கொள்ளப் படத்தக்கதென்பது.

418. (1) ஜூரியால் பரிசீலனை நடத்தப்பட்டிருக்கிற சங்கதியில் தவிர, சட்டத்தைப்பற்றிய விஷயத்தைக்குறித்துச் செய்வதுபோலவே சங்கதியைப்பற்றிய விஷயத்தைக்குறித்தும் அப்பீல் செய்துகொள்ளலாம்; ஜூரியால் பரிசீலனை நடத்தப்பட்டிருக்கிற சங்கதியில் சட்டத்தைப்பற்றிய விஷயத்தைக்குறித்து மாத்திரம் அப்பீல் செய்துகொள்ளவேண்டும்,

விவரணம்.—சிட்சை கடூரமானதென்பது, இந்தப் பிரிவிலுள்ள காரியங்களின்பொருட்டு, சட்டத்தைப்பற்றிய சங்கதியாக எண்ணப்படவேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவிலாவது 423-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும், பாதகமில்லாமலே, ஜூரியால் பரிசீலனை நடத்தப்பட்ட யாதொரு கேஸிலே யாதொரு நபருக்கு மரணை தண்டனை விதிக்கப்பட்டால், அந்தப்படி சிக்ஷை விதிக்கப்பட்டிருக்கும் நபருடன் அதே பரிசீலனையில் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட வேறே யாதொரு நபர்-சட்டத்தைப்பற்றிய விஷயத்தைக் குறித்துச் செய்வதைப் போலவே சங்கதியைப்பற்றிய விஷயத்தைக் குறித்தும் அப்பீல்செய்து கொள்ளலாம்.

419. ஒவ்வொரு அப்பீலையும் அப்பீல் வாதியாவது அவனுடைய ப்லீடராவது விண்ணப்ப ரூபமாய் எழுதிக் கொடுக்கவேண்டும்; (எந்தக் கோர்ட்டுக்கு அந்த விண்ணப்பம் கொடுக்கப்படுகிறதோ அந்தக் கோர்ட்டார் வேறே விதமாய் உத்தரவுசெய்யாவிட்டால்) அப்படிப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பத்தோடுங்கூட, எதன்மேல் அப்பீல் கொண்டுவரப்படுகிறதோ அந்தத் தீர்ப்பு அல்லது உத்தரவிற்கு நகலைக்கொடுக்கவேண்டும்; மேலும், ஜூரியால் பரிசீலனை செய்யப்பட்ட கேஸுகளில் 367-வது பிரிவின்படி ரிகார்ட் செய்யப்பட்ட கற்பனைகளின் பொருள்களுக்கு நகலையுங் கொடுக்கவேண்டும்.

அப்பீல் விண்ணப்பம்.

420. அப்பீல் செய்கிறவன் ஜெயிலிலிருந்தால் அவன் தன்னுடைய அப்பீல் விண்ணப்பத்தையும் அதோடுகூட அனுப்பவேண்டிய நகல்களையும் அந்த ஜெயில் விசாரணைக் கர்த்தருக்குக் கொடுத்துக்கொள்ளலாம்; அவர் அதன்மேல் அந்த விண்ணப்பத்தையும் நகல்களையும் தகுந்த அப்பீல் கோர்ட்டாருக்கு அனுப்பவேண்டும்.

அப்பீல்தாரன் ஜெயிலிலிருந்தால் இன்னது செய்வது.

421. (1) 419 அல்லது 420-வது பிரிவின்படி விண்ணப்பத்தையும் நகலையும் வரப்பற்றிக் கொள்வதன்மேல், அப்பீல் கோர்ட்டார் அவைகளை வாசித்துப்பார்க்கவேண்டும்; அதில் பிரவேசிப்பதற்குப் போதுமான முகாந்தரமில்லையென்று தங்களுக்குத்

அப்பீலைச் சுருக்கவகையாய்த் தள்ளிவிடுதல்.

ஆனால், 419-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட எந்த அப்பீலையும், அதற்கு ஆதரவாகச் சொல்லிக்கொள்ள அப்பீல்தாரனுக்காகிலும் அவனுடைய ப்ளீடருக்காகிலும் தகுந்த சமயம் கொடுக்காமல் தள்ளிவிடக்கூடாது.

(2) இந்தப் பிரிவின்படி அப்பீலைத் தள்ளிவிடுவதற்கு முன்னமே, கோர்ட்டார் அந்தக் கேஸைச்சேர்ந்த ரிகார்டை வரவழைக்கலாம்; ஆனால், அவர்கள் அப்படிச் செய்யவேண்டுமென்கிற கடமையில்லை.

அப்பீலைக் குறித்து நோட்டீஸ்.

422. அப்பீல் கோர்ட்டார் சுருக்கவகையாய் அப்பீலைத் தள்ளிவிடாவிட்டால் அவர்கள் அந்த அப்பீல் இன்ன காலத்தில் இன்ன இடத்திலே விசாரிக்கப்படுமென்று அப்பீல்காரன் அல்லது அவனுடைய ப்ளீடருக்கும், இது விஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படுகிற உத்தியோகஸ்தருக்கும் நோட்டீஸ் கொடுப்பிக்கவேண்டும்: மேலும், அந்த உத்தியோகஸ்தர் மனுசெய்து கொள்ளுகிறபட்சத்தில் அப்பீலுக்குண்டான வேதுக்களுக்கு நகலை அவருக்குக் கொடுக்கவேண்டும்;

417-வது பிரிவின்படி செய்யப்படுகிற அப்பீல் விஷயங்களிலே, அப்பீல் கோர்ட்டார் குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு அதே மாதிரியான நோட்டீஸ் கொடுப்பிக்கவேண்டும்.

அப்பீலைப் பைசல் செய்ய அப்பீல் கோர்ட்டாருக்குள்ள அதிகாரங்கள்.

423. (1) அதற்குமேல் அப்பீல்கோர்ட்டார்-கேஸைப்பற்றிய ரிகார்ட் முன்னமே கோர்ட்டில் இல்லாவிட்டால் அதை வரவழைக்கவேண்டும். அந்த ரிகார்டை வாசித்துப்பார்த்து, அப்பீல்தாரராகிலும் அவருடைய ப்ளீடராகிலும் ஹாஜராயிருந்தால் அவர் சொல்வதையும் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் ஹாஜராயிருந்தால் அவர் சொல்வதையும், 417-வது பிரிவின்படி செய்யப்பட்ட அப்பீல் விஷயத்திலே குற்றஞ்சாட்டப்பட்டவன் ஹாஜராயிருந்தால் அவன் சொல்வதையும் கேட்டபின்பு, கோர்ட்டார் தாங்கள் பிரவேசிப்பதற்குப்போதுமான முகாந்தரமில்லையென்று கண்டுகொண்டால், அப்பீலைத் தள்ளிவிடலாம், அல்லது,—

(a) குற்றவாளியல்லவென்று விடுதலைசெய்கிற உத்தாவின் மேல் கொண்டுவரப்பட்ட அப்பீலிலே, அப்படிப்பட்ட

உத்தரவை மாற்றிவிட்டு இன்னும் விசாரணைசெய்யும்படிக்காவது, குற்றஞ்சாட்டப்பட்டவனைச் சங்கதிக்குத் தக்கபடி மறுதரம் பரிசிலனை பண்ணும்படிக்காவது பரிசிலனைக்குக் கம்மிட் பண்ணும்படிக்காவது கட்டளையிடலாம், அல்லது அவனைக் குற்றவாளியென்று தீர்மானித்துச் சட்டப்படி அவனுக்குத் தண்டனை விதிக்கலாம்;

(b) குற்றஸ்தாபனையின்மேல் செய்யப்பட்ட அப்பீலிலே, (1) தீர்மானத்தையும் சிட்சையையும் மாற்றிவிட்டு குற்றஞ்சாட்டப்பட்டவனைக் குற்றவாளியல்லவென்று தீர்மானிக்கலாம் அல்லது அவனை விடுதலைசெய்யலாம், அல்லது அந்த அப்பீல் கோர்ட்டாருக்குக்கீழ்ப்பட்ட தகுந்த அதிகாரமுடைய கோர்ட்டார் அவனை மறுபடி பரிசிலனை செய்யவேண்டியதென்றாவது, பரிசிலனைக்கு அவன் கம்மிட் பண்ணப்படவேண்டியதென்றாவது உத்தரவு செய்யலாம், அல்லது (2) சிட்சையை வைத்துக்கொண்டு தீர்மானத்தை மாற்றலாம், அல்லது தீர்மானத்தை மாற்றியாகிலும் மாற்றாமலாகிலும் சிட்சையைக் குறைக்கலாம், அல்லது (3) அப்படி குறைத்தாகிலும் குறைக்காமலாகிலும் தீர்மானத்தை மாற்றியாகிலும் மாற்றாமலாகிலும் சிட்சையின் தன்மையை மாற்றலாம்; ஆனால், 106-வது பிரிவு (3) குறிப்பிட்ட உட்பிரிவின் நிபந்தனைகளுக்குட்பட்டு, சிட்சையை அதிகப்படுத்தும்படியான விதமாக மாற்றக்கூடாது;

(c) வேறே யாதொரு உத்தரவின்மேல் செய்யப்பட்ட அப்பீலிலே, அப்படிப்பட்ட உத்தரவைத் திருத்தலாம் அல்லது மாற்றிவிடலாம்.

(d) யாதொரு திருத்தத்தையாவது, காரியசித்தி சம்பந்தமானதாகவாகிலும் இடைச்சம்பவமானதாகவாகிலு மிருக்கிற நியாயமான அல்லது தகுதியான யாதொரு உத்தரவையாவது செய்யலாம்.

(2) ஜட்ஜானவர் ஜூரிக்குச் சங்கதிகளைத் தொகுத்துச் சொன்னதில் பிரதானவழி காட்டியதனாலாகிலும் சட்டத்தை ஜட்ஜானவர் விவரித்தபடி ஜூரி சரியாய் அறியாமையினாலாகிலும், ஜூரியினுடைய

தீர்மானம் தப்பாய்ப்போனதென்று கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டா லொழிய, இதிலுள்ள எந்த நிபந்தனையினாலும் ஜூரியினுடைய தீர்மா னத்தைத் திருத்தவாவது மாற்றவாவது கோர்ட்டாருக்கு அதிகார முண்டாகமாட்டாது.

424. அசல் விசாரணை அதிகாரமுடைய க்ரிமினல் கோர்ட் தீர் மானத்தைப்பற்றி 26-ம் அத்தியாயத்தில் சொல்லி யிருக்கிற நிபந்தனைகள் ஹைகோர்ட் தவிர வேறே யாதொரு அப்பீல் கோர்ட்டாருடைய தீர்ப்புக் குக் கூடியமட்டில் சம்பந்தப்படவேண்டும்.

கீழ்ப்பட்ட அப்பீல் கோர்ட்டாருடைய தீர்ப்புகள்.

ஆனால், குற்றஞ் சாட்டப்பட்டவனைக் கொண்டுவரும்படிக்கா வது அவன் ஹாஜராகவேண்டுமென்றாவது அப்பீல் கோர்ட்டார் உத் தரவு செய்தாலொழிய, கொடுக்கப்பட்ட தீர்ப்பைக் கேட்பதற்காகக் குற்றஞ் சாட்டப்பட்டவனைக் கொண்டுவரவுங்கூடாது, அவர் ஹாஜ ராகவேண்டியதுமில்லை.

425. (1) அப்பீல் செய்துகொண்டதன்மேல் ஹைக்கோர்ட்டா ரால் யாதொரு கேஸ் இந்த அத்தியாயத்தின்படி தீர்மானிக்கப்படும்போதெல்லாம், எதன்மேல் அப்பீல் கொண்டுவரப்படுகிறதோ அந்தத் தீர்மா னம் - சிட்சை அல்லது உத்தரவைச் செய்தாவது ரிகார்ட் பண்ணியாவதிருக்கிற கோர்ட்டுக்கு ஹை கோர்ட்டார் தங்களுடைய தீர்ப்பு அல்லது உத்த ரவை ஸெர்ட்டிபைசெய்து அனுப்பவேண்டும். டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் தவிர வேறே எந்த மாஜிஸ்ட்ரேட்டினாலா வது தீர்மானம் சிட்சை அல்லது உத்தரவு செய்யப்பட்டாகிலும் ரிகா ர்ட் பண்ணப்பட்டாகிலுமிருந்தால்; அந்த ஸெர்ட்டிபிகேட்டை டிஸ்ட் ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் மூலமாக அனுப்பவேண்டும்.

அப்பீலில் ஹைகோர்ட்டார் செய்த உத்தரவை ஸெர்ட்டிபை செய்து கீழ்க் கோர்ட்டுக்கு அனுப்புவது.

(2) ஹைகோர்ட்டார் தங்களுடைய தீர்ப்பு அல்லது உத்த ரவை ஸெர்ட்டிபைசெய்து எந்த கோர்ட்டுக்கு அனுப்புகிறார்களோ அந்தக் கோர்ட்டார், அதற்குமேல் ஹைகோர்ட்டாருடைய தீர்ப்பு அல்லது உத்தரவுக்கு ஒத்திருக்கும்படியான உத்தரவுகளைச் செய்ய வேண்டும் ; அவசியமிருந்தால் அதற்கு ஒத்திருக்கும்படியாக ரிகார் டைத் திருத்தவேண்டும்.

426. (1) குற்றவாளியென்று நிர்மானிக்கப்பட்டவனால் செய்யப்பட்ட யாதொரு அப்பீல் நிர்மானமாகிறவரையில், அப்பீல் கோர்ட்டார் - எதன்மேல் அப்பீல் செய்யப்பட்டதோ அந்தச் சிட்சை அல்லது உத்தரவை நிறைவேற்றாமல் நிறுத்திவைக்கும்படிக்கும், அவன் காவலில் வைக்கப்பட்டிருந்தால் அவனை ஹாஜர் ஜாமீன்மேலாகிலும் அவனிடத்திலிருந்து முச்சிலிக்கா பெற்றுக்கொண்டாகிலும் விடுதலை செய்யும்படிக்கும் உத்தரவு பண்ணலாம். அப்படிச் செய்கையில் அதற்குண்டான ஹேதுக்களை அந்தக் கோர்ட்டார் எழுதி ரிகார்ட் பண்ணவேண்டும்.

அப்பீல் நிர்மானமாகிறவரையில் சிட்சையை நிறுத்தி வைப்பது.

ஹாஜர் ஜாமீன் மேல் அப்பீல்தாரனை விட்டிருப்பது.

(2) யாதொரு அப்பீல் கோர்ட்டாருக்கு இந்தப் பிரிவினால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை, ஹைகோர்ட்டாரும் தங்களுக்குக் கீழ்ப்பட்ட கோர்ட்டாருக்குக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டவனால் செய்துகொள்ளப்பட்ட யாதொரு அப்பீல் விஷயத்திலே செலுத்தலாம்.

(3) அப்பில்தாரனுக்குக் கடைசியாய்க் காவல்தண்டனையாவது சிட்சை ஊழியமாவது தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனையாவது விதிக்கப்பட்டால், அவனுக்கு விதிக்கப்பட்ட சிட்சையின் கால அளவைக் கணக்கு செய்வதில் மேலே சொல்லியபடி அவன் விடுதலை பெற்றிருந்தகாலத்தைச் சேர்க்காமல் கணக்குச் சேர்க்கவேண்டும்.

427. 417-வது பிரிவின்படி அப்பீல் செய்யப்பட்டால், ஹைகோர்ட்டார் - குற்றஞ்சாட்டப்பட்டவனைப் பிடித்து தங்களுக்கு முன்பாகவாவது யாதொரு ஸபார்டினேட் கோர்ட்டுக்கு முன்பாகவாவது கொண்டுவரும்படி வாரன்ட் பிறப்பிக்கலாம்; எந்தக் கோர்ட்டுக்கு முன்பாக அவன் கொண்டுவரப்படுகிறானோ அந்தக் கோர்ட்டார் அப்பீல் நிர்மானமாகிறவரையில் அவனை ஜெயிலில் வைக்கலாம் அல்லது ஹாஜர் ஜாமீன்மேல் விடலாம்.

குற்றவாளியல்லவென்கிற நிர்மானத்தின்மேல் அப்பீல் செய்யப்பட்டால் குற்றஞ் சாட்டப்பட்டவனைப் பிடிப்பது.

428. (1) இந்த அத்தியாயத்தின்படி யாதொரு அப்பீலைக் குறித்துப் பிரவர்த்திக்கையில் அப்பீல் கோர்ட்டார், இன்னும் சாட்சியம் அவசியமென்று தங்க

அப்பீல் கோர்ட்டாரின்றும் சாட்

சியம் கேட்கும்படி உத்தரவு செய்ய லாம்.

ளுக்குத் தோற்றினால், தங்களுடைய நியாயங்களை யெழுதிவைக்கவேண்டும்; மேலும், அவர்கள் அப்படிப்பட்ட சாட்சியத்தைத் தாங்களே வாங்கலாம் அல்லது மாஜிஸ்ட்ரேட்டை வாங்கும்படி உத்தரவு பண்ணலாம் அல்லது அந்த அப்பீல் கோர்ட்டார் ஹைக்கோர்ட்டாயிருக்கிற பட்சத்தில், ஸெஷன் கோர்ட்டாரையாவது மாஜிஸ்ட்ரேட்டையாவது அந்தச் சாட்சியத்தை வாங்கும்படி உத்தரவு செய்யலாம்.

(2) ஸெஷன் கோர்ட்டாராவது மாஜிஸ்ட்ரேட்டாவது இன்னும் சாட்சியம் கேட்டால், அந்தக் கோர்ட்டார் அல்லது அதிகாரி அப்படிப்பட்ட சாட்சியத்தை ஸெர்ட்டிபைசெய்து அப்பீல் கோர்ட்டாருக்கு அனுப்பவேண்டும்; அதற்குமேல் அந்தக் கோர்ட்டார் அப்பீலைப் பைசல் செய்யத் தொடங்கவேண்டும்.

(3) ஹாஜராகவேண்டியதில்லையென்று அப்பீல் கோர்ட்டார் உத்தரவு செய்தாலொழிய, குற்றஞ்சாட்டப்பட்டவனாவது அவனுடைய ப்ளீடராவது இன்னும் சாட்சியம் கேட்கப்படும்போது ஹாஜராயிருக்கவேண்டும்; ஆனால், அப்படிப்பட்ட சாட்சியத்தை ஜூரர்கள் அல்லது அஸெஸர்களுக்கு முன்பாகக் கேட்கக்கூடாது.

(4) இந்தப் பிரிவின்படி சாட்சியம் கேட்பதானது-அது விசாரணையாயிருந்தாற்போல 25-ம் அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டிருக்கவேண்டும்.

அப்பீல் கோர்ட் ஜட்ஜுகள் அபிப்பிராயத்தில் சமமாக வேறுபட்டால் நடவடிக்கை.

429. அப்பீல் கோர்ட்செய்யும் ஜட்ஜுகள்-அபிப்பிராயத்தில் சமமாக வேறுபட்டால் அவர்களுடைய அபிப்பிராயங்கள் சகிதமாய் அந்தக்கேஸை அந்த கோர்ட்டைச்சேர்ந்த வேறொரு ஜட்ஜுக்கு முன்பாகக் கொண்டுவரவேண்டும்; அந்த ஜட்ஜானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற ஏதாவது விசாரணைசெய்தபின்பு, தம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டும்; அந்த அபிப்பிராயத்தை அநுசரித்துத் தீர்ப்பாகிலும் உத்தரவாகிலும் பிறப்பிக்கவேண்டும்.

அப்பீலின்மேல்

430. 417-வது பிரிவிலும் 32-ம் அத்தியாயத்திலும் சொல்லியிருக்கிற விஷயங்களில் தவிர,

செய்த உத்தரவுகள் முடிவானதாகும்.

அப்பீலின்மேல் யாதொரு அப்பீல் கோர்ட்டார் செய்கிற தீர்ப்புகளும் உத்தரவுகளும் முடிவானவைகளாகும்.

அப்பீல் நின்று போய் விடுவது.

431. 417-வது பிரிவுக்குட்பட்ட ஒவ்வொரு அப்பீலும் குற்றஞ் சாட்டப்பட்டவன் இறந்துபோனால் அதோடே நின்றுபோய்விடவேண்டும்; (அபராதசிட்சையின்மேல் செய்துகொள்ளப்படும் அப்பீல் நீங்கலாக) இந்த அத்தியாயத்துக்குட்பட்ட வேறே பிரதி அப்பீலும் அப்பீல்தாரன் இறந்துபோனால் அதோடே நின்றுபோய்விடவேண்டும்.

32-ம் அத்தியாயம்.

ஆலோசனைக்கு அனுப்புவதையும் மேற்பரிசோதனையையும் குறித்து.

ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டானது ஹைகோர்ட்டாருடைய ஆலோசனைக்கு அனுப்புவது.

432. ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டானவர் - தமக்கு முன்பாக நடந்துகொண்டிருக்கிற யாதொரு கேஸை விசாரணை செய்கையில் சட்டத்தைப்பற்றி உண்டாகிற யாதொரு சந்தேகத்தைத் தமக்கு யுக்தமாகத் தோற்றினால் ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயத்துக்கு அனுப்பலாம், அல்லது அப்படி அனுப்பப்படுகிற சங்கதியின்மேல் ஹைகோர்ட்டார் செய்கிற தீர்மானத்துக்குட்பட்டு அப்படிப்பட்ட யாதொரு கேஸில் தீர்ப்பு கொடுக்கலாம்: மேலும், அப்படிப்பட்ட தீர்மானம் செய்யப்படுகிறவரையில், குற்றஞ் சாட்டப்பட்டவனை ஜெயிலுக்குக் கமிட்பண்ணலாம், அல்லது அழைக்கப்படும்போது தீர்ப்பைக்குறித்து ஹாஜராவதாக அவனிடத்தில் ஜாமீன் வாங்கிக்கொண்டு அவனை விடலாம்.

ஹைகோர்ட்டாருடைய தீர்மானத்தின்படி கேஸைப் பைசல் செய்வது.

433. (1) யாதொரு சந்தேகம் ஹைகோர்ட்டாருடைய ஆலோசனைக்கு அப்படி அனுப்பப்பட்டிருந்தால், ஹைகோர்ட்டார்-அதன்மேல் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற உத்தரவு பிறப்பித்து, அப்படி ஆலோசனைக்கனுப்பிய மாஜிஸ்ட்ரேட்டுக்கு அப்படிப்பட்ட உத்தரவின் நகலை அனுப்புவிக்கவேண்டும்;

அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்த உத்தரவுக்கு ஒத்தபடி அந்த கேஸைப் பைசல் செய்யவேண்டும்.

செலவைக் குறித்து உத்தரவு.

(2) அப்படி ஆலோசனைக்கு அனுப்புவதனு லுண்டாகும் செலவை இன்னார் செலுத்தவேண்டுமென்று ஹைகோர்ட்டார் உத்தரவு செய்யலாம்.

ஹைகோர்ட்டார் அசலதிகாரஞ் செலுத்தும்போது உண்டாகிற சந்தேகங்களை நிறுத்திவைக்க அதிகாரம்.

434. (1) ஒருவரல்லாமல் பல ஜட்ஜுகளிருந்து க்ரிமினல் விவகாரத்திலே அசல்விசாரணை யதிகாரம் செலுத்துகிற ஹைகோர்ட் ஜட்ஜுகளி லொருவருக்கு முன்பாக நடக்கிற பரிசீலனையில் எவனுகிலும் யாதொரு குற்றத்திற்காகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டால், அந்த ஜட்ஜானவர் - தமக்கு யுக்தமாகத் தோற்றுமாகில், அப்படிப்பட்டவனைப் பரிசீலனை செய்கையில் சட்டசம்பந்தமான யாதொரு சந்தேகமுண்டாயிருந்து அதை நிச்சயிப்பதனுலே பரிசீலனையின் முடிவுக்குப் பாதகமுண்டாகுமென்கிற அப்படிப்பட்ட சந்தேகத்தை அந்த கோர்ட் ஜட்ஜுகள் இருவரல்லது பலர்கூடிச்செய்யும் கோர்ட் தீர்மானம் பெறும்பொருட்டு நிறுத்திவைத்து அவர்களுடைய ஆலோசனைக் கனுப்பலாம்.

சந்தேகத்தை நிறுத்திவைத்தால் இன்னது செய்வது.

(2) அப்படிப்பட்ட யாதொரு சந்தேகத்தை ஜட்ஜானவர் நிறுத்திவைத்தால், குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டவனை, அதன்மேல், தீர்மானமாகிறவரையில் ஜெயிலுக்காவது அனுப்பவேண்டும், அல்லது ஜட்ஜுக்கு யுக்தமாகத் தோற்றினுல் அவனை ஜாமீன் வாங்கிக்கொண்டாவது விடவேண்டும்; மேலும், ஹைகோர்ட்டார்-அந்தக் கேஸையாவது அதில் அவசியமான பாகத்தையாவது புனராலோசனைசெய்து அப்படிப்பட்ட சந்தேகத்தை முடிவாய்த் தீர்மானிக்கவும், அதற்குமேல் அசல்விசாரணை அதிகாரமுடைய கோர்ட்டாரால் விதிக்கப்பட்ட சிட்சையைமாற்றி, தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற தீர்ப்பையாவது உத்தரவையாவது பிறப்பிக்கவும் அதிகாரமுடையவர்களாவார்கள்.

தாழ்ந்த கோர்ட்டுகளின் ரிகார்டுகளை

435. (1) ஹைகோர்ட்டாராவது, யாதொரு ஸெஷன் ஜட்ஜாவது, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது இதுவிஷயத்தில் பிரதேச கவர்ன்மென்டாரால் அதிகாரம்

வரவழைக்க அதிகாரம்.

கொடுக்கப்பெற்ற யாதொரு ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாவது, தங்களுடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் இருக்கிற யாதொரு தாழ்ந்த க்ரிமினல் கோர்ட்டுக்கு முன்பாக நடந்த யாதொரு நடவடிக்கையின் ரிகார்டை, ரிகார்ட் பண்ணப்பட்டாவது பிறப்பிக்கப்பட்டாவதிருக்கிற யாதொரு தீர்மானம்-சிட்சை அல்லது உத்தரவு சரியானதோ சட்டசம்பந்தமானதோ அல்லது கிரமமானதோ என்பதைப்பற்றியும், அப்படிப்பட்ட தாழ்ந்த கோர்ட்டாருடைய எந்த நடவடிக்கையாவது ஒழுங்கானதோ என்பதைப்பற்றியும் திருப்திகரமாய்த் தெரிந்துகொள்ளும்பொருட்டு வரவழைத்து பரிசோதனை செய்யலாம். மேலும், அப்படிப்பட்ட ரெகார்டை வரவழைக்கும்போது, யாதொரு சிக்ஷையை நிறைவேற்றுவதை நிறுத்திவைக்கவேண்டுமென்றும், குற்றஞ் சாட்டப்பட்டவன் காவலில் இருப்பானாகில் அந்த ரெகார்டைப் பரிசோதிக்கிறவரையிலே ஜாமீன்மேலாவது அவனிடத்திலேயே முச்சிலிக்கா பெற்றுக்கொண்டாவது அவனை விடுதலை செய்யவேண்டுமென்றும் கட்டளையிடலாம்.

விவரணம்.—அசல் விசாரணை அதிகாரம் செலுத்தினாலுஞ்சரி, அப்பீல் விசாரணை அதிகாரம் செலுத்தினாலுஞ்சரி, சகல மாஜிஸ்ட்ரேட்டுகளும் இந்த உட்பிரிவின் காரியங்களுக்காகவும், 437-வது பிரிவின்படிக்காகவும் ஸெஷன் ஜட்ஜுக்குக் கீழ்ப்பட்டிருப்பதாய் எண்ணப்படுவார்கள்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிரவர்த்திக்கிற யாதொரு ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்படிப்பட்ட தீர்மானம்-சிட்சை அல்லது உத்தரவு சட்டவிரோதமாயாகிலும் அக்கிரமமாயாகிலுமிருக்கிறதென்றாவது அப்படிப்பட்ட யாதொரு நடவடிக்கை ஒழுங்கு தப்பியிருக்கிறதென்றாவது எண்ணுவாராகில், அவர் அந்த ரிகார்டையும் அதைப்பற்றித் தமக்கு யுக்தமாகத்தோற்றுகிற குறிப்புகளெழுதி அவைகளையும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பவேண்டும்.

(3) [ரத்து செய்யப்பட்டது.]

(4) ஸெஷன் ஜட்ஜ் அல்லது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் ஆகிய இவர்களில் யாராவது ஒருவருக்கு இந்த பிரிவின்படி விண்ணப்பஞ்

செய்துகொள்ளப்படுமாகில், மற்றொருவர் இன்னும் விண்ணப்பம் எதையும் வாங்கக்கூடாது.

436. 435-வது பிரிவின்படியாவது மற்றப்படியாவது யாதொரு ரிகார்டைப் பரிசோதிப்பதன்மேல், ஹைகோர்ட்டாராகிலும் ஸெஷன் ஜட்ஜாகிலும், 203-வது பிரிவின்படியாவது 204-வது பிரிவு (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது தள்ளிவிடப்பட்ட யாதொரு பிராதையாவது; குற்றஞ்சாட்டப்பட்டவனாயிருந்து விடுதலை செய்யப்பட்டிருக்கிற யாவனொருவனுடைய கேஸையாவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டையாகிலும் அவருக்குக்கீழ்ப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளில் எவரைக்கொண்டாகிலும் இன்னும் விசாரணை பண்ணும்படி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு உத்தரவு செய்யலாம்; அதற்குமேல் அந்த டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் தாமே அப்படி விசாரணை செய்யலாம், அல்லது அப்படி விசாரணை செய்யும்படி கீழ்ப்பட்ட யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு உத்தரவு பண்ணலாம்.

விசாரணை செய்யும்படி உத்தரவு பண்ண அதிகாரம்.

ஆனால், இந்தப் பிரிவின்படிக்கான உத்திரவை எந்தக் கோர்ட்டாரும், விடுதலை செய்யப்பட்ட யாதொரு நபருடைய கேஸை பரிசீலனை செய்வதற்காக, அப்படிப்பட்ட உத்திரவை ஏன் பிறப்பிக்கக் கூடாது என்பதின் காரணத்தை தெரிவிக்கும்படி அந்த நபருக்கு சந்தர்ப்பம் கொடுத்திருந்தாலொழிய, அம்மாதிரியான யாதொரு உத்திரவையும் செய்யக்கூடாது.

437. 435-வது பிரிவின்படியாகிலும் மற்றப்படியாகிலும் யாதொரு கேஸின் ரிகார்டைப் பரிசோதனை செய்வதன்மேல், ஸெஷன் கோர்ட்டாரால் மாத்திரம் அப்படிப்பட்ட கேஸ் பரிசீலனை செய்யப்படத்தக்கதென்றும், குற்றஞ் சாட்டப்பட்டவனைத் தாழ்ந்த கோர்ட்டார் அக்கிரமமாய் விடுதலை செய்திருக்கிறார்களென்றும், ஸெஷன் ஜட்ஜுக்காவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது தோற்றினால், அந்த ஸெஷன் ஜட்ஜாகிலும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாகிலும் அவனைப் பிடிப்பிக்கலாம்; அதற்குமேல் நூதனமாகப் பரிசீலனை நடத்தும்படி உத்தரவுசெய்யாமல், எந்தவிஷயத்தைப்பற்றி அவன் அக்கிரமமாய் விடுதலை செய்யப்பட்டிருக்கிறானென்று தாங்கள் அபிப்பிராயப்

கம்மிட் பண்ணும்படி உத்தரவு செய்ய அதிகாரம்.

படுகிறார்களோ அந்த விஷயத்தைப்பற்றிப் பரிசிலனைக்கு அவனைக் கம் மிட் பண்ணும்படி உத்தரவு செய்யலாம்.

ஆனால்—

(a) ஏன் கம்மிட் செய்யக்கூடாதோ அதற்கு காரணத்தை அப்படிப்பட்ட ஜட்ஜுக்காவது மாஜிஸ்ட்ரேட்டுக்காவது தெரிவிப்பதற்குக் குற்றஞ் சாட்டப்பட்டவனுக்குச் சமயம் கிடைத்திருக்கவேண்டும்.

(b) குற்றஞ் சாட்டப்பட்டவன் வேறொரு குற்றஞ் செய்திருப்பதாகச் சாட்சியத்தினால் தெரியவருகிறதென்று அந்த ஜட்ஜுக்காவது மாஜிஸ்ட்ரேட்டுக்காவது தோற்றினால், அவர் அப்படிப்பட்ட குற்றத்தைக்குறித்து விசாரணை செய்யும்படி கீழ்க்கோர்ட்டாருக்கு உத்தரவு பண்ணலாம்.

ஹைகோர்ட்டாருக்கு ரிப்போர்ட் பண்ணுவது.

438. (1) ஸெஷன் ஜட்ஜாகிலும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாகிலும், 435-வது பிரிவின்படியாவது மற்றப்படியாவது யாதொரு நடவடிக்கையின் ரிகார்டைப் பரிசோதனை செய்ததன்மேல், தமக்கு யுக்தமாகத் தோற்றினால், அப்படிப்பட்ட பரிசோதனையின் முடிவை ஹைக்கோர்ட்டாருடைய உத்தரவுக்காக ரிபோர்ட் பண்ணலாம். மேலும், அப்படிப்பட்ட ரிபோர்ட்டில் யாதொரு சிட்சையை அடித்து விடும்படியாவது மாற்றும்படியாவது சிபாரிசு பண்ணினால், அப்படிப்பட்ட சிட்சையை நிறைவேற்றுவதை நிறுத்திவைக்கும்படி உத்தரவு செய்யலாம்; அன்றியும், குற்றஞ் சாட்டப்பட்டவன் காவலிலிருப்பானாகில் ஹாஜர் ஜாமீன்மேலாவது அவனிடத்தில் முச்சிலிக்கா பெற்றுக்கொண்டாவது அவனை விடுதலை செய்யும்படி உத்தரவு பண்ணலாம்.

(2) ஒரு அடிஷனல் ஸெஷன் ஜட்ஜானவர்-ஸெஷன் ஜட்ஜினால் தமக்கு மாற்றப்பட்டிருக்கும் யாதொரு கேஸ் விஷயமாகவாவது ஸெஷன் ஜட்ஜானவர் பொதுவான அல்லது தனியான உத்திரவு மூலமாய் அப்படி கட்டளையிடுகிற சகல கேஸுகளின் விஷயமாகவாவது இந்த அத்தியாயத்தின்படி ஸெஷன் ஜட்ஜுக்குள்ள சகல அதிகாரங்களையும்

உடையவராவார் ; மேலும் அவர் அந்த சகல அதிகாரங்களையும் செலுத்தலாம்.

மேற் பரிசோதனை செய்ய ஹைகோர்ட்டாருக்கு அதிகாரம்.

439. (1) ஹைகோர்ட்டார்-தாங்களே எதைப்பற்றி ரிகார்டை வரவழைத்திருக்கிறார்களோ அப்படிப்பட்ட யாதொரு நடவடிக்கை விஷயத்திலாகிலும், உத்தரவுக்காக ரிபோர்ட் செய்யப்பட்டாவது மற்றப்படி தங்களுக்குத் தெரியவந்தாவதிருக்கிற யாதொரு நடவடிக்கை விஷயத்திலாகிலும், தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபட்சத்தில், 423, 426, 427, 428-வது பிரிவுகளின்படி யாதொரு அப்பீல் கோர்ட்டாருக்காவது 338-வது பிரிவின்படி யாதொரு கோர்ட்டாருக்காவது கொடுக்கப்பட்ட அதிகாரங்களி லெதையாகிலும் செலுத்தலாம்; மேலும், சிட்சையை அதிகப்படுத்தலாம், மேற்பரிசோதனைக் கோர்ட் செய்யும் ஜட்ஜுகள் அபிப்பிராயத்தில் சமமாக வேறுபட்டால், 429-வது பிரிவில் கண்டிருக்கிற விதமாய் கேஸ் பைசல் செய்யப்படவேண்டும்.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவன் நேராயாவது ப்ளீடர் மூலமாயாவது தன் பட்சத்தில் பேச அவனுக்குச் சமயங்கொடுத்திருந்தாலொழிய, அவனுக்கு விரோதமாய் இந்தப் பிரிவின்படி எந்த உத்தரவையும் செய்யக்கூடாது.

(3) எதைக்குறித்து இந்தப்பிரிவின்படி காரியம் நடத்தப்படுகிறதோ அந்தச் சிட்சையானது 34-வது பிரிவின்படிக்கல்லாமல் மற்றப்படி பிரவர்த்திக்கிற யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினால் விதிக்கப்பட்டதாயிருந்தால், குற்றஞ் சாட்டப்பட்டவன் என்ன குற்றஞ் செய்திருக்கிறானென்று அந்தக்கோர்ட்டார் அபிப்பிராயப்படுகிறார்களோ அந்தக் குற்றத்துக்கு, ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாலாவது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாலாவது எவ்வளவு தண்டனை விதிக்கப்பட்டிருக்கலாமோ அவ்வளவுக்கு அதிகமாக அந்தக் கோர்ட்டார் விதிக்கக்கூடாது.

(4) இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிற எந்த நிபந்தனையும் 273-வது பிரிவின்படி செய்யப்பட்ட பதிவுக்குச் சம்பந்தப்படவுமாட்டாது ; குற்றவாளி யல்லவென்று செய்கிற விடுதலைத் தீர்மானத்தைக் குற்றஸ்தாபனைத் தீர்மானமாக மாற்றுவதற்கு ஹைகோர்ட்டாருக்கு அதிகார முண்டுபண்ணுவதாக எண்ணவும்படாது.

(5) இந்த கோடின்படி அப்பீல் செய்துகொள்ளக் கூடியதா யிருந்து அப்பில் கொண்டுவரப்படாமலிருந்தால், அப்பீல் செய்து கொண்டிருக்கக்கூடிய கட்சிக்காரன் கேட்டுக்கொள்வதன்மேல் மேற் பரிசோதனை செய்வதற்காக எந்த நடவடிக்கையையும் ஏற்றுக்கொள் ளக்கூடாது.

(6) இந்தப் பிரிவில் என்னசொல்லியிருந்தபோதிலும் பாதக மில்லாமலே, குற்றவாளி என்று தண்டிக்கப்பட்ட யாதொரு நபருக்கு, (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அவனுக்கு விதிக்கப்பட்ட தண்ட னையை ஏன் அதிகப்படுத்தக்கூடாது என்பதின் காரணத்தைத் தெரி விப்பதற்காக அவனுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருந்து, அப்படி தெரிவிக்கையிலேயே, தான் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்ட தைக் குறித்த ஆட்சேபனைகளையும் சொல்லிக் கொள்வதற்கும் சுதந்தர முடையவனுவான்.

நபர்கள் சொல்லிக்கொள்வதைக் கேட்பது கோர்ட்டாருடைய இஷ்டம்.

440. மேற் பரிசோதனை அதிகாரஞ்செலுத் துகையில் யாதொரு கோர்ட்டுக்கு முன்பாக நேரா யாகிலும் ப்ளீடர் மூலமாயாகிலும் தன் சங்கதி யைச் சொல்லிக்கொள்ள எவனுவது எவ்வித சுதந் தரமு முடையவனல்ல :

ஆனுல், அப்படிப்பட்ட அதிகாரத்தைச் செலுத்துகையில் அந் தக் கோர்ட்டார்-தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினுல், யாதொரு நபர் நேராகவாவது ப்ளீடர் மூலமாகவாவது சொல்லிக்கொள்வதைக் கேட்கலாம்: மேலும், இந்தப் பிரிவிற்கண்ட எந்த நிபந்தனையினுலும் 449-வது பிரிவு (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்குப் பாதகமுண்டாவதாக எண்ணக்கூடாது.

ராஜதானி மாஜிஸ்ட்ரேட் தம்முடைய தீர்மானத்திற்குள்ள ஆதாரங்களை எழுதி யனுப்புகிற ஸ்டேட்மெண்டை ஹைகோர்ட்டார் யோசிப்பது.

441. யாதொரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டினுடைய யாதொரு நடவடிக்கையைச் சேர்ந்த ரிகார்டை, 435-வது பிரிவின்படி ஹைகோர்ட்டார் அனுப்பச்சொன் னல், அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர்-அந்த ரிகார் டோடுகூடத் தம்முடைய தீர்மானம் அல்லது உத்த ரவுக்குண்டான ஆதாரங்களையும் விவாத அம்ச முடிவுக்கு முக்கியமானதாகத் தமக்குத் தோற்று கிற சங்கதிகளையும் கண்டெழுதி ஒரு ஸ்டேட் மெண்டை அனுப்பலாம்; அந்தக் கோர்ட்டார்

மேற்படி தீர்மானத்தையாவது உத்தரவையாவது மாற்றுவதற்கு முன்னமேயாகிலும் தள்ளிவிடுவதற்கு முன்னமேயாகிலும் அப்படிப்பட்ட ஸ்ட்டேட்மென்டை யோசிக்கவேண்டும்.

ஹைகோர்ட்டாருடைய உத்தரவை ஸெர்ட்டிபை பண்ணிக் கீழ்க்கோர்ட் அல்லது மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்புவது.

442. ஹைகோர்ட்டார் இந்த அத்தியாயத்தின்படி யாதொரு கேஸை மேற்பரிசோதனை செய்தால், அவர்கள் 425-வது பிரிவினால் இதில் முன்னமே நிபந்தனை கண்டிருக்கிற விதமாகத் தங்களுடைய தீர்மானத்தையாவது உத்தரவையாவது ஸெர்ட்டிபை செய்து, எது மேற்பரிசோதனை பண்ணப்பட்டதோ அந்தத் தீர்மானம், சிட்சை அல்லது உத்தரவை ரிகார்ட் செய்தாவது பிறப்பித்தாவதிருக்கிற கோர்ட்டுக்கு அனுப்பவேண்டும்; எந்தக் கோர்ட்டுக்கு அல்லது மாஜிஸ்ட்ரேட்டுக்கு அந்தத் தீர்மானமாவது உத்தரவாவது அப்படி ஸெர்ட்டிபைசெய்து அனுப்பப்படுகிறதோ அந்தக் கோர்ட்டாராகிலும் மாஜிஸ்ட்ரேட்டாகிலும் ஸெர்ட்டிபை செய்து அப்படி அனுப்பப்பட்ட தீர்மானத்துக்கு ஒத்திருக்கும்படியான உத்தரவுகளை அதற்குமேல் செய்யவேண்டும்; அன்றியும், அவசியமானால் அதற்கு ஒத்திருக்கும்படி ரிகார்டைத் திருத்தவேண்டும்.

8-ம் பாகம்.

பிரத்தியேக நடவடிக்கைகள்.

33-ம் அத்தியாயம்.

யுரோப்பியர்கள், இந்திய ப்ரிடிஷ்குடிகள் சம்பந்தப்பட்ட கேஸுக்குப் பிரத்தியேகமான நிபந்தனைகள்.

இந்த அத்தியாயம் பிரயோகப்படுவதைக்குறித்து தீர்மானம்.

443. (1) ஒரு ராஜதானி பட்டணத்திற்கு வெளியில், காவல் தண்டனை விதிக்கத்தக்க யாதொரு குற்றத்தைப் பரிசிலனை செய்கையிலே, குற்றஞ்சாட்டப்பட்ட நபர்-சந்தர்ப்பத்துக்கேற்றபடி, 213-வது பிரிவின்படி பரிசிலனைக்காக கமிட்செய்யப்படுவதற்கு முன்னமேயும், 242-வது பிரிவின்படி குற்றவாளி

யல்லவென்று தீர்மானிக்க ஏதாவது நியாயமிருந்தால் தெரிவிக்கும்படி கேட்கப்படுவதற்கு முன்னமேயும், 256-வது பிரிவின்படி தன்பக்ஷத்தில் வாதிக்கதொடங்குவதற்கு முன்னேயும், எப்போதாவது, அந்தக் கேஸ் இந்த அத்தியாயத்தின் நிபந்தனைகளின்படி பரிசீலனை செய்யப்படவேண்டுமென்று கோருவானாகில், அந்தக்கேஸை பரிசீலனை அல்லது விசாரணைசெய்கிற மாஜிஸ்ட்ரேட், தமக்கு அவசியமாகத் தோற்றுகிற விசாரணைசெய்த பின்பு, குற்றஞ்சாட்டப்பட்ட நபர் அப்படி கோருகிறதற்குண்டான சாட்சியம் கொண்டுவருவதற்காக நியாயமாய் வேண்டிய அவகாசம்கொடுத்து, அதன்மேல், அவர்—

(a) பிராதுக்காரனாவது குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களாவது அல்லது அவர்களில் யாதொருவனாவது முறையே யுரோப்பியனாகவும் இந்திய ப்ரிடிஷ் குடியாகவும் இருந்தாலும், அல்லது

(b) ஒரு யுரோப்பிய ப்ரிடிஷ் குடியும், ஒரு இந்திய ப்ரிடிஷ் குடியும் இருவருமாக சேர்ந்து அந்தக்குற்றத்தில் சம்பந்தப்பட்டிருப்பதினிமித்தம், நியாயம் தவறாமலிருப்பதற்கு அந்த கேஸை இந்த அத்தியாயத்தின் நிபந்தனைகளின்படி பரிசிலனை செய்யவேண்டியது அவசியமாய் இருப்பதாகதெரிந்து திருப்தியடைந்தால், அந்தக் கேஸ் இந்த அத்தியாயத்தின் நிபந்தனைகளின்படி பரிசீலனை செய்யப்படவேண்டிய கேஸென்று ஒரு தீர்மானம் எழுதி ரெகார்ட் செய்தாவது அல்லது அவர் அப்படி திருப்தியடையாவிட்டால், அது அப்படிப்பட்ட கேஸல்லவென்று ஒரு தீர்மானம் எழுதி ரெகார்ட் செய்யவாவதுவேண்டும்.

(2) மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்தக் கோரிக்கையை நிராகரிப்பாராகில், அதைச் செய்துகொண்ட நபர் ஸெஷன் ஜட்ஜுக்கு அப்பீல் செய்துகொள்ளலாம். ஸெஷன் ஜட்ஜ் அதன்மேல்செய்யும் தீர்மானம் முடிவானதாகும். அதைக்குறித்து அப்பீலாகிலும் மேற்பரிசோதனையாகிலும் செய்ய எந்தக்கோர்ட்டாரையும் கேட்கக்கூடாது.

(3) மாஜிஸ்ட்ரேட் அந்த கோரிக்கையை நிராகரித்தால், அப்பீல் செய்வதற்குண்டான காலம் கழிகிறவரையிலாவது அப்பீல்செய்துகொள்ளப்பட்டிருந்தால் அது தீர்மானிக்கப்படுகிற வரையிலாவது அவர் அதன் நடவடிக்கைகளை நிறுத்திவைக்கவேண்டும்.

பிராதுக்காரர் என்பதின் அர்த்தம்.

444. 443-வது பிரிவின் காரியங்களுக்காக "பிராதுக்காரர்" என்பதிலே, பிராதுகொடுக்கிறவன் அல்லது 190-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின் (b) பகுதியின்படி பிடிக்கக்கூடிய யாதொரு கேஸிற்கு சம்பந்தப்பட்டதைக்குறித்து ரிபோர்ட் செய்திருக்கிற நபரென்றும், 154-வது பிரிவில் அர்த்தஞ்சொல்லப்பட்டபடி குற்றஞ் செய்யப்படுவதைக்குறித்து சங்கதி தெரிவிக்கிற யாதொரு நபரென்றும் அர்த்தமாகும்.

ஆனல், பிரதேச கவர்ன்மெண்டார் ஒருபப்ளிக் பிராஸிக்யூட்டருக்கும், சர்க்கார் உத்தியோகஸ்தருக்கும், அவ்வவ்விடத்திய யாதொரு அதிகார சபையின் ஒரு மெம்பர் உத்தியோகஸ்தர் அல்லது வேலைக்காரனுக்கும் 1890-ம்வருஷத்திய இந்துதேசத்து ரெயில்வேக்களைக் குறித்த 9-வது ஆக்டின் 3-வது பிரிவில் விவரித்திருக்கிறபடி யாதொரு ரெயில்வே வேலைக்காரனுக்கும், யாதொரு கம்பெனி, சங்கத்தார் அல்லது வேறே சபையார்களுடைய உத்தியோகஸ்தர் அல்லது வேலைக்காரனுக்கும், பிரதேச சர்க்கார் கெஜட்டில் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்திரவு மூலமாய், இந்தப்பிரிவின் நிபந்தனைகள் பிரயோகப்படுமென்று கட்டளையிடலாம். ஆனல், தன்னுடைய உத்தியோக ஹோதாவிலே அப்படிப்பட்ட பப்ளிக் பிராஸிக்யூட்டராகவாவது சர்க்கார் உத்தியோகஸ்தராகவாவது ரெயில்வே வேலைக்காரராகவாவது, யாதொன்றின் மெம்பர், உத்தியோகஸ்தர் அல்லது வேலைக்காரராகவாவது பிராது கொடுத்திருப்பது அல்லது சங்கதி தெரிவித்திருப்பதின் ஒரு காரணத்தினல்மட்டும் இந்தப்பிரிவின் தாத்பரியப்படி அவர் ஒரு பிராதுக்காரராக எண்ணப்படமாட்டார். மேலும், 173-வது பிரிவின்படி ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் தாமேயாவது அல்லது தம்மூலமாயாவது ஒரு கேஸைக்குறித்து ரிபோர்ட்டு செய்திருப்பதின் ஒரு சங்கதியின் காரணமாகமட்டும், அவர் இந்தப் பிரிவின்படி பிராதுக்காரராக எண்ணப்படமாட்டார்.

ஸம்மன் கேஸ்களில் நடவடிக்கை.

445. (1) மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷன் ஜட்ஜாவது ஒரு கேஸை இந்த அத்தியாயத்தின் நிபந்தனைகளின்படி பரிசீலனை செய்யவேண்டியதென்று 443-வது பிரிவின்படி தீர்மானித்து, அந்தக்கேஸ் ஒரு ஸம்மன் கேஸாயிருந்தால், அதைப் பரிசீலனைசெய்கிற

மாஜிஸ்ட்ரேட் அந்தக்கேஸை இரண்டு மாஜிஸ்ட்ரேட்டுகளடங்கிய ஒரு நியாய சபையாரால் (Bench) விசாரணை செய்யப்படவேண்டுமென்று உத்திரவிட்டு. அந்த உத்திரவின் நகலொன்றை டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பவேண்டும். அவர் உடனே. ஒருவர் யுரோப்பியராகவும் மற்றொருவர் இந்திராகவும் உள்ள இரண்டு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் அடங்கிய ஒரு நியாய சபையை அந்தக் கேஸை விசாரிப்பதற்காக ஏற்படுத்தவேண்டும்.

(2) இந்தப் பிரிவின்படி ஒரு கேஸைப் பரிசீலனைசெய்கிற நியாய சபையிலுள்ள மாஜிஸ்ட்ரேட்டுகள் அபிப்பிராயத்தில் மாறுபட்டால் அந்தக் கேஸை தங்களுடைய அபிப்பிராயக் குறிப்புகளுடன் ஸெஷன் ஜட்ஜுக்கு அனுப்பவேண்டும். அவர் அந்த கேஸின் எந்த கட்சிக்காரரையாவது, முன்னமே அந்தக் கேஸில் சாட்சியம் கொடுத்திருக்கிற யாதொரு சாட்சியையாவது மறுபடி அழைத்து விசாரணை அல்லது விமரிசை செய்யலாம், அல்லது வேறே சாட்சியம் கொடுக்கும்படி கேட்கலாம். அதன் பிறகு அந்தக்கேஸிலே தமக்கு தகுதியாய் தோற்றுகிறபடியும் சட்டப்பிரகாரமுமான தீர்மானம் அல்லது தண்டனை அல்லது உத்தரவைச் செய்யவேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி ஒரு நியாய சபையாரால் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்ட யாதொரு நபர்-ஒரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டினால் குற்றவாளியென்று தண்டிக்கப்பட்டால் எப்படி அப்பீல் செய்துகொள்ளலாமோ அதேமாதிரி அப்பீல்செய்துகொள்ள சுதந்தரமுடையவனாவான். (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஒரு ஸெஷன் ஜட்ஜியினால் யாதொரு நபர் குற்றவாளியென்று தண்டிக்கப்பட்டாலும் இந்தக் கோடின் நிபந்தனைகளின்படி ஒரு ஸெஷன் ஜட்ஜி செய்கிற ஒரு விசாரணையிலே அந்த ஸெஷன் ஜட்ஜியினால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டால், எப்படி ஹைகோர்ட்டாருக்கு அப்பீல்செய்து கொள்ளலாமோ அதேமாதிரி அப்பீல் செய்துகொள்ளலாம்.

(4) யாதொரு டிஸ்ட்ரிக்டிலே (1) குறிப்பிட்ட உட்பிரிவின் நிபந்தனைகளின் பிரகாரம் ஒரு நியாய சபையை அமைப்பது சாத்தியப்படாத விஷயத்திலே, ஹைகோர்ட்டார் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்திரவு மூலமாய் கட்டளையிடுகிறபடி அந்த டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட், அம்மாதிரியான ஒரு நியாய சபையாரால் அந்த

தக்கேஸ் விசாரிக்கப்படுவதற்காக வேறெந்த ஜில்லாவிற்காவது அதை யாற்றலாம்.

(5) இந்தப் பிரிவில் என்னசொல்லியிருந்தபோதிலும் பாதக மில்லாமலே, அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் பிரதேச சர்க்கார் கெஜட்டில் விளம்பரம் பிரசுரித்து அதில் குறிப்பிட்ட யாதொரு டிஸ்ட்ரிக்டிலே இந்த அத்தியாயத்தின் நிபந்தனைகளின்படி விசாரணைசெய்யப்படுகிற எல்லா சம்மன் கேஸுகளையும், இதில் பின்னால், வாரன்ட் கேஸுகளை விசாரணைசெய்வதற்காக என்ன நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கிறதோ அதன் பிரகாரம், அவைகள் வாரன்ட் கேஸுகளாய் இருந்தாற்போலவே விசாரணைசெய்யும்படி உத்திரவிடலாம்.

வாரன்ட் கேஸ்களில் நடவடிக்கை.

446. (1) ஒரு மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷன் ஜட்ஜாவது, ஒரு கேஸை இந்த அத்தியாயத்தின் நிபந்தனைகளின்படி பரிசீலனை அல்லது விசாரணை செய்ய வேண்டுமென்று 443-வது பிரிவின்படி தீர்மானித்து, அந்த கேஸ் வாரன்ட் கேஸாயிருந்தால் அதைப் பரிசீலனை அல்லது விசாரணை செய்கிற மாஜிஸ்ட்ரேட், சந்தர்ப்பத்துக்கேற்றபடி, குற்றஞ் சாட்டப்பட்டவனை 209-வது அல்லது 253-வது பிரிவின்படி விடுதலை செய்யாமலிருந்தால், அந்தக் கேஸ் ஸெஷன் கோர்ட்டாராலேயே விசாரணை செய்யப்படுவதாய் இருந்தாலும் இராவிட்டாலும், அதை ஸெஷன் கோர்ட்டாருக்கே கம்மிட் பண்ணவேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஒரு குற்றஞ் சாட்டப்பட்டவன் ஸெஷன் கோர்ட்டுக்கு கம்மிட் செய்யப்பட்டால், அந்தக் கோர்ட்டார் குற்றஞ்சாட்டப்பட்டவன் தன்னை 275-வது பிரிவின் நிபந்தனைகளின்படி பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டாற்போலவே, விசாரணையை மேல்நடத்தவேண்டும். மேலும் அந்தப் பிரிவின் நிபந்தனைகளும், 23-வது அத்தியாயத்தின் இதர நிபந்தனைகளும் சாத்தியமானவரையிலே அப்படியே பிரயோகப்படும்.

ஆனால், ஸெஷன் கோர்ட்டாருக்குமுன் விசாரணை சாதாரணமாய் அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு செய்யப்படுவதாய் இருந்தாலும், குற்றஞ் சாட்டப்பட்டவனாவது அல்லது அவர்களெல்லோருமாகவாவது 284-A பிரிவின்படி விசாரணை செய்யப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டாலும், அந்த விசாரணையை அஸெஸர்க

ருடைய சகாயத்தோடு நடத்தவேண்டியதுமல்லாமல், அஸெஸர்களி லெல்லோரும், குற்றஞ் சாட்டப்பட்டவர்கள், யுரோப்பிய ப்ரிடிஷ் குடிகளாயிருந்தால் யுரோப்பியர் அல்லது அமெரிக்கர்களாயும்; இந்தியப் ப்ரிடிஷ்குடிகளாயிருந்தால் இந்தியர்களாகவும் இருக்க வேண்டும்.

கோர்ட்டார் சில விஷயங்களிலே குற்றஞ் சாட்டப்பட்டவர்களுடைய சுதந்தரங்களை தெரிவிப்பது.

447. இந்தக் கோடின்படிக்கான ஒரு பரிசிலனை அல்லது விசாரணையின் எந்த தசையிலாவது, அந்தக்கேஸ் இந்த அத்தியாயத்தின் நிபந்தனைகளின்படி விசாரணை செய்யப்படவேண்டியதாகவாவது அல்லது அப்படி இருப்பதாய் எண்ணக்கூடிய கேஸாய் இருப்பதாக அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோன்றினல், அவர் உடனே குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு இந்த அத்தியாயத்தின்படிக்குள்ள சுதந்தரங்களை தெரிவிக்க வேண்டும்.

ரெங்கூன் பட்டணத்திலே ஸெஷன் ஜட்ஜுக்கு தெரிவித்துக்கொள்ளப்பட்டவை அவ்விடத்திய ஹைகோர்ட்டாருக்குசெய்து கொண்டதைப்போலவே பாவிப்பது.

448. ரெங்கூன் பட்டணத்தில், இந்த அத்தியாயத்தின் நிபந்தனைகளின்படி யாதொரு நபரின்மேல் செய்யப்படுகிற ஒரு விசாரணையின் காரியங்களுக்காக ஸெஷன் ஜட்ஜியின் அபிப்பிராயத்துக்கு (References) அனுப்பப்படுகிறவைகளெல்லாம் அவ்விடத்திய ஹைகோர்ட்டாருக்கு தெரிவித்துக்கொள்ளப்பட்டதாகவே எண்ணப்படும்.

அப்பீல்களைக் குறித்த விசேஷ நிபந்தனைகள்.

449. (1) அப்படிப்பட்ட—

(a) ஒருகேஸ் இந்த அத்தியாயத்தின்படி, ஹைகோர்ட்டார் அல்லது ஸெஷன் கோர்ட்டாருக்குமுன் ஜூரியினல் பரிசிலனைசெய்யப்பட்டாலும்,

(b) மற்றப்படி யாதொரு கேஸ் இந்த அத்தியாயத்தின்படி பரிசிலனைசெய்யப்படத்தக்கதாய் இருக்கும்பொழுது அதை, இந்தக் கோடின்படி ஹைகோர்ட்டாருக்கு சமிட் செய்யப்பட்டாவது மாற்றப்பட்டாவதிருந்து, அதை அந்தக் கோர்ட்டிலே ஜூரர்களால் பரிசிலனை செய்யப்பட்டாலும்,

(c) ஒருகேஸ் ஒருராஜதானிப் பட்டணத்திலே, ஹைகோர்ட்டாருக்குமுன் ஜூரியினால் பரிசீலனை செய்யப்பட்டால் அந்தக்கேஸை ராஜதானிப்பட்டணத்துக்கு வெளியிலுள்ள இடத்திலே விசாரணை செய்திருந்தால் இந்த அத்தியாயத்தின் நிபந்தனைகளின்படி பரிசீலனை செய்யப் படத்தக்கதாய் இருக்கும் என்னும் காரணத்தினால் அப்பீல்செய்துகொள்ள அனுமதி கொடுத்தாலும்,

அப்பொழுது 418-வது அல்லது 423-வது பிரிவின் (2) குறிப்பிட்ட உட்பிரிவிலாவது, யாதொரு ஹைக்கோர்ட்டாருடைய லெடர்ஸ் பேடன்ட் என்னும் அதிகாரப் பத்திரத்திலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, சட்டத்தைப்பற்றிய விஷயத்தைக்குறித்துச் செய்வதுபோலவே சங்கதியைப்பற்றிய விஷயத்தைக்குறித்தும் அப்பீல் செய்துகொள்ளலாம்.

(2) யாதொரு ஹைக்கோர்ட்டின் லெடர்ஸ் பேடன்ட் என்னும் அதிகாரப்பத்திரத்தில் என்ன சொல்லியிருந்தபோதினும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டார், (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு நடவடிக்கையிலே ஹைக்கோர்ட்டாரால் விடுதலை செய்கிற அசல் உத்திரவின்மேல் அந்த ஹைக்கோர்ட்டாருக்கே அப்பீல் கொடுக்கும்படி பப்ளிக் ப்ராஸிக்யூட்டருக்கு உத்திரவிடலாம்.

(3) (1) அல்லது (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளின்படி செய்துகொள்ளப்பட்ட ஒரு அப்பீலை அந்த ஹைக்கோர்ட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட ஜட்ஜுகள் இருந்தால், அந்த ஹைக்கோர்ட்டிலுள்ள இரண்டு ஜட்ஜுகளால் விசாரிக்கப்படவேண்டும்.

450-வது பிரிவுமுதல் **463**-வது பிரிவுவரையில் 1923-ம்வருஷத்திய 12-வது ஆக்டால், ரத்து செய்யப்பட்டது.

---

34 - ம் அத்தியாயம்.

பைத்தியக்காரர்களைக்குறித்து.

464. (1) விசாரணையாவது பரிசீலனையாவது செய்கிறயாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர் - குற்றஞ்சாட்டப்பட்ட

குற்றஞ்சாட்டப் பட்டவன் பைத்தி

[illegible]

யக்காரனு யிருந்தால் நடவடிக்கை.

தன் பட்சத்தில் வாதிக்க அசக்தனுயுமிருக்கிறு னென்று தாம் நம்புவதற்கு ஹேதுவிருந்தால், புத்திமாருட்டம் உண்மையாவென்று விசாரித்து அப்படிப்பட்டவனை அந்த டிஸ்ட்ரிக்ட் ஸிவில் ஸர்ஜனாலாவது பிரதேச கவர்ன்மெண்டார் உத்தரவுசெய்கிற வேறே வைத்திய உத்தியோகஸ்தராலாவது பரிசோதிப்பித்து, அதற்குமேல் அந்த ஸர்ஜனையாகிலும் வேறே வைத்திய உத்தியோகஸ்தரையாகிலும் சாட்சியாக விமரிசை செய்து அந்த விமரிசையை எழுதிவைக்கவேண்டும்.

(1-a) அப்படிப்பட்ட விமரிசையும் விசாரணையும் முடிவாகிற வரையிலே, மாஜிஸ்ட்ரேட்டானவர்-குற்றஞ்சாட்டப்பட்டவன் விஷயமாய் 466-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளை யனுசரித்துப் பிரவர்த்திக்கலாம்.

(2) அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் குற்றஞ்சாட்டப்பட்டவன் புத்திமாருட்ட முள்ளவனென்றும் அதனாலே அவன் தன்பட்சத்தில் வாதிக்க அசக்தனு யிருக்கிறுனென்றும் அபிப்பிராயப்பட்டால், அவர் அந்தப்படி ஒரு தீர்மானம் எழுதிவைக்க வேண்டியதுமல்லாமல், அந்த கேஸில் இன்னும் நடவடிக்கைகளை நடத்தாமல் நிறுத்திவைக்கவும் வேண்டும்.

ஸெஷன் கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் ஹைகோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் கம்மிட் பண்ணப்பட்டவன் பைத்தியக்காரனு யிருக்கிற விஷயத்தில் இன்னதுசெய்வது.

465. (1) பரிசிலனைக்காக ஸெஷன் கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் ஹைக்கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் கம்மிட்பண்ணப்பட்டவனெவனுவது புத்தி மாருட்டமுள்ளவனுயிருக்கிறுனென்றும் அதனாலே தன் பட்சத்தில் வாதிக்க அசக்தனு யிருக்கிறுனென்றும் பரிசிலனையில் அந்தக் கோர்ட்டாருக்குத் தோற்றினுல், ஜூரியாவது அஸெஸர்களுடைய உதவியோடு கோர்ட்டாராவது அப்படி புத்தி மாருட்டமும் அசக்தியுண்டென்பதைக் குறித்துப் பிரதமத்திலே பரிசிலனை செய்யவேண்டும்; மேலும் அந்தச் சங்கதி உண்மையென்று சந்தர்ப்பத்துக்கேற்றபடி, ஜூரியாவது கோர்ட்டாராவது தெரிந்து திருப்தியடைந்தால், ஜட்ஜானவர் அதைக்கண்டு ஒரு தீர்மானத்தை எழுதிவைத்து அந்தக்கேஸில் பின்னும் நடவடிக்கையை நிறுத்திவைக்கவேண்டும்; அல்லாமலும், ஜூரி எவர்களேனுமிருந்தால் அவர்களை அனுப்பிவிடவேண்டும்.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவனுக்குப் புத்திமாருட்டமும் அசக்தியுமுண்டென்பதைப்பற்றிய பரிசீலனையை அவனைக்குறித்துக் கோர்ட்டாருக்கு முன்பாக நடக்கும் பரிசீலனையில் ஒருபாகமாக எண்ணவேண்டும்.

முதல் விசாரணை யாவது பரிசீலனை யாவது முடிகிறவரையில் பைத்தியக் காரனை விடுதலை செய்வது.

466. (1) குற்றஞ் சாட்டப்பட்டவன் புத்திமாருட்டக்காரனும், தன்பட்சத்தில் வாதிக்க அசக்தனுமிருப்பதாகக் காணப்பட்டால், சங்கதிக்குத்தக்கபடி மாஜிஸ்ட்ரேட்டாவது கோர்ட்டாராவது அந்தக் கேஸானது ஹாஜர் ஜாமீன் வாங்கக்கூடிய கேஸாயிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி, அந்தப் பைத்தியக்காரனை ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து அவன் தனக்கும் மற்றவர்களுக்கும் சங்கடமுண்டுபண்ணவொட்டாமல் வைத்துவருகிறதாகவும், வேண்டும்போது மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகவாகிலும் கோர்ட்டாருக்கு முன்பாகவாகிலும், மாஜிஸ்ட்ரேட்டாராவது கோர்ட்டாராவது இதுவிஷயத்தில் நியமிக்கிற உத்தியோகஸ்தருக்கு முன்பாகவாகிலும் ஹாஜர் படுத்துகிறதாகவும், போதுமான ஜாமீன் கொடுக்கப்படுமாகில், அவனை விட்டுவிடலாம்.

பைத்தியக்காரனைக் காவலில்வைத்திருப்பது.

(2) அந்தக் கேஸானது ஹாஜர் ஜாமீன் வாங்கக்கூடாததுதென்று மாஜிஸ்ட்ரேட்டாகிலும் கோர்ட்டாராகிலும் அபிப்பிராயப்படுகிற கேஸாயிருந்தாலும் போதுமான ஜாமீன் கொடுக்கப்படாவிட்டாலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி மாஜிஸ்ட்ரேட்டாவது கோர்ட்டாராவது குற்றஞ்சாட்டப்பட்டவனைத் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் இடத்திலும் விதமாகவும், பத்திரமான காவலில் மறியல் செய்துவைக்கும்படி உத்தரவுசெய்து நடத்தப்பட்ட நடவடிக்கையைக் குறித்து பிரதேச கவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட் பண்ணவேண்டும்.

ஆனல், குற்றஞ் சாட்டப்பட்டவனை யாதொரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் மறியல்செய்து வைப்பதற்காக, பிரதேச கவர்ன்மெண்டார் 1912-ம்வருஷத்திய இந்துதேசத்து பைத்தியக்காரர்களைக் குறித்த ஆக்டின்படி செய்திருக்கக்கூடிய விதிகளின்படிக்கன்றி மற்றப்படி, எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படாது.

விசாரணை அல்லது பரிசிலனையை மறுபடியும் ஆரம்பிப்பது.

467. (1) விசாரணையாவது பரிசிலனையாவது 464-வது அல்லது 465-வது பிரிவின்படி நிறுத்திவைக்கப்பட்டபோதெல்லாம், சங்கதிக்குத்தக்கபடி மாஜிஸ்ட்ரேட்டாகிலும் கோர்ட்டாராகிலும் அந்த விசாரணை அல்லது பரிசிலனையை மறுபடி எப்போதாகிலும் ஆரம்பிக்கலாம்; மேலும், குற்றஞ்சாட்டப்பட்டவனை அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட் அல்லது கோர்ட்டாருக்கு முன்பாக ஹாஜராகும்படிக்காவது கொண்டுவரும்படிக்காவது உத்தரவு செய்யலாம்.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவன் 466-வது பிரிவின்படி விடப்பட்டிருந்து, அவன் ஹாஜராவதற்காக ஜாமீன் கொடுத்திருக்கிறவர்கள்-இதுவிஷயத்தில் மாஜிஸ்ட்ரேட்டாவது கோர்ட்டாராவது நியமிக்கிற உத்தியோகஸ்தரிடத்திற்கு அவனைக் கொண்டுவந்துவிட்டால் குற்றஞ் சாட்டப்பட்டவன் தன் பட்சத்தில் வாதிக்கச் சக்தியுள்ளவனயிருக்கிறனென்று அந்த உத்தியோகஸ்தர் கொடுக்கிற ஸெர்ட்டிபிகேட்டானது சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதாகும்.

குற்றஞ் சாட்டப்பட்டவன் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகவாவது கோர்ட்டாருக்கு முன்பாகவாவது ஹாஜராவதன்மேல் நடவடிக்கை.

468. (1) குற்றஞ் சாட்டப்பட்டவன் சங்கதிக்குத் தக்கபடி மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகவாவது கோர்ட்டாருக்கு முன்பாகவாவது ஹாஜராலும் மறுபடிகொண்டுவரப்பட்டாலும் அவன் தன்பட்சத்தில் வாதிக்கச் சக்தியுள்ளவனயிருக்கிறனென்று அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்காவது கோர்ட்டாருக்காவது தோற்றுகிறபக்ஷத்தில், விசாரணை அல்லது பரிசிலனை நடத்தப்படவேண்டும்.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவன் தன்பட்சத்தில் வாதிக்க இன்னும் அசக்தனயிருக்கிறனென்று மாஜிஸ்ட்ரேட்டுக்காவது கோர்ட்டாருக்காவது தோற்றினல், சங்கதிக்குத் தக்கபடி, அவர்கள் மறுபடியும் 464-வது 465-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி நடக்கவேண்டியது மல்லாமல் குற்றஞ் சாட்டப்பட்டவன் புத்தி மாருட்டமுடையவனாகவும் தன் பட்சத்தில் வாதிக்கச் சக்தியற்றிருப்பதாகவும் காணப்பட்டால். குற்றஞ்சாட்டப்பட்ட அந்த நபர் விஷயமாய் 466-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளை அனுசரித்தும் நடக்கவும் வேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டவன் பைத்தியக்காரனயிருந்திருக்கிறதாகத் தோற்றினல் நடவடிக்கை.

469. குற்றஞ்சாட்டப்பட்டவன் விசாரணை அல்லது பரிசீலனைக்காலத்தில் புத்தி தெளிவுள்ளவனய்க் காணப்பட்டால், அவன் புத்தி தெளிவுள்ளவனு யிருந்திருப்பானுகில் குற்றமா யிருந்திருக்கும்படியான யாதொரு காரியத்தை அவன் செய்தானென்றும், அந்தக் காரியம் செய்யப்பட்ட காலத்தில் புத்தி மாருட்டத்தினுலே அந்தக்காரியம் இப்படிப்பட்டதென்ருவது தப்பாயாகிலும் சட்டத்துக்கு விரோதமாயாகிலும் இருந்ததென்ருவது தெரிந்துகொள்வதற்கு அசக்தனு யிருந்தானென்றும் நம்புவதற்கு ஆதாரமிருக்கிறதாக மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தன்முன்பாகச் சொல்லப்பட்ட சாட்சியத்தின் மூலமாய்த் திருப்தியாகத் தோற்றுகிற பட்சத்தில், மாஜிஸ்ட்ரேட்டானவர் கேஸை நடத்தவேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவனை ஸெஷன் கோர்ட்டுக்காவது ஹைகோர்ட்டுக்காவது கமிட்பண்ணவேண்டியதாயிருந்தால், சங்கதிக்குத் தக்கபடி ஸெஷன் கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் ஹைகோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் பரிசீலனைக்காக அவனை அனுப்பவேண்டும்.

பைத்தியக்காரனென்கிற ஹேதுவின்மேல் குற்றவாளியல்லவென்று விடுதலை தீர்ப்பு.

470. யாவனெருவன் யாதொரு குற்றஞ்செய்ததாகச் சொல்லப்பட்ட காலத்தில், குற்றமானதாய்ச் சொல்லப்பட்ட காரியம் இப்படிப்பட்டதென்ருவது தப்பாயாகிலும் சட்டத்துக்கு விரோதமாயாகிலும் இருந்ததென்ருவது தெரிந்துகொள்வதற்குப் புத்தி மாருட்டத்தினுலே அசக்தனுயிருந்தானென்கிற ஹேதுவின்மேல் அவனைக் குற்றவாளி யல்லவென்று விடுதலை செய்யும்போது அந்தத் தீர்மானத்தில் அவன் அந்தக் காரியத்தைச் செய்தானே இல்லையோவென்பதை ஸ்பஷ்டமாய்க் கண்டெழுதவேண்டும்.

அப்படிப்பட்ட ஹேதுவின் மேல் குற்றவாளி யல்லவென்று விடுதலை செய்யப்பட்டவனைப்பத்திரமான காவலில் வைத்திருப்பது.

471. (1) குற்றஞ் சாட்டப்பட்டவன் என்ன செய்ததாகச் சொல்லப்படுகிருனே அந்தக் காரியத்தை அவன் செய்ததுண்டென்று அந்தத் தீர்மானத்தில் கண்டெழுதப்படுமாகில், கண்டுகொள்ளப்பட்ட அசமர்த்ததையில்லாவிட்டால், அப்படிப்பட்ட காரியம் குற்றமாயிருந்திருக்கிறபட்சத்தில், யாருக்கு முன்பாகப் பரிசீலனை நடத்தப்பட்டதோ அந்த மாஜி

ஸ்ட்ரேட்டாவது கோர்ட்டாராவது தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறவிதமாய்த் தாங்கள் குறிக்கிற இடத்தில் அப்படிப்பட்டவனைப் பத்திரமான காவலில் மறியல் செய்துவைக்கும்படி உத்தரவுசெய்து, நடத்தப்பட்ட நடவடிக்கையை குறித்து பிரதேச கவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட் பண்ணவேண்டும்.

ஆனால் குற்றஞ்சாட்டப்பப்பட்டவனை யாதொரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் மறியல்செய்துவைப்பதற்காக, பிரதேச கவர்ன்மெண்டார் 1912-ம் ஷத்திய இந்து தேசத்து பைத்தியக்காரர்களைக் குறித்த ஆக்டின்படி செய்திருக்கக்கூடிய விதிகளின்படிக்கன்றி மற்றப்படி எந்த உத்திரவும் பிறப்பிக்கக்கூடாது.

(2) அவ்விடத்திய கவர்ன்மெண்டார் அப்படிபட்டவனைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலாவது ஜெயிலிலாவது பத்திரமான காவலுக்குத் தகுந்த வேறேயிடத்திலாவது வைத்திருக்கும்படி உத்தரவு செய்யலாம்.

பிரதேச கவர்ன்மெண்டாருடைய உத்தரவினால் அடைத்து வைக்கப்பட்ட குற்றவாளிகளாகிய பைத்தியக்காரர்களை ஒரு மாகாணத்திலிருந்து வேறொரு மாகாணத்திற்குக் கொண்டு போகும்படி உத்தரவுபண்ண ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜெனரலவர்களுக்கு அதிகாரம்.

எவனை இந்த அத்தியாயத்தின்படி பிரதேச கவர்ன்மெண்டார் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலாவது ஜெயிலிலாவது பத்திரமான வேறே காவலிடத்திலாவது வைக்கும்படி உத்தரவு செய்திருக்கிறார்களோ அவனை அவன் வைக்கப்பட்டிருக்கிற இடத்திலிருந்து பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள யாதொரு பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்காவது ஜெயிலுக்காவது பத்திரமான வேறே காவலிடத்திற்காவது கொண்டுபோகவேண்டுமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாகக் கட்டளையிடலாம்.

இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்குள்ள சில அலுவல்களை நிக்கிவிடப் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம்.

(3) எவனையாவது 466-வது அல்லது இந்தப்பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி எந்த ஜெயிலில் அடைத்து வைத்திருக்கிறார்களோ அந்த ஜெயில் விசாரணை உத்தியோகஸ்தருக்கு 473 அல்லது 474-வது பிரிவின்படி சிறைச்சாலைகளின் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்குள்ள சகல அலுவல்களையுமாவது அவைகளி

லையாவது நிறைவேற்றும்படி பிரதேச கவர்ன்மெண்டார் அதிகாரங் கொடுக்கலாம்.

பைத்தியக் காரக் கைதிகளை இன்ஸ்பெக்டர் ஜெனரல் பார்வையிடுவது.

472. எவனாவது 465-வது அல்லது 471-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி காவலில் வைக்கப்பட்டால், அப்படிப்பட்டவன் யாதொரு ஜெயிலில் வைக்கப் படுகிறபட்சத்தில் சிறைச்சாலைகளின் இன்ஸ்பெக்ட்டர் ஜெனரலும், அவன் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டால், பைத்தியக்கார ஆஸ்பத்திரியின் கண்காணிகள் அல்லது அவர்களில் யாராவதிரண்டுபேரும், அவனுடைய புத்தி நிலைமையை அறிந்து கொள்ளும்பொருட்டு அவனைப்போய்ப் பார்வையிடலாம்; மேற்சொல்லிய இன்ஸ்பெக்ட்டர் ஜெனரலாவது கண்காணிகளில் இரண்டுபேராவது பிரதி ஆறுமாதத்திலும் குறைந்தது ஒருதடவை அவனைப் போய்ப் பார்க்கவேண்டும்; அந்த இன்ஸ்பெக்ட்டர் ஜெனரலாவது கண்காணிகளாவது அப்படிப்பட்டவனுடைய புத்தி நிலைமையைக் குறித்துப் பிரதேசகவர்ன்மெண்டாருக்குப் பிரத்தியேகமாய் ரிபோர்ட் செய்யவேண்டும்.

பைத்தியக் காரக் கைதி தன் பட்சத்தில் வாதிக்கச் சக்தி யுள்ளவனாயிருக்கிறானென்று ரிபோர்ட் செய்யப்பட்டால் நடவடிக்கை.

473. அப்படிப்பட்டவன் 466-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி மறியல்செய்து வைக்கப்பட்டிருந்து, ஜெயிலில் மறியல்செய்து வைக்கப்பட்டிருக்கிற யாதொரு நபரின் விஷயத்திலே சிறைச்சாலைகளின் இன்ஸ்பெக்டர் ஜெனரலாவது பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் மறியல்செய்து வைக்கப்பட்டிருக்கிற யாதொரு நபரின் விஷயத்திலே அப்படிப்பட்ட ஆஸ்பத்திரியின் கண்காணிகள் அல்லது அவர்களில் எவராகிலு மிரண்டுபேராவது 'அப்படிப்பட்டவன் தன்பட்சத்தில் வாதிக்கச் சக்தியுள்ளவனா யிருக்கிறானென்று தாங்கள் அபிப்பிராயப்படுகிறதாக ஸெர்ட்டிபை செய்வார்களாகில், சங்கதிக்குத் தக்கபடி மாஜிஸ்ட்ரேட்டோ அல்லது கோர்ட்டாரோ நியமிக்கிற காலத்தில் அந்த மாஜிஸ்ட்ரேட் அல்லது கோர்ட்டாரிடத்திற்கு அவனைக் கொண்டுபோகவேண்டும்; அந்த மாஜிஸ்ட்ரேட் அல்லது கோர்ட்டார் அவனை 468-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி நடத்தவேண்டும். மேற்சொல்லிய அப்படிப்பட்ட இன்ஸ்பெக்டர் ஜெனரல் அல்லது கண்

காணிகள்கொடுக்கிற ஸெர்ட்டிபிகேட்டானது சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாகும்.

466-வது அல்லது 471-வது பிரிவின்படி காவலில் வைக்கப்பட்ட பைத்தியக்காரன் விடுதலை பெறுவதற்குத் தகுந்த ஸ்திதியிலிருக்கிறனென்று சொல்லப்பட்டால் நடவடிக்கை.

474. (1) அப்படிப்பட்டவன் 466-வது அல்லது 471-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி மறியல்செய்து வைக்கப்பட்டிருந்து, அப்படிப்பட்ட இன்ஸ்பெக்டர் ஜெனரலாவது கன்காணிகளாவது அவன் தனக்காகிலும் வேறே யாருக்காகிலும் தீங்குசெய்யானென்கிற பயமில்லாமல் அவனை விடுதலைசெய்யலாமென்று தாங்களபிப்பிராயப்படுவதாக ஸெர்ட்டிபைசெய்வர்களாகில், அதற்குமேல் அவ்விடத்திய கவர்ன்மெண்டார் அவனை விடுதலைசெய்யும்படிக்காவது காவலில் வைத்திருக்கும்படியாவது, முன்னதாகவே ஸர்க்காரைச்சேர்ந்த யாதொரு பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அவனை அனுப்பாதிருந்தால் அப்படிப்பட்ட ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படிக்காவது உத்தரவுசெய்யலாம்; அவனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படி அவர்கள் உத்தரவுசெய்கிற பட்சத்தில், நீதிஸ்தானத்து உத்தியோகஸ்தரொருவரையும் இரண்டு வைத்திய உத்தியோகஸ்தர்களையும் கமிஷனர்களாக நியமிக்கலாம்.

(2) அந்தக் கமிஷனர்கள் அப்படிப்பட்டவனுடைய புத்திநிலைமையைக்குறித்து முறைமையாக விசாரணைசெய்து அவசியமான சாட்சியத்தைக்கேட்டு அவ்விடத்திய கவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட் பண்ணவேண்டும்; அந்தக் கவர்ன்மெண்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி அவனை விடுதலைசெய்யும்படிக்காவது காவலில் வைத்திருக்கும்படிக்காவது உத்தரவுசெய்யலாம்.

பைத்தியக்காரனை பந்து அல்லது சிநேகிதன் வசத்தில் ஒப்பிப்பது.

475. (1) 466-வது அல்லது 471-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி மறியல் செய்துவைக்கப்பட்டிருக்கும் யாதொரு நபருடைய எந்த பந்துவாவது சினேகிதனாவது அவனைத் தன்வசத்திலும் காவலிலும் ஒப்பிக்கவேண்டுமென்று கோரினால், பிரதேச கவர்ன்மெண்டார்-அந்த பந்து அல்லது சினேகிதன் விண்ணப்பம் செய்துகொள்வதன் மேலும்,

(a) ஒப்பிக்கப்படும் நபரைக் கிரமமாய்ப் பாதுகாத்து அவனைத் தனக்காவது வேறொருவனுக்காவது தீங்குசெய்யவொட்டாமல் தடுத்துவருவதாகவும்,

(b) அந்த நபரை பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடக் கூடிய உத்தியோகஸ்தருடைய பார்வைக்கு அவர்கள் கட்டளையிடும் காலங்களிலும் இடங்களிலும் கொண்டு வந்து காண்பிப்பதாகவும்,

(c) 466-வது பிரிவின்படி மறியல்செய்து வைக்கப்பட்டிருக்கும் யாதொரு நபரின் விஷயத்திலே, உத்தரவுசெய்யும் போது அப்படிப்பட்டவனை ஷை மாஜிஸ்ட்ரேட் அல்லது கோர்ட்டுக்கு முன்பாகக் கொண்டுவந்து காட்டுவதாக வும்,

அந்த பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் திருப்திகரமாக ஷை பந்துவாவது சினேகிதனாவது ஜாமீன் கொடுப்பதன்மேலும், அப்படிப்பட்ட நபரை அந்த பந்து அல்லது சினேகிதனிடத்தில் ஒப்பிக்கும்படி உத்தரவு செய்யலாம்.

(2) அந்தப்படி ஒப்பிக்கப்படும் நபர்மேல் யாதொரு குற்றம் சாட்டப்பட்டு, அவன் புத்திமாருட்டமுள்ளவனும் அதனாலே அவன் தன் பட்சத்தில் வாதிக்க அசக்தனுமிருக்கிறானென்னும் காரணத்தினாலே மேற்படி குற்றத்தின் விஷயமாய்ப் பரிசீலனை தள்ளிவைக்கப் பட்டிருந்து, (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த (b) அடையாளமிட்ட பகுதியில் உதகரிக்கப்பட்டிருக்கும் பார்வையிடுவதற்கான உத்தியோகஸ்தர் அப்படிப்பட்டவன் தன் பட்சத்தில் வாதிக்க சக்தியுள்ளவனாயிருக்கிறானென்று எப்போதாகிலும் மாஜிஸ்ட்ரேட்டினிடத்திலாயினும் கோர்ட்டாரிடத்திலாயினும் ஸெர்டிபை செய்தால், அந்த மாஜிஸ்ட்ரேட்டாவது கோர்ட்டாராவது குற்றஞ்சாட்டப்பட்ட அந்த நபரைத் தங்களுக்கு முன்பாகக் கொண்டுவந்து காட்டும்படி அவன் யாரிடத்தில் ஒப்பிக்கப்பட்டானோ அந்த பந்துவுக்காகிலும் சினேகிதனுக்காகிலும் உத்தரவுசெய்யவேண்டும்; அந்தப்படி கொண்டுவந்து காட்டப்படுவதன்மேல், மேற்படி மாஜிஸ்ட்ரேட்டாவது கோர்ட்டாராவது 468-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளை அனுசரித்து நடவடிக்கை நடத்தவேண்டும்; மேலும், பார்வையிடுவதற்கான உத்தியோகஸ்தருடைய ஸெர்டிபிகேட்டானது சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதாகும்.

476. (1) யாதொரு ஸிவில் கோர்ட்டாராவது ரெவினியு கோர்ட்டாராவது க்ரிமினல் கோர்ட்டாராவது

195-வது பிரிவில் கண்டிருக்கிற விஷயங்களில் நடவடிக்கை.

தங்களுக்கு இது விஷயத்திற்காக மனு செய்து கொள்ளப்படுவதின்மேலாவது மற்றப்படியாவது, 195-வது பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (b) அடையாளமிட்ட பகுதியிலாவது (c) அடையாளமிட்ட பகுதியிலாவது கண்டிருப்பதாய்த் தங்களுக்குமுன் செய்யப்பட்டிருக்கிறதாகச் சொல்லப்பட்டாகிலும் யாதொரு நீதி விவகார நடவடிக்கை நடக்கும்போது தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டாகிலுமிருக்கிற யாதொரு குற்றத்தைக்குறித்து நியாயத்தை உத்தேசித்து விசாரணை செய்யவேண்டியது யுக்தமென்று அபிப்பிராயப்படுவார்களாகில், அப்படிப்பட்ட கோர்ட்டார்-அவசியமான யாதொரு பிரதம விசாரணைசெய்தபின்பு, தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால் அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை ரெகார்ட் செய்து அதைக்குறித்து எழுத்துமூலமான பிராது ஒன்று தயார்செய்து,*அதில் கோர்ட் நடத்தும் உத்தியோகஸ்தர் கையெழுத்திட்டு, அதிசமீபத்திலுள்ள எந்த முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரமிருக்கிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதை அனுப்பவேண்டும்; மேலும், அவர்கள்-செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்ட குற்றமானது ஜாமீன்மேல் விடத்தகாததாயிருந்தால் குற்றஞ் சாட்டப்பட்டவனை தங்களுக்கு அவசியமாகத் தோற்றினால், அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகக் காவலோடு அனுப்பலாம் அல்லது வேறே யாதொரு விஷயத்திலே அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் அவன் ஹாஜராவதற்காகப் போதுமான ஜாமீன் வாங்கிக்கொள்ளலாம்; அல்லாமலும், அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் ஹாஜராகி சாட்சி சொல்லும்படி யாதொரு நபரைப் பிணைப்படுத்தலாம்.

இந்த உட்பிரிவின் காரியங்களுக்காக, ஒரு பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டானவர் யாதொரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாயிருப்பதாக எண்ணப்படுவார்.

(2) அதற்குமேல் அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டானவர், சட்டப்படிக்குப், 200-வது பிரிவின்படி பிராது கொண்டுவந்து தாக்கல்செய்யப்பட்டிருந்தாற்போலவும் நடவடிக்கை நடத்தவேண்டும்.

(3) அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுக்காவது வேறே எந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு அந்த கேஸ் மாற்றப்பட்டிருக்கக்கூடுமோ அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்காவது எந்த நீதி விவகார நடவடிக்கையிலிருந்து

இந்த விஷயம் உண்டாயிருக்கிறதோ அந்த நடவடிக்கையில் செய்த தீர்மானத்தின்மேல் அப்பீல்செய்யப்பட்டு அது பைசலாகாமல் நின்றிருக்கிறதென்று தெரிவிக்கப்பட்டால், அவருக்கு யுக்தமாய்த் தோற்றினால் அப்படிப்பட்ட அப்பீல் முடிவாகிறவரையில் அந்தகேஸின் விசாரணையை எந்த தசையிலாவது நிறுத்திவைக்கலாம்.

கீழ்க்கோர்ட்டார் பிராது கொடுக்காவிட்டால், மேலான கோர்ட்டார் பிராது செய்யலாம்.

476-A. 476-வது பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு ஸிவில் கோர்ட்டாருக்காவது, ரெவினியு கோர்ட்டாருக்காவது, க்ரிமினல் கோர்ட்டாருக்காவது கொடுக்கப்பட்ட அதிகாரத்தை, அந்தப் பிரிவில் சொல்லியிருக்கிறபடி அப்படிப்பட்ட ஒரு கோர்ட்டாருக்கு முன்செய்யப்பட்டிருக்கிறதாக சொல்லப்பட்டாகிலும், யாதொரு நடவடிக்கை நடக்கும்போது தெரிவிக்கப்பட்டாகிலுமிருக்கிற யாதொரு குற்றத்தைக் குறித்து, 195-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் அர்த்தஞ் சொல்லியிருக்கிறபடி எந்தக் கோர்ட்டுக்கு அந்த முந்திய கோர்ட் கீழ்ப்பட்டதாய் இருக்கிறதோ அந்த மேலான கோர்ட்டார், அப்படிப்பட்ட முந்திய கோர்ட்டார் 476-வது பிரிவின்படி, அந்தக் குற்றத்தைக் குறித்து பிராது கொடுக்காவிட்டாலும், அல்லது அப்படிப்பட்ட பிராது தொடரவேண்டுமென்று செய்துகொள்ளப்பட்ட மனுவை நிராகரிக்காமலிருக்கிற யாதொரு விஷயத்திலே செலுத்தலாம். அந்த மேலான கோர்ட்டார் அப்படிப்பட்ட ஒரு பிராதுகொடுத்தால், 476-வது பிரிவின் நிபந்தனைகள் அப்படியே பிரயோகப்படும்.

அப்பீல்கள்.

476-B. யாதொரு நபர் மனுசெய்துகொண்டதன்மேல் எந்த ஸிவில் கோர்ட்டாராவது ரெவினியு கோர்ட்டாராவது க்ரிமினல் கோர்ட்டாராவது, 476-வது பிரிவின்படியாகிலும் 476-Aவது பிரிவின்படியாகிலும் பிராதுசெய்யமறுத்தால் அந்த நபரும், எவருக்குவிரோதமாக அப்படி பிராதுகொடுக்கப்பட்டிருக்கிறதோ, அவரும் 195-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் அர்த்தஞ்சொல்லியிருக்கிறபடி எந்தக்கோர்ட்டுக்கு அந்த முந்திய கோர்ட் கீழ்ப்பட்டிருக்கிறதோ அந்த மேலான கோர்ட்டுக்கு அப்பீல்செய்துகொள்ளலாம். அதன்மேல் அந்தமேலான கோர்ட்டார்-சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கு

நோடீஸ் கொடுத்து, ஏற்கனவே தாக்கல்செய்யப்பட்ட ஒருபிராதை வாபஸ் வாங்கிக்கொள்ளும்படி உத்திரவுசெய்யலாம், அல்லது சந்தர்ப் பத்துக்கேற்றபடி, அந்தக் கீழ்க்கோர்ட்டார் 476-வது பிரிவின்படி என்னசெய்திருக்கக்கூடுமோ அப்படியே அந்தப் பிராதை தாங்கள் செய்யலாம். அவர்கள் அப்படி பிராதுகொடுத்தால், அந்தப்பிரிவின் நிபந்தனைகள் அப்படியே பிரயோகப்படும்.

477. 1923-ம் வருஷத்திய 18-வது ஆக்ட்டின் 129-வது பிரிவின் படி விட்டுவிடப்பட்டது.

சிவில் கோர்ட் டாரும் ரெவினியு கோர்ட்டாரும் வி சாரணையைப் பூர்த் தியாய்நடத்தி ஹை கோர்ட்டுக்காவது ஸெஷன் கோர்ட் டுக்காவது கம்மிட் பண்ண அதிகாரம்.

478. (1) அப்படிப்பட்ட யாதொரு குற்றமானது யாதொரு ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டாருக்கு முன் பாகச்செய்யப்பட்டாவது, யாதொரு நீதிவிவகார நடவடிக்கை நடக்கும்போது யாதொரு ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டாருக்குத் தெரிவிக்கப் பட்டாவதிருந்தால், அந்தக்கேஸானது ஹைக் கோர்ட்டார் அல்லது ஸெஷன் கோர்ட்டாரால் மாத்திரம் பரிசிலனை செய்யப்படத்தக்கதாயிருந் தாலும், ஹைகோர்ட்டார் அல்லது ஸெஷன்கோர ட்டாரால் அந்தக்கேஸ் பரிசிலனை செய்யப்பட வேண்டியதென்று அந்த ஸிவில் அல்லது ரெவினியுகோர்ட்டார் எண் ணினாலும், அந்த ஸிவில் அல்லது ரெவினியுகோர்ட்டார் அந்தக் கேஸை விசாரணைக்காக 476-வது பிரிவின்படி மாஜிஸ்ட்ரேட்டினிடத் திற்கு அனுப்பாமல், தாங்களே விசாரணை முடித்து, குற்றஞ்சாட்டப் பட்டவனைப் பரிசிலனைக்காகச் சங்கதிகுத்தக்கபடி ஹைக்கோர்ட்டுக்கா கிலும் ஸெஷன்கோர்ட்டுக்காகிலும் கம்மிட்பண்ணலாம், அல்லது அப் படிப்பட்ட கோர்ட்டில் பரிசிலனைக்கு ஹாஜராவதாக அவனிடத்தில் ஜாமீன் வாங்கலாம்.

(2) இந்தப்பிரிவின்படி செய்யப்பட்ட விசாரணையின் காரியங் களின்பொருட்டு, ஸிவில் அல்லது ரெவினியுகோர்ட்டார் மாஜிஸ்ட் ரேட்டுக்குண்டான சகல அதிகாரங்களையும் செலுத்தலாம்; அப்படிப் பட்ட விசாரணையில் அந்தக்கோர்ட்டாருடைய நடவடிக்கைகள், 18-ம் அத்தியாயத்தின்படியும், 33-ம் அத்தியாயம் பிரயோகப்படுகிற கேஸ் களில் அந்த அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகளுக்கு கூடியமட்டில் ஒத்திருக்கும்படியும் நடத்தப்படவேண்டும்; அன்றியும், அவைகள் மாஜிஸ்ட்ரேட்டினால் நடத்தப்பட்டிருப்பதாக எண்ணப்படும்.

479. அப்படிப்பட்ட யாதொரு கம்மிட்மென்ட் ஸிவில் அல்லது ரெவினியுகோர்ட்டாரால் செய்யப்படுகையில், அந்தக் கோர்ட்டார் கம்மிட்மென்ட் உத்திரவு சகிதமாய்க் குற்ற பத்திரிகையையும் அந்தக் கேஸின் ரிகார்டையும் இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக்காவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது பரிசீலனைக்குக் கம்மிட்பண்ணும்படி அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறெந்த மாஜிஸ்ட்ரேட்டுக்காவது அனுப்பவேண்டும்; அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டானவர் பிராதின் பட்சத்திலும் குற்றஞ்சாட்டப்பட்டவன் பட்சத்திலுள்ள சாட்சிகளோடுகூட அந்தக் கேஸைச் சங்கதிக்குத்தக்கபடி ஹைக்கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் ஸெஷன்கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் கொண்டுவரவேண்டும்.

அப்படிப்பட்ட விஷயங்களிலே ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டாருடைய நடவடிக்கை.

480. (1) இந்தியன் பினல்கோட் 175, 178, 179, 180 அல்லது 228-வது பிரிவில் விவரித்திருக்கிற குற்றங்களிலெதுவாகிலும் யாதொரு ஸிவில் க்ரிமினல் அல்லது ரெவினியு கோர்ட்டாருக்கு முன்பாகவாவது அவர்களுடைய பார்வையிலாவது செய்யப்பட்டால், அந்தக் கோர்ட்டார் அவனைக் காவலில் வைத்திருக்கும்படி செய்யலாம்; மேலும் அன்றையதினம் கோர்ட் கலைவதற்கு முன்னமே எப்போதாவது, தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால், அந்தக் குற்றத்தை விசாரணைசெய்து அந்தக் குற்றவாளிக்கு இருநூறு ரூபாய்க்கு அதிகப்படாமல் அபராதம் விதிக்கலாம்; அபராதத்தைச் செலுத்தாவிட்டால், எவ்வளவுகாலம் காவல் தண்டனை விதிக்கப்படுகிறதோ அதற்குள்ளாக அதுசெலுத்தப்படாத பட்சத்தில், அவனுக்கு ஒருமாதத்திற்கு அதிகப்படாத வெறுங்காவல் தண்டனை விதிக்கலாம்.

அலட்சியஞ் செய்வதாகிய சிலவிஷயங்களிலே நடவடிக்கை.

(2) 29-A. பிரிவாவது அல்லது 33-ம் அத்தியாயத்திலாவதுள்ள எந்த நிபந்தனைகளாவது இந்தப்பிரிவின்படி நடத்தப்படுகிற நடவடிக்கைகளுக்குச் சம்பந்தப்படுவதாக எண்ணக்கூடாது.

481. (1) அப்படிப்பட்ட பிரதி விஷயத்திலும், அந்தக் குற்றமாகிற சங்கதிகளையும் நேரஸ்தன் ஏதாவது சொல்லிக்கொண்டால் அதையும், தீர்மானத்தையும் சிட்சையையும் அந்தக்கோர்ட்டார் ரிகார்ட்பண்ணவேண்டும்,

அப்படிப்பட்ட விஷயங்களில் ரிகார்ட்.

(2) அந்தக் குற்றமானது இந்தியன் பினல்கோடின் 228-வது பிரிவுக்குட்பட்டதாயிருந்தால் தடுக்கப்பட்ட அல்லது அலட்சியஞ் செய்யப்பட்ட கோர்ட்டார் நடத்திக்கொண்டிருந்த நீதி விவகார நடவடிக்கையின் தன்மையையும் நிலைமையையும், தடங்கல் அல்லது அலட்சியத்தின் தன்மையையும் ரிகார்டில் எழுதிவைக்கவேண்டும்.

480-வது பிரிவின்படி கேஸை நடத்தக்கூடாதென்று கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டால் நடவடிக்கை.

482. (1) கோர்ட்டார் 480-வது பிரிவில் கண்டிருக்கிறதாய்த் தங்களுக்கு முன்பாகவாவது தங்களுடைய பார்வையிலாவது செய்யப்படுகிற குற்றங்களில் எதுவாகிலும் சாட்டப்பட்ட ஒருவனை, அபராதஞ் செலுத்தாமைக்காக வல்லாமல் மற்றபடி காவலில் வைக்கவேண்டுமென்றாவது இருநூறு ரூபாய்க் கதிகமாக அவனுக்கு அபராதம் விதிக்க வேண்டுமென்றாவது எந்தக் கேஸிலாகிலும் அபிப்பிராயப்பட்டாலும், வேறெந்தக் காரணத்தைப்பற்றியாவது 480-வது பிரிவின்படி கேஸைப் பைசல் செய்யக்கூடாதென்று அபிப்பிராயப்பட்டாலும், அந்தக் கோர்ட்டார்-குற்றமாகிற சங்கதிகளையும் குற்றஞ் சாட்டப்பட்டவன் சொல்லிக்கொள்ளுகிற சங்கதிகளையும் இதற்கு முன்னமே சொல்லியபடி ரிகார்ட் பண்ணிக்கொண்டபிறகு, அந்தக் கேஸைப் பரிசீலனை செய்ய அதிகாரம்பெற்ற மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதை அனுப்பலாம்; அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாக மேற்படி நேரஸ்தன் ஹாஜராவதாய் ஜாமீன் கொடுக்கும்படி கேட்கலாம்; தகுந்த ஜாமீன் கொடுக்கப்படாவிட்டால் அவனை அந்த மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்குக் காவலோடு அனுப்பவேண்டும்.

(2) எவருக்கு இந்தப் பிரிவின்படி யாதொரு கேஸ் அனுப்பப்படுகிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர்-குற்றஞ் சாட்டப்பட்டவன் மேல் பிராதை இதற்குமுன்னமே சொல்லியபடி விசாரிக்கத்தொடங்க வேண்டும்.

இன்ன படிக்காலல் 480, 482-வது பிரிவுகளின்படி ரெஜிஸ்ட்ராராவது ஸப்ரெஜிஸ்ட்ராராவது ஸிவில்கோர்ட்டாராக எண்ணப்படுவது.

483. 1908-ம்வருஷத்து இந்தியன் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டின்படி நியமிக்கப்பட்ட யாதொரு ரெஜிஸ்ட்ராரையாவது யாதொரு ஸப்-ரெஜிஸ்ட்ராரையாவது, பிரதேச கவர்ன்மெண்டார் உத்தரவு செய்தால் அந்தப்படி 480, 482 - வது பிரிவுகளின் தாற்பரியத்தின் பிரகாரம் ஸிவில் கோர்ட்டாராக எண்ணவேண்டும்.

நேரஸ்தன் உட்படுவதன் மேலாவது மன்னிப்புகேட்டுக்கொள்வதன் மேலாவது அவனை விட்டுவிடுவது.

484. செய்யச்சொல்லி சட்டப்படி உத்திரவுசெய்ததை எவனுகிலும் செய்ய நிராகரிப்பதற்காகவாவது செய்யாமற்போனதற்காகவாவது, வேண்டுமென்று அலட்சியம் அல்லது தடங்கல் செய்ததற்காகவாவது, அந்த நேரஸ்தனுக்கு யாதொரு கோர்ட்டாரால் 480-வது அல்லது 482-வது பிரிவுகளின்படி தண்டனை விதிக்கப்பட்டிருந்தாலும், அல்லது பரிசீலனைக்காக ஒரு மாஜிஸ்ட்ரேட்டினிடம் அவன் அனுப்பப்பட்டிருந்தாலும், அவன் அந்தக் கோர்ட்டாருடைய உத்தரவுக்கு உட்படுவதன் மேலாகிலும் சொன்னபடி செய்வதன்மேலாகிலும் கோர்ட்டாருக்குத் திருப்தியாகும்படி மன்னிப்பு கேட்டுக்கொள்வதன்மேலாகிலும், அந்தக் கோர்ட்டார் - தங்களுக்கு யுக்தமாகத்தோற்றினல், அவனை விட்டுவிடலாம் அல்லது தண்டனையை மன்னிக்கலாம்.

எவனுவது ஜவாப் சொல்லமாட்டேனென்றுலும் தஸ்தவேஜைக் காட்டமாட்டே னென்றுலும் அவனைக்காவலில் வைப்பது அல்லது கம்மிட் பண்ணுவது.

485. யாதொரு க்ரிமினல்கோர்ட்டாருக்குமுன்பாக யாதொரு சாட்சியாவது, ஒரு தஸ்தவேஜையோ அல்லது வஸ்துவையோ ஹாஜர்படுத்தும்படி அழைக்கப்பட்டவனுவது - தன்னைக்கேட்ட சவால்களுக்கு ஜவாப் சொல்லமாட்டேனென்றுலும், அவனுடைய ஸ்வாதீனத்திலாவது அதிகாரத்திலாவது இருக்கிற யாதொரு தஸ்தவேஜை அல்லது வஸ்துவைக் கொண்டுவந்து காட்டச்சொல்லிக் கோர்ட்டார் அவனுக்கு உத்தரவுசெய்து அதை அவன் கொண்டுவந்து காட்டமாட்டேனென்றுலும், அப்படி நிராகரித்ததற்குத் தகுந்த முகாந்தரம் தெரிவிக்காதபட்சத்தில், அந்தக் கோர்ட்டார்-எழுதி ரிகார்ட் பண்ணப்போகும் காரணங்களின் மேல், ஏழுநாளைக் கதிகப்படாமல் எவ்வளவு காலத்திற்காவது அவனுக்கு வெறுங்காவல்தண்டனை விதிக்கலாம், அல்லது கோர்ட்செய்யும் மாஜிஸ்ட்ரேட் அல்லது ஜட்ஜினுடைய கையெழுத்துப்போட்ட வாரன்டைக்கொண்டு அவனைக் கோர்ட் உத்தியோகஸ்தனுடைய காவலில் வைக்கலாம்; ஆனல், அந்தக்காலத்திற்குள் விமரிசை செய்யப்படுவதற்கும் ஜவாப் சொல்லுவதற்குமாவது தஸ்தவேஜு அல்லது வஸ்துவைக் காட்டுவதற்காவது அவன் சம்மதித்தால் அப்படி செய்யவேண்டியதில்லை; அவன் மறுப்பதில் ஒரேபிடிவாதமாயிருந்தால், 480 அல்

லது 182-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி அவனை நடப்பிக்கலாம்; ராயல் சார்ட்டரினாலே ஏற்படுத்தப்பட்ட கோர்ட்டாயிருக்கிற விஷயத்தில், அவன் அலட்சியஞ் செய்வதென்னுங் குற்றத்தைப் பண்ணினவனாக எண்ணப்படுவான்.

அலட்சியஞ் செய்வதென்னுங் கேஸுகளிலே குற்றஸ்தாபனையின் மேல் அப்பீல்.

486. (1) 480 அல்லது 485-வது பிரிவின்படி யாதொரு கோர்ட்டாரால் சிட்சை விதிக்கப்பட்டவனெவனும் இதில் முன்னமே என்னசொல்லி யிருந்தபோதிலும் நிமித்தமில்லாமல், மேற்படி கோர்ட்டில் செய்யப்படுகிற டிக்ரிகள் அல்லது உத்தரவுகளின்மேல் எந்தக் கோர்ட்டுக்குச் சாதாரணமாய் அப்பீல் செய்யப்படத்தக்கதா யிருக்கிறதோ அந்தக் கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

(2) 31-ம் அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகள் இந்தப்பிரிவின்படி செய்யப்பட்ட அப்பீல்களுக்கு எவ்வளவுமட்டும் சம்பந்தப்படத்தக்கதோ அவ்வளவுமட்டும் சம்பந்தப்படவேண்டும்; மேலும், அப்பீல் கோர்ட்டார் எதன்மேல் அப்பீல்செய்யப்பட்டதோ அந்தத் தீர்மானத்தைத் திருத்தலாம் அல்லது மாற்றிவிடலாம், அல்லது எதன்மேல் அப்பீல் செய்யப்பட்டதோ அந்தச் சிட்சையைக் குறைக்கலாம் அல்லது ரத்துபண்ணலாம்.

(3) யாதொரு இராஜதானிப்பட்டணத்தில் யாதொரு ஸ்மால்காஸ்கோர்ட்டார் அப்படிசெய்த குற்றஸ்தாபனையின்மேல் கொண்டுவரப்பட்ட அப்பீலை ஹைக்கோர்ட்டுக்குச் செய்துகொள்ளவேண்டும்; மேலும்,

வேறெந்த ஸ்மால்காஸ் கோர்ட்டாராவது அப்படிசெய்த குற்றஸ்தாபனையின்மேல் கொண்டுவரப்பட்ட அப்பீலானது எந்த ஸெஷன் டிவிஷனுக்குள்ளே அந்தக்கோர்ட் இருக்கிறதோ அந்த டிவிஷன் ஸெஷன்கோர்ட்டுக்குச் செய்துகொள்ளப்படவேண்டும்.

(4) மேற்சொல்லிபடி நியமிக்கப்பட்ட ரெஜிஸ்ட்ரார் அல்லது ஸப்-ரெஜிஸ்ட்ராராக யாதொரு உத்தியோகஸ்தரால் செய்யப்பட்ட அவ்வித குற்றஸ்தாபனையின்மேல் அப்பீல் செய்யவேண்டுமானால், அந்த உத்தியோகஸ்தர் ஸிவில் கோர்ட் ஜட்ஜாயுமிருக்கிற பட்சத்தில், அந்தக் குற்றஸ்தாபனையானது அப்படிப்பட்ட ஜட்ஜ் ஹோதாவில்

அந்த உத்தியோகஸ்தரால் செய்யப்பட்ட டிக்ரியாயிருக்குமாகில், இந்தப் பிரிவின் முற்பாகத்தின்படி எந்தக் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்படத்தக்கதாகுமோ அந்தக் கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்; மற்ற விஷயங்களிலே டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுக்குச் செய்துகொள்ளலாம்; இராஜதானிப் பட்டணங்களிலே ஹைக்கோர்ட்டுக்குச் செய்துகொள்ளலாம்.

சிலஜட்ஜுகளும் மாஜிஸ்ட்ரேட்டுகளும் 195-வது பிரிவிற் கண்டிருக்கிற குற்றங்கள் தங்களுக்கு முன்பாகச் செய்யப்பட்டால் அவைகளைப் பரிசிலனை செய்யக்கூடாதென்பது.

487. (1) 480, 485-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறது தவிர, ஹைகோர்ட் ஜட்ஜும் ரங்கூன் ரிகார்டரும் அல்லாத யாதொரு க்ரிமினல் கோர்ட் ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது, 195-வது பிரிவில் சொல்லியிருக்கிற யாதொரு குற்றமானது தமக்கு முன்பாகவாகிலும் தம்முடைய அதிகாரத்தை அலட்சியம் பண்ணும்படியாகவாகிலும் செய்யப்பட்டாவது, யாதொரு நீதிவிவகார நடவடிக்கை நடந்துகொண்டிருக்கையில் அப்படிப்பட்ட ஜட்ஜ் அல்லது மாஜிஸ்ட்ரேட்டாகத் தம்முடைய அறிக்கைக்குக் கொண்டுவரப்பட்டாவதிருந்தால், அப்படிப்பட்ட குற்றத்தைக்குறித்து ஒருவனையும் பரிசிலனை செய்யக்கூடாது.

(2) 476 அல்லது 482-வது பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினாலும், ஸெஷன் கோர்ட்டுக்காவது ஹைக்கோர்ட்டுக்காவது கம்மிட்பண்ண அதிகாரம்பெற்ற யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர் தாமே அந்தக் கோர்ட்டுக்கு யாதொரு கேஸைக் கம்மிட்பண்ணத் தடையுண்டாகமாட்டாது.

36-ம் அத்தியாயம்.

மனைவிகளுக்கும் மக்களுக்கும் ஜீவனும்சத்தைக்குறித்து.

மனைவிகளுக்கும் மக்களுக்கும் ஜீவனும்சத்திற்காக உத்தரவு.

488. (1) எவனாவது போதுமானவகையுள்ளவனாயிருந்து அவனுடைய மனைவியையாவது அவனுடைய விவாக சம்பந்தமாயாகிலும் வைப்புசம்பந்தமாயாகிலும் பிறந்து தன்னைச் சவரக்ஷித்துக்கொள்ளச் சக்தியில்லாத குழந்தையையாவது சவரக்ஷிக்கவிட்டாலும் சவரக்ஷிக்கமாட்டேனென்றாலும், அந்த குற்றவாளியான

தன்மேல் அவனுடைய மனைவி அல்லது அப்படிப்பட்ட குழந்தையைச் சவரக்ஷிப்பதற்காக டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது, இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது, ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாவது, முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாவது மொத்தத்தில் மாதம் ஒன்றுக்கு நூறுரூபாய்க்கு அதிகப்படாமல் அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுக்கு யுக்தமாகத் தோற்றுகிற மாதாந்தர விகிதப்படி மாதாந்தர ஜீவனும்சம் கொடுக்கும்படிக்கும், அதை அப்போதைக்கப்போது மாஜிஸ்ட்ரேட் உத்தரவு செய்கிறவரிடத்தில் செலுத்தும்படிக்கும் உத்தரவு பண்ணலாம்.

(2) அப்படிப்பட்ட ஜீவனும்சம் அந்த உத்தரவின் தேதிமுதல் செலுத்தப்படத்தக்கதாகும்; அல்லது, ஜீவனும்சத்திற்காக விண்ணப்பத் தேதிமுதல் கொடுக்கவேண்டுமென்று உத்தரவானல் ஜீவனும்சம் அந்த விண்ணப்பத் தேதிமுதல் செலுத்தப்படத்தக்கதாகும்.

உத்தரவை நிறைவேற்றுவது.

(3) அப்படி உத்தரவு செய்யப்பட்டவனெவனுவது போதுமானகாரணமில்லாமல் அந்த உத்திரவின்படி நடக்கத் தவறினுல், அப்படி நடவாமற்போன பிரதி தடவையிலும், அப்படிப்பட்ட யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர் அபராதத்தை வசூல்செய்வதற்காக இதில் முன்னமே சொல்லியிருக்கிறவிதமாய் அந்தப் பாக்கித் தொகையை வசூல்செய்வதற்காக வாரன்ட் பிறப்பிக்கலாம்; மேலும், வாரன்ட் நிறைவேறுதலுக்குப் பின்பு அந்தந்தமாத ஜீவனும்சம் முழுமையுமாவது அதிலெவ்வளவாவது செலுத்தப்படாமலிருப்பதற்காக, அப்படிப்பட்டவனுக்கு ஒருமாதத்திற்கு அதிகப்படாமலும், அதற்குள்ளே தொகை செலுத்தப்படுமாகில் தொகை செலுத்தப்படுகிறவரையிலாகிலும் காவல்தண்டனை விதிக்கலாம்.

ஆனுல், அப்படிப்பட்டவன் தன் பெண்சாதி தன்னேடுகூட வாசஞ்செய்தால் அவளைக் காப்பாற்றுகிறதாகச்சொல்லி அவனுடைய பெண்சாதி அவனேடுகூட வாசஞ்செய்யமாட்டேனென்ருல், அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டானவர் அவள் வாசஞ்செய்யமாட்டே னென்பதற்குச் சொன்ன ஹேதுக்களை யோசிக்கலாம் ; அவன் அப்படி காப்பாற்றுவதாகச் சொன்னபோதிலும், நியாயமான காரணமிருந்தால் அவர் இந்தப் பிரிவின்படி உத்தரவு செய்யலாம்.

அல்லாமலும், இந்தப் பிரிவின்படி பாக்கியாயிருக்கிற யாதொரு தொகையை அது பாக்கியான தேதிமுதல் ஒரு வருஷகாலத்துக்குள்ளாக வசூல்செய்யும்பொருட்டு கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டாலன்றி மற்றப்படி, அந்தத் தொகையை வசூல்செய்வதற்காக வாரன்ட் பிறப்பிக்கக்கூடாது.

(4) யாதொரு மனைவி விபசாரம் செய்துகொண்டிருந்தாலும் யாதொரு தகுந்த காரணமில்லாமல் தன்கணவனோடுகூட வாசஞ்செய்யமாட்டேனென்றாலும், அவர்கள் பரஸ்பர சம்மதியினாலே தனித்தனியாய் வாசஞ் செய்துகொண்டிருந்தாலும், அப்படிப்பட்டவள் இந்தப் பிரிவின்படி தன் கணவனிடத்திலிருந்து ஜீவனாம்சம் பெறுவதற்குப் பாத்தியஸ்தியாகமாட்டாள்.

(5) யார்பட்சத்தில் இந்தப்பரிவின்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிறதோ அந்த மனைவியானவள் விபசாரஞ் செய்துகொண்டிருக்கிறாளென்றாவது, தகுந்த காரணமில்லாமல் அவள் தன் கணவனோடுகூட வாசஞ்செய்ய நிராகரிக்கிறாளென்றாவது, அவர்கள் பரஸ்பர சம்மதியின்மேல் தனித்தனியே வாசஞ்செய்து கொண்டிருக்கிறார்களென்றாவது ருஜுவானால், மாஜிஸ்ட்ரேட்டார் அந்த உத்தரவை ரத்து செய்யவேண்டும்.

(6) இந்த அத்தியாயத்தின்படி கேட்கப்பட்ட எல்லாச் சாட்சியத்தையும், சங்கதிக்குத் தக்கபடி கணவனோ அல்லது தகப்பனோ அவனுக்குமுன் வாங்கவேண்டும்; அந்த நபர் நேராக ஹாஜராகவேண்டியதில்லையென்று சொல்லப்பட்டிருக்குமாகில் அந்த நபரினுடைய ப்ளீடருக்கெதிரில் வாங்கவேண்டும்; மேலும், அந்தச் சாட்சியத்தை ஸம்மன் கேஸுகள் விஷயத்திலே சொல்லியபடி ரிகார்ட் செய்ய வேண்டும்.

ஆனால், ஸம்மன் சேருவதை அவன் வேண்டுமென்று தடுத்துக் கொண்டிருக்கிறானென்றாவது, கோர்ட்டில் வந்து ஹாஜராக அவன் வேண்டுமென்று அசட்டை செய்துகொண்டிருக்கிறானென்றாவது மாஜிஸ்ட்ரேட்டுக்குத் திருப்தியானால், அவர் அந்தக் கேஸை ஒருதலையாக விசாரித்துத் தீர்மானிக்கலாம். அந்தப்படி செய்யப்பட்ட யாதொரு உத்தரவின் தேதிமுதல் மூன்றுமாதத்திற்குள்ளாக விண்ணப்பஞ் செய்துகொள்வதன்மேல், சரியானகாரணம் காட்டப்படுமாகில் அந்த உத்தரவை ரத்துபண்ணலாம்.

(7) இந்த பிரிவின்படிக்கான விண்ணப்பங்களைப்பற்றி விவரிக்கையில் கோர்ட்டார் செலவைக்குறித்து நியாயமாயிருக்கும் உத்தரவைச் செய்ய அதிகாரமுடையவராவார்.

(8) யாதொரு நபர் எவ்விடத்தில் வசிக்கிறனோ அல்லது இருக்கிறனோ அல்லது தன்னுடைய மனைவியோடு கடைசியாய் அவன் எவ்விடத்தில் வசித்தானோ அந்த நபர்மேலாகிலும், சந்தர்ப்பத்துக் கேற்றபடி, சட்டசம்மதமில்லாத குழந்தையின் தாயானல் அவள்மேலாகிலும் இந்தப் பிரிவின்படி நடவடிக்கை நடந்தலாம்.

ஜீவனும்ச தொகையை மாற்றுவது.

489. (1) 488-வது பிரிவின்படி மாதாந்தர ஜீவனும்சம் பெற்றுக்கொண்டுவரும் யாதொரு நபரினுடைய ஸ்திதியாவது, அதே பிரிவின்படி தன் மனைவிக்காகிலும் குழந்தைக்காகிலும் மாதாந்தர ஜீவனும்சம் கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்ட நபரினுடைய ஸ்திதியாவது மாறியிருப்பதாக ருஜுவாகிறபட்சத்தில், மாஜிஸ்ட்ரேட்டானவர் ஜீவனும்சத்தைத் தமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி மாற்றலாம்; ஆனல் அவர் மாதாந்தர ஜீவனும்சத்தை அதிகப்படுத்தினல் மொத்தத்திலே அந்த ஜீவனும்சம் மாதாந்தரம் நூறு ரூபாய்க்கு மேற்படக்கூடாது.

(2) ஒரு தகுந்த ஸிவில் கோர்ட்டாருடைய தீர்மானத்தின்படி, 488-வது பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு உத்திரவு ரத்து செய்யப்படவேண்டுமென்றாவது அல்லது மாற்றப்படவேண்டுமென்றாவது அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோற்றினல், சந்தர்ப்பத்துக் கேற்றபடி அவர், அந்த உத்திரவை ரத்துசெய்யலாம் அல்லது அதை அப்படியே திருத்தலாம்.

ஜீவனும்ச உத்தரவை நிறைவேற்றுவது.

490. ஜீவனும்ச உத்தரவுக்கு ஒரு பிரதியை, யார்பட்சத்தில் அந்த உத்தரவு செய்யப்படுகிறதோ அந்த நபருக்காவது, அந்த நபருக்குச் சவரட்சகர் யாராவதிருந்தால் அவருக்காவது, ஜீவனும்சத்தொகை யாரிடத்தில் செலுத்தப்படவேண்டியதோ அந்த நபருக்காவது, கட்டணம் வாங்காமல் கொடுக்கவேண்டும்; எந்த நபருக்கு விரோதமாய் அந்த உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபரிருக்கும்படியான எந்த இடத்திலாவது யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர் இன்னர் தான் அந்த உபயத்தாரென்றும், ஜீவனும்சம் செலுத்

தப்படாமல் பாக்கியாயிருக்கிறதென்றும் திருப்திகரமாய்த் தெரிந்து கொள்வதன்மேல் அவர் அப்படிப்பட்ட உத்தரவை நிறைவேற்றலாம்.

37-ம் அத்தியாயம்.

ஹேபியஸ் கார்ப்பஸ் என்னும் கட்டளைத் தன்மையுள்ள உத்தரவுகள்.

ஹேபியஸ் கார்ப்பஸ் என்னும் கட்டளைத் தன்மை யுள்ள உத்தரவுகளைப் பிறப்பிக்க அதிகாரம்.

491. யாதொரு ஹைக்கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றும்போதெல்லாம்—

(a) தங்களுடைய க்ரிமினல் அப்பீல் அதிகாரப் பிரதேச எல்லைக்குள் இருக்கிற யாவனொருவனைச் சட்டப்படி நடத்துவதற்குத் தங்கள் கோர்ட்டுக்கு முன்பாகக் கொண்டுவரவேண்டுமென்றும் ;

(b) சட்டத்திற்கு விரோதமாயாவது அக்கிரமமாயாவது அப்படிப்பட்ட எல்லைக்குள் ஸர்க்கார் காவலிலாகிலும் யாவனொருவனுடைய சொந்தக் காவலிலாகிலும் அடைத்து வைக்கப்பட்டிருக்கிற யாவனொருவனை விட்டுவிடவேண்டுமென்றும் ;

(c) அப்படிப்பட்ட எல்லைக்குள்ளிருக்கிற யாதொரு ஜெயிலில் அடைத்துவைக்கப்பட்டிருக்கிற கைதியை, அந்தக் கோர்ட்டில் நடந்துகொண்டாகிலும் விசாரிக்கவேண்டியதாக வாகிலு மிருக்கிற யாதொரு சங்கதியில் சாட்சியாக விமரிசை செய்யப்படுவதற்கு அந்தக் கோர்ட்டுக்கு முன்பாகக் கொண்டுவரவேண்டுமென்றும் ;

(d) மேற்சொல்லியபடி காவலில் வைக்கப்பட்டிருக்கிற கைதியை, முறையே யாதொரு கோர்ட் மார்ஷலுக்கு முன்பாகவாவது, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களிடத்திலிருந்து வந்த யாதொரு கம்மிஷன் என்னுங் கட்டளையி னதிகாரத்தின்படி பிரவர்த்திக்கிற எந்தக் கம்மிஷனர்களுக்கு முன்பாகவாவது நடந்துகொண்டிருக்கிற யாதொரு சங்கதியைக் குறித்து விமரிசை செய்யப்படுவதற்

காகிலும், பரிசிலனை செய்யப்படுவதற்காகிலும், அந்தக் கோர்ட்மார்ஷல் அல்லது கம்மினர்களுக்கு முன்பாகக் கொண்டுவரவேண்டுமென்றும் ;

(e) அப்படிப்பட்ட எல்லைக்குள்ளிருக்கிற கைதியைப் பரிசிலனையின்பொருட்டு ஒரு காவலிலிருந்து வேறொரு காவலுக்குக் கொண்டுபோகவேண்டுமென்றும் ;

(f) அப்படிப்பட்ட எல்லைக்குள்ளிருக்கிற யாதொரு பிரதிவாதியின் சரீரத்தை, மரியல் வாரண்டுக்கு ஷெரிப்பினுடைய (Cepi corpus) ஸிபி கார்ப்பஸ் ரிட்டரன் ஆவதன்மேல் கொண்டுவரவேண்டுமென்றும், உத்தரவு செய்யலாம்.

(2) ஹைகோர்ட்டார் இந்தப் பிரிவுக்குட்பட்ட விஷயங்களில் நடவடிக்கையைக் கிரமப்படுத்துவதற்கு அப்போதைக்கப்போது விதிகள் செய்யலாம்.

(3) ஸ்ட்டேட் ப்ரிஸினர்களென்னும் துரைத்தன விரோதிகளாகிய கைதிகளைக்குறித்த 1818-ம்ளு பங்காளத்து ரெகுலேஷன் படிக்காவது, 1819-ம்ளு சென்னப்பட்டணத்து 2-வது ரெகுலேஷன் படிக்காவது, 1827-ம்ளுத்து 25-வது பம்பாய் ரெகுலேஷன்படிக்காவது, ஸ்ட்டேட் ப்ரிஸனர்களென்னும் துரைத்தன விரோதிகளாகிய கைதிகளைக்குறித்த 1850-ம் ளுத்து ஆக்ட்டின்படிக்காவது அதே மாதிரியான கைதிகளைக்குறித்த 1858-ம் ளுத்து ஆக்ட்டின் படிக்காவது காவலில் வைக்கப்பட்டிருக்கிற நபர்களுக்கு இந்தப்பிரிவிலுள்ள எந்த நிபந்தனையும் பிரயோகப்படாது.

அப்பீல் அதிகாரப் பிரதேசத்துக்கு வெளியில் ஹைக்கோர்ட்டாருடைய அதிகாரங்கள்.

491-A லெட்டர்ஸ் பேடன்ட் என்னும் அதிகாரபத்திரத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு ஹைக்கோர்ட்டார், தங்களுடைய க்ரிமினல் அப்பீல் அதிகாரப் பிரதேசமல்லாத வேறே அப்படிப்பட்ட இடத்திலுள்ள யாதொரு யுரோப்பிய ப்ரிடிஷ் குடிகள் விஷயமாக, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் உத்திரவிடுகிறபடி, 491-வது பிரிவினால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை செலுத்தலாம்.

9-ம் பாகம்.
உப நிபந்தனைகள்.
38 - ம் அத்தியாயம்.
பப்ளிக் ப்ராஸிக்யூட்டரைக் குறித்து.

பப்ளிக் ப்ராஸிக்யூட்டர்களை நியமிக்க அதிகாரம்.

492. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாகிலும் பிரதேச கவர்ன்மெண்டாராகிலும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்துக்குள் பொதுவாயாவது யாதொரு கேஸிலாவது குறிக்கப்பட்ட யாதொருஇனமான கேஸுகளைப்பற்றியாவது ஒன்று அல்லது பல உத்தியோகஸ்தர்களை நியமிக்கலாம்; அவர்களுக்குப் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர்கள் என்று பெயரிடவேண்டும்.

(2) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டின் மேலதிகாரத்துக் குட்பட்டு ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாவது, பப்ளிக் ப்ராஸிக்யூட்டரென்னும் உத்தியோகஸ்தர் இல்லாதிருந்தாலும், அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் நியமிக்கப் பட்டிராவிட்டாலும், இது விஷயத்திற்காக பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கிற அப்படிப்பட்ட அந்தஸ்துக்குக் கீழ்ப்பட்ட யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தரல்லாத வேறெவரையாகிலும் யாதொரு கேஸின் பொருட்டுப் பப்ளிக் ப்ராஸிக்யூட்டராக நியமிக்கலாம்.

பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் தன்வசத்தில்வந்த கேஸுகளிலே சகலகோர்ட்டுகளிலும் வாதிக்கலாம்.

493. பப்ளிக் ப்ராஸிக்யூட்டரானவர் தன்வசத்தில் வந்திருக்கிற யாதொரு கேஸானது எந்தக்கோர்ட்டில் விசாரணையிலாவது பரிசீலனையிலாவது அப்பீலிலாவதிருக்கிறதோ அப்படிப்பட்ட கோர்ட்டுக்கு முன்பாக, எழுத்துமூலமான யாதொரு அதிகாரமுமில்லாமல் ஹாஜராகி வாதிக்கலாம்; மேலும், அப்படிப்பட்ட யாதொரு கேஸிலே எவன்மேலாவது யாதொரு கோர்ட்டில் பிராது நடத்துவதற்கு யாதொரு நபர் சொந்தத்தில் யாதொரு ப்ளீடரை வைத்துக்கொண்டால், பப்ளிக் ப்ராஸிக்யூட்டரானவர் பிராதை நடத்தவேண்டும்; மேலும், அப்படி வைத்துக்கொள்ளப்பட்ட ப்ளீடரானவர் அந்தப் பிராதில் அவருடைய உத்தரவின்படி நடந்துகொள்ளவேண்டும்.

சொந்தத்தில்வைத்துக்கொள்ளப்பட்ட ப்ளீடர்கள் அவருடைய உத்தரவிற்குட்பட்டிருப்பது.

பிராதைத்தள்ளிக் கொண்டால் இன்னதாகுமென்பது.

494. யாதொரு பப்ளிக் ப்ராஸிக்யூட்டரானவர் ஜூரியால் பரிசிலனை செய்யப்பட்ட கேஸுகளில் அவர்கள் தங்களபிப்ராயத்தைத் தெரிவிப்பதற்கு முன்னேயும், யற்ற கேஸுகளில் தீர்ப்பு சொல்லப்படுவதற்கு முன்னேயும், பொதுவாகவாகிலும் அவன் எதற்காகப் பரிசிலனை செய்யப்படுகிறானோ அந்தக்குற்றற்றங்களில் யாதொரு குற்றத்தின் விஷயமாக அல்லது பல குற்றங்களின் விஷயமாகவாகிலும் அவன்மேலாவதிருக்கிற பிராதைக் கோர்ட்டாருடைய சம்மதியின் பேரில் தள்ளிக்கொள்ளலாம்; அப்படி தள்ளிக்கொள்வதன்மேல்,—

(a) குற்றபத்திரிகை தயார்செய்வதற்கு முன்னே பிராது தள்ளிக்கொள்ளப்பட்டால், அப்படிப்பட்ட குற்றத்தின் அல்லது குற்றங்களின் விஷயமாக குற்றஞ்சாட்டப்பட்டவனை விட்டுவிடவேண்டும்;

(b) குற்றப்பத்திரிகை தயார்செய்ததற்குப் பின்பு பிராது தள்ளிக்கொள்ளப்பட்டாலும், இந்தச்சட்டத்தின்படி யாதொரு குற்றபத்திரிகை வேண்டியில்லாவிட்டாலும், அப்படிப்பட்ட குற்றத்தின் அல்லது குற்றங்களின் விஷயமாக குற்றஞ் சாட்டப்பட்டவனைக் குற்றவாளியல்லவென்று விடுதலை செய்யவேண்டும்.

பிராதை நடத்த உத்தரவு.

495. (1) யாதொரு கேஸை விசாரணை அல்லது பரிசீலனை செய்கிற எந்த மாஜிஸ்ட்ரேட்டாவது, இந்த விஷயத்திலே பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படுகிற அந்தஸ்துக்குக் கீழ்ப்பட்ட யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தரல்லாத வேறே எவருக்காகிலும் அந்தப் பிராதை நடத்தும்படி உத்தரவுகொடுக்கலாம்; ஆனால் அட்வொகேட் ஜெனரல், ஸ்டாண்டிங் கவுன்ஸில், கவர்ன்மெண்ட் ஸொலிஸிட்டர், பப்ளிக் ப்ராஸிக்யூட்டர், அல்லது இது விஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டார் பொதுவாகவாவது பிரத்தியேகமாகவாவது அதிகாரங்கொடுக்கிற வேறே உத்தியோகஸ்தர் ஆகிய இவர்களல்லாத வேறே எவரும் அப்படிப்பட்ட உத்தரவில்லாமலே அந்தப்படி செய்ய அர்ஹராகமாட்டார்.

(2) 494-வது பிரிவினால் நிபந்தனை கண்டிருக்கிறபடி பிராது தொடருவதினின்றும் விலகிப்போக அப்படிப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தருக்கும் அதே மாதிரியான அதிகாரமுண்டு; அந்தப்பிரிவின் நிபந்தனைகள் அப்படிப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தர் விலகிப்போவதற்குப் பிரயோகப்படும்.

(3) பிராதை நடத்துகிறவனெவனாவது நேராகவாகிலும் ப்ளீடர் மூலமாகவாகிலும் அப்படிச் செய்யலாம்.

(4) குற்றஞ் சாட்டப்பட்டவன்மேல் எதன் நிமித்தியமாய்ப் பிராது நடத்தப்படுகிறதோ அந்தக் குற்றத்தைக்குறித்து முதல்விசாரணை செய்கையில் யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் சம்பந்தப்பட்டிருந்தால் அவன் அந்தப் பிராதை நடத்தவொட்டப்பட மாட்டான்.

39 - ம் அத்தியாயம்.

ஜாமீனைக் குறித்து.

496. ஜாமீன்வாங்கத்தகாத குற்றஞ் சாட்டப்பட்டவனல்லாத யாவனொருவன் யாதொரு போலீஸ் ஸ்டேஷன் விசாரணை உத்தியோகஸ்தரால் வாரன்டில்லாமல் பிடிக்கப்பட்டாலும் மறியல் செய்யப்பட்டாலும், யாதொரு கோர்ட்டாருக்கு முன்பாக ஹாஜரானாலும் கொண்டுவரப்பட்டாலும், அந்த உத்தியோகஸ்தருடைய காவலிலிருக்கையி லெப்போதாவது அல்லது அந்தக் கோர்ட்டாருக்கு முன்பாக நடக்கிற நடவடிக்கையில் எந்த தசையிலாவது, ஜாமீன்கொடுக்கச் சித்தமாயிருந்தால், அவனை ஜாமீன்மேல் விட்டுவிடவேண்டும்.

இன்ன விஷயங்களில் ஜாமீன் வாங்கவேண்டு மென்பது.

ஆனால் அந்த உத்தியோகஸ்தர் அல்லது கோர்ட்டார் - யுக்தமாகத்தோற்றுகிறபட்சத்தில், அப்படிப்பட்டவனிடத்திலிருந்து ஜாமீன் வாங்காமல் இதில் பின்னால் சொல்லியிருக்கிற விதமாய் அவன் ஹாஜராவதற்கு ஜமீன்தாரர்களில்லாமலே அவன் முச்சிலிக்கா எழுதிக்கொடுப்பதன்மேல் அவனை விட்டுவிடலாம்.

அல்லாமலும் இந்தப்பிரிவில்கண்டதெதுவும், 107-வது பிரிவைச்சேர்ந்த (4) குறிப்பிட்ட உட்பிரிவிலும் 117-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவிலும்கண்ட நிபந்தனைகளுக்கு பாதகமுண்டுபண்ணுவதாய் எண்ணப்படமாட்டாது.

497. (1) ஜாமீன் வாங்கத்தகாத யாதொரு குற்றஞ் சாட்டப்பட்டவனெவனாவது போலீஸ் ஸ்டேஷன் விசாரணை உத்தியோகஸ்தரால் வாரண்டில்லாமல் பிடிக்கப்பட்டாலும், மறியல் செய்யப்பட்டாலும், யாதொரு கோர்ட்டாருக்கு முன்பாக ஹாஜரானாலும் கொண்டுவரப்பட்டாலும், அவனை ஜாமீன்மேல் விட்டுவிடலாம்; ஆனால், அவன் மரணதண்டனை செய்ததா

ஜாமீன் வாங்கத்தகாத குற்றவிஷயத்தில் இன்னபடிக்கானால் ஜாமீன்வாங்கலாம்.

தக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறானோ அந்தக் குற்றத்திற்கு மரண தண்டனையாவது ஆயுள்பரியந்தம் தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனையாவது விதிக்கத்தக்கதாய் இருப்பதாக நம்புவதற்கு நியாயமான ஹேதுக்கள் காணப்பட்டால் அவனை அப்படி விட்டுவிடக்கூடாது.

ஆனால், ஜாமீன் வாங்கத்தகாத யாதொரு குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் பதினாறு வயதுக்குட்பட்டிருக்கிற யாதொரு நபரையாவது யாதொரு ஸ்திரீயையாவது வியாதியுள்ள அல்லது துர்ப்பலமாயுள்ள நபரையாவது ஜாமீன்மேல் விடும்படி கோர்ட்டார் எந்தக் கேஸிலாகிலும் கட்டளையிடலாம்.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவன் ஹாஜர்ஜாமீன் வாங்கக்கூடாத ஒரு குற்றத்தைச் செய்திருக்கிறானென்று நம்புவதற்கு நியாயமான ஹேதுக்களில்லையென்றும்; ஆனால், அவனுடைய குற்றத்தை இன்னும் விசாரணை செய்வதற்குப் போதுமான ஹேதுக்களிருக்கிறதென்றும், அந்த உத்தியோகஸ்தர் அல்லது கோர்ட்டாருக்குச் சங்கதிக்குத் தக்கபடி முதல் விசாரணை, அல்லது பரிசிலனையில் எந்த தெசையிலாவது தோற்றுகிறபட்சத்தில், குற்றஞ் சாட்டப்பட்டவனை அந்த விசாரணை முடிவாகிற வரையில் ஜாமீன்மேலாவது, அந்த உத்தியோகஸ்தர் அல்லது கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றினால் இதில் பின்னால் சொல்லப்படுகிற விதமாய் அவன் ஹாஜராவதற்கு ஜாமீன்தாரர்களில்லாமலே அவன் முச்சிலிக்கா எழுதிக்கொடுப்பதன்மேலாவது, விடுதலை செய்யவேண்டும்.

(3) (1) அல்லது (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளின்படி யாதொரு நபரை ஜாமீன்பேரில் விடுதலைசெய்கிற ஒரு கோர்ட்டார் அல்லது ஒரு உத்தியோகஸ்தர் அந்தப்படி அவர்கள் அல்லது அவர் செய்வதற்குண்டான காரணங்களை எழுதிவைக்கவேண்டும்.

(4) ஜாமீன் வாங்கத்தகாத யாதொரு குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஒரு நபருடைய விசாரணை முடிந்தபின்பு, தீர்ப்புச்சொல்லப்படுவதற்கு முன்னமே எப்போதாவது அந்தக்கோர்ட்டார் - குற்றஞ் சாட்டப்பட்டவன் அப்படிப்பட்ட யாதொரு குற்றத்தைச் செய்திருக்கிறானென்று நம்புவதற்கு நியாயமான ஹேதுக்களில்லையென்று அபிப்பிராயப்பட்டால், தாங்கள் சொல்லப்போகிற தீர்ப்பைக்கேட்பதற்கு ஹாஜராவதாக ஜாமீன்தாரர்களில்லாமலே அவன் முச்சலிக்கா எழுதிக்கொடுப்பதன்மேல், அவனை விட்டுவிடலாம்.

(5) ஒரு ஹைகோர்ட்டாராவது ஸெஷன்கோர்ட்டாராவது, வேறே யாதொரு கோர்ட்டார், தங்களால் விடுதலைசெய்யப்பட்டிருக்கும் ஒரு நபரின் விஷயத்திலும், இந்தப்பிரிவின்படி விட்டுவிடப்பட்டிருக்கிற யாவனொருவனைப் பிடிப்பிக்கலாம்; மேலும், அவனைக் காவலில் வைக்கலாம்.

498. இந்த அத்தியாயத்தின்படி எழுதிக்கொடுக்கப்பட்ட ஒவ்வொரு முச்சிலிக்காவின் தொகையையும் அந்தந்தக் கேஸின் தாரதம்மியத்துக்குத் தக்கபடி நிர்ணயிக்கவேண்டியதுமல்லாமல் அது அதிகமாயிருக்கவுங்கூடாது; ஹைக்கோர்ட்டாராவது ஸெஷன் கோர்ட்டாராவது குற்றத் தீர்மானத்தின்மேல்அப்பீலிருந்தாலு மில்லாவிட்டாலும் யாதொரு கேஸிலே, யாவனொருவனிடத்திலிருந்து ஜாமீன் வாங்கும்படியாவது யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் அல்லது மாஜிஸ்ட்ரேட் கேட்கிற ஜாமீனைக் குறைக்கும்படியாவது உத்தரவு செய்யலாம்.

ஜாமீன் வாங்கும்படியாகிலும் ஜாமீனைக் குறைக்கும்படியாகிலும் உத்தரவுபண்ண அதிகாரம்.

499. (1) யாவனொருவனை ஜாமீன்மேலாவது அவனுடைய முச்சிலிக்காவின் மேலாவது விட்டுவிடுவதற்குமுன்னமே அவன் சங்கதிக்குத் தக்கபடி போலீஸ் உத்தியோகஸ்தர் அல்லது கோர்ட்டாருக்குப் போதுமானதென்று தோற்றுகிற தொகைக்கு முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கவேண்டும்; அன்றியும் அவனை ஜாமீன்மேல் விடுகிறதாயிருந்தால், பலானகாலத்தில் பலான இடத்திலே அந்த நபர் ஹாஜராகவேண்டுமென்றும், சங்கதிக்குத் தக்கபடி போலீஸ் உத்தியோகஸ்தர் அல்லது கோர்ட்டார் வேறேவிதமாய் உத்தரவுசெய்கிறவரையில் அப்படி ஹாஜராய்கொண்டேயிருக்கவேண்டுமென்றும் ஷரத்துகண்டு ஒன்று அல்லது பலதகுந்த ஜாமீன்தாரர்கள் அப்படிப்பட்ட முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கவேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டவனும் ஜாமீன்தாரர்களும் எழுதிக்கொடுக்கிற முச்சிலிக்கா.

(2) அந்தக்கேஸில் வேண்டியிருந்தால், ஜாமீன்மேல் விடப்பட்டவன் ஹைக்கோர்ட்டிலாகிலும் ஸெஷன் கோர்ட்டிலாகிலும் வேறெந்தக் கோர்ட்டிலாகிலும் பிராதைப்பற்றி ஜவாப்சொல்ல வரவழைக்கப்பட்டபோது வருவதற்கு அந்த முச்சிலிக்காவில் அவனைப் பிணைப்படுத்தவும் வேண்டும்.

500. (1) முச்சிலிக்கா எழுதிக்கொடுத்தவுடனே, எவன் ஹாஜராகவேண்டியதற்காக அது எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவனை விட்டுவிடவேண்டும்; அவன் ஜெயிலிலிருந்தால், அவனிடத்தில் ஜாமீன் வாங்குகிற கோர்ட்டார் அந்த ஜெயில் விசாரணை உத்தியோகஸ்தருக்கு அவனை விடுதலைசெய்யும்படி உத்தரவு பிறப்பிக்கவேண்டும்; அந்த உத்தியோகஸ்தர் அந்த உத்தரவைப் பெற்றுக்கொள்வதன்மேல் அவனை விடுதலை செய்யவேண்டும்.

காவலிலிருந்து விடுதலைசெய்வது.

(2) எதற்காக முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கப்பட்டதோ அந்த விஷயத்தைவிட வேறு விஷயத்திற்காக மறியலுக்கு உள்ளாகவேண்டியவனை, இந்தப் பிரிவிலாவது 496 - அல்லது 497 - வது பிரிவிலாவது சொல்லியிருக்கிற எந்த நிபந்தனையினாலும் விடுதலைசெய்ய வேண்டியிருப்பதாக எண்ணக்கூடாது.

பிரதமத்தில் ஏற்றுக்கொண்ட ஜாமீன் போதுமானதாயிராதபட்சத்தில் போதுமான ஜாமீன் வாங்கும்படி உத்தரவுசெய்ய அதிகாரம்.

501. பிசகினாலாவது மோசடியினாலாவது வேறெந்தவிதத்தினாலாவது குறைந்த ஜாமீன்தாரர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும், அவர்கள் பிறகு போதுமானவர்களல்லாமற்போனாலும், கோர்ட்டார் ஜாமீன்மேல் விடப்பட்டவனைத் தங்களுக்கு முன்னே கொண்டுவரும்படி ஆள்மேல் வாரன்ட் பிறப்பிக்கலாம்; மேலும், போதுமான ஜாமீன்தாரர்களைக் கொடுக்கும்படி அவனுக்கு உத்தரவு செய்யலாம்; அவன் அப்படி கொடுக்கத் தவறிப்போவானாகில் அவனை ஜெயிலுக்குக் கமிட்பண்ணலாம்.

ஜாமீன்தார்களை விடுதலை செய்வது.

502. (1) ஜாமீன்மேல் விடப்பட்டவனெவனுகிலும் ஹாஜராவதற்காகவும் வருவதற்காகவும் பிணைப்பட்ட எல்லா ஜாமீன்தாரர்களுமாவது அவர்களில் யாராவதுமுச்சிலிக்காவை முழுமைக்குமாகிலும் தங்களுக்குச் சம்பந்தப்படுகிறமட்டிலாகிலும் ரத்துசெய்யும்படி யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு எப்போதாவது மனுசெய்துகொள்ளலாம்.

(2) அப்படி மனுசெய்துகொண்டபின்பு, அப்படி விடப்பட்டவனைத் தமக்கு முன்பாகக்கொண்டுவரும்படி அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் ஆள்மேல் வாரன்ட் பிறப்பிக்கலாம்.

(3) அந்த நபர் அந்த வாரன்டின்படி ஹாஜராவதன்மேலாவது தானே வலியவருவதன்மேலாவது, மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்த முச்சிலிக்காவை முழுமைக்குமாவது மனுதாரர்களுக்குச் சம்பந்தப்படுகிறமட்டிலாவது ரத்துபண்ணும்படி உத்தரவு செய்யவேண்டும்; மேலும், வேறே போதுமான ஜாமீன்தாரர்களைக் கொடுக்கும்படி அந்த நபரைக் கேட்கவேண்டும்; அவன் அப்படி கொடுக்கத் தவறிப்போகிறபட்சத்தில், அவனைக் காவலுக்கு அனுப்பவேண்டும்.

40 - ம் அத்தியாயம்

சாட்சிகளை விமரிசை செய்வதற்காகக் கம்மிஷனென்னும் கட்டளைகளைக்குறித்து.

இன்னபடிக் காரணத்தால் சாட்சி ஹாஜராகவேண்டியதில்லையென்று உத்தரவு செய்யலாம்.

503. (1) இந்தச் சட்டத்தின்படி யாதொரு விசாரணையாவது பரிசிலனையாவது வேறே யாதொரு நடவடிக்கையாவது நடந்துகொண்டிருக்கையில், நீதி நடப்பதற்கு யாதொரு சாட்சியை விமரிசைசெய்வது அவசியமென்றும், அதிக ஆலசியமாவது செலவாவது அசந்தர்ப்பமாவதில்லாமல் யாதொரு சாட்சியை ஹாஜர்ப்படுத்துவிக்கக் கூடாமையாயிருக்குமென்றும், கேஸின் சங்கதியை யோசிக்கையில் அப்படிப்பட்ட ஆலசிய முதலானவை நியாயமாயிராதென்றும் யாதொரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக்காவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது ஸெஷன் கோர்ட்டாருக்காவது ஹைக்கோர்ட்டாருக்காவது தோன்றினல், அந்த மாஜிஸ்ட்ரேட் அல்லது கோர்ட்டார் அப்படிப்பட்ட சாட்சி ஹாஜராவதை வேண்டாமென்று நிறுத்திவிடலாம்; அன்றியும், யாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் அப்படிப்பட்ட சாட்சி வாசஞ்செய்கிருனே அந்த டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கு அந்த சாட்சியின் சாட்சியத்தைக் கேட்கும்படி கம்மிஷனென்னும் கட்டளை பிறப்பிக்கலாம்.

கம்மிஷனென்னும் கட்டளை பிறப்பிப்பதும் அதன்படி நடவடிக்கையும்.

(2) இந்தியாவில் யாதொரு அதிபதி அல்லது தலைவரைச் சேர்ந்ததாய், ப்ரிட்டிஷ் இந்தியன் துரைத்தனத்தாருக்குப் பிரதிநிதியாகிய யாதொரு உத்தியோகஸ்தரிருக்கிற ராஜ்ஜியங்களில் அந்தசாட்சி வாசஞ்செய்துகொண்டிருந்தால், கம்மிஷனென்னும் கட்டளையை அந்த உத்தியோகஸ்தருக்கு அனுப்பலாம்.

(3) யாருக்குக் கம்மிஷனென்னும் கட்டளை அனுப்பப்படுகிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டாவது உத்தியோகஸ்தராவது, அவர் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாயிருந்தால், அவராவது இதுவிஷயத்தில் அவர் நியமிக்கிற முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாவது அந்த சாட்சியிருக்கிற இடத்திற்குட்போயாகிலும் அந்த சாட்சியை ஸம்மனனுப்பித் தனக்கு முன்பாக வரவழைத்தாகிலும், இந்தச் சட்டத்தின்படி வாரன்ட் கேஸுகளின் பரிசீலனையில்செய்வதுபோலவே அவனுடைய சாட்சியத்தைக்கேட்டு எழுதவேண்டும்; மேலும், இதன் பொருட்டு அவ்வித பரிசிலனையில் செலுத்துகிற அதிகாரங்களைச்செலுத்தலாம்.

(4) (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட உத்தியோகஸ்தருக்குக் கம்மிஷனென்னும் கட்டளை பிறப்பிக்கப்படுமாகில், அவர் - அந்த கம்மிஷன்படி தமக்குள்ள அதிகாரங்களையும் அலுவல்களையும், தமக்குக் கீழ்ப்பட்டவராய், ப்ரிட்டிஷ் இந்தியாவில் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டின் அதிகாரங்களுக்குக் குறைவுபடாத அதிகாரங்களையுடைய யாதொரு உத்தியோகஸ்தருக்குக் கொடுக்கலாம்.

ராஜதானிக்குள் சாட்சியிருக்கிற விஷயத்தில் கம்மிஷனென்னும் கட்டளை.

504. (1) யாதொரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டினுடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் அந்த சாட்சியிருக்கிற விஷயத்தில், கம்மிஷனென்னும் கட்டளையைப் பிறப்பிக்கும் மாஜிஸ்ட்ரேட் அல்லது கோர்ட்டார் அப்படிப்பட்ட ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதை அனுப்பலாம். அதற்குமேல் அவர்-அப்படிப்பட்ட சாட்சியானவன் தமக்குமுன் நடக்கிற யாதொரு கேஸில் சாட்சியாயிருந்தாற்போலவே அவனை ஹாஜராகும்படி நிர்ப்பந்தித்து விமரிசைசெய்யலாம்.

(1-a) இந்தப் பிரிவின்படி யாதொரு பிரதான ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக்கு கம்மிஷன் என்னும் கட்டளை பிறப்பிக்கபபடும்போது, அவர் - அந்தக் கம்மிஷன்படி தமக்குள்ள அதிகாரங்களையும் அலுவல்களையும் தமக்குக் கீழ்ப்பட்டிருக்கும் வேறே யாதொரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக்கு ஒப்பிக்கலாம்.

(2) அடிமை வியாபாரத்தைக் குறித்த 1876-ம் வருஷத்து ஆக்ட் 3-வது பிரிவின்படி கம்மிஷனென்னும் கட்டளையைப் பிறப்பிக்க ஹைகோர்ட்டாருக்குள்ள அதிகாரத்திற்கு, இந்தப்பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினாலும் பாதகமுண்டாவதாக எண்ணக்கூடாது.

கட்சிக்காரர்கள் சாட்சியை விமரிசை செய்யலாம்.

505. (1) இந்தச்சட்டத்தின்படி நடந்துகொண்டிருக்கிற எந்த நடவடிக்கையில் யாதொரு கம்மிஷனென்னும் கட்டளை பிறப்பிக்கப்படுகிறதோ அந்த நடவடிக்கையில் கட்சிக்காரர்கள் - கம்மிஷனை அனுப்புகிற மாஜிஸ்ட்ரேட் அல்லது கோர்ட்டார் விவாத அம்சத்துக்கு ஒத்துமையானவைகளென்று எண்ணுகிற சவால்களை எழுத்து மூலமாய்த் தனித்தனி அனுப்பலாம்; எவருக்கு அந்தக் கம்மிஷன் அனுப்பப்பட்டிருக்கிறதோ அல்லது எவருக்கு அந்தக் கம்மிஷனை நிறைவேற்றும்படி அலுவல் ஒப்பிக்கப்பட்டிருக்கிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட் அல்லது உத்தியோகஸ்தர் அப்படிப்பட்ட சவால்களின்மேல் அந்த சாட்சியை விமரிசை செய்யவேண்டும்.

(2) அந்த மாஜிஸ்ட்ரேட் அல்லது உத்தியோகஸ்தருக்கு முன்பாக, அப்படிப்பட்ட யாதொரு கட்சிக்காரன் ப்ளீடர் மூலமாகவாவது

காவலில் இல்லாவிட்டால் நேராகவாவது ஹாஜராகி மேற்படி சாட்சியை (சங்கதிக்குத் தக்கபடி) விமரிசை செய்யலாம், ரத்து சவால்போடலாம், புனர்விமரிசை செய்யலாம்.

கம்மிஷனென்னுங் கட்டளை பிறப்பிக்கும் பொருட்டு மனு செய்துகொள்ள ப்ரொவின்ஷியல் ஸபார்டினேட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரம்.

506. இந்தச் சட்டத்தின்படி யாதொரு விசாரணையாவது பரிசீலனையாவது வேறே யாதொரு நடவடிக்கையாவது ராஜதானி மாஜிஸ்ட்ரேட் அல்லது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் தவிர வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாக நடந்துகொண்டிருக்கையில், நீதி நடப்பதற்கு யாருடைய சாட்சியம் அவசியமாயிருக்கிறதோ அந்த சாட்சியை விமரிசை செய்வதற்காகக் கம்மிஷனென்னுங் கட்டளை பிறப்பிக்க வேண்டுமென்றும், அதிக ஆலசியமாவது செலவாவது அசந்தர்ப்பமாவதில்லாமல் யாதொரு சாட்சியை ஹாஜர்ப்படுத்துவிக்கக் கூடாமையாயிருக்குமென்றும், கேஸின் சங்கதியை யோசிக்கையில் அப்படிப்பட்ட ஆலசிய முதலானவை நியாயமாயிராதென்றும் தோற்றினால், அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் மனுசெய்துகொள்வதற்குண்டான நியாயங்களைக் கண்டு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு மனு செய்துகொள்ளவேண்டும் ; டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் இதில் முன்னமே சொல்லியிருக்கிறபடி கம்மிஷனென்னுங் கட்டளையைப்பிறப்பிக்கலாம், அல்லது அந்த மனுவைத் தள்ளிவிடலாம்.

கம்மிஷனென்னுங் கட்டளையை ரிட்டரன்பண்ணுவது.

507. (1) 503 அல்லது 506 - வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு கம்மிஷனென்னுங் கட்டளை கிரமமாய் நிறைவேற்றப்பட்ட பின்பு, அதை அந்தக் கட்டளையின்படி விமரிசைசெய்யப்பட்ட சாட்சியின் வாக்குமூலசகிதமாய் அதைப் பிறப்பித்த கோர்ட்டுக்கு ரிட்டரன் பண்ணவேண்டும் ; அந்தக் கம்மிஷனென்னுங் கட்டளையையும் அது ரிட்டரனுனதையும் அந்த சாட்சி வாக்குமூலத்தையும் கட்சிக்காரர்கள் நியாயமான சமயங்களிலெல்லாம் பார்வையிட வைத்திருக்கவேண்டும்; மேலும், அவைகளை உபயத்திராளும் நியாயமாய் நீக்கப்பட்ட சகலத்திற்கு முட்பட்டு அந்தக் கேஸில் சாட்சியமாக வாசிக்கலாம் ; அன்றியும் அவைகள் ரிகார்டில் சேரவேண்டும்.

(2) அந்தப்படி வாங்கப்பட்ட யாதொரு வாக்குமூலம் 1872-ம் ஹு த்திய இந்துதேசத்துச் சாட்சி ஆக்ட் 33-வது பிரிவினுல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற திட்டங்களுக்கு இணங்கியிருந்தால், வேருெரு

கோர்ட்டாருக்கு முன்னே கேஸ் நடந்துகொண்டிருக்கும்போது பிறகு எந்த நிலைமையிலாவது அந்த வாக்குமூலத்தைச் சாட்சியமாகவும் ஏற்றுக்கொள்ளலாம்.

விசாரணை அல்லது பரிசீலனையை நிறுத்துவைப்பது.

508. 503-வது அல்லது 506-வது பிரிவின்படி கம்மிஷனை அனுப்பக் கட்டளை பிறப்பிக்கப்படுகிற ஒவ்வொரு கேஸிலும், அந்தக் கட்டளையை நிறைவேற்றுவதற்கும் ரிட்டர்ன் பண்ணுவதற்கும் நியாயமாய்ப் போதுமானதாயிருக்கிற குறித்தகாலம் வரையில், விசாரணையையாவது பரிசீலனையையாவது வேறே நடவடிக்கையையாவது நிறுத்திவைக்கலாம்.

41-ம் அத்தியாயம்.

சாட்சிகளைக்குறித்த விசேஷ விதிகள்.

வைத்திய சாட்சியின் வாக்குமூலம்.

509. (1) யாதொரு ஸிவில் ஸர்ஜன் அல்லது வேறே வைத்திய சாட்சியினிடத்திலே மாஜிஸ்ட்ரேட்டினால் குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கெதிரில் வாங்கி அத்தாட்சிக் கையெழுத்து செய்யப்பட்டிருக்கிறதாகவாவது, 40-ம் அத்தியாயத்தின்படி கம்மிஷன்மேல் வாங்கப்பட்டிருக்கிறதாகவாவதுள்ள வாக்குமூலத்தை, அந்த வாக்குமூலங் கொடுத்தவர் சாட்சியாக அழைக்கப்படாமற் போனபோதினும், இந்தச் சட்டத்தின்படி நடக்கும் யாதொரு விசாரணை - பரிசீலனை அல்லது வேறே நடவடிக்கையில் சாட்சியமாகக் கொடுக்கலாம்.

வைத்தியசாட்சியை ஸம்மனனுப்பி வரவழைக்க அதிகாரம்.

(2) கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால், அப்படி வாக்குமூலங்கொடுத்தவரை அவருடைய வாக்குமூலசங்கதியைக்குறித்து சம்மனனுப்பி வரவழைத்து விமரிசைசெய்யலாம்.

ரஸாயனபரிசோதகருடைய ரிப்போர்ட்.

510. இந்தச் சட்டத்தின்படி யாதொரு நடவடிக்கை நடக்கையில், பரிசோதித்தாவது பகுத்தாராய்ந்தாவது ரிப்போர்ட் பண்ணும்படி யாதொரு கவர்ன்மெண்ட் (Chemical Examiner) ரஸாயன பரிசோதகர் அல்லது உதவி ரஸாயன பரிசோதகரிடத்திற்குக் கிரமமாய் அனுப்பப்பட்ட யாதொரு பொருள் அல்லது வஸ்துவைக் குறித்து அப்படிப்பட்டவர் கையெழுத்துப்போட்டனுப்பிய ரிப்போர்ட்டென்று பொருள்படுகிற யாதொரு தஸ்தவேஜை, இந்தச் சட்டத்தின்

படி நடக்கும் யாதொரு விசாரணையிலாவது பரிசீலனையிலாவது வேறே நடவடிக்கையிலாவது சாட்சியமாக உபயோகிக்கலாம்.

முந்திய குற்ற ஸ்தாபனையாவது குற்ற நிவாரணையாவது ருஜுவாகிற விதம்.

511. இந்தச் சட்டத்தின்படி நடக்கும் யாதொரு விசாரணை-பரிசீலனை அல்லது வேறே நடவடிக்கையிலே, அந்தந்த காலத்தில் வழங்கிக்கொண்டிருக்கிற யாதொரு சட்டத்திற்சொல்லியுள்ள வேறெந்த விதத்தோடுங்கூட, முந்திய குற்றஸ்தாபனையையாவது குற்ற நிவாரணையையாவது,—

(a) அப்படிப்பட்ட குற்றஸ்தாபனை அல்லது நிவாரணை எந்தக்கோர்ட்டில் செய்யப்பட்டதோ, அந்தக் கோர்ட்டினுடைய ரிகார்டைத் தம் வசத்தில் வைத்துக்கொண்டிருக்கிற உத்தியோகஸ்தருடைய கையெழுத்துப்பட அந்த சிட்சைத் தீர்ப்பு அல்லது உத்தரவுக்கு நகலென்று ஸெர்ட்டிபை செய்யப்பட்ட எக்ஸ்ட்ராக்ட்டினுலாகிலும்,

(b) குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட விஷயத்தில், அந்தத் தண்டனையாவது அதிலெவ்வளவாவது எவ்விடத்தில் நிறைவேற்றப்பட்டதோ அந்த ஜெயிலின்விசாரணை உத்தியோகஸ்தர் கையெழுத்து செய்திருக்கிற ஸெர்ட்டிபிகேட்டினுலாகிலும், எதன்படி அந்தத் தண்டனையடையப்பட்டதோ அந்தக் கம்மிட்மெண்ட் வாரன்டைக் கொண்டுவந்து காட்டியாகிலும், ருஜுப்படுத்தலாம்;

அவைகளோடுகூட, அப்படிப்பட்ட கேஸுகளொவ்வொன்றிலும், அப்படிப்பட்ட குற்றஸ்தாபனை அல்லது குற்ற நிவாரணையடைந்தவன் தான் குற்றஞ்சாட்டப்பட்ட நபரென்பதைக் குறித்து சாட்சியத்தைக்கொண்டும் ருஜுப்படுத்தலாம்

குற்றஞ்சாட்டப்பட்டவன் ஹாஜரில்லாதபோது சாட்சியத்தை ரிகார்ட் பண்ணுவது.

512. **(1)** குற்றஞ் சாட்டப்பட்டவன் மறைந்திருக்கிறதாகவும், உடனே அவன் பிடிபடுவதாயில்லையென்றும் ருஜுவானால், எந்தக் குற்றத்தை அவன் செய்ததாகப் பிராதுசெய்யப்பட்டிருக்கிறதோ அந்தக் குற்றத்திற்காக அவனைப் பரிசீலனை செய்யவாகிலும் பரிசீலனைக்குக் கம்மிட்பண்ணவாகிலும் அதிகாரமுள்ள கோர்ட்டார் அவன் ஹாஜரில்லாதிருக்கை

யில் பிரது பட்சத்தில் யாராவது சாட்சிகள் கொண்டுவரப்பட்டால் அவர்களை விமரிசைசெய்து அவர்களுடைய வாக்குமூலங்களை ரிகார்ட் பண்ணலாம். அப்படிப்பட்டவன் பிடிக்கப்பட்ட பின்பு, வாக்குமூலங் கொடுத்தவன் இறந்துபோயாவது சாட்சியங்கொடுக்க அசக்தனுயாவது, அதிக ஆலசியமாயாகிலும் செலவாகிலும் அசந்தர்ப்பமாகிலுமில்லாமல் அவனை ஹாஜர்ப்படுத்துவிக்கக் கூடாமையாயிருந்து கேஸின் சங்கதியை யோசிக்கையில் அப்படிப்பட்ட ஆலசிய முதலானவை நியாயமல்லாததாயாவது இருக்கிறபட்சத்தில் அவன்மேல் சாட்டப்பட்ட குற்றத்திற்காக அவனை விசாரணை அல்லது பரிசீலனைசெய்கையிலே அப்படிப்பட்ட யாதொரு வாக்குமூலத்தைச் சாட்சியமாகத் தாக்கல்செய்யலாம்.

குற்றவாளி தெரியவராதபோது சாட்சியத்தை ரிகார்ட் பண்ணுவது.

(2) மரணதண்டனையாவது தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனையாவது விதிக்கப்படத்தக்க குற்றமானது தெரியவராத யாரோ நபர் அல்லது நபர்களால் செய்யப்பட்டிருப்பதாகத் தோற்றுமானல், முதல் வகுப்பைச்சேர்ந்த யாதொரு மாஜிஸ்ட்ரேட் விசாரணைசெய்து, அக்குற்றத்தைக் குறித்துச் சாட்சியங்கொடுக்கக்கூடிய எவ்வித சாட்சிகளையாவது விமரிசை பண்ணவேண்டுமென்று ஹைகோர்ட்டார் கட்டளையிடலாம். வாக்குமூலங்கொடுத்தவன் இறந்துபோயிருந்தாலும், சாட்சியங்கொடுக்க அசக்தனுயிருந்தாலும், ப்ரிட்டிஷ் இந்தியாவின் எல்லைகளுக்கு வெளியேயிருந்தாலும், பிறகு அக்குற்றம் சாட்டப்படுகிற யாதொரு நபருக்கு விரோதமாக மேலேகண்டபடி வாங்கப்படும் வாக்குமூலங்களைச் சாட்சியமாகச் சொல்லலாம்.

42-ம் அத்தியாயம்.

முச்சிலிக்காக்களைக்குறித்து நிபந்தனைகள்.

முச்சிலிக்காவுக்குப் பத்திரமாய்ப் பணங்கட்டுவது.

513. ஜாமீன்தாரர்களோடாவது ஜாமீன்தாரர்களில்லாமலாவது முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கும்படி. எவனுக்காவது யாதொரு கோர்ட்டாராகிலும் உத்தியோகஸ்தராகிலும் உத்தரவுசெய்தால், நல்ல நடத்தைக்காக முச்சிலிக்கா வாங்கும் விஷயத்தில் தவிர,

அப்படிப்பட்ட கோர்ட்டார் அல்லது உத்தியோகஸ்தர்-அந்த முச்சிலிக்கா எழுதிக் கொடுப்பதற்குப் பர்ந்தியாய்த் தாங்கள் நிர்ணயிக்கிற தொகைக்கு அவனை ரொக்கமாவது கவர்ன்மெண்ட் பத்திரமாவது கட்டும்படி செலவு கொடுக்கலாம்.

முச்சிலிக்கா அடிபட்டுப் போனால் இன்னது செய்வது.

514. (1) இந்தச் சட்டத்தின்படி முச்சிலிக்கா வாங்கியிருக்கிற கோர்ட்டுக்காவது, ராஜதானி மாஜிஸ்ட்ரேட் அல்லது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்காவது,

யாதொரு கோர்ட்டுக்குமுன்னே ஹாஜராவதற்காக முச்சிலிக்கா வாங்கியிருந்தால் அந்தக்கோர்ட்டுக்காவது,

அப்படிப்பட்ட முச்சிலிக்கா அடிபட்டுபோயிருக்கிறதென்று திருப்திகரமாய் ருஜுவானால், கோர்ட்டார் அந்த ருஜுவின் ஹேதுக்களை ரிகார்ட் பண்ணவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட முச்சிலிக்காவினால் கடமைப்பட்ட யாவனொருவனை அதற்குண்டான தண்டத்தொகையைச் செலுத்தும்படிக்காவது அதை ஏன் செலுத்தக்கூடாதோ அதற்குக் காரணத்தைத் தெரிவிக்கும்படிக்காவது கேட்கலாம்.

(2) தகுந்த காரணம் தெரிவிக்கப்படாலும் அந்தத் தண்டத்தொகை செலுத்தப்படாமலுமிருந்தால், அந்தக் கோர்ட்டார்-அவனுக்குச் சொந்தமாயிருக்கிற அசையும்பொருளையாவது, அவன் இறந்துபோயிருந்தால் அவனுடைய ஆஸ்தியையாவது ஜப்திசெய்து விற்பதற்காக வாரன்ட் பிறப்பித்து அதைக்கொண்டு அந்தத் தண்டத்தொகையை வசூல் பண்ணத்தொடங்கலாம்.

(3) அப்படிப்பட்ட வாரன்டைப் பிறப்பிந்த கோர்ட்டாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் அந்த வாரன்டை நிறைவேற்றலாம்; மேலும் அப்படிப்பட்ட எல்லைக்குவெளியில் அந்த நபருக்குச் சொந்தமாயிருக்கிற யாதொரு அசையும்பொருளை ஜப்திசெய்து விற்கவேண்டுமானால், யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் அப்படிப்பட்ட பொருள் அகப்படுகிறதோ அந்த டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட் அதை என்டார்ஸ் பண்ணுவாராகில் அப்படி ஜப்திசெய்து விற்பதற்கு அதனால் அதிகாரமுண்டாகும்.

(4) அந்தத் தொகை செலுத்தப்படாமலும் அப்படி ஜப்திசெய்து விற்பதனாலே வசூலாகமாட்டாமலுமிருக்குமாகில், அப்படி கடமைப்பட்ட நபரானவன் வாரன்ட் பிறப்பித்த கோர்ட்டாருடைய உத்தரவினாலே ஆறுமாதத்துக் கதிகப்படாத காலவரையில் ஸிவில் ஜெயிலிலே காவற்படுத்தி வைக்கப்படத்தக்கவனாவான்.

(5) கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால், குறிக்கப்பட்ட தண்டத்தொகையில் யாதொரு பாகத்தைத் தள்ளிவிட்டு மற்றப் பாகத்தைமாத்திரம் செலுத்தும்படி தீர்ப்பளிக்கலாம்.

(6) முச்சிலிக்கா இழக்கப்படுவதற்கு முன்னே அதன் ஜாமீன்தாரன் இறந்துபோவானாகில், அந்த முச்சிலிக்கா விஷயமான சகல பொறுப்பினின்றும் அவனுடைய ஆஸ்தி நிவாரணை செய்யவேண்டும்.

(7) 106-வது பிரிவின்படியாவது 118-வது பிரிவின்படியாவது 562-வது பிரிவின்படியாவது ஜாமீன் சவதரித்திருக்கிற யாதொரு நபர் எந்தக் குற்றத்தைச்செய்தால் தன்னுடைய முச்சிலிக்காவின் ஷரத்துக்களையாவது, தனக்கு பதிலாக 514-B பிரிவின்படி சவதரிக்கிற முச்சலிக்காவின் ஷரத்துக்களையாவது, மீறினதாகுமோ அப்படிப்பட்ட குற்றத்தைச்செய்து, குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டால், அப்படிப்பட்ட குற்றத்திற்காக தண்டித்தக் கோர்ட்டாருடைய தீர்ப்பின் ஸெர்ட்டிபை செய்யப்பட்ட நகல் ஒன்றை இந்தப் பிரிவின்படி அவனுடைய ஜாமீன்தாரர் அல்லது ஜாமீன்தாரர்களின்மேல் நடத்தப்படுகிற நடவடிக்கைகளில் சாட்சியமாக உபயோகித்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட நகல் உபயோகப்படுத்தப்பட்டால், கோர்ட்டார் - வேறே விதமாக ருஜு செய்யப்பட்டாலொழிய, அவனால் அப்படிப்பட்ட குற்றம் செய்யப்பட்டதாகவே அனுமானிக்கவேண்டும்.

ஜாமீன்தாரன் கடன் தீர்க்கச் சக்தியற்றவனாய்ப் போனாலும் முச்சிலிக்கா அடிபட்டுப் போனாலும் நடவடிக்கை.

514-A. இந்தக்கோடின்படி யாதொரு முச்சிலிக்காவின் எந்த ஜாமீன்தாரனாகிலும் கடன் தீர்க்கச் சக்தியற்றவனாய்ப்போனாலும் இறந்துபோனாலும், 514-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி யாதொரு முச்சிலிக்கா அடிபட்டுப்போனாலும், யாருடைய உத்தரவின்படி அந்த முச்சிலிக்கா வாங்கப்பட்டதோ அந்தக் கோர்ட்டாராவது யாதொரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்

டாவது-யாரிடமிருந்து அந்த ஜாமீன் கேட்கப்பட்டதோ அந்த நபரு க்கு, பிரதம உத்தரவிற்கண்ட திட்டங்களை அனுசரித்து புதிதாய் ஜாமீன் சவதரிக்கும்படி உத்தரவு செய்யலாம்; அந்தப்படி ஜாமீன் சவ தரிக்கப்படாதபட்சத்திலே, ஷை கோர்ட்டாராவது மாஜிஸ்ட்ரேட்டா வது-மேலேகண்ட பிரதம உத்தரவின்படி அந்தநபர் நடந்திராவிட்டால் எப்படியோ அப்படியே நடவடிக்கை நடத்தலாம்.

ஒரு மைனர் எழுதிக்கொடுக்க வேண்டிய முச்சிலிக்கா.

514-B. யாதொரு கோர்ட்டாராவது உத்தியோகஸ்தராவது முச்சிலிக்கா எழுதிக் கொடுக்கவேண்டுமென்று உத்தரவு செய்யப்பெறுகிற நபர் மைனராயிருக்கும் பொழுது, அப்படிப்பட்ட கோர்ட்டாராவது உத்தியோகஸ்தராவது அதற்குப் பதிலாக ஒருஜாமீன் தாரன் அல்லது பலஜாமீன்தாரர்கள் எழுதிக்கொடுக்கும் முச்சிலிக்காவை ஒப்புக்கொள்ளலாம்.

514-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவுகளின்மேல் அப்பீல்களும் மேற்பரிசோதனையும்.

515. இராஜதானி மாஜிஸ்ட்ரேட் அல்லது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ஸ்ரேட்டல்லாத வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினால் 514-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட எல்லா உத்தரவுகளும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அப்பீல் செய்யப்படத்தக்கவைகளாகும்; அப்படி அப்பீல் செய்துக்கொள்ளப்படாவிட்டால், அவரால் அவைகளை மேற்பரிசோதனை செய்யப்படலாம்.

சில முச்சிலிக்காக்களின்மேல் பாக்கியாயிருக்கிற தொகையை வசூல் செய்யும்படி உத்தரவு பண்ண அதிகாரம்.

516. ஹைக்கோர்ட்டாராவது ஸெஷன்கோர்ட்டாராவது தங்கள் கோர்ட்டில் ஹாஜராய் வந்திருக்கவேண்டியதைக் குறித்த முச்சிலிக்காவின் மேல் பாக்கியாயிருக்கிற தொகையை வசூல்பண்ணும்படி யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு உத்தரவு செய்யலாம்.

சில கேஸுகளிலே விசாரணைமுடிவாகிற வரையில் சொத்தை பந்தோ

516-A. எதுவிஷயமாய் யாதொரு குற்றம் செய்யப்பட்டதாகத் தோற்றுகிறதோ, அல்லது எது யாதொரு குற்றத்தைச் செய்வதற்கு உபயோகிக்கப்பட்டிருப்பதாகத் தோற்றுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு சொத்து யாதொரு விசாரணையாவது

பஸ்தில் வைத்திருக் கவும் யாதொருவ கை செய்யவும் உத் தரவு.

பரிசிலனையாவது நடந்துகொண்டிருக்கும்போது எந்த க்ரிமினல் கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் கொண்டுவரப்பட்டால், அந்தக் கோர்ட்டார்-ஷை விசாரணை அல்லது பரிசிலனை முடிவாகிறவரையில் அந்தச் சொத்தைத் தக்கபடி பந்தோபஸ்தில் வைத்திருப்பதற்காக தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற உத்தரவுசெய்யலாம்; மேலும், ஷை சொத்தானது சீக்கிரமாகவோ இயற்கையாகவோ அழிந்துபோகக் கூடியதா யிருந்தால், ஷை கோர்ட்டார் - தங்களுக்கு அவசியமாகத் தோற்றும் சாட்சியம் எழுதிவைத்தபிறகு, அதை விற்று விடும்படியாவது மற்றப்படி ஒருவகைசெய்யும்படியாவது உத்தரவு செய்யலாம்.

43-ம் அத்தியாயம்.

சொத்தைப் பைசல்செய்வதைக் குறித்து.

எதைப்பற்றிக் குற்றஞ் செய்யப்பட்டதோ அந்தச் சொத்தைப் பைசல் செய்ய உத்தரவு.

517. (1) யாதொரு க்ரிமினல் கோர்ட்டில் யாதொரு விசாரணையாவது பரிசிலனையாவது முடிந்தபின்பு அந்தக் கோர்ட்டார் - தங்களுக்கு முன்னே கொண்டுவரப் பட்டாகிலும், தங்கள் வசத்திலிருப்பதாகவாகிலும், எதைப்பற்றி யாதொரு குற்றஞ் செய்யப் பட்டதாகத் தோன்றுகிறதோ அல்லது எது யாதொரு குற்றத்தைச் செய்வதற்கு உபயோகிக்கப் பட்டிருக்கிறதோ அப்படிப்பட்டதாகவாகிலுமுள்ள யாதொரு சொத்து அல்லது தஸ்தவேஜை அழித்தாவது பறிமுதல் செய்தாவது அதன் ஸ்வாதீனம் அடைய பாத்தியதை இருப்பதாக தாவாசெய்யும் - யாதொரு நபரிடத்தில் ஒப்பித்தாவது மற்றப்படியாவது யாதொரு வகை செய்யும்பொருட்டுத் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற உத்தரவு செய்யலாம்.

(2) யாதொரு ஹைக்கோர்ட்டாராவது ஸெஷன்கோர்ட்டாராவது அப்படிப்பட்ட உத்தரவைச்செய்து, சொத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பாத்தியதையுள்ள நபருக்குத் தங்களுடைய உத்தியோகஸ்தர்களைக்கொண்டு அஸந்தர்ப்பமில்லாமல் ஒப்பிக்கக்கூடாமையாயிருந்தால், அந்தக் கோர்ட்டார் - டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினால் அந்த உத்தரவு நிறைவேற்றப்படவேண்டியதென்று கட்டளை செய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்படி யாதொரு உத்தரவு செய்யப்பட்டால், அந்த உத்தரவானது - சொத்து ஜீவப்பிராணியாகவாகிலும் சீக்கிரத்தில் இயல்பாய் அழிந்து போகும்படியானதாகவாகிலும் இருந்தாலன்றி மற்றப்படிக்கும், (4) குறிப்பிட்ட உட்பிரிவில் நிபந்தனை கண்டபடிக்கன்றி மற்றப்படிக்கும், ஒரு மாதம் வரையிலாவது, யாதொரு அப்பீல்செய்து கொள்ளப்படுகிற பட்சத்தில், அப்படிப்பட்ட அப்பீல் பைசல் செய்யப்படுகிற வரையிலாவது நிறைவேற்றப்படக்கூடாது.

(4) யாதொரு சொத்தின் ஸ்வாதீனமடைய பாத்தியதை இருப்பதாகத் தாவா செய்யும் எந்த நபராகிலும், இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவானது மாற்றப்பட்டாலும் அப்பீலில் தள்ளிவிடப்பட்டாலும், அப்படிப்பட்ட சொத்தைக் கோர்ட்டாருக்கு மீண்டும்கொடுத்துவிடுவதாக உடன்பட்டு, கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய் ஜாமீன்தாரர்கள் சகிதமாகவோ ஜாமீன்தாரர்கள் இல்லாமலோ அவர் முச்சிலிக்கா எழுதிக்கொடுப்பதன்மேல், (1) குறிப்பிட்ட உட்பிரிவிற் கண்ட நிபந்தனைகளின்படி ஷை சொத்தை அந்த நபரிடத்தில் ஒப்பிப்பதற்கு இந்தப் பிரிவிலுள்ள தெதனுலும் யாதொரு கோர்ட்டாருக்குத் தடையுண்டாவதாக எண்ணக்கூடாது.

விவரணம்.—இந்தப் பிரிவிலே "சொத்து" என்கிற வார்த்தையானது - எதைப்பற்றி யாதொரு குற்றஞ் செய்யப்பட்டிருக்கிறதாகக் காணப்படுகிறதோ அந்தச் சொத்துவிஷயத்தில், யாதொரு (party) நபரினுடைய ஸ்வாதீனத்திலாகிலும் அதிகாரத்திற்குள்ளாகிலும் பிரதமத்தில் இருந்திருக்கிற சொத்துமாத்திரமல்லாமலும், நேராயாவது மற்றப்படிக்காவது அது வேறே எதுவாக உருமாற்றப்பட்டிருக்கலாமோ அல்லது எதற்காக மாற்றிக்கொள்ளப்பட்டிருக்கலாமோ அப்படிப்பட்ட சொத்தென்றும் அப்படி உருமாற்றினதனுலாவது மாற்றிக்கொண்டதனுலாவது பெற்றுக்கொள்ளப்பட்ட யாதொரு பொருளென்றும் அர்த்தமாகும்.

உத்தரவானது டிஸ்ட்ரிக்ட் அல்ல

518. கோர்ட்டார் 517-வது பிரிவின்படி தாங்களே யாதொரு உத்தரவு செய்வதற்குப் பர்த்தியாய், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது ஸப் - டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அந்தச் சொத்தை ஒப்பிக்கும்படி

தலைப் - டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டினுடைய ஸ்வாதினத்தில் விடுகிறவிஷமாக இருக்கலாம்.

கட்டளையிடலாம்; அப்படிப்பட்ட விஷயங்களிலே அவர் - அந்த சொத்தைப் போலீஸார் பிடித்திருந்து பிடித்ததை இதில் பின்னால் சொல்லியிருக்கிற விதமாய்த்தமக்கு ரிபோர்ட் செய்திருந்தாற்போல, அந்தச் சொத்தைக்குறித்து நடத்தவேண்டும்.

குற்றஞ்சாட்டப் பட்டவனிடத்தில் அகப்படுகிற பணத்தை நிர்தோஷியான கிரயக்காரனுக்குக் கொடுப்பது.

519. திருட்டு அல்லது திருட்டுச் சொத்தை வாங்குவதென்னும் குற்றம் அடங்குகிறதான அல்லது அப்படிப்பட்டதாகிற யாதொரு குற்றத்தைச் செய்ததாக யாவனொருவன்மேல் குற்றஸ்தாபனை செய்யப்பட்டு அந்தச்சொத்து திருடப்பட்டதென்று அறியாமலாவது நம்புவதற்கு முகாந்தரமில்லாமலாவது அவனிடத்திலிருந்து அதை வேறொரு நபர் விலைக்கு வாங்கியிருக்கிறதாகவும் குற்றஸ்தாபனை செய்யப்பட்டவனைப் பிடிக்கும்போது அவன் வசத்திலிருந்து ஏதாகிலும் பணமெடுக்கப்பட்டிருக்கிறதாகவும் ருஜுவானால், அப்படி விலைக்குவாங்கினவன் மனுசெய்துகொள்ளப்படுவதன்மேலும், அந்தத் திருட்டுச் சொத்தை யடையப் பாத்தியதையுள்ள நபருக்கு அதைக் கொடுத்துவிடுவதன்மேலும், அந்தக் கோர்ட்டார்-அப்படி விலைக்கு வாங்கினவன்கொடுத்த கிரயத்துக்கு அதிகப்படாத யாதொரு தொகையை அப்படிப்பட்ட பணத்திலிருந்து அவனுக்குச் செலுத்திவிடும்படி உத்தரவுசெய்யலாம்.

517, 518 அல்லது 519-வது பிரிவுக்குட்பட்ட உத்தரவை நிறுத்தி வைப்பது.

520. அப்பீலதிகாரத்தையாவது ஊர்ஜிதப்படுத்தும் அதிகாரத்தையாவது ஆலோசிக்கும் அதிகாரத்தையாவது மேற்பரிசோதனை அதிகாரத்தையாவதுடைய யாதொரு கோர்ட்டார்-தங்களுக்குக் கீழ்ப்பட்ட யாதொரு கோர்ட்டாரால் 517, 518 அல்லது 519 வது பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு உத்தரவைத் தங்களுடைய ஆலோசனை முடிவாகிறவரையில் நிறுத்திவைக்கும்படி உத்தரவுபண்ணலாம்; மேலும், அந்த உத்தரவைத்திருத்தலாம் மாற்றலாம் அல்லது ரத்துபண்ணலாம்; அன்றியும், நியாயமாயிருக்கும் இன்னும் ஏதேனும் உத்தரவையும் செய்யலாம்.

521. இந்தியன் பினல் கோடின் 292, 293, 501 அல்லது 502-வது பிரிவின்படி குற்றஸ்தாபனை செய்யப் படுவதன்மேல், கோர்ட்டார் - எதைப்பற்றிக் குற்றஸ்தாபனையாகிக் கோர்ட் பந்தோபஸ்திலாவது குற்றஸ்தாபனை செய்யப்பட்டவனுடைய ஸ்வாதீனத்திலாவது அதிகாரத்திலாவது இருக்கிறதோ அந்த வஸ்துவின் எல்லாப் பிரதிகளையும் அழித்துவிடும்படி உத்தரவுசெய்யலாம்.

பழிதூற்றுவது முதலாகிய விஷயங்களை அழிப்பது.

(2) இந்தியன் பினல் கோடின் 272, 273, 274 அல்லது 275 வது பிரிவின்படி குற்றஸ்தாபனை செய்யப்படுவதன்மேல், கோர்ட்டார் எதைப்பற்றிக் குற்றஸ்தாபனை செய்யப்பட்டதோ அந்த ஆகாரத்தையாவது பானத்தையாவது மருந்து சம்பாரத்தையாவது அவிழ்த சம்பந்தமான எதையாவது அழித்துவிடும்படி அப்பிரகாரமே உத்தரவு செய்யலாம்.

522. (1) அநியாயமான பலவந்தத்தோடும் அல்லது பலவந்தம் செய்வதாகக் காட்டினதோடுங் கூடிய அல்லது அநியாயமாய் பயப்படுத்தினதோடுங் கூடிய யாதொரு குற்றத்திற்காக யாதொரு நபர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டு, அப்படிப்பட்ட பலவந்தத்தினுலே அல்லது அந்தப்படி பலவந்தம்செய்வதாகக் காட்டினதனுலே அல்லது அநியாயமாய்ப் பயப்படுத்தினதனுலே யாவனொருவன் யாதொரு அசையாப்பொருளின் ஸ்வாதீனத்தினின்றும் விலக்கப்பட்டிருக்கிறனென்று கோர்ட்டாருக்குத் தோற்றினுல், கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகக் காணுகிறபட்சத்தில் அப்படிப்பட்ட நபரைக் குற்றவாளியென்று தீர்மானிக்கும்பொழுதாகிலும் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒருமாத காலத்துக்குள்ளாக எப்போதாகிலும் அப்படி ஸ்வாதீனமிழந்த நபருக்கு அதை மறுபடி ஸ்வாதீனப்படுத்தும்படி உத்தரவு செய்யலாம்.

அசையாப்பொருளை மறுபடி ஸ்வாதீனப்படுத்த அதிகாரம்.

(2) ஸிவில் விபாஜ்ஜியத்திலே யாவனொருவன் அந்த அசையாப் பொருளுக்காவது பொருளிலாவது ஸ்தாபிக்கக்கூடுமான யாதொரு சுதந்தரத்திற்காகிலும் பாத்தியதைக்காகிலும் அப்படிப்பட்ட உத்தரவினுலே பாதகமுண்டாகமாட்டாது.

(3) இந்தப் பிரிவின்படிக்கான யாதொரு உத்தரவை, அப்பீலதிகாரத்தையாவது ஊர்ஜ்ஜிதப்படுத்தும் அதிகாரத்தையாவது ஆலோசிக்கும் அதிகாரத்தையாவது மேற்பரிசோதனை அதிகாரத்தையாவதுடைய யாதொரு கோர்ட்டார் செய்யலாம்.

திருடப்பட்டாவது 51-வது பிரிவின்படி எடுத்துக்கொள்ளப்பட்டாவதிருக்கிற சொத்தைப் பிடித்துக் கொள்வதன்மேல் போலீஸார் செய்யவேண்டியது இன்னது.

523. (1) 51 - வது பிரிவின்படி எடுத்துக்கொள்ளப்பட்டாவது, திருடினதாகச் சொல்லப்பட்டாவது அனுமானிக்கப்பட்டாவது யாதொரு குற்றஞ்செய்யப்பட்டதாக அனுமான முண்டுபண்ணுகிற சங்கதிகளில் கண்டுபிடிக்கப்பட்டாவதிருக்கிற சொத்தை யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் பிடித்துக் கொண்டால், அதை உடனே மாஜிஸ்ட்ரேட்டுக்கு ரிபோர்ட் பண்ணவேண்டும்; அவர்-அந்தச் சொத்தை ஒருவகை செய்வதைக் குறித்தாவது பெற்றுக்கொள்ளப் பாத்தியதையுள்ளவனுக்கு அதை ஒப்பித்துவிடுவதைக் குறித்தாவது அப்படிப்பட்டவன் இன்னுனென்று அறியக்கூடாதபட்சத்தில் அதை பத்திரப்படுத்திக்கொண்டுவந்து காண்பிப்பதைக் குறித்தாவது தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற உத்தரவு செய்யவேண்டும்.

பிடிபட்ட சொத்தின் சொந்தக்காரன் இன்னுனென்று தெரியாவிட்டால் இன்னது செய்வது.

(2) அப்படிப்பட்ட பாத்தியதையுள்ளவன் இன்னுனென்று தெரியவருகிறபட்சத்தில் மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற (ஏதாவது) நிட்டங்களின்மேல் சொத்தை அவனுக்கு ஒப்பிக்கும்படி உத்தரவு செய்யலாம். அப்படிப்பட்டவன் இன்னுனென்று தெரியாதபட்சத்தில் மாஜிஸ்ட்ரேட்டானவர் அதை வைத்துவைக்கலாம்; அப்படிச் செய்கிற விஷயத்திலே அந்தச் சொத்தில் இன்னின்ன வஸ்துக்கள் சேர்ந்திருக்கிறதென்று கண்டெழுதி, அந்தச்சொத்தில் எவனுக்காவது சுதந்தரமுண்டாயிருக்குமானால் அவன் இஸ்தியார் தேதிமுதல் ஆறுமாதத்திற்குள் தமக்கு முன்பாக ஹாஜராகி அவனுடைய சுதந்தரத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்று இஸ்தியார் போடவேண்டும்.

வாரிஸ்தாரன் ஆறுமாதத்திற்குள் வராவிட்டால் இன்னதுசெய்வது.

524. (1) எவனுவது அந்தக் காலத்திற்குள் அப்படிப்பட்ட சொத்திற்குத் தன்னுடைய சுதந்தரத்தை ஸ்தாபித்துக்கொள்ளாமலும், அந்தச் சொத்து எவனுடைய ஸ்வாதீனத்திலகப்பட்டதோ அவன் அதை தான் நியாயமாய்ச் சம்பாதித்ததென்று ருஜுப்படுத்தமாட்டாமலுமிருந்தால், அப்படிப்பட்ட சொத்து எவ்வகையாவது செய்யும்பொருட்டுக் கவர்ன்மெண்டார் பரமாகவேண்டும்; மேலும், ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாவது இதுவிஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டாரால் அதிகாரங் கொடுக்கப்பெற்ற முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாவது செய்கிற உத்தரவின்படி அதை விற்றுவிடலாம்.

(2) இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட பிரதி உத்தரவின் விஷயத்திலும், அப்படிப்பட்ட உத்தரவைப் பிறப்பிக்கிற கோர்ட்டின் சிட்சைகளின்மேல் எந்தக்கோர்ட்டில் அப்பீல் பிடிக்கப்படுமோ அந்தக் கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளவேண்டும்.

அழிந்து போகத்தக்க சொத்தைவிற்பனைசெய்ய அதிகாரம்.

525. அப்படிப்பட்ட சொத்தை ஸ்வாதீனம் பண்ணிக்கொள்ளப் பாத்தியதையுடையவன் இன்னுனென்று தெரியாமலாவது வராமலாவதிருந்து, சொத்தானது தானே சீக்கிரத்தில் கெட்டுபோகும்படியானதாகவிருந்தாலும், அது பிடிபட்ட சங்கதி எவருக்கு ரிபோர்ட் செய்யப்பட்டதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் அதை விற்பதினுலே சொந்தக்காரனுக்குப் பிரயோசனமுண்டாகுமென்றுகிலும் அந்த சொத்தின் விலை மதிப்பு பத்துரூபாய்க்கு குறைவாயிருக்கிறதென்றுகிலும் அபிப்பிராயப்பட்டாலும், அவர் அதை விற்கும்படி எப்போதாவது உத்தரவு செய்யலாம்; 523 524 வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகள் அந்த விற்றுமுதலில் நிகரபணத்துக்குக் கூடுமானபட்டில் சம்பந்தப்படவேண்டும்.

44-ம் அத்தியாயம்.

க்ரிமினல் கேஸுகளை ட்ரான்ஸ்பர் செய்வதைக்குறித்து.

ஹைகோர்ட்டார் கேஸை ட்ரான்ஸ்பர் செய்யலாம் அல்லது தாங்களே பரிசிலனை செய்யலாம்.

526. (1) (a) ஹைகோர்ட்டுக்கு கீழ்ப்பட்ட யாதொரு க்ரிமினல் கோர்ட்டில் யாதொரு விசாரணை அல்லது பரிசிலனையானது சரியாயும் பட்சபாதமில்லாமலும் நடத்தப்படமாட்டாதென்றாவது,

(b) சாதாரணமாயிருப்பதைவிட அதிக கஷ்டமுள்ள சட்ட சம்பந்தமான யாதொரு சந்தேகமுண்டாகும் போலிருக்கிறதென்றாவது,

(c) எவ்விடத்தில் அல்லது எதற்குச் சரிபந்தில் யாதொரு குற்றஞ்செய்யப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தை, அந்தக் குற்றத்தைக்குறித்துத் திருப்திகரமாய் விசாரணை அல்லது பரிசிலனை செய்யும்பொருட்டு, பார்க்கவேண்டியிருக்கலாமென்றாவது,

(d) இந்தப் பிரிவின்படி செய்யப்படுகிற யாதொரு உத்தரவினால் கட்சிக்காரர்களுக்காகிலும் சாட்சிகளுக்காகிலும் சாதாரணமாய்ச் சங்கடமுண்டாகாதிருப்பதற்கு அனுகூலமாயிருக்குமென்றாவது,

(e) அப்படி உத்தரவு செய்வது நியாயம் நடப்பதற்குத் தகுதியாயிருக்கிறதென்றாவது, இந்தக்கோடிலுள்ள யாதொரு நிபந்தனைகளின்படி வேண்டியிருக்கிறதென்றாவது,

ஹைக்கோர்ட்டாருக்குத் தோற்றமபடி செய்யப்படும்போதெல்லாம் அந்தக் கோர்ட்டார்—

(i) யாதொரு குற்றமானது 177-வது முதல் 184-வது உட்பட அதுவரையிலுள்ள பிரிவுகளின்படி அதிகாரம் பெறாதவர்களாய், மற்ற விஷயங்களில் அந்தக் குற்றத்தை விசாரணைசெய்யவாவது பரிசிலனை செய்யவாவது அதிகாரமுடைய யாதொரு கோர்ட்டாரால் விசாரணை அல்லது பரிசிலனை செய்யப்படவேண்டியதென்றாகிலும்;

(ii) யாதொரு குறித்த கேஸ் அல்லது அப்பீலாவது இனமான கேஸுகள் அல்லது அப்பில்களாவது தங்களதிகா

ரத்துக்குட்பட்ட யாதொரு க்ரிமினல் கோர்ட்டிலிருந்து அதற்குச் சமானமான அல்லது மேலான அதிகாரமுடைய அப்படிப்பட்ட வேறே யாதொரு க்ரிமினல் கோர்ட்டுக்கு அனுப்பும்படியாகிலும்;

(iii) யாதொரு குறித்த கேஸ் அல்லது அப்பீல் தங்களுக்கு அனுப்பப்பட்டுத் தங்களுக்கு முன்பாகப் பரிசீலனை செய்யப்படவேண்டியதென்றாகிலும்;

(iv) குற்றஞ் சாட்டப்பட்டவனெவனையாகிலும் தங்களிடத்திற்காவது யாதொரு ஸெஷன் கோர்ட்டாரிடத்திற்காவது பரிசீலனைக்குக் கமிட் பண்ணவேண்டியதென்றாகிலும்,

உத்தரவு செய்யலாம்.

(2) ராஜதானி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டல்லாத வேறே யாதொரு கோர்ட்டிலிருந்து யாதொரு கேஸை ஹைக்கோர்ட்டார் தங்களுக்கு முன்பாகப் பரிசீலனைக்கு வரவழைத்துக் கொண்டால், அவர்கள் 267-வது பிரிவிற் கண்டிருக்கிறபடிக்குத் தவிர, அந்தக்கேஸ் அப்படி வரவழைக்கப்படாதிருந்தால் அந்தக் கோர்ட்டார் நடத்தியிருக்கும்படியான அதே நடவடிக்கையை அந்தப் பரிசீலனையில் அனுசரிக்க வேண்டும்.

(3) ஹைக்கோர்ட்டார் - கீழ்க்கோர்ட்டாருடைய ரிபோர்ட்டின்மேலாவது, அது விஷயத்தில் சிரத்தையுள்ள ஒரு கட்சிக்காரன் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேலாவது, தாங்களே சுதாவாகவாவது பிரவர்த்திக்கலாம்.

(4) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்துவதற்காகச் செய்துகொள்ளப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் மனு மூலமாகச் செய்துகொள்ளப்படவேண்டும்; விண்ணப்பக்காரர் அட்வோகேட் ஜெனரலாயிராவிட்டால், அதற்காதரவாகப் பிரமாணப் பத்திரிகையாவது உறுதிமொழிப் பத்திரிகையாவது வரவேண்டும்.

(5) குற்றஞ் சாட்டப்பட்டவனெவனாவது இந்தப் பிரிவின்படி விண்ணப்பஞ் செய்துகொண்டால், ஹைக்கோர்ட்டார் - அதன்மேல் அப்படி உத்திரவு செய்யப்படுகிற பட்சத்தில் அந்த விண்ணப்பத்தை ஆட்சேபித்து வாதம்செய்யும் நபருக்கு, செலவுகளை கொடுக்க இந்தப்

பிரிவின்படி ஹைக்கோர்ட்டாருக்கு அதிகாரமுடைய யாதொரு தொகையை கொடுப்பதற்காக ஷரத்துகண்டு, ஜாமீன்தாரர்களோடாகிலும் ஜாமீன்தாரர்களில்லாமலாகிலும் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கும்படி அவனுக்கு உத்தரவுசெய்யலாம்.

இந்தப் பிரிவின்படி கொடுத்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பத்தைக் குறித்து பப்ளிக் ப்ராஸிக்யூட்டருக்கு நோட்டீஸ் கொடுப்பது.

(6) அப்படிப்பட்ட யாதொரு விண்ணப்பத்தைச்செய்து கொள்ளுகிறவனுகிய குற்றஞ்சாட்டப்பட்ட ஒவ்வொரு நபரும் - அந்த விண்ணப்பத்தைக்குறித்து அதைச் செய்துகொள்வதற்குண்டான ஆதாரங்களின் பிரதி சகிதமாய்ப் பப்ளிக் ப்ராஸிக்யூட்டருக்கு எழுத்து மூலமாக நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிப்பட்ட நோட்டீஸ் கொடுத்ததுமுதல் விண்ணப்ப விசாரணைவரையிலே குறைந்தது இருபத்திநான்கு மணிநேரம் சென்றாலொழிய, அந்த விண்ணப்பத்தின் சாராம்சத்தைப்பற்றி யாதொரு உத்தரவும் செய்யக்கூடாது.

(6-a) இந்தப் பிரிவின்படிக்கான அதிகாரத்தைச் செலுத்துவதற்காக செய்துகொள்ளப்பட்ட யாதொரு விண்ணப்பமானது தள்ளிவிடப்பட்டால், ஹைக்கோர்ட்டார் அந்த விண்ணப்பமானது வீணுகவோ அலைக்கழிக்கும்படியாகவோ செய்யப்பட்டதென்று அபிப்பிராயப்பட்டால் அந்த விண்ணப்பத்தை ஆட்சேபித்து வாதஞ்செய்யும் யாதொரு நபருக்குப்பிடித்த எவையேனும் நியாயமான செலவுகளை விண்ணப்பதாரன் கொடுக்கவேண்டுமென்று உத்தரவுசெய்யலாம்

(7) இந்தப் பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினுலும், 197-வது பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு உத்தரவுக்குப் பாதகமுண்டாவதாக எண்ணக்கூடாது.

இந்தப் பிரிவின்படி விண்ணப்பஞ் செய்து கொள்ளப்படுவதன்மேல் விசாரணையை நிறுத்தி வைப்பது.

(8) யாதொரு பரிசீலனை அல்லது விசாரணை நடந்துகொண்டிருக்கையிலாவது யாதொரு அப்பீலை விசாரிக்க ஆரம்பிப்பதற்கு முன்னாவது பப்ளிக் ப்ராஸிக்யூடராகிலும் பிராதுதாரனுகிலும் குற்றஞ் சாட்டப்பட்டவனுகிலும் அந்தக் கேஸ் அல்லது அப்பீலைக் குறித்து இந்தப் பிரிவின்படி விண்ணப்பம்செய்து கொள்ள தான் உத்தேசித்திருப்பதாய் அந்தக்கேஸ்

அல்லது அப்பீல் யாருக்கு முன்பாக விசாரணையிலிருக்கிறதோ அந்தக் கோர்ட்டாருக்குத் தெரியப்படுத்தினால், அந்தக் கோர்ட்டார் ஷை விண்ணப்பம் செய்துகொண்டு அதன்மேல் உத்தரவு வந்து சேருவதற்கு நியாயமான அவகாசம் இருக்கும்படியாக ஒரு காலஅளவுக்கு அந்தக் கேஸை நிறுத்திவைக்கலாம், அல்லது அப்பீலைத் தள்ளிவைக்கலாம்.

(9) இதில் முன்னால் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஒரு ஸெஷன் ஜட்ஜானவர்-இந்தப் பிரிவின்படி விண்ணப்பஞ் செய்துகொள்ள தான் உத்தேசித்திருப்பதாய் தெரிவிக்கிற யாதொரு நபருக்கு, அப்படிப்பட்ட விண்ணப்பம் செய்துகொள்வதற்கு நியாயமான அவகாசம் இருந்ததென்றும் அவன் போதுமான காரணமில்லாமல் அந்த அவகாசத்தை உபயோகப்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டானென்றும் அபிப்பிராயப்பட்டால், அவர் (8) குறிப்பிட்ட பிரிவின்படி ஒரு பரிசீலனையை நிறுத்திவைக்கவேண்டியவராகமாட்டார்.

526-A. (1) யாதொரு நபர், கப்பற்படையின் ஒழுங்கைப் பற்றின ஆக்டின்படிக்காவது, ராணுவ ஆக்டின்படிக்காவது ஆகாயப்படைஆக்டின்படிக்காவது உட்பட்டிருந்து, ராணுவ ஆக்டின் 41-வது பிரிவின் (a) பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறபடி யாதொரு குற்றஞ்சாட்டப்பட்டால், அட்வொகேட்-ஜெனரல் ஒரு தகுந்த அதிகாரியால் சங்கதி அறிவிக்கப்பட்டதின்பேரில், அந்தக் கேஸை ஹைக்கோர்ட்டாருக்கே கம்மிட்செய்யும்படிக்காவது மாற்றும்படிக்காவது ஹைக்கோர்ட்டாரிடம் கேட்டுக்கொள்ளலாம். அதன்மேல், அந்த ஹைக்கோர்ட்டார் அந்தக் கேஸை தங்களுக்கு கம்மிட் பண்ணும்படிக்கோ மாற்றும்படிக்கோ உத்திரவு செய்து, பிறகு ஜூரியைக்கொண்டு அந்தக்கேஸைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

சில விஷயங்களிலே ஹைக்கோர்ட்டார் தங்களுக்குப்பரிசீலனைக்காக ட்ரான்ஸபர்செய்துகொள்வது.

(2) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்-ஜெனரலவர்கள், இந்தியா கெஜட்டில் விளம்பரம் பிரசுரித்து அதில் குறிப்பிட்ட யாதொரு இனமான கேஸுகளில் ஒரு உத்தியோகஸ்தரை (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான சங்கதிகளை தெரிவிப்பதற்காக ஒரு தகுந்த அதிகாரியாய் இருக்கும்படி நியமிக்கலாம்.

க்ரிமினல்கேஸைக ளையும் அப்பீல்க ளையும் ட்ரான்ஸ்பர் செய்ய ஆலோசனை சபையிலுள்ள கவர் னர் ஜெனரலவர்க ளுக்கு அதிகாரம்.

527. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்-ஜெனரலவர்கள் யாதொரு குறித்த கேஸ் அல்லது அப்பீலை ஒரு ஹைகோர்ட்டிலிருந்து வேறொரு ஹைகோர்ட்டுக்காவது, யாதொரு ஹைகோர்ட்டுக்குக் கீழ்ப்பட்ட யாதொரு க்ரிமினல் கோர்ட்டிலிருந்து வேறொரு ஹைகோர்ட்டுக்குக் கீழ்ப்பட்ட சமமான அல்லது மேலான அதிகாரமுடைய வேறே யாதொரு க்ரிமினல் கோர்ட்டுக்காவது ட்ரான்ஸ்பர் செய்வதனால் செவ்வையாய் நீதி நடக்குமென்றாகிலும் உபயவாதிகள் அல்லது சாட்சிகளுக்கு ஸாதாரணமாய்ச் சங்கடமுண்டாகாதபடி அனுகூலமாயிருக்குமென்றாகிலும் தமக்குத் தோற்றினால், அப்படி ட்ரான்ஸ்பர் செய்யும்படி இந்தியா கெஜட்டில் விளம்பரமூலமாய் உத்தரவுபண்ணலாம்.

அப்படிப்பட்ட கேஸ் அல்லது அப்பீல் எந்தக் கோர்ட்டுக்கு ட்ரான்ஸ்பர் பண்ணப்படுகிறதோ அந்தக் கோர்ட்டார் - பிரதமத்திலே அது தங்கள் கோர்ட்டில் தொடரப்பட்டாவது கொடுத்துக்கொள்ளப் பட்டாவதிருந்தாற்போலவே அதை நடத்தவேண்டும்.

ஸெஷன் ஜட்ஜ் அஸிஸ்டெண்ட் ஸெஷன் ஜட்ஜி டமிருந்து கேஸ்க ளை வரவழைத்துக் கொள்ளுவது.

528. (1) யாதொரு ஸெஷன் ஜட்ஜானவர் தமக்குக் கீழ்ப்பட்ட யாதொரு அஸிஸ்டெண்ட் ஸெஷன் ஜட்ஜியினிடமிருந்து, யாதொரு கேஸை வரவழைத்துக்கொள்ளலாம், அல்லது அவருக்கு தாம் அனுப்பியிருக்கிற யாதொரு கேஸை மறுபடியும் வரவழைத்துக்கொள்ளலாம்.

டிஸ்ட்ரிக்ட் அல் லது ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டா னவர் கேஸ்களை வரவழைத்துக்கொ ள்ளலாம் அல்லது அனுப்பலாம்.

(2) யாதொரு பிரதான ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது ஸப்டிவிஷன்மாஜிஸ்ட்ரேட்டானவர் - தமக்குக் கீழ்ப்பட்ட யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினிடத்திலிருந்து யாதொரு கேஸை வரவழைத்துக்கொள்ளலாம், அல்லது அவருக்குத் தாம் அனுப்பியிருக்கிற யாதொரு கேஸை மறுபடியும் வரவழைத்துக்கொள்ளலாம்; மேலும், அப்படிப்பட்ட கேஸைத் தாமே விசாரணையாவது பரிசிலனையாவது செய்யலாம், அல்லது அதை விசாரணையாவது பரிசிலனையா

வது செய்யத்தகுந்த வேறே அப்படிப்பட்ட யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு அதை விசாரணைக்காவது பரிசீலனைக்காவது அனுப்பலாம்.

இனங்களானகேஸுகளை வரவழைத்துக் கொள்ளும்படி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரங் கொடுக்க அதிகாரம்.

(3) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத்தோற்றுகிற இனங்களான கேஸுகளையாவது, இன்ன இனங்களான கேஸுகளையாவது தமக்குக் கீழ்ப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளிடத்திலிருந்து வரவழைத்துக் கொள்ளும்படி பிரதேச கவர்ன்மெண்டார் அவருக்கு அதிகாரங் கொடுக்கலாம்.

(4) யாதொரு மாஜிஸ்ட்ரேட், 192-வது பிரிவின் (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி வேறே ஒரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு தான் அனுப்பியிருக்கும் யாதொரு கேஸை மறுபடியும் வரவழைத்துக்கொண்டு, அந்தக் கேஸை தாமே விசாரணையாவது பரிசீலனையாவது செய்யலாம்.

(5) இந்தப் பிரிவின்படி உத்தரவுசெய்கிற மாஜிஸ்ட்ரேட்டானவர் அதைச் செய்வதற்குண்டான ஹேதுக்களை எழுதி ரிகார்ட்பண்ண வேண்டும்.

(6) 1816-ம் வருஷத்துச் சென்னபட்டணம் 11-வது ரெகுலேஷன்படியாவது 1821-ம் வருஷத்துச் சென்னப்பட்டணம் 4-வது ரெகுலேஷன்படியாவதுள்ள யாதொரு கிராமப் பெரியதனக்காரர் இந்தப் பிரிவின் காரியங்களுக்காக மாஜிஸ்ட்ரேட்டாவார்.

44-A ம் அத்தியாயம்.

யுரோப்பியர், இந்திய ப்ரிடிஷ் குடிகள், இன்னும் மற்றவர்களையுங் குறித்த உபநிபந்தனைகள்.

ஒரு நபர் தன்னை யுரோப்பியன் அல்லது இந்திய ப்ரிடிஷ் குடியாக வாவது, யுரோப்பியனாக வாவது அமெரிக்கனாக

528-A. (1) 33-ம் அத்தியாயத்தின் நிபந்தனைகள் பிரயோகப்படக்கூடாத யாதொருகேஸின் விஷயத்திலே, எவனாவது தன்னை யுரோப்பியன் அல்லது இந்தியப்ரிடிஷ் குடியாகவாவது, அல்லது யாதொரு நபர் தன்னை (யுரோப்பியன் ப்ரிடிஷ் குடியல்லாத) ஒரு யுரோப்பியனாகவாவது அமெரிக்கனாகவாவது நடத்த

வாவது நடத்தவேண்டுமென்று சுதந்தரித்துக் கேட்டுக் கொள்வதன்மேல் நடவடிக்கை.

வேண்டுமென்று சுதந்தரித்துக் கேட்டுக்கொள்ளும் போது, அப்படிக் கேட்டுக்கொள்ளுவதற்குண்டான ஹேதுக்களை, விசாரணைக்காவது பரிசிலனைக்காவது தான் யாருக்கு முன்பாகக் கொண்டுவரப் படுகிறானோ அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு அவன் தெரிவித்துக் கொள்ளவேண்டும்; அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்படி அவன் தெரிவித்துக்கொண்டது உண்மையாவென்று விசாரித்து, அதை உண்மையென்று ரூபிப்பதற்கு நியாயமாய் வேண்டியகாலத்தை அதைத் தெரிவித்துக்கொண்ட நபருக்கு கொடுத்து, பின்பு, சங்கதிக்குத் தக்கபடி அவன் யுரோப்பியன் ப்ரிடிஷ் குடியோ இந்திய ப்ரிடிஷ் குடியோ, அல்லது ஒரு யுரோப்பியனோ அமெரிக்கனோ அல்லவோ வென்று தீர்மானித்து அதற்கு தக்கபடி அவனை நடத்தவேண்டும்.

(2) அப்படிப்பட்ட யாதொரு கோரிக்கை அந்த மாஜிஸ்ட்ரேட்டினால் நிராகரிக்கப்பட்டு, அதைச் செய்துகொண்ட நபர், ஸெஷன் கோர்ட்டாருக்குமுன் பரிசிலனைக்காக அந்த மாஜிஸ்ட்ரேட்டினால் கம்மிட் பண்ணப்பட்டிருந்து, அந்த நபர் அப்படிப்பட்ட கோர்ட்டாருக்குமுன்னும் தன்னுடைய கோரிக்கையை மறுபடியும் தெரிவித்துக் கொண்டால், அந்தக் கோர்ட்டார் தங்களுக்கு யுத்தமாகத் தோற்றுகிற இன்னும் ஏதாவது விசாரணை செய்கிறபட்சத்தில் அதைச் செய்த பிறகு, அந்தக் கோரிக்கையை தீர்மானித்து அதற்கு தக்கபடி அவனை நடத்தவேண்டும்.

(3) எந்தக் கோர்ட்டாருக்கு முன்பாக யாவனொருவன் பரிசிலனை செய்யப்படுகிறானோ அந்தக்கோர்ட்டார்-அவன் மேற்சொல்லியபடி செய்துகொண்ட யாதொரு கோரிக்கையை நிராகரித்துத் தீர்மானிப்பார்களானால், அந்தத் தீர்மானமானது அப்படிப்பட்ட பரிசிலனையில் பிறப்பித்த சிட்சை அல்லது உத்திரவின்மேல் அப்பீல் செய்து கொள்வதற்கான ஒரு ஹேதுவாகும்.

[illegible]

528-B. அப்படிப்பட்ட யாதொரு கேஸிலே ஒரு யுரோப்பியன் அல்லது இந்திய ப்ரிடிஷ் குடியாவது, (யுரோப்பியன் ப்ரிடிஷ் குடியல்லாத) ஒருயுரோப்பியன்அல்லது அமெரிக்கனாவது, யாருக்குமுன் தான் பரிசிலனை செய்யப்படுகிறானோ அல்லது யாரால் தான்

விட்டு விட்டவனுவான்.

கம்மிட் பண்ணப்படுகிறானோ அந்த மாஜிஸ்ட்ரேட்டினால்தான் அப்படிப்பட்டவனாக நடத்தப்படவேண்டுமென்று சுதந்தரித்துக் கேட்டுக்கொள்ளாவிட்டாலும், கம்மிட் செய்கிற மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாக அப்படிக் கேட்டுக்கொண்டிருந்து அவர் அதை ஒத்துக்கொள்ளாதிருக்கிறபட்சத்தில், அந்த நபர் கம்மிட் பண்ணப்படுகிற கோர்ட்டுக்கு முன்பாக மறுபடி அப்படி கேட்டுக்கொள்ளாவிட்டாலும், அவன் சங்கதிக்குத் தக்கபடி அப்படிப்பட்ட யுரோப்பியன் ப்ரிடிஷ்குடியாகவாவது இந்திய ப்ரிட்டிஷ் குடியாகவாவது, யுரோப்பியனாகவாவது அமெரிக்கனாகவாவது நடத்தப்படுவதற்கு தனக்குள்ள சுதந்தரத்தை விட்டுவிட்டவனாக எண்ணப்படுவான். அதே கேஸின் பிந்திய எந்த தசையிலும் அந்தச் சுதந்தரத்தை அவன் ஸ்தாபித்துச் சொல்லக்கூடாது.

தன் வகுப்பல்லாத வேறொருவம்சத்தானொருவனோடு ஒரு நபரை சேர்க்கையாக பரிசீலனை செய்வது.

528-C. யுரோப்பியன் ப்ரிடிஷ் குடியல்லாத ஒரு நபரை அப்படிப்பட்டவனாகவாவது, இந்திய ப்ரிடிஷ் குடியல்லாத ஒருவனை இந்திய ப்ரிடிஷ் குடியாகவாவது, (யுரோப்பிய ப்ரிடிஷ் குடியாய் இராத) ஒரு யுரோப்பியனல்லாதவனையும் அமெரிக்கனல்லாதவனையும் யுரோப்பியனாகவாவது அமெரிக்கனாகவாவது நடத்தினால், அவன் ஆட்சேபியாதபட்சத்தில், சங்கதிக்குத் தக்கபடி, விசாரணை கம்மிட்மெண்ட் பரிசீலனை அல்லது சிட்சையானது அப்படி நடத்தினது காரணமாக செலாவணியாகாமற் போகாது.

மாஜிஸ்ட்ரேட்டுகளுக்காவது ஸெஷன் கோர்ட்டுகளுக்காவது அதிகாரங்கொடுக்கிற ஆக்டுகள் பிரயோகப்படுவது.

528-D. (1) முன்பின் தொடர்ச்சியினாலே விரோதமென்றுமில்லாவிட்டால், ஆலோசனைசபையிலுள்ள கவர்னர்ஜெனரலவர்களாலாவது, இந்திய சட்ட நிரூபண சபைகளாலாவது, முன்னமேயாகிலும் இனிமேலாகிலும் செய்யப்பட்டு மாஜிஸ்ட்ரேட்டுகளுக்காவது ஸெஷன் கோர்ட்டாருக்காவது குற்றங்களைப் பரிசீலனைசெய்ய அதிகாரங்கொடுக்கிற எல்லா சட்டதிட்டங்களும், யுரோப்பியன் ப்ரிடிஷ் குடிகளைப் பற்றி அவைகளில் வெளிப்படையாய்ச் சொல்லியிராதபோதிலும், அவர்களுக்குப் பிரயோகப்படுவதாய் எண்ணப்படவேண்டும்.

(2) யாதொரு கோர்ட்டார் ஒரு யுரோப்பியன் ப்ரிடிஷ் குடியின்மேல் இவ்வளவு தண்டனை விதிக்கலாமென்று இந்தக்கோடில் நிர்ணயிக்கப்பட்ட அளவைக்கடக்க அவர்களுக்கு அதிகாரங்கொடுப்பதாகவாகிலும், யாதொரு இரண்டாவது அல்லது மூன்றாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு அப்படிப்பட்ட குடிகளை பரிசிலனைசெய்ய அதிகாரங்கொடுப்பதாகவாகிலும், இந்தப் பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினாலும் எண்ணக்கூடாது.

---

45 - ம் அத்தியாயம்

ஒழுங்குதவறான நடவடிக்கைகளைக் குறித்து.

நடவடிக்கைகளைக்கெடுக்காத ஒழுங்கு தப்புகள்.

529. அடியிற் கண்டிருக்கிற காரியங்களிலேதையாகிலும் செய்யச் சட்டத்தினாலே அதிகாரங் கொடுக்கப்பட்டிராத யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர்—

(a) 98-வது பிரிவின்படி சோதனை வாரன்ட் பிறப்பிப்பது;

(b) குற்றத்தைக்குறித்து முதல் விசாரணை செய்யும்படி போலிஸாருக்கு 115-வது பிரிவின் பிரகாரம் உத்தரவு செய்வது;

(c) 176-வது பிரிவின்படி பிரேதவிசாரணை நடத்துவது;

(d) தம்முடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குவெளியில் குற்றஞ் செய்துவிட்டுத் தம்முடைய எல்லைக்குள் வந்திருக்கிற நபரைப் பிடிக்கும்பொருட்டு 186-வது பிரிவின்படி கட்டளை பிறப்பிப்பது;

(e) 190-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த (a) அல்லது (b) குறிப்பிட்ட பகுதியின்படி யாதொரு குற்றத்தை விசாரிப்பது;

(f) 192-வது பிரிவின்படி கேஸை ட்ரான்ஸ்பர் செய்வது;

(g) 337 அல்லது 338 - வது பிரிவின்படி மன்னிப்பதாகச் சொல்லுவது;

(h) 524 அல்லது 525-வது பிரிவின்படி சொத்தை விற்பது; அல்லது,

(i) 528 - வது பிரிவின்படி கேஸை வரவழைத்துக்கொண்டு தாமே பரிசிலனை செய்வது;

ஆகிய இப்படிப்பட்ட காரியத்தை நல்ல எண்ணத்தோடு பிசகாய்ச் செய்தால், அப்படிச்செய்ய அவருக்கு அதிகாரமில்லையென்கிற ஹேதுவின்மேல் மாத்திரம் அவருடைய நடவடிக்கை தள்ளிவிடப்படாது.

நடவடிக்கைகளைக் கெடுத்துவிடுகிற ஒழுங்கு தப்புகள்.

530. இந்த விஷயத்தில் சட்டத்தினாலே அதிகாரங் கொடுக்கப்படாத யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர் - அடியிற்கண்டிருக்கிற காரியங்களிலெதையாவது செய்தால் (அதாவது) :—

(a) 88 - வது பிரிவின்படி சொத்தை ஜப்திசெய்துவிற்றால்;

(b) தபால் ஆபீஸிலுள்ள கடிதத்தைக்குறித்தாவது சிப்பம் அல்லது வேறே வஸ்துவைக்குறித்தாவது டெலிக்ராப் இலாக்காவிலுள்ள தந்தி சமாசாரத்தையாவது சோதனை செய்ய சோதனைவாரண்ட் பிறப்பித்தால்;

(c) அமரிக்கையைக் கெடுக்காதிருக்கும்படி ஜாமீன் கேட்டால்;

(d) நல்ல நடத்தைக்காக ஜாமீன்கேட்டால்;

(e) செவ்வையாய் நடந்துகொள்வதாகச் சட்டப்படி பிணைப்பட்டிருக்கிறவனை நிவர்த்தி செய்தால்;

(f) அமரிக்கையைக் கெடுக்காதிருப்பதற்கான முச்சிலிக்காவை ரத்துசெய்தால்;

(g) ஒரிடத்திலுண்டாகிற தடை முதலிய சங்கடத்தைக்குறித்து 133 - வது பிரிவின்படி உத்தரவுசெய்தால்;

(h) ஜனங்களுக்குத் தடை முதலிய சங்கடத்தை மேலுமேலும் உண்டுபண்ணுவதையாவது உண்டுபண்ணிக் கொண்டேயிருப்பதையாவது 143 - வது பிரிவின்படி தடுத்தால்;

(i) 144 - வது பிரிவின்படி உத்தரவு பிறப்பித்தால்;

(j) 12 - ம் அத்தியாயத்தின்படி உத்தரவுசெய்தால்;

(k) யாதொரு குற்றத்தை 190 - வது (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (c) குறிப்பிட்ட பகுதியின்படி விசாரணை செய்தால்;

(l) வேருெரு மாஜிஸ்ட்ரேட்டினுல் ரிகார்ட் பண்ணப்பட்ட நடவடிக்கைகளின்மேல் 319 - வது பிரிவின்படி சிட்சை விதித்தால்;

(m) நடவடிக்கைகளை 435 - வது பிரிவின்படி வரவழைத்தால்;

(n) ஜீவனும்சத்தை குறித்து உத்தரவுசெய்தால்;

(o) 514 - வது பிரிவின்படி மேற்பரிசோதனை செய்தால்;

(p) யாதொரு கேஸ்களைப் பரிசீலனை செய்தால்;

(q) யாதொரு கேஸ்களைச் சுருக்க வகையாய்ப் பரிசீலனை செய்தால்; அல்லது,

(r) யாதொரு அப்பீலைத் தீர்மானஞ்செய்தால்;

அவருடைய நடவடிக்கைகள் செல்லமாட்டா.

பிசகான இடத்திலே நடவடிக்கைகள்.

531. யாதொரு க்ரிமினல் கோர்ட்டாருடைய தீர்மானம்-சிட்சைத் தீர்ப்பு அல்லது உத்தரவானது எது நடந்து கொண்டிருந்தபோது முடிவு பண்ணப்பட்டதோ அல்லது செய்யப்பட்டதோ அந்த விசாரணையாகிலும் பரிசீலனையாகிலும் வேறே நடவடிக்கையாகிலும் பிசகான ஸெஷன் டிவிஷன் - டிஸ்ட்ரிக்ட் - ஸப் டிவிஷன் அல்லது வேறே பிரதேச விஸ்தீர்ணத்தில் நடந்ததென்கிற ஹேதுவின்மேல் மாத்திரம், அப்படிப்பட்ட தீர்மானத்தையாவது சிட்சைத் தீர்ப்பையாவது உத்தரவையாவது, அப்படிப்பட்ட பிசகினுலே வாஸ்தவத்தில், நீதி தவறிப்போயிற்றென்று தோற்றினுலொழிய, தள்ளிவிடக்கூடாது.

ஒழுங்குதப்பான கம்மிட்மென்டுகள் இன்னபடிக்கானுல் ஊர்ஜிதஞ் செய்யப்படலாம்.

532. (1) கிரமமாய்க் கொடுக்கப்படாத அதிகாரத்தை அப்படி கொடுக்கப்பட்டதாக எண்ணிச் செலுத்துகிற யாதொரு மாஜிஸ்ரேட்டாவது வேறே அதிகாரியாவது குற்றஞ் சாட்டப்பட்டவனை ஸெஷன் கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் ஹைக்கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் பரிசீலனைக்குக் கம்மிட் பண்ணினுல், எந்தக் கோர்ட்டுக்கு அப்படி கம்மிட்மென்ட் பண்ணப்பட்டதோ அந்தக் கோர்ட்டார் கம்மிட்மென்ட் உத்தரவு பிறந்ததற்கு முந்தி விசாரணைகாலத்தில், அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட் அல்லது வேறே அதிகா

ரிக்கு அதிகாரமில்லையென்று குற்றஞ் சாட்டப்பட்டவன் பட்சத்திலா வது பிராது பட்சத்திலாவது ஆட்சேபனை செய்யப்படாதபட்சத்தில் குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு அந்தக் கம்மிட்மெண்டினாலே பாதகமு ண்டாகவில்லையென்று தங்களுக்குத் தோற்றினால், நடவடிக்கைகளைப் பார்வையிட்டபின்பு அந்தக் கம்மிட்மெண்டை அங்கீகரிக்கலாம்.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவனுக்குப் பாதகமாயிருந்ததென் று அந்தக் கோர்ட்டாருக்குத் தோற்றினாலும் மேற்சொல்லிய பிரகாரம் அப்படிப்பட்ட ஆட்சேபனை செய்யப்பட்டிருந்தாலும், அந்தக் கோர் ட்டார் கம்மிட்மெண்டை ரத்துசெய்து தகுந்த மாஜிஸ்ட்ரேட்டினால் புது விசாரணையாகும்படி உத்தரவு பண்ணலாம்.

164 அல்லது 364-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி நடந்துகொள்ளாமை.

533. (1) குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவனால் சொல்லப்பட்டு 164 அல்லது 364-வது பிரிவின்படி ரிகார்ட் செய்திருக்கிற அல்லது ரிகார்ட் செய்திருக்கிறதாகப் பொருள்படுகிற ஒப்புக்கொள்ளுகை அல்லது வேறே வாக்குமூலம் எந்தக் கோர்ட்டுக்கு முன்பாகச் சாட்சியமாய்க் கொண்டுவரப்படுகிறதோ அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அந்தக்கோர்ட்டார் - வாக்குமூலத்தை ரிகார்ட்செய்த மாஜிஸ்ட்ரேட்டானவர் மேற்கண்ட பிரிவுகளிலெதிலாவதுள்ள நிபந்தனைகளில் யாதொன்றின்படி செய்யவில்லையென்று கண்டுகொண்டால், ரிகார்ட்பண்ணப்பட்ட வாக்குமூலத்தை அப்படிப்பட்டவன் கிரமமாய்க் கொடுத்தானென்று சாட்சியம் வாங்கவேண்டும்; 1872 - ம் வருஷத்திய இந்துதேசத்துச் சாட்சி ஆக்ட் 91 - வது பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும், அந்தப் பிசகினாலே சாராம்சத்தின்மேல் தன்பட்சத்திலே வாதிப்பதைப்பற்றிக் குற்றஞ் சாட்டப்பட்டவனுக்குக் கெடுதியுண்டாகாதிருந்தால் அப்படிப்பட்ட வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

(2) இந்தப் பிரிவின் நிபந்தனைகள் - அப்பீல், ரெபெரென்ஸ் ரிவிஷன் கோர்ட்டுகளுக்குப் பிரயோகப்படுகின்றன.

447-வது பிரிவின்படி தெரிவிக்க

534. 447-வது பிரிவின்படி, யாதொரு நபருக்கு 33-ம் அத்தியாயத்தின்படி அவனுக்

வேண்டுமென்று தீர்மானித்திருப்பதைத் தெரிவிக்காமற்போவது.

குண்டான சுதந்தரங்களை தெரிவிக்கத் தவறியதனாலே யாதொரு நடவடிக்கையின் செலாவணிக்குப் பாதகமுண்டாகமாட்டாது.

குற்றபத்திரிகை தயார் செய்யாவிட்டால் இன்னதாகுமென்பது.

535. (1) குற்றபத்திரிகை தயார் செய்யாமையினாலே வாஸ்தவத்தில் நீதி தவறிப் போயிற்றென்று அப்பீல் கோர்ட்டாராவது மேற்பரிசோதனை கோர்ட்டாராவது அபிப்பிராயப்பட்டாலொழிய, சொல்லப்பட்ட தீர்மானமாகிலும், விதிக்கப்பட்ட சிட்சையாகிலும் குற்றபத்திரிகை தயார் செய்யப்படவில்லையென்கிற ஹேதுவினால் மாத்திரம் செல்லாமற் போகுமென்று எண்ணக்கூடாது.

(2) குற்றபத்திரிகை தயார்செய்யாமையினாலே நீதி தவறிப் போயிற்றென்று அப்பீல் கோர்ட்டாருக்காவது மேற்பரிசோதனை கோர்ட்டாருக்காவது தோற்றினால், அந்தக் கோர்ட்டார் குற்றபத்திரிகை தயார்செய்யவேண்டியதென்றும், குற்றபத்திரிகை தயாரானவுடனே நடத்தவேண்டிய அம்சத்திலிருந்து பரிசீலனையை மறுபடி ஆரம்பிக்கவேண்டியதென்றும் உத்தரவு செய்யவேண்டும்.

அஸெஸர்களை வைத்துக்கொண்டு பரிசீலனை செய்யப்படத்தக்க குற்றத்தை ஜூரி பரிசீலனைசெய்வது.

536. (1) அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு பரிசீலனை செய்யப்படத்தக்க குற்றமானது ஜூரியால் பரிசீலனை செய்யப்பட்டால் அந்த ஹேதுவின்மேல் மாத்திரம் அந்தப் பரிசீலனை செல்லாததாகமாட்டாது.

ஜூரியால் பரிசீலனை செய்யப்படத்தக்க குற்றத்தை அஸெஸர்களை வைத்துக்கொண்டு பரிசீலனைசெய்வது.

(2) ஜூரியால் பரிசீலனை செய்யப்படத்தக்க குற்றமானது அஸெஸர்களுடைய ஸகாயத்தைக்கொண்டு பரிசீலனை செய்யப்பட்டால், அந்த ஹேதுவின்மேல் மாத்திரம் அந்தப் பரிசீலனையாவது - கோர்ட்டார் தங்கள் தீர்மானத்தை ரிகார்ட் பண்ணுவதற்கு முன்னமே அப்படி செய்யக்கூடாதென்று ஆட்சேபனை செய்யப்பட்டாலொழிய, செல்லாததாகமாட்டாது.

குற்றப்பத்திரிகையிலாவது வேறே நடவடிக்கையிலாவது பிசகு இருப்பதைப்பற்றியாகிலும் யாதொன்று விட்டுப் போயிருப்பதைப் பற்றியாகிலும் தீர்மானம் அல்லது சிட்சை இன்னபடிக்கானல் மாற்றி விடப்படத்தக்கதாகும்.

537. இதில் முன்னமே சொல்லியிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு தகுந்த அதிகாரமுடைய கோர்ட்டாரால் செய்யப்பட்ட நிர்மானமாயினும் சிட்சையாயினும் உத்தரவாயினும்—

(a) பிராதிலாவது ஸம்மனிலாவது வாரன்டிலாவது குற்றபத்திரிகையிலாவது பிரசித்தப் பத்திரிகையிலாவது உத்தரவிலாவது தீர்ப்பிலாவது பரிசீலனைக்கு முன்னமேயாகிலும் பரிசிலனையின் போதாகிலும் நடத்தப்பட்ட வேறேநடவடிக்கையிலாவது, இந்தச் சட்டத்தின்படியான யாதொரு விசாரணை அல்லது வேறே நடவடிக்கையிலாவது, யாதொரு பிசகு இருப்பதைப்பற்றியாகிலும், யாதொன்று விட்டுப் போயிருப்பதைப்பற்றியாகிலும், கிரமப்பிறழ்வு நேரிட்டதைப்பற்றியாகிலும்,

(b) (ரத்து செய்யப்பட்டது.)

(c) ஜூரர்கள் அல்லது அஸெஸர்களைக்குறித்த யாதொரு ஜாபிதாவை 324-வது பிரிவின்படிபரிசோதிக்க விட்டுப்போயிருப்பதைப்பற்றியாகிலும்,

(d) ஜூரிக்குத் தெரிவித்த கற்பனைகளில் தப்புவழி காட்டியதைப்பற்றியாகிலும், அப்படிப்பட்ட பிசகு, விட்டுபோவது கிரமப்பிறழ்வு, அல்லது தப்புவழி காட்டுவது ஆகிய இவைகளினலே வாஸ்தவத்தில் நீதி தவறிப்போயிருந்தாலொழிய, 27-ம் அத்தியாயத்தின்படிக்காவது அப்பீலிலாவது மேற்பரிசோதனையிலாவது ரத்துசெய்யவும்படாது, மாற்றவும்படாது.

விவரணம்.—இந்த சட்டத்தின்படி யாதொரு நடவடிக்கையில் யாதொரு பிசகு, விட்டுப்போவது அல்லது கிரமப்பிறழ்வு ஆகிய இவைகளினலே நீதி தவறிப்போயிற்றுவென்று தீர்மானிக்கையிலே

கோர்ட்டார் அந்த நடவடிக்கை நடந்துகொண்டிருந்தபோது இன்னும் சீக்கிரமாய் முன்னதாகவே ஆட்சேபனை செய்திருக்கக்கூடுமாவென்பதையும் செய்திருக்கவேண்டுமாவென்பதையும் கவனிக்கவேண்டும்.

நடவடிக்கைகளில் குறைவைப்பற்றியாவது ஒழுங்கின்மையைப் பற்றியாவது ஜப்தி சட்டத்துக்கு விரோதமாகவுமாட்டாது, ஜப்திசெய்கிறவன் அக்கிரமமாய் நுழைகிறவனாகவுமாட்டான்.

538. இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட ஜப்தி சம்பந்தமான ஸம்மன் - குற்ற ஸ்தாபன ஜப்திவாரன்ட் அல்லது வேறே நடவடிக்கைகளிலே யாதொரு குறைவைப்பற்றியாவது ஒழுங்கின்மையைப்பற்றியாவது, அந்த ஜப்தி சட்டத்துக்கு விரோதமானதாக எண்ணவும்படாது, ஜப்திசெய்கிறவன் அக்கிரமமாய் நுழைகிறவனாக எண்ணவும்படான்.

46-ம் அத்தியாயம்.

பலவகைப்பட்டவை.

இன்ன கோர்ட்டுகளுக்கு முன்பாகவும் நபர்களுக்கு முன்பாகவும் அபிடெவிட் என்னும் பத்திரிகைகளுக்கு ப்பிரமாணஞ் செய்யலாம்.

539. யாதொரு ஹைகோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் அந்தக் கோர்ட்டின் யாதொரு உத்தியோகஸ்தருக்கு முன்பாகவாகிலும் உபயோகிக்கவேண்டிய அபிடெவிட்டுகளுக்கும் உறுதிமொழிப் பத்திரிகைகளுக்கும், அந்தக் கோர்ட்டாருக்கு முன்பாகவாவது க்ளர்க் ஆவ் தி க்ரவுனுக்கு முன்பாகவாவது இதற்காக அந்தக் கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட யாதொரு கம்மிஷனர் அல்லது வேறே நபருக்கு முன்பாகவாவது, யாதொரு ஜட்ஜுக்கு முன்பாகவாவது ப்ரிட்டிஷ் இந்தியாவிலுள்ள யாதொரு ரிகார்ட் கோர்ட்டில் அபிடெவிட்டுகளை வாங்குவதற்காக இருக்கிற யாதொரு கம்மிஷனருக்கு முன்பாகவாவது, இங்கிலாந்திலாகிலும் அயர்லாந்திலாகிலும் சான்ஸெரியில் பிரமாணஞ் செய்விப்பதற்காக இருக்கிற யாதொரு கம்மிஷனருக்கு முன்பாகவாவது, ஸ்காட்லாந்தில் அபிடெவிட்டுகள் அல்லது உறுதிமொழிப்பத்திரிகைகளை வாங்குவதற்கு அதிகாரம்பெற்ற யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகவாவது பிரமாணஞ் செய்விக்கலாம், உறுதிமொழி சொல்லுவிக்கலாம்.

539-A. (1) இந்தக் கோடின்படி யாதொரு விசாரணையாவது பரிசீலனையாவது இதர நடவடிக்கையாவது நடந்து கொண்டிருக்கையில் எந்தக் கோர்ட்டாருக்காகி லும் யாதொரு விண்ணப்பம் செய்துகொள்ளப் பட்டு, அதிலே யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ் தரின் நடத்தையைக்குறித்து சிலசங்கதிகள் உறுதி யாக கூறப்பட்டிருந்தால், விண்ணப்பதாரன் விண் ணப்பத்தில் உறுதியாய்க் கூறப்பட்ட சங்கதிகளைக் குறித்து அபிடெவிட் மூலமாக சாட்சியம் கொடுக்கலாம்; மேலும், கோர்ட்டார் - அப்படிப்பட்ட சங்கதிகளைக்குறித்து அந்தப்படி சாட்சி யம் கொடுக்கவேண்டுமென்று தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற பட்சத்திலே உத்தரவுசெய்யலாம்.

ஸர்க்கார் உத்தியோகஸ்தரின் நடத்தைக்கு ருஜுவாக வாங்கப்படும் அபிடெவிட் என்னும் பிரமாணப் பத்திரிகை.

இந்தப் பிரிவின்படி யாதொரு ஹைக்கோர்ட்டைத்தவிர வேறே எந்தக் கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் உபயோகிக்கவேண்டிய யா தொரு அபிடெவிட்டுக்கு, 539-வது பிரிவில் நிர்ணயிக்கப்பட்ட வித மாகவாகிலும் யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகவாகிலும் பிரமா ணம் செய்விக்கலாம் அல்லது உறுதிமொழி சொல்லுவிக்கலாம்.

இந்தப் பிரிவின்படிக்கான அபிடெவிட்டுகளிலே, சாட்சி சொல்லு கிறவன் தமக்கே தெரிந்துள்ள விஷயங்களைக்கொண்டு எவைகளை ருஜு ப்படுத்தக்கூடுமோ அப்படிப்பட்ட சங்கதிகளும், எவை உண்மையா னவையென்று தான் நம்புவதற்கு நியாயமான முகாந்தரங்கள் இருக் கிறதோ அப்படிப்பட்ட சங்கதிகளும் மாத்திரமே காணவேண்டியது மல்லாமல் அவன் அப்படிப்பட்ட சங்கதிகளை தனித்தனியாய்க் கண் டெழுதவும்வேண்டும்; மேலும், பின்சொன்ன விஷயத்திலே, சாட்சி சொல்லுகிறவன் அப்படி தான் நம்புவதற்குள்ள நியாயங்களை ஸ்பஷ்ட மாய்க் கண்டெழுதவேண்டும்.

(2) யாதொரு அபிடெவிட்டில் அபவாதத்திற்கிடமாகவும் விஷயத்துக்குச் சம்பந்தமில்லாமலுமுள்ள எந்த விஷயத்தையாகிலும் அடித்துவிடும்படியாவது திருத்தும்படியாவது கோர்ட்டார் உத்தரவு செய்யலாம்.

539-B. (1) யாதொரு ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது யா தொரு விசாரணை, பரிசீலனை, அல்லது இதர நட வடிக்கையின் எந்த தசையிலாகிலும், உபயவாதிக

பிரதேசத்தைப் பார்வையிடுவது.

ருக்கும் கிரமமான நோடீஸ் கொடுத்தபிறகு அந்த இடத்தில் குற்றம் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு இடத்தையாகிலும், அந்த விசாரணை அல்லது பரிசிலனையில் கொடுக்கப்படும் சாட்சியத்தைச் சரியாய் மதிப்பிடும் காரியத்துக்காக பார்வையிடுவது அவசியமென்று தாம் அபிப்பிராயப்படுகிற வேறே யாதொரு இடத்தையாகிலும் போய்ப் பார்வையிடலாம்; மேலும், அவர் அந்தப்படி பார்வையிட்டபோது கவனித்திருக்கும் பொருத்தமாயுள்ள அந்தவிஷயங்களைக்குறித்தாகிலும் உடனே ஒரு யாதாஸ்து எழுதிவைக்கவேண்டும்.

(2) அப்படிப்பட்ட யாதாஸ்தானது அந்தக் கேஸைப்பற்றிய ரெகார்டைச்சேர்ந்த ஒரு பாகமாகும். பப்ளிக் ப்ராஸிக்யூடராவது பிராதுதாரனாவது குற்றஞ் சாட்டப்பட்டவனாவது அந்த யாதாஸ்தின் ஒருநகலைப்பெற விரும்பினால் அந்தப்படியே அவருக்கு யாதொரு கட்டணமுமில்லாமலே ஒரு நகலைச் சவதரிக்கவேண்டும்.

ஆனால், ஜூரர்களுடனாவது அஸெஸர்களின் உதவியைக்கொண்டாவது நடத்தப்படும் பரிசிலனையின் விஷயத்தில், அப்படிப்பட்ட ஜூரர்களாகிலும் அஸெஸர்களாகிலும் 293-வது பிரிவின்படி பார்வையிடுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி ஜட்ஜானவர் இந்தப் பிரிவின்படி பிரவர்த்திக்கக்கூடாது.

முக்கியமான சாட்சியை ஸம்மனனுப்பி வரவழைக்கவாவது ஹாஜராயிருக்கிற நபரை விமரிசைசெய்யவாவது அதிகாரம்.

540. இந்தச் சட்டத்தின்படி நடத்தப்படுகிற யாதொரு விசாரணை - பரிசிலனை அல்லது வேறே நடவடிக்கையில் எந்த தசையிலாகிலும் யாதொரு கோர்ட்டார் எந்த நபரையாவது சாட்சியாக ஸம்மனனுப்பி வரவழைக்கலாம், அல்லது சாட்சியாக ஸம்மனனுப்பி வரவழைக்கப்படாதபோதிலும், வந்திருக்கிற யாதொரு நபரை விமரிசைசெய்யலாம் அல்லது முன்னமே விமரிசைசெய்யப்பட்ட யாதொரு நபரை மறுபடியும் வரவழைத்து மறுபடியும் விமரிசைசெய்யலாம்; மேலும், அப்படிப்பட்ட நபரினுடைய சாட்சியமானது கேஸை நியாயமாய்த் தீர்மானிப்பதற்கு முக்கியமானதாகத் தோற்றினால், கோர்ட்டார்-அவனுக்கு ஸம்மன் அனுப்பி வரவழைத்து விமரிசை செய்யவாவதுவேண்டும்; அல்லது அவனை மறுபடியும் வரவழைத்து மறுபடியும் விமரிசை செய்யவாவதுவேண்டும்.

சிலகேஸுகளில் குற்றஞ் சாட்டப்பட்டவன் ஹாஜர் இல்லாதிருக்கையிலேவிசாரணைகளும் பரிசீலனையும் நடத்தப்படுவதற்காக நிபந்தனைகள்.

540-A. (1) குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் இரண்டுபேராவது இரண்டுக்கு மேற்பட்டவர்களாவது கோர்ட்டாருக்கு முன்பு ஹாஜராயிருந்து இந்தக் கோடின்படி நடந்துவரும் யாதொரு விசாரணை அல்லது பரிசீலனையின் எந்த தசையிலாகிலும், அப்படிப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் எவனுயினும் ஒருவனாவது பலராவது கோர்ட்டுக்குமுன் இருக்கச் சக்தியற்றவனாய் அல்லது சக்தியற்றவர்களாயிருக்கிறார்களென்று யாதொரு ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது தெரிந்து திருப்தியடைந்தால், அவர்-ஷை குற்றஞ் சாட்டப்பட்டவனுக்காக ஒரு ப்ளீடர் ஹாஜராயிருக்கும்பட்சத்தில், அவன் ஹாஜராகவேண்டியதில்லையென்று உத்தரவுசெய்து அவன் யிராமலேயே அப்படிப்பட்ட விசாரணை அல்லது பரிசீலனையை நடத்திக்கொண்டுபோவதுமல்லாமல் அந்த நடவடிக்கைகளில் பிந்திய யாதொரு தசையிலே, குற்றஞ் சாட்டப்பட்ட ஷை நபர்கள் நேரில் ஹாஜராகவேண்டுமென்று கட்டளையிடலாம்; மேலேகண்டபடி திருப்தியடைவதற்கான காரணங்களை எழுதிவைக்கவேண்டும்.

(2) அப்படிப்பட்ட யாதொரு கேஸில் குற்றஞ் சாட்டப்பட்டவனுக்காக ஒருப்ளீடர் ஹாஜராகாவிட்டாலாவது ஜட்ஜாகிலும் மாஜிஸ்ட்ரேட்டாகிலும் அவன் நேரில் ஹாஜராகவேண்டியது அவசியமென்று நினைத்தாலாவது அவர்-தமக்குத் தகுதியாகத் தோற்றினால், அப்படிப்பட்ட விசாரணை அல்லது பரிசீலனையைத் தள்ளிவைக்கலாம் அல்லது அப்படிப்பட்ட குற்றஞ் சாட்டப்பட்டவனுடைய கேஸை பிரத்தியேகமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றாகிலும் பரிசீலனை செய்யவேண்டுமென்றாகிலும் உத்தரவு செய்யலாம்; அப்படி தள்ளிவைப்பதற்கான அல்லது உத்தரவு செய்வதற்கான நியாயங்களை அவர் எழுதிவைக்கவேண்டும்.

காவல் ஸ்தானத்தை நியமிக்க அதிகாரம்.

541. (1) அந்தந்தக்காலத்தில் வழங்கிக்கொண்டிருக்கிற யாதொரு சட்டதிட்டத்தினாலே வேறேவிதமாய்ச் சொல்லப் பட்டிருந்தாலொழிய, பிரதேச கவர்ன்மெண்டார் - இந்தச் சட்டத்தின்படி காவலில் வைக்கப்படுவதற்காவது காவலுக்குக் கமிட் பண்ணப்படுவ

தற்காவது உள்ளாயிருக்கிற யாவனொருவனை இன்ன இடத்திலே சிறைப்படுத்தி வைக்கவேண்டுமென்று உத்தரவுசெய்யலாம்.

குற்றஞ் சாட்டப்பட்டவர்களாவது குற்ற ஸ்தாபனையானவர்களாவது ஸிவில் ஜெயிலிலே அடைத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்களை க்ரிமினல் ஜெயிலுக்குக் கொண்டுபோவதும், அவர்கள் ஸிவில் ஜெயிலுக்கு மறுபடி வருவதும்.

(2) இந்தச் சட்டத்தின்படி சிறைச்சாலையில் வைக்கப்படுவதற்காவது காவலுக்குக் கம்மிட் பண்ணப்படுவதற்காவது உள்ளாயிருக்கிற யாதொரு நபர் எந்த ஸிவில் ஜெயிலிலாகிலும் அடைத்து வைக்கப்பட்டிருந்தால், சிறைச்சாலையில் வைக்கும்படியாவது கம்மிட் பண்ணும்படியாவது உத்தரவு பண்ணுகிற கோர்ட்டாராகிலும் மாஜிஸ்ட்ரேட்டாகிலும் அந்த நபரை க்ரிமினல் ஜெயிலுக்குக் கொண்டுபோகும்படி கட்டளையிடலாம்.

(3) எவனாவது 2-வது உட்பிரிவின்படி யாதொரு க்ரிமினல் ஜெயிலுக்குக் கொண்டுபோகப்பட்டால், அதிலிருந்து விடுதலையாவதன்மேல், அவன்—

(a) க்ரிமினல் ஜெயிலுக்குக் கொண்டுபோகப்பட்டது முதற்கொண்டு மூன்றுவருஷம் கழிந்திருக்கிறபட்சத்தில் ஸிவில் ப்ரொஸீஜர் கோடு 342-வது பிரிவின்படி ஸிவில் ஜெயிலிலிருந்து விட்டுவிடப்பட்டவனாக எண்ணப்படுவானாகையால், க்ரிமினல் ஜெயிலுக்கு அவனைக் கொண்டுபோனது முதற்கொண்டு மூன்றுவருஷம் கழிந்திராவிட்டாலும்,

(b) அவனை ஸிவில் ஜெயிலில் அடைத்துவைக்கும்படி உத்தரவுசெய்த கோர்ட்டார் ஸிவில் ப்ரொஸீஜர்கோட் 341-வது பிரிவின்படி அவன் விடுதலையாவதற்கு அர்ஹனாயிருக்கிறானென்று க்ரிமினல் ஜெயிலின் விசாரணை உத்தியோகஸ்தருக்கு ஸெர்ட்டிபை பண்ணியிருந்தாலும்,

ஸிவில் ஜெயிலுக்கு மறுபடியும் அனுப்பப்படுவான்.

ஜெயிலிலிருக்கிற கைதியை விசாரணைக்காகக் கொண்டுவரும்படி உத்

542. (1) 1869-ம் வருஷத்திய கைதியின் சாட்சிய ஆக்ட்டில் என்ன சொல்லியிருந்தபோதிலும், யாதொரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டானவர் - தம்முடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள்ளிருக்கிற யாதொரு ஜெயிலில் காவற்பட்டிருக்கிற யாதொரு நபரைத்

தரவுசெய்ய ராஜ தானி மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரம்.

தமக்கு முன்பாக நடந்துகொண்டிருக்கிற யாதொரு கேஸிலே சாட்சியாகவாவது குற்றஞ் சாட்டப்பட்டவனாகவாவது விமரிசை செய்யவேண்டுமென்று இஷ்டங்கொண்டால், அவர் ஓர் காலத்தைக் கண்டு அந்தக்காலத்தில் விமரிசையின்பொருட்டுத் தம்மிடத்துக்கு அந்தக் கைதியைத் தகுந்த காவலோடு கொண்டுவரும்படி மேற்கண்ட ஜெயிலின் விசாரணை உத்தியோகஸ்தருக்கு உத்தரவு பிறப்பிக்கலாம்.

(2) அந்த உத்தியோகஸ்தர் அப்படிப்பட்ட உத்தாவை பெற்றுக்கொண்டதன்மேல் அதன்படி நடக்கவேண்டியதுமல்லாமல் மேற்கண்ட விஷயத்தின்பொருட்டுக் கைதி ஜெயிலைவிட்டு வந்திருக்கிற காலத்தில் அவனைப் பத்திரமான காவலில் வைத்திருப்பதற்கு வகை செய்யவும் வேண்டும்.

இன்டர்பிரட்டரானவர் எதார்த்தமாய் மொழிபெயர்க்கக் கடமைப்படுவது.

543. யாதொரு சாட்சியத்தையாவது வாக்குமூலத்தையாவது மொழிபெயர்ப்பதற்காக யாதொரு க்ரிமினல் கோர்ட்டாருக்கு இன்டர்பிரட்டர் வேண்டியிருந்தால் அப்படிப்பட்ட சாட்சியம் அல்லது வாக்குமூலத்தை எதார்த்தமாய் மொழிபெயர்ப்பதாக அவர் கட்டுப்படவேண்டும்.

பிராதுக்காரர்கள் - சாட்சிகள் இவர்களுடைய செலவைக்குறித்து.

544. அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் செய்யும்படியான விதிகளுக்குட்பட்டு, தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால், யாதொரு க்ரிமினல் கோர்ட்டார் - இந்தச் சட்டத்தின்படி தங்களுக்கு முன்பாக நடக்கிற யாதொரு விசாரணை, பரிசீலனை அல்லது வேறே நடவடிக்கையின்பொருட்டு வந்திருக்கிற யாதொரு பிராதுக்காரன் அல்லது சாட்சிக்குண்டாகிய நியாயமான செலவைக் கவர்ன்மெண்டார் பட்சத்தில் செலுத்தும்படி உத்தரவு பண்ணலாம்.

செலவையாவது பிரதி பலனையாவது அபராதத்தொகையிலிருந்து கொ

545. (1) அந்தந்தகாலத்திலே வழங்கிவருகிற யாதொரு சட்டப்படி யாதொரு க்ரிமினல் கோர்ட்டார் அபராதம் விதித்தாலும், அப்பீலிலாவது மேற்பரிசோதனையிலாவது மற்றப்படியாவது அபராத சிட்சையையாகிலும் வேறொரு சிட்சையோடு அபராத

இக்கோர்ட்டா ருக்கு அதிகாரம். மொன்றுயிருக்கிற சிட்சையையாகிலும் ஊர்ஜ்ஜிதப் படுத்திறைலும், தீர்ப்பு செய்யும்போது அந்தக் கோர்ட்டார் - வசூல்செய்யப்பட்ட அபராத முழுமையுமாவது அதி லெவ்வளவையாவது—

(a) பிராதை நடத்துவதில் கிரமமாய் நேரிட்ட செலவுகளைச் செலுத்துவதற்காகவும்,

(b) ஸிவில் கோர்ட்டிலே உள்ளபடியான (Substantial) பிரதிபலன் யாதொரு நபரால் வசூல்செய்யப்படத்தக்க தென்று கோர்ட்டார் அபிப்பிராயம் கொண்டால், குற்றத் திறைலுண்டான யாதொரு கஷ்டம் அல்லது கெடுதிக்காக யாதொரு நபருக்குப் பிரதிபலன் கொடுப்பதற்காகவும்,

(c) திருட்டு, அக்கிரமமாய் உபயோகித்துக்கொள்வது, ஒப்பிக்கப்பட்ட சொத்தை அநியாயமாய் அபகரிப்பது அல்லது மோசஞ்செய்வது அடங்கும் யாதொரு குற்றத்தைச் செய்ததாகவாகிலும் திருடப்பட்டதென்று தெரிந்தோ அல்லது நம்புவதற்கு முகாந்தரமிருந்தோ திருட்டுச்சொத்தை அயோக்கியமாய் வாங்கிக்கொண்டதாகவாகிலும் தன்னிடத்தில் வைத்துக்கொண்டதாகவாகிலும் யாதொரு நபர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டால், அந்தச் சொத்தை அடைய பாத்தியதையுள்ள நபருக்கு அது மறுபடியும் ஸ்வாதீனப்படுத்தப்படும் பக்ஷத்திலே அதன் நஷ்டத்துக்காக, அந்தச்சொத்தை நல்ல எண்ணத்துடன் கிரயத்துக்கு வாங்கியிருக்கும் யாதொரு நபருக்குப் பிரதிபலன் கொடுப்பதற்காகவும், உபயோகப்படுத்தும்படி உத்தரவு செய்யலாம்.

(2) அப்பீலுக்குள்ளான யாதொரு கேஸில் அபராதம் விதிக்கப்பட்டால், அப்பீல் கொடுத்துக்கொள்வதற்குண்டான கெடுவுகாலம் கழிவதற்கு முன்னேயாவது, அப்பீல் கொடுக்கப்பட்டிருந்தால் அப்பீல் தீர்மானத்துக்கு முன்னேயாவது, அப்படி பணஞ்செலுத்தக்கூடாது.

546. அதே சங்கதியைக் குறித்த பிந்திய யாதொரு ஸிவில் வியாஜ்ஜியத்திலே பிரதிபலனுக்குத் தீர்மானஞ் செய்யும்போது கோர்ட்டார் 545 - வது பிரிவின்

செலுத்திய தொகையைப் பிடித்தல்.

யாஜ்ஜியத்திலே கணக்கில் சேர்த்தும் கொள்வது.

படி பிரதிபலனுகச் செலுத்தப்பட்டாவது வசூல் செய்யப்பட்டாவதிருக்கிற யாதொரு தொகையைக் கணக்கில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

பிடிக்கக்கூடாத கேஸுகளிலே பிராதுதாரன் செலுத்தியிருக்கும் சில கட்டணங்களைச்செலுத்தும்படி உத்தரவு.

546-A. (1) பிடிக்கக்கூடாத யாதொரு குற்றத்தைக் குறித்து யாதொரு கோர்ட்டாரிடத்தில் ஏதாகிலும் பிராது செய்யப்படும்போதெல்லாம், கோர்ட்டார்-குற்றஞ் சாட்டப்பட்டவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கிற பட்சத்திலே, அவனுக்கு விதிக்கப்படும் தண்டனையுடன்கூட—

(a) பிராது மனுவின்பேரிலாகிலும் பிராதுதாரனை விமரிசை செய்வதற்காகவாகிலும் கட்டணம் (ஏதாவது) செலுத்தப் பட்டிருந்தால் அந்தக் கட்டணத்தையும்,

(b) பிராதுதாரன் தன்னுடைய சாட்சிகளுக்காகிலும் குற்றஞ்சாட்டப்பட்டவனுக்காகிலும் ப்ராஸெஸ் என்னும் கட்டளைகளைச் சேர்ப்பிப்பதற்காக ·செலுத்தியிருக்கும் எவையேனும் கட்டணங்களையும்,

பிராதுகாரனுக்குச் செலுத்தும்படி குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு உத்தரவு செய்யவேண்டும். மேலும், அப்படிச் செலுத்தத்தவறினுல், குற்றஞ்சட்டப்பட்டவன், 30-தினங்களுக்கு மேற்படாத காலத்திற்கு வெறுங்காவலில் வைக்கப்படவேண்டுமென்றும் உத்திரவிடலாம்.

(2) இந்தப் பிரிவின்படிக்கான உத்திரவை, யாதொரு அப்பீல் கோர்ட்டாரும் அல்லது ஹைக்கோர்ட்டார் தங்களுடைய புனர் விசாரணை அதிகாரங்களைச் செலுத்துகையிலே அந்த ஹைக்கோர்ட்டாருங்கூட செய்யலாம்.

செலுத்தும்படி உத்தரவு செய்யப்பட்ட தொகைகள் அபராதங்களைப் போல வசூல் செய்யப்படத்தக்கது.

547. இந்தச்சட்டத்தின்படி செய்யப்பட்ட யாதொரு உத்தரவின் பிரகாரம் செலுத்தப்படத் தக்கதும் வசூல் செய்ய மற்றப்படி குறிப்பிட்டு நிபந்தனை கண்டிராததுமான (அபராதமல்லாத வேறே) யாதொரு பணமானது அபராதமாயிருந்தால் எப்படியோ அப்படியே வசூல் செய்யப்படத் தக்கதாகும்.

நடவடிக்கைகளுக்கு நகல்கள்.

548. யாதொரு க்ரிமினல் கோர்ட்டாரால் செய்யப்பட்ட யாதொரு தீர்ப்பு அல்லது உத்தரவினால் பாதிக்கப்பட்ட யாதொரு நபர் - ஜூரிக்கு ஜட்ஜ் தெரிவித்த கற்பனைக்காவது யாதொரு உத்தரவுக்காவது வாக்குமூலத்துக்காவது ரிகார்ட்டைச் சேர்ந்த வேறே யாதொரு பாகத்துக்காவது நகல் வேண்டுமென்று கோரினால், அவன் அப்படிப்பட்ட நகலுக்கு மனுச்செய்துகொள்வதன்மேல் அவனுக்கு அதைக் கொடுக்கவேண்டும்.

ஆனால், ஏதோ ஒரு முக்கியமான காரணத்தைப்பற்றிக் கோர்ட்டார் செலவில்லாமல் அதைக் கொடுப்பது யுக்தமென்று நினைத்தாலொழிய அவன் அதற்காகக் கட்டணஞ் செலுத்தவேண்டும்.

கோர்ட்மார்ஷலால் பரிசிலனைசெய்யப்படவேண்டியவர்களான பேர்களை ராணுவ அதிகாரிகளிடத்தில் ஒப்பிப்பது.

549. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இன்ன கேஸுகளில் ராணுவச் சட்டம் அல்லது ஆகாயப்படைச் சட்டத்துக்குட்பட்டவர்களை இந்த சட்டசம்பந்தப்படுகிற யாதொரு கோர்ட்டாராவது கோர்ட் மார்ஷலாவது (Court-martial) பரிசிலனை செய்யவேண்டியதென்று அந்தக் கேஸுகளைக் குறித்து, இந்தச் சட்டத்துக்கும் ராணுவ ஆக்ட் அல்லது ஆகாயப்படை சட்டம் அல்லது அந்தந்தக் காலத்தில் செலாவணியாகிற அதைப்போன்ற யாதொரு சட்டத்துக்கும் ஒத்திருக்கும்படியான விதிகளைச்செய்யலாம்; யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாக யாவனொருவன் கொண்டுவரப்பட்டு, ராணுவ ஆக்ட் 41-வது பிரிவின்படியாவது ஆகாயப்படை ஆக்டின் 41-வது பிரிவின்படியாவது கோர்ட் மார்ஷலால் எதற்காக அவன் பரிசிலனை செய்யப்படுவதற்குள்ளாயிருக்கிறானோ அப்படிப்பட்ட யாதொரு குற்றம் அவன்மேல் சுமத்தப்பட்டால் அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர்-அப்படிப்பட்ட விதிகளை யோசிக்கவேண்டியதுமல்லாமல், தகுந்த கேஸுகளிலே, அவன் கோர்ட் மார்ஷலால் பரிசிலனை செய்யப்படும்பொருட்டு, அவன் எதில் சேர்ந்திருக்கிறானோ அந்த ரிஜிமெண்ட் பட்டாளம் அல்லது அணிவகுப்பின் கம்மாண்டிங் ஆபீஸரிடத்திலாவது, அதி சமீபத்திலிருக்கும் ராணுவ ஸ்டேஷன் அல்லது ஆகாயப்படை கம்மாண்டிங் ஆபிஸரிடத்திலாவது, அவன்மேல் சாட்டப்பட்டிருக்கிற குற்றத்திற்கு விபரப்பத்திரிகை சகிதமாய் அவனை ஒப்பித்துவிடவும்வேண்டும்.

(2) அப்படிப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்ட யாதொரு நபரைப் பிடித்துப் பத்திரப்படுத்தும்படி, அப்படிப்பட்ட யாதொரு இடத்திலே நிலையாயிருக்கிற அல்லது வேலை பார்த்துக்கொண்டிருக்கிற யாதொரு சேனைக் கூட்டத்துக் கம்மாண்டிங் ஆபீஸர் எழுதிக் கொள்ளுகிற மனுவைப் பெற்றுக்கொள்ளுவதன்மேல், பிரதி மாஜிஸ்ட்ரேட்டும் அப்படி குற்றஞ்சாட்டப்பட்டவனைப் பிடித்துப் பத்திரஞ் செய்யத் தன்னாலான முயற்சியெல்லாம் செய்யவேண்டும்.

அப்படிப்பட்ட நபர்களைப் பிடிப்பது.

550. திருடப்பட்டதென்று சொல்லப்படுகிற அல்லது அனுமானிக்கப்படுகிறதாகவாவது, யாதொரு குற்றம் நடந்திருக்கவேண்டுமென்று அனுமானிப்பதற்குக் காரணமாயிருக்கும் சந்தர்ப்பங்களில் அகப்படுகிறதாகவாவதுள்ள யாதொரு சொத்தை யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தர் பிடிக்கலாம். அந்த போலீஸ் உத்தியோகஸ்தரானவர் - போலீஸ் ஸ்டேஷன் விசாரணை உத்தியோகஸ்தருக்குக் கீழ்ப்பட்டவராயிருந்தால் அதைப் பிடித்ததைக்குறித்து அந்த உத்தியோகஸ்தரிடத்தில் உடனே ரிபோர்ட் செய்யவேண்டும்.

திருடியதாக அனுமானிக்கப்பட்ட சொத்தைப் பிடிக்கப் போலீஸாருக்கு அதிகாரம்.

551. போலீஸ் ஸ்டேஷன் நிலையை உத்தியோகஸ்தனுடைய அந்தஸ்துக்கு மேற்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தன் எப்படிப்பட்ட அதிகாரங்களைத் தன்னுடைய ஸ்டேஷன் சரகத்துக்குள் செலுத்தலாமோ அப்படிப்பட்ட அதிகாரங்களை எதற்குத் தாங்கள் நியமிக்கப்படுகிறார்களோ அந்தப் பிரதேச விஸ்தீரண முழுமையிலும் செலுத்தலாம்.

மேலான போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்குள்ள அதிகாரங்கள்.

552. யாதொரு ஸ்திரீயாவது பதினறு வயதுக்குட்பட்ட பெண்பிள்ளையாவது யாதொரு அக்கிரமமான காரியத்திற்காக அடித்துக்கொண்டு போகப்பட்டதாகவாகிலும் அக்கிரமமாய் மறித்துவைக்கப்பட்டதாகவாகிலும் பிரமாணத்தின்மேல் யாதொரு இராஜதானி மாஜிஸ்ட்ரேட் அல்லது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் பிராது செய்யப்பட்டால், அவர் அப்படிப்பட்ட ஸ்திரீயை உடனே சுயேச்சையாய் விட்டுவிடும்படிக்காகிலும் அப்படிப்

அடித்துக்கொண்டு போகப்பட்ட ஸ்திரீகளை விடுவிக்கும்படி நிர்ப்பந்திக்க அதிகாரம்.

பட்ட பெண்பிள்ளையை அவளுடைய கணவன்-தாய்தந்தை-சவரட்சணைக்கர்த்தன் அல்லது அந்தப்பெண்ணைச் சட்டப்படி தன்வசத்தில் வைத்துக்கொண்டிருந்த வேறே நபரினிடத்தில் உடனே ஒப்பித்துவிடும்படிக்காகிலும் உத்தரவுசெய்யலாம்; மேலும், எவ்வளவு அவசியமாயிருக்கலாமோ அவ்வளவு பலாத்காரஞ்செய்து அந்த உத்தரவின்படி நடந்துகொள்ளச்சொல்லிக் கட்டாயப்படுத்தலாம்.

இராஜதானியிலே ஆதாரமில்லாமல் (போலிஸ்) வசம் ஒப்பிக்கப்பட்ட நபருக்குப் பிரதிபலன்.

553. (1) எந்த நபராவது போலீஸ் உத்தியோகஸ்தனைக்கொண்டு யாதொரு இராஜதானியில் வேறொரு நபரைப் பிடிப்பித்தால் அப்படி பிடிப்பிப்பதற்குத் தகுந்த ஆதாரமில்லையென்று அந்தக் கேஸை விசாரணை செய்கிற மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோற்றுகிற பட்சத்தில், அவர் ஐம்பது ரூபாய்க் கதிகப்படாமல் தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற பிரதிபலனை, அப்படிப் பிடிப்பித்த நபர் அப்படி பிடிப்பிக்கப்பட்ட நபருக்கு அந்தவிஷயத்தில் அவனுக்குண்டான காலநஷ்டத்துக்காகவும் செலவுக்காகவும் கொடுக்கும்படி தீர்மானிக்கலாம்.

(2) அப்படிப்பட்ட விஷயங்களிலே, ஒருவனல்லாமல் பலர் பிடிப்பிக்கப்பட்டாலும் பிராது செய்யப்பட்டாலும், மாஜிஸ்ட்ரேட்டானவர்-ஐம்பது ரூபாய்க் கதிகப்படாமல் தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற பிரதிபலனை அவர்களில் ஒவ்வொருவனுக்கும் கொடுக்கும்படி அவ்விதமாகவே தீர்மானிக்கலாம்.

(3) இந்தப் பிரிவின்படி தீர்மானிக்கப்பட்ட சகல பிரதிபலனையும் அபராதத்தைப்போல வசூல் செய்யலாம்: அதை அப்படி வசூல் செய்யக்கூடாத பட்சத்தில், காவலில் வைக்கும்படி விதிக்கப்படுகிற காலத்திற்குள் அந்தத் தொகை செலுத்தப்படாவிட்டால் அதைச்செலுத்தவேண்டிய நபரை முப்பதுநாளைக்கு மேற்படாமல் மாஜிஸ்ட்ரேட் உத்தரவு பண்ணுகிறகாலத்திற்கு வெறுங்காவலில் வைக்கும்படி சிட்சை விதிக்கவேண்டும்.

இஷ்டப்பட்ட கோர்ட்டுகளுடைய நிகார்யங்களைப் பார்

554. (1) போர்ட் உல்லியத்திலிருக்கும் ஹைகோர்ட்டார்-ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல்வர்களுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டும், ராயல் சார்ட்டரினால் ஸ்தாபிக்கப்பட்ட

வையிடுவதைக் குறித்து விதிகள்செய்யச் சார்ட்டர்பெற்ற ஹைகோர்ட்டுகளுக்கு அதிகாரம்.

வேறே யாதொரு ஹைக்கோர்ட்டார் - பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டும், கீழ்க்கோர்ட்டுகளுடைய ரிகார்டுகளைப் பார்வையிடுவதைக்குறித்து அப்போதைக்கப்போது விதிகள் செய்யலாம்.

வேறே விஷயங்களின்பொருட்டு விதிகள்செய்ய மற்ற ஹைகோர்ட்டுகளுக்கு அதிகாரம்.

(2) ராயல் சார்ட்டரினால் ஸ்தாபிக்கப்பட்டிராத பிரதி ஹைக்கோர்ட்டாரும் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியை முன்னதாகப்பெற்றுக்கொண்டு அப்போதைக்கப்போது :—

(a) தங்களுக்கு கீழ்ப்பட்ட எல்லா க்ரிமினல் கோர்ட்டுகளிலும் வைத்திருக்கவேண்டிய சகல புஸ்தகங்களையும் பதிவுகளையும் கணக்குகளையும் வைப்பதைக்குறித்தும், அப்படிப்பட்ட கோர்ட்டுகளால் தயார்செய்து அனுப்பப்படவேண்டிய ஏதாவது ரிட்டரன்கள் அல்லது ஸ்டேட்மெண்டுகளைத் தயார்செய்து அனுப்புவதைக்குறித்தும் விதிகள் செய்யலாம் ;

(b) மேற்படி கோர்ட்டுகளில் நடத்தப்படுகிற எந்தெந்த நடவடிக்கைக்கு நமூனு ஏற்படுத்தவேண்டியதென்று தங்களுக்குத் தோற்றுகிறதோ அந்தப் பிரதி நடவடிக்கையைக் குறித்தும் நமூனுக்கள் ஏற்படுத்தலாம்.

(c) தங்களுடைய ஆசாரத்தையும் நடவடிக்கைகளையும், தங்களுக்குக் கீழ்ப்பட்ட சகல க்ரிமினல் கோர்ட்டாருடைய ஆசாரத்தையும் நடவடிக்கைகளையும் கிரமப்படுத்துவதற்காக விதிகள் செய்யலாம் ; மேலும்,

(d) அபராதங்களை வசூல்செய்வதற்காக இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட வாரன்டுகளை நிறைவேற்றுவதை ஒழுங்கு பண்ணுவதைக்குறித்து விதிகள் செய்யலாம்.

ஆனுல், இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட விதிகளும் ஏற்படுத்தப்பட்ட நமூனுக்களும் இந்தச் சட்டத்துக்காவது அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற வேறே யாதொரு சட்டத்துக்காவது ஒவ்வாமையாயிருக்கக்கூடாது.

(3) இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட சகல விதிகளையும் பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் பிரசுரஞ் செய்யவேண்டும்.

555. 553-வது பிரிவின்படிக்கும், 1915-ம்ஸூலத்திய இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டின் 107-வது பிரிவின்படிக்கும் கொடுக்கப்பட்ட அதிகாரத்துக்குட்பட்டு ஐந்தாவது ஷெட்யூலிலே. ஏற்படுத்தியிருக்கிற நமூனுக்களை ஒவ்வொரு விஷயத்தைப்பற்றின சங்கதிகளுக்கும் வேண்டியிருக்கிற மாறுதலுடனே அவைகளில் சொல்லியிருக்கிற அந்தந்தக் காரியங்களுக்கு உபயோகப்படுத்தலாம்; அவைகள் அப்படி உபயோகிக்கப்படுமானுல் போதுமானவைகளாயிருக்கும்.

நமூனுக்கள்.

556. யாதொரு ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது-தம் கோர்ட்டிலிருந்து எந்தக் கோர்ட்டுக்கு அப்பீல்செய்து கொள்ளப்படுகிறதோ அந்தக் கோர்ட்டாருடைய உத்தரவில்லாமல், தாம் கட்சிக்காரராகவாவது தாம் நேராகச் சம்பந்தப்பட்டாவதிருக்கிற யாதொரு கேஸைப் பரிசிலனை செய்யவுங்கூடாது பரிசிலனைக்குக் கம்மிட் பண்ணவுங்கூடாது; மேலும், யாதொரு ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது தாமேசெய்த யாதொருதீர்ப்பின் மேலாகிலும் உத்தரவின் மேலாகிலும் கொண்டுவரப்பட்ட அப்பீலை விசாரணை செய்யக்கூடாது.

ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது நேராகச் சம்பந்தப்படுகிற கேஸ்.

விவரணம்:—யாதொரு ஜட்ஜ் அல்லது மாஜிஸ்ட்ரேட்டானவர் மியுனிஸிபல் கம்மிஷனராயிருக்கிறுரென்ற ஹோதாவினுலேயேயாவது, ஒரு கேஸை ஸர்க்கார் ஹோதாவிலே மற்றப்படி சம்மந்தப்பட்டிருக்கிற ஹோதாவினுலேயாவது, குற்றம் எவ்விடத்தில் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறதோ அந்த இடத்தையாகிலும், கேஸுக்கு முக்கியமான வேறே யாதொரு சங்கதி அவ்விடத்தில் நடந்ததாகச் சொல்லப்படுகிறதோ அப்படிப்பட்ட வேறே யாதொரு இடத்தையாகிலும் அவர் பார்த்து கேஸின் சம்பந்தமாக விசாரணை நடத்தினுர்என்கிற ஹோதாவினுலேயேயாவது, இந்தப்பிரிவின் தாற்பரியப்படி அந்த கேஸில் கட்சிக்காரராகவோ அல்லது நேராகச் சம்மந்தப்பட்டவராகவோ இருக்கிறுரென்று எண்ணக்கூடாது.

திருஷ்டாந்தம்.

ஏ-என்பவர் தமக்குத் தெரிவிக்கப்பட்ட சங்கதியை யோசித்துக் கலெக்டர் ஹோதாவிலே, காயர் நிர்வையைப்பற்றிய சட்டங்களுக்கு விரோதமாக நடந்ததற்காக பி-என்பவன்மேல் பிராது கொண்டுபோகும்படி உத்தரவு செய்கிறுர். ஏ-என்பவர் மாஜிஸ்ட்ரேட்டாக இந்த கேஸைப் பரிசிலனை செய்யத் தக்கவராகார்.

அப்பியசிக்கிறப் ளீடர் சில கோர்ட்டுகளில் மாஜிஸ்ட்ரேட்டாக உட்காரக்கூடாது.

557. ஒரு ராஜதானிப் பட்டணம் அல்லது டிஸ்ட்ரிக்டில் யாதொரு மாஜிஸ்ட்ரேட்டின் கோர்ட்டிலே அப்பியாசம் செய்கிற எந்த ப்ளீடரும் 'அந்த கோர்ட்டிலாவது, அந்த கோர்ட்டாருடைய அதிகார வரம்பிற்குட்பட்ட யாதொரு கோர்ட்டிலாவது மாஜிஸ்ட்ரேட்டாக உட்காரக்கூடாது.

கோர்ட்டுகளில்வழங்கவேண்டிய பாஷையைத் தீர்மானிக்க அதிகாரம்.

558. பிரதேச கவர்ன்மெண்டார்-தங்கள் துரைத்தனஞ் செய்கிற ராஜ்ஜியத்துக்குள், ராயல் சார்ட்டரினால் ஸ்தாபிக்கப்பட்ட ஹைகோர்ட்டுகள் தவிர மற்ற பிரதி கோர்ட்டிலும் இன்னபாஷையானது இந்தச் சட்டத்திலுள்ள காரியங்களின்பொருட்டு வழங்கவேண்டிய பாஷையாக எண்ணப்பட வேண்டுமென்று தீர்மானிக்கலாம்.

ஜட்ஜுகள், மாஜிஸ்ட்ரேட்டுகள், ஆகிய இவர்களுடைய அதிகாரங்களை அவர்களுக்குப் பின் அந்த உத்தியோகத்துக்கு வருகிறவர்கள் செலுத்துவதற்காக நிபந்தனை.

559. (1) இந்தக்கோடின் மற்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு ஜட்ஜ் அல்லது மாஜிஸ்ட்ரேட்டுக்குரிய அதிகாரங்களையும் அலுவல்களையும், அவருக்குப்பின் அந்த உத்தியோகத்துக்கு வருகிறவர் செலுத்தலாம் அல்லது செய்யலாம்.

(2) யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்குப்பின் அந்த உத்தியோகத்துக்கு வருகிறவர் எவரென்பதைப்பற்றி யாதொரு சந்தேகம் ஏற்பட்டால் யாதொரு ராஜதானிப்பட்டணத்திலே பிரதான ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டும் அந்தப் பட்டணங்களுக்கு வெளியே டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டும்-இந்தக்கோடின் காரியங்களுக்காகவாவது அதன்படி நடத்தப்படும் யாதொரு நடவடிக்கையின் அல்லது செய்யப்படும் யாதொரு உத்தரவின் காரியங்களுக்காகவாவது எந்த மாஜிஸ்ட்ரேட் அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்குப்பின் உத்தியோகத்துக்கு வருகிறவராக எண்ணப்படுவாரென்று எழுத்துமூலமான உத்தரவைக்கொண்டு நிச்சயிக்க வேண்டும்.

(3) யாதொரு அடிஷனல் அல்லது அஸிஸ்டண்ட் ஸெஷன் ஜட்ஜுக்குப்பின் அந்த உத்தியோகத்துக்கு வருகிறவர் எவரென்ப

தைப்பற்றி யாதொரு சந்தேகம் ஏற்பட்டால், ஸெஷன் ஜட்ஜானவர் இந்தக் கோடின் காரியங்களுக்காகவாவது அதன்படி நடத்தப்படும் யாதொரு நடவடிக்கையின் அல்லது செய்யப்படும் யாதொரு உத்தர வின் காரியங்களுக்காகவாவது எந்த ஜட்ஜ் அப்படிப்பட்ட அடிஷனல் அல்லது அஸிஸ்டன்ட் ஸெஷன் ஜட்ஜுக்குப்பின் உத்தியோகத்துக்கு வருகிறவராக எண்ணப்படுவாரென்று எழுத்துமூலமான உத்தரவைக் கொண்டு நிச்சயிக்கவேண்டும்.

விற்பனையில் சம்பந்தப்பட்டிருக்கிற உத்தியோகஸ்தர்கள் சொத்தை விலைக்கு வாங்கவாவது விலைகேட்கவாவது கூடாதென்பது.

560. இந்த கோடின்படி யாதொரு சொத்தை விற்பனைசெய்கிற விஷயமாய் யாதொரு அலுவலை நிறைவேற்றவேண்டியிருக்கிற எந்த ஸர்க்கார் உத்தியோகஸ்தனாவது அந்த சொத்தை விலைக்கு வாங்கவுங்கூடாது. ஏலத்தில் விலைகேட்கவுங்கூடாது.

கணவன் துராக்கிரதமான புணர்ச்சி செய்வதென்னும் குற்றத்தைக் குறித்த விசேஷ நிபந்தனைகள்.

561. (1) இந்த சட்டத்தில் என்னசொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதான ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் அல்லது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் தவிர வேறே எந்த மாஜிஸ்ட்ரேட்டும்—

(a) ஒருவன் தன்னுடைய மனைவியோடு சம்போகம் செய்திருந்தால், துராக்கிரதமான புணர்ச்சி என்னும் குற்றத்தை விசாரணை செய்யவாவது,

(b) அந்த குற்றத்திற்காக அவனைப் பரிசீலனைக்குக் கமிட் பண்ணவாவது,

கூடாது.

(2) மேலும், இந்த சட்டத்தில் என்னசொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, (1) குறிப்பிட்ட உட்பிரிவில் உதகரிக்கப்படுகிற குற்றத்தைக்குறித்துப் போலீஸ் உத்தியோகஸ்தர் விசாரணை செய்யவேண்டுமென்று உத்தரவுசெய்வது அவசியமென்பதாகப் பிரதான ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டாவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது எண்ணுவாராகில், அந்த விசாரணையை நடத்தவோ அல்லது அதில் சம்பந்தப்பட்டிருக்கவோ போலீஸ் இன்ஸ்பெக்டருடைய

அந்தஸ்துக்குக் குறைந்த அந்தஸ்துள்ள எந்த போலீஸ் உத்தியோகஸ்தரையும் அமர்த்திக்கொள்வது கூடாது.

561-A. இந்தக் கோடின்படிக்கான யாதொரு உத்தரவை அமுலுக்குக் கொண்டுவருவதற்காகவாவது எந்தக் கோர்ட்டாரின் ப்ராஸெஸ் என்னும் கட்டளையையாகிலும் துர்உபயோகப்படுத்தாமல் தடுப்பதற்காகவாவது நியாயம் தவறுமலிருப்பதற்காகவாவது அவசியமாயிருக்கக்கூடிய உத்தரவுகள்செய்ய ஹைகோர்ட்டாருக்கு சகஜமாயுள்ள அதிகாரத்துக்கு இந்தக்கோடிலுள்ளதெதனுலும் வரையறை ஏற்படுவதாகவோ பாதமுண்டாவதாகவோ எண்ணக்கூடாது.

ஹைகோர்ட்டாருக்கு சகஜமாயுள்ள அதிகாரங்களுக்கு பாதகமில்லையென்பது.

முதல் குற்றவாளிகள்.

562. (1) இருபத்தோரு வயதிற்குக் குறைந்திராத யாதொரு நபர் ஏழுவருஷத்துக்கு மேற்படாமல் காவல் தண்டனை விதிக்கத்தக்க யாதொரு குற்றத்தையாவது, இருபத்தோரு வயதிற்குட்பட்டிருக்கிற யாதொரு நபராவது ஸ்திரீயாவது, மரணதண்டனையாவது ஆயுள்பரியந்தம் தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனையல்லாத வேறே தண்டனை விதிக்கத்தக்க யாதொரு குற்றத்தையாவது செய்து குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருந்து, அவன்மேல் முந்திய குற்றஸ்தாபனை எதுவும் ருஜுவாகாமலிருந்தால், அக்குற்றவாளியின் வயதையும் யோக்கியதையையும் அல்லது முந்திய நடத்தையையும், என்ன சந்தர்ப்பங்களில் அந்தக்குற்றம்செய்யப்பட்டதோ அந்த சந்தர்ப்பங்களையும் யோசிக்கையிலே, அவன் எதற்கு முன்பாக குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுகிருனே அந்தக் கோர்ட்டாருக்கு அவன் நன்னடக்கை யுள்ளவனுயிருக்கிருனென்று பார்க்கும்பொருட்டு, அவனை விடுதலைசெய்வது யுக்தமென்று தோற்றுகிற பட்சத்திலே, அந்தக் கோர்ட்டார் அவனுக்கு உடனே யாதொரு சிக்ஷைவிதிப்பதற்குப் பர்த்தியாக, (மூன்றுவருஷத்துக்கு மேற்படாமல்) அந்தக்கோர்ட்டார் கட்டளையிடுகிற காலத்திலே, அழைக்கப்படும்போது அவன் வந்து

குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் சில நேரஸ்தர்களுக்கு சிக்ஷை விதிப்பதற்கு பர்த்தியாக நன்னடக்கையைச் சோதிக்கும் பொருட்டு அவர்களை விடுதலைசெய்ய கோர்ட்டாருக்குள்ள அதிகாரம்.

ஹாஜராகி சிக்ஷையை ஏற்றுக்கொள்வதாகவும் இதற்கு மத்தியிலே அமரிக்கையாயிருந்து நல்ல நடத்தையுள்ளவனு யிருப்பதாகவும் ஜாமீன் தாரர்கள் சகிதமாகவாவது அவர்கள் இல்லாமலாவது அவன் முச்சிலிக்கா எழுதிக்கொடுப்பதன்மேல் அவனை விடுதலை செய்யவேண்டுமென்று கட்டளையிடலாம்.

ஆனுல், யாதொரு முதல் குற்றவாளி இது விஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டாரால் இதற்கென்றே பிரத்தியேகமாய் அதிகாரம் கொடுக்கப்பெறுத இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அல்லது மூன்றுவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டினுல் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருந்து, இந்தப்பிரிவினுல் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைச் செலுத்தவேண்டுமென்று அந்த மாஜிஸ்ட்ரேட் அபிப்பிராயப்படும்பட்சத்திலே, அவர் அந்தப்படி தம்முடைய அபிப்பிராயத்தை எழுதி யாதொரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்காவது ஸப்-டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது நடவடிக்கைகளை அனுப்பவேண்டும்; அந்தப்படி அனுப்பும்போது குற்றஞ்சாட்டப்பட்டவனையும் அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் அனுப்பவேண்டும், அல்லது அவருக்கு முன்னே அவன் ஹாஜராவதாக அவனிடத்தில் ஜாமீன்வாங்கவேண்டும்; அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் 380-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடி அந்தக் கேஸைப் பைசல்செய்யவேண்டும்.

குற்றவாளியென்று தீர்மானம் செய்வதும் எச்சரிக்கைசெய்துவிடுதலை செய்வதும்.

(1-a) யாதொரு நபர் திருடுவது, கட்டிடத்தில் திருடுவது, அயோக்கியத்தனமான துர்வினியோகம், மோசம் அல்லது இந்தியன் பீனல் கோடின்படி இரண்டுவருஷத்துக்கு மேற்படாமல் காவல் தண்டனை விதிக்கத்தக்க வேறே யாதொரு குற்றஞ்செய்தானென்று தீர்மானிக்கப்படும் யாதொரு விஷயத்திலே, அவன்மேல் முந்திய குற்றஸ்தாபனை எதுவும் ருஜுவாகாவிட்டால், அவன் அந்தக்கோர்ட்டாருக்குமுன் அந்தப்படி குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுகிறபோது அந்தக் கோர்ட்டார்-குற்றவாளியின் வயதையும் யோக்கியதையையும் முந்திய நடத்தையையும் தேகத்தின் அல்லது மனத்தின் ஸ்திதியையும், குற்றத்தின் அற்பத்தன்மையையும் அல்லது குற்றம்செய்யப்பட்ட சந்தர்ப்பங்களின் மன்னிக்கத்தக்க இயல்பையும் உத்தேசித்து அவனுக்கு யாதொரு தண்டனை விதிப்பதற்கு பார்த்தியாக தக்கபடி எச்சரிக்கைசெய்து அவனை விடுதலை செய்யலாம்.

(2) யாதொரு அப்பீல் கோர்ட்டாராவது ஹைக்கோர்ட்டார் தங்களுக்குள்ள புனர் விசாரணை அதிகாரங்களைச் செலுத்துகையிலே அந்த கோர்ட்டாராவது இந்தப் பிரிவின்படி உத்தரவுசெய்யலாம்.

(3) யாதொரு குற்றவாளியின் விஷயமாய் இந்தப் பிரிவின்படி உத்தரவு செய்யப்பட்டிருந்தால், ஹைக்கோர்ட்டார்-தங்களுக்கு அப்பீல் செய்துகொள்ளுவதற்கான பாத்தியதை இருக்கும்போது அப்பீலின்மேலாகிலும் தங்களுடைய புனர் விசாரணை அதிகாரங்களைச் செலுத்துகையிலாகிலும், அந்த உத்தரவை ரத்துசெய்து அதற்கு பர்த்தியாக சட்டப்படி அந்தக் குற்றவாளிக்கு சிக்ஷை விதிக்கலாம்.

ஆனால், இந்த உட்பிரிவின்படி ஹைக்கோர்ட்டார் - எவர்களால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டதோ அந்தக் கோர்ட்டாரால் விதிக்கப்பட்டிருக்கக்கூடிய தண்டனையைக்காட்டிலும் அதிக தண்டனை விதிக்கக்கூடாது.

(4) இந்தப் பிரிவிற்கண்ட நிபந்தனைகளை அனுசரித்து கொடுக்கப்படும் ஜாமீன்தாரர்களுக்கெல்லாம் 122, 126-a, 406-a-வது பிரிவின் நிபந்தனைகள் கூடுமானமட்டிலே பிரயோகப்படும்.

தன் முச்சிலிக்காவின் ஷரத்துகளின்படி நடக்கத்தவறுகிற குற்றவாளியின் விஷயத்தில் இன்னதுசெய்வது.

563. (1) நேரஸ்தன் தன்னுடைய முச்சிலிக்காவின் திட்டங்களிலெதன்படியாவது நடக்கத் தவறினனென்று நேரஸ்தனைக் குற்றவாளியென்று தீர்மானித்த கோர்ட்டாருக்காவது, அவனுடைய பிரதம குற்றத்திற்காக அவன் விஷயத்தில் பிரவர்த்தித்திருக்கக்கூடிய கோர்ட்டாருக்காவது திருப்திகரமாகத் தோற்றுமாகில் அவர்கள் அவனைப் பிடிப்பதற்காக வாரன்ட் பிறப்பிக்கலாம்.

(2) அப்படிப்பட்ட யாதொரு வாரன்டின்மேல் பிடிபட்ட நேரஸ்தனை வாரன்ட் பிறப்பித்த கோர்ட்டாருக்குமுன் உடனே கொண்டு போகவேண்டும்; அந்தக் கோர்ட்டார் அந்தகேஸ் விசாரணையாகிறவரையிலே அவனைக் காவலில் வைத்திருக்கும்படி அனுப்பலாம் அல்லது சிட்சையின்பொருட்டு அவன் ஆஜராவதாக போதுமான ஜாமீன் கொடுக்கும்பட்சத்தில் அவனை ஜாமீன்மேல் விடலாம். அந்தக் கோர்ட்டார் கேஸை விசாரணைசெய்த பிறகு சிட்சை விதிக்கலாம்.

564 (1) 562-வது பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நேரஸ்தனை விடுதலைசெய்ய வேண்டுமென்று கட்டளையிடுவதற்கு முன்னே கோர்ட்டார் - மேற்படி திட்டங்களை அனுசரிப்பதாகக் குறிச்சப்பட்டிருக்கும் காலத்திலே, எந்த இடத்திற்காக அந்தக் கோர்ட்டார் பிரவர்த்திக்கிறார்களோ அந்த இடத்திலாகிலும் நேரஸ்தன் வசிக்கக்கூடிய இடத்திலாகிலும் அந்த நேரஸ்தனுக்காவது அவனுடைய ஜாமீன்தாரன் எவனாவதிருந்தால் அவனுக்காவது கிரமமான தொழில் அல்லது நிலையான வாசஸ்தலம் இருக்கிறதாவென்று திருப்தி செய்து கொள்ளவேண்டும்.

நேரஸ்தனுடைய இருப்பிடத்தைக் குறித்த திட்டங்கள்.

(3) சீர்திருத்தும்சாலைகளைக்குறித்த 1897-ஏழாவது ஆக்டின் 31-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்கு இந்தப் பிரிவிலாவது 562, 563-வது பிரிவுகளிலாவதுள்ளதெதனாலும் பாதகமுண்டாகமாட்டாது.

முன்னமே குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்ட நேரஸ்தர்கள்.

முன்னமே குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட நேரஸ்தனுடைய மேல் விலாசத்தைத் தெரிவிக்கஉத்தரவு.

565. (1) யாதொரு நபர்—

(a) இந்தியன் பினல் கோட் 215, 489A, 489B, 489C, அல்லது 489D குறிப்பிட்ட பிரிவின்படி தண்டனை விதிக்கத் தக்க யாதொரு குற்றத்தைச் செய்தானென்ருவது, ஷை கோட் 12-வது அல்லது 17-வது அத்தியாயத்தின்படி மூன்று வருஷகாலத்திற்காகிலும அதற்குமேற்பட்ட காலத்திற்காகிலும் இருவகைக் காவல் தண்டனையில் எதுவாவது விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றத்தைச் செய்தானென்ருவது ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள யாதொரு கோர்ட்டாரால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருந்து, அல்லது

(b) ப்ரிடிஷ் இந்தியாவில் செய்யப்பட்டிருந்தால் இந்தியன் பினல்கோடின் மேலேகண்ட பிரிவுகளில் அல்லது அத்தியாயங்களில் ஏதன்படிக்காவது அம்மாதிரியான காலஅளவுக்கு அம்மாதிரியான தண்டனை விதிக்கப்படக்கூடியதா

யிருக்கும் யாதொரு குற்றத்தைச்செய்தானென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜெனரலவர்களுடைய அல்லது யாதொரு பிரதேச கவர்ன்மெண்டாருடைய பொதுவான அல்லது பிரத்தியேகமான அதிகாரத்தின்படி பிரவர்த்திக்கும் இந்தியாவிலுள்ள யாதொரு சுதேச அரசரைச் சேர்ந்த அல்லது சமஸ்தானத்தைச் சேர்ந்த பிரதேசங்களிலிருக்கும் யாதொரு கோர்ட்டாராலாகிலும் நியாய சபையாராலாகிலும் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருந்து,

அதே இனத்தைச்சேர்ந்த அல்லது மேலேகண்ட பிரிவுகளிலாயினும் அத்தியாயங்களிலாயினும் எதன்படிக்காவது மூன்று வருஷ காலத்திற்காகிலும் அதற்கு மேற்பட்ட காலத்திற்காகிலும் காவல் தண்டனை விதிக்கத்தக்க யாதொரு குற்றம் செய்தானென்று ஹைக்கோர்ட்டாராலாவது, ஸெஷன் கோர்ட்டாராலாவது ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாலாவது, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாலாவது, ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாலாவது, யாதொரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாலாவது, மறுபடியும் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டால், அந்தக் கோர்ட்டாராவது மாஜிஸ்ட்ரேட்டாவது-அவனுக்கு தீபாந்திர சிக்ஷையாகிலும் காவல் தண்டனையாகிலும் விதிக்கும்போது, அவன் விடுதலையானபிறகு அவனுடைய இருப்பிடத்தையும் அவன் இருப்பிடத்தை மாற்றினால் அதையும் அல்லது அவன் இருப்பிடத்தில் இராமற்போனால் அதையும், இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிற விதமாக அந்தத் தண்டனையின் கால அளவு கழியும் தேதிமுதல் ஐந்து வருஷத்திற்குமேற்படாத காலம் வரையிலே தெரிவித்துவரவேண்டுமென்றுங்கூட, தங்களுக்குத் தகுதியாகத் தோற்றினால், உத்திரவு செய்யலாம்.

(2) அப்பீல் செய்துகொள்ளப்படுவதன்மேலாவது மற்றப்படியாவது அக்குற்றஸ்தாபனை ரத்து செய்யப்படுமாகில், ஷை உத்திரவு செல்லாது.

(3) பிரதேச கவர்ன்மெண்டார் - விடுதலையான குற்றவாளிகள் இருப்பிடத்தையாவது இருப்பிடத்தை மாற்றுவதையாவது இருப்பிடத்தில் இராததையாவது தெரிவிப்பதற்குச் சம்பந்தமாக இந்தப் பிரிவிலுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும்பொருட்டு விதிகள் ஏற்படுத்தலாம்.

(4) இந்தப் பிரிவின்படிக்கான உத்திரவை, யாதொரு அப்பீல் கோர்ட்டாரும் அல்லது ஹைக்கோர்ட்டார் தங்களுடைய புனர் விசாரணை அதிகாரங்களைச் செலுத்துகையிலே அந்த ஹைக்கோர்ட்டாருங் கூட செய்யலாம்.

இதனால் உமக்கு அதிகாரங்கொடுத்து கட்டளையிடுகிறதென்னவென்றால்,— (இன்ன) டிஸ்ட்ரிக்டுக்குள் நீர் கண்டுபிடிக்கும்படியான ரூபாய் பெறுமானமுள்ள மேற்படி (இன்னானுடைய) அசையும் பொருளைக் கைப்பற்றி ஜப்திசெய்து, இந்தக் கோர்ட்டாரால் இன்னும் உத்தரவு செய்யப்படுகிற வரையில் அந்தப்பொருளை அப்படியே ஜப்தியில் வைத்திருக்கவும் இந்த வாரண்ட் இன்னபடி நிறைவேற்றப்பட்டதென்று ஸெர்டிபைசெய்து எழுதுகிற எண்டார்ஸ்மெண்ட் சகிதமாய் இதை ரிட்டரன் பண்ணவும் வேண்டும்.

19 ௵ ௴ ௳

(முத்திரை) (கையொப்பம்.)

குற்றஞ்சாட்டப்பட்டவனை ஹாஜராகும்படி நிர்ப்பந்திப்பதற்கு ஜப்தி உத்தரவு.—(88-வது பிரிவைப்பார்க்க.)

(வாரண்டை நிறைவேற்றவேண்டிய நபர் அல்லது நபர்களின் பெயரையும் உத்தியோக முதலிய விவரத்தையுங்கண்டு - இன்னாருக்கு)

(பெயர் இருப்பிடம் முதலிய விவரங்கண்டு - இன்னான்) இந்தியன் பினல் கோட் -வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்கதாகிய குற்றஞ் செய்திருக்கிறானென்று (அல்லது செய்ததாக அனுமானிக்கப்பட்டிருக்கிறானென்று) எனக்கு முன்பாகப் பிராது செய்யப்பட்டிருக்கிறபடியாலும், அவனைப் பிடிப்பதற்காக, அதன்மேல் பிறப்பிக்கப்பட்ட வாரண்டுக்கு மேற்படி (இன்னான்) அகப்படவில்லையென்று ரிட்டரணானபடியாலும், மேற்படி (இன்னான்) மறைந்துபோயிருக்கிறானென்று (அல்லது மேற்படி வாரண்டைச் சேர்ப்பிக்கக் கூடாதபடி ஒளித்துக்கொண்டிருக்கிறானென்று (எனக்குத் திருப்தி

யாகும்படி தெரிவிக்கப்பட்டிருக்கிறபடியாலும், அதற்குமேல் மேற்படி (இன்னான்) நாளுக்குள் மேற்படி பிராதுக்கு உத்தரவுசொல்ல ஹாஜராகவேண்டுமென்று இஸ்தியார் கிரமமாய்ப் பிறப்பித்துப் பிரசித்தஞ் செய்யப்பட்டிருக்கிறபடியாலும், அல்லது கிரமமாய்ப் பிறப்பித்துப் பிரசித்தஞ்செய்யப்பட்டு வருகிறபடியாலும், கவர்ன்மெண்டுக்குக் கிஸ்தி செலுத்துகிற நிலமல்லாத வேறே (இன்ன) சொத்து (இன்ன) டிஸ்ட்ரிக்ட்டிலிருக்கிற (இன்ன) கிராமத்தில் (அல்லது பட்டணத்தில்) மேற்படி (இன்னானுக்கு) சொந்தமாயிருக்கிறபடியாலும், அதை ஜப்திபண்ணும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிறபடியாலும்:

இதனால் உமக்கு (அல்லது உங்களுக்கு) உத்தரவு செய்யப்படுகிறதென்னவென்றால்,—மேற்படி சொத்தைக் கைப்பற்றி ஜப்திசெய்து, இந்தக் கோர்ட்டாரால் இன்னும் உத்தரவு செய்யப்படுகிற வரையில் அதை அப்படியே ஜப்தியில் வைத்திருக்கவும், இந்தவாரன்ட் இன்னபடி நிறைவேற்றப்பட்டதென்று ஸெர்ட்டிபைசெய்து எழுதுகிற எண்டார்ஸ்மெண்ட் சகிதமாய் இதை ரிட்டரன்பண்ணவும்வேண்டும்.

19 ௵ ௴ ௳

முத்திரை. கையொப்பம்.

கலெக்டராக டேப்யுட்டி கம்மிஷனர் ஜப்தி பண்ணுவதற்கு அதிகாரங்கோடுக்கிற உத்தரவு.

(88-வது பிரிவைப்பார்க்க.)

(இன்ன) டிஸ்ட்ரிக்ட் டெப்யுட்டி கம்மிஷனர் அவர்களுக்கு.

(பெயர் இருப்பிடம் முதலிய விவரங்கண்டு - இன்னான்) இந்தியன் பினல் கோட் -வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்கதாகிய குற்றஞ்செய்திருக்கிறானென்று (அல்லது செய்ததாக அனுமானிக்கப்பட்டிருக்கிறானென்று) எனக்கு முன்பாகப் பிராது செய்யப்பட்டிருக்கிறபடியாலும், ஆளைப் பிடிப்பதற்காக அதன்மேல் பிறப்பிக்கப்பட்ட வாரன்டுக்கு மேற்படி (இன்னான்) அகப்படவில்லையென்று ரிட்டரனானபடியாலும் மேற்படி (இன்னான்) மறைந்துபோயிருக்கிறானென்று (அல்லது மேற்படி வாரண்டைச் சேர்ப்பிக்கக் கூடாதபடி ஒளித்துக்கொண்டிருக்கிறானென்று) எனக்குத் திருப்தியாகும்படி தெரிவிக்கப்பட்டிருக்கிறபடியாலும், மேற்படி (இன்னான்) நாளுக்குள் மேற்படி பிராதுக்கு உத்தரவுசொல்ல ஹாஜராக வேண்டுமென்று இஸ்தியார் கிரமமாய்ப் பிறப்பித்துப் பிரசித்தஞ்செய்யப்பட்டிருக்கிறபடியாலும் அல்லது கிரமமாய்ப் பிறப்பித்துப் பிரசித்தஞ்செய்யப்பட்டு வருகிறபடியாலும், (இன்ன) கிராமத்தில் (அல்லது பட்டணத்தில்) கவர்ன்மெண்டுக்குக் கிஸ்திசெலுத்துகிற ஒரு நிலம் மேற்படி (இன்னானுக்கு) சொந்தமாயிருக்கிறபடியாலும்;

மேற்படி நிலத்தை ஜப்திசெய்வித்து, இந்தக் கோர்ட்டாரால் இன்னும் உத்தரவு செய்யப்படுகிறவரையில் அதை அப்படியே ஜப்தியில் வைப்பித்திருக்கும்படிக்கும், இந்த உத்தரவை அனுசரித்து நீர் செய்திருக்கும்படியானதை ஆலசியமில்லாமல் சேர்டிபைசெய்து தெரிவிக்கும்படிக்கும், இதனால் உம்மைக் கேட்டுக் கொள்ளுகிறது; இதனால் உமக்கு அதிகாரமும் கொடுக்கப்படுகிறது.

19 வருஷம் மீ உ

(முத்திரை) (கையொப்பம்.)

7—சாட்சியைக் கொண்டுவரும்படி முதலில் வாரண்ட்.—(90-வது பிரிவைப்பார்க்க.)

(வாரண்டை நிறைவேற்றவேண்டிய போலிஸ் உத்தியோகஸ்தன் அல்லது வேறே நபர் அல்லது நபர்களின் பெயரையும் உத்தியோக விவரத்தையும் கண்டு - இன்னாருக்கு.)

(இன்ன இடத்து இன்னான்) (குற்றத்தைச் சுருக்கமாய் எழுதி இன்ன) குற்றஞ் செய்திருக்கிறானென்று (அல்லது செய்ததாக அனுமானிக்கப்பட்டிருக்கிறானென்று) எனக்கு முன்பாகப் பிராது செய்யப்பட்டிருக்கிறபடியாலும், (சாட்சியினுடைய பெயர் முதலிய விவரங்கண்டு - இன்னான்) மேற்படி பிராதைக் குறித்துச் சாட்சியஞ் சொல்லக்கூடும் போலிருக்கிறதென்று தெரியவருகிறபடியாலும், அவனை ஹாஜராகும்படி நிர்ப்பந்தித்தாலொழிய மேற்படி பிராதை விசாரிக்குங்காலத்தில் அவன் சாட்சியாக ஹாஜராகமாட்டானென்று நம்புவதற்கு எனக்குப் போதுமான தகுந்த காரணமிருக்கிறபடியாலும்,

இதனால் உனக்கு (அல்லது உங்களுக்கு) கட்டளையிடுகிற தென்னவென்றால்,—நீ (அல்லது நீங்கள்) மேற்படி (இன்னானைப்) பிடித்து பிராது பண்ணப்பட்ட குற்றத்தைக்குறித்து விமரிசை செய்யப்படுவதற்கு அவனை இந்தக் கோர்ட்டுக்கு முன்பாக (இன்ன) தேதியில் கொண்டுவரவேண்டும்.

19 வருஷம் மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போடப்பட்டன.

(முத்திரை.) (கையொப்பம்.)

8—குறித்த ஒரு குற்றத்தைக்குறித்துச் சங்கதிதெரிந்த பின்பு சோதனை போடும்படி வாரண்ட்.

(96-வது பிரிவைப்பார்க்க.)

(வாரண்டை நிறைவேற்றவேண்டிய போலிஸ் உத்தியோகஸ்தன் அல்லது வேறே நபர் அல்லது நபர்களின் பெயரையும் உத்தியோக விபரத்தையுங்கண்டு இன்னாருக்கு.)

(குற்றத்தைச் சுருக்கமாயெழுதி - இன்ன) குற்றஞ் செய்யப்பட்டதென்று (அல்லது செய்ததாக அனுமானமுண்டாயிருக்கிறதென்று) எனக்கு முன்பாகச்

சங்கதி தெரிவிக்கப்பட்டிருக்கிறபடியாலும் (அல்லது பிராது செய்யப்பட்டிருக்கிறபடியாலும், மேற்படி குற்றத்தை(அல்லது அனுமானிக்கப்பட்ட குற்றத்தைக்) குறித்து இப்போது செய்துகொண்டிருக்கிற (அல்லது செய்யப்போகிற) விசாரணையின்பொருட்டு, (வேண்டியிருக்கிற பொருளைத் தெளிவாய்க் கண்டு-இன்னதை) கொண்டுவந்து காட்டுவது முக்கியமானதென்று எனக்குக் காணும்படிசெய்யப்பட்டிருக்கிறபடியாலும்,

இதனால் உனக்கு (அல்லது உங்களுக்கு) கட்டளையிடுகிற தென்னவென்றால்—(எதில்மாத்திரம் சோதனை போடவேண்டியதோ அந்த வீடு அல்லது இடத்தையாவது அதன் பாகத்தையாவது விவரமாய்க் கண்டு - இன்னதை) மேற்படி (கண்டெழுதப்பட்ட பொருளாகிய இன்னதிற்கு) சோதனைபோட்டு அது அகப்படுகிற பட்சத்தில் அதை உடனே இந்தக் கோர்ட்டுக்கு முன்பாகக் கொண்டுவரவேண்டும்; மேலும், இந்த வாரண்டின்படி நீ (அல்லது நீங்கள்) செய்திருக்கிறது இன்னதென்று ஸர்ட்டிபைசெய்து எழுதுகிற எண்டார்ஸ்மெண்ட் சகிதமாய், இது நிறைவேற்றப்பட்டவுடனே இதை ரிட்டரன் பண்ணவேண்டும்.

19 ளு மீ உயில் என்கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போடப்பட்டன.

(முத்திரை.) (கையொப்பம்.)

9—(திருட்டுச்சொத்தோ இன்னும் எதுவோ) வைத்துவைக்கப் பட்டிருப்பதாக அனுமானிக்கப்படுகிற இடத்தைச் சோதனை போடும்படி வாரன்ட்.—(98-வது பிரிவைப்பார்க்க.)

(கான்ஸ்டெபில் அந்தஸ்துக்கு மேற்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தனுடைய பெயரையும் விவரத்தையும் கண்டு இன்னானுக்கு.)

(வீடு முதலிய இடத்தை விவரமாய் எழுதி - இன்ன இடமானது) திருட்டுச் சொத்தை வைத்துவைப்பதற்காக (அல்லது விற்பதற்காக) (அல்லது அப்படிப்பட்ட இடம் அந்தப் பிரிவில் கண்டிருக்கிற மற்ற இரண்டு காரியங்களிலெதற்காகவாவது உபயோகிக்கப்பட்டால், அந்தக்காரிய மின்னதென்று அந்தப் பிரிவில் சொல்லியிருக்கிற வார்த்தைகளால் தெரிவித்து - இன்னதிற்காக) உபயோகிக்கப் படுகிறதென்று எனக்குச் சங்கதி தெரிவிக்கப்பட்டு, அதன்மேல் கிரமமாய்ச்செய்த விசாரணையினாலே அது அந்தக் காரியத்திற்காக உபயோகப்படுத்துகிறதென்று நான் நம்புவதற்கு முகாந்தரமிருக்கிறபடியால்,

வேண்டிய சகாயத்தோடு மேற்படி வீட்டுக்குள் (அல்லது வேறே இடத்திற்குள்) நுழையவும், அவசியமானால், அப்படி நுழைவதற்காக நியாயமான பலவந்தஞ்செய்யவும், மேற்படி வீட்டின் (அல்லது வேறே இடத்தின், அல்லது ஒரு பாகத்தை மாத்திரம் சோதனை போடவேண்டியிருந்தால், அந்தப்பாகம் இன்னதென்று தெளிவாய்க்கண்டு - இன்னதின்) ஒவ்வொரு பாகத்தையும் சோதனை போடவும், யாதொரு சொத்தை (அல்லது சங்கதிக்குத்தக்கபடி தஸ்தவேஜுகளை

அல்லது ஸ்டாம்புகளை, அல்லது முத்திரைகளை, அல்லது நாணயங்களை அல்லது சாமானாச சம்பந்தமான பொருள்களை(யும்) [வேண்டியிருந்தால் சேர்க்கவும்—, (சந்தேகித்துக் தக்கபடி) சிருஷ்டனை தஸ்தவேஜுகளை, அல்லது மாறுபாடான ஸ்டாம்புகளை, அல்லது கள்ள முத்திரைகளை, அல்லது கள்ள நாணயங்களைச் செய்வதாக வைத்து வைக்கப்பட்டிருக்கிறதென்று நீ நியாயமாய் நம்பும்படியான எதாவது ஆயுதங்களையும் சாமான்களையும்] கைப்பற்றி ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளவும், மேற்படி வஸ்துக்களில் ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளும்படியான வைகளை உடனே இந்தக் கோர்ட்டுமுன்பாகக் கொண்டுவரவும், இதனால் உனக்கு அதிகாரம் கொடுக்கப்படுகிறது, உத்தரவும் செய்யப்படுகிறது; மேலும், இந்த வாரன்டின்படி நீ செய்திருக்கிறது இன்னதென்று ஸெர்டிபைசெய்து எழுதுகிற என்டார்ஸ்மென்ட் சரியாய் நிறைவேற்றப்பட்டவுடனே இதை ரிட்டர்ன் பண்ணவேண்டும்.

19 ஹ மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போடப்பட்டன.

(முத்திரை.) (கையொப்பம்.)

10—ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்காதிருப்பதாக முச்சிலிக்கா.—(107-வது பிரிவைப்பார்க்க.)

(இன்ன இடத்தில்) வாசஞ்செய்கிற (இன்னாகிய) நான் இவ்வளவு காலத்திற்கு அல்லது(இன்ன) கோர்ட்டில் இப்போது நடந்துகொண்டிருக்கிற(இன்ன) விஷயத்திலே, விசாரணை முடிவாகிறவரையில் ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்காதிருப்பதற்காக முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கும்படி உத்தரவுசெய்யப்பட்டிருக்கிறபடியால், நான் பிணைப்பட்டு எழுதிக்கொடுக்கிற தென்னவென்றால்,—மேற்படி கெடுவுகாலவரையில் அல்லது மேற்படி விசாரணை முடிவாகிறவரையில் ஜனங்களுடைய அமரிக்கையை ஒருவேளை கெடுப்பதற்கு ஹேதுவான யாதொரு காரியத்தைச்செய்யாமலு மிருக்கக்கடவேன்; நான் அப்படியிருக்கத் தவறிப்போனால், இந்தியா சக்கிரவர்த்தியாகிய மகாராஜா அவர்களுக்கு ரூபாய் தண்டமிறுக்கக் கடவேன்.

19 ஹ மீ உ. (கையொப்பம்.)

11—நல்ல நடத்தைக்காக முச்சிலிக்கா.
(108, 109, 110-வது பிரிவுகளைப் பார்க்கவும்.)

(இன்ன இடத்தில்) வாசம்பண்ணுகிற (இன்னாகிய) நான் இவ்வளவு காலத்திற்கு, அல்லது (இன்ன) கோர்ட்டில் இப்போது நடந்துகொண்டிருக்கிற (இன்ன) விஷயத்திலே, விசாரணை முடிவாகிற வரையில் இந்தியா சக்கிரவர்த்தியாகிய மகாராஜா அவர்களுக்கும் மகாராஜா அவர்களுடைய சகல குடிகளுக்

கும் நல்ல நடத்தையுள்ளவனுயிருப்பதற்காக முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிறபடியால், நான் பின்னப்பட்டு எழுதிக்கொடுக்கிறதென்னவென்றால்,—மேற்படி கெடுவு காலவரையில் அல்லது மேற்படி விசாரணை முடிவாகிறவரையில் மஹாராஜா அவர்களுக்கும் மஹாராஜா அவர்களுடைய சகல குடிகளுக்கும் நான் நல்ல நடத்தையுள்ளவனுயிருக்கக்கடவேன் ; அப்படி இருக்கத் தவறிப்போவேனுகில், மஹாராஜா அவர்களுக்கு ரூபாய் தண்டமிறுக்கக் கடவேன்.

19 ஸு மீ உ. (கையொப்பம்.)

(ஜாமீன்தாரர்கள் சகிதமாய் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கவேண்டிய விஷயத்தில், சேர்ப்பதாவது),—மேற்படி (இன்னுன்) மேற்கண்ட கெடுவு காலவரையில் இந்தியா சக்கரவர்த்தியாகிய மஹாராஜா அவர்களுக்கும் மஹாராஜா அவர்களுடைய சகல குடிகளுக்கும் நல்ல நடத்தையுள்ளவனுயிருக்கும்படி அவனுக்காக நாங்கள் ஜாமீன்கொடுக்கிறோம் : அவன் அப்படியிருக்கத் தவறிப்போவானுகில் நாங்கள் மஹாராஜா அவர்களுக்கு ரூபாய் கூட்டாகவும் தனித்தனியாகவும் தண்டமிறுக்கக் கடவோம்.

19 ஸு மீ உ. (கையொப்பம்.)

12—ஜனங்களுடைய அமரிக்கை கெடும்போலிருக்கிறதென்று சங்கதி தெரிவிக்கப்படுவதன்மேல் சம்மன்.

(114-வது பிரிவைப்பார்க்க.)

(இன்ன இடத்து இன்னுனுக்கு)

நம்பிக்கையான சங்கதி தெரிவிக்கப்பட்டதனுலே, (அந்தச் சங்கதியின் ஸாராம்சத்தை எழுதி இன்னபடியென்றும்,) ஜனங்களுடைய அமரிக்கையை நீ கெடுப்பாய்போலிருக்கிறதென்றும், (அல்லது அப்படிச்செய்வதனுலே ஜனங்களுடைய அமரிக்கை ஒருவேளை கெடுமென்றும்) எனக்குத் தோன்றும்படி செய்யப்பட்டபடியால், இதனுல் உனக்கு உத்தரவுசெய்கிறதென்னவென்றால்,—(இவ்வளவு) காலத்திற்கு நீ ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்காதிருக்கும்படி, ரூபாய்க்கு முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கவேண்டுமென்று (ஜாமீன்தாரர்கள் வேண்டியிருந்தால் சேர்ப்பதாவது),-மேலும் உனக்கு ஜாமீனுக (இவ்வளவு) (அல்லது ஒருவனுக்கு மேற்பட்ட ஜாமீன்தாரர்களிருக்கிற விஷயத்தில், ஒவ்வொருவன் இவ்வளவிவ்வளவு) ரூபாய்க்கு ஒரு ஜாமீன்தாரன் (அல்லது இரண்டு ஜாமீன்தாரர்கள்) முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கவேண்டியதென்று ஏன் உனக்குக் கட்டளையிடக்கூடாதோ அதற்குக் காரணம் தெரிவிப்பதற்கு

மாஜிஸ்ட்ரேட்டினுடைய ஆபீஸில், 19 ஸு

மீ உ காலை பத்து மணிக்கு நேராய் நீ (அல்லது உனக்காக்க் கிரமமாய் அதிகாரம்பெற்ற எஜெண்ட்) ஹாஜராகவேண்டும்.

19 ஞு மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போடப்பட்டன.

(முத்திரை.) (கையொப்பம்.)

13—ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்காதிருப்பதற்கு ஜாமீன் கொடுக்கத் தவறினால் கம்மிட்மென்ட் வாரன்ட்.

(123-வது பிரிவைப் பார்க்கவும்.)

(இன்ன இடத்து) ஜெயில் ஸுபெரின்டென்டெண்டுக்கு (அல்லது விசாரணைக் கர்த்தனுக்கு.

பெயர் இருப்பிடம் முதலிய விவரங்கண்டு - (இன்னான்) மாதகாலத்திற்கு ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்காதிருப்பதற்காக ஒரு ஜாமீன்தாரன் சகிதமாய் ரூபாய்க்கு முச்சிலிக்கா (அல்லது ஒவ்வொருவன் இவ்வளவிவ்வளவு ரூபாய்க்கு இரண்டு ஜாமீன்தாரர்கள் சகிதமாய் முச்சிலிக்கா) என் எழுதிக்கொடுக்கக்கூடாதோ அதற்குக்காரணம் தெரிவிக்கும் நிமித்தம் மேற்படி (இன்னானுக்கு) அனுப்பப்பட்ட ஸம்மன் பிரகாரம் நேராய் அவன் (அல்லது அவனுக்காக அதிகாரம்பெற்ற எஜெண்ட்) எனக்கு முன்பாக ஞு மீ உயில் ஹாஜரானபடியாலும், (கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்ட ஜாமீன் ஸம்மனில் கண்டதல்லாவிட்டால் அது இன்னதென்று எழுதுக) அப்படிப்பட்ட ஜாமீன்கொடுத்து மேற்படி (இன்னான்) உடன்படவேண்டுமென்று அப்போது உத்தரவு செய்யப்பட்ட படியாலும், அந்த உத்தரவின்படி அவன் நடந்துகொள்ளத் தவறிப்போனபடியாலும்,

மேற்படி ஸுபெரின்டென்டெண்ட் (அல்லது விசாரணைக் கர்த்தன்) ஆகிய உனக்கு இதனால் உத்தரவு செய்கிறதென்னவென்றால்,—இந்த வாரன்ட் சகிதமாய் மேற்படி (இன்னானை) உன்னுடைய காவலில் ஏற்றுக்கொண்டு, மேற்படி (காவலில் வைத்திருக்கவேண்டிய காலமாகிய இவ்வளவு காலத்திற்கு அவனை மேற்படி ஜெயிலில் பத்திரமாய் வைத்திருக்கவேண்டும். ஆனால், அந்தக்காலத்திற்குள் அவனை விடுதலைசெய்யும்படி சட்டப் பிரகாரம் உத்திரவு செய்யப்பட்டால் அப்படி ஜெயிலில் வைத்திருக்கவேண்டியதில்லை. அன்றியும், இந்த வாரன்ட் இன்னபடி நிறைவேற்றப்பட்டதென்று மெய்ட்டிமைசெய்து எழுதப்பட்ட ஸர்ட்டிபிகேட் சகிதமாய் இதை ரிட்டர்ன் பண்ணவேண்டும்.

19 ஞு மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போடப்பட்டன.

(முத்திரை.) (கையொப்பம்.)

14—நல்ல நடத்தையுள்ளவனுயிருப்பதற்கு ஜாமீன்கொடுக்கத் தவறிப்போனல் கமிட்மெண்ட் வாரன்ட்-(123-வது பிரிவைப்பார்க்க.)

(இன்ன இடத்து) ஜெயில் ஸுபரின்டென்டெண்டுக்கு (அல்லது விசாரணைக் கர்த்தனுக்கு.

(பெயர் முதலிய விவரங்கண்டு - இன்னன்) வெளிக்கு ஜீவனோபாயத்திற்குரிய தகுந்தவகை இல்லாதவனய் டிஸ்ரிக்ட்டுக்குள் பதுங்கிக் கொண்டிருப்பதுமல்லாமல், இப்போதும் பதுங்கிக்கொண்டிருக்கிறனென்று (அல்லது அவன் தன்னைக்குறித்துத் திருப்திகரமாய் விவரஞ்சொல்லமாட்டாதவனு யிருக்கிறனென்று) எனக்குத்தோற்றும்படி செய்யப்பட்டிருக்கிறபடியாலும், அல்லது,

(பெயர் முதலிய விவரண்டு இன்னனுடைய) பொதுவான நடத்தையைக் குறித்து எனக்கு முன்பாகச் சாட்சியஞ்சொல்லப்பட்டு ரெகார்ட் செய்திருப்பதில், அவன் வழக்கமாய்க் கொள்ளையடிக்கிறவனென்று (அல்லது சந்தர்ப்பத்துக் கேற்றபடி கன்னமிடுகிறவனென்று அல்லது வேறே எப்படிப்பட்டவனே அதை எழுதி - இப்படிப்பட்டவனென்று) தெரியவருகிறபடியாலும்;

அந்தச் சங்கதியை கண்டிருப்பது மல்லாமல் மேற்படி (இன்னன்) ஒரு ஜாமீன்தாரர் சகிதமாய் (அல்லது சந்தர்ப்பத்துக் கேற்றபடி இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டு ஜாமீன்தாரர்கள் சகிதமாய்) நான் ரூபாய்க்கும், மேற்படி ஜாமீன்தாரர் (அல்லது மேற்படி ஜாமீன்தாரர்களில் ஒவ்வொருவர்) ரூபாய்க்கும் முச்சிலிக்கா எழுதிக்கொடுத்து, (இவ்வளவு) காலத்திற்கு அவன் நல்ல நடத்தையுள்ளவனுயிருப்பதாக அவன் ஜாமீன் கொடுக்கவேண்டுமென்றும் உத்தரவு ரெகார்ட் செய்யப்பட்டிருக்கிற படியாலும், மேற்படி. (இன்னன்) மேற்கண்ட உத்தரவின் பிரகாரம் நடந்துகொள்ளத் தவறிப்போய், அப்படி தவறிப்போனதினலே காவலில்வைக்கும்படியான காலத்திற்குள் மேற்படி. ஜாமீன் கொடுக்கப்படாதபட்சத்தில் அவனை (இவ்வளவு காலத்திற்கு காவலில் வைக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியாலும்;

மேற்படி ஸுபரின்டெண்ட் (அல்லது விசாரணைக்கர்த்தர்) ஆகிய உமக்கு இதனல் அதிகாரம்கொடுத்து உத்தரவுசெய்கிற தென்னவென்றல்,—இந்த வாரன்ட் சகிதமாய் மேற்படி (இன்னனை) உம்முடைய காவலில் வரப்பற்றிக் கொண்டு, மேற்படி (காவலில்வைத்திருக்கவேண்டிய காலமாகிய இவ்வளவுகாலத்துக்கு) அவனை மேற்படி ஜெயிலில் பத்திரமாய் வைத்திருக்கவேண்டும். ஆனல், அந்தக்காலத்திற்குள் அவனைவிடுதலை செய்யும்படி சட்டப்படி உத்திரவு செய்யப்பட்டால் அந்தப்படி ஜெயிலில் வைத்திருக்கவேண்டியதில்லை. அன்றியும், இந்த வாரன்ட் இன்னபடி நிறைவேற்றப்பட்டதென்று ஸேர்ட்டிபைசெய்து எழுதப்படுகிற எண்டார்ஸ்மெண்ட் சகிதமாய் இதை ரிட்டர்ன் பண்ணவேண்டும்.

19 ஹு மீ டயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை.) —— (கையொப்பம்.)

15—ஜாமீன் கொடுக்கத் தவறிப்போனதனாலே காவலில்வைக்கப் பட்ட நபரை விடுதலைசெய்யும்படி வாரண்ட்.

(123, 124-வது பிரிவைப் பார்க்கவும்.)

(கைதியினுடைய பெயர் முதலிய விவரங்கண்டு-இன்னான்) வரு ஷம் மீ உயில் இக்கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்ட வாரன் டின்படி உம்முடைய காவலுக்குக் கமிட்பண்ணப்பட்டபடியாலும், பின்பு அவன் க்ரிமினல் ப்ரொஸிஜர் கோட் -வது பிரிவின்படி கிரமமாய் ஜாமீன் கொடு த்திருக்கிறபடியாலும்; அல்லது,

அவனை விட்டுவிடுவதனாலே ஜனங்களுக்கு அபாயம் நேரிடாதென்று எண் ணுவதற்கு எனக்குப்போதுமான முகாந்தரங்கள் தோன்றியிருக்கிறபடியாலும்,

இதனால் உமக்கு உத்தரவுசெய்கிற தென்னவென்றால்,—மேற்படி (இன் னான்) வேறே யாதொரு காரணத்தைப்பற்றி மறித்துவைக்கப்படுவதற் குள்ளாயி ருந்தாலொழிய, அவனை உன்னுடைய காவலிலிருந்து உடனே விட்டுவிடவேண் டும்.

19 வரு மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை.) (கையொப்பம்.)

16—தடை அல்லது இடைஞ்சலை எடுத்துவிடும்படி உத்தரவு.

(133-வது பிரிவைப்பார்க்க.)

(பெயர் இருப்பிடம் முதலிய விவரங்கண்டு - இன்னானுக்கு)

நடக்கல் அல்லது இடைஞ்சல் (இன்னதனாலே உண்டாகிறதென்று கண்டு) (ரஸ்தா அல்லது பொதுவான இடத்தை விவரித்தெழுதி-இன்ன) பொதுவான ரஸ்தாவில் அல்லது வேறே பொதுவான இடத்தில் போக்கு வரத்து செய்கிற ஜனங்களுக்கு நீர் நடக்கல் (அல்லது இடைஞ்சல்) உண்டுபண்ணியிருக்கிறீரென் றும், அந்தநடக்கல் (அல்லது இடைஞ்சல்) இன்னுமிருக்கிறதென்றும் எனக் குத்தெரியச்செய்யப்பட்டிருக்கிறபடியால்: அல்லது.

(இன்ன இடத்தில் இன்ன) வர்த்தகத்தை அல்லது தொழிலை நீ சொந்தக் காரராக அல்லது யஜமானனாக நடத்திக்கொண்டிருக்கிறீரென்றும், (இன்ன விதமாய்க் கெடுதியுண்டாகிறதென்று சுருக்கமாய்க் கண்டு-இன்ன) காரணத்தினா லே ஜனங்களுடைய சுவுக்கியத்திற்கு (அல்லது சுகத்திற்கு) அது கெடுதியுண்டு பண்ணுவதாயிருக்கிறதென்றும், அதை நிறுத்திவிடவாவது வேறே இடத்தில் நடத்தச்செய்யவாவது வேண்டுமென்றும் எனக்குத் தெரியச்செய்யப்பட்டிருக்கிற படியால்; அல்லது,

(இன்ன) பொதுவான பாட்டைக்குச் சமீபத்திலிருக்கிற ஒரு குளம் அல்லது கிணறு அல்லது குழி உமக்குச்சொந்தமென்றும் (அல்லது உம்முடைய ஸ்வாதீனத்திலிருக்கிறதென்றும் அல்லது உம்முடைய விசாரணைக்குள்ளிருக்கிறதென்றும்), மேற்படி குளத்திற்கு (அல்லது கிணற்றிற்கு அல்லது குழிக்கு) அடைப்பு (அல்லது பத்திரமான அடைப்பு) அடைக்காமலிருப்பதனுலே ஜனங்களுக்கு அபாயமுண்டாகுமென்றும் எனக்குத் தெரியச்செய்யப்பட்டிருக்கிறபடியால்; அல்லது,

(சங்கதிக்குத் தக்கபடி - இன்னதின்னதென்று) எனக்குத் தெரியச்செய்யப்பட்டிருக்கிறபடியால்;

நான் இதனுல் உமக்கு உத்தரவு செய்கிறதென்னவென்ருல்.—இவ்வளவு காலத்திற்)குள் ஷை. இடைஞ்சலை நிவர்த்திபண்ணுவதற்குச் (செய்யவேண்டியகாரியத்தைக்கண்டு - இன்னது) செய்யவாவதுவேண்டும். அல்லது -ம் ஹு மீ உயில் கோர்ட்டிலே ஹாஜராகி, இந்த உத்தரவை ஏன் அமுலுக்குக் கொண்டுவரக்கூடாதோ அதற்குக் காரணத்தை தெரிவிக்காவது வேண்டும்; அல்லது

நான் இதனுல் உமக்கு உத்தரவுசெய்கிற தென்னவென்ருல்,—இவ்வளவு காலத்திற்குள் மேற்படி இடத்திலே மேற்கண்ட வர்த்தகம் அல்லது தொழில் நடத்துவதை நிறுத்திவிட்டு, அதை மறுபடியும் நடத்தாமலிருக்கவாவது வேண்டும், அல்லது மேற்படி வர்த்தகம் இப்போது நடந்துகொண்டிருக்கிற இடத்தை விட்டு வேறே இடத்தில் நடத்தப்படவாவதுவேண்டும், அல்லது -ம் ஹு மீ உயில் (முதலியவை) காரணத்தைத் தெரிவிக்கவேண்டும்; அல்லது,

நான் இதனுல் உமக்கு உத்தரவுசெய்கிற தென்னவென்ருல்,—இவ்வளவு காலத்திற்குள் (இன்ன) பாகத்தைச்சுற்றி இன்னவிதமான அடைப்பு அடைக்கவேண்டுமென்று கண்டு) போதுமான அடைப்பு அடைக்கவாவதுவேண்டும், அல்லது ஹு மீ உயில் (முதலியவை) காரணத்தைத் தெரிவிக்கவேண்டும்; அல்லது,

நான் இதனுல் உனக்கு உத்தரவு செய்கிறதென்னவென்ருல்,—(சந்தர்ப்பத்துக்கேற்றபடி எழுதவும்)...வேண்டும்.

19 ஹு மீ உயில் என்கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை) ——— (கையொப்பம்.)

17—மத்தியஸ்தரை ஏற்படுத்துவதற்கு மாஜிஸ்ட்ரேட்டினுடைய கட்டளை.

(138-வது பிரிவைப் பார்க்கவும்.)

(இன்னது செய்ய) வேண்டுமென்று (இன்னுனுக்கு) -ம் ஹு மீ உயில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டபடியாலும், மேற்கண்ட உத்தரவு ந்யாயமும் யுக்தமுமானதா அல்லவாவென்று பரிசிலனை செய்வதற்கு மத்திய

ஸ்தரை நியமிக்கும்படி கட்டளை பிறப்பிக்கவேண்டுமென்று -ம் வரு மீ உயுள்ள விண்ணப்ப மூலமாய் மேற்படி (இன்னார்) எனக்கு மனுசெய்து கொண்டபடியாலும், மேற்படி விவாத விஷயத்தைப் பரிசீலனைசெய்து தீர்மானிப்பதற்கு மத்தியஸ்தராக (ஐந்து அல்லது மேற்பட்ட மத்தியஸ்தர்களின் பெயர் முதலியவற்றைக்கண்டு-இன்னாரை) நான் இதனால் நியமித்து,

ல் இருக்கிற என்னுடைய ஆபீஸில் இந்தக் கட்டளை பிறந்த தேதி முதல் நாளுக்குள்ளாக மேற்படி மத்தியஸ்தர்கள் தங்களுடைய தீர்மானத்தை ரிபோர்ட் செய்யவேண்டுமென்று உத்தரவு செய்கிறேன்.

19 -ம் வரு மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை.) (கையொப்பம்.)

18—மத்தியஸ்தர் தீர்மானஞ்செய்தபின்பு மாஜிஸ்ட்ரேட்டு கொடுக்கிற நோட்டீஸும் செய்கிற அறுதியான உத்தரவும்.

(140-வது பிரிவைப்பார்க்க.)

(பெயர் இருப்பிடம் முதலிய விவரங்கண்டு - இன்னாருக்கு.)

நான் இதனால் உமக்கு நோட்டீஸ் கொடுக்கிறதென்னவென்றால்,—

-ம் வரு மீ உயில் நீர் கொடுத்துக்கொண்ட விண்ணப்பத்தின்மேல் கிரமமாய் நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்கள் நீர் (உத்தரவில் செய்யவேண்டுமென்று கண்டிருப்பதை உள்ளபடி எழுதி இன்னதைச் செய்யவேண்டு)மென்று -ம் வரு மீ உயில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நியாயமும் யுக்தமுமானதென்று தீர்மானித்திருக்கிறார்கள். அந்த உத்தரவு அறுதியானதாகச் செய்துவிடப்பட்டது; (இவ்வளவு காலத்திற்)குள் மேற்படி உத்தரவின் பிரகாரம் நீர் நடந்துகொள்ளவேண்டுமென்று நான் இதனால் உமக்குக் கட்டளையிடுகிறேன்; நீர் அந்தப்படி நடந்துகொள்ளாவிட்டால், அதற்காக இந்தியன் பீனல் கோடில் சொல்லியிருக்கிற தண்டனைக்குள்ளாவீர்.

19 ம்-வரு மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

19—மத்தியஸ்தர் விசாரணை செய்தாகிறவரையில் அடுத்து நேரிடுவதாயிருக்கும் (பெருமோசம்) பெரிதான அபாயத்தை விலக்குவதற்காக இன்ஜங்ஷன் என்னும் கட்டளை.

(142-வது பிரிவைப்பார்க்க.)

(பெயர் இருப்பிடம் முதலிய விவரங்கண்டு இன்னாருக்கு.)

19 -ம் வரு மீ உயில் நான் பிறப்பித்த உத்தரவு நியாயமும் யுக்தமுமானதா அல்லவாவென்று பரிசீலனைசெய்வதற்காக நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்கள் இன்னும் விசாரணை செய்துகொண்டிருக்கிறபடியாலும்,

மேற்படி உத்தரவில் கண்டிருக்கிற தடை முதலிய இடைஞ்சலினாலே ஜனங்களுக்குப் பெருத்த அபாயம் உடனே நேரிடக்கூடுமாகையால் அதைத் தடுப்பதற்கு உடனே தகுந்தவகை செய்வதவசியமென்று எனக்குத் தெரியச்செய்யப்பட்டபடியாலும், மத்தியஸ்தர் பிரதேச விசாரணைசெய்து அது முடிவாகிற வரையில், (கொஞ்சகாலத்திற்குத் தீங்கைத்தடுப்பதற்காகச்செய்யவேண்டியது இன்னதென்று தெளிவாய்க்கண்டு - அதை) உடனே செய்யவேண்டுமென்று, க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் 142-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி நான் இதனால் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

19 -ம்வரு மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை.) (கையொப்பம்.)

20—தடை முதலிய சங்கடத்தை மேலுமேலும் உண்டுபண்ணுவது முதலியவற்றைச் செய்யாதிருக்கும்படி தடுப்பதற்காக மாஜிஸ்ட்ரேட் பிறப்பிக்கிற உத்தரவு.

(143-வது பிரிவைப்பார்க்க.)

(பெயர் இருப்பிடம் முதலிய விவரங்கண்டு - இன்னானுக்கு)

சந்தர்ப்பத்துக்கேற்றபடி 16-வது அல்லது 21-வது நமூனாவில் சொல்லுவதை அனுசரித்துச் சரியாய் எழுதி - (இப்படியென்று) எனக்குத் தெரியச்செய்யப்பட்டபடியால் ;

நான் இதனால் உமக்குக் கண்டிப்பாய்க் கட்டளைசெய்கிற தென்னவென்றால்,—சந்தர்ப்பத்துக்கேற்றபடி எழுதி - இன்னதை மறுபடியும் வைப்பதனாலாவது வைக்கும்படிச் செய்வதனாலாவது வைக்கவொட்டுவதனாலாவது மேற்படி தடை அல்லது இடைஞ்சலை நீர் மேலுமேலும் உண்டுபண்ணக்கூடாது.

19 -ம்வரு மீ உயில் என்கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை.) (கையொப்பம்.)

21—தடங்கல் கலகம் முதலியவற்றைத் தடுப்பதற்காக மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவு.

(144-வது பிரிவைப்பார்க்க.)

(பெயர் இருப்பிடம் முதலிய விவரங்கண்டு - இன்னானுக்கு.)

(சொத்தைப் பரிஷ்காரமாய் விவரித்தெழுதி இன்னது) உன்னுடைய ஸ்வாதீனத்தில் (அல்லது நிர்வாகத்தில்) இருக்கிறதென்றும், மேற்படி நிலத்தில் கல்வெட்டுகையில், வெட்டியெடுக்கப்பட்ட மண்ணிலும் கல்லுகளிலும் ஒரு அளவை, பக்கத்திலிருக்கிற ராஜபாட்டையில் போக்குவரவுசெய்கிற ஜனங்களுக்குத்

கலையுண்டாகும்படி நீர் அந்தப்பாட்டையில் கொட்டப்போகிறீர் அல்லது வைக்கப்போகிறீரென்றும், எனக்குத் தெரியச்செய்யப்பட்டபடியால்; அல்லது,

நீயும் (இன்ன வகுப்பாகிய) இன்னும் சில நபர்களும் (சந்தர்ப்பத்துக்கேற்றபடி எழுதி) பகிரங்கமான வீதிமார்க்கமாய் மதசம்பந்தமான கோலத்தில் சேர்ந்து போகப் போகிறீர்களென்றும், அந்தக்கோலம் போவதனாலே கலகம் அல்லது சண்டை நேரிடப்போவிருக்கிறதென்று எனக்குத் தெரியச் செய்யப்பட்டபடியால்; அல்லது,

(சங்கதிக்குத் தக்கபடி - இன்னவின்னதென்று) எனக்குத் தெரியச் செய்யப்பட்டபடியால்;

நிலத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட மண் அல்லது கல்லில் எவ்வளவையாவது மேற்கண்ட பாட்டையில் எந்த இடத்திலாகிலும் கொட்டவாவது கொட்டவொட்டவாவது கூடாதென்று நான் இதனால் உமக்கு உத்தரவுசெய்கிறேன்; அல்லது,

மேற்படி வீதிமார்க்கமாய் அந்தக்கோலம் போவதை நான் இதனால் தடுக்கிறேன்; மேலும், அந்தக் கோலத்தில் நீங்கள் எவ்வளவும் சம்பந்தப்படக் கூடாதென்று கண்டிப்பாய் எச்சரிக்கைசெய்து உத்தரவு பண்ணுகிறேன் (அல்லது சொல்லிய சங்கதிக்குத் தக்கபடி எழுதுக.)

19 -ம் ஸ்ரீ டயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை.) (கையொப்பம்.)

22—விவாதத்திலிருக்கிற நில முதலானவற்றை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்க இன்னார் பாத்தியஸ்தனென்று நிச்சயித்து மாஜிஸ்ட்ரேட்செய்கிற உத்தரவு.

(145-வது பிரிவைப்பார்க்க.)

என்னுடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள்ளிருக்கிற (விவாதப் பொருளைச் சுருக்கமாய்க் கண்டு - இன்னதைக்) குறித்து (பெயரையும் இருப்பிடத்தையும் கண்டு, அல்லது அந்த விவாதம் கிராம கூட்டத்தாருக்குள்ளிருந்தால் இருப்பிடத்தை மாத்திரங்கண்டு இன்னாருக்குள்) ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்கப்போவிருக்கிற விவாத மிருக்கிறதென்று, கிரமமாய் ரெகார்ட்செய்யப்பட்ட ஹேதுக்களினாலே எனக்குத் தெரியவந்தபடியால், மேற்படி (விவாதப் பொருளாகிய இன்னதின்) உண்மையான ஸ்வாதீனத்தைக் குறித்துத் தங்கள் தங்களுக்குண்டாகிய சுதந்தரத்தை எழுத்துமூலமாய்த் தெரிவிக்கவேண்டுமென்று மேற்படி கட்சிக்காரர்கள் சகலருக்கும் உத்தரவுசெய்யப்பட்டது, சட்டப்படி ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்கு மேற்படி கட்சிக்காரர்களில் இன்னாருடைய பாத்தியதை சிலாக்கியமானதென்று யோசியாமல், அதன் மேல் கிரமமாய் விசாரணைசெய்ததில், மேற்படி (பெயர் அல்லது விவரங்கண்டு-

இன்னார்) உள்ளபடி ஸ்வாதீனத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று கொண்டாடுகிற பாத்தியதை சரியானதென்று திருப்தியாகத் தெரியவருகிறபடியினாலே, (விவாதப் பொருளாகிய இன்னது) அவருடைய (அல்லது அவர்களுடைய ஸ்வாதீனத்திலிருக்கிறதென்றும், கிரமமாய் வியாஜ்ஜியம் நடத்தி நீக்கப்படுகிற வரையில் அப்படி ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்க அவர் (அல்லது அவர்கள்) பாத்தியஸ்தரென்றும் நான் தீர்மானித்துச் சொல்லுகிறேன்; மேலும், அதற்கு மத்தியில் அவருடைய (அல்லது அவர்களுடைய) ஸ்வாதீனத்தைக் குறித்து யாதொரு கலகஞ்செய்யக் கூடாதென்று நான் கண்டிப்பாய் உத்தரவு செய்கிறேன்.

19 -ம்வரு ஸ்ரீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை.) (கையொப்பம்.)

23—நில முதலியவைகளைப்பற்றிய ஸ்வாதீனத்தைக் குறித்து விவாதமுண்டாகிற விஷயத்தில் ஜப்தியில் வைக்கும்படி வாரன்ட்.

(146-வது பிரிவைப்பார்க்க.)

(இன்ன இடத்து) போலீஸ் ஸ்டேஷன் விசாரணை வகிக்கும் போலீஸ் உத்தியோகஸ்தருக்கு. [அல்லது கலெக்டருக்கு].

என்னுடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள்ளிருக்கிற (விவாதப் பொருளைச் சுருக்கமாய்க்கண்டு.—இன்னதை)க்குறித்து (பெயரையும் இருப்பிடத்தையுங்கண்டு, அல்லது அந்த விவாதம் கிராமக் கூட்டத்தாருக்குள்ளிருந்தால் இருப்பிடத்தை மாத்திரங்கண்டு - இன்னாருக்குள்) ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்கும்போலிருக்கிற விவாதமிருந்ததென்று எனக்குத் தெரியச்செய்யப்பட்டதினாலே, மேற்படி விவாதப்பொருளாகிய இன்னதன்) உண்மையான ஸ்வாதீனத்தைக் குறித்துத் தங்கள் தங்களுக்குள்ள சுதந்தரத்தை எழுத்து மூலமாய்த் தெரிவிக்கவேண்டுமென்று அதற்குமேல் மேற்படி கட்சிக்காரர்களுக்குக் கிரமமாய் உத்தரவு செய்யப்பட்டபடியாலும், மேற்படி சுதந்தரத்தைக் குறித்துக் கிரமமாய் விசாரணை செய்ததன்மேல், மேற்படி (விவாதப்பொருளாகிய இன்னது) மேற்கண்ட கட்சிக்காரர்களில் யார் ஸ்வாதீனத்திலுமிருந்ததில்லையென்று நான் தீர்மானித்தபடியாலும், [அல்லது மேற்படி கட்சிக்காரர்களில் இன்னார் மேற்சொல்லியபடி ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்தார்களென்று நான் திருப்திகரமாய்த் தெரிந்துக்கொள்ளக் கூடாதபடியாலும்.]

மேற்படி (விவாதப்பொருளாகிய இன்னதை) ஸ்வாதீனஞ்செய்துகொண்டு ஜப்தியில் வைக்கவேண்டுமென்றும், கட்சிக்காரர்களுடைய சுதந்தரம் அல்லது ஸ்வாதீனத்தில் வைத்துக்கொள்ளும்படியான பாத்தியதையைத் தீர்மானித்துத் தகுந்த கோர்ட்டார் செய்கிற டிக்ரி அல்லது உத்தரவு பெற்றுக்கொள்ளப்படுகிற வரையில் அதை அப்படியே ஜப்தியில் வைத்திருக்கவேண்டுமென்றும் இதனால் உமக்கு அதிகாரம் கொடுத்து உத்தரவுசெய்யலாகிறது; மேலும், இந்த வாரன்ட்

இன்னவிதமாய் நிறைவேற்றப்பட்டதென்று ஸெர்ட்டிபைசெய்து எழுதுகிற எண்டார்ஸ்மெண்ட் சகிதமாய் இதை ரிட்டர்ன் பண்ணவேண்டும்.

19 -ம் ஹு மீ உயில் என்கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை) (கையொப்பம்.)

24—நிலத்திலாவது ஜலத்திலாவது யாதொன்றைச் செய்வதைத் தடுப்பதற்கு மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவு.—(147-வது பிரிவைப்பார்க்க.)

என்னுடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள்ளிருக்கிற எதனுடைய ஸ்வாதினம் தன்னுடையதே (அல்லது தங்களுடையதே) என்று (நபர் அல்லது நபர்களின்னாரென்று விவரித்து - இன்னார்) சுதந்தரித்துச் சொல்லுகிறாரோ (அல்லது சொல்லுகிறார்களோ,) அந்த (விவாதப்பொருளைச் சுருக்கமாய்ச்சொல்லி-இன்ன) நிலத்தை (அல்லது தண்ணீரை) உபயோகிக்கும்படியான சுதந்தரத்தைக்குறித்து விவாதமுண்டாகி, அதைக்குறித்துக்கிரமமாய் விசாரணைசெய்ததில், மேற்படி நிலத்தை (அல்லது தண்ணீரை) பொதுவாய் ஜனங்கள் (அல்லது ஒருவர் அல்லது ஒருவகுப்பார் உபயோகித்துக் கொள்ளுவதாயிருந்தால், அவர்களை விவரித்து இன்னார்) அப்படி உபயோகித்துக் கொள்ளுவதற்குத் தடையில்லாதிருந்ததென்றும் (வருஷ முழுவதும்) உபயோகித்துக்கொள்ளக் கூடியதாயிருக்கிற பட்சத்தில்) மேற்படி விசாரணை ஆரம்பிக்கப்பட்டதற்கு முன்னிட்ட மூன்று மாதத்திற்குள் அப்படி உபயோகித்துக்கொள்ளப்பட்டிருந்ததென்றும், (அல்லது குறித்த ருதுக்களில் மாத்திரம் அப்படி அது உபயோகித்துக்கொள்ளப்படத் தக்கதாயிருக்கிறபட்சத்தில், எழுதவேண்டியது,—"அது உபயோகித்துக் கொள்ளப் படத்தக்கதான கடைசி ருதுவில் அப்படி உபயோகித்துக்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும்") எனக்குத் தெரியவருகிறபடியால்;

மேற்படி (ஸ்வாதினத்திற்குச் சுதந்தரக்காரர் அல்லது சுதந்தரக்காரர்கள்) ஸ்வாதினத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்குத் தமக்கே அல்லது தங்களுக்கே) உரித்தான சுதந்தரமுண்டென்று தகுந்த கோர்ட்டாரால் தீர்மானித்துச் செய்யப்படுகிற டிக்ரி அல்லது உத்தரவைப் பெற்றுக்கொள்ளுகிற வரையில், மேற்சொல்லியபடி உபயோகித்துக்கொள்ளும்படியான சுதந்தரம் செல்லுவது அடிப்பட்டுப்போகும்படி, மேற்கண்ட நிலத்தை (அல்லது தண்ணீரை) அவர் (அல்லது அவர்கள்) அல்லது பாத்தியதையில் அவர்களைச்சேர்ந்த எவராவதொருவர் ஸ்வாதினஞ்செய்துகொள்ள (அல்லது ஸ்வாதினத்தில் வைத்துக்கொண்டிருக்கக்) கூடாதென்று நான் உத்தரவுசெய்கிறேன்.

19 -ம் ஹு மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை.) (கையொப்பம்.)

25.—போலீஸ் உத்தியோகஸ்தனுக்குமுன் பிரதம விசாரணை நடப்பதன்மேல் முச்சிலிக்காவும் ஜாமீன் பத்திரமும்.

(169-வது பிரிவைப்பார்க்க.)

(இன்ன இடத்து இன்னுனுகிய) நான்
குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணை நடந்ததன்மேல்
மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாக ஹாஜராகும்படி உத்தரவு செய்யப்பட்டபடியால்,

அல்லது, விசாரணை நடந்ததன்மேல் வேண்டியபோது ஹாஜராவதாக முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்டபடியால்,

மேற்படி குற்றச்சாட்டுக்கு இன்னும் உத்தரவுசொல்ல ஹூ மீ உயில் (அல்லது ஹாஜராகும்படி நான் இனிமேல் உத்தரவு செய்யப்படும்படியான தினத்தில்) கோர்ட்டிலே ஹாஜராவதாக நான் இதனுல் பிணைப்படுகிறேன்; நான் இப்படிச்செய்யத் தவறிப்போகிற பட்சத்தில், மாட்சிமைதங்கிய இந்தியா சக்கரவர்த்தியாகிய மஹாராஜா அவர்களுக்கு ரூபாய் தண்டமிறுக்கக்கடவேன்.

19 ஹூ மீ உ. (கையொப்பம்.)

மேற்படி (இன்னுன்) மேல் சாட்டப்பட்டு விசாரணையில் இருந்து வருகிற குற்றத்திற்கு இன்னும் உத்தரவுசொல்ல ஹூ மீ உயில் (அல்லது ஹாஜராகும்படி அவன் இனிமேல் உத்தரவு செய்யப்படும்படியான தினத்தில்) கோர்ட்டிலே அவன் ஹாஜராவதற்கு அவனுக்காக நான் ஜாமீனென்று இதனுல் உறுதியாய்ச் சொல்லுகிறேன். (அல்லது நாங்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஜாமீனென்று உறுதியாய்ச் சொல்லுகிறோம்.) அவன் அப்படி செய்யத்தவறிப்போகிற பட்சத்தில், மாட்சிமை தங்கிய இந்தியா சக்கரவர்த்தியாகிய மஹாராஜா அவர்களுக்கு ரூபாய் தண்டமிறுப்பதாக நான் இதனுல் பிணைப்படுகிறேன் (அல்லது நாங்கள் இதனுல் பிணைப்படுகிறோம்.)

19 ஹூ மீ உ. (கையொப்பம்.)

26.—பிராது நடத்துவதாகவாவது சாட்சியஞ்சொல்லுவதாகவாவது முச்சிலிக்கா.

(170-வது பிரிவைப்பார்க்க.)

(இன்ன இடத்து இன்னுனுகிய) நான் லே கோர்ட்டில் ஹூ மீ உயில் மணிக்கு ஹாஜராகி, இன்னுர்மேல் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிற விஷயத்தில் அப்போதங்கே பிராது நடத்துவதாக (அல்லது பிராது நடத்துவதாகவும் சாட்சியஞ் சொல்லுவதாகவும் அல்லது சாட்சியஞ்சொல்லுவதாக) இதனுல் பிணைப்படுகிறேன்; நான் இப்படி செய்யத் தவறிப்போவேனுகில், மாட்சிமைதங்கிய இந்தியா சக்கவர்த்தியாகிய மஹாராஜா அவர்களுக்கு ரூபாய் தண்டமிறுக்கக்கடவேன்.

19 ஹூ மீ உ கையொப்பம்.)

27.—மாஜிஸ்ட்ரேட்செய்த கம்மிட்மெண்டைக் குறித்து கவர்ன்மெண்ட் ப்ளீடருக்கு நோட்டீஸ். (218-வது பிரிவைப்பார்க்க.)

(இன்ன) மாஜிஸ்ட்ரேட்டானவர் - (இன்னாரென்கிற) ஒருவனை அடுத்த ஸெஷனில் பரிசீலனைக்குக் கம்மிட்பண்ணியிருப்பதாக இதனால் நோட்டீஸ் கொடுக்கிறார்; மேற்படி கேஸில் பிராது நடத்தும்படி மாஜிஸ்ட்ரேட் இதனால் கவர்ன்மெண்ட் ப்ளீடருக்குத் தெரிவிக்கிறார்.

குற்றஞ் சாட்டப்பட்டவன்மேல் கொண்டுவரப்பட்ட பிராதாவது (குற்ற பத்திரிகையிலிருப்பதுபோலவே குற்றத்தை இங்கே கண்டெழுதுக.)

19 ௵ ௴ ௳. (கையொப்பம்.)

28.—குற்றபத்திரிகைகள்.

(1)—ஒரே ஒரு விஷயம் அடங்கிய குற்றப்பத்திரிகைகள்.

(221, 222, 223-வது பிரிவுகளைப்பார்க்க.)

(a) [மாஜிஸ்ட்ரேட்டினுடைய பெயர் உத்தியோக முதலியவை கண்டு—இன்னாராகிய] நான் (குற்றஞ் சாட்டப்பட்டவனுடைய பெயரைக் கண்டெழுதி இன்னாரென்கிற) உன்மேல் இதனால் எழுதுகிற குற்ற பத்திரிகை என்னவென்றால்:—

(b) நீ இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டத்தட்ட மாட்சிமை தங்கிய இந்தியா சக்கரவர்த்தியாகிய மஹாராஜா அவர்களுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்தபடியால், நீ இந்தியன் பினல் கோட் 121-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றஞ்செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது. (ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டினால் குற்றபத்திரிகை எழுதப்பட்டால், ஸெஷன் கோர்ட்டாருடைய என்பதற்குப் பதிலாய் ஹைகோர்ட்டாருடைய என்று எழுதுக.)

பினல்கோட் 121-வது பிரிவின்படி.

(c) ஆகையால் நீ மேற்படி குற்றத்திற்காக மேற்படி கோர்ட்டாரால் பரிசீலனை செய்யப்படவேண்டுமென்று இதனால் உத்தரவு செய்கிறேன்.

[மாஜிஸ்ட்ரேட்டினுடைய கையெழுத்தும் முத்திரையும்.]

[மேலே (b)-குறிப்பிட்ட இடத்தில் வேறே குற்றத்தைக்குறித்து எழுதுகிறவிதம்:—]

(2) நீ (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டத்தட்ட இந்தியா கவர்னர் ஜெனரலவர்களுடைய ஆலோசனை சபையாரில் ஒருவராகிய மேன்மை பொருந்திய (இன்னாரை) அப்படிப்பட்டவராகச் சட்டப்படி அவருக்குண்டான அதிகாரத்தைச் செலுத்தாமலிருக்கும்படி செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு அவரைத் தாக்கினபடியால், நீ இந்தியன் பினல் கோட் 124-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றஞ்

124-வது பிரிவின்படி.

செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக் குட்பட்டதாயிருக்கிறது.

(3) (இன்ன) இலாக்காவிலுள்ள ஸர்க்கார் உத்தியோகஸ்தனாகிய நீ - நியாயமாய்க் கிடைக்கிற பிரதிபலனைத்தவிர, செய்யவேண்டிய
161-வது பிரிவின்படி. உத்தியோக காரியத்தைச் செய்யாமலிருப்பதற்கு வேறொருவனாகிய (இன்னானுக்காக இன்னானிடத்திலே) நேராய் இனாம் வாங்கிக்கொண்டபடியால், நீ இந்தியன் பினல் கோட் 161-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றத்தைச் செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக்குட்பட்டதா யிருக்கிறது.

(4) நீ (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டதட்ட (இன்னதைச்) செய்தபடியால் (அல்
166-வது பிரிவின்படி. லது சங்கதிக்குத் தக்கபடி செய்யாதுவிட்டபடியால்), அப்படிப்பட்ட நடத்தையானது (இன்ன ஆக்ட் இன்ன) பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமா யிருப்பதனாலும், அது பாதகமாயிருக்கிறதென்று உனக்குத் தெரிந்திருப்பதனாலும், நீ இந்தியன் பினல் கோட் 166-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றஞ் செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக்கு உட்பட்டதாயிருக்கிறது.

(5) நீ (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டதட்ட (இன்ன கோட்டாருக்கு) முன்பாக
193-வது பிரிவின்படி. இன்னாருடைய பரிசீலனை நடந்துகொண்டிருக்கையில் (இன்னின்னபடி) சாட்சியஞ் சொன்னாய்; அப்படி சொன்னது அபத்தமென்று நீ அறிந்தாவது நம்பியாவது எதார்த்தமென்று நம்பாமலாவதிருந்தபடியால், இந்தியன் பினல் கோர்ட் 193-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றஞ்செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக் குட்பட்டதாயிருக்கிறது.

(6) நீ (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டத்தட்ட (இன்னானுக்கு) மரணமுண்டு பண்
304-வது பிரிவின்படி. ணி, (கொலையாகாத அநியாய மரணமுண்டுபண்ணுவதென்னும் குற்றத்தைச்செய்தபடியால்) நீ இந்தியன் பினல் கோட் 304-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றத்தைச் செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது.

(7) நீ (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக்கிட்டத்தட்ட வாகிரியுள்ள (இன்னான்) தன்னைத்
306-வது பிரிவின்படி. தான் கொலை செய்துகொள்ளுவதற்கு உடந்தையாயிருந்தபடியால், நீ இந்தியன் பினல் கோட் 306-வது பிரிவின்

படி தண்டிக்கப்படத்தக்க குற்றத்தைச் செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது.

325-வது பிரிவின்படி.

(8) நீ (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டதட்ட (இன்னானுக்கு) மனதாரக் கொடுங்காயம் பண்ணினபடியால், நீ இந்தியன் பினல்கோட் 325-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றஞ்செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக் குட்பட்டதாயிருக்கிறது.

392-வது பிரிவின்படி.

(9) நீ (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டத்தட்ட (இன்னானை) கொள்ளையடித்தபடியால், நீ இந்தியன் பினல் கோட் 392-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றஞ் செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது.

395-வது பிரிவின்படி.

(10) நீ (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டத்தட்ட பலரோடு சேர்ந்து கொள்ளையடித்தபடியால், இந்தியன் பினல் கோட் 395-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றஞ் செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருருடைய] விசாரணைக் குட்பட்டதாயிருக்கிறது.

[மாஜிஸ்ட்ரேட்டுகளால் பரிசீலனைசெய்யப்படுகிற கேஸுகளிலே "ஸெஷன்கோர்ட்டாருடைய விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது" என்பதற்கு பதிலாக "என்னுடைய விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது" என்பதை எழுதவேண்டும்; மேலும், (c) குறிப்பிட்ட இடத்திலே "மேற்படி கோர்ட்டாரால்" என்பதை எடுத்து விடவேண்டும்.]

(2)-இரண்டு அல்லது பல விஷயங்கள் அடங்கிய குற்றப் பத்திரிகைகள்.

(a) [மாஜிஸ்ட்ரேட்டினுடைய பெயர் உத்தியோக முதலியதைகண்டு இன்னானாகிய] நான் [குற்றஞ்சாட்டப்பட்டவனுடைய பெயரைக் கண்டெழுதி இன்னானாகிய] உன்மேல் இதனால் எழுகிற குற்றபத்திரிகை என்னவென்றால்:—

241-வது பிரிவின்படி.

(b) முதலாவது:—நீ (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டத்தட்ட கள்ள நாணயமென்று தெரிந்திருந்து அதை எதார்த்தமானதென்று (இன்ன பெயரையுடைய) வேறொருவனுக்குக் கொடுத்தபடியால் நீ இந்தியன் பினல் கோட் 241-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றஞ்செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக் குட்பட்டதாயிருக்கிறது.

இரண்டாவது.—நீ (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டத்தட்ட கள்ள நாணயமென்று தெரிந்திருந்து, அதை எதார்த்தமானதென்று (இன்ன பெயரையுடைய) வேறொருவனை வாங்கிக்கொள்ளும்படிசெய்ய எத்தனப்பட்டபடியால், நீ இந்தியன் பினல் கோட் 241-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றஞ்செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது;

(c) ஆகையால், நீ மேற்படி குற்றத்திற்காக மேற்படி கோர்ட்டாரால் பரிசீலனை செய்யப்படவேண்டுமென்று இதனால் உத்தரவு செய்கிறேன்.

[மாஜிஸ்ட்ரேட்டினுடைய கையெழுத்தும் முத்திரையும்.]

மேலே (b) குறிப்பிட்ட இடத்தில் வேறே குற்றங்களைக் குறித்து எழுதுகிறவிதம்:—

302, 304-வது பிரிவுகளின்படி.

(2) முதலாவது:—நீ (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டத்தட்ட (இன்னானுக்கு) மரண முண்டுபண்ணினதனாலே கொலை என்னுங் குற்றத்தைச் செய்தபடியால், இந்தியன் பினல் கோட் 302-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றத்தைச் செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது.

இரண்டாவது:—நீ (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டதட்ட (இன்னானுக்கு) மரண முண்டுபண்ணினதனாலே கொலையாகாத அநியாய மரண முண்டுபண்ணுவதென்னும் குற்றத்தைச் செய்தபடியால், நீ இந்தியன் பினல் கோட் 304-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றத்தைச் செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது.

379, 382-வது பிரிவுகளின்படி.

(3) முதலாவது:—நீ (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டத்தட்ட திருட்டென்னும் குற்றத்தைச் செய்தபடியால், நீ இந்தியன் பினல் கோட் 379-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றத்தைச் செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது.

இரண்டாவது:—நீ திருடும்பொருட்டு ஒருவனுக்கு மரண முண்டுபண்ணுவதற்காக வேண்டிய ஆயத்தஞ்செய்துகொண்டு, (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டத்தட்ட அந்த திருட்டென்னும் குற்றத்தைச் செய்தபடியால், நீ இந்தியன் பினல் கோட் 382 வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றஞ்செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது.

மூன்றாவது:—திருடினபின்பு தப்பித்துக்கொண்டு போகும்பொருட்டு, நீ ஒருவனுக்குத் தடங்கலுண்டுபண்ணுவதற்காக வேண்டிய ஆயத்தஞ்செய்துகொண்டு (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டத்தட்ட அந்தத் திருட்டென்னுங் குற்றத்தைச் செய்தபடியால், நீ இந்தியன் பினல் கோட் 382-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றஞ்செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது.

நான்காவது:—நீ திருடின சொத்தை உனக்குத் தக்கும்படி செய்துகொள்ளும்பொருட்டு, ஒருவனைத் துன்பம் நேரிடுமென்று பயப்படுத்தும்படி செய்வதற்காகவேண்டிய ஆயத்தஞ்செய்துகொண்டு, (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டத்தட்ட அந்த திருட்டென்னும் குற்றத்தைச் செய்தபடியால், நீ இந்தியன் பினல் கோட் 382-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றஞ்செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது.

193-வது பிரிவின்படி குற்றங்களிலிரண்டிலொன்றைக் குறிக்கும்.

(4) நீ (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டத்தட்ட (இன்ன கோர்ட்டுக்கு) முன்பாக (இன்ன சங்கதி) விசாரணை நடந்துகொண்டிருக்கையில் (இன்னின்னபடி) சாட்சியஞ் சொன்னாய்; மேலும், (இன்ன இடத்திலே இன்ன மாதம் இன்ன) தேதியில் அல்லது அதற்குக் கிட்டத்தட்ட (இன்னகோர்ட்டுக்கு) முன்பாக (இன்னாருடைய) பரிசீலனை நடந்துகொண்டிருக்கையில் (இன்னின்னபடி) சாட்சியஞ்சொன்னாய்: அப்படிசொன்ன வாக்கு மூலங்களில் ஒன்று அபத்தமென்று நீயறிந்தாவது நம்பியாவது எதார்த்தமென்று நம்பாமலாவது இருந்தபடியால், நீ இந்தியன் பினல் கோட் 193-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றஞ்செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது ஹைகோர்ட்டாருடைய] விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது.

[மாஜிஸ்ட்ரேட்டினால் பரிசீலனைசெய்யப்படுகிற கேஸுகளில் "ஸெஷன் கோர்ட்டாருடைய விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது" என்பதற்குப் பிரதியாக "என்னுடைய விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது" என்பதை எழுதவேண்டும்; மேலும், (c) குறிப்பிட்ட இடத்திலே "மேற்படி கோர்ட்டாரால்" என்பதைத் விட்டுவிடவேண்டும்.]

(3)—முன்னமே குற்றஸ்தாபனையானபின்பு திருட்டுக்காகக் குற்றபத்திரிகை.

(மாஜிஸ்ட்ரேட்டினுடைய பெயர் உத்தியோக முதலியவைகண்டு - இன்னாராகிய) நான் (குற்றஞ்சாட்டப்பட்டவனுடைய பெயரைக்கண்டெழுதி இன்னானாகிய) உன்மேல் இதனால் எழுதுகிற குற்றபத்திரிகை என்னவென்றால்:—

நீ (இன்ன இடத்திலே இன்னமாதம் இன்ன) தேதியில் திருட்டு என்னுங் குற்றஞ்செய்தபடியால், நீ இந்தியன் பினல் கோட் 379-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றஞ்செய்தவனாகிறாய்; அது ஸெஷன் கோர்ட்டாருடைய [அல்லது சங்கதிக்குத் தக்கபடி] ஹைகோர்ட்டாருடைய மாஜிஸ்ட்ரேட்டினுடைய விசாரணைக்குட்பட்டதாயிருக்கிறது.

மேற்படி (குற்றஞ் சாட்டப்பட்டவனுடைய பெயரைக்கண்டு - இன்னனாகிய) உன்மேல் இன்னும் சாட்டப்படுகிறதென்னவென்றால்:—மேற்படி குற்றத்தை செய்வதற்கு முன்னமே அதாவது, ௵ ௴ ௳யில், இந்தியன் பினல் கோட் 17-வது அத்தியாயத்தின்படி மூன்று வருஷத்திற்குக் காவல் தண்டனை விதிக்கப்படத்தக்க குற்றமாகிய (குற்றஞ்சாட்டப்பட்டவன் எதன்படி குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டானோ அந்தப்பிரிவில் உபயோகித்திருக்கிற சொற்களின்படி குற்றத்தை விவரித்தெழுதுக இராக்காலத்தில் கன்னமிட்டதென்னும் குற்றமானது-இன்ன இடத்திலிருக்கிற குற்றஸ்தாபனை செய்த கோர்ட்டார் இன்னாரென்று கண்டு-இன்ன கோர்ட்டாரால்) உன்மேல் ஸ்தாபிக்கப்பட்டது; அந்த ஸ்தாபனை இன்னும் செலாவணியாய் நடந்துகொண்டிருக்கிறது; ஆதலால் இந்தியன் பினல் கோட் 75-வது பிரிவின்படி அதிகமான தண்டனைக்கு நீ உள்ளாகிறாய்.

ஆகையால் நீ பரிசீலனை செய்யப்படவேண்டுமென்று இதனால் உத்தரவுசெய்கிறேன்.

29—காவல் தண்டனையாவது அபராதமாவது மாஜிஸ்ட்ரேட் விதித்தால் கம்மிட்மெண்ட் வாரன்ட். (245, 258-வது பிரிவுகளைப்பார்க்க.)

(இன்ன இடத்திலிருக்கிற) ஜெயில் ஸுபரின்டென்டெண்டுக்கு (அல்லது விசாரணைக்கர்த்தனுக்கு)

19 ௵ ௴ ௳யில், 19 ௵த்து காலெண்டர் -வது நம்பர் கேஸிலே (சங்கதிக்குத்தக்கபடி 1-வது, 2-வது, 3-வது) கைதியாகிய (கைதியின் பெயரைக்கண்டு இன்னான்) இந்தியன் பினல் கோட் (அல்லது ஆக்ட்) -பிரிவின்படி (அல்லது பிரிவுகளின்படி) (குற்றம் அல்லது குற்றங்களைச் சுருக்கமாய்-எழுதி இன்ன)குற்றத்திற்காக (பெயரையும் உத்தியோகத்தையுங்கண்டு - இன்னாராகிய) என் முன்னிலையில் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டு, சிட்சையைப் பூர்த்தியாயும் தெளிவாயும் கண்டு - இன்ன) சிட்சை அவனுக்கு விதிக்கப்பட்டபடியால்;

மேற்படி ஸுபரின்டென்டெண்ட் அல்லது விசாரணைக்கர்த்தன் ஆகிய உனக்கு இதனால் உத்தரவு செய்கிறதென்னவென்றால்,—இந்த வாரன்ட் சகிதமாய் மேற்படி (கைதியின் பெயரைக்கண்டு-இன்னானை) மேற்படி ஜெயிலிலே உன்னுடைய காவலில் ஏற்பற்றிக்கொண்டு, அவ்விடத்தில் மேற்கண்ட சிட்சையைச் சட்டப்படி நிறைவேற்றவேண்டும்.

19 -ம்௵ ௴ ௳யில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை.) (கையொப்பம்.)

30.—ஜப்தி செய்தும் விற்பனைசெய்தும் பிரதிபலன் தொகையை வசூல்செய்யக்கூடாதபோது காவலில் வைக்கும்படி வாரன்ட்.

(250-வது பிரிவைப்பார்க்க.)

(இன்ன இடத்திலிருக்கிற) ஜெயில் சூபரின்டென்டெண்டுக்கு (அல்லது விசாரணைக் கர்த்தனுக்கு.)

(பெயர் முதலிய விவரங்கண்டு - இன்னான்) குற்றஞ் சாட்டப்பட்டவனுடைய பெயர் முதலிய விவரங்கண்டு (இன்னான்) மேல் பிராதைச் சுருக்கமாய் எழுதி (இன்ன) பிராது கொண்டுவந்தபடியாலும், அது பொய்யானதென்றும், வீணானதென்றும் (அல்லது அலைக்கழிக்கும்படியாகக் கொண்டுவரப்பட்டதென்று) தள்ளிவிடப்பட்டபடியாலும், தள்ளிவிடும்படிசெய்த உத்தரவிலே பிரதிபலனாக மேற்படி பிராதுக்காரன் (பெயரைக்கண்டு-இன்னான்) ரூபாய் செலுத்தவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறபடியாலும், மேற்படி தொகை செலுத்தப்படாமலிருக்கிற படியாலும்] காவலில் வைக்கும்படி விதிக்கப்பட்ட காலத்திற்குள்ளாக மேற்படி தொகை செலுத்தப்பட்டாலொழிய, அவனை நாளுக்கு ஜெயிலிலே வெறுங்காவலில் வைத்திருக்க வேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டபடியாலும் ;

மேற்படி ஸுபரின்டென்டெண்ட் (அல்லது விசாரணைக்கர்த்தன்) ஆகிய உனக்கு இதனால் உத்தரவுசெய்கிற தென்னவென்றால் :— இந்த வாரன்ட் சகிதமாய் மேற்படி (இன்னானை) உன்னுடைய காவலில் வரப்பற்றிக்கொண்டு, காவலில் வைக்கும்படி விதிக்கப்பட்ட காலத்திற் குள்ளாக மேற்படி தொகை செலுத்தப்பட்டாலொழிய, இந்தியன் பீனல் கோட் 69-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அவனை மேற்படி ஜெயிலில் மேற்படி (காவற்காலத்தைக்கண்டு - இவ்வளவு) காலத்திற்குப் பத்திரமாய் வைத்திருக்கவேண்டும் ; மேற்படி தொகை செலுத்தப்பட்டால் அவனை உடனே விடுதலைசெய்யவேண்டும் ; மேலும், இந்த வாரன்ட் இன்னவிதமாய் நிறைவேற்றப்பட்டதென்று ஸெர்டிபைசெய்து எழுதுகிற எண்டார்ஸ்மென்ட் சகிதமாய் இதை ரிட்டரன் பண்ணவேண்டும்.

19 ளு மீ உயில் என்கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை) ——— (கையொப்பம்.)

31—சாட்சிக்கு சம்மன்—(68, 252-வது பிரிவுகளைப்பார்க்க.)

(இன்ன இடத்து இன்னானுக்கு)

(இன்ன இடத்து இன்னான் ; இன்னகாலத்தில் இன்ன இடத்திலே குற்றத்தைச் சுருக்கமாய் கண்டு இன்ன குற்றஞ்செய்தானென்று (அல்லது செய்ததாக அநுமானிக்கப்படுகிறானென்று) எனக்குமுன் பிராது செய்யப்பட்டபடியாலும், பிராது பட்சத்தில் நீ முக்கியமான சாட்சியஞ்சொல்லக் கூடும்போலிருக்கிறாயென்று எனக்கு தெரியவருகிறபடியாலும் ;

இதனால் உனக்கு உத்தரவுசெய்கிற தென்னவென்றால்,—மேற்படி பிராது விஷயத்தைக்குறித்து உனக்குத் தெரிந்த சாட்சியத்தைச் சொல்லுவதற்கு

ஃஸு உ உ காலே 10-மணிக்கு இந்தக் கோர்ட்டுக்கு முன் நீ ஹாஜராகவேண்டும்; கோர்ட்டாருடைய உத்தரவில்லாமல் நீ அவ்விடத்தை விட்டுப்போகக்கூடாது; மேலும், தகுந்த முகாந்தரமில்லாமல் மேற்படி தேதியில் நீ ஹாஜராகாமற்போனாலும் ஹாஜராகமாட்டேனென்றாலும் உன்னை ஹாஜராகும்படி நிர்ப்பந்திப்பதற்கு வாரன்ட் பிறப்பிக்கப்படுமென்று உனக்கு இதனால் எச்சரிக்கை செய்யப்படுகிறது.

19 ஃஸு மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை.) (கையொப்பம்.)

32—ஜூரர்களையும் அஸெஸர்களையும் ஸம்மனனுப்பி வரவழைக்கும்படி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கட்டளை.

(326-வது பிரிவைப்பார்க்க.)

(இன்ன டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு.)

(இன்ன இடத்திலிருக்கிற) கோர்ட் கட்டிடத்தில் ஃஸு மீ உ க்ரிமினல் ஸெஷன் நடக்கும்படி ஏற்படுத்தப்பட்டபடியாலும், இதில் கண்டிருக்கிற நபர்களுடைய பெயர்களை இந்தக் கோர்ட்டுக்குப் பரிசோதித்து அனுப்பப்பட்ட ஜூரர்கள்-அஸெஸர்கள்-இவர்களுடைய ஜாபிதாவில் கண்டிருக்கிற பெயர்களிலிருந்து கிரமமாய்ச் சீட்டுப்போட்டு எடுத்திருக்கிறபடியாலும், இதனால் உமக்குத் தெரியப்படுத்துகிற தென்னவென்றால்;—மேற்படி தேதியில் காலே 10-மணிக்கு மேற்கண்ட ஸெஷன் கோர்ட்டிலே ஹாஜராகும்படி மேற்படி நபர்களுக்கு ஸம்மனனுப்பவேண்டும்; மேலும், இந்தக் கட்டளையின்படி நீர் அவ்விதமாகச் செய்திருக்கிறீரென்று மேற்படி தேதிக்குள்ளாக ஸெர்டிபை செய்து அனுப்பவேண்டும்.

(ஜூரர்கள்-அஸெஸர்கள்-இவர்களுடைய பெயரை இங்கே கண்டெழுதுக.)

19 -ம்ஃஸு மீ உயில் என்கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை) (கையொப்பம்.)

33—அஸெஸர் அல்லது ஜூரர்களுக்கு ஸம்மன்.

(328-வது பிரிவைப்பார்க்க.)

(இன்ன இடத்து இன்னாருக்கு)

அடுத்த க்ரிமினல் ஸெஷனில் அஸெஸராக (அல்லது ஜூரராக) நீர் ஹாஜராகவேண்டுமென்று (இன்ன) ஸெஷன் கோர்ட்டார் எனக்கு அனுப்பிய கட்டளையின் பிரகாரம், உமக்கு இதனால் உத்தரவு செய்கிறதென்னவென்றால்,

(இன்ன இடத்திலிருக்கிற) மேற்படி ஸெஷன் கோர்ட்டிலே ஹூ மீ உ காலை 10-மணிக்கு நீர் ஹாஜராகவேண்டும்.

19 -ம் ஹூ மீ உயில் என் கையெழுத்தும் ஆபீஸ் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை.) (கையொப்பம்.)

34—மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கும்போது கமிட்மெண்ட் வாரன்ட்—(374-வது பிரிவைப்பார்க்க.)

(இன்ன இடத்திலிருக்கிற) ஜெயில் ஸூபரின்டென்டெண்டுக்கு (அல்லது விசாரணைக் கர்த்தனுக்கு.)

19 ஹூ மீ உ எனக்கு முன்பாக நடத்தப் பட்ட ஸெஷனில், மேற்படி ஸெஷனிலே காலண்டர் -வது நம்பர் கேஸில் (சங்கதிக்குத்தக்கபடி, 1-வது, 2-வது, 3-வது) கைதியாகிய (இன்னான்) இந்தியன் பீனல் கோட் -வது பிரிவின்படி கொலையாகிற அநியாய மரண முண்டுபண்ணுவதென்னும் குற்றஞ்செய்ததாகக் கிரமமாய்த் தீர்மானிக்கப்பட்டு, (இன்ன இடத்திலிருக்கிற இன்ன) கோர்ட்டாரால் தண்டனை ஜார்ஜ்ஜிதஞ்செய் யப்படுவதற்குள்ளாகி அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டபடியால்;

மேற்படி ஸூபரின்டென்டெண்ட் (அல்லது விசாரணைக் கர்த்தன்) ஆகிய உனக்கு இதனால் உத்தரவுசெய்கிற தென்னவென்றால்,—இந்த வாரன்ட் சகித மாய் மேற்படி (கைதியினுடைய பெயரைக்கண்டு-இன்னானை) மேற்படி ஜெயிலில் உன்னுடைய காவலில் ஏற்பத்திக்கொண்டு, மேற்படி கோர்ட் உத்தரவு நிறைவேறும்படி இந்தக் கோர்ட்டிலிருந்து பின்னிட்டு அனுப்பப்படுகிற வாரன்ட் அல்லது உத்தரவு உனக்குக் கிடைக்கிற வரையில் அவனை அவ்விடத் திலேயே பத்திரமாய் வைத்திருக்கவேண்டும்.

19 -ம் ஹூ மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை.) (கையொப்பம்.)

35—மரணதண்டனை விதிக்கப்படவேதன்மேல் அதை நிறைவேற்றும்படி வாரன்ட்—(381-வது பிரிவைப்பார்க்க.)

(இன்ன இடத்திலிருக்கிற ஜெயில் ஸூபரின்டென்டெண்டுக்கு அல்லது விசா ரணைக் கர்த்தனுக்கு.)

19 ஹூ மீ உ எனக்கு முன்பாக நடத்தப்பட்ட ஸெஷனில் காலெண்டர் -வது நம்பர் கேஸிலே (சங்கதிக்குத் தக்கபடி

1-வது, 2-வது, 3-வது) கைதியாகிய (இன்னான்) மரண தண்டனை விதிக்கப்பட்டு, ஞு மீ உ போட்ட இந்தக் கோர்ட் வாரன்டினாலே உன்னுடைய காவலுக்குக் கமிட்பண்ணப்பட்டபடியாலும், மேற்படி தண்டனையை ஊர்ஜ்ஜிதஞ்செய்து (இன்ன இடத்திலிருக்கிற இன்ன) கோர்ட்டார் அனுப்பிய உத்தரவு இந்தக் கோர்ட்டில் வந்து சேர்ந்தபடியாலும் ;

மேற்படி ஸூபரின்டெண்டென்ட் (அல்லது விசாரணைக்கர்த்தன்) ஆகிய உனக்கு இதனால் உத்தரவுசெய்கிறதென்னவென்றால்,—(இன்ன இடத்திலே இன்ன காலத்திலே) மேற்படி (இன்னான்) சாகிறவரையில் கழுத்தில் கயிறு மாட்டி அவனைத் தொங்கவிட்டு மேற்படி தண்டனையை நிறைவேற்றவேண்டும் ; மேலும், அந்த தண்டனை நிறைவேற்றப்பட்டதென்று ஸெர்ட்டிபைசெய்து எழுதுகிற எண்டார்ஸ்மென்ட் சகிதமாய் இந்த வாரண்டை இந்தக் கோர்ட்டுக்கு ரிட்டரன் பண்ணவேண்டும்.

19 -ம்ஞு மீ உயில் என்கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை.) (கையொப்பம்.)

36—ஒரு தண்டனை குறைந்த தண்டனையாக மாற்றப்பட்ட பின்பு வாரண்ட்—(381, 382-வது பிரிவுகளைப்பார்க்க.)

(இன்ன இடத்திலிருக்கிற) ஜெயில் ஸூபரின்டென்டெண்டுக்கு (அல்லது விசாரணைக் கர்த்தனுக்கு)

19 ஞு மீ உ நடந்தப்பட்ட ஸெஷனில் மேற்படி ஸெஷனிலே காலண்டர் -வது நம்பர் கேஸில் (சங்கதிக்குத் தக்கபடி (1-வது, 2-வது, 3-வது) கைதியாகிய (இன்னான்) இந்தியன் பினல்கோட் -வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க என்னும் குற்றத்தைச் செய்ததாகத் தீர்மானிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டபடியாலும், அதன்மேல் அவன் உன்னுடைய காவலுக்குக் கமிட் செய்யப்பட்டபடியாலும், (இன்ன இடத்து இன்ன) கோர்ட்டாரால் செய்யப்பட்டு (இரண்டாம்பிரதி இதோடு சேர்க்கப்பட்டிருக்கிற உத்தரவினாலே மேற்படி சிட்சைத் தீர்ப்பில் விதிக்கப்பட்ட தண்டனையானது ஆயுள்பரியந்தம் தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனையாக (அல்லது சங்கதிக்குத்தக்கபடி இன்னதாக) மாற்றிவிடப்பட்டபடியாலும் ;

மேற்படி ஸூபரின்டெண்டென்ட் (அல்லது விசாரணைக்கர்த்தன்) ஆகிய உனக்கு இதனால் அதிகாரம்கொடுத்து உத்தரவு செய்கிறதென்னவென்றால்,— மேற்படி (கைதியின் பெயரைக்கண்டு-இன்னானை) மேற்படி உத்தரவின்பிரகாரம் தண்ணீர்மேலேற்றும் தண்டனையை அனுபவிக்கும்பொருட்டுத் தகுந்த அதிகாரிகளுடைய வசத்தில் நீ ஒப்பித்து விடுகிறவரையிலே, சட்டத்தில் சொல்லியிருக்

றபடி மேற்படி ஜெயிலில் அவனை உன்னுடைய காவலில் பத்திரமாய் வைத்திருக்கவேண்டும், அல்லது

குறைத்து விதிக்கப்பட்ட சிட்சை காவல்சிட்சையாயிருந்தால், "கைதியின் பெயரைக்கண்டு - இன்னானை" என்கிற வார்த்தைகளுக்குப்பின்பு எழுதவேண்டியதாவது,—"மேற்படி ஜெயிலில் உன்னுடைய காவலிலே பத்திரமாய் வைத்துக்கொண்டு, மேற்படி உத்தரவின்பிரகாரம் காவல் சிட்சையைச் சட்டப்படி அவ்விடத்தில் நிறைவேற்றுவிக்கவேண்டும்."

19 -ம் வருஷம் மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

(முத்திரை.) (கையொப்பம்.)

37—ஜப்திசெய்து விற்று அபராதத்தை வசூல் பண்ணும்படி வாரன்ட்—(386 (1) (a)-வது பிரிவைப்பார்க்க.)

(வாரன்டை நிறைவேற்றவேண்டிய போலீஸ் உத்தியோகஸ்தன் அல்லது வேறே நபர் அல்லது நபர்களுடைய பெயரையும் உத்தியோகத்தையும் கண்டு - இன்னானுக்கு அல்லது இன்னாருக்கு)

